1 ஆண்டு ஆட்சி
ஓயா உழைப்பின் ஓராண்டு

இதயம் திறந்து இதழ்கள் பாராட்டு...

செப்டம்பர் 2021 – ஜனவரி 2022

தொகுப்பு - 2

1 ஆண்டு ஆட்சி

ஓயா உழைப்பின் ஓராண்டு

TAMIL NADU CM
M K STALIN:
THE CHIEF EXECUTIVE WHO WANTS TO MAKE A DIFFERENCE

"Koyil koodathu enru naangal sollavillai, athu kodiyavargalin koodaram agi vida koodathu enbath thaan engal nokkam (We are not against temples, but temples should not become the haven of crooks)" - M K Stalin

'Before you are a leader, success is all about growing yourself. When you become a leader, success is all about growing others. - Jack Welch'

On March 1, 1953, in Chennai, M K Stalin was born as the third son of the former Chief Minister of Tamil Nadu and DMK strongman M. Karunanidhi and his wife Dayalu Ammal.

Stalin studied at the Madras Christian College Higher Secondary School. He completed his pre-university course at Vivekananda College and obtained a history degree from Presidency College, Chennai of the University of Madras in 1973.

His political career began in his early

இதயம் திறந்து இதழ்கள் பாராட்டு...

செப்டெம்பர் 2021 – ஜனவரி 2022

தொகுப்பு - 2

இந்தியாவுக்கே ஊக்கமளிக்கும் மு.க.ஸ்டாலினின் ஆட்சி

நடிகர் பவன் கல்யாண் பாராட்டு



சென்னை, செப்.1-

தமிழகத்தில் மு.க.ஸ்டாலினின் ஆட்சி, அனைத்து மாநிலங்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் ஊக்கம் அளிக்கும் விதத்தில் உள்ளது என நடிகர் பவன் கல்யாண் பாராட்டியுள்ளார்.

ஜனசேனா கட்சித் தலைவரும், தெலுங்கு நடிகருமான பவன்கல்யாண் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை பாராட்டி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

அன்பிற்குரிய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள். எந்த ஒரு கட்சியாக இருந்தாலும் ஆட்சிக்கு வரவேண்டும் என்றால் அரசியல் செய்ய வேண்டும். ஆனால் ஒரு கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு அரசியல் செய்யக்கூடாது. அதை வார்த்தைகளால் அல்ல, செயல்களால் நீங்கள் செய்து வருகிறீர்கள். உங்களது ஆட்சி நிர்வாகம், உங்கள் அரசின் செயல்பாடுகள் உங்கள் மாநிலத்திற்கு மட்டுமல்ல நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும், அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஊக்கம் அளிக்கும் விதத்தில் உள்ளது. உங்களுக்கு மீண்டும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள். இவ்வாறு பவன் கல்யாண் கூறியுள்ளார்.

Date : 01-Sep-2021

தொழிலாளர் நலத்தில் தனிக் கவனம் செலுத்தும் முதல்வர்!

முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களால் அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியம் உருவாக்கப்பட்டது. இதில் 75,000-த்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வெ. கணேசன் தொழிலாளர் நலத்துறையில் ஆய்வு மேற்கொண்டார். இத்துறையில் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு கடந்த 10 ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்ட நலத்திட்ட உதவிகளான மகப்பேறு, திருமணம், கல்வி, விபத்து, இறப்பு, தனிநபர் ஓய்வு ஊதியம் மற்றும் குடும்ப நல ஓய்வு ஊதிய உதவிகள் 75,000 தொழிலாளர்களுக்கு இன்னும் வழங்கப்படாமல் இருந்தது இந்த ஆய்வில் தெரிய வந்தது.

நிலுவையில் இருந்த இந்த நலத்திட்ட உதவிகளை உடனடியாக வழங்கிட முதல்வர் உத்தரவிட்டார். சென்னை ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த நலத்திட்ட உதவிகளை வழங்கித் துவக்கி வைத்ததோடு அல்லாமல் அதே நாளில் மாநிலம் முழுவதும் அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக மொத்தம் 34 கோடியே 78 லட்சத்து 88 ஆயிரத்து 950 ரூபாய் முழுவதுமாக வழங்கி சாதனை நிகழ்த்தப்பட்டது. சென்னையில் நடைபெற்ற விழாவில் எம்.எல்.ஏ உதயநிதி ஸ்டாலின், பொன்.குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பல்வேறு தொழிலாளர்களுக்கு நல உதவி...

கட்டுமானத் தொழிலாளர்களுக்கு கொரோனா தடுப்பூசி, உதவித்தொகை மற்றும் உணவுப் பொருள்கள் அடங்கிய உணவுத் தொகுப்பு வழங்கும் நலத்திட்டத்தை நந்தனம் கல்லூரியில் முதல்வர் தொடங்கி வைக்க, அதேபோல் தமிழ்நாடு முழுவதும் வழங்கப்பட்டது.

வெளி மாநிலங்களில் இருந்து இங்கு வந்து வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு மாநில, மாவட்ட அளவில் கட்டுப்பாட்டு அறை உருவாக்கப்பட்டு, அவர்களின் குறைகள் உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது. மேலும், உணவுப் பொருள்கள் அடங்கிய உணவுத் தொகுப்பு அனைவருக்கும் வழங்கப்பட்டது. இதுமட்டுமல்லாது தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையர்கள் தொழிலாளர்களின் வீடுகளுக்கே சென்று பயனாளிகளுக்கு உதவ உத்தரவு போடப்பட்டது. தொழிலாளர்களின் வாழ்வில் விடியலை 100 நாள்களுக்குள் உருவாக்கியது தமிழக அரசு.

3

தமிழ் முரசு

Date : 02-Sep-2021

இடஒதுக்கீட்டின் போது உயிர்நீத்த தியாகிகளுக்கு

விழுப்புரத்தில் ₹4 கோடியில் மணிமண்டபம் சுங்கச்சாவடிகளை அகற்ற நடவடிக்கை

முதல்வருக்கு வேல்முருகன் நன்றி

சென்னை, செப். 2- இடஒதுக்கீட்டின் போது உயிர்நீத்த தியாகிகளுக்கு விழுப்புரத்தில் ரூ.4 கோடியில் மணிமண்டபம் மற்றும் மாநகராட்சிக்குட்பட்ட சுங்கச்சாவடிகள் அகற்றம், கட்டணம் குறைப்பு போன்ற நடவடிக்கை எடுத்ததற்கு முதல்வருக்கு தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன் நன்றி தெரிவித்தார்.

சட்டபேரவை வளாகத்தில் தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன் நிருபர்களிடம் கூறியதாவது: நீண்டநாள் கோரிக்கைகள், போராட்டங்கள் இரண்டு. அந்த இரண்டில் இன்று முதல் கட்ட வெற்றியை முதல்வரும், அரசும் தந்துள்ளது. வன்னியர் சங்கத்தின் இடஒதுக்கீட்டின் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளுக்கு மணிமண்டபம் அமைக்க வேண்டும். உயிர் நீத்த தியாகிகளின் குடும்பங்கள் ஏழ்மையும், வறுமையிலும் இருக்கின்றனர். அவர்களின் கல்வி தகுதிக்கு ஏற்ற வேலை கொடுக்க வேண்டும் என்று முதல்வரின் கவனத்திற்கு கொண்டு வந்தேன். கடந்த மாதம் 10.5% இடஒதுக்கீட்டிற்கு வழங்கிய போது முதல்வரை சந்தித்து இந்த வேண்டுகோளை வைத்தேன்.

அதன்படி விழுப்புரத்தில் ரூ.4 கோடியில் மணிமண்டபம் அமைக்கப்படும்.

மேலும் வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் பரிசீலினை செய்து என்னுடைய பெயரை குறிப்பிட்டு அந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். அதற்கு முதல்வருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தலைவர் கலைஞர் வழியில் இது சமூகநீதி கோட்பாட்டின் கீழ் நடக்கும் ஆட்சி என்பதை நிரூபித்துள்ளார். அதற்காக உயிர் நீத்த தியாகிகள் குடும்பத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். சுங்கச்சாவடி அமைக்கப்பட்ட நாட்கள் முதல் போராடி வருகிறோம். சுங்கச்சாவடி குறித்து கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்தேன். அதற்கு நெடுஞ்சாலை துறை அமைச்சர் 10 கிலோ மீட்டர் மாநகராட்சி பகுதிகளில் சுங்கச்சாவடி அமைக்கக் கூடாது என்று போராடி வருகிறோம். அதற்கு ஆறுதல் அளிக்கும் வகையில் மாநகராட்சி உட்பட்ட பகுதிகளில் உள்ள 5 சுங்கச்சாவடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும், கட்டணம் வசூல் செய்வதை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. விரைவில் ஒன்றிய அமைச்சரை சந்தித்து சுங்கச்சாவடிகள் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார். கேரளாவில் 4 சுங்கச்சாவடிகள் உள்ளது. தமிழகத்தில் 48 சுங்கச்சாவடிகள் உள்ளது. மேலும் 10 சுங்கச்சாவடிகள் அமைக்கப்படவுள்ளது. 48 சுங்கச்சாவடிகள் கட்டணம் குறைப்பதற்கும், மாநகராட்சிக்குட்பட்ட 5 சுங்கச்சாவடிகள் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார். லாரி உரிமையாளர்களை அழைத்து பேசி சுங்கச்சாவடியை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த இரண்டு அறிவிப்பு வெளியிட்டதற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு வேல்முருகன் கூறினார்.

தமிழ் முரசு

Date : 03-Sep-2021

வ.உ.சி பிறந்தநாள் அரசு விழாவாக அறிவிப்பு

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஏ.சி.சண்முகம் நன்றி

சென்னை, செப்.3- புதிய நீதிக்கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கை:

கண்ணீரும், செந்நீரும் சிந்தி நம்நாடு சுதந்திரம் பெற்றதின் 75ம் ஆண்டு பவள விழாவை மகிழ்ச்சியோடு கொண்டாடி கொண்டிருக்கிறோம். இந்த வருடத்தில் மற்றொரு இனிய நிகழ்வாக, கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரம் பிள்ளையின் 150வது பிறந்தநாள் விழாவினை 5.9.21 அன்று மிகவும் சீரும், சிறப்புமாக எழுச்சியோடு கொண்டாடவிருக்கின்றோம். முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது, பங்கிற்கு, இந்த நாளை அரசு விழாவாக சட்டமன்றத்திலேயே அறிவித்து அரசாணை பிறப்பித்துள்ளார். இதற்காக நன்றி தெரிவிக்கிறேன்.

மத்திய அரசு, வ.உ.சியின் 150வது பிறந்த நாளை சிறப்பிக்கும் வகையில் அவரது உருவம் பொறித்த நாணயத்தை வெளியிட வேண்டும். மேலும், புதியதாக கட்டப்பட்டு வரும் நாடாளுமன்ற வளாகத்தில். அவரது முழு உருவ சிலையினை நிறுவிட வேண்டும்.

புதிய நீதிக்கட்சியின் சார்பில், மாநில, மண்டல, மாவட்ட ஒன்றிய, நகர, கிளை மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகளும் 5.9.21 அன்று தமிழகம் முழுவதும் வ.உ.சி உருவ சிலை அல்லது உருவ படத்திற்கு, மலர் மாலைகள் அணிவித்து, இனிப்புகள் வழங்கி மிகவும் சிறப்பாக பிறந்த நாளினை கொண்டாடிட வேண்டும்.

முதல்வர் ஸ்டாலினுக்கு

வன்னியர் குல கூட்டியக்கம் நன்றி!

சென்னை, செப்.04

வன்னியர் குல சத்திரியர்கள் கூட்டியக்கத் தலைவர் இராம.நாகரத்தினம், பொதுச்செயலாளர் ஆர்.ஏ.ஆர்.கே.சத்திரியர் முதன்மை ஆலோசகர்கள் பொறியாளர் கே.மோகன்ராஜ், ஆர்.ரமணன், வழக்கறிஞர் எம்.உதயகுமார், ஆர்.பன்னீர்செல்வம் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

வன்னியர் சமூகத்தினர் 1987 ம் ஆண்டு செப் 17 முதல் 23 வரை ஒருவார காலம் நடத்திய 20 சதவீத தனிஇடஒதுக்கீட்டுபோராட்டத்தில்அப்போதைய அ.தி.மு.க அரசு நடத்திய துப்பாக்கிசூட்டில் 21 வன்னிய தியாகிகள் பலியானார்கள்.

அவர்களின் தியாகத்தை போற்றும்வகையிலும், இடஒதுக்கீட்டுவரலாற்றைஎதிர்காலசந்ததியர்களும்அறிந்து கொள்ளும் வகையில் அவர்களை "சமூகநீதிப் போராளிகள்" என்று பெருமைப்படுத்தி, விழுப்புரம் மாவட்டத்தில் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் மணிமண்டபம் அமைக்கப்படும் எனவும், அவர்கள்குடும்பத்தில் உள்ளவர்களுக்கு அரசு சார்ந்த நிறுவனங்களில் கல்வித்தகுதியின் அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்றும், தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.

இதற்காக முதல்வர் ஸ்டாலினுக்கு வன்னியர் குல கூட்டியக்கம் இன்று தொடங்குகிறது.

இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.



100 DAYS OF REFORMS

Tamil Nadu government led by Hon'ble Chief Minister Thiru. MK Stalin has started delivering the its poll promises right after it came to power. On May 7, the cheif minister signed five files for five new projects at Secretariat to fulfill the promises made in the Dravida Munnetra Kazhagam election manifesto. The government announced Corona relief assistance of Rs4,000 to 2.07 crore rice family cardholders each. The government also reuced Aavin milk price by Rs. 3 per liter. Also, an order was issued to travel free of charge for all women on regular fare city buses. A new department called 'Chief Minister in your constituency' was formed to solve various problems of the people.

Under Chief Insurance Scheme, government introduced a scheme to help people with bearing the expense of Covid-19 treatment in Private Hospitals.

Public sector officials are working earnestly to prevent the spread of Covid-19 infection in Tamil Nadu. Through this effort, a relief amount of Rs3.25 crore at the rate of Rs. 25 lakh has been provided to the family heirs of 13 persons who lost their lives due to corona infection.

On May 11, the government took decision to provide Investment subsidy for self-investment micro, small and medium enterprises, and immediate release of 60% of the investment subsidy on project estimate.

On May 21, the government issued appointment orders based on compassionate grounds to 17 heirs of those killed and severely injured during the Tuticorin Sterlite Copper Mill Struggle on the basis of their educational qualifications.

In order to protect the orphans who have lost their parents due to corona infection in Tamil Nadu, the government decided to create a deposit of Rs. 5lakhs each in the names of orphans and pay the amount to the child with interest on attaining the age of 18 years. The government will bear all the expenses of these children, including education fees and accommodation, up to their graduation. Immediate relief of Rs. 3 lakhs will be provided to the father or mother who has children who have lost their mother or father due to corona infection.

On May 30, Chief Minister inspected the control measures of coronavirus infection at the Government Erode Medical College Hospital, Perundurai, Erode District, and also 400 additional beds provided with oxygen at the hospital. In addition, issued temporary appointment orders to 5 doctors and 5 nurses at Perundurai, Government Erode Medical College Hospital.Subsequently, he inaugurated a 100-bed corona treatment unit with oxygen facilities at Tirupur District Government Medical College Hospital and also examined the quality of nutritious food provided to the corona infected patients. On June 2, the Chief Minister ordered to provide relief of Rs. 4.20 crore at the rate of rs.20lakhs to heirs of each families of 21 fishermen of Nagapattinam, Mayiladuthurai and Kanyakumari districts who went missing due to the 'Taukte' cyclone by considering the poor condition of those 21 fishermen.

On June 17, the Chief Minister Stalin met Prime Minister Narendra Modi at his residence and handed over a petition containing 25 demands on Tamil Nadu development projects. Following the path of social justice of Kalaignar, Chief Minister MK Stalin issued orders, increasing the reservation as per the requirement; confirming the internal allocations to the most backward classes, denotifed community, Muslims, Arunthathiyars, and confirming the internal allocations to Vanniyars, denotifed community and most backward classes.

மாலை மலர்

Date : 07-Sep-2021

கால்களுக்கு ஓய்வு-ஊழியர்களுக்கு கை கொடுத்த தமிழக அரசு

தமிழக அரசு பொறுப்பேற்ற பிறகு மக்கள் நலன் சார்ந்த பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறது. அந்த வகையில் தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்ட அரசாக முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு செயல்பட்டு வருவது வெளிப்படையாகவே தெரிகிறது.

கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் நாம் ஜவுளி எடுக்கச் செல்லும்போதோ, வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கச் செல்லும்போதோ அங்கு பணிபுரியும் ஊழியர்களை பார்த்து இருப்போம்.

கால்கடுக்க நின்றபடியே அவர்கள் வாடிக்கையாளர்களுக்கு தேவையான பொருட்களை எடுத்து காட்டுவார்கள். இதுபோன்று பணிபுரிபவர்கள் காலை முதல் இரவு வரை நின்று கொண்டே வேலை செய்வதன் மூலம் பல்வேறு உடல் ரீதியான பாதிப்புகளை சந்தித்து வந்தனர்.

இதுபோன்று கடைகளில் பணிபுரிபவர்கள் கழிவறைக்கு சென்று சில நிமிடங்கள் அங்கு உட்கார்ந்து ஓய்வு எடுத்து விட்டு வரும் அவலநிலையும் இருந்து வந்தது.

இது தொடர்பாக தமிழக அரசுக்கு முறையீடு வந்ததை அடுத்து முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொழிலாளர்கள் நலனில் அக்கறை கொண்டு மிகவும் முக்கியம் வாய்ந்த அறிவிப்பு ஒன்றை சட்டசபையில் நேற்று வெளியிட செய்துள்ளார்.

இதன்படி தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சரான சி.வி.கணேசன் சட்டசபையில் தாக்கல் செய்த சட்டமசோதாவில் இனி கடைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இருக்கை வசதியையும் கட்டாயம் செய்ய வேண்டும் என்றும், அவர்களை நின்று கொண்டே பணிபுரிய வைக்கக்கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதற்காக 1947–ம் ஆண்டு தமிழ்நாடு கடைகள், நிறுவனங்கள் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன்மூலம் தமிழகம் முழுவதும் பெரிய வர்த்தக நிறுவனங்களில் பணிபுரியும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் நிம்மதி பெருமூச்சு விட்டுள்ளனர்.

தங்களது கால்களுக்கு தமிழக அரசு ஓய்வு கொடுத்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இதற்காக தமிழக அரசுக்கும், முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும் தொழிலாளர்கள் மனப்பூர்வமான நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக சமூக வலைதளங்களில் தமிழக அரசுக்கு பாராட்டுக்களும் குவிந்து வருகின்றன. நீண்ட நேரம் நின்று கொண்டே பணிபுரிபவர்களுக்கு 'வெரிகோஸ் வெயின்' என்று அழைக்கப்படும் நரம்பு சம்பந்தப்பட்ட நோய் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

நின்று கொண்டே பணியாற்றுவதன் மூலம் ரத்த குழாய்கள் வீங்கி சுருண்டு விடும் அபாயமும் இருப்பதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். முழங்காலுக்கு கீழ் பின்புறத்தில் உள்ள ரத்த குழாய்களில் வலி ஏற்பட்டு கடும் பாதிப்பையும் இந்த நோய் ஏற்படுத்தி ரத்த ஓட்டத்தையும் தடை செய்து விடும் என்பது வேதனையான உண்மையாகும். இதிலிருந்து ஊழியர்களை பாதுகாக்கும் வகையில் தமிழக அரசின் அறிவிப்பு அமைந்துள்ளது.

இதன் மூலம் இனி இதுபோன்ற நோயில் இருந்து தொழிலாளர்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது.

தமிழக அரசு இந்த அறிவிப்பை அறிவிப்போடு நிறுத்தி விடாமல் கடைகள் மற்றும் நிறுவனங்களில் ஊழியர்கள் அமர்வதற்கு இருக்கைகள் போடப்பட்டுள்ளனவா? என்பதையும், ஊழியர்கள் அமர்ந்து பணியாற்றுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்களா? என்பதையும் கண்காணிக்க வேண்டும் என்பதே கடைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் ஒட்டுமொத்த விருப்பமாக உள்ளது.

கடை உரிமையாளர்களும் தமிழக அரசின் உத்தரவை மதித்து தங்களிடம் பணியாற்றும் ஊழியர்களின் உடல்நலனில் அக்கறையோடு செயல்பட வேண்டும்.

அப்போதுதான் இந்த சட்டமசோதா நிறைவேற்றப்பட்டதன் முழு பயனும் கடை ஊழியர்களுக்கு கிடைக்கும் என்பதில் மாற்று கருத்து இல்லை.

பல ஆண்டுகளாகவே பெரிய வணிக நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் நின்று கொண்டே பணிபுரிவது தொடர்பாக எந்த அரசும் கவலைப்படாத நிலையில் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு தொழிலாளர்கள் நலனில்உண்மையிலேயே அக்கறை கொண்டு அவர்களின் கால்களுக்கு ஓய்வு அளித்து அவர்களுக்கு கைகொடுத்து இருப்பதை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

மாலை முரசு

Date : 07-Sep-2021

பெரியார் பிறந்த நாளை

சமூக நீதி நாளாக அறிவித்த ஸ்டாலினுக்கு வைகோ பாராட்டு!

சென்னை, செப்.07

தந்தை பெரியார் பிறந்த நாளை, சமூக நீதி நாளாக அறிவித்த முதல்வர் ஸ்டாலினுக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தந்தை பெரியார் பிறந்த நாள் செப்டம்பர் 17, ஆண்டுதோறும் 'சமூக நீதி நாளாக' அரசு சார்பில் கொண்டாடப்படும் என்ற, வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை வெளியிட்டு இருக்கின்ற, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ம.தி.மு.க. சார்பில், பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, கல்வி, வேலைவாய்ப்புகளை வழங்கும் சமூகநீதிக் கொள்கை உயர்நீதி மன்றத்தாலும், உச்ச நீதி மன்றத்தாலும் முடக்கப்பட்டபோது, அதனை எதிர்த்து மக்களை அணி திரட்டிப் போராடி, முதன் முதலாக இந்திய அரசு அமைப்புச் சட்டத்தைத் திருத்தம் செய்து, சமூக நீதி காத்த மாபெரும் தலைவர் தந்தை பெரியார்.

பெண் அடிமை ஒழிப்பு, தொழிலாளர் மேம்பாடு, சாதிஒழிந்தசமத்துவநிலை, சுயமரியாதை ஆகிய சமூக நீதிக் கொள்கைகளுக்காக, விழி மூடுகின்ற வரையிலும், களத்தில்நின்றுபோராடிய ஒப்பாரும் மிக்காரும் இல்லாதஒப்பற்றதலைவர் தந்தை பெரியார்.

பாராட்டு

27.06.1970 அன்று, ஐ.நா. நிறுவனத்தின் யுனெஸ்கோ அமைப்பு, "தென்னிந்தியாவின் சாக்ரடீஸ் என்றும்; சமூக சீர்திருத்த இயக்கத்தின் தந்தை என்றும்; மூட நம்பிக்கை, பகுத்தறிவு அற்ற சடங்குகளுக்குக் கடும் எதிரி" என்றும் தந்தை பெரியார் அவர்களுக்கு விருது அளித்துப் பாராட்டியது.

இலக்கியத்தில் நோபல் பரிசு பெற்ற வி.எஸ். நைபால், பெரியார்திடலில் பெரியார் சிலையையும், பெரியார் நினைவகத்தையும், பெரியார் அருங்காட்சியகத்தையும் பார்வையிட்டு, "சமூக நீதி காக்க இவரைப் போல் உழைத்தவர்கள் இந்தியாவில் எவருமே இல்லை" என்று மனம் திறந்து பாராட்டினார்.

வைகோ

அத்தகைய மாபெரும் சமூகநீதிப் போராளியான தந்தை பெரியாரின் பிறந்த நாளை, சமூகநீதி நாளாக அறிவித்து, தலைமைச்செயலகம் தொடங்கி, அனைத்து அரசு அலுவலகங்களிலும் சமூகநீதி காக்கும் உறுதி மொழி எடுப்பதற்கு ஆவன செய்துள்ள, தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு, ம.தி.மு.க. சார்பில் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தமிழ் முரசு

Date : 07-Sep-2021

சென்னை விமானநிலையத்தில்

கொரோனா பரிசோதனை கட்டணம் அதிரடி குறைப்பு

தமிழக அரசுக்கு பாராட்டு

மீனம்பாக்கம், செப்.7-

சென்னை பன்னாட்டு விமானநிலையத்தில் பயணிகளுக்கு கொரோனா வைரஸ் பரிசோதனைக்காக இந்திய விமானநிலைய ஆணையம், தனியார் நிறுவனம் மூலம் ஆய்வுக்கூடம் செயல்படுத்தி வருகிறது. இதை தமிழக சுகாதாரத்துறை கண்காணித்து வருகிறது. இங்கு பயணிகளின் பரிசோதனைக்காக 3 விதமான கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு வந்தது. சாதாரண கொரோனா வைரஸ் பரிசோதனைக்கு கடந்த ஏப்ரல் மாதம் வரை ரூ.1,200 வசூலிக்கப்பட்டது. திமுக ஆட்சிக்கு வந்ததும் அந்த பரிசோதனை கட்டணம் ரூ.900 ஆக குறைக்கப்பட்டது. ரூ.900 கட்டண பரிசோதனை செய்பவர்களுக்கு 8 மணி நேரத்திற்குள் ரிசல்ட் வருகிறது. அடுத்ததாக ரூ.2,500 கட்டண பரிசோதனையும் உள்ளது. இந்த பரிசோதனை செய்பவர்களுக்கு 2 மணி நேரத்தில் இருந்து 4 மணி நேரத்துக்குள் ரிசல்ட் வருகிறது.

கடந்த ஆகஸ்ட் மாதம் 5ம் தேதியில் இருந்து சென்னை சர்வதேச விமான நிலையத்தில் உள்ள ஆய்வு கூடத்தில் RT-PCR பரிசோதனை கருவிகள் செயல்பாட்டுக்கு வந்தன. இதில் பரிசோதனை செய்பவர்களுக்கு 15 நிமிடங்களில் இருந்து 30 நிமிடங்களுக்குள் ரிசல்ட் வந்துவிடும். ஆனால் கட்டணமாக ரூ.4,000 ஆயிரம் வசூலிக்கப்பட்டது. அவசரமாக விமான பயணங்கள் மேற்கொள்ளும் பயணிகள் இந்த முறையை பயன்படுத்திக்கொள்ளலாம். அத்துடன் ஐக்கிய அரபு நாடுகளான துபாய், சார்ஜா, அபுதாபி ஆகிய நாடுகளுக்கு செல்லும் பயணிகள் கண்டிப்பாக ரூ.4 ஆயிரம் கட்டணம் செலுத்தி RT-PCR எடுத்தால் மட்டுமே விமானங்களில் பயணிக்க அனுமதிக்கப்பட்டனர் என கூறப்பட்டது. இது பயணிகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது. பரிசோதனை கட்டணத்தை குறைக்க வேண்டும், ரூ.900, ரூ.2,500 கட்டணங்களில் பரிசோதனை செய்தாலே ஐக்கிய அரபு விமானங்களில் பயணிக்க அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். "இந்த உத்தரவை ஐக்கிய அரபு நாட்டு அரசு போட்டுள்ளது. எனவே நாங்கள் எதுவும் செய்ய முடியாது" என்று விமானநிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். இருப்பினும் ரூ.4 ஆயிரம் பரிசோதனை கட்டணம் மிகவும் அதிகம். அதை குறைக்க வேண்டும்" என்று பயணிகள் தொடர்ந்து வலியுறுத்திவந்தனர்.

இதையடுத்து தமிழக சுகாதாரத்துறை அதிகாரிகள், விமானநிலைய அதிகாரிகளுடன் பேசி கட்டணத்தில் இருந்து ரூ.600 குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். இதன்படி ரூ.4 ஆயிரமாக இருந்த RT-PCR பரிசோதனை கட்டணம் தற்போது ரூ.3,400 ஆக குறைக்கப்பட்டுள்ளது. இந்த கட்டண குறைப்பு கடந்த வெள்ளிக்கிழமை முதல் அமலுக்கு வந்துள்ளது. இது பயணிகள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

"பரிசோதனை கட்டணத்தை மேலும் குறைக்க வேண்டும். ரூ.900, ரூ.2,500 பரிசோதனை அடிப்படையிலேயே ஐக்கிய அரபு நாடுகளுக்கு பயணிக்கும் முறையை அமுல்படுத்த வேண்டும். கட்டணம் குறைத்ததற்கு தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்" என்று பயணிகள் தெரிவித்தனர்.

தமிழ் முரசு

Date : 07-Sep-2021

சமூக நீதிக்கான சரித்திர நாயகர் மு.க. ஸ்டாலின்

வீரமணி பாராட்டு

தஞ்சை, செப். 7-

தஞ்சை அருகே வல்லத்தில் தி.க. தலைவர் கி.வீரமணி அளித்த பேட்டி:

பெரியாரின் பிறந்த நாளான செப்.17ம் தேதியை சமூக நீதி நாளாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. தலைமை செயலகம் முதல் அனைத்து அரசு அலுவலகங்களிலும் அன்றைய நாளில் அனைவரும் உறுதிமொழி எடுத்து கொள்ள வேண்டும் என அறிவித்திருப்பதும் வரலாற்று சிறப்பு மிக்க பிரகடனம்.

உறுதிமொழியில் உள்ள வாசகங்கள் ஒவ்வொருவரையும் உயர்த்தும் வகையில் அற்புதமாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பை வெளியிட்ட முதல்வருக்கு ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். தமிழக முதல்வரை சமூக நீதிக்கான சரித்திர நாயகர் என அழைப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

கொரோனா 3வது அலைக்கான வாய்ப்புகள் இருப்பதால், பொது இடங்களில் கூட்டம் சேரக் கூடாது என ஒன்றிய அரசின் உள்துறை செயலர் அறிவித்துள்ளார். ஒன்றிய அரசு அறிவிப்பை தமிழக அரசு மதிக்கிறது. அதனால், விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்துக்கு தமிழக அரசு தடை விதித்துள்ளது. ஆனால், விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்துக்கு புதுச்சேரி அரசு அனுமதி அளித்திருப்பதன் மூலம் ஒன்றிய அரசின் விதிகளை அந்த அரசு மீறியிருப்பது தெரிய வருகிறது. அவர்களது கட்சியே ஆட்சியில் இருந்தாலும் கூட, ஒன்றிய அரசின் ஆணையை புதுச்சேரி அரசு மதிக்கவில்லை என்பது தெரிகிறது.

தமிழ் முரசு

Date : 07-Sep-2021

பாடப்புத்தகங்கள், நோட்டுகளில் முன்னாள் முதல்வர்கள் பட விவகாரம்

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தலைமை நீதிபதி பாராட்டு

பேரவையில் வெளியிட்ட அறிவிப்பு வரவேற்கத்தக்கது

சென்னை, செப். 7-
பள்ளிக் குழந்தைகள் பயன்படுத்தும் பாடப் புத்தகங்கள், நோட்டுகளில் முதல்வரின் படத்தை அச்சிட்டு பொது மக்களின் பணத்தை வீணாக்க கூடாது என்று உத்தரவிட்ட உயர் நீதிமன்றம் இந்த விஷயத்தில் தமிழக முதல்வரை பாராட்டுகிறோம் என்றும் கருத்து தெரிவித்துள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் நமது திராவிட இயக்கம் என்ற அமைப்பின் தலைவர் ஓவியம் ராஜன் என்பவர் தாக்கல் செய்துள்ள பொதுநல வழக்கில் கூறியிருப்பதாவது:

பள்ளி மாணவ, மாணவிகளுக்கு தற்போது இருப்பில் உள்ள பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் எழுது பொருட்களை வழங்க வேண்டும்.

இருப்பில் உள்ள பாடப்புத்தகங்கள் நோட்டுகள், பைகள் உள்ளிட்டவற்றில் முன்னாள் முதலமைச்சர்கள் ஜெயலலிதா, பழனிச்சாமி படங்கள் இருப்பதனால் அவற்றை விநியோகிக்க வேண்டாம் என்று பள்ளிக் கல்வித் துறை வாய்மொழி உத்தரவு பிறப்பித்துள்ளதாக கூறப்படுகிறது.

பொது மக்களுடைய வரிப் பணத்தை வீணாக்க கூடாது. எனவே, ஏற்கனவே பிரின்ட் செய்யப்பட்ட பாட புத்தகங்கள் மற்றும் நோட்டுகள், பைகளை வீணாக்கக்கூடாது. அவற்றை மாணவ, மாணவிகளுக்கு விநியோகிக்க உத்தரவிட வேண்டும்.

எதிர்காலத்தில் இது போல பாடப்புத்தகங்கள் நோட்டுகள், பைகளில் அரசியல் கட்சி தலைவர்களின் படங்களை பிரின்ட் செய்ய தடை விதிக்க வேண்டும். இவ்வாறு கோரியிருந்தார்.

இந்த வழக்கு சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீப் பானர்ஜி, நீதிபதி ஆதிகேசவலு ஆகியோர் அடங்கிய அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, அட்வகேட் ஜெனரல் ஆர். சண்முகசுந்தரம் ஆஜராகி, முந்தைய முதல்வர்கள் படங்கள் அச்சடிக்கப்பட்ட சுமார் 65 லட்சம் புத்தகங்கள், நோட்டுகளை வீணாக்காமல் அச்சடிக்கப்பட்ட அதே நிலையில் மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்று சட்டப் பேரவையில் முதல்வர் அறிவித்துள்ளார். அதன் அடிப்படையில் மாணவர்களுக்கு அந்த புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றார்.

இதை கேட்ட நீதிபதிகள், தமிழக முதல்வருக்கு பாராட்டுதல்களை தெரிவித்தனர்.

இதையடுத்து, நீதிபதிகள், "பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் புத்தகங்கள், நோட்டுகள், எழுது பொருட்கள் அடங்கிய பைகளில் பொது ஊழியர்களின் படங்கள் அச்சடிப்பது பொது நிதியை வீணடிப்பதாகும். அரசியல்வாதிகள் தங்களின் தனிப்பட்ட விருப்பத்திற்காக இதுபோன்று மக்கள் பணத்தை செலவு செய்யக்கூடாது. பொது நிதியை இது போன்ற விளம்பரங்களுக்காக பயன்படுத்தக் கூடாது. இதை தற்போதைய அரசு மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கிறோம்" என்று உத்தரவிட்டனர்.

மக்கள் குரல்

Date : 08-Sep-2021

பெரியார் பிறந்த தினம் சமூகநீதி நாளாக அறிவிப்பு: மு.க.ஸ்டாலினுக்கு ஓ.பன்னீர்செல்வம் பாராட்டு

சென்னை, செப்.8–

பெரியார் பிறந்ததினம் **சமூகநீதி** நாளாக **கொண்டாடப்படும்** என்று **அறிவித்த** முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு, **ஓ.பன்னீர்செல்வம்** பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

இந்திய விடுதலைக்குமுன், மொழிப்பற்றையும், நாட்டுப்பற்றையும், ஒருமைப்பாட்டையும், காவிரி போல் பெருக்கெடுத்து ஓடும் தன் பாட்டுத்திறத்தால், கவிதை நயத்தால் உணர்த்தி. உறங்கிக்கிடக்கும் மக்களை தட்டி எழுப்பி, விடுதலை உணர்வை ஊட்டியவர் பாரதியார் என்றால், விடுதலைக்குபின் பகுத்தறிவு, சுயமரியாதை, தன்மானம், சமூகநீதி ஆகியவற்றை மக்களிடையே பரப்பி தமிழ்நாட்டில் சமுதாய மறுமலர்ச்சி ஏற்படுத்தியவர் பெரியார்.

பெரியார் வகுத்து தந்த பாதையில் சமுதாய சீர்திருத்த கருத்துக்களை பட்டிதொட்டியெங்கும் எடுத்துச்சென்ற பெருமை அண்ணா, எம்.ஜி.ஆர்., கருணாநிதி, ஜெயலலிதா ஆகியோரையே சாரும். சமூகநீதி உள்ளிட்ட பல்வேறு கொள்கைகளை அடிப்படையாக கொண்டு பெரியாரால் தொடங்கப்பட்ட திராவிடர் கழகம், சமூக மாற்றத்தை ஏற்படுத்தியதோடு மட்டுமல்லாமல், சமூக நீதிக்காக பாடுபட்டவர்களை பெருமைப்படுத்தும் பணியையும் செய்து வருகிறது. அந்த வகையில், தமிழ்நாட்டில் 69 சதவீத இடஒதுக்கீட்டை பாதுகாத்ததற்காக, 'சமூகநீதி காத்த வீராங்கனை' என்ற பட்டத்தை ஜெயலலிதாவுக்கு, திராவிடர் கழகம் வழங்கி கவுரவித்தது.

'அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று நம்பி அறிவிழந்து போகாமல் எவன் சொன்ன சொல்லானாலும் பகுத்தறிந்து உள் அறிவால் உணர்', என்று சாக்ரடீஸ் கூறியதை வற்புறுத்தி, அதை மக்களிடையே எடுத்துச்சென்று தமிழ்நாட்டில் ஒரு சமூகப்புரட்சியை ஏற்படுத்திய பெரியாரை பெருமைப்படுத்தும் வகையில், அவர் பிறந்ததினமான செப்டம்பர் 17ந்தேதி சமூக நீதி நாளாக கொண்டாடப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்திருப்பது வரவேற்புக்குரியது.

இந்த அறிவிப்புக்கு காரணமான முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு எனது நன்றியை தெரிவித்து கொள்வதோடு, இதனை அண்ணா தி.மு.க. சார்பில் வரவேற்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தமிழ் முரசு

Date : 08-Sep-2021

குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை ரத்து செய்யக்கோரும் தீர்மானம்

முதல்வருக்கு திருமாவளவன் பாராட்டு

சென்னை, செப். 8- விசிக தலைவர் திருமாவளவன் வெளியிட்ட அறிக்கை: குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்தி சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் பாராட்டி வரவேற்கிறோம்.

குடியுரிமைத் திருத்தச் சட்டம் 2019ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது என்ற போதிலும் அது 2016ம் ஆண்டிலேயே, பாஜகவின் கடந்த ஆட்சியின் போதே கொண்டு வரப்பட்ட ஒன்றாகும். இது 2016ம் ஆண்டு மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்டது. அறிமுக நிலையிலேயே எதிர்ப்பு எழுந்ததால் அது பாராளுமன்ற கூட்டுக் குழுவிற்கு அனுப்பப்பட்டது. அதற்கு முன்பாகவே அந்த சட்ட மசோதாவில் இருந்த அம்சங்களை உள்துறை அமைச்சகத்தின் குறிப்பாணைகள் மூலமாக பாஜக அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்துவிட்டது. மாநிலங்களவையில் அந்த மசோதா தோற்கடிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், மாநிலங்களவையில் இடம் பெற்றிருந்த அதிமுகவினுடைய 11 உறுப்பினர்கள், பாமக ஒரு உறுப்பினர்- ஆகிய 12 உறுப்பினர்கள் ஆதரித்து வாக்களித்ததால் மாநிலங்களவையில் இந்த மசோதா நிறைவேறியது.

இந்த சட்டம் மத அடிப்படையிலும், இன அடிப்படையிலும் பாரபட்சம் காட்டுகிறது. இது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்பு 14க்கு எதிரானதாகும். எனவே இந்த 'சட்ட விரோத சட்டத்தை' ரத்து செய்ய வேண்டும் எனத் தீர்மானத்தின் மூலம் வலியுறுத்தியிருப்பதைப் பாராட்டுகிறோம். அத்துடன் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை ரத்துசெய்யவேண்டும் என்று தமிழ்நாடு அரசின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடுக்க வேண்டும்.

குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் தேசிய குடிமக்கள் பதிவேடு உருவாக்கப்படும் என ஒன்றிய அரசு கூறிவருகிறது.

ஒவ்வொரு குடிமகனும் தான் இந்த நாட்டின் குடிமகன் தான் என்பதைத் தனது முன்னோர்களின் ஆவணங்கள் மூலம் நிரூபிக்க வேண்டும் என ஒன்றிய அரசு கூறுகிறது. சொந்தமாக நிலமோ வீடோ இல்லாத கோடிக்கணக்கான இந்தியர்கள் இதனால் குடியுரிமையை இழக்கும் நிலை உருவாகியுள்ளது. எனவே, என்.ஆர்.சி நடவடிக்கையையும் நிறுத்த வேண்டும் என ஒன்றிய அரசைத் தமிழ்நாடு அரசு வலியுறுத்த வேண்டும்.

இவ்வாறு திருமாவளவன் எம்.பி வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

The Statesman

Date : 10-Sep-2021

'TN excavations indicate 3,200-year-old civilisation'

STATESMAN NEWS SERVICE
CHENNAI, 9 SEPTEMBER

POINTERS TO THE PAST

» Carbon dating of rice along with husk found in an offering pot excavated at Sivakalai yielded the date of 1155 BCE

» A silver punch-marked coin found at Keeladi was found to be from before 4th Century BCE

Archeological excavations currently in progress in Tamil Nadu point to the existence of a river civilisation in the Sivakalai region 3,200 years ago, state chief minister M K Stalin told the Tamil Nadu Assembly today.

Releasing key findings of excavations by the archeological department, Stalin said that carbon dating done at a US laboratory of rice and husk found in an offering pot within an urn at Sivakalai yielded the date of 1155 BCE.

Making a statement Under Rule 110 in the state Assembly, he said the State Archaeology department has undertaken excavations in different parts of the state including at Keeladi, Adhichanallur, Sivakalai, Korkai, Kodumanal, Mayiladumparai and Gangaikonda Cholapuram.

He also said that the Tamilnadu State Archaeology Department will make earnest efforts to undertake excavations in historically important sites in other neighbouring states, such as Pattanam in Kerala, Vengi in Andhra Pradesh, Thalaikkadu in Karnataka and Palur in Odissa to trace the roots of the Tamil culture. "As a first step, excavations would be carried out at the Sangam age port town of Musiri which is now known as Pattinam and located in Kerala," he said.

"Several unique artefacts are being unearthed in each location and they are being tested and validated in reputed laboratories in India and across the globe," Stalin said.

He said select carbon samples were sent for AMS (Accelerator Mass Spectrometry) Carbon Dating to the Beta Analytical Laboratory in Miami, Florida, USA. The results which were received recently are quite a revelation to the archeological community, he said.

He said already Adhichanallur has been dated to the 9th Century BCE and Korkai to the 8th Century BCE. "With the current findings we can come to the conclusion that a mature civilisation existed along the river Porunai (Thamiraparani) with Adhichanallur and Sivakalai as habitations and Korkai being the port," he said.

Stalin said a silver punch marked coin recently found at Keeladi with the symbols of sun, moon and a few geometrical designs was found to be from before 4th Century BCE, which is Pre-Mauryan by comparing with Gupta Hardekar series.

He said former Director General of ASI Rakesh Tiwari and Banaras Hindu University Professor Dr Ravindra N Singh opined after careful analysis of Northern black pottery which are datable upto 6th Century BCE, that places along Vagai Valley such as Keeladi and port towns such as Korkai, definitely had vibrant trade links which the Gangetic valley in north India and with other countries.

Stalin also said that a museum would be set up at Tirunelveli at a cost of Rs 15 crore to display the archeological artefacts found at the excavation sites at Adichanallur, Sivakalai and Korkai. He said the State Department of Archaeology has undertaken archeological excavations at seven places in 2021 in order to bring out the cultural wealth of Tamil Nadu in a more scientific manner.

Hindustan Times

Date : 10-Sep-2021

Proof of civilisation 3,200 years ago in Tamil Nadu: Stalin

Divya Chandrababu
letters@hindustantimes.com

CHENNAI: There's conclusive proof of a civilisation existing in Tamil Nadu around 3,200 years ago, state chief minister MK Stalin said on Thursday, citing scientific evidence for the same – a finding that means a thriving city-based river valley civilisation existed in the state, coinciding with the latter half of the Indus Valley civilisation.

Stalin said that a Tamil civilisation existed 3,200 years ago along the Tamiraparani river in present-day Thoothukudi and Tirunelveli districts – a finding proved by carbon dating rice found in a burial urn in a US lab.

He added that the state archaeological department would undertake excavations in neighbouring states and other countries, after taking due permission.

The civilisation link

Experts said the finding revealed the relationship between Tamil and Indus Valley civilisations. It is also certain to foster more debate on a controversial issue – the origins of the Indus Valley civilisation, especially in the context of new research released last month that claimed Dravidian languages were spoken by some in the Indus Valley.

Speaking in the state assembly, Stalin said, "Recently, we have got the test results. I am extremely happy to announce that the rice samples have yielded the date of 1,155 BCE and hence, the Tamiraparani River Civilisation (Tirunelveli region in southern TN) is 3,200 years old and this is scientifically validated."

He added that his government's mission was to prove scientifically that the Indian subcontinent's history should be written starting from the Tamil landscape.

Stalin revealed that recent results from carbon samples from excavations in Sivakalai (in adjacent districts of present day Thoothukudi and Tirunelveli) sent for AMS Carbon Dating Test to the Beta Analytical Laboratory in Miami, Florida, found that rice and husk discovered in an offering urn yielded the date of 1155 BCE.

HT has seen a copy of the analysis that shows that the material – rice with soil – was submitted on August 18 this year and the report was released on August 27.

For a comparative understanding, Indus civilisation, which is the earliest known in the Indian subcontinent, lasted from 3300 BCE to 1300 BCE. "It's quite a revelation to the archaeological community," Stalin said.

Previously, excavations from the Adhichanallur site in the same district showed results of 9th century BCE and Korkai being 8th century BCE. "With the current findings one can come to the conclusion that a mature civilisation existed along the river Porunai (Tamiraparani is the modern name). Adhichanallur and Sivakalai as habitations and Korkai being the port," Stalin said.

He also announced that a museum, for which ₹15-crore has been earmarked, will come up in Tirunelveli district to **house the antiquities and cultural history.**

Pivot to Tamil history

The CM said the state archaeology department is re-establishing the cultural history of Tamil Nadu through scientific studies and added that to establish Tamil roots, they would undertake excavations in historically important sites in neighbouring states, in sites such as Pattanam in Kerala, Vengi in Andhra Pradesh, Thalaikkadu in Karnataka and Palur in Odissa.

They will also look at sites in South-east Asia, in countries such as Malaysia, Thailand, and Vietnam, to which Chola King Rajendra had voyaged and where he had established beachheads, heading a kingdom that was India's first maritime power. To establish Tamil trade relationships, excavations will also be undertaken in Quseir al-Qadim and Pernica Anekke in Egypt, part of the Roman Empire and in Khor Rori in Oman. Tamil Brahmi Potsherds were found in Egypt and Oman. "Efforts will be made to undertake exploration in these areas with the assistance of local archaeological institutions," Stalin said. It is believed that ancient Tamils were a seafaring race and that, as long as 2,500 years ago, were trading with Egypt, countries in the Arabian Peninsula, Thailand, Malaysia and Sri Lanka, he noted.

Other initiatives

Currently, in Tamil Nadu, excavations are ongoing in Keeladi, Adhichanallur, Sivakalai, Korkai, Kodumanal, Mayiladumparai and Gangaikonda Cholapuram.

The latest findings are significant because they push back the date of early Tamil civilisation by around 800 years. "This is the earliest date we have found in Tamil Nadu after excavating more than 125 sites and it shows for the first time that Tamil people had a relationship with the Indus Valley Civilisation," said S Rajavelu, archaeologist and adjunct faculty, Alagappa University.

"There are so many similarities between the two, like using bricks for constructions and not stones which came much later. This discovery has narrowed the chronology gap between Indus Valley Civilisation and Tamil history, which according to scholars only dated between 300 BC and 300 AD. Now we know it went back even more and is at least 3000 years old," the archaeologist said.

Stalin also said that a punch-marked silver coin recently found at Keeladi with the symbols of Sun, Moon, Taurine and few geometrical designs is believed to date back to before the 4th century BCE. "With government support more excavations are in plans which will help us trace south Indian history which is often forgotten in Indian history writings," said Rajavelu.

தினகரன்

Date : 11-Sep-2021

காவலர்களின் காவலர்

நடப்பு சட்டப்பேரவை கூட்டத்தொடரில், திமுக அரசு தாக்கல் செய்த பட்ஜெட்டில், தமிழக காவல்துறையில் 14,137 காலிப்பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும். அதற்காக ₹8,930.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும் தெரிவித்துள்ளது. காலியிடங்களை நிரப்புவதன் மூலம் காவலர்களின் பணிச்சுமை வெகுவாக குறையும். ஏற்கனவே காவலர்கள் ஓய்வின்றி பணிகளை தொடர்வதால், மன அழுத்தத்தால் உடல்நலம் பாதிக்கப்பட்டு, தற்கொலை முடிவுக்கு தள்ளப்படுகின்றனர். தமிழகத்தில் கடந்த 10 ஆண்டுகளில் சராசரியாக ஓராண்டில் சுமார் 27 போலீசார் வரை தற்கொலை செய்து கொள்வதாக ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

காவலர்களின் மனநிலையை கருத்தில் கொண்டு தமிழக அரசு, காவலர்களுக்கு வாரம் ஒரு நாள் கட்டாய விடுமுறை அறிவிப்பை வெளியிட்டது. இதன்மூலம் குடும்பத்தில் நடக்கும் சுப நிகழ்வுகள், வெளியூர் சுற்றுலா என காவலர்கள் தங்களது விடுமுறையை கழித்து வருகின்றனர். தமிழக மாநகராட்சிகளில் பணியாற்றும் காவல்துறை துணை கமிஷனர்களின் அதிகாரவரம்பை மாற்றியமைத்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. கடந்த பல ஆண்டுகளாகவே காவல்துறையில் குற்றப்பிரிவு, சட்டம், ஒழுங்கு பிரிவினரிடையே ஒரு "ஈகோ மோதல்" இருந்தது. குற்றப்பிரிவை விட, சட்டம், ஒழுங்கு பிரிவே உயர்வானது என்ற எண்ணம் இருந்து வந்தது. குற்ற சம்பவங்கள் தங்கள் அதிகார எல்லையில் நடக்கும்போது, யார் விசாரணை நடத்துவது என்ற குழப்பமும் நீடித்தது.

இதனை தவிர்க்க குற்றம், சட்டம், ஒழுங்கு பிரிவுகளை ஒருங்கிணைத்து, மாநகராட்சிகளை இரு பிரிவுகளாக பிரித்து துணை கமிஷனர்களின் பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இந்த மாற்றத்தின் மூலம் இனி யார் பெரியவர், யார் சிறியவர் என்ற பாகுபாடின்றி வழக்கு விசாரணை நடைபெறும். அரசின் இந்த அணுகுமுறை காவல் துறையினர் மத்தியில் பெருத்த வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த சூழலில், ஐகோர்ட் மதுரை கிளையில் கரூரை சேர்ந்த ஓய்வு காவலர் தொடர்ந்த ஒரு வழக்கில், நீதிபதிகள் என்.கிருபாகரன் (ஓய்வு), பி.புகழேந்தி பிறப்பித்த உத்தரவு முக்கியத்துவம் பெற்றுள்ளது. காவலர் பிரச்னைகளை தீர்க்க, ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில், காவல்துறை ஆணையம் அமைக்க வேண்டும். இதர அரசு துறையினரை விட 10 சதவீதம் கூடுதல் ஊதியம், காவலர்களின் பணி நேரத்தை 8 மணி நேரமாக நிர்ணயித்து, சுழற்சி முறையில் பணி வழங்க வேண்டுமென கூறி உள்ளனர்.

நாளை மறுதினம் (செப்.13) சட்டப்பேரவையில் காவலர் மற்றும் தீயணைப்புத்துறை தொடர்பான மானிய கோரிக்கைகள் மீது நடந்த விவாதத்துக்கு பதிலளித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சில அறிவிப்புகளை வெளியிடுகிறார். இந்த அறிவிப்புகள் தங்களது வாழ்வில் வசந்தம் வீசும் அறிவிப்புகளாகவே இருக்குமென காவலர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர். காவலர்களின் காவலரான முதல்வர் அவ்வாறே செய்வார் என எதிர்பார்க்கலாம்.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
Date : 11-Sep-2021

நகர்ப்புறங்களிலும் வேலைவாய்ப்பு திட்டம்!

மன்மோகன்சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கம் 2-வது முறையாக வெற்றிபெற்றதற்கு மட்டுமல்லாமல், அந்த ஆட்சிக்கு முத்திரை பதித்த திட்டமென்றால், அது மகாத்மா காந்தி தேசிய ஊரகவேலைவாய்ப்பு உறுதித்திட்டம் என்று கூறப்படும் நூறு நாள் வேலைத்திட்டம்தான். 2.2.2006-ம் ஆண்டு முதல் இந்ததிட்டம் தொடக்கத்தில் சில மாவட்டங்களிலும், தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஒவ்வொரு நிதியாண்டிலும் கிராமப்புறங்களில் திறன்சாரா, உடல் உழைப்பை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோருள்ள ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் நூறுநாட்களுக்கு குறையாமல் வேலைவாய்ப்பை அளிக்கும் திட்டம்தான் இது. இந்த திட்டத்துக்காகும் செலவு மத்திய, மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

தமிழ்நாட்டில் ஆரம்பத்தில் ஒரு நாளைக்கு ரூ.100 என்று வழங்கப்பட்ட ஊதியம், தற்போது

ரூ.256 அதிகபட்சமாக வழங்கப்படுகிறது. மிகச்சிறந்த வறுமைஒழிப்பு திட்டமாக கருதப்படும் இந்த திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட 263 பணிகளில் 182 பணிகள் இயற்கைவள மேலாண்மை பணிகளாகும். ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒரே அளவு ஊதியம் வழங்கப்படுகிறது. கொரோனா பாதிப்பால் எல்லா இடங்களிலும் வேலையிழப்பு காரணமாக மக்கள் அவதிப்பட்ட சூழ்நிலையில் கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கும், புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கும் இந்த திட்டம் பெருமளவில் கைகொடுத்தது. கிராமப்புற பொருளாதாரம் ஓரளவு தாக்குப்பிடித்த நிலைக்கு காரணம், அங்கு செயல்படுத்தப்பட்டு வந்த நூறுநாள் வேலைத்திட்டம்தான்.

கொரோனா நேரத்தில் மத்திய அரசாங்கம் கூடுதலாக இந்த திட்டத்துக்காக நிதி ஒதுக்கியது. ஆனால் இந்த நிதியாண்டில் ரூ.73 ஆயிரம் கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், கடந்தாண்டு திருத்தப்பட்ட பட்ஜெட் தொகையைவிட குறைவான தொகையே ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே கூடுதலாக இந்த திட்டத்துக்கு நிதி ஒதுக்கவேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது. கிராமப்புற ஏழை மக்களுக்கு இந்த திட்டம் வாழ்வு அளிக்கிறது. நகர்ப்புறங்களில்தான் 53 சதவீதம் மக்கள் வாழ்கிறார்கள். இங்குதான் வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறது. சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ள ஒரு புள்ளி விவரத்தில் நகர்ப்புறங்களில் 10.23 சதவீதம் பேர் வேலையில்லாத்திண்டாட்டத்தால் வாடுகிறார்கள் என்ற தகவல் தெரியவந்துள்ளது.

கிராமப்புறங்களில் நூறுநாள் வேலைத்திட்டம் இருக்கிறதுபோல, நகர்ப்புறங்களில் நூறுநாள் வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தவேண்டும் என்ற கோரிக்கை நாடுமுழுவதும் எழுந்து கொண்டிருக்கிறது. எடப்பாடி பழனிசாமி முதல்-அமைச்சராக இருந்த நேரத்தில் கொரோனா பாதிப்பில் இருந்து வளர்ச்சி பாதையில் மாநிலத்தை மீண்டும் கொண்டுவர முன்னாள் ரிசர்வ் வங்கி கவர்னர் சி.ரெங்கராஜன் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக்குழு தமிழ்நாட்டில் நகர்ப்புற வேலைவாய்ப்பு உறுதித்திட்டம், அதாவது நூறுநாள் வேலைத்திட்டத்தை அரசு நிறைவேற்ற வேண்டும் என்று பரிந்துரை செய்திருந்தது. இது மத்திய அரசாங்க திட்டம். எனவே மத்திய அரசாங்கம்தான் இதற்கான சட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்றாலும், மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு அதுவரை காத்திருக்காமல் நகர்ப்புறத்தில் நூறுநாள் வேலைத்திட்டம் என்றநடன் நகர்ப்புற ஏழைகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற வேலைவாய்ப்புத்திட்டம் என்ற ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறது.

முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சியில் 2 மண்டலங்களிலும், ஏனைய மாநகராட்சிகளில் தலா ஒருமண்டலமும், 7 நகராட்சி நிர்வாக மண்டலங்களில் தலா ஒரு நகராட்சி என 7 நகராட்சிகளிலும் 37 மாவட்டங்களில் தலா ஒரு பேரூராட்சி வீதம் 37 பேரூராட்சிகளிலும், எப்படி கிராமப்புறங்களில் நூறுநாள் வேலைத்திட்டம் செயல்படுத்தப்படுகிறதோ? அதுபோல நகர்ப்புறங்களிலும் இந்தத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருக்கிறார். இது மிக மிக வரவேற்கத்தகுந்த திட்டம். இது முன்னோடி திட்டம்தான் என்றாலும், இதில் எந்தெந்த பணிகள் எடுத்துக்கொள்ளப்படும்?, எவ்வளவு ஊதியம் வழங்கப்படும்? என்பதற்கு விரிவான அரசாணைகளை பிறப்பித்து விரைவில் இந்த திட்டம் செயல்படுத்தப்படவேண்டும். நகர்ப்புறங்களில் அதிலும் குறிப்பாக கொரோனா பாதிப்பால் வேலையிழந்தவர்களுக்கு இது வரப்பிரசாதமாக அமையும். இதன் செயல்பாட்டை பொறுத்து தமிழகம் முழுவதும் அனைத்து நகர்ப்புறங்களிலும் இந்த வேலைவாய்ப்புத்திட்டத்தை அடுத்தடுத்து தொடங்கவேண்டும்.

தினமணி

Date : 11-Sep-2021

பாரதி வழியில் தினமணி...

மகாகவி பாரதியார் மறைந்து நூறு ஆண்டுகள் கடந்துவிட்டன. நூற்றாண்டுகள் கடந்தும் வற்றாத ஜீவநதிபோல, ஒளிமங்காச் சூரியனாக அந்தப் பாட்டுத் தலைவனின் நீடுபுகழ் நானிலத்தில் கோலோச்சுகிறது. தமிழால் பாரதி தகைமை பெற்றதும், பாரதியால் தமிழ் தகைமை பெற்றதும், இயற்கையாய் அமைந்த அருட்கொடைகள்.

செப்டம்பர் 11-ஆம் நாளுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அமெரிக்காவின் சிகாகோ மாநகரில் நடந்த சர்வ சமய மாநாட்டில் சுவாமி விவேகானந்தர் உரையாற்றி, ஒட்டுமொத்த உலகத்தையும் தன்வயப்படுத்தியது 1893-ஆம் ஆண்டு செப்டம்பர் 11-ஆம் நாளில்தான்.

மகாகவி பாரதியார் மண்ணுலக வாழ்வைத் துறந்து விண்ணுலகேகியது 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் 11-ஆம் நாள். 39-ஆவது வயது நிறைவுறுமுன் உயிர்நீத்த பாரதியாரின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் இருபதுக்கும் குறைவானோர் என்று கூறுவார் அவரால் 'தம்பி' என்று அழைக்கப்பட்ட பரலி சு. நெல்லையப்பர். சென்னை கிருஷ்ணாம்பேட்டை மயானத்தில் அஸ்தியானது பாரதியாரின் பூத உடல்; தமிழுக்கு ஆஸ்தியானது அவர் பாடிய தமிழ்!

'தமிழகம், தமிழுக்கு உயர்வளிக்கும் தலைவனை எண்ணித் தவம் கிடக்கையில் இலகு பாரதிப் புலவர் தோன்றினார்' என்பார் பாரதிதாசன். அதனால்தான், மறைந்தும் மறையாமலும், ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரிடத்தில் தமிழகத்தின் அடையாளமாகவோ, கவிதைக்கு எடுத்துக்காட்டாகவோ, முன்னுதாரணமாகவோ, மேற்கோளாகவோ அவர் பெயர் உச்சரிக்கப்பட்டு, இறவாப் புகழுடன் நூற்றாண்டுகள் கடந்தும் உலவிக் கொண்டிருக்கிறார்.

'தமிழகமே, பாரதியைக் கொண்டாடு. அதன்மூலம் பாரதத்தை நீ கொண்டாடுகிறாய்; தேசபக்தியைக் கொண்டாடுகிறாய்; தமிழ் மொழியைக் கொண்டாடுகிறாய்; பாரதியைக் கொண்டாடாதவனுக்குத் தமிழன் என்று சொல்லிக் கொள்ள அருகதை இல்லை' என்பார் கண்ணதாசன்.

பாரதியாரின் நினைவு நூற்றாண்டையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு 14 அறிவிப்புகளை வெளியிட்டு பாரதி அன்பர்களை திக்குமுக்காடச் செய்திருக்கிறது. நீண்ட நாள்களாக எண்ணமெல்லாம் கோரிக்கைகளை மனதில் தேக்கியிருந்தோமோ அவற்றையும், அதற்கு மேலும் பெருமழை பொழிந்தாற்போல அறிவித்திருப்பதை பெருமகிழ்ச்சியுடன் தினமணி மனதார வரவேற்கிறது.

பாரதி நினைவு நாளான செப். 11-ஆம் தேதி 'மகாகவி நாளாக' கடைப்பிடிக்கப்படும் என்பதும், ஆண்டுதோறும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கவிதைப் போட்டி நடத்தி ரூபாய் ஒரு லட்சம் பரிசுத் தொகையுடன் 'பாரதி இளம் கவிஞர்' விருது அளிக்கப்படும் என்பதும், பாரதியின் உருவச் சிலைகள், உருவம் பொறித்த கலைப் பொருள்கள் பூம்புகார் நிறுவனத்தின் மூலம் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படும் என்பதும் பேரானந்தம் அளிக்கும் அறிவிப்புகள். தனக்கு நதி பல்லக்கு மரியாதை தரப்பட வேண்டும் என்று விழைந்த பாரதி மட்டும் இப்போது இருந்திருந்தால், முதல்வரின் அறிவிப்புகளைக் கேட்டு பூரித்துப் போயிருப்பார்.

மகாகவி பாரதியார் அமரரான 13-ஆவது நினைவு நாளில், அவரது நினைவைப் போற்றும் விதத்திலும் அவரது கொள்கைகளையும், சிந்தனைகளையும் பரப்பும் நோக்கிலும் உருவானதுதான் நமது 'தினமணி' நாளிதழ். இன்று 'தினமணி' நாளிதழின் தமிழ்ப் பணி 87 ஆண்டுகளைக் கடந்து 88-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. 1934-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ஆம் நாள் 'தினமணி' தொடங்கப்பட்ட அந்த முதல் நாள் தலையங்கம் இன்றுவரை, 'தினமணி'யின் நிரந்தர வழிகாட்டியாகத் தொடர்கிறது.

'சுதந்திர சூரியனைக் காண விரும்பிய தெய்வீகப் பித்தரான சுப்பிரமணிய பாரதியாரின் வருஷாந்திர தினத்தன்று அவருடைய சுதந்திர தாகத்தையும், சமத்துவக் கொள்கைகளையும் தமிழ்நாட்டில் பரப்பும் நோக்கத்துடன் 'தினமணி' தொடங்கப்படுகிறது' என்று தனது தலையங்கத்தின் மூலம் தெரிவித்தார் அதன் முதல் ஆசிரியரான டி.எஸ். சொக்கலிங்கம்.

சுதந்திரப் போராட்டத்துக்கு உறுதுணையாக இருக்க, அடிமைத்தனத்தில் மூழ்கிக் கிடக்கும் தமிழரைத் தட்டியெழுப்ப, பாட்டாளி மக்களின் சார்பில் குரலெழுப்ப, பாரதியாரின் வழிநின்று தமிழ் வளர்க்க என்று 'தினமணி' நாளிதழ் தனக்குத்தானே நிர்ணயித்துக்கொண்ட தடத்தில் கடந்த 87 ஆண்டுகளாகத் தொடர்ந்து தனது வெற்றிப் பயணத்தை நடத்தி வருகிறது. மகாகவி பாரதியாரின் புகழையும், கொள்கைகளையும் நிலைநிறுத்தும் பணியில் நூற்றாண்டை நோக்கி 'தினமணி'யின் இதழியல் பயணம் தொடர்கிறது.

பாரதியின் பார்வை பரந்து விரிந்தது. அவரது கொள்கைகள் ஸ்படிகம்போலத் தெளிந்தது. 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்றும், 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்' என்றும் தமிழையும், 'எத்தனையுண்டு புவிமீதே, அவை யாவும் படைத்த தமிழ்நாடு' என்று தமிழகத்தையும் பாடிப் பரவசப்படும் அந்த மகாகவி, 'வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணித்திரு நாடு' என்று தனது பரந்துபட்ட தேசியப் பார்வையை ஐயத்துக்கிடமின்றி ஆணித்தரமாகப் பதிவிட்டுச் சென்றிருக்கிறார்.

பாரதியின் பாதைதான் 'தினமணி' நாளிதழுக்கு அதன் முந்தைய ஆசிரியர்கள் இட்டுத் தந்திருக்கும் பாதை. பாரதியின் பார்வைதான் 'தினமணி' நாளிதழுக்கு அவர்கள் வகுத்துத் தந்திருக்கும் பார்வை. மகாகவி பாரதியின் 'நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்'தான் 'தினமணி' நாளிதழ் பின்பற்றும் உறுதியான கொள்கை. 'எழுதுகோல் தெய்வம், எழுத்தும் தெய்வம்' என்கிற தாரக மந்திரத்துடன் 'தினமணி'யின் இதழியல் பயணம் பாரதி பாதையில் தொடர்கிறது.

மகாகவி பாரதியாரின் நினைவு நூற்றாண்டில், தனது 88-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் வேளையில், அந்த நவயுகக் கவிஞனின் கனவுகளை நனவாக்கும் பணிக்கு 'தினமணி' தன்னை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்கிறது!

தமிழ் முரசு

Date : 11-Sep-2021

பாரதிக்கு புகழ் சேர்க்கும் முதல்வர்

முத்தரசன் பாராட்டு

சென்னை, செப். 11- இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன் வெளியிட்ட அறிக்கை:

காலத்தை வென்று வாழ்ந்து வரும் 'மகாகவி' பாரதியின் நினைவு நூற்றாண்டை சிறப்பாக கடைபிடிக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். ஆண்டுதோறும் செப்டம்பர் 11ம் நாளை 'மகாகவி நாள்' தமிழ்நாடு அரசு கடைப்பிடிக்கும் என்றும் அறிவித்துள்ளார். இத்துடன் ஆண்டுதோறும் பள்ளி, கல்லூரிகளில் மகாகவி பாரதி குறித்த கவிதை போட்டி நடத்தி 'பாரதி இளம் கவிஞர்' விருது வழங்கப்படும் என்றும் அறிவித்திருப்பது காலம்தோறும் இளைய தலைமுறைக்கு பாரதியை எடுத்து சொல்லும் நல்ல நடவடிக்கையாகும்.

பாரதி குறித்து ஆய்வு நடத்தி அவரது படைப்புகளை தொகுத்தும், ஆய்வு செய்தும் பல படைப்புகளை வழங்கியுள்ள பாரதி ஆய்வாளர்கள் மயிலை சீனி.வேங்கடசாமி...

பாரதி ஆய்வாளர்கள் மயிலை சீனி.விசுவநாதன், தொ.மு.சி.ரகுநாதன், பெ.தூரன், ரா.அ.பத்மநாபன், இளசை மணியன், பேராசிரியர் ய.மணிகண்டன் ஆகியோருக்கு விருதும், கொடையும் வழங்கி பாராட்டியிருப்பது போற்றத்தக்கதாகும். விடுதலை போராட்ட காலத்தில் தேசபக்திக்கு கனல் மூட்டிய களம் நின்று போராடிய கவி, மகாகவி சி.சுப்பிரமணிய பாரதியின் வாழ்க்கை செய்தியை வரலாறு நெடுகிலும் நிலைநிறுத்தும் முதல்வர் மு.க.ஸ்டாலின் நடவடிக்கையை மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம்.

இனி செய்வதற்கு ஏதுமில்லை

பாரதிக்கு புகழ் சேர்க்கும் 14 புதிய அறிவிப்புகள்

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கே.எஸ்.அழகிரி பாராட்டு!!

சென்னை, செப். 11–

இனி செய்வதற்கு ஏதுமில்லை என்னும் அளவுக்கு மேலும் மகா கவி பாரதிக்கு புகழ் சேர்க்கும் 14 புதிய அறிவிப்புக்களை வெளியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

எழுத்து, கவிதைகள் வழியாக நாட்டின் விடுதலைக்கு உழைத்த பாரதியாரின் நினைவு தினமான செப்டம்பர் 11 ஆம் நாள், மகாகவி நாளாக ஆண்டுதோறும் கடைப்பிடிக்கப்படும் என்பது உள்ளிட்ட 14 அறிவிப்புகளை சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ளார்.

தேசப்பற்று, தெய்வப்பற்று, தமிழ்ப் பற்று, மானுடப்பற்று ஆகிய நான்கும் கலந்தவர்தான் பாரதியார். கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது தான், எட்டயபுரம் பாரதியார் வீட்டை அரசுசார்பில் வாங்கி நினைவு இல்லம் ஆக்கினார். இந்நிலையில், பாரதியாருக்கு மேலும் புகழ் சேர்க்கும் வகையில் அவரது நினைவு நாளான செப்டம்பர் 11 ஆம் நாள் ஆண்டுதோறும் மகாகவி நாளாக கடைப்பிடிக்கப்படும் என்றும் முதலமைச்சர் அறிவித்துள்ளது தமிழ்சமுதாயத்துக்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

உத்தரப்பிரதேசமாநிலம் காசியில் பாரதியார் வாழ்ந்த வீட்டைப் பராமரிக்க அரசின் சார்பில் நிதியுதவி அளிக்கப்படும், பாரதியார் படைப்புகளைக் குறும்படம் மற்றும் நாடக வடிவில் தயாரிக்க நிதியுதவி வழங்கி நவீன ஊடகங்கள் வழியே வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பன போன்ற 14 அறிவிப்புகள் பாரதியை நேசிப்பவர்களுக்கு நெகிழ்வை ஏற்படுத்தியுள்ளன.

பாரதிக்கு பெருந்தலைவர் காமராஜரும் கலைஞரும் எவ்வளவோ பெருமைகளை சேர்த்துள்ளனர். முதலமைச்சர் வெளியிட்டுள்ள 14 அறிவிப்புகள் என்பது, பாரதிக்குப் புகழ் சேர்க்கும் வகையில் இனி செய்வதற்கு எதுவுமே இல்லை என்று கூறும் அளவுக்கு அமைந்துள்ளன. அந்த அளவுக்கு முழுமையான புகழ் மாலையை பாரதிக்கு முதலமைச்சர் சூட்டியுள்ளார். திராவிட இயக்கத்தின் நீட்சியாக இருக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பாரதியை என்றென்றும் நினைவுகூரும் வகையில் அறிவிப்புகளை வெளியிட்டதற்குத் தேசிய கட்சியின் தலைவர் என்ற முறையில் மிகுந்த பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

முரசொலி

Date : 12-Sep-2021

மகாகவி பாரதிக்கு மணிமகுடம் சூட்டிய

தமிழக முதல்வருக்கு நல்இதயங்களின் நன்றி!

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அறிக்கை!

சென்னை, செப்.11-

மகாகவி பாரதியின் நூற்றாண்டு நினைவு நாளில் எண்ணிப் பார்க்க இயலாத அளவிற்கு உயர்வினை செய்து புகழ் மணிமகுடம் சூட்டிய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நல்இதயங்களின் சார்பில் நன்றி என்று பன்னாட்டு தமிழுறவு மன்ற வகை அமைப்பாளர் பெருங் கவிக்கோ வா.மு.சேதுராமன் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :-

தமிழக முதல்வர் அவர்கள் பதவிப் பொறுப் பேற்ற நான்கு திங்களுக்குள் நாடே வியக்கும் வகையில் "தம் ஆட்சி அனைவருக்குமான மக்களாட்சி" என்பதை மெய்ப்பித்துள்ளார். ஒவ்வொரு துறையிலும் செயற்கரிய செயலாற்றிய தமிழகத்தின் தொண்டறச் செம்மல்களாக விளங்கிய பெருமக்களுக்கு உரிய சிறப்புகளை அடுக்கடுக்காக அறிவித்து மக்கள் மனங்களைக் குளிர்வித்துள்ளார் முதல்வர்.

இந்த மகத்தான வரிசையில் பைந்தமிழ்த் தேர்பாகன் மகாகவி பாரதியின் நூற்றாண்டு நினைவு நாளில் எண்ணிப் பாக்க இயலாத அளவிற்கு அரும் பெரும் புகழ்மணக்கும் உயர்வினை மணக்கச் செய்துள்ளார் தமிழக முதல்வர்.

ஒன்றல்ல இரண்டல்ல; பாரதிபுகழுக்கு ஒளிவீசும் 14 வகையான இரத்தினங்களை மகாகவிக்குச் சூட்டிய மகுடத்தில் பதித்து ஒளிவீச வைத்துள்ளார்கள்.

"அணிசெய் காவியம் ஆயிரம் கற்பினும் ஆழ்ந்த கவியின் திருவுளம் அறிகிறார்" என்பான் பாரதி. தன் கவிதைகளில் பன்முகத்தன்மையை பாடியிருப்பினும்; சமூக மேம்பாடுகள் குறித்தும் சமூக நீதி சீர்திருத்தம் பற்றியும் அவர் பாடிய கவிதைகளே அவர் ஒரு மக்கள் கவிஞர் என்பதை உலக அரங்கில் நிலைநாட்டி உள்ளது. பாரதியின் மிகுதியான பாடல்கள் எக்காலத்திற்கும் புரட்சிச் சிந்தனைகளை ஊட்டக் கூடிய பாடல்களாகும்.

"வாழிய செந்தமிழ்
வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத
மணித்திரு நாடு"

-என்று தமிழர்களின்; வழிகாட்டுதலாக முதலில் தமிழைப் போற்று. அதன் பின் தமிழரைப்போற்ற. தமிழ், தமிழின வழி பாரத தேசத்தைப் போற்று என்று தமிழர்களுக்குப் புதுப் பாதை காட்டியுள்ளார்.

எனவேதான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடுவார்.

தமிழால் பாரதி தகுதி பெற்றதும்
தமிழ் பாரதியால் தகுதி பெற்றதும் என்று

எனவே, மகாகவி பாரதிக்குப் புகழ்மகுடம் சூட்டி வரலாற்றுப் பெருமை சேர்த்த தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கட்கு உலகளாவிய தமிழ் அமைப்புகளோடும் தமிழ் மக்களின் சார்பாகப் பன்னாட்டு தமிழுறவு மன்றம் நன்றி மலர்களைத் தூவி முதல்வரை வணங்குகிறோம். "அழியாத மாகவிதை. சோதிமிக்க நற்கவிதை" என்று தன் கவிதை பற்றிக் கூறுவான் பாரதி.

பாரதியின் கவிதைகளைப் போல தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாரதிக்குச் சூட்டிய மகத்தான பெருமைகளும் என்றென்றும் நிலைத்து நின்று முதல்வரை வாழ்த்தும். முதல்வர் வாழி! நீடுழி!

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முரசொலி

Date : 12-Sep-2021

பாடப்புத்தகங்களில் அரசியல் புகுத்தக் கூடாது என அறிவித்து புத்தகப் பை வழங்கிய

முதல்வரின் பெருந்தன்மைக் கண்டு பாராட்டாதோர் இல்லை!

திருமதி. ஓவியம் நன்றி அறிக்கை!

சென்னை, செப். 12-

பாடப்புத்தகங்களில் ஏற்கனவே உள்ளவர்கள் படத்தை நீக்க வேண்டும் என அறிவித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகள் தெரிவித்து நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

வரலாற்று சிறப்பு மிக்க தலைவரே! உம் அரசியலை கண்டு தமிழ்நாடு மட்டுமல்ல, இந்திய அரசியலே ஆச்சரியத்தில் ஆழ்ந்து பார்க்கிறதே!

நான் தொடுத்த வழக்கில் கூட பள்ளி மாணவர்களின் நலன் கருதி பாடப் புத்தகங்களில் அரசியல் புகுத்தக் கூடாது என தாங்கள் எண்ணி சட்டசபையிலே சட்டென்று எவ்வித சலனுமுமின்றி மக்கள் வரி பணம் வீணாகக் கூடாது என எண்ணி எதிர்கட்சியினரின் புகைப்படம் இருந்தாலும் பயன்படுத்த அனுமதித்த அன்னை தெரெசாவின் கொடை உள்ளமே!

உம் செயலை கண்டு எதிர்கட்சியினரும் ஏளம் செய்ய முடியாமல் ஏமாந்து போய் விட்டனர்.

தலைவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் மு.கருணாநிதியின் வாரிசு அல்லவோ நீவிர்! அதனால் தான் அவரை போல் ஆட்சியில் ஒரு நிதானம் மக்களுக்கு செய்வதெல்லாம் தானம்!

இந்திய திருநாட்டில் அனைத்து கட்சியினரும் உம்செயலை கண்டும், உம் அரசியலை கண்டும், உம் மக்கள் பணியை கண்டும், விமர்சனம் செய்யாமல் வியப்பாய் மலைத்து சிந்தை குளிர சிறப்பாய் உள்ளது என உமது ஆட்சியை பற்றி அதிகார பூர்வமாக அறிக்கை அறிவிக்கிறார்கள்.

தமிழ்நாடு அரசியலின் ஒரு சகாப்தமே! இனி அரசியல் என்றால் என்ன! மக்கள் பணி என்றால் என்ன!! என்று மற்ற எல்லா அரசியில் கட்சியினரும் கற்கின்ற வகையில் கடமை தவறாது பணியாற்றும் கர்ம வீரரே!

கற்றறிந்தோர் கூட கண் வியர்ந்து பார்க்கிறார்கள். நீர் கருணை உள்ளத்தோடு மக்களுக்கு ஆற்றிடும் பணிகளை கண்டு அய்யாவின் பணி தொடரட்டும் அகிலம் போற்றும்படி மக்கள் மனம் குளிரட்டும்!

இவ்வாறு திருமதி. ஓவியம் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

முரசொலி

Date : 12-Sep-2021

‘ஆவண எழுத்தர்கள் நல நிதியம்’ முழுமையாகச் செயல்படுத்தப்படும் – என அறிவித்த

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு -தமிழ்நாடு பத்திரம் -நகல் எழுதுவோர் சங்கம் நன்றி!

சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் க.கண்ணன் அறிக்கை

சென்னை, செப்12-

தமிழ்நாடு பத்திரம் - நகல் எழுதுவோர் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் ஜி.கண்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருக்குவளை ஈன்ற நன்முத்தாம், அஞ்சுகத் தாயின் அருந்தவமாம், தெற்கில் உதித்த திராவிடச் சூரியனாம், தமிழினத் தலைவராம் கலைஞர் அவர்களால். முன்னாள் நிதியமைச்சர், பெருந்தகை பேராசிரியர் அவர்களிடம் நாங்கள் அளித்த கோரிக்கை மனு வினை ஏற்று ஆவண எழுத்தாளர்களின் நலனைப் பாதுகாக்கவும் அவர்களின் வாரிசுகளின் மேம் பாட்டிற்காகவும் 2007-2008 ஆம் ஆண்டிற்கான. நிதிநிலை. “ஆவண எழுத்தர்கள் நலநிதியம்” அமைக்கப்படுமென அறிவிக்கப்பட்டது

அதன் பேரில் 28.10.2010 அன்று அரசாணை நிலை எண்.183 வணிகவரி மற்றும் பதிவுத் துறை (எம்2), வெளியிடப்பட்டும், 2011 ஆம் வருடத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் திராவிட முன்னேற்றக் கழக அரசினால் அறிவிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.183-ஐ முந்தைய அ.தி.மு.க. அரசு செயல்படுத்தாமல் கிடப்பில் போடப்பட்டது.

இது தொடர்பாக எங்கள் சங்கத்தால் சென்னை உயர்நீதி மன்றம், மதுரை கிளை யில் W.P.No.4871 of 2016 ஆக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், ஆறு வார காலத்திற்குள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பரிந்துரைத்து நீதியரசர் மகா தேவன் அவர்களால் 22.11.20217 ஆம் தேதியில் உத்தரவிடப் பட்டும் கூட, முந்தைய அ.தி.மு.க. அரசு இது தொடர்பான எந்த வித நடவடிக்கையும் எடுக்காமல், எந்த மாற்றமும் இல்லாமல் இருந்த நிலையில் சென்ற 2016 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இப்போதைய. தமிழக முதல்வர் அவர்களால் மதுரையில் நடத்தப்பெற்ற ‘நமக்கு நாமே’ நிகழ்வில் எங்கள் சங்கம் சார்பாக நாங்கள் கோரிக் கையினை நினைவிற் கொண்டும்.

சென்ற 26.06.2021 அன்று பதிவுத் துறை அமைச்சர் அவர்களிடம் மதுரையில் எங்கள் சங்க நிர்வாகிகள் அளித்த மனுவினை கருணையோடு பரிசீலித்து தமிழக முதல்வர். அவர்களிடம் எடுத்துரைத்து முதல்வர் அவர்களின் ஒப்புதலோடு. திராவிட முன்னேற்றக் கழகத்தின் 2021 ஆம் ஆண்டின் தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி 2021-2022 ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் ஆவண எழுத்தர்கள் நல நிதியத்தை முழுமையாக செயல்படுத்தப்படுமென அறிவித்த தமிழக முதல்வர் அவர்களுக்கும், பதிவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும். பதிவுத்துறை செயலர் பதிவுத்துறை தலைவர் அவர்களுக்கு எங்கள் சங்கத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினை கரம் கூப்பி, சிரம்தாழ்த்தி தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர், தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்

Date : 12-Sep-2021

தொடரட்டும் மக்கள் பணி

ஆட்சியில் அமர்ந்த நாள் முதல் இன்றுவரை முதல்வர் மு.க.ஸ்டாலின் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் மக்கள் நலன் சார்ந்ததாகவே அமைந்துள்ளது. ரேஷன் அட்டைதாரர்களுக்கு ரூ.4 ஆயிரம், நகரப் பேருந்துகளில் பெண்களுக்கு இலவசப் பயணம், ஆவின் பால் விலை லிட்டருக்கு ₹3 குறைப்பு உள்ளிட்ட முத்தான முதல் 5 அறிவிப்புகள் துவங்கி நூற்றுக்கணக்கான அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.

கடந்த 10 ஆண்டு கால அதிமுக ஆட்சி காலத்தில், எல்லா துறைகளையுமே ஊழல் பணம் கொட்டும் இயந்திரங்களாக மாற்றிவிட்டனர். அதிலிருந்து ஒவ்வொரு துறையையும் திமுக அரசு மீட்டு வருகிறது. அதில் முக்கியமானது, இந்து அறநிலையத்துறை. இந்த துறை தொடர்பாக திமுக தேர்தல் அறிக்கையில், அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் சில, முக்கியமான மலைக்கோயில்கள் அனைத்திலும் கேபிள் கார் வசதி ஏற்படுத்தித் தரப்படும். கிராமப்புற பூசாரிகளின் ஊதியமும், ஓய்வூதியமும் அதிகரிக்கப்படும். இந்து ஆலயங்கள் புனரமைப்பு, குடமுழுக்கு பணிக்கு ₹1000 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டத்தின் படி முறையான பயிற்சி பெற்று 14 ஆண்டுகளாக வேலையின்றி காத்திருக்கும் அர்ச்சகர்களுக்கு உடனடி பணி நியமனம் வழங்கப்படும்.

இதில், அனைத்து சாதியினரும் அர்ச்சகராக்கப்பட்டு விட்டனர். நீண்ட காலமாக குடமுழுக்கு நடைபெறாத கோயில்களில் திருப்பணி துவங்கப்பட்டுள்ளது. மலைக் கோயில்களுக்கு கேபிள் கார் வசதி செய்து தரும் பணி பற்றிய ஆய்வு நடந்து வருகிறது. இது தவிர கோயில்களுக்கு சொந்தமான பல நூறு கோடி சொத்துக்கள் வெகு வேகமாக மீட்கப்பட்டு மீண்டும் கோயில்களுக்கே உரிமையாக்கப்பட்டு வருகிறது.

கோயில்களில் முடி காணிக்கை செலுத்த கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது என்று அறிவித்து பக்தர்கள் வயிற்றில் பால் வார்த்த கையோடு, இதனால், வருமானம் பாதிக்கப்படும் மொட்டை போடும் தொழிலாளர்களுக்கு மாதம் ₹5 ஆயிரம் ஊக்கத் தொகை வழங்க உத்தரவிட்டது தமிழக அரசு, தாயைப்போல எல்லோரையும் காக்கும் அரசு என்பதற்கு இது சான்று. இப்போது, கொரோனா பரவல் காரணமாக விநாயகர் சதுர்த்தி விழாவுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதால், விநாயகர் சிலை செய்யும் தொழிலில் ஈடுபட்டு வரும் 3000 தொழிலாளர்களுக்கு தலா 5000 ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று அடுத்த அறிவிப்பை வெளியிட்டார் முதல்வர்.

இந்நிலையில், ஒரு கால பூஜை திட்டத்தின் கீழ் திருக்கோயில்களில் பணிபுரியும் 12,959 அர்ச்சகர்கள், பட்டர்கள், பூசாரிகளுக்கு ₹1,000 ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தை முதல்வர் நேற்று துவக்கி வைத்துள்ளார். இந்த திட்டமே கடந்த வாரம்தான் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது. உடனடியாக இப்போது செயல்பாட்டுக்கு வந்துள்ளது. திட்டம் என்றாலே அறிவிப்போடு நின்று போவதற்காக வெளியிடப்படுவது என்பது அதிமுக ஆட்சியின் அவலம். ஆனால், திமுகவை பொறுத்தவரை சொன்னதை செய்வோம், அதையும் உடனே செய்வோம் என்ற புதிய இலக்கணத்தை உருவாக்கி, அதிரடி காட்டும் முதல்வரின் மக்கள் பணி தொடரட்டும்.

தினகரன்

Date : 12-Sep-2021

ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆணையம்

முதல்வரின் அறிவிப்புக்கு பணியாளர் நலச்சங்கம் வரவேற்பு

சென்னை, செப்.12: ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆணையம் அமைக்கப்படும் என்ற முதல்வரின் அறிவிப்புக்கு பணியாளர் நலச்சங்கம் வரவேற்பு தெரிவித்துள்ளது. தொழில்நுட்ப கல்வித்துறை டாக்டர் அம்பேத்கர் எஸ்.சி, எஸ்டி பணியாளர் நலச்சங்கம் தலைவர் மணிமொழி, பொதுசெயலாளர் டாக்டர் டி.மகிமை தாஸ் ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கை:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் சட்டப்பூர்வமான உரிமைககளை பாதுகாக்க தமிழ்நாடு ஆதிராவிடர் நல ஆணையம் என்ற புதிய அமைப்பு உருவாக்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் பேரவையில் அறிவித்தார். இதுதொடர்பான சட்டமுன்வடிவு சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதற்கு தொழில்நுட்பக் கல்வித்துறை டாக்டர் அம்பேத்கர் எஸ்.சி, எஸ்டி பணியாளர்கள் நலச்சங்கம் நன்றியை தெரிவித்து கொள்கிறது. 175வது ஆண்டு விழாவின் நினைவாக பன்முக ஆற்றல் கொண்ட பூர்வத்தமிழர் அயோத்திதாச பண்டிதருக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பையும், வன்கொடுமை தடுப்பு சட்டத்தின்படி பதிவான வழக்குகளை விரைந்து விசாரிக்க ஏதுவாக கூடுதல் நீதிமன்றங்களை சேலம், கிருஷ்ணகிரி, மதுரை மற்றும் திருநெல்வேலியில் அமைக்கப்படும் என்கிற முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பையும் வரவேற்று பாராட்டுகிறது.

இந்து தமிழ் திசை
தமிழால் இணைவோம்

Date : 12-Sep-2021

மகாகவி பாரதியார் குறித்த முதல்வரின் அறிவிப்புக்கு

அதிமுக, காங்கிரஸ், கம்யூனிஸ்ட் வரவேற்பு

சென்னை

மகாகவி பாரதியார் குறித்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்புக்கு அதிமுக, காங்கிரஸ், கம்யூனிஸ்ட் தலைவர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

பாரதியாரை போற்றும் வகையில் முதல்வர் ஸ்டாலின் 14 அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். பல தலைவர்களும் இதற்கு வரவேற்பு தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம்: பாரதியாரின் நினைவு நாளான செப்.11-ம் தேதி மகாகவி நாளாக கடைபிடிக்கப்படும் என்று முதல்வர் அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. பாரதியின் பாடல்கள், கட்டுரைகளை தொகுத்து 'மனதில் உறுதி வேண்டும்' என்ற புத்தகத்தை மாணவர்களுக்கு வழங்குதல், பாரதியின் உருவச் சிலைகள், உருவம் பொறித்த கலைப் பொருட்களை விற்பனை செய்தல் உள்ளிட்ட 14 அறிவிப்புகளை அதிமுக சார்பில் வரவேற்கிறேன். முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி: மகாகவி நாள் கடைபிடிக்கப்படும் என்ற முதல்வரின் அறிவிப்பு, தமிழ் சமுதாயத்துக்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மாணவர்களுக்கு கவிதைப் போட்டி நடத்தி ரூ.1 லட்சம் பரிசுடன் பாரதி இளம் கவிஞர் விருது வழங்கப்படும் என்ற அறிவிப்பும் பாரதிக்கு புகழ்சேர்க்கிறது. காசியில் பாரதியார் வாழ்ந்த வீட்டை பராமரிக்க நிதியுதவி அளிக்கப்படும் என்பது உள்ளிட்ட 14 அறிவிப்புகள் பாரதியை நேசிப்பவர்களுக்கு நெகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளன.

இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன்: ஆண்டுதோறும் செப். 11-ம் தேதியை மகாகவி நாளாக திமுக அரசு கடைபிடிக்கும் என்று முதல்வர் அறிவித்துள்ளார். அதேபோல, பாரதி ஆய்வாளர்களுக்கு விருதும், கொடையும் வழங்கியுள்ளது போற்றத்தக்கதாகும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

Date : 12-Sep-2021

முதல்வர் அறிவிப்புக்கு அ.தி.மு.க., வரவேற்பு

சென்னை, செப். 12-

பாரதியார் நூற்றாண்டு நினைவை ஒட்டி 14 அறிவிப்புகளை வெளியிட்ட முதல்வருக்கு, அ.தி.மு.க., ஒருங்கிணைப்பாளர் பன்னீர்செல்வம், தமிழக காங்., தலைவர் அழகிரி ஆகியோர் நன்றி தெரிவித்துள்ளனர்.

பன்னீர்செல்வம்: பாரதியாரின் நினைவு தினமான செப்., 11ம் தேதி, 'மகாகவி நாள்' ஆக அரசு சார்பில் கொண்டாடப்படும் என முதல்வர் அறிவித்திருப்பது வரவேற்கக்கூடியது. மேலும், 13 அறிவிப்புகளை முதல்வர் வெளியிட்டுள்ளார். இந்த அறிவிப்புகளை, அ.தி.மு.க., சார்பில் வரவேற்கிறோம். முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றி.

பன்னீர் செல்வம்

அழகிரி: முதல்வர் அறிவிப்புகள் பாரதிக்கு புகழ் சேர்க்கும் வகையில், இனி செய்வதற்கு எதுவுமே இல்லை என்று கூறும் அளவுக்கு அமைந்துள்ளன. அந்த அளவுக்கு முழுமையான புகழ் மாலையை பாரதிக்கு சூட்டியுள்ளார்.

இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

DECCAN Chronicle

Date : 12-Sep-2021

IUML hails passing of anti-CAA resolution

DC CORRESPONDENT
TIRUCHY, SEPT 11

Indian Union Muslim League (IUML) president K.M. Kadar Mohideen on Saturday lauded the Tamil Nadu Government for passing a resolution in the state assembly against the CAA law of the Union government. He thanked Chief Minister M.K. Stalin for the effort.

He said the Union government's move is totally against our Constitution. Since India is secular, the Union government should not engage in discriminatory laws like CAA, he said.

dt NEXT DAILY THANTHI

Date : 12-Sep-2021

Parties hail CM's declaration of Sept 11 as Mahakavi Day

CHENNAI: Cutting across party lines former chief minister and AIADMK coordinator O Panneerselvam on Saturday welcomed the state's decision to observe the death anniversary of firebrand poet Subramania Bharathi as Mahakavi day.

In a statement, Panneerselvam welcomed the announcement of CM MK Stalin stating that the state would observe Mahakavi — Great Poet — Day marking the death anniversary of Bharathiyar. OPS also termed the 14 announcements of Stalin to observe the 100th death anniversary of the poet as commendable and necessary to remember the contribution of the great poet towards freedom struggle, women empowerment, patriotism and Tamil development.

Bharathiyar through his poems ignited patriotism and left an indelible mark on Tamil literature. Bharthiyar like Periyar was also instrumental in social justice and fought for women freedom and empowerment. It was our party leader J Jayalalithaa who implemented women welfare schemes seconding the thoughts of poet Bharthiyar and the house of Bharathiyar in Triplicane was restored and opened to the public during

I wholeheartedly thank the Chief Minister for initiating the Mahakavi Day celebrations

– O Panneerselvam,
AIADMK Coordinator

the AIADMK regime, OPS recalled in his statement.

The CM had also made announcements to mark the centenary of Bharathiyar under which competitions for school children, research chair in the name of Bharathiyar in Bharathidasan University in Tiruchy and a park named after the poet by Rural Development Department and all these announcements should be commended. On behalf of AIADMK I wholeheartedly thank the Chief Minister for initiating the Mahakavi day celebrations and announcements to remember Bharathiyar, the statement added.

Meanwhile, CPM and CPI leaders hailed the contribution of Mahakavi Bharathiyar in freedom struggle and propagating progressive thoughts on occasion of his centenary memorial day on Saturday. "Many of Bharathiyar's songs were propagating left-wing ideals at a time when Marxist texts were not widely available in Tamil. The centenary of the Bharathi's memorial anniversary, who coined words 'commonwealth' and 'revolution' in Tamil and contributed to their spread, has begun," CPM state secretary K Balakrishnan tweeted.

Bharathi would probably have evolved into left-wing thinker if he had lived longer. "In name of Bharathi, we will pledge to create a non-exploitative modern India that eliminates castes, hunger and guarantees education for all," he wrote.

CPI state secretary R Mutharasan said that CM Stalin has made announcements to commemorate the death anniversary of Mahakavi Bharathiyar. "We welcome decision to observe 'Mahakavi Day' on September 11 every year. It is also a good move to take Bharathi to the younger generation by announcing that a 'Bharathi Young Poet' award will be given to students by conducting poetry competitions in schools, colleges every year," he said.

முரசொலி

Date : 13-Sep-2021

ஐ.நா.சபையில் மு.க.ஸ்டாலினுக்குப் பாராட்டு!

“தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு ஐ.நா.சபையில் பாராட்டு! மிரண்டுபோன உலக நாடுகள்!'' எனும் தலைப்பில், ‘போஸ்ட் பாக்ஸ்’ எனும் ‘யூ டியூப்’ சேனல் காணொலி ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றதிலிருந்து பெருவாரியான, மக்களின் மனங்களில் நல்லாட்சியைக் கொடுத்து வருகிறார் என்ற பாராட்டைப் பெற்று வருகிறார், ஸ்டாலின் அவர்கள்.

மகளிருக்கு இலவச பேருந்துப் பயணத்தைத் தொடங்கி, கொரோனா நிவாரண நிதியாக ஒவ்வொரு ரேசன் அட்டைக்கும் 4 ஆயிரம் ரூபாய் என்ற திட்டம், – அதனைத் தொடர்ந்து கொரோனா அலையை இந்தியாவின் மற்ற மாநிலங்களை விட சிறப்பாகக் கட்டுப்படுத்தியது – அதன்பிறகு முந்தைய ஆட்சியில் ஊழல் செய்தவர்களைக் களையெடுப்பது

– என, இப்படி எல்லாப் பக்கங்களிலும் ஒரே சமயத்தில் சிறப்பாகச் செயல்பட்டு வரும் மு.க.ஸ்டாலினின் ஆட்சி முறையால், பெருவாரியான தமிழக மக்கள், மு.க.ஸ்டாலினின் ஆட்சி முறை மீது நல்லவிதமான கருத்துக்களைக் கூறியிருக்கின்றனர்.

அது மட்டுமல்லாமல், தமிழக மக்களைத் தாண்டி, கேரளா, கர்நாடகம், ஆந்திரா என இப்படி மற்ற மாநில மக்களும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் ஆட்சியைப் பாராட்டி வருவதும் குறிப்பிடத்தக்கது.

அதன் எதிரொலியாகத்தான் ‘இந்தியா டுடே’ நடத்திய கருத்துக் கணிப்பில், இந்திய மாநில முதல்வர்களிலேயே சிறந்த முதல்வராக முதல் இடத்தைப் பிடித்துள்ளார் மு.க.ஸ்டாலின்.

இந்த நிலையில்தான், “பள்ளி மாணவ–மாணவிகள் பயன்படுத்தும் பைகளில் முன்னாள் முதல்வர்களின் படங்களே இருக்கட்டும்; அதை நீக்கி விட்டு என்னுடைய படத்தைப் பயன்படுத்த வேண்டாம்; அதற்கு ஆகும் செலவை மாணவ மாணவிகளின் கல்விச் செலவிற்காகப் பயன்படுத்துங்கள்'' என்று மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னது.

அதனைத் தொடர்ந்து, அரசு கௌரவப்படுத்தி வழங்கும் சான்றிதழ்களில் முதல்வரின் படமான தன்னுடைய படத்தைப் பயன்படுத்தாதது போன்ற மு.க.ஸ்டாலின் அவர்களின் செயல்பாடுகளைக் கண்டு பிரபலங்கள் மற்றும் அரசியல்வாதியான பவன் கல்யாண் போன்ற பல பிரபலங்கள், மு.க.ஸ்டாலினின் இந்தச் செயலைப் பாராட்டி வருகிறார்கள்.

அதன் தொடர்ச்சியாக – தற்போது அமெரிக்கா, சுவிட்சர்லாந்து போன்ற சில நாடுகளும், இனிமேல் அவர்கள் நாட்டில் அரசு சம்பந்தப்பட்ட பாராட்டுச் சான்றிதழ்களில் முன்னாள் தலைவர்களின் படம் இடம் பெறாது என்று முடிவெடுத்துள்ளதாகவும், அதற்குக் காரணம், மு.க.ஸ்டாலினின் இந்தச் செயலுக்குக் கிடைத்த மிகப்பெரிய வரவேற்புதான் என்றும் அந்நாட்டு ஊடகங்களில் பேசுபொருளாக ஆகிவிட்டது.

தற்போது அதற்கு ஒரு படி மேலே சென்று, உலக நாடுகளின் அதிபர்கள் ஒன்றாகக் கூடும் ஐ.நா.சபையே – மு.க. ஸ்டாலினின் இந்தச் செயலைப் பாராட்டிப் பேச வேண்டும் என்றும், இதனால் மற்ற நாடுகளும் இந்த சுயநலமில்லாத அரசியலைப் பின்தொடரலாம் என்றும் ஐ.நா.சபையில் வலியுறுத்தவுள்ளதாக ஐ.நா. சபையைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் ஊடகங்கள் வாயிலாகப் பேசி வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அக்காணொலியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முரசொலி

Date : 13-Sep-2021

இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறு மாற்றி எழுதப்பட வேண்டும்!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கருத்துக்கு ஆதரவு!

குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு பேச்சு!



சென்னை, செப்.13-

இந்திய துணைக் கண்டத்தின் வரலாற்றை மீண்டும் எழுத வேண்டும் என்று சட்டப்பேரவையில் முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்த கருத்துகளை குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு ஆமோதித்துள்ளார்.

இது தொடர்பாக பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டிருந்ததாவது 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என உலகிற்கு அறிவித்த தமிழரின் பண்பாட்டு அடையாளங்களைத் தேடி, இனி உலகெங்கும் பயணம் செய்வோம். இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு, இனி, தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் தொடங்கி மீண்டும் எழுதப்பட வேண்டும் என்பதைச் சான்றுகளின் அடிப்படையில், அறிவியல் வழி நின்று நிறுவுவதே நமது அரசினுடைய தலையாய கடமை என்று சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்திருந்தார்.

வெங்கையா நாயுடு பேச்சு

இதற்கிடையே இந்துஸ்தான் வர்த்தக சபையின் பவள விழா சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு சிறப்பு விருந்தினராக பங்கேற்று பேசியதாவது:-

இந்திய துணைக் கண்டத்தின் வரலாற்றை மீண்டும் எழுத வேண்டும் என்ற முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் கருத்துகளை நான் ஆமோதிக்கிறேன். உண்மையில், இது காலனித்துவ கண்கொண்டல்லாமல் இந்திய கண்ணோட்டத்துடன் மாற்றி எழுதப்பட வேண்டும்.

நிலையான முதலீட்டாளருக்கு சாதகமான அரசாங்கம், நல்ல இணைப்பு, உள்கட்டமைப்பு வசதிகள்; திறமையான, திறன் வாய்ந்த கடின உழைப்பாளிகள் ஆகியவற்றுடன், முதலீடு செய்வதற்கு கவர்ச்சிகரமான இடமாக, தமிழ்நாடு திகழ்கிறது.

தமிழ்நாடு மிக பண்டைய காலத்திலிருந்து சிறந்து விளங்கும் ஒரு வளமான கலாசார பாரம்பரியத்தை கொண்டுள்ளது. சில அகழ்வாராய்ச்சி பொருட்களின் 'கார்பன் டேட்டிங்' காலத்தை அறியும் ஆய்வு, தாமிரபரணி நாகரிகம் 3,200 ஆண்டுகள் பழமையானது என்பதை வெளிப்படுத்தி அதன் தொன்மையின் மீது புத்தொளி பாய்ச்சியுள்ளது. 12-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கட்டப்பட்ட கம்போடியாவில் உள்ள அங்கோர் வாட் கோவிலில் தமிழ் இந்திய கலாசாரத்தின் தாக்கத்தை நாம் காணலாம்.

இவ்வாறு குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு பேசினார்.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்

Date : 13-Sep-2021

நீட் விலக்கு

தமிழகத்தில் மருத்துவம் படிக்க விரும்பும் மாண வர்கள் கடந்த 3 ஆண்டுகளாக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மருத்துவ கல்லூரி யில் சேருவதற்கு நீட் தேர்வு மூலமே மாணவர் கள் சேர்க்கை என்பதை ஒன்றிய அரசு சட்டமாக கொண்டு வந்தது. அதன் அடிப்படையில் கடந்த 2018ம் ஆண்டு முதல் தமிழகத்தில் நீட் தேர்வு நடத்தப்பட்டு மருத்துவ மாணவர்கள் சேர்க்கை நடந்து வருகிறது.

தமிழகத்தில் நீட் தேர்வு அச்சத்தால், இதுவரை 13 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ள னர். தேர்வு எழுதுவதில் நடக்கும் குளறுபடி கணக் கில் அடங்காது. தொடக்கத்தில் வெளிமாநிலங் களுக்கு சென்று கூட மாணவ, மாணவிகள் தேர்வு எழுதினர். தற்போது தமிழக மையங்களில் தேர்வு எழுத மாணவர்களுக்கு வாய்ப்புகள் கிடைத்தா லும், தேர்வு எழுதும் முன்பு நடக்கும் சோதனைகள் மாணவ, மாணவிகளை துன்பத்தில் ஆழ்த்துகிறது.

கிராமப்புற மாணவர்கள் நீட் தேர்வை கண்டு தொடர்ந்து அச்சத்தில் உள்ளனர். 2 முறை தேர்வு எழுதியும் தேர்ச்சி அடைய முடியாதவர்களுக்கு நீட் தேர்வு மனரீதியாக பாதிப்பையும் ஏற்படுத் துகிறது. சேலம் மாவட்டம் மேட்டூரில் நேற்று நீட் தேர்வு அச்சத்தால் தனுஷ் என்ற மாணவர் தற்கொலை செய்து கொண்டது தமிழகத்தை மீண்டும் உலுக்கியுள்ளது.

நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என தமிழ கத்தில் பல்வேறு அரசியல் கட்சிகள் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றன. ஆளும்கட்சியான திமுகவும் நீட் தேர்வுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதோடு, தேர்தல் அறிக்கையிலும் நீட் தேர்வை ரத்து செய் நீட் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தது. தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற வுடன் நீட் தேர்வின் தாக்கம் குறித்து ஆராய நீதி பதி ஏ.கே.ராஜன் தலைமையில் ஒரு குழுவையும் அமைத்தார். அக்குழுவும் முதல்வரிடம் அறிக்கை சமர்ப்பித்து விட்டது.

இந்நிலையில் நீட் தேர்வுக்கு நிரந்தர விலக்கு கோரும் மசோதா தமிழக சட்டசபையில் இன்று நிறைவேற உள்ளது. இந்தியாவின் பிற மாநி லங்களும் நீட் தேர்வுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நிலையில், அம்மாநில முதல்வர்களையும் ஒருங் கிணைத்து நீட் தேர்வுக்கு எதிரான போராட்டத்தை திமுக முன்னெடுக்க உள்ளது. மேலும் தமிழக அரசின் சார்பில் சட்டரீதியான போராட்டமும் தொடர்ந்து நடக்கும் என முதல்வர் உறுதியளித் துள்ளார்.

நீட் தேர்வில் மாணவர்கள் அனுபவிக்கும் கொடுமைகள், தேர்வில் நடக்கும் முறைகேடுகள், கேள்வித்தாள் அவுட், ஆள் மாறாட்டம் உள்ளிட்ட பல்வேறு மோசடிகளை ஒன்றிய அரசு தொடர்ந்து உணர மறுக்கிறது. தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்ற போக்கில் நாடு முழுவதும் நீட் தேர்வை நடத்தி முடிப்பதிலே அதன் கவனம் உள்ளது. ஒன் றிய அரசின் அலட்சியமானது தொடர்ந்து மாண வர்கள் தவறான முடிவெடுக்கவே வழிவகுக்கும். எனவே தமிழக சட்டசபை இன்று கொண்டுவரும் நீட் தேர்வுக்கு நிரந்தர விலக்கு தீர்மானத்திற்கு அனைத்து கட்சிகளும் ஒத்துழைப்பதோடு, ஒன் றிய அரசும் மாணவர்களின் வலியை உணர்ந்து செயல்படுவதே நல்லது.

தமிழ் முரசு

Date : 13-Sep-2021

சிஏஏ, வேளாண் சட்டங்களை எதிர்த்து

தீர்மானம் நிறைவேற்றிய முதல்வருக்கு பாராட்டு

முஸ்லீம் லீக் நீலாங்கரை கிளை தலைவர் அறிக்கை

சென்னை, செப். 13-

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நீலாங்கரை, வெட்டுவாங்கேணி, மகாத்மா காந்தி நகர் கிளை தலைவரும் அன்சுமனே இத்திஹாதே இஸ்லாம் டிரஸ்ட், வக்ஃபு வாரிய பதிவு எண் 258/ கேபிஎம் பள்ளிவாசல், மதரஸா, கபர்ஸ்தான், சென்னை, துரைப்பாக்கம், கணேஷ் நகர் தலைவருமான எஸ்.எச்.அன்சர்பாஷா அறிக்கை:

ஒன்றிய அரசின் இந்திய குடியுரிமை திருத்த சட்டம் (சிஏஏ), வேளாண் திருத்த சட்டங்களை எதிர்த்து தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியும், தமிழக மக்களுக்கு எண்ணற்ற உதவிகளையும், திட்டங்களையும் உருவாக்கி, ஏழை, எளிய மக்களுக்கும், விவசாயிகளுக்கும், முஸ்லிம்களுக்கும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பல்வேறு உதவிகள் செய்து வருகிறார்.

தமிழக வரலாற்றில், தனது அமைச்சரவையில் முஸ்லிம் பிரதிநிதிகளான ஆவடி சா.மு.நாசர், செஞ்சி மஸ்தான், வக்ஃபு வாரிய தலைவராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் துணை தலைவருமான ஜனாப் அப்துல் ரஹ்மான் ஆகியோரை நியமனம் செய்ததற்கும், மாநிலங்களவை உறுப்பினராக எம்.எம்.அப்துல்லாவை நியமித்து வெற்றி பெறச் செய்ததற்கும் மனமார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம் என்று அன்சர் பாஷா குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல் கிளை செயலாளர் கே.முகமது ஷரிப், பொருளாளர் ஏ.என்.முகமது சிராஜுதீன், துணை தலைவர்கள் டி.கே.பக்கீர் மைதீன், ஏ.சேக் தாவூத், துணை செயலாளர் யு.ஹயாத் பாஷா ஆகியோரும் தமிழக முதல்வருக்கு பாராட்டு தெரிவித்துள்ளனர். Advt

தமிழ் முரசு

Date : 13-Sep-2021

மக்களை கவர்ந்த முதல்வர்!

தமிழக சட்டப்பேரவை கடந்த மாதம் 13ம் தேதி கலைவாணர் அரங்கத்தில் கூடியது. வரலாற்றில் முதல் முறையாக, இரண்டு நிதி நிலை அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டது. 13ம் தேதி பொது பட்ஜெட் (திருத்திய நிதிநிலை அறிக்கை), 14ம் தேதி வேளாண் துறைக்கு தனி நிதிநிலை அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டது. முதல்முறையாக நிதி நிலை அறிக்கை காகிதமில்லாத நிதி நிலை அறிக்கையாக தாக்கல் செய்யப்பட்டது.

சென்னையில் உள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்குப் புத்துயிர் அளிக்கப்படும். காசிமேடு மீன்பிடி துறைமுகம் மொத்தம் 150 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும். பெட்ரோல் மீது விதிக்கப்படும் வரி லிட்டருக்கு ரூ.3 குறைப்பு உள்ளிட்ட பல்வேறு முக்கிய அறிவிப்புகள் பொது பட்ஜெட்டில் இடம்பெற்றிருந்தது.

இதேபோல், 14ம் தேதி தாக்கல் செய்யப்பட்ட வேளாண் துறை பட்ஜெட்டில், நிகர சாகுபடி பரப்பை 75 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை, இயற்கை வேளாண்மைக்கு தனிப்பிரிவு, 2021-22ல் இயற்கை வேளாண்மை வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து, கடந்த 24ம் தேதி சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் முதல் அறிவிப்பை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். அதில், காமராஜர் சாலை, அண்ணா நினைவிட வளாகத்தில் 2.21 ஏக்கர் பரப்பளவில் ரூ.39 கோடி மதிப்பீட்டில் கலைஞருக்கு நினைவிடம் அமைக்கப்படும் என அறிவித்தார். இதைத்தொடர்ந்து, பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், மீன்வளம், சட்டம் போன்ற தொழிற்கல்விப் படிப்புகளுக்கு அரசு பள்ளியில் பயின்ற மாணவர்களுக்கு 7.5 சதவீதம் இட ஒதுக்கீட்டிற்கான சட்ட முன்வடிவை முதல்வர் தாக்கல் செய்தார்.

ஒன்றிய அரசு கொண்டுவந்த மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்து சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பொதுச்சொத்துக்களை தனியார்மயமாக்கும் ஒன்றிய அரசின் நடவடிக்கையை எதிர்க்கக்கூடிய வகையில் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

1987ம் ஆண்டு இட ஒதுக்கீடு போராட்டத்தில் காவல் துறையின் துப்பாக்கி சூட்டுக்கு பலியான 21 சமூகநீதிப் போராளிகளுக்கு ரூ.4 கோடியில் விழுப்புரத்தில் மணி மண்டபம், அயோத்திதாசரின் 175வது ஆண்டு விழாவின் நினைவாக வடசென்னைப் பகுதியில் மணிமண்டபம் அமைக்கப்படும் ஆகிய அறிவிப்புகளை 110 விதியின் கீழ் முதல்வர் அறிவித்தார். வ.உ.சிதம்பரனாரின் 150வது பிறந்தநாளையொட்டி 14 அறிவிப்புகள் வெளியிடப்பட்டது.

மேலும், தந்தை பெரியார் பிறந்த செப்டம்பர் 17ம் தேதி 'சமூக நீதி நாள்' ஆக கொண்டாடப்படும் என 110 விதியின் கீழ் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். இந்திய குடியுரிமைத் திருத்தச்சட்டம் 2019ஐ ரத்து செய்யக்கோரி தனித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் எந்த கூட்டத் தொடரிலும் இல்லாத அளவுக்கு எதிர்க்கட்சியினர் தங்கள் கருத்துக்களை தெரிவிக்க அதிக நேரமும், அதிக வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்த கூட்டத் தொடரில் தன்னை பற்றி புகழ்ந்து பேச வேண்டாம். இதனால், நேரம் தான் வீணாகும். மக்கள் பிரச்னைகளை மட்டும் பேசுங்கள் என்று திமுக எம்எல்ஏக்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார். இது அனைத்து கட்சியினரையும், மக்களையும் வெகுவாக ஈர்த்தது.

தமிழ் முரசு

Date : 14-Sep-2021

காவல்துறையில் 1132 அமைச்சுப் பணியாளர்களுக்கு நியமன ஆணை; முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி

சென்னை, செப்.14-
மறைந்த காவலர்களின் வாரிசுகளுக்கு பணி வழங்கப்படும் என்று அறிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு காவல்துறை அமைச்சுப்பணியாளர்கள் சங்க நிர்வாகிகள் நன்றி தெரிவித்துள்ளனர்.

மறைந்த காவலர்களின் வாரிசுதாரர்கள் நீண்ட காலமாக தற்காலிக பணியாளர்களாக பணி செய்து வருகின்றனர். கடந்த ஆட்சியின்போது எதிர்க்கட்சித் தலைவரிடம் அமைச்சுபணியாளர் சங்கம் சார்பில் முறையிட்டோம். காவல்துறை மானியக்கோரிக்கையில் கருணை அடிப்படையில் 3 ஆயிரத்துக்கும் மேல் வெயிட்டிங் லிஸ்டில் உள்ள அவர்களுக்கு பணிநியமனம் பற்றி பேச மனு அளித்திருந்தோம். அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மு.க.ஸ்டாலின், சட்டசபையில் கேட்ட வினாவிற்கு அப்போதைய முதல்வர் விரைவில் சரி செய்யப்படும் என்றார்.

நாங்கள் அன்று வைத்த கோரிக்கையை நினைவில் வைத்தும் மறைந்த காவலர்களின் குடும்பத்தின் நலன்கருதியும் காவல்துறை மானிய கோரிக்கையில் 1132 பேர் பணி நியமனம் செய்யப்படுவார்கள் என ஆணையிட்டுள்ளதால் காவல்துறையில் பணிபுரியும் அமைச்சு பணியாளர்கள், அனைத்து காவல் துறையினரும் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். காவல்துறை சரித்திரத்தில் இந்த நிகழ்வு மிக முக்கிய பங்காக இருக்கும். இந்த அறிவிப்பை வெளியிட்ட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறோம்.

காவல்துறை அமைச்சுபணியாளர் சங்கத்தின் முன்னாள் நிர்வாகிகள் சத்தியேந்திரன், சென்ன கேசவன், செந்தில், சரவணன், சுப்பிரமணி மகேஷ், சதீஷ் ஆகியோர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

மாலை முரசு

Date : 14-Sep-2021

110–வது விதியின் கீழ் அறிவிக்கப்பட்ட

அனைத்து திட்டங்களும் மக்களுக்கு பயன்படும் முத்தான திட்டங்கள்!

எர்ணாவூர் ஏ.நாராயணன் பாராட்டு!!

சென்னை,செப்.14

110–வது விதியின் கீழ் அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களும், மக்களுக்கு பயன்படும் முத்தான திட்டங்கள் என்று சமத்துவ மக்கள் கழகத் தலைவர் எர்ணாவூர் ஏ.நாராயணன் பாராட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழக சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் மக்களுக்கு பயன்படக்கூடிய முத்தான திட்டங்கள்எனசமத்துவமக்கள் கழகத் தலைவர் எர்ணாவூர் எ.நாராயணன் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள முன்னாள் அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திமுக அளித்த தேர்தல் வாக்குறுதியின்படி ஒவ்வொரு திட்டங்களையும் நிறைவேற்றும் வகையில் தமிழகசட்டப்பேரவையில் தமிழக முதல்வர் 110 விதியின் கீழ் அறிவிப்புகளை வெளியிட்டிருப்பது மகிழ்ச்

சியை ஏற்படுத்தி உள்ளது

மருத்துவ படிப்புகளுக்கான நீட் நுழைவுத்தேர்வை ஆரம்பத்தில்இருந்துதி.மு.க எதிர்த்து வருகிறது. இந்தத் தேர்வால்ஏழை,எளிய,கிராமப் புறங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மருத்துவ இடம் கிடைப்பது சிரமங்கள் ஏற்படுகிறது.

தமிழகத்தில் நீண்டகால போராட்டமான நீட் தேர்வுக்கு 14 மாணவர்களைபறி கொடுத்த நிலையில் தற்போது மேட்டூர் பகுதியை சார்ந்த தனுஷை பலிவாங்கிய நிலையில் உடனடியாக தமிழகஅரசசட்டப்பேரவையில் சட்டரீதியாக நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்கும் மசோதாவை நிறைவேற்றி உள்ளது. மாணவர்களின் மருத்துவ கனவை நிறைவேற்றும் வகையில் அமைந்திருக்கிறது.

முத்தான திட்டங்கள்

நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்கும் மசோதாவை அனைத்துக் கட்சியினரும் ஒருமனதாக ஆதரவளிக்க வேண்டும். மேலும் தேர்தல் வாக்குறுதியின் படி ஏழை,எளியமக்களுக்குகூட்டுறவு வங்கிகளில் 5 சவரன் நகைக்கடன்ரத்துசெய்யஉத்தரவிட்டிருப்பதுபாராட்டுக்குரியது.

சட்டசபையில் 110 விதியின் கீழ் அறிவித்த அறிவிப்புகள் அனைத்தும் அறிவிப்பாக இல்லாமல் முழுவதுமாக செயல்படுத்தப்படும் என தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் அறிவிப்புமக்களைமகிழ்ச்சியில் ஆழ்த்தி உள்ளது.

முழுக்க முழுக்க முத்தானதிட்டங்களைசெயல்படுத்தி இருக்கும் தமிழக அரசுக்குசமத்துவமக்கள்கழகம் சார்பில் பாராட்டுகளையும் நன்றிகளையும்தெரிவித்துக் கொள்கிறோம்.

THE NEW INDIAN EXPRESS

Date : 15-Sep-2021

IN HIS FATHER'S FOOTSTEPS

Stalin's move to trifurcate city police commissionerate welcomed



New Police Commissioner Office at Vepery in Chennai | DEBADATTA MALLICK

SAHAYA NOVINSTON LOBO
@ Chennai

CHIEF Minister M K Stalin, with his announcement on trifurcating the Chennai police commissionerate, has signalled his government's desire to return to the city police set-up as it was during his father M Karunanidhi's last regime. Stalin announced the creation of two additional police commissionerates, with Avadi and Tambaram as headquarters. In 2008, the Karunanidhi government bifurcated the Chennai city police and appointed a police commissioner to cover the city's suburbs. This was revoked by AIADMK government when it came to power in 2011.

The announcement has been welcomed as it comes at a time the department is drowning under a heavy workload. Sources said an officer in the rank of Additional Director General of Police is expected to be appointed as special officer to mark jurisdictions, allocate manpower and funds.

A cop in the rank of Assistant Commissioner of Police said, with cyber crimes increasing, it has been recommended centralised cyber cells be set up in each commissionerate so crimes can be solved quickly.

"The trifurcation will make policing easier and reduce response time. Geographically, the Tambaram commissionerate is expected to cover Airport, Officers Training Academy and areas seeing a real estate boom, while Avadi commissionerate would cover industries and manufacturing units," said a senior police officer in the rank of an Inspector General of Police. Sources said the new commissionerates might engulf a few police stations from nearby districts like Chengalpattu and Tiruvallur.

According to a police officer, who retired in the rank of Superintendent of Police, the city's suburbs offer a safe haven for criminals. "The separate commissionerates would help the personnel detect hideouts easily," he said.

Alleging land grabbing is rife in suburbs, Chromepet activist A Balaji said the new commissionerates would bring more attention to these crimes. "With trifurcation, more manpower is expected and senior officers will concentrate on making their jurisdiction crime-free," he said.

T Srinivasan of Annanur near Avadi, noted the new commissionerates will improve the public's access to senior cops.

THE TIMES OF INDIA

Date : 15-Sep-2021

Meaningful Debate, A Neutral Witty Speaker Were Refreshing Changes In TN Assembly

ENCOURAGING DEBATE: Tamil Nadu legislative assembly in session; opposition walkouts this time have been much less than before

A new era: Inclusive govt, constructive opposition

Julie.Mariappan@timesgroup.com

The 22-day budget session of the assembly, the first of the M K Stalin-led government has thrown up surprises and disappointments in equal measure. It was an example of how the treasury benches and opposition can lock horns on issues and yet agree on many things for the smooth functioning which was missing in the House for a few decades. The wit of speaker M Appavu drew admiration and his firm way of handling both the treasury and opposition members ensured decorum.

Looks like a new era of the Tamil Nadu legislative assembly is here. There was constructive criticism and appreciation from the opposition and smart defence from the ruling party. The AIADMK took on the ruling DMK on the unkept poll promises. When former minister R B Udayakumar said his leaders, M G Ramachandran, J Jayalalithaa, Edappadi K Palaniswami and O Panneerselvam never went back on their promises, Stalin wasted no time in reading out a long list of AIADMK's unfulfilled promises — from mobile phones to silk parks. Murmurs in the opposition benches were muted when it was pointed out the AIADMK dumped its pet monorail project for the DMK's metro rail.

Things came to a head when the AIADMK held a sit-in dharna at Kalaivanar Arangam in Chennai where the assembly proceedings were held, alleging that the current dispensation was attempting to implicate AIADMK leaders in the Kodanad heist-murder case. The opposition boycotted the assembly for two days, unconvinced by the government's reply that the investigation was as per court order. The unease was palpable after fresh interrogation of the prime suspect.

Days before the session ended, leader of the opposition Edappadi K Palaniswami made a 'U' turn and said the government could go ahead with the probe. His colleagues led by former CM O Panneerselvam held protests near Kalaivanar Arangam against the merger plan of Dr J Jayalalithaa University with Annamalai University and were detained. A stony silence followed in the camp.

Speaker Appavu said the house should not be treated as a political platform. He fostered bonhomie among legislators and won accolades from the opposition too. Some ministers, who raised their hands to respond to EPS's charges, were not allowed to, as it may have aggravated the situation. Some members of the treasury were not allowed to talk beyond the stipulated time, evoking smiles among the opposition.

"The members can raise any issue concerning people's welfare and give advice to the government. I have full freedom to steer the house. The CM congratulated me and so did the opposition members. It gives me satisfaction when they say they don't doubt my neutrality," Appavu said.

The ministers came well prepared, reeling off details of irregularities in registration of properties, disbursement of crop loan, procurement of paddy at direct procurement centres and seeking a CB-CID probe, and a special investigation team's probe into fraudulent land registrations. PWD and highways minister E V Velu announced cancellation of the performance-based maintenance contract scheme of the AIADMK, which encouraged "monopoly position of contractors". When their turn came, former AIADMK ministers were happy to read out the achievements of the party in the past decade. Former minister S P Velumani, whose properties were searched by the DVAC sleuths, toned down the allegation, even as his speech copy circulated later had a mention of "DMK budget, a mere paper".

Unlike in the past, there was no eulogising of leaders nor sycophancy with the CM warning his party members against doing so on more than one occasion. Nine-time MLA K A Sengottaiyan could be seen politely acknowledging the treasury members and declaring that the house was functioning with dignity. Former forest minister Dindigul C Sreenivasan expressed wholehearted thanks to the state for continuing the programmes launched by the AIADMK government. When DMK (Kumbakonam) MLA G Anbalagan said the party had suffered humiliation, as AIADMK leaders made acerbic remarks against the DMK, Stalin advised his MLAs to stop dwelling on the past. His members, however, showered encomiums on his son and first-time MLA Udhayanidhi Stalin.

Much to the surprise of his colleagues, Stalin expressed regret for certain remarks of his finance minister Palanivel Thiaga Rajan. A day later, Rajan reached out to the opposition benches after apologising for his remarks. Legislators would, however, not forget his heated exchanges with BJP MLA Vanathi Srinivasan. When Vanathi hailed Modi as a leader, who stood for federal principles and social justice, and took a dig at the DMK regime for calling his government 'ondriya arasu' (Union government), Rajan said Modi had been a role model for the DMK, because as Gujarat CM, he has been against GST, batted for temple management by the government and sought devolution of funds for the state.

Summing up the session, Rajan said the DMK government now and the previous AIADMK regime were like 'day and night' in terms of neutrality and the percentage of time spent on meaningful debates. "The sunlight of democracy is shining now," the minister said.

BUSINESS IN THE HOUSE

CENTRE'S FARM LAWS | **A resolution urging the Union government to repeal its three contentious farm laws was passed with the AIADMK and the BJP MLAs walking out in protest.** The PMK, an NDA ally, and ruling DMK's allies Congress, VCK, MDMK, MMK and the Left parties supported the resolution

CITIZENSHIP (AMENDMENT) ACT | **The House passed another resolution urging the Union government to repeal the Citizenship (Amendment) Act, 2019. Chief minister M K Stalin said the legislation was not in tune with the secular principles laid down in the Constitution.** The main opposition, AIADMK, was not present in the House when the resolution was passed, while the BJP walked out in protest

7.5% QUOTA FOR GOVT STUDENTS IN PROFESSIONAL COURSES | **A bill was unanimously passed to provide a 7.5% horizontal quota to students from government schools in admissions to undergraduate courses** in engineering, agriculture, veterinary, fisheries, law and other professional courses

NULLIFY NEET FOR MEDICAL ADMISSION | **On Monday passed a bill for admissions to undergraduate courses in medicine, dentistry, Indian medicine and homeopathy based on the marks obtained in Class XII boards.** The bill also provides for 7.5% horizontal reservation for the students of government schools in medical admission

REPEAL JAYALALITHAA UNIVERSITY ACT | **The assembly passed a bill to merge Dr J Jayalalithaa University and Annamalai University, after the AIADMK MLAs staged a road blockade near Kalaivanar Arangam.** The AIADMK and the BJP opposed the bill at the introductory stage. The bill was to convert Annamalai University from unitary type to affiliating type

தமிழக அரசியல்

Date : 16-Sep-2021

வியக்க வைக்கும் ஸ்டாலின்...

வியந்து பார்க்கும் அண்டை மாநில முதல்வர்கள்..!

முதல்வர் மு.க.ஸ்டாலினின் புதிய அரசியல் பரிணாமத்தை பார்த்து, தமிழகம் மட்டுமின்றி அண்டை மாநிலமான ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடக முதல்வர்களையே வியந்து பார்க்க வைத்திருக்கிறது.

தமிழ்நாட்டில் சிறப்புற பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஆசிரியர் தினத்தன்று நல்லாசிரியர் விருது வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் 2020-21ஆம் கல்வியாண்டில் அனைத்து வகையான பள்ளிகளிலும் சிறப்பாக பணிபுரிந்த 379 ஆசிரியர்கள், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தைச் சார்ந்த 10 ஆசிரியர்கள் என மொத்தம் 389 ஆசிரியர்கள் நல்லாசிரியர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டனர்.

இவ்விருது வழங்குவதன் அடையாளமாக தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற விழாவில் சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த 15 ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருதிற்கான வெள்ளிப்பதக்கம், 10 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இந்த நிகழ்வில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மற்றும் கல்வித்துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் மிகப்பெரிய ஹைலைட் முதலமைச்சர் ஸ்டாலின் படம் இல்லாதது தான். வழக்கமாக தமிழ்நாட்டில் முன்னாள் குடியரசுத் தலைவர் ராதாகிருஷ்ணன் பெயரில் வழங்கப்படும் சிறந்த ஆசிரியர்களுக்கான விருதில் 2007 ஆண்டு முதல் முதலமைச்சர் படத்துடன் வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் ஸ்டாலின் முதல்முறையாக முதல்வராக பதவியேற்ற பின்னர் வழங்கப்படும் ஆசிரியர் தின விழாவில், சிறந்த ஆசிரியருக்கான ராதாகிருஷ்ணன் விருது சான்றிதழில் முதலமைச்சர் ஸ்டாலின் படம் இல்லை. உண்மையில் இது மிகவும் பாராட்டத்தக்க விஷயம் என அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அண்மையில் மாணவர்களுக்கு வழங்கப்படும் பையில், முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி, ஜெயலலிதா ஆகியோரின் படங்கள் இருந்தது. இந்த படங்களை மறைக்க 13 கோடி செலவாகும் என்ற நிலை இருந்தது. ஆனால் வழக்கமாக ஒரு கட்சி ஆட்சியை இழந்த பிறகு ஆட்சிக்கு வரும் கட்சி, அவர்களின் அடையாளங்கள் இருந்தால் அவற்றை மறைக்க பார்க்கும்.

தமிழக அரசியல்

Date : 16-Sep-2021

ஆனால் முதல்வர் ஸ்டாலின், எடப்பாடி பழனிசாமி படமே மாணவர்களுக்கு வழங்கப்படும் புத்தக பையில் இருக்கட்டும். அதை மறைக்க வேண்டாம் என்று கூறிவிட்டார். இதன் மூலம் 13 கோடி சேமிக்கப்பட்டுள்ளது. இந்த பணத்தை மாணவர்களின் நலனுக்காக பயன்படுத்தலாம் என்று பள்ளி கல்வித்துறை அமைச்சருக்கு ஸ்டாலின் அறிவுரையும் வழங்கினார்.

ஸ்டாலினின் இந்த புதிய அரசியல், தமிழகம் தாண்டி, தெலுங்கானா, ஆந்திரா, மகாராஷ்டிரா என நாட்டின் பல மாநில முதல்வர்களையும் வியக்க வைத்திருக்கிறது. அங்குள்ள எதிர்கட்சிகள் ஆச்சர்யத்துடன் பார்க்கின்றன. இந்நிலையில் இரண்டாவது நிகழ்வாக ராதாகிருஷ்ணன் விருது சான்றிதழில் விருதில் முதலமைச்சர் படம் இல்லை. இதுவும் பெரும் பாராட்டை பெற்றுள்ளது.

கட்-அவுட் கலாச்சாரத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின். தமிழகத்தைப் பொறுத்தவரை ஆளுங்கட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் திருமணம், கட்சிக்கூட்டம் போன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் போது, ஏராளமான கட்-அவுட்டுகளும், கொடி, தோரணங்களும் காணப்படும். இதனால் அரசியல் கட்சியினருக்கு பெருமையாக இருந்தாலும், சாதாரண பொதுஜனங்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு என்பதை அவர்கள் மறந்து விடுவார்கள்.

இந்த நிலையில்தான், பேனர் மற்றும் கட்-அவுட் கலாச்சாரத்திற்கு முதல்வர் ஸ்டாலின் முற்றுப்புள்ளி வைத்திருப்பது, எதிர்க்கட்சித் தலைவர்களையே வியக்க வைத்திருக்கிறது.

தமிழகத்தில் நடைபாதைகளில் பேனர் வைப்பதற்கு எதிராக போராடி வந்தவர் டிராஃபிக் ராமசாமி. அவர் உயிரோடு இருந்திருந்தால், இந்நேரம் முதல்வரை மனதார பாராட்டியிருப்பார்.

எனவே, தமிழக முதல்வரின் உத்தரவுகளை ஆளுங்கட்சி மட்டுமின்றி, எதிர்க்கட்சித் தலைவர்களும் பின்பற்றினால், தமிழகம் தழைத்தோங்கும்!

• பதிப்பாளர் / ஆசிரியர்

சமூகநீதி காத்த பெரியார்

தந்தை பெரியார் பிறந்தநாள் விழா இன்று (செப். 17) கொண்டாடப்படுகிறது. அவரது பிறந்தநாளை "சமூகநீதி நாள்" என அறிவித்து அரசாணை வெளியிட்டு கவுரவப்படுத்தி உள்ளது திமுக அரசு.

ஈரோட்டில் 1879, செப். 17ம் தேதி வெங்கட்ட நாயக்கர், சின்னத்தாயம்மை தம்பதிக்கு மகனாக பிறந்தார் ஈ.வெ.ராமசாமி. பெரும் வணிக குடும்பத்தில் பிறந்தாலும், இளம் வயதிலேயே சமூக சீர்திருத்த செயல்களில் ஈடுபட்டார். அனைத்து சமூகத்தினரும் ஒன்றுதான் என்றதோடு, கலப்பு திருமணங்களையும் முன்னின்று நடத்தி வைத்தார். இதனால் தந்தையுடன் ஏற்பட்ட மனக்கசப்பில் காசிக்கு சென்றார். புண்ணியம் தேடி காசிக்கு செல்வோர் பலர்; பெரியாரோ அங்கு சென்ற பின்னரே இறை மறுப்பாளராக திரும்பி வந்தார்.

இறை பக்தியை பயன்படுத்தி சமூகத்தில் மூட நம்பிக்கைகளை வளர்ப்பதிலும், சில சமூகத்தினரை ஒதுக்கித் தள்ளுவதிலும் அவருக்கு உடன்பாடில்லை. இதனால் பகுத்தறிவுக் கொள்கையை மக்களிடம் பரப்பினார். கேரள மாநிலம், வைக்கம் என்ற ஊரில் தலித் மக்கள் கோயிலுக்குள் செல்ல தடை விதிக்கப்பட்டிருந்தது. அதை எதிர்த்து போராடியவர் சிறையிலடைக்கப்பட்டார். இதன்பின்னரே "வைக்கம் வீரர்" என போற்றப்பட்டார். அங்கு மட்டுமல்ல... தமிழகத்திலும் பல போராட்டங்களை முன்னின்று நடத்தினார்.

1925ம் ஆண்டு மக்களிடம் தீரா கொடிய நோயாக இருந்த மூடப்பழக்க வழக்கங்களை அகற்ற சுயமரியாதை இயக்கத்தையும், குடியரசு நாளிதழையும் தொடங்கினார். இதன்மூலம் பகுத்தறிவு சிந்தனைகளை மக்களிடம் பரப்பினார். இதனால் "பகுத்தறிவு பகலவன்", "தந்தை பெரியார்" என போற்றப்பட்டார். இந்தி எதிர்ப்பு போராட்டத்திலும் பங்கேற்று சிறை சென்றார்.

1944ம் ஆண்டு திராவிட கழகத்தை தோற்றுவித்தார். பத்திரிகை வாயிலாகவும், மேடைப்பேச்சு மூலமாகவும் சமூக சீர்திருத்த கருத்துகளை மக்கள் மனதில் விதைத்தார். இறுதி காலங்களில் உடல்நிலை வாட்டி எடுத்தாலும் அவரது சமூகப் பணி ஓயவில்லை. சிறுநீர் பையை சுமந்தபடியே சென்று, சிரமத்திற்கிடையே பொதுக்கூட்டங்களில் பங்கேற்று பேசிய அவரது துணிச்சலை பாராட்டாதவர்களே கிடையாது. இறுதிவரை சமூக சீர்திருத்தக் கொள்கைக்காக வாழ்ந்த பெரியார், 1973, டிச. 24ம் தேதி காலமானார்.

இறைமறுப்பு கொள்கையாளர் என்ற ஒற்றைப் பார்வையில் மட்டும் நாம் பெரியாரை சுருக்கி விட முடியாது. அனைவருக்கும் சம கல்வி, பெண்கள் முன்னேற்றம், சுயமரியாதை, கலப்புத்திருமணம், தீண்டாமை எதிர்ப்பு, மூட நம்பிக்கைகள் எதிர்ப்பு நிலை, கைம்பெண் மறுமணம் என அவருக்கான கொள்கை முகங்கள் ஏராளம்.

"யார் சொல்லியிருந்தாலும், எங்கு படித்திருந்தாலும், நானே சொன்னாலும், உனது புத்திக்கும் பொது அறிவுக்கும் பொருந்தாத எதையும் நம்பாதே" - என்றார் பெரியார். இதுபோன்ற பகுத்தறிவு சிந்தனைகள், கொள்கைகளால்தான் ஒரு நூற்றாண்டை தாண்டியும் அவரது புகழ்கொடி உயர, உயர பறந்து கொண்டே இருக்கிறது. இன்னும் பல நூற்றாண்டு சென்றாலும், அந்த புகழை மறைக்கவோ, மறுக்கவோ யாராலும் முடியாது.

Date : 17-Sep-2021

இனி மொட்டைக்கு இல்லை கட்டணம்!

மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. ஆட்சி அமைந்த பிறகு இந்து சமய அறநிலையத்துறை ஒரு புத்துயிர் பெற்றிருக்கிறது. "இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்ற திருக்குறளுக்கு ஏற்ப இந்த துறைக்கு பொருத்தமான பி.கே.சேகர்பாபுவை அமைச்சராகவும், ஜெ.குமரகுருபரனை ஆணையராகவும் நியமித்தார், முதல்-அமைச்சர். இந்த இரட்டையர் அணி பதவியேற்ற நாளிலிருந்து ஒவ்வொரு நாளும் ஏதாவது கோவில்களுக்கு சென்று ஆய்வுசெய்து, பல்வேறு பணிகளை நிறைவேற்றி வருகின்றது. தமிழ்நாட்டின் இந்துசமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் 36 ஆயிரத்து 627 கோவில்கள் இருக்கின்றன. இந்த நிர்வாகத்தின்கீழ் வராமல் மேலும் ஆயிரக்கணக்கான திருக்கோவில்கள் எல்லா ஊர்களிலும் சிறு, சிறு கோவில்களாக இருக்கின்றன.

தமிழ்நாடு எண்ணற்ற புகழ்வாய்ந்த கோவில்களின் இருப்பிடம். "கோவில் இல்லாத ஊரில் குடியிருக்கவேண்டாம்" என்ற பழமொழி தமிழ்நாட்டில் உண்டு. கோவில்கள் வழிபாட்டு தலங்களாக மட்டுமல்லாமல், மக்கள் கூடும் மையங்களாகவும்,

பேரிடர் காலங்களில் புகலிடமாகவும், வரலாற்றுகளை பதித்துவைக்கும் ஆவணங்களாகவும், மனதை அமைதிப்படுத்தும் தியானக்கூடங்களாகவும் திகழ்கின்றன. மொத்தத்தில் இறைபக்தி உள்ள மக்களின் அன்றாட வாழ்வில் ஒரு பிரிக்கமுடியாத அங்கமாக கோவில்கள் திகழ்கிறது என்றால் அது மிகையல்ல. தி.மு.க. அரசில் கோவில்களில் பணக்காரர், ஏழை என்ற பேதம் இருக்கக்கூடாது. எல்லோருக்கும் ஒரே சேவை என்ற அளவில், எந்த பாகுபாடும் இல்லாமல் பல சேவைகள் வழங்கப்படுகின்றன. தமிழில் அர்ச்சனை திட்டம் அமல்படுத்தப்பட்ட பிறகு, கோவில்களுக்கு வரும் பக்தர்களிடம் அது பெரும் வரவேற்பை பெற்றிருக்கிறது. முதுநிலை கோவில்களான 47 கோவில்களில் தமிழில் அர்ச்சனை நடந்து வருகிறது. தமிழில் அர்ச்சனை செய்யும் அர்ச்சகர்களின் பெயர், செல்போன் எண்கள் குறிப்பிடப்பட்டு, கோவில்களில் பெரிய பதாகைகளாக வைக்கப்பட்டுள்ளன. பக்தர்களுக்கு யார் அர்ச்சனை செய்ய வேண்டுமோ? அவர்களை அழைத்து அர்ச்சனை செய்வதற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளன. தமிழ் அர்ச்சனைக்கு கட்டணம் கிடையாது. இதுபோல் அனைத்து கோவில்களிலும் தமிழ் அர்ச்சனைவேண்டும் என்ற கோரிக்கை மக்களிடம் இருக்கிறது.

இதுமட்டுமல்லாமல் கோவில்களில் முடிகாணிக்கை செலுத்துவது, அதாவது மொட்டை போட்டுக்கொள்வது என்பது தமிழ் கலாசாரத்தில் ஒன்று. பிறந்த குழந்தைக்கு முதலில் மொட்டைப் போடுவது கோவிலில்தான். கோவில் நேர்த்தி கடனுக்காகவும் மொட்டை போடப்படுகிறது. அதற்கு கோவில்களில் சில குறிப்பிட்ட கட்டணங்கள் வசூலிக்கப்பட்டது. கோவிலுக்கு கோவில் இந்த கட்டணத்தில் வித்தியாசம் இருந்தது. இந்த கட்டணத்தில் ஒரு பகுதியை முடிஇறக்கும் தொழில் செய்யும் பணியாளர்களுக்கு கோவில் நிர்வாகம் வழங்கி வந்தது. இந்தநிலையில் 'இனி மொட்டைக்கு இல்லை கட்டணம்' என்று சொல்லும் ஒரு நிலை திருக்கோவில்களில் உருவாக்கப்பட்டிருக்கிறது. முடிஇறக்கும் தொழிலை செய்யும் பணியாளர்களுக்கு அந்த திருக்கோவில் நிர்வாகமே ஒவ்வொரு மொட்டை போடும் பணிக்கு ரூ.30 வழங்குகிறது. இதுதவிர அந்த பணியாளர்களுக்கு மாதம் ரூ.5 ஆயிரம் ஊக்கத்தொகையும் வழங்கப்படும் என்று அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவித்துள்ளார். 1,749 முடி இறக்கம் செய்யும் பணியாளர்கள் பல்வேறு திருக்கோவில்களில் இந்த பணியை செய்துவருகிறார்கள். இந்த கட்டணமில்லா சேவையை முறையாக அறிமுகப்படுத்தவேண்டும் என்று அறநிலையத்துறை ஆணையர் ஜெ.குமரகுருபரன் அனைத்து திருக்கோவில்களுக்கும் ஒரு சுற்றறிக்கையை அனுப்பி இருக்கிறார்.

இதற்கிடையே, திருச்செந்தூர், சமயபுரம், திருத்தணி கோவில்களில் நாள் முழுவதும் 3 வேளை அன்னதானம் வழங்கும் திட்டத்தை நேற்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்துள்ளார். இதுபோல், திருக்கோவில்களில் மேலும் பல இலவச சேவைகளை அளிப்பதற்கான திட்டங்களை இந்துசமய அறநிலையத்துறை பரிசீலித்து வருகிறது. மொத்தத்தில் கோவில்களுக்கு செல்லும் ஒரு பக்தர், "பையில் 10 காசு கூட இல்லை" என்றாலும், அவருடைய வழிபாட்டிலும் குறையிருக்கக்கூடாது. கோவில்களில் இருந்து பெறும் சேவையிலும் குறையிருக்கக்கூடாது என்ற வகையில், இந்துசமய அறநிலையத்துறை ஆற்றிவரும் சேவைகள் மிகவும் வரவேற்புக்குரியது. பாராட்டுக்குரியது. பக்தர்களின் மனதை குளிர வைக்கிறது.

முரசொலி

Date : 18-Sep-2021

தந்தை பெரியார் – முதல்வர் மு.க. ஸ்டாலின்!

வரலாற்றின் வார்த்தைகளால் உச்சரிக்கப்படுவார்கள்!

கவிப்பேரரசு வைரமுத்து ‘ட்விட்டர்’ பதிவு!

சமூக நீதி என்பது
பேதங்களைப் பேணுவதன்று;
பேதங்கள் நீங்கப்
பாலங்கள் அமைப்பது



சமூக நீதியைக்
கட்டமைத்த பெரியாரும்

அவர் பிறந்த நாளைச்
சமூக நீதி நாள் என்று
அடையாளப்படுத்திய
முதல்வர் மு.க.ஸ்டாலினும்

வரலாற்றின் வார்த்தைகளால்
உச்சரிக்கப்படுவார்கள்

Date : 18-Sep-2021

அதிரடி தொடரட்டும்

அதிமுக ஆட்சியின்போது அமைச்சர்களாக இருந்த வேலுமணி, வீரமணி, தங்கமணி, எம்.ஆர்.விஜயபாஸ்கர் உள்ளிட்டோர், தங்களது துறையில் மெகா ஊழல்களில் ஈடுபட்டதாக புகார் எழுந்தது. இதை தனது தேர்தல் பிரசாரத்தில் தெரிவித்த அப்போதைய எதிர்க்கட்சி தலைவரான மு.க.ஸ்டாலின், தமிழக கவர்னரிடம் ஆதாரங்களுடன் புகாரும் தெரிவித்திருந்தார். மேலும், திமுக ஆட்சிக்கு வந்ததும் அதிமுக ஆட்சியின்போது ஊழல் முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்திருந்தார்.

இதனடிப்படையில் கடந்த ஜூலை மாதம் போக்குவரத்து துறை அமைச்சராக இருந்த எம்.ஆர்.விஜயபாஸ்கரின் வீட்டில், கரூர் மாவட்டத்தில் உள்ள அவரது சாயப்பட்டறைகள், நிதி நிறுவனங்கள் உள்ளிட்ட இடங்களில் லஞ்ச ஒழிப்பு அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தினர். கடந்த மாதம் உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்த வேலுமணியின் வீடுகள், அலுவலகங்கள் என சென்னை, கோவை, திண்டுக்கல் உட்பட 60 இடங்களில் லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி சோதனை நடத்தினர். தொடர்ந்து அவரது ஆதரவாளர்கள் மற்றும் அவருக்கு ஆதரவாக செயல்பட்ட அதிகாரிகள் வீடுகளிலும் சோதனை நடந்தது. மேற்கண்ட 2 சோதனைகளிலும் பல கோடி மதிப்பிலான ஆவணங்கள் உள்ளிட்டவைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

மேலும், வணிக வரி மற்றும் பத்திரப்பதிவுத் துறை அமைச்சராக இருந்த கே.சி.வீரமணி, பதவி வகித்த காலத்தில் 654 சதவீதம் சொத்துக்களை வாங்கி குவித்ததாகவும் தகவல்கள் எழுந்தது. ஆதாரங்கள் வலுவாக சிக்கியதை தொடர்ந்து, கே.சி.வீரமணிக்கு சொந்தமான சென்னை, பெங்களூரு, திருப்பத்தூர் உள்ளிட்ட 35 இடங்களில் லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி சோதனை நடத்தினர். மேலும், அவரது சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள், உதவியாளர்கள் மற்றும் ஆதரவாளர்களின் வீடுகளிலும் ரெய்டு நடந்தது. சோதனையில் கணக்கில் வராத பல லட்சக்கணக்கில் பணம், அமெரிக்க டாலர்கள், ரோல்ஸ் ராய்ஸ் கார் உட்பட பல கோடி மதிப்புள்ள சொகுசு கார்கள், பல கிலோ கணக்கில் தங்கம், வைரம், பல கோடி மதிப்புடைய சொத்து ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. சோதனையின்போது மணல் சிக்கியதும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதற்கிடையில் மதுரையில் நடந்த ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் சாலை அமைத்தது, மணலை விற்றது உட்பட பல ஊழல் முறைகேடுகள் நடந்துள்ளது. இவைகள் 3 அமைச்சர்களின் தனிப்பட்ட லாபத்திற்காக நடத்தப்பட்டதாக தமிழக நிதியமைச்சர் பிடி.ஆர்.பழனிவேல்ராஜன் பகிரங்க குற்றம் சாட்டினார். அதிமுக ஆட்சியின் போது ஆவின் முறைகேடு, பாலம், சாலைப்பணி டெண்டர்கள் உட்பட பல்வேறு திட்டங்களில் ஊழல் நடந்துள்ளது தொடர்ந்து வெளிச்சத்திற்கு வந்தவண்ணம் உள்ளது. ஒட்டுமொத்தமாக பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் அளவில் ஊழல் நடந்திருக்கலாம் என்ற அடிப்படையில், அடுத்தடுத்து விசாரணை, ரெய்டு வேகமடைந்துள்ளது. புதியதாக பொறுப்பேற்றுள்ள திமுக அரசு, ஊழல் மற்றும் முறைகேடாக சொத்து குவித்த அதிமுக மாஜி அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் மீதான அதிரடி நடவடிக்கைகளை தொடர வேண்டுமென பொது மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதிரடி தொடரட்டும்.

சட்டசபையில் தீர்மானம்:

மு.க.ஸ்டாலினுக்கு இஸ்லாமிய அமைப்புகள் நன்றி

சென்னை, செப்.19-

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினை பாரதியார் பல்கலைக்கழக ஆட்சி மன்ற பேரவை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள ஈ.ஆர்.ஈஸ்வரன் எம்.எல்.ஏ. சந்தித்து வாழ்த்து பெற்றார். மேலும் முத்தான முதல் நூறு நாட்கள்-தலைநிமிரும் தமிழகம் திருச்செங்கோடு என்ற புத்தகத்தை வழங்கினார்.

இந்திய தவ்ஹீத் ஜமா அத் தலைவர் எஸ்.எம்.பார்ஸ்கர், துணைத்தலைவர் முகமது முனீர் மற்றும் நிர்வாகிகள் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து குடியுரிமை திருத்த சட்டத்தை ரத்து செய்ய சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியதற்காக நன்றி தெரிவித்தனர்.

அதேபோல், தமிழ்நாடு தவ்ஹீத் ஜமா அத் தலைவர் எம்.ஷம்சுல்லுஹா ரஹ்மானி, மேலாண்மை குழு தலைவர் எம்.எஸ்.சுலைமான் மற்றும் நிர்வாகிகள் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

Date : 21-Sep-2021

மலரட்டும் தமிழக அரசுடன் அழகிய நல்லுறவு!

அரசியல் சட்டத்தின் 153-வது பிரிவில் ஒவ்வொரு மாநிலத்திலும் கவர்னர் பதவி இருக்கவேண்டும் என்றும், அதைத் தொடர்ந்து சில பிரிவுகளில் கவர்னரின் நியமனம், அதிகாரங்கள் தொடர்பான விவரங்களும் இடம்பெற்றுள்ளன. எல்லா மாநிலங்களிலும் கவர்னர்தான், முதல் குடிமகனாக கருதப்படுகிறார். கவர்னருக்கு நேரடியாக நிர்வாகத்தை நடத்தும் அதிகாரம் இல்லை என்றாலும், அரசின் நிர்வாக ஆணைகள் எல்லாமே அவரது ஒப்புதலைப் பெற்றுத்தான் செயல்படுத்தப்படவேண்டும். அந்த வகையில், கவர்னர் அரசின் வேகமான செயல்பாடுகளுக்கு வழியேற்படுத்தவும் முடியும், முட்டுக்கட்டைப்போட்டு தடை ஏற்படுத்தவும் முடியும்.

முந்தைய அ.தி.மு.க. அரசில்கூட, அரசு பள்ளிக்கூடங்களில் படித்து "நீட்" தேர்வில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு, மருத்துவ கல்லூரி மாணவர்

சேர்க்கையில் 7.5 சதவீத இடஒதுக்கீடு வழங்கவேண்டும் என்ற மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்க அப்போதைய கவர்னர் பன்வாரிலால் புரோகித் தாமதப்படுத்தினார். ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு நீண்டகாலம் சிறையில் வாடிக்கொண்டிருக்கும் 7 பேரின் விடுதலை குறித்து அமைச்சரவை மற்றும் சட்டசபையில் தீர்மானங்கள் நிறைவேற்றிய பிறகும் கவர்னர் ஒப்புதல் அளிக்கவில்லை என்ற விமர்சனமும் உண்டு.

இந்தநிலையில், கவர்னர் பன்வாரிலால் புரோகித் பஞ்சாப் மாநிலத்துக்கு மாற்றப்பட்டு, நாகலாந்து கவர்னராக இருந்த ஓய்வுபெற்ற ஐ.பி.எஸ். அதிகாரி ஆர்.என்.ரவி தமிழக கவர்னராக கடந்த சனிக்கிழமை பொறுப்பேற்றுள்ளார். இவர், அண்டை மாநிலமான கேரளாவில் 10 ஆண்டுகள் ஐ.பி.எஸ். அதிகாரியாக பணிபுரிந்தவர். மத்திய அரசாங்க உளவுப்பிரிவில் சிறப்பு இயக்குனராக பணியாற்றியதுடன், தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகராகவும் இருந்துள்ளார். பிரதமர் அலுவலகத்தில் இணை உளவுப்பிரிவு கமிட்டியின் தலைவராகவும் பணியாற்றி இருக்கிறார். மத்திய அரசாங்கத்துக்கும், நாகலாந்து தேசிய சோசலிஸ்டு கவுன்சிலுக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தையில் மத்திய அரசாங்கம் சார்பில் மத்தியஸ்தராக இருந்து சமாதான உடன்படிக்கை கையெழுத்தாகவைத்த பெருமை அவருக்கு உண்டு.

நீண்டகாலம் உளவுப்பிரிவில் பணியாற்றிய ஆர்.என்.ரவி தமிழகத்தின் 26-வது கவர்னராக பொறுப்பேற்றதும், 'வணக்கம்' என்று பத்திரிகையாளர்களிடம் பேசத் தொடங்கும்போது தமிழில் கூறியதும், தமிழ் தொன்மையான மொழி, தமிழை கற்க முயல்வேன் என்று சொன்னதும் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. "தமிழக அரசுடன் கவர்னர் என்ற முறையில் எனக்குள்ள உறவு ஒரு சுத்தமான புதிய எழுதுபலகை (சிலேட்) போன்றது. இதை வருங்காலங்களில் மிக அழகியதாக்குவதற்கு எனது முயற்சிகள் இருக்கும். தமிழ்நாட்டின் அறிவார்ந்த, ஆன்மிக, கலைநயமிக்க செல்வங்களும், அரசியல் ஞானமும் இந்தியாவுக்கு பெரும் பலனைக் கொடுத்துள்ளது. இந்தியாவின் எண்ண ஓட்டங்களை செயல்படுத்துவதற்கு தமிழக மக்களின் பங்கு அளப்பரியது. தமிழ்நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு இருக்கிறது. நிர்வாகம் என்பது அரசின் பொறுப்பு. கவர்னர் என்ற முறையில் நான் அரசியல் சட்டத்துக்கு உட்பட்டு செயல்படவேண்டும் என்பதை நன்றாக அறிவேன். தமிழக அரசு கொரோனாவை கட்டுப்படுத்துவதில் கையாண்ட நடவடிக்கைகள் மிகவும் நன்றாக இருக்கிறது" என்று தெரிவித்திருக்கிறார்.

தமிழக அரசோடு உள்ள உறவு அழகிய நல்லுறவாக மலரச்செய்வார் புதிய கவர்னர் ஆர்.என்.ரவி என்ற நம்பிக்கை முதல் நாள் பேச்சிலிருந்து உறுதியாக தெரிகிறது. ஒரு அரசு தங்குதடையில்லாமல் விரைவாக செயல்படவேண்டும் என்றால் அரசுக்கும், கவர்னருக்கும் இடையே நல்லுறவு இருக்கவேண்டும். இரு குதிரைகள் பூட்டிய "சாரட் வண்டி" போல்தான் அரசு நிர்வாகம் இருக்கவேண்டும். ஒரு குதிரையான அரசும், மற்றொரு குதிரையான கவர்னரும் ஒன்றுபோலச் சென்றால்தான் நிர்வாகம் என்ற "சாரட் வண்டி" தன் பயணத்தை தடையில்லாமல் தொடர முடியும். ஆளுக்கொரு பக்கம் இழுத்தால் நிர்வாகம் ஸ்தம்பித்துவிடும். கவர்னர் ஆர்.என்.ரவி முதல் நாள் பத்திரிகையாளர்களிடம் அளித்த பேட்டியில், "இந்த உறவை அழகான உறவாக ஆக்குவதற்கு முயற்சிப்பேன்" என்று கூறியது நிச்சயமாக எதிர்காலத்தில் மணமூட்டும் மலராக இருக்கும், இருக்கவேண்டும் என்பது தமிழக மக்களின் எதிர்பார்ப்பாகும்.

முரசொலி

Date : 22-Sep-2021

கல்வி – விடுதிக் கட்டணங்களை அரசே ஏற்கும்!

முதல்வரின் அறிவிப்பு வரப் பிரசாதம்!

மாணவர் – மாணவியர் உருக்கமிகு பேட்டி!

சென்னை, செப். 22 –

அரசுப் பள்ளிகளில் படித்து 7.5 சதவிகித இடஒதுக்கீடு மூலம் தொழிற்கல்லூரிகளில் சேரும் மாணவர்களின் கல்வி– விடுதிக் கட்டணங்களை அரசே ஏற்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருப்பது எங்களுக்கு வரப்பிரசாதமாகும் என்று இடஒதுக்கீட்டின் மூலம் கல்லூரிகளில் சேரும் மாணவ, மாணவியர் உருக்கமுடன் பேட்டி யளித்தனர்.

இதுகுறித்து மாணவர், மாணவியர் அளித்த பேட்டி வருமாறு–

7.5 சதவீத இட ஒதுக்கீடு குறித்து மாணவர்கள்

மாணவி 1: அரசுப் பள்ளியி லேயே முழுவதுமே படிச்சிட்டு வந்துட்டு இந்த மாதிரி பெரிய அளவில் இருக்கக் கூடிய அண்ணா பல் கலைக் கழகம் அப்படிங்கிற அளவில் இருக்கக் கூடிய பெரிய கல்லூரிகளில் படிக்கக் கூடிய வாய்ப்புங்கிறது அனைவருக்கும் கிடைக்காது. இந்த 7.5 சதவீத இட ஒதுக்கீட்டின் காரணமாக எனக்கு கிடைச்சது. இந்தக் கட்டணங்களெல்லாம் கட்ட முடியாத அளவுல நாங்க பொருளாதார நிலையில் பின் தங்கியிருக்கிறோம்.

ஆனாலும், தமிழக முதல்வர் அவர்கள் திடீர்னு எல்லா கட்டணமும் நாங்களே கட்டுவோம் என்று அறிவிச்சது ரொம்ப சந்தோஷம்.

மாணவி 2: கவர்ன்மெண்ட் வந்து இந்த 7.5 சதவீதம் இஞ்ஜினியரிங்கல ஒதுக்கனதால அண்ணா யுனிவர் சிட்டியில இ.சி.இ. கோர்ஸ் கிடைச்சிருக்குது. இந்த இட ஒதுக்கீடு இல்லைனா என்னுடைய கட்ஆப் –க்கு வந்து இந்த சீட் கிடைச்சிருக்குமா என்பது ரொம்ப, ரொம்ப சந்தேகம் தான். அதுமிட்டுமில்லாம இவ்ளோ பெரிய காலேஜில பீஸ் கட்டறது எங்க குடும்பத்துக்கு சிரமம் தான். நாங்க நெசவுத் தொழில்தான் செஞ்சிட்டிருக்கிறோம். இவ்ளோ கட்ட முடியுமா அப்படிங்கிற மாதிரி யோசனையும் இருந்தது. இப்ப முதல்வர் வந்து இந்த மாதிரி அரசே செலவை ஏத்துக்கும் என்று சொன்னது ரொம்பவே சந்தோசமாக இருக்கிறது எங்களுக்கு.

மாணவர்: நான் ஆறாம் வகுப்பில் இருந்து பன்னிரெண்டாம் வகுப்பு வரைக்கும் கவர்ன் மெண்ட் ஸ்கூல்லதான் படிச்சேன். என்னோட +2 மார்க் 573. இப்ப அண்ணா யுனிவர்சிட்டி கிண்டி கேம் பஸ். இந்த கேம்பஸ்லியே வந்து கம்ப்யூட்டர் சயின்ஸ் இன் ஜினியரிங் ஜாயின் பண்ண வந்திருக்கிறேன்.

அது ரொம்ப சந்தோஷமா இருக்கு. அதில்லாம நம்ம முதலமைச்சர் இன்னிக்கு வந்து எல்லா பீஸ்–யையும் தமிழக அரசே ஏற்கும் என்று சொல்லியிருக் காங்க. அதுவும் ரொம்ப சந்தோ ஷமா இருக்கு.

இவ்வாறு மாணவர்கள் பேட்டி யளித்தனர்.

முரசொலி

Date : 22-Sep-2021

சமூக நீதி நாள் –

எல்லா தலைமுறைக்கும் ஊக்கம் தரும் நாள்!

‘நக்கீரன்’ இதழ் புகழாரம்!

கேள்வி:- சமூக நீதி நாள் எப்படி இருந்தது?

பதில்:- எங்கெங்கும், எல்லா தலைமுறையினரிடமும் ஊக்கம் தரும் நாளாக அமைந்தது. திரைக்கலைஞர் பொன் வண்ணன் கைவண்ணத்தில் உருவான பெரியார் ஓவியங்கள் சமூக நீதி நாளை வண்ணமயமாக்கின.

நன்றி :

‘நக்கீரன்’

22–24.9.2021

Date : 22-Sep-2021

வேர்களைத் தேடி...

'இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறு, பிரிட்டிஷ் காலனியாதிக்கப் பார்வையில் அணுகாமல், இந்தியர்களின் பார்வையில் மாற்றி எழுதப்பட வேண்டும்' என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் சொன்னதை குடியரசுத் துணைத் தலைவர் வெங்கையா நாயுடு ஆமோதித்திருக்கிறார். தமிழர்களின் பண்பாட்டுத் தாக்கம் கம்போடியா வரை எதிரொலித்திருப்பதையும், தமிழர் நாகரிகம் 3,155 ஆண்டுகள் பழைமையானது என்று கண்டறியப்பட்டதையும் குடியரசுத் துணைத் தலைவர் உச்சிமுகர்ந்திருக்கிறார்.

வைகை நதிக்கரையில் உள்ள கீழடி அகழாய்வு 2,580 ஆண்டுகளுக்கு முற்பட்ட அறிவார்ந்த தமிழர் நாகரிகத்துக்குச் சான்றாக அமைந்தது. இப்போது பொருநை நதிக்கரையில் இருக்கும் சிவகளை அகழாய்வு 3,155 ஆண்டுகளுக்கு அப்பால் தமிழர் வரலாற்றை நகர்த்திச் சென்றிருக்கிறது.

ஏற்கெனவே பொருநை நதிக்கரையில் ஆதிச்சநல்லூரில் கிடைத்த ஈமத்தாழிகளை ஆய்வு செய்ததில் அவை 2,850 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று உறுதி செய்யப்பட்டது. தற்போது நடந்துவரும் அகழாய்வில் மக்களின் வாழ்விடம் இருந்ததற்கான தடயங்கள் கிடைத்துள்ளன.

பொருநை நதிக்கரையில் இருக்கும் கொற்கை, 2,900 ஆண்டுகளுக்கு முன்பு துறைமுகமாகவும் உலகத்தின் பல பகுதிகளிலிருந்து வணிகர்கள் வந்துசெல்லும் வளம்மிக்க வணிக நகராகவும் மன்னர்களின் தலைநகரமாகவும் சங்குத் தொழிற்சாலையாகவும் இயங்கியது அகழாய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது. எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக, சிவகளை அகழாய்வில் முதுமக்கள் தாழியொன்றில் கிடைத்த உமி நீங்கிய நெல்மணிகளை அமெரிக்காவின் பீட்டா ஆய்வு மையம் ஆய்வுசெய்து அவை 3,155 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று அறிவியல்பூர்வமாக உறுதிசெய்திருக்கிறது."

இந்தச் சூழலில், தமிழர்களின் பண்பாட்டு வேர்களைத் தேடி, கேரளாவின் பட்டணம், ஆந்திராவின் வேங்கி, கர்நாடகாவின் தலைக்காடு மற்றும் ஒடிசாவின் பாலூர் ஆகிய வரலாற்றுத்தலங்களிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்றும் முதல்வர் அறிவித்துள்ளார். இதேபோல சோழ மன்னர்கள் கோலோச்சிய இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, வியட்நாம் ஆகிய நாடுகளின் வரலாற்றுத்தலங்களிலும் அந்த நாடுகளின் தொல்லியல் நிபுணர்களோடு சேர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளது. தொல் தமிழர்களின் பண்பாட்டுத் தொடர்புகள் இதன்மூலம் உலகத்தின் பார்வைக்குச் செல்லும்.

வரலாற்றைத் தேடுவதுதான் ஓர் அறிவார்ந்த சமூகத்தின் பண்பு. வருங்காலத்தை வடிவமைப்பதில் வரலாற்றின் பங்கு மிகவும் அதிகம். கடந்த காலத்தில் நாம் எப்படி வாழ்ந்தோம் என்று அறிவதே எதிர்காலத்தில் நாம் எப்படி வாழ வேண்டும் என்பதற்கான அடித்தளமாக அமைகிறது.

வெங்கையா நாயுடுவும் ஸ்டாலினும் இதை ஒரே குரலில் சொல்வது நிறைவு தருகிறது. 'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தகுடி' என்று தமிழர் பெருமையைப் பேசும்போது அதை வெறும் வாய்ச்சொல்லாக விட இந்தியா கருதிய நிலை மாறியுள்ளது. 'வரலாறு மாற்றி எழுதப்பட வேண்டும்' என்று மத்திய அரசு சொன்னதை இப்போது தமிழக அரசு எதிரொலிக்கிறது. அரசியலுக்கு அப்பாற்பட்டு மத்திய, மாநில அரசுகள் இணைந்து நம் வரலாற்றின் வேர்களிலிருந்து உண்மை வரலாற்றை பாரபட்சம் இல்லாமல் உருவாக்க இதுவே நல்ல தொடக்கம்!

தினகரன்
ஒரு புதிய அனுபவம்
Date : 23-Sep-2021

தொடரட்டும் வேட்டை

தூத்துக்குடி மாவட்டம் குரும்பூரில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் அதிகாரிகள் ஆய்வுசெய்தபோது பல்வேறு முறைகேடுகள் நடந்திருப்பது தெரியவந்துள்ளது. வங்கியில் நகைக்கடனாக பெறப்பட்ட 548 நகை பொட்டலங்களில் ₹2 கோடியே 3 லட்சத்து 98 ஆயிரத்து 700 மதிப்பிலான 261 நகை பொட்டலங்கள் மாயமாகிவிட்டது. வங்கி தலைவர் முருகேச பாண்டியன் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். கூட்டுறவு சார்-பதிவாளர், செயலாளர், துணை செயலாளர் ஆகிய 3 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்.

வங்கியில் டெபாசிட் செய்த பணத்தை மோசடி செய்துவிட்டு, அதற்கு போலியாக ஒரு டெபாசிட் 'பாண்ட்' வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2017-ம் ஆண்டு முதல் தற்போது வரை டெபாசிட் பணத்துக்கு போலியான பாண்ட் கொடுத்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இன்னும் பல கோடி ரூபாய்க்கு மேல் மோசடி நடந்திருக்க வாய்ப்புள்ளது என முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே சத்தியமங்கலம் கிராமத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் பெயரில் போலியாக நிரந்தர வைப்பு நிதி என்ற பெயரில் ரசீது வழங்கி, சுமார் ₹4 கோடி மோசடி நடந்தது கடந்த ஜூன் மாதம் கண்டுபிடிக்கப்பட்டது. கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் அருகே பழைய ஜெயங்கொண்ட சோழபுரம் பகுதியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் உள்ளது. இந்த கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாய கடன், நகை கடன் உள்ளிட்ட பல்வேறு கடன் வழங்கியதாக சுமார் ₹3 கோடி அளவு மோசடி நடந்துள்ளது கடந்த ஜூலை மாதம் கண்டுபிடிக்கப்பட்டது.

நாமக்கல் மாவட்டம் மல்லசமுத்திரம் ஒன்றியத்தில் உள்ள தொடக் வேளாண் கூட்டுறவு சங்கத்தில் போலி நகைகளை அடகுவைத்து பணம் மோசடி செய்ததாக கூட்டுறவு சங்க ஊழியர்கள் 3 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகே ரெங்கசமுத்திரம் கிராமத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் உள்ளது. இங்கு விவசாயிகளுக்கு பயிர்க்கடன், நகைக்கடன் வழங்கியதாக ₹16.58 லட்சம் மோசடி நடந்துள்ளது. இது தொடர்பாக சங்க செயலாளர் கைது செய்யப்பட்டுள்ளார். கரூர் அருகே கூட்டுறவு கடன் சங்கத்தில் ₹1 கோடி வரை பணம் மோசடியில் ஈடுபட்டதாக கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளரிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இப்படி, தினந்தோறும் கூட்டுறவு சங்க மோசடிகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. இவை, எல்லாமே கடந்த அதிமுக ஆட்சி காலத்தில் நடந்துள்ளது. தற்போது அதிகாரிகள் ஆய்வுசெய்யும்போது இவை ஒவ்வொன்றாக வெளிவருகிறது. மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் பல்வேறு கூட்டுறவு கடன் சங்கங்களில் இந்த மோசடி நடந்துள்ளது.

கடந்த ஆட்சியாளர்கள், இந்த மோசடி மற்றும் முறைகேடுகளை கண்டறிந்து, உரிய நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக, துணை போயுள்ளனர். அதன் காரணமாக, இம்மோசடி புற்றீசல்போல் பெருகியுள்ளது. இந்த மோசடிக்கு அடியோடு முற்றுப்புள்ளி வைக்கவும், குற்றவாளிகளை சிறைக்கு அனுப்பவும் இரும்புக்கரம் கொண்டு தமிழக அரசு களம் இறங்கியுள்ளது. தொடரட்டும் வேட்டை.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

Date : 23-Sep-2021

100 சதவீதம் தடுப்பூசி போட்டு நீலகிரி மாவட்டம் சாதனை!

வேகமாக செல்லும் அதிவேக விரைவு ரெயில், வழியில் ஏதாவது ஒரு இடத்தில் ரெயில் பாதையில் பழுது ஏற்பட்டாலோ, சீரமைக்கும் பணிகள் நடந்தாலோ, நத்தை வேகத்தில் செல்லவேண்டிய கட்டாயம் ஏற்படும். அதுபோல, உலகமே வேகமாக பொருளாதார வளர்ச்சியில் பீடுநடை போட்டுக்கொண்டிருந்த நேரத்தில், கொரோனா பாதிப்பு எல்லாவற்றையுமே பின்னுக்கு இழுத்துவிட்டது. தடுப்பூசி ஒன்றுதான் கொரோனா பாதிப்புக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் என்ற நிலையில், உலகமே தடுப்பூசிபோட தீவிர ஆர்வம் காட்டிவருகிறது.

சீனாவில்தான் கொரோனா தொற்று முதலில் ஏற்பட்டது. 140 கோடி மக்கள்தொகை கொண்ட சீனாவில், எல்லோருக்கும் தடுப்பூசி போட்டு முடித்துவிடவேண்டும் என்று, அதிவேக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை சீனாவில் 218 கோடி டோஸ்கள் போடப்பட்டு இருக்கிறது. தற்போது 100 கோடிக்கும் மேலான மக்களுக்கு 2 டோஸ் தடுப்பூசி போடப்பட்டுவிட்டன. இந்த ஆண்டு முடிவுக்குள் 80 சதவீத மக்களுக்கு

2 டோஸ் தடுப்பூசி போடவேண்டும் என்ற வேகத்தில் சீனா இதற்கு முன்னுரிமை கொடுத்துள்ளது. இப்போதே, 71 சதவீத மக்களுக்கு முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட நிலையில், இந்த இலக்கை அடைவது, அதுவும் வீடு வீடாகப்போய் தடுப்பூசி போட்டுக்கொண்டிருக்கும் சூழ்நிலையில், நிச்சயம் எளிது என்றே கருதப்படுகிறது.

இந்தியாவில் சமீபத்தில் எடுத்த கணக்குப்படி, 61 கோடியே 43 லட்சத்து 90 ஆயிரத்து 226 பேருக்கு முதல் டோசும், 21 கோடியே 21 லட்சத்து 25 ஆயிரத்து 528 பேருக்கு 2 டோஸ்களும் போடப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிலும் தடுப்பூசி போடும் பணிகளுக்கு மிக அதிக அளவில் முன்னுரிமை கொடுத்து, தமிழக அரசின் சுகாதாரத்துறை செயல்பட்டு வருகிறது. தமிழக அரசு எடுத்து வரும் தீவிர முயற்சியின் காரணமாகவும், முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினின் கண்காணிப்பு, ஊக்கமளித்தல் காரணமாகவும் இதுவரை 4 கோடியே 33 லட்சத்து 59 ஆயிரத்து 843 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுவிட்டது. கடந்த 12-ந்தேதி நடந்த மெகா தடுப்பூசி முகாமில், ஒரே நாளில் 28 லட்சத்து 91 ஆயிரத்து 21 பேருக்கும், கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த மெகா தடுப்பூசி முகாமில் 16 லட்சத்து 43 ஆயிரம் பேருக்கும் தடுப்பூசி போடப்பட்டது. அனைத்து மாவட்ட கலெக்டர்களையும் தடுப்பூசி போடும் பணியில் தீவிரமாக ஈடுபட தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு ஊக்குவித்து வருகிறார்.

இந்தநிலையில், நீலகிரி மாவட்ட கலெக்டர் இன்னசென்ட் திவ்யா, இதில் முழு மூச்சாக ஈடுபட்டதால், அந்த மாவட்டத்தில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், குறிப்பாக மலைவாழ் மக்கள் அனைவருக்கும் முதல் டோஸ் தடுப்பூசி போட்டு சாதனை படைக்கப்பட்டது. வீடு வீடாக சென்று அரசுப் பணியாளர்கள், தன்னார்வலர்கள், அங்குள்ள மக்களிடம் தடுப்பூசி போட விழிப்புணர்வை ஏற்படுத்தினர். மதுக்கடைகளில் தடுப்பூசி போட்ட சான்றை காட்டினால்தான் மது வாங்க முடியும் என்றும், ரேஷன் கடைகளில் பொருட்கள் வாங்க செல்பவர்களிடம், தடுப்பூசி போட்டுவிட்டீர்களா? என்றும் கேட்டு ஆலோசனை வழங்கும் வகையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

முதல் டோஸ் போட்டதில் சாதனை படைத்தது போல, வெகுவிரைவில் 2-வது டோஸ் போடுவதிலும் சாதனை படைக்க வேண்டும் என்று இன்னசென்ட் திவ்யா மிக முனைப்புடன் செயல்பட்டு வருகிறார். இதுபோல, அனைத்து மாவட்ட கலெக்டர்களும் முழு வீச்சில் செயல்பட்டு, இந்தியாவிலேயே தகுதியுள்ள அனைத்து மக்களுக்கும் முதல் டோஸ், 2 டோஸ்கள் தடுப்பூசி போட்ட மாநிலம் தமிழ்நாடுதான் என்ற பெயரை பெறவேண்டும். தமிழ்நாட்டில் ஒரே நாளில் 30 லட்சம் பேருக்கு தடுப்பூசி போடுவதற்கான உள்கட்டமைப்பு வசதி, பணியாளர்களின் உற்சாகம், மக்களிடம் விழிப்புணர்வு எல்லாமே இருப்பதை கருத்தில் கொண்டு, மத்திய அரசாங்கம் கிள்ளி கொடுத்துக் கொண்டிருக்கும் தடுப்பூசிகளை அள்ளிக்கொடுத்து, அனைத்து மக்களுக்கும் தடுப்பூசி போட்டு முடிப்பதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டும் என்பதே தமிழகத்தின் ஒட்டுமொத்த வேண்டுகோளாக இருக்கிறது.

தினகரன்

Date : 24-Sep-2021

முதலீட்டாளர்களின் முகவரி

ஒரு மாநிலம் அல்லது நாட்டு மக்களின் வளர்ச்சிக்கு கல்வியும், வேலைவாய்ப்பும் மிகவும் இன்றியமையாதது. இந்த இரண்டையும் இரு கண்கள் போல பாவித்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் தமிழகத்துக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து வருகிறார். கல்விப்பருவம் முடித்த மாணவர்களின் அடுத்த முக்கிய இலக்கு வேலைவாய்ப்பு. அதை மனதில் கொண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற குறைந்த காலத்தில் பல்வேறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டு வருகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

முதல்கட்டமாக அந்நிய முதலீடுகளை ஈர்க்கும் விதத்தில், கடந்த ஜூலை மாதம் "முதலீட்டாளர்களின் முதல் முகவரி - தமிழ்நாடு" என்ற சந்திப்பை தமிழக அரசு நடத்தியது. இதில் ₹4,250 கோடி மதிப்பீட்டில், சுமார் 21,630 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் 9 தொழில் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். தொடர்ந்து ₹7,117 கோடி மதிப்பீட்டில் 5 திட்டப்பணிகளையும் தொடங்கி வைத்தார். இவ்விழாவில் மொத்தமாக 49 திட்டங்கள் மூலம் ₹28,508 கோடி மதிப்பில் சுமார் 83,432 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் அரிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அப்போது பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், "தெற்காசியாவில் தொழில் தொடங்குவதற்கு உகந்த மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றுவதே எனது தலைமையிலான அரசின் இலக்கு" என்றார். அந்த இலக்கை அடையும் மற்றொரு முயற்சியாக, சென்னையில் 'ஏற்றுமதியில் ஏற்றம் - முன்னணியில் தமிழ்நாடு' மாநாடு நடந்தது. ஏற்றுமதி, ஏற்றுமதி மேம்பாடு மற்றும் அரசு நிறுவனங்கள் பங்கேற்ற ஏற்றுமதி கண்காட்சியும் இடம் பெற்றிருந்தது. மாநாட்டில் பங்கேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், தொழில் நிறுவனங்களுடன் ₹2,120.54 கோடி மதிப்பிலான 24 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். இதன்மூலம் சுமார் 41,695 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க உள்ளது. பொதுவாக, சென்னை உள்ளிட்ட பெருநகரங்களில் மட்டுமே பெரும் தொழில் நிறுவனங்கள் அமையும் என்ற சூழல் இருந்து வந்தது. தற்போது, மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி என தென்மாவட்டங்களிலும் தொழில் தொடங்க நிறுவனங்கள் முன்வந்திருப்பது பாராட்டிற்குரியது.

மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசிய கருத்துக்கள் மிக முக்கியமானவை. அதாவது, "2030ம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை தமிழ்நாடு அடைந்திட வேண்டும் என்ற இலக்கு நிர்ணயித்துள்ளோம். இதை அடைய வேண்டுமெனில், தற்போது 26 பில்லியன் அமெரிக்க டாலராக இருக்கும் மாநிலத்தின் ஏற்றுமதியை, 2030ம் ஆண்டிற்குள் 100 பில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்திட வேண்டும். உலக வர்த்தக வரைபடத்தில், தமிழ்நாடு மிகப்பெரும் வளர்ச்சி பெறுவதை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு அல்லும் பகலும் உழைத்து வருகின்றோம்" என்றார். ஆட்சிப் பொறுப்பேற்ற சில மாதங்களில் சுமார் 1.50 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கான பிரகாசமான விடியலை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டுகள் குவிந்தவண்ணம் உள்ளன. வரும் ஆண்டுகளில் மென்மேலும் பல வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றி, உலக அரங்கில் தமிழகம் பேசப்படும் மாநிலமாக உருவாகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

தினத்தந்தி
DAILY THANTHI

Date : 24-Sep-2021

பாரதியார் கனவும், பெரியாரின் இலக்கும் நிறைவேறுகிறது

தமிழ்நாடு எப்போதுமே பெண்களை போற்றி வணங்கும் நாடு. அதனால்தான் நம் தமிழ்நாட்டை தாய்நாடு என்கிறோம். தமிழ்த்தாய் என்று வழிபடுகிறோம். பண்டையகாலத்தில் இருந்தே நமது தலைவர்கள் பெண்கள் முன்னேற்றத்தில் அதிக ஈடுபாடு காட்டி வந்திருக்கிறார்கள். குறிப்பாக மகாகவி பாரதியார், 'பெண்கள் விடுதலை கும்மி' என்ற பாட்டில், 'பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்; எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காணென்று கும்மியடி!" என்று முழங்கினார். அவர் கனவு நனவாகும் வகையில் இப்போது கல்வியில் ஆண்களைவிட பெண்கள் அதிகமாக சிறந்து விளங்குகிறார்கள். இந்த ஆண்டு நடந்த பிளஸ்-2 தேர்வில் 3 லட்சத்து 80 ஆயிரத்து 500 மாணவர்கள் தேர்ச்சிபெற்றனர். ஆனால் மாணவிகளை பொறுத்தவரையில், 4 லட்சத்து 35 ஆயிரத்து 973 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதுபோல சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெண் உறுப்பினர்களின் பங்கு அளப்பரியதாக இருக்கிறது. சென்னை ஐகோர்ட்டிலும் பெண் நீதிபதிகளின் எண்ணிக்கை 14 ஆக உயரப்போகிறது.

இதேபோல தந்தை பெரியார் ஆரம்பத்திலிருந்தே பெண்கள் அடிமைத்தளையிலிருந்து விடுபட்டு எல்லா

முன்னேற்றமும் பெறவேண்டும் என்ற நோக்கில் பாடுபட்டார். 1929-ம் ஆண்டு செங்கல்பட்டில் நடந்த முதல் சுயமரியாதை மாநாட்டில் 'பெண்களுக்கு சமத்துவம்' என்ற தலைப்பில் தீர்மானங்களை நிறைவேற்றினார். அதில் பெண்களுக்கு ஆண்களைப்போலவே சமமாக சொத்துரிமைகளும், வாரிசு பாத்தியதைகளும் கொடுக்கப்படவேண்டும். பெண்களும் ஆண்களை போலவே எந்த தொழிலையும் மேற்கொண்டு நடத்திவருவதற்கு அவர்களுக்கு சமஉரிமையையும், அவகாசமும் கொடுக்கப்படவேண்டும். பள்ளிக்கூட ஆசிரியர்கள் வேலையில் பெண்களே அதிகமாக நியமிக்கப்படுவதற்கு தக்கஏற்பாடு செய்யவேண்டும். ஆரம்பக்கல்வி கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் வேலைக்கு பெண்களையே நியமிக்கவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தந்தை பெரியாரின் இலக்கை அடையும் வகையில் உத்தரவுகளை பிறப்பிப்பதுதான் அவருக்கு செய்யும் மரியாதை என்ற நோக்கில் செயல்பட்ட கருணாநிதி, பெண்களுக்கு சொத்துரிமை வழங்கும் சட்டத்தையும், அரசுப்பணிகளில் 30 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தையும் நிறைவேற்றினார். 'கலைஞர் வழியே என் வழி' என்று செயல்படும் மு.க.ஸ்டாலின் தேர்தல் அறிக்கையில் 246-வது வாக்குறுதியாக, 'அனைத்து அரசு வேலைவாய்ப்புகளிலும் தற்போது பெண்களுக்கு வழங்கப்படுகின்ற 30 சதவீதம், இடஒதுக்கீடு முன்னுரிமை அடிப்படையில் 40 சதவீதமாக உயர்த்தப்படும்' என்று அறிவித்திருந்தார். தேர்தல் அறிக்கையில் கூறியதெல்லாம் வேகமாக நிறைவேற்றிவரும் மு.க.ஸ்டாலின் அரசில் கடந்த 13-ந்தேதி சட்டசபையில், 'அரசு பணிநியமனங்களில் தற்போது பெண்களுக்கு வழங்கப்பட்டுவரும் ஒதுக்கீடு 30 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக உயர்த்தப்படும். இதற்கு உரிய சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்படும்' என்று அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல்தியாகராஜன் அறிவித்துள்ளார். ஆக பெண்களுக்கு விரைவில் 40 சதவீத இடஒதுக்கீடு வரப்போகிறது. 40 சதவீத இடஒதுக்கீடு நிச்சயமாக கிடைக்கும். மீதமுள்ள இடங்களுக்கும் திறமையின் அடிப்படையில் அவர்களால் வரமுடியும்.

ஏற்கனவே, இப்போதெல்லாம் பல பணிகளில் ஆண்களைவிட பெண்களே அதிகம் தேர்ச்சிபெறும் நிலையில் இந்த 40 சதவீதம் இடஒதுக்கீடு அடிப்படையிலும், அவர்கள் தகுதியின் அடிப்படையிலும் மேலும் பல இடங்களும் அவர்களுக்கு கிடைக்க வாய்ப்புள்ளது. கடந்த 2017-2018-ம் ஆண்டு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அளித்த புள்ளிவிவரத்தில், தமிழகஅரசு, அரசுநிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகளில் 8.8 லட்சம் அரசுஊழியர்கள் பணிபுரிகிறார்கள். இதில் 2.92 லட்சம் பேர் பெண்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு பார்க்கும்போது, 30 சதவீதம் பெண்கள் இடஒதுக்கீடு நியமனம் என்றால், 33 சதவீதம் இருக்கிறார்கள் என்ற விவரம் அப்போது தெரியவந்தது. இப்போது கணக்கெடுத்தால் இன்னும் அதிகமாக இருப்பார்கள். 40 சதவீத இடஒதுக்கீடு அமலுக்கு வந்தபிறகு, பெண்களின் பங்களிப்பு 50 சதவீதத்துக்கு மேல் போய், 'ஆண்கள் எங்களுக்கு வேண்டும் இடஒதுக்கீடு' என்று கேட்கப்போகும் நாள் நிச்சயமாக தூரத்தில் இல்லை. இந்த 40 சதவீத இடஒதுக்கீடு பாரதியார் கனவையும், பெரியார் இலக்கையும் நிறைவேற்றும் என்பது உறுதி.

தினகரன்

Date : 25-Sep-2021

வேட்டை தொடரும்

தமிழகத்தில் கடந்த மே மாதம் திமுக அரசு பொறுப்பேற்றபோது பல்வேறு சவால்கள் காத்திருந்தன. கொரோனா தொற்றை கட்டுப்படுத்தும் பெரும் பொறுப்பு முதல்வர் பதவியில் அமர்ந்த நாள் முதல் மு.க.ஸ்டாலினுக்கு காத்திருந்தது. தனது அமைச்சரவை சகாக்களையும், எம்எல்ஏக்களையும் தொகுதிகளுக்கு முடுக்கிவிட்டு பெருந் தொற்றை கட்டுப்படுத்தி கட்டுக்குள் கொண்டு வந்தார். அதைத் தொடர்ந்து தடுப்பூசி போடும் பணியை தீவிரப்படுத்தி ஞாயிற்றுக்கிழமை தடுப்பூசி முகாம் என அறிவித்தார். இந்த பார்முலாவை இந்தியாவிற்கு சொல்லிக் கொடுத்தவரே தமிழக முதல்வர் தான். இதற்கு பிறகு தான் மோடி பிறந்த நாளன்று மெகா தடுப்பூசி முகாமிற்கு ஒன்றிய அரசு ஏற்பாடு செய்தது.

இந்த வரிசையில் தமிழக முதல்வர் தற்போது எடுத்துள்ள ஆயுதம் தான் ரவுடிகள் வேட்டை. தமிழகம் முழுவதும் நேற்று முன்தினம் ஒரே நாளில் 5 ஆயிரம் இடங்களில் நடந்த சோதனையில் 870 ரவுடிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்து துப்பாக்கி, கத்தி, அரிவாள் என 250க்கும் மேற்பட்ட பயங்கர ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த சில நாட்களாக தென் மாவட்டங்களில் சில இடங்களில் கொலை சம்பவங்கள் அரங்கேறின. இதைத் தொடர்ந்து ரவுடிகளை ஒடுக்கும் பணியை தமிழக அரசு கையில் எடுத்துள்ளது. மிரட்டல், உருட்டல், பணம் பறித்தல், கட்டப்பஞ்சாயத்து, ஆள் கடத்தல், மிரட்டி பணம் பறித்தல், பணத்திற்காக கொலை செய்தல் என ரவுடிகள் தங்களுக்கென்று ஒரு ராஜ்யம் அமைத்துக் கொண்டு உலா வருகின்றனர். இதற்காக இளைஞர்களை மூளைச் சலவை செய்து தனக்கென ஒரு கூட்டத்தை ஏற்படுத்திக் கொண்டு அசம்பாவிதங்களில் ஈடுபடுகின்றனர். சமூக வலைதளங்கள் தற்போது பெருகி விட்ட நிலையில் வாள், கத்தி போன்ற ஆயுதங்களால் கேக் வெட்டி பிறந்த நாள் கொண்டாடும் கலாசாரம் ரவுடிகளிடம் அதிகரித்துள்ளது. இதனால் பொதுமக்கள் மத்தியில் அச்சம் ஏற்படுகிறது. ரவுடிகள் கொட்டத்தை ஒழித்தால் தான் சட்டம், ஒழுங்கை பாதுகாக்க முடியும். சிறந்த மாநிலமாக தமிழகத்தை உயர்த்த முடியும்.

இதனால் தான் ஒரே நாள் இரவில் ரகசிய வேட்டையை துவக்கியது தமிழக போலீஸ். நீண்ட நாட்களாக தலைமறைவு வாழ்க்கை வாழ்பவர்கள், பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள், சந்தேகப்படும் ரவுடிகள் வீடுகளில் திடீரென போலீஸ் நுழைந்து ஆயுதங்களை கைப்பற்றி ரவுடிகளை தூக்கிக் கொண்டு வந்துள்ளது. இந்த அதிரடி ரவுடிகள் வேட்டை தொடரும் என்றும் தமிழக டிஜிபி சைலேந்திர பாபு தெரிவித்துள்ளார். சட்டம், ஒழுங்கில் சிறந்த நிபுணத்துவம் பெற்றவர் டிஜிபி சைலேந்திரபாபு. குற்றவாளிகளை பிடிப்பதிலும், கொள்ளையர்கள் வேட்டையிலும் தமிழக போலீசார் சளைத்தவர்கள் அல்ல. ரவுடிகள் கொட்டத்தை ஒழித்து தமிழகத்தில் அமைதியை நிலை நாட்டி, தொழில் முதலீட்டிற்கு உகந்த மாநிலம் தமிழகம்தான் என்பதை முதல்வர் மு.க.ஸ்டாலின் உருவாக்கியுள்ளார்.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்
Date : 26-Sep-2021

முன்மாதிரி முதல்வர்

தமிழகத்தை பொறுத்தவரை ஒவ்வொரு சட்டப்பேரவை தேர்தலிலும் ஹீரோ யார் என்று கேட்டால், அது திமுகவின் தேர்தல் அறிக்கைதான்.

இதனால்,திமுகதேர்தல் அறிக்கையை தமிழக மக்கள் மட்டுமின்றி, பிற அரசியல் கட்சிகளும் எதிர்பார்த்து காத்திருப்பார்கள்.

அண்மையில் நடந்து முடிந்த சட்டப்பேரவை தேர்தலுக்காக 505 வாக்குறுதிகளோடு, தேர்தல் அறிக்கை வெளியிட்ட திமுக தலைவரும் தற்போதைய முதல்வருமான மு.க.ஸ்டாலின், கலைஞர் வழியில் நானும் சொன்னதைச் செய்வேன். செய்வதைத் தான் சொல்வேன் என்று தமிழக மக்களுக்கு உறுதிமொழி அளித்தார். இந்த 505 வாக்குறுதிகளையும் 5 ஆண்டு ஆட்சி காலத்தில் நிறைவேற்றி, நம் கவலைகளை முதல்வராக பதவி ஏற்ற பின் மு.க.ஸ்டாலின் தீர்ப்பார் என்ற நம்பிக்கையோடு திமுகவை ஆட்சி கட்டிலில் அமர வைத்தனர் தமிழக மக்கள்.

ஆட்சி அமைத்த நாள் முதல் இன்று வரை தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முனைப்போடு செயல்பட்டு வருகிறது திமுக ஆட்சி. மே 7-ம் தேதி பதவியேற்ற சில மணி நேரத்திலேயே ஐந்து முக்கியமான வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான கோப்புகளில் கையெழுத்திட்டார் முதல்வர். அதன் தொடர்ச்சியாக பல்வேறு வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

அதே நேரத்தில், ஊழல் செய்வதற்காகவே ஆட்சி நடத்திய எடப்பாடி பழனிசாமி அன்கோவிற்கு, அடுத்தடுத்த லஞ்ச ஒழிப்பு சோதனையால் அஸ்தியில் ஜுரம் கண்டுள்ளது. பயத்தில் உளற தொடங்கியுள்ள எடப்பாடி,'தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை திமுக மறந்து விட்டது என்று கூறியுள்ளார்.

இதற்கு பதிலடியாக, திமுக ஆட்சி அமைந்து 142 நாட்கள் நிறைவடைந்த நிலையில், இது வரை நிறைவேற்றிய தேர்தல் வாக்குறுதிகளை பட்டியலிட்டுள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின். அளித்த 505 வாக்குறுதிகளில் இதுவரை 202 வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறார்கள். அதாவது வாக்குறுதிகளில் 40 சதவீதம் நான்கே மாதத்தில் நிறைவேறப்பட்டுவிட்டது. இதுதவிர தேர்தல் அறிக்கையில் சொல்லாதவற்றையும் திமுக ஆட்சி செய்துள்ளது. இது மக்களுக்கான ஆட்சி என்பதை முதல்வர் தனது ஒவ்வொரு செயலிலும் நிரூபணம் செய்துள்ளார். இந்த வேகத்தில் போனால், மீதமுள்ள வாக்குறுதிகளும் விரைவில் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை பிறக்கிறது. மூன்று மாதத்துக்கு ஒரு முறை நிறைவேற்றிய வாக்குறுதிகளை பட்டியலிடுவேன் என்று முதல்வரே கூறியுள்ளார். ஆட்சி என்றால் இப்படித்தான் நடத்த வேண்டும் என்று மற்ற மாநில முதல்வர்களுக்கு முன்மாதிரியாக நம் முதல்வர் திகழ்கிறார்.

கடும் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியுள்ள அ.தி.மு.க. அமைச்சர்கள் மீதான புகார்களை விசாரிக்க, தனி நீதிமன்றம் அமைக்கப்படும் என்பதும் திமுகவின் தேர்தல் வாக்குறுதியில் ஒன்று. அதுவும் விரைவில் நிறைவேறி, ஊழல் மாஜிக்கள் தண்டிக்கப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பது எடப்பாடிக்கு இப்போது தெளிவாகியிருக்கும்.

52 மணி நேரத்தில் 3,325 ரவுடிகள் கைது

கி.வீரமணி பாராட்டு

'குற்றங்கள் நிரந்தரமாக குறையும்'

சென்னை, செப்.26–

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

3325 ரவுடிகள் கைது

முதல்–அமைச்சர் மு.க. ஸ்டாலின் பொறுப்பில் உள்ள காவல்துறையின் சிறப்பான சட்டம் ஒழுங்கு மற்றும் மக்கள் பாதுகாப்புக்கு உத்தரவாதமும், நம்பிக்கையும் ஏற்படும் வகையில் 23.9.2021 அன்று இரவு தொடங்கி 52 மணி நேரத்தில் எடுக்கப்பட்ட சரியான நடவடிக்கை அனைவரது பாராட்டுதலையும் பெறுவது உறுதி.

தமிழ்நாட்டில் 3,325 ரவுடிகள் கைது செய்யப்பட்டும், 7 நாட்டுத் துப்பாக்கிகள், 1110 பிற ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்பதும் சரியான நடவடிக்கையாகும்.

கூலிப்படைகள் மலிந்து விட்டன என்பதை நடைபெறும் பல கொலைகளும், உடனடியாக அவர்கள் சரண் அடைவதும் தெள்ளத் தெளிவாகவே விளக்குவதாக உள்ளன. சிறைக்குள்ளே கூலிப்படைத் தலைவர்கள் அடைக் கப்பட்டிருக்கும் நிலையிலேயே அவர்கள் ஒரு 'நெட் ஓர்க்' போல அங்கிருந்தே தனது சீடர்களுக்கு கொலைக்குத் திட்டமிட போதிய கருத்துரைகள் வழங்கு வதாகப் பரவலாகப் பேச்சு பலமாகவே அடிபடுகிறது.

இவர்களைக் கைது செய்வதோடு இவர்களில் தரம் பிரித்து, மனோ தத்துவ ரீதியில் பக்குவப்படுத்தி, புதுவாழ்வை வாழச் செய்ய முடியுமா? என்று ஆய்வு செய்து அடுத்தக் கட்ட நடவடிக்கைகளை அரசு எடுத்தால், குற்றங்கள் நிரந்தரமாகக் குறையக் கூடும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Acts of faith

The DMK government, in engaging with the Tamil Hindus, is trying to undercut the BJP's hindutva ploy

BY LAKSHMI SUBRAMANIAN

R.G. SARTHA

FACES OF CHANGE

Chief Minister M.K. Stalin (right) with HR&CE Minister P.K. Sekar Babu

ON AUGUST 14, Tamil Nadu Chief Minister M.K. Stalin handed over appointment orders to priests, 24 of them non-Brahmins, in temples that come under the Hindu Religious and Charitable Endowments (HR&CE) department. Posts for *othuvars* (hymn reciters), *poosaris*, mahouts and garland stringers were also filled.

"With these appointments, the wish of our leader Karunanidhi—who sought to fulfil Periyar's dream of making people of all castes *archakas* (priests)—has been realised. It was achieved after drawn-out legal battles," said HR&CE Minister P.K. Sekar Babu.

Periyar E.V. Ramasamy had held a meeting on the issue a week before his death in 1973. Karunanidhi had, in May 2006, passed a special government order facilitating the appointment of qualified *archakas* of all castes. A decade and a half later, Stalin has gone a step further with the appointments. "This has been a long battle and the new appointments are a triumph of Stalin and the DMK, who follow in the footsteps of Periyar," says political observer and academic P. Ramajayam.

A week after the appointments, a series of writ petitions were filed in the Madras High Court assailing the appointment of non-Brahmin priests. Stalin had challenged the domain of the right-wing groups, particularly the BJP, which had been trying to "liberate temples from the clutches of the government". The party's manifesto for this year's assembly elections had promised to curtail the HR&CE department's powers. It proposed handing over administration of Hindu temples to a separate board consisting of Hindu scholars and saints.

Stalin, however, went the other way. In the past three months, the hitherto low-profile department has received attention like never before. Stalin chose provocative grassroots politician Sekar Babu and tech-savvy bureaucrat J. Kumaragurubaran as minister and commissioner of the department, respectively.

For Stalin, the successful functioning of the department is politically significant. The BJP's efforts to make inroads into Dravida land had become stronger since the deaths of former chief ministers Karunanidhi and J. Jayalalithaa; at one point, Stalin was forced to clarify that the DMK was not "anti-Hindu", and that it respected all religions. To further

Date : 26-Sep-2021

> With these appointments [of 24 non-Brahmin priests], the wish of our leader Karunanidhi—who sought to fulfil Periyar's dream of making people of all castes *archakas* (priests)—has been realised.
>
> — P.K. Sekar Babu, HR&CE minister

his point, he chose the HR&CE office in Chennai to launch a drive to plant one lakh saplings on Karunanidhi's third death anniversary on August 7.

After he took over, Stalin's first salvo was against spiritual guru Jaggi Vasudev, who was campaigning to hand over temples to devotees. Finance Minister Palanivel Thiaga Rajan called Vasudev a "publicity hound" and dismissed his campaign.

Within a fortnight, in his first meeting with department officials, Babu issued an order asking them to be transparent about assets held by temples and to upload all relevant documents online. All 44,121 temples under the HR&CE department implemented the order. "Besides ensuring transparency, digitisation will leave no room for any further tampering of the documents," a senior bureaucrat told THE WEEK.

The next announcement was the creation of a call centre to exclusively receive complaints or suggestions from devotees. The centre is located in Chennai and is open from 10am to 6pm on all working days.

Then came a slew of initiatives, including a drone and DGPS (digital global positioning system) survey of all temple land, asking every temple to clear encroachments on its land, and recruiting licenced surveyors to keep a tab on such encroachments.

The most important of these was the appointment of women priests and allowing priests to chant Tamil as well as Sanskrit mantras, while performing *archanai* (rituals), as preferred by the devotee. "It is my dream come true," says Suhanjana Gopinath, who took over as the first woman *othuvar* at Dhenupureeswarar temple in Chennai on August 18. "To me, engaging women as priests is part of the larger social engineering initiative to ensure equal participation and to provide opportunities to women."

At least 47 temples have been allowed to perform Tamil *archanai*. "Our leader Karunanidhi had mooted the idea in 1971, and the then HR&CE minister M. Kannappan had made an announcement. In 1974, a circular was sent to temples," says Sekar Babu.

Though 24 non-Brahmin priests have been appointed for now, the second set of orders is imminent. To train them, the *archaka payirchi palli* (priest training schools, across castes) have been revived across the state. Though the previous AIADMK government had turned them into Veda *patashalas* (Vedic schools), the Stalin government wants to retain the *patashalas* and also run the training schools.

As for encroachment, the HR&CE department has reclaimed land worth ₹641 crore in the past three months; it plans to retrieve land worth more than ₹1,000 crore soon.

On September 13, the assembly passed a bill to make encroachment of properties belonging to religious institutions a cognisable and non-bailable offence. "The hindutva practised by the BJP since 1989 has not worked in Tamil Nadu," says Ramajayam. "They might have won a few MLAs in 2001 and now, but that does not mean that the people have accepted their hindutva agenda."

The HR&CE department has been tactful in its initiatives so as to not irk practising Hindus. The government has said that schools, colleges and libraries would come up on the retrieved temple land, a move that any opposition party would find hard to oppose. "Even if they oppose it, the practicing Hindus will stand behind the DMK as it is participative secularism," says linguistic activist Aazhi Senthilnathan, who closely follows temple management practices in Tamil Nadu. "The DMK has only democratised the existing setup and ensured social justice. Tamil Nadu has the best temple management system and it is because of the HR&CE department."

In this backdrop, the BJP's ploy of gaining support in the name of religion seems to have hit a roadblock. Recently, when the DMK government banned public gatherings for Ganesh Chaturthi, state BJP president K. Annamalai called the move anti-Hindu and asked supporters to send Stalin Ganesh Chaturthi greeting cards. The protest found few takers.

This was because the DMK had consciously moved away from the days of Karunanidhi apparently calling Hindus thieves, and is now focused on being a secular guardian of religious practices. Sources close to the chief minister's office told THE WEEK that Stalin's very first

> **It is my dream come true. To me, engaging women as priests is part of the larger social engineering initiative to ensure equal participation and to provide opportunities to women.**
>
> **—Suhanjana Gopinath,** who took over as the first woman *othuvar* at Dhenupureeswarar temple in Chennai on August 18

instruction to a set of bureaucrats was to make people understand that he and the DMK were not against any religion. "The DMK's ideals are social justice and rationalism, which are against superstitions and exploitation in the name of religion or God," says Ramu Manivannan, head, department of politics and public administration, University of Madras.

Like Mamata Banerjee in Bengal, Stalin wants to ensure that the BJP cannot put him on the back foot by playing the hindutva card. "The notion of hindutva is quite different from Hinduism," Thiaga Rajan told THE WEEK. "What we are seeing in Tamil Nadu is Hinduism and not hindutva. Tamil Nadu has been the most practising Hindu state. From the 1920s onwards, the practice of Hinduism has been completely democratised. We are only following in the footsteps of our ancestors. Anna (C.N. Annadurai) came to power in 1967 and said we are the descendants of the Justice Party. My grandfather, as the HR&CE minister, opened temple trusts to non-Brahmins. This was done to democratise temples. Then the DMK made the temple trustee board more inclusive by adding one Adi Dravida and one woman. This has been our agenda. The BJP was born only in the 1980s, but we have been practising Hinduism even before that."

முரசொலி

Date : 27-Sep-2021

தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் முன்னேற்ற சங்கக் கூட்டம்!

முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம்!

மாநிலத் தலைவர் ரெ.தங்கம் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, செப் 27,

தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் முன்னேற்றச் சங்க மாநில நிர்வாகிகள் கூட்டம் சென்னையில் சங்க மாநிலத் தலைவர் ரெ. தங்கம் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு மாற்று திறனாளிகள் முன்னேற்றச் சங்க மாநில, நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நேற்று 26.9.2021 ஞாயிற்றுக் கிழமை மாலை 3 மணியளவில் நெ. 47/15, அப்துல் அஜிஸ் தெரு, தி.நகர், சென்னை-600 017 என்ற முகவரியில், சங்க மாநிலத் தலைவர் ரெ.தங்கம் தலைமையிலும், துணைப் பொதுச் செயலாளர்கள் க.இளங்கோவன், வி.சுகுமார், சங்க ஐடி விங் மாநில செயலாளர் வண்ணை ஜெ.துரைபாபு, ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சங்க ஆக்கப்பணிகளையும், சங்க நிர்வாகத் தன்மையின் காரணமாக மாநில, மாவட்டங்களில் புதிய நிர்வாகிகளை நியமனம் செய்வது தொடர்பாகவும், மேலும் சங்க மாநில, மாவட்ட நிர்வாகத் தன்மையை துரிதப்படுத்தப் படுத்திடவும், சிறப்பாக களப்பணியாற்றுவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச பஸ் பாஸ், இந்து அறநிலைய துறை கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களில் உள்ள திருமண மண்டபங்களில் மாற்றுத் திறனாளிகள் திருமணம் செய்வோருக்கு முழு கட்டணம் விலக்கு, மாற்றுத் திறனாளிகள் அரசு வேலை எளிதில் பெற டி.என்.பி. எஸ்.சி. மூலம் தனி சிறப்புத் தேர்வு என பல்வேறு திட்டங்களை அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர், தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களை ஆட்சிக் கட்டில் அமர வைக்க கடந்த சட்டமன்றத் தேர்தலில் களப்பணியாற்றியது போல, நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தலிலும், கழக வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் களப்பணி பிரச்சாரம் சங்க மாநிலத் தலைவர் ரெ.தங்கம் தலைமையில் செய்வது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழகம் முழுவதும் உள்ள மாற்றுத் திறனாளிகளின் கோரிக்கை மனுக்களை அந்தந்த மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் வழங்கி நிவாரணம் மேற்கொள்ள அந்தந்த மாவட்ட சங்க நிர்வாகிகள் மூலம் தகுந்த வழிகாட்டுதல் ஏற்படுத்திட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில், திருவள்ளூர் மாவட்டச் சங்க செயலாளர் எஸ். லோகேஷ், சென்னை மாவட்ட துணைச் செயலாளர்கள் எல்.கண்ணன், எச்.முகமது அப்துல் காதர், வேலூர் மாவட்டச் சங்க செயலாளர் பி.பலராமன்,

காஞ்சிபுரம் மாவட்டச் சங்க செயலாளர் எம்.ரவி, கிருஷ்ணகிரி மாவட்டச் சங்க செயலாளர் டி.வெங்கடேசன், சங்க பி.ஆர்.ஓ. தி.நகர் பராசக்திவேல், காது கேளாதோர் வாய்பேச முடியாதோர் பிரிவு செயலாளர்கள் ஆர்.லாவண்யா, அமீனா, பி.அமுதா-பாபு, மற்றும் சங்க நிர்வாகிகளான கொளத்தூர் பி.பிரபாகரன், கே.ருத்ரமூர்த்தி ஆகியோர் பங்கேற்றனர்.

தினத் தந்தி

DAILY THANTHI

Date : 27-Sep-2021

4 மாதங்களில் 202 வாக்குறுதிகளை நிறைவேற்றிய மு.க.ஸ்டாலின்

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி ஆகியோர் மறைந்தாலும், அவர்கள் விட்டுச்சென்ற பாதையில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பீடுநடைபோட்டு வருகிறார். தேர்தல் பிரசாரத்தின்போது ஒவ்வொரு மாவட்டமாக சுற்றுப்பயணம் செய்தார். அப்போது ஒவ்வொரு மேடையிலும் ஒருபெட்டியில் மக்கள் குறைகளை, கோரிக்கைகளை போடலாம். ஆட்சிக்கு வந்தவுடன் அவர்கள் பிரச்சினைகளையெல்லாம் 100 நாட்களில் தீர்க்கும்வகையில் ஒரு துறையை உருவாக்குவதுதான் என் முதல் கையெழுத்தாக இருக்கும் என்றார். இதுபோல தேர்தல் அறிக்கையில் 505 வாக்குறுதிகளை வழங்கினார். பிரசார கூட்டங்களில் பேசும்போது, 'நான் சொன்னதை செய்வேன். செய்வதைத்தான் சொல்வேன். ஏனெனில் நான் கலைஞர் மகன்' என்று பெருமைப்பட கூறினார். பல கூட்டங்களில் இந்த உறுதியை அவர் மக்களுக்கு அளித்தார்.

அதுபோல மே 7-ந்தேதி ஆட்சிக்கு வந்தவுடன் முதல் கையெழுத்தாக அவர் சொன்னபடி ஒரு ஆணையல்ல, 5 அரசாணைகளை வெளியிட்டார். "2 கோடியே 9 லட்சம்

அரிசி குடும்பஅட்டைதாரர்கள் அனைவருக்கும் தலா ரூ.4 ஆயிரம் கொரோனா நிவாரண நிதியுதவி, ஆவின்பால் லிட்டருக்கு ரூ.3 குறைப்பு, பெண்களுக்கு அரசு நகரபஸ்களில் இலவசபயணம், மக்கள் மனுக்கள் மீது தீர்வுகாண உங்கள் தொகுதியில் முதல்-அமைச்சர் துறை, தனியார் மருத்துவமனைகளில் கொரோனா சிகிச்சைக்கான செலவினத்தை முதல்-அமைச்சர் காப்பீட்டுத்திட்டத்தில் அரசே ஏற்பு" என்ற 5 கோப்புகளில் கையெழுத்திட்டு சாதனை படைத்தார். 'உங்கள் தொகுதியில் முதல்-அமைச்சர் துறை' மூலம், இதுவரை 4 லட்சத்து 57 ஆயிரத்து 645 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, 2 லட்சத்து 29 ஆயிரத்து 216 குறைகளுக்கான மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன. இதுதவிர முக்கியமான நடவடிக்கைகளை நிபுணர்களோடு கலந்து ஆலோசித்துதான் முதல்-அமைச்சர் முடிவெடுக்கிறார். கடந்த ஜூலை மாதம் எஸ்தர் டப்லோ, ரகுராம் ராஜன், அரவிந்த் சுப்பிரமணியன், ஜீன் டிரீஸ், எஸ்.நாராயண் ஆகியோர் அடங்கிய முதல்-அமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டது. இதுபோல பல குழுக்கள் நிபுணர்களை கொண்டு அமைக்கப்பட்டிருக்கின்றன.

தேர்தல் அறிக்கையில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதையும், கொடுக்கப்படாத திட்டங்களுக்கான அறிவிப்புகளையும் வெளியிடுவதையே தலையாய பணியாக கொண்ட மு.க.ஸ்டாலின், கவர்னர் அறிக்கையில் 51 வாக்குறுதிகள், அவரது பதிலில் 2 வாக்குறுதிகள், பட்ஜெட்டில் 43 வாக்குறுதிகள், வேளாண் பட்ஜெட்டில் 23 வாக்குறுதிகள், அமைச்சர்கள் மூலமாக அவர்கள் துறைசார்ந்த அறிவிப்புகளில் 64 வாக்குறுதிகள், மற்றவகைகளில் 16 வாக்குறுதிகள் உள்பட 202 வாக்குறுதிகளை அரசின் அறிவிப்புகளாகவே வெளியிட்டிருக்கிறார். இதில் பல அறிவிப்புகள் மக்களின் நீண்டகால கோரிக்கைகளாக இருப்பது குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக காவல்துறையில் பணிபுரிபவர்கள் தங்களுக்கு வாராந்திர விடுப்புவேண்டும் என்று நீண்டநெடுநாட்களாகவே எதிர்பார்த்து கொண்டிருந்தார்கள். அதை மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்பு சாத்தியமாக்கியிருக்கிறது.

அந்தவகையில் கடந்த 4 மாதங்களில் 505 வாக்குறுதிகளில் 202 வாக்குறுதிகளை நிறைவேற்றிய வேகம், நிறைவேற்றிய சாதனை நிச்சயமாக பாராட்டுக்குரியது. இதேவேகத்தில் போனால், 5 ஆண்டுகள் வரை காத்திருக்க வேண்டியதில்லை. ஓரிரு ஆண்டுகளிலேயே அனைத்து வாக்குறுதிகளும் நிறைவேற்றப்பட்டுவிடும் என்பதில் சந்தேகமே இல்லை. ஒருபுறம் தேர்தல்வாக்குறுதிகளை நிறைவேற்றிய மு.க.ஸ்டாலின், தேர்தல் அறிக்கையில் சொல்லாத 24 திட்டங்களையும் அறிவித்து சாதனை படைத்துள்ளார். எடுத்துக்காட்டாக அரசு பள்ளிக்கூடங்களில் படித்த மாணவர்களுக்கு அனைத்து தொழிற்கல்வி இடஒதுக்கீடு பிரிவிலும் 7.5 சதவீதம் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படும். அப்படி இடம்பெறும் மாணவர்கள் கட்டணம் எதுவும் செலுத்தவேண்டியதில்லை என்ற அறிவிப்பை வெளியிட்டுள்ளார். இப்படி சொல்லியதையும் செய்து, சொல்லாததையும் செய்துவரும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், இன்று என்ன அறிவிப்பு வெளியிடப்போகிறாரோ? என்று மக்கள் ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்து கொண்டிருக்கிறார்கள். நிறைவேற்றிய வாக்குறுதிகள் அனைத்தையும் நானே பட்டியல் போட்டு காண்பிப்பேன். 3 மாதங்களுக்கு ஒருமுறை நானே மக்களிடம் இதை சொல்வேன் என்று மு.க.ஸ்டாலின் உறுதியளித்திருப்பது மக்களுக்கு பெரிய நம்பிக்கையை அளித்துள்ளது.

தமிழ் முரசு

Date : 27-Sep-2021

மண் எடுக்க அனுமதி

முதல்வர் உத்தரவால் மண்பாண்ட தொழிலுக்கு பாதுகாப்பு

மண்பாண்ட தொழிலாளர்கள் குலாலர் சங்கம் பாராட்டு

சென்னை, செப்.27- தமிழ்நாடு மண்பாண்ட தொழிலாளர்கள் குலாலர் சங்க தலைவரும், முன்னாள் வாரியத் தலைவருமான சேம.நாராயணன் வெளியிட்ட அறிக்கை:

மண்பாண்டத் தொழிலாளர்கள் மண்பாண்டங்கள், செங்கல் சூளை, சொருவோடு தயாரிக்க மண்எடுக்க ஏற்கெனவே அரசு ஆணை வெளியிட்டிருந்தும், கடந்த அதிமுக அரசு மண் எடுக்க சுற்றுச் சூழல் அனுமதி பெறவேண்டும் என்று உத்தரவிட்டது. இதனால் மண்பாண்டத் தொழிலாளர்கள் மண் எடுத்து தொழில் செய்ய முடியாமல் வாழ்வாதாரம் இன்றி பாதிக்கப்பட்டனர். இதுகுறித்து சட்டமன்ற தேர்தலுக்கு முன்பு திமுக தலைவர் மு.க.ஸ்டாலினை நாங்கள் நேரில் சந்தித்து தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் மண் எடுக்க அனுமதி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி கோரிக்கை மனு கொடுத்தோம். அவர் பரிசீலிப்பதாக உறுதியளித்தார். அதன்பிறகு திமுக ஆட்சிபொறுப்பேற்றபிறகு நீர்பாசன துறை அமைச்சர் துரைமுருகனை நேரில் சந்தித்தும் பேசினோம். கோரிக்கையை மனுவாகவும் கொடுத்தோம். அவர் எங்கள் கோரிக்கையை பரிசீலித்து, முதல்வர் பார்வைக்கு எடுத்துச் சென்று உங்கள் கோரிக்கையை நிறைவேற்றித் தருகிறோம் என்று தெரிவித்தார். பின்னர் அவர் முதல்வரின் கவனத்திற்கு எடுத்துச் சென்று மண்பாண்டங்கள், செங்கல் சூளைக்கு மண் எடுக்க 1.5 மீட்டர் அனுமதிக்கப்படும் என்றும் இதற்கு சுற்றுச் சூழல் அனுமதி தேவையில்லை என்றும் சட்டமன்றத்தில் அமைச்சர் துரைமுருகன் அறிவித்தார். அதன்பேரில் மண்பாண்டங்கள் செய்ய மண் எடுக்க சுற்றுச் சூழல் அனுமதி தேவையில்லை என்று அதற்கான அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. எங்களின் நீண்டநாளைய கோரிக்கையை நிறைவேற்றி மண்பாண்டத் தொழிலாளர்கள் வாழ்வில் ஒளியேற்றியுள்ள தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மண்பாண்டத் தொழிலாளர்கள் சார்பாக கோடானகோடி நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

Date : 28-Sep-2021

தமிழ்நாட்டில் தொழில் மாநாடுகள்!

எந்தவொரு நாடும், மாநிலமும் பொருளாதாரத்தில் சிறந்து விளங்கவேண்டும் என்றால், அங்கே தொழில் வளர்ச்சி அபரிமிதமாக இருக்கவேண்டும். எந்தவொரு இடத்தில் புதிதாக ஒரு பெரிய தொழிற்சாலையோ அல்லது சிறிய தொழிற்சாலைகள் கொண்ட தொழிற்பேட்டையோ உருவானால், அந்தப்பகுதி முழுவதும் உள்கட்டமைப்பு வசதிகள் வளர்ச்சி பெறும். வேலைவாய்ப்புகள் பெருகும். வர்த்தகம் தழைக்கும். மக்களின் வாழ்வாதாரம் வளம் பெறும். அரசுக்கும் வருவாய் உயரும்.

இதை அடிப்படையாக வைத்து, உப தொழில்கள், வணிக நிறுவனங்கள் என்று புதிது புதிதாக தோன்றும். அங்கு உற்பத்தியாகும் பொருட்கள் உள்நாட்டு சந்தையில் மட்டுமல்லாமல், வெளிநாட்டுக்கும் ஏற்றுமதியாகி அன்னிய செலாவணியை ஈட்டித்தரும். அந்த வகையில், முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின்,

தமிழ்நாட்டை தொழில் வளர்ச்சிமிக்க மாநிலமாக மாற்றும் குறிக்கோளில் தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, ஊரக தொழில்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தொழில் துறை முதன்மை செயலாளர் முருகானந்தம், சிறு தொழில் துறை செயலாளர் அருண் ராய் ஆகியோர் கொண்ட அணியை மிகத்தீவிரமாக முடுக்கிவிட்டு வருகிறார்.

புதிய தொழில்கள் உருவாகும் முயற்சியில் தினமும் ஒரு முன்னேற்றம் காணவேண்டும் என்பதுதான் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினின் இலக்கு. இத்தகைய சூழ்நிலையில், இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் ஆனதை குறிக்கும் வகையில், அந்த கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, மத்திய அரசாங்கத்தின் வர்த்தகத்துறை ஒரு வார காலமாக நாட்டில் 100 முக்கிய மாவட்டங்களில் வணிக மற்றும் வர்த்தக வார நிகழ்ச்சிகள், மாபெரும் ஏற்றுமதியாளர்கள் மாநாடுகளை நடத்தி முடித்துள்ளது. சென்னையில் கடந்த 22-ந்தேதி, "ஏற்றுமதியில் ஏற்றம் - முன்னணியில் தமிழ்நாடு" என்ற தலைப்பிலான ஏற்றுமதி மாநாட்டை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்தார். அதில், தமிழக அரசின் பிரகடனமாக, "நமது பொருட்களை உலகம் முழுவதும் கொண்டு செல்வோம். உலக நாடுகளை தமிழகம் நோக்கி வர வைப்போம். ஏற்றுமதியில் ஏற்றம் காண்போம். முன்னேற்ற பாதையிலேயே எப்போதும் நடப்போம்" என்பதை உறுதிபட பதிவு செய்தார்.

அன்றைய தினம் ரூ.2,120 கோடியே 54 லட்சம் மதிப்பிலான 24 திட்டங்களுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன் மூலமாக 41,695 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த புதிய முதலீடுகள் சென்னையில் மட்டுமல்லாமல், திருவள்ளூர், ராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி, மதுரை, தஞ்சை, தூத்துக்குடி மற்றும் நெல்லை என்று தமிழ்நாட்டில் பரவலான வளர்ச்சிக்கு ஏதுவாக தொடங்கப்பட்டுள்ளது மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

இந்திய அளவில் தொழில் துறையில் தமிழ்நாடு சிறந்த மாநிலமாக விளங்குகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக, ரூ.1 லட்சத்து 93 ஆயிரம் கோடி ஏற்றுமதியுடன் இந்தியாவிலேயே தமிழ்நாடு 3-வது பெரிய ஏற்றுமதி மாநிலமாக விளங்குகிறது. விரைவில் 3-வது இடத்தில் இருந்து முதல் இடத்திற்கு முன்னேறி வரவேண்டும் என்ற வகையில், அனைத்து முயற்சிகளையும் தமிழக அரசு மேற்கொள்ளவேண்டும். சென்னை தவிர, கோவை, மதுரை, கிருஷ்ணகிரி, திருப்பூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் பெரிய அளவில் இந்த மாநாடுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

இதுபோல, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்றுமதி தொடர்பான மாநாடுகள் நடக்கிறது. ஏற்றுமதி செய்யக்கூடிய மற்றும் புவிசார் குறியீடு பெற்ற உள்ளூர் பொருட்களின் கண்காட்சிகள் இந்த மாநாட்டில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தொழில் வளர்ச்சியில் தமிழக அரசு ஒரு புதிய உத்வேகம் காணவேண்டும். உலகம் முழுக்க நாம் செல்ல வேண்டும். உலகமே தமிழகத்தை நோக்கி வந்தாக வேண்டும். மொத்தத்தில் தமிழக தொழில் துறையின் உள்ளங்கையில் உலகம் இருக்க வேண்டும் என்ற முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினின் லட்சியமே தமிழக அரசின், குறிப்பாக தொழில் துறையின், சிறு தொழில் துறையின் லட்சியமாக இருக்க வேண்டும்.

தினகரன்

Date : 29-Sep-2021

தலைநிமிரும் தமிழகம்

10 ஆண்டுகால அதிமுக ஆட்சியின் அவலங்களால் தமிழகம் தளர்ந்து விட்டது. ஆனால், திமுக ஆட்சிக்கு வந்து 4 மாதங்கள் எட்டிய நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலினின் உறுதியான நடவடிக்கையால் தமிழகம் மீண்டும் வளர்ச்சிப்பாதையில் பயணிக்கத்தொடங்கி விட்டது. அத்தனை வளங்கள் இருந்தும் உறுதியான தலைமை இல்லாததால் ஓட்டம் பிடித்த தொழில் நிறுவனங்கள் மீண்டும் தமிழகம் பக்கம் பார்வையை வீசத்தொடங்கியிருப்பது தலைநிமிரும் தமிழகத்தின் நல்ல அறிகுறி.

காமராஜர் ஆட்சிக்காலத்தில் இருந்து தொழிற்துறையில் தமிழகம் எப்போதும் முதலிடம் தான். பெரும் பொருளாதார பலம் மிக்க மகாராஷ்டிரா, குஜராத் போன்ற மாநிலங்களைப்போல் தமிழகத்தின் வளர்ச்சியும் எப்போதும் உயர்ந்தே இருந்தது. கார் தொழிற்சாலையின் பூங்காவாக சென்னையை மாற்றினார் கலைஞர். எண்ணற்ற கார் நிறுவனங்கள் இங்கே கார்களை உற்பத்தி செய்து உலகம் முழுவதும் அனுப்பி வைத்தன என்றால் கலைஞர் எடுத்த நடவடிக்கையின் மகத்துவம் அனைவருக்கும் புரியும். அதேபோல் சென்னை மட்டுமல்லாமல் ஒவ்வொரு முக்கிய நகரத்திலும் ஐடி பூங்காக்கள் திறக்கப்பட்டன. அதோடு சிப்காட் தொழிற்பூங்காக்கள் அமைக்கப்பட்டு, தொழிற்சாலைகளுக்கு நிலம் ஒதுக்கி கொடுக்கப்பட்டு, அந்தந்த மாவட்டங்களில் வேலை வாய்ப்புகள், உற்பத்தி திறன், தொழிற்திறன் அதிகரிக்கப்பட்டது. ஆனால், அதிமுக ஆட்சியால் தமிழகத்தின் வளர்ச்சி வேகம், தொழிற்திறன் அத்தனையும் முடக்கப்பட்டன. சிறு நகரங்கள் வளர்ச்சி முடக்கப்பட்டு சென்னையை சுற்றியுள்ள பகுதிகள் மட்டுமே தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி மண்டலமாக கருதப்பட்டன. அல்லது இங்கு மட்டுமே அத்தனை வசதிகளும் கிடைத்தன.

தற்போது எல்லாம் மாறிவிட்டது. தளர்ந்து இருக்கும் கோவை தொழில் மையத்திற்கு நம்பிக்கை ஊட்டியிருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின். திருப்பூர் ஜவுளி தொழில், ஈரோடு சாயப்பட்டறை உள்ளிட்ட பல்வேறு தொழில் நிறுவனங்களின் அத்தனை பிரச்னைகளும் இப்போது முதல்வர் கையில். அதோடு கொரோனாவால் நலிந்த, மூடப்பட்ட சிறு,குறு நிறுவனங்களின்பிரச்னையை தீர்த்து மீண்டும் வளர்ச்சிப்பாதையில் தொழில் துறையை கொண்டு செல்ல அத்தனை நடவடிக்கைகளும் மின்னல் வேகத்தில் எடுக்கப்பட்டு வருகின்றன.

இத்தனைக்கும் சிகரம் வைத்தாற்போல் தமிழகத்தில் முதன்முறையாக போயிங் விமான பாகம் தயாரிப்பு தொழிற்சாலை ஒப்பந்தம் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தாகி இருக்கிறது. இந்த திட்டம் தமிழக வரலாற்றில் ஒரு மைல் கல். அத்தனைக்கும் ஊக்க சக்தியாக இருப்பவர் நம் முதல்வர் மு.க.ஸ்டாலின். கலைஞரால் தொடங்கப்பட்டு அதிமுக ஆட்சியால் புதைக்கப்பட்ட நாங்குநேரி தொழில்நுட்ப பூங்கா போன்று தமிழகம் முழுவதும் நிறுத்தப்பட்ட தொழிற் திட்டங்களும் நிச்சயம் திமுக ஆட்சியில் மீண்டும் உயிர் பெறும். அப்போது அந்தப்பகுதி இளைஞர்களுக்கு அந்த பகுதியிலேயே நல்ல வேலை வாய்ப்பு கிடைப்பதுடன் சென்னையைப் போல் ஒட்டுமொத்த தமிழகமும் முழுமையான பொருளாதார வளர்ச்சி பெற்ற பகுதியாக மாறும் என்பதில் சந்தேகம் இல்லை.

நக்கீரன்

Date : 29-Sep-2021

முதல்வரிடம் ஆசிபெறும் மாணவி கலையரசி
உடன் தந்தை வி.கே.என்.தமிழரசு



தொண்டரை நெகிழவைத்த முதல்வர்!

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், எளிமையான செயல்பாடுகளால் தனக்கான தனித் துவத்தை அவ்வப்போது வெளிப்படுத்தி வருகிறார். தினமும் நடைப் பயிற்சி செல்லும் ஸ்டாலின், தனது பாதுகாப்பினைத் தளர்த்திக் கொண்டு, எதிர்ப்படும் பொதுமக்களோடு இயல்பாகக் கலந்துரையாடுவது வைரலாகிப் பாராட்டப்பட்டது. பொதுமக்களிடம் முதல்வரின் செயல்பாடுகளுக்கும் அணுகுமுறைகளுக்கும் நல்ல வரவேற்பு உள்ளது. அதே நேரத்தில், கட்சித் தொண்டர்களிடம் எதிர்பார்ப்பு உள்ளது. இந்நிலையில், தன்னிடம் உதவி கேட்டுக் கடிதமெழுதிய தனது கட்சியின் முன்னாள் நிர்வாகிக்கு, உடனடியாக அவர் கேட்ட உதவியைச் செய்துகொடுத்து நெகிழ்ச்சியடைய வைத்திருக்கிறார் முதல்வர்.

சிவகங்கை மாவட்டம், கல்லல் ஒன்றியத்தின் முன்னாள் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளரான வி.கே.என்.தமிழரசுவின் குடும்பமே தீவிர தி.மு.க. பற்றுள்ள குடும்பமாகும். இவருக்கு தமிழரசு என்ற பெயரை வைத்தது, 1968-ம் ஆண்டில் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த கலைஞர். அதே போல இவரது மகளுக்கும் கலையரசி என்று பெயர் சூட்டியவர் கலைஞர். கல்லல் ஒன்றியத்தில் தி.மு.க.வின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட குடும்பத்திலிருந்து வந்த கலையரசி, கடந்த +2 தேர்வில் 91% மதிப்பெண்களைப் பெற்று தேர்ச்சியடைந்தார். கல்லூரிப் படிப்புக்குப் பின்னர் ஐ.ஏ.எஸ். ஆகவேண்டுமென்ற லட்சியக் கனவோடு இருக்கும் கலையரசி, சென்னையிலுள்ள பிரபல தனியார் கல்லூரியில் பி.பி.ஏ. படிக்க வேண்டுமென விரும்பப்பட்டார். அதற்காக அங்கே விண்ணப்பித்தவருக்கு, உடனடியாக சீட் கிடைக்கவில்லை.

கலையரசியோடு நேரில் வந்து கல்லூரி முதல்வரைச் சந்திக்க முயற்சி செய்துள்ளார் தமிழரசு. ஆனால் கல்லூரி நிர்வாகம் மறுத்துவிட்டது. நல்ல மதிப்பெண் இருந்தும், விரும்பிய கல்லூரியில் இடம் கிடைக்காததால் மனமுடைந்த கலையரசி, 'முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் உதவி கேட்டுப் பாருங்கள்' என்று கண்ணீர் விட்டுள்ளார். அதையடுத்து, முதல்வருக்கு விரிவான கடிதமெழுதி, தனது மகளுக்கு அக்கல்லூரியில் இடம் வாங்கித் தந்தால், கண்டிப்பாக ஐ.ஏ.எஸ். அதிகாரியாக உருவெடுப்பார் என்றுகூறி, தனது மகளுக்கு உதவும்படி கேட்டிருந்தார்.

அவர் கடிதம் அனுப்பிய மறுநாளே முதல்வரின் இல்லத்திலிருந்து அவரது உதவியாளர், தமிழரசுவைத் தொடர்புகொண்டு பேசியிருக்கிறார். 'உங்களது கடிதம் கிடைத்தது. நீங்கள் விரும்பியபடி உங்கள் மகளுக்கு கல்லூரியில் இடம் கிடைப்பதற்கு முதல்வர் பரிந்துரை செய்துள்ளார். உங்கள் மகளை அக்கல்லூரியில் சேருங்கள்' என்று கூறியதும் அவர்களால் அதனை நம்பவே முடியவில்லை. உடனடியாக முதல்வருக்கு நன்றி தெரிவித்து பதில் கடிதம் எழுதியவர், முதல்வரை நேரில் சந்தித்து நன்றி தெரிவிப்பதற்கும் அனுமதி கேட்டிருந்தார். அதன்படி, முதல்வரை நேரில் சந்தித்து ஆசிபெற்ற தமிழரசு, "என்னைப் போன்ற சாதாரண தொண்டனின் வீட்டுக் குழந்தைக்கும் உயர்ந்த கல்வி கிடைக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு முதல்வர் செய்த இந்த உதவியை எந்நாளும் மறக்க மாட்டோம். என் மகள், படித்து முடித்தபின், ஐ.ஏ.எஸ். பயிற்சியிலும் சேர்ந்து அதிகாரியாக வருவாள்" என்றார் எதிர்கால நம்பிக்கையுடன்!

-ஆதவன்

இன்று எது உனக்கு வலிக்கிறதோ...
நாளை அது உன்னை வலிமையாக்குகிறது

www.nakkheeran.in

Date : 01-Oct-2021

ஆரோக்கியம் காப்போம்

கொரோனா 2வது அலை கோர தாண்டவம் ஆடி வந்த நிலையில், ஆட்சிப் பொறுப்பை ஏற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் தடுப்பு நடவடிக்கைகளில் தீவிரம் காட்டினார். கொரோனா பரவலுக்கேற்ற வகையில் ஊரடங்கில் தளர்வுகளை அறிவித்தது. ஆக்சிஜன் படுக்கைகளுடன் மருத்துவ வசதிகளை அதிகரித்தது. மெகா தடுப்பூசி முகாம்கள் மூலம் பல லட்சம் பேருக்கு தட்டுப்பாடின்றி தடுப்பூசி செலுத்த வைத்தது. 3வது அலை வந்தாலும் சமாளிக்கக்கூடிய வகையில் மருத்துவ வசதியை ஏற்படுத்தியது என முதல்வர் மு.க.ஸ்டாலின் எடுத்து வரும் அதிரடி நடவடிக்கைகள் பாராட்டை பெற்று வருகின்றன.

கொரோனா ஊரடங்கு காலத்தில் முறையாக மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொள்ள முடியாமல் நீரிழிவு, ரத்த அழுத்தம், இதய பாதிப்புடையோர், டயாலிசிஸ் தேவைப்படுவோர் அவதியடைந்தனர். இதை மனதில் கொண்டு அவர்களின் வீடு தேடி சென்று சிகிச்சை, மருந்துகள் அளிக்கும், "மக்களை தேடி மருத்துவம்" திட்டத்தை கடந்த ஆக. 5ம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டம், சாமனப்பள்ளி கிராமத்தில் துவக்கி வைத்தார். 10 ஆண்டு கால அதிமுக ஆட்சியில் ஒரு திட்டம் துவக்கப்படும். அதன்பிறகு அத்திட்டமே அஸ்தமனம் ஆகி விடும் என்ற நிலைதான் தமிழகத்தில் இருந்தது. ஆனால், "மக்களை தேடி மருத்துவம்" திட்டத்துக்கு ஆண்டுதோறும் சுமார் ₹242 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இதன்மூலம் இதுவரை சுமார் 7 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளனர். ஆண்டுதோறும் 30 லட்சம் பேர் பயனடையும் வகையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது.

அடுத்தக்கட்டமாக, வரும் முன் காப்போம் திட்டத்தையும் வாழப்பாடியில் துவக்கி வைத்துள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின். முன்னதாக, கடந்த 2006, டிச. 30ம் தேதி அப்போதைய முதல்வர் கலைஞரால் இத்திட்டம் துவக்கப்பட்டது. அதிமுக ஆட்சியில் கைவிடப்பட்ட இந்த மகத்தான திட்டத்துக்கு, மீண்டும் புத்துயிர் தந்துள்ளது திமுக அரசு. ஆண்டுக்கு சுமார் 1,250 முகாம்கள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. முகாம்களில் பொதுமக்களுக்கு உடல் பரிசோதனை நடத்தப்படும். அதில் பிரச்னைகள் கண்டறியப்பட்டால், உடனடியாக அரசு மருத்துவமனைகளில் அனுமதித்து உரிய மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ், பொது மருத்துவம், இருதய சிகிச்சை, மகப்பேறு மருத்துவம், ஸ்கேன், அறுவை சிகிச்சை, எலும்பு முறிவு, மாற்றுத்திறனாளிகள் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை, கண், காசநோய், புற்றுநோய் மருத்துவம் உள்ளிட்ட 17 வகை சிகிச்சைகள் அளிக்கப்படும். பரிசோதனையில் நீரிழிவு, ரத்த அழுத்தம், புற்றுநோய் உள்ளிட்ட பாதிப்புகளை கொண்டவர்களுக்கு, "மக்களை தேடி மருத்துவம்" திட்டத்தில் மருத்துவ உதவிகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மக்களுக்கான அடிப்படை தேவைகளில் மருத்துவத்தையும் மிக முக்கியமானதாக கருதி, தொடர்ந்து அதற்கான நடவடிக்கைகளில் அக்கறை காட்டும் தாயுள்ளம் கொண்டதாக திமுக அரசு விளங்குகிறது என பொதுமக்கள் பாராட்டு தெரிவிக்கின்றனர். மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை தொடர்ந்து நிறைவேற்றும் திமுக ஆட்சியின் கீழ், ஆரோக்கிய நடை போடட்டும் தமிழகம்.

இந்து தமிழ் திசை
தமிழால் இணைவோம்

Date : 01-Oct-2021

மக்களோடு முதல்வர்: நீளட்டும் திடீர் ஆய்வின் எல்லை

முதல்வர் மு.க.ஸ்டாலின் சேலத்தில் அரசு நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு தருமபுரி செல்லும் வழியில், அதியமான்கோட்டை காவல் நிலையத்தில் மேற்கொண்ட திடீர் ஆய்வு பெருங்கவனத்தைப் பெற்றுள்ளது. முதல்வராகப் பதவியேற்ற சில நாட்களில், சேலத்தில் கரோனா சிறப்பு சிகிச்சை மையத்தைத் திறந்துவைத்துவிட்டு, திருப்பூர் செல்லும் வழியில் மகுடஞ்சாவடியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திலும் இதே போல அவர் திடீர் ஆய்வு மேற்கொண்டது. அப்போது முக்கியப் பேசுபொருளானது. முதல்வரின் திட்டமிட்ட பயணங்களுக்கு நடுவே அவ்வப்போது மேற்கொள்ளப்படும் இத்தகைய எதிர்பாராத ஆய்வுகள் ஒவ்வொரு அரசு அலுவலகத்தையும் எப்போதும் ஆய்வுக்குத் தயார் நிலையில் வைத்திருக்கத் தூண்டும். பொதுமக்கள் அளிக்கும் புகார்களுக்கு அரசு அலுவலகங்களிலிருந்து விரைவில் தீர்வுகள் கிடைக்கவும் இது உதவும். முதல்வரின் இத்தகைய திடீர் ஆய்வு உத்திகளை அவரது அமைச்சரவை சகாக்களும் பின்பற்றலாம்.

கிழக்குக் கடற்கரைச் சாலையில் முதல்வர் அவ்வப்போது மிதிவண்டிப் பயிற்சி செல்லும் காட்சிகளும் அப்போது அவர் பொதுமக்களுடன் உரையாடும் காட்சிகளும் இணையவெளியில் பெருமளவில் பகிரப்பட்டுவருகின்றன. மக்களுடனான எதிர்பாராத இந்தச் சந்திப்புகளும் உரையாடல்களும்கூட அரசு நிர்வாகத்தில் பெரும் மாற்றங்களுக்கு வித்திடக்கூடும். காமராஜர் தனது பயணத்தில் காரை நிறுத்தி, வயல்வெளியில் வேலை பார்த்துக்கொண்டிருந்த சிறுவர்களுடன் பேசியதுதான் மதிய உணவுத் திட்டத்துக்குக் காரணமானது என்பது என்றென்றும் வழிகாட்டும் ஒரு வரலாற்று முன்னுதாரணம். கனிமங்கள் தோண்டப்படும் இடங்கள், கல்குவாரிகள், போக்குவரத்து ஆக்கிரமிப்புகள் போன்ற இடங்களுக்கும் முதல்வர் சென்று திடீர் ஆய்வு நடத்த வேண்டும். அப்போது ஆளுங்கட்சியினர், அதிகாரிகள் தவறிழைத்திருப்பது தெரியவந்தாலும் அவர்கள் மீது தயங்காமல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேர்தல் நேரத்தில் மக்களைத் தேடித் தேடி வாக்குகள் சேகரிக்கிற அரசியல் தலைவர்களை, ஆட்சியில் அமர்ந்த பிறகு பார்க்கவே முடிவதில்லை என்ற பொது அபிப்பிராயத்தை முதல்வரின் எதிர்பாராத மக்கள் சந்திப்புகள் மாற்றக்கூடும். ஒரு அரசியல் கட்சியின் தலைவர் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்த பிறகு, கட்சித் தொண்டர்களும்கூட முன்பு போல அவரை எளிதில் அணுக முடியாது. பெரும் எண்ணிக்கையிலான மக்கள்தொகையைக் கொண்ட இந்தியா போன்ற ஒரு நாட்டில், மத்திய - மாநில அளவில் ஆட்சிப் பொறுப்பு என்பது ஒவ்வொரு நாளையும் பொழுதையும் ஓய்வின்றிச் செலவிட வேண்டிய கடமையையும் உள்ளடக்கியது. அதன் காரணமாக மக்களுக்கும் தலைவர்களுக்கும் இடையில் எழும் தவிர்க்க முடியாத இடைவெளியை அரசு நிகழ்ச்சிகளும் பத்திரிகையாளர் சந்திப்புகளும் ஓரளவு இட்டுநிரப்புகின்றன. என்றபோதும், தலைவர்களின் இயல்பானதும் எதிர்பாராததுமான சந்திப்புகளே மக்களுடனான நெருக்கத்தை வளர்த்தெடுக்க உதவும். ஜனநாயக ஆட்சிமுறை என்பது மக்கள் அதன்மீது கொண்ட நம்பிக்கையையே அடித்தளமாகக் கொண்டது என்ற நோக்கில் பார்த்தால், தலைவர்கள் மக்களுடன் உரையாடுவதற்கான ஒவ்வொரு வாய்ப்பும் இந்த அரசமைப்பை இன்னும் வலுப்படுத்துகிறது.

மாலை மலர்

Date : 03-Oct-2021

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினை ஆழ்வார்பேட்டையில் உள்ள இல்லத்தில் காங்கிரஸ் மூத்த தலைவர் குலாம் நபி ஆசாத் மரியாதை நிமித்தமாக சந்தித்தார். உடன் எம்.பி.க்கள் டி.கே.எஸ்.இளங்கோவன், கனிமொழி உள்ளனர்.

சிறந்த முதல்-அமைச்சராக செயல்பட்டு

மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டில் நல்லாட்சி தருகிறார்

குலாம்நபி ஆசாத் பேட்டி

சென்னை, அக். 3-

சென்னை வந்துள்ள காங்கிரஸ் மூத்த தலைவர் குலாம் நபி ஆசாத் இன்று காலை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினை ஆழ்வார்பேட்டையில் உள்ள வீட்டில் சந்தித்து பேசினார்.

அரசியல் நிலவரம்

அப்போது கனிமொழி எம்.பி., டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உடன் இருந்தனர். தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து மு.க.ஸ்டாலின், குலாம் நபி ஆசாத் பேசினார்கள்.

சந்திப்பு முடிந்ததும் வெளியே வந்த குலாம் நபி ஆசாத் நிருபர்களிடம் கூறியதாவது:-

இது ஒரு மரியாதை நிமித்தமான சந்திப்பு. மு.க.ஸ்டாலின் முதல் -அமைச்சர் ஆனதுக்கு வாழ்த்து தெரிவித்தேன். அவர் முதல்வரானதில் மிக்க மகிழ்ச்சி. சிறந்த முதல்- அமைச்சராக மு.க.ஸ்டாலின் செயல்படுகிறார்.

நல்லாட்சி தருகிறார்

கடுமையான உழைப்பாளி. தமிழ்நாட்டில் அவர் நல்லாட்சி தருகிறார். அவருடைய தந்தை கலைஞரை போல் ஒரு நாளைக்கு 18 மணி நேரத்துக்கு மேல் உழைக்கிறார். எங்களுக்குள் நீண்டகால நட்புறவு தொடர்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

DECCAN Chronicle
Date : 07-Oct-2021

Tata boss meets CM, sparks talk of Ford unit takeover

G. BABU JAYAKUMAR |DC
CHENNAI, OCT. 6

WHY rumours?

Tata Motors has no manufacturing unit in Chennai's expanding industrial belt.

- The state government is under pressure to make efforts to save the jobs of the Ford India employees.
- Ford's closure could impact the business of MSMEs

Tata Sons chairman Natarajan Chandrasekaran calling on Chief Minister M.K. Stalin on Wednesday triggered speculations of the group planning to take over the 350 acre automobile manufacturing facility that Ford India will be leaving behind at Maraimalai Nagar near Chennai after completely stopping production in India by next year.

With no proper information on the nature of talks Mr Chandrasekaran had with the Chief Minister, industries minister Thangam Thennarasu and the key top bureaucrats, tongues started wagging on the possibility of the Tata group eyeing the plant, whose shut down could cause a plethora of direct and indirect job losses, besides loss of business to several mini, small and micro enterprises.

Industry sources pointed out that Tata Motors, of which Mr Chandrasekaran is the head, has increased its product portfolio by rolling out several new models of late and might perhaps be looking for expanding its manufacturing facilities.

The Mumbai-headquartered group has been finding Tamil Nadu an attractive business destination lately as Tata Consultancy Services (TCS) now has its largest facility in Chennai. Besides, Mr Chandrasekaran hails from the state.

Born and brought up in Namakkal district, Mr Chandrasekhkaran studied at the Coimbatore Institute of Technology and the National Institute of Technology in Trichy and then joined TCS, where grew up the ranks to reach the pinnacle of the company and then to the top of the entire group.

As of now, Tata Motors has no manufacturing unit in Chennai's expanding industrial belt that had already earned the sobriquet 'Detroit of South Asia,' though it has factories in many other places like Pune, Dharwad, Jamshedpur, Pantnagar, Lucknow and Sanand.

Since the state government has also been receiving requests from trade unions and others to make efforts to save the jobs of the Ford India employees at Maraimalainagar, there is every possibility of the Chief Minister looking forward to a potential takeover of the facility by an established company.

முரசொலி

Date : 08-Oct-2021

புலம் பெயர் தமிழர் நல வாரியம்!

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு துபாய் தமிழர்கள் பாராட்டு!

"மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது" என நன்றி!

துபாய், அக். 8 – சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட் உள்ளிட்ட வளைகுடா நாடுகள் உட்பட, உலகின் பல்வேறு நாடுகளில் லட்சக்கணக்கான தமிழர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்தியாவிற்கு அந்நிய செலாவணியை ஈட்டித் தருவதில் இவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

இவர்கள் பல ஆண்டுகளாக பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வருகின்றனர். குறிப்பாக, தமிழக தொழிலாளர் ஒருவர் வெளிநாட்டில் உயிரிழந்தால் அவர் உடலை தாயகம் கொண்டு அதற்கான செலவை அரசே ஏற்க வேண்டும்.

சலுகை விலையில் விமானக் கட்டணம்!

தாயகம் திரும்பினால் தொழில் தொடங்க கடன் உதவி வழங்க வேண்டும். போலி ஏஜெண்ட்டுகளை ஒழிக்க கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். வெளிநாடு செல்லும் தொழிலாளர்களுக்கு சலுகை விலையில் விமான கட்டணம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். 'வெளிநாட்டு வாழ் தமிழர் நல வாரியம்' அமைக்கப்பட வேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வருகின்றனர்.

எடப்பாடி எதுவும் செய்ய வில்லை!

இதுபற்றி துபாய் தமிழர்கள் கூறுகையில், ''எங்கள் கோரிக்கை குறித்து 2 ஆண்டுகளுக்கு முன் துபாய் வந்த அன்றைய முதல்வர் எடப்பாடி பழனிசாமியிடம் மனுவாக அளித்தோம். ஆனால், எடப்பாடி பழனிசாமி எதுவும் செய்யவில்லை. மனுவை கிடப்பில் போட்டார்.

இந்நிலையில், வெளிநாட்டு வாழ் தமிழர்களின் நிலையை அறிந்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன் காக்க, 'புலம் பெயர் தமிழர் நலவாரியம்,' தோற்றுவிக்கப்படும். இந்த வாரியத்துக்காக மூலதன செலவினமாக ரூ.20 கோடி ஒதுக்கப்படும்,' என்றும் நேற்று அறிவித்துள்ளார். இதனால், வெளிநாட்டு வாழ் தமிழர்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளோம்,' என்று தெரிவித்துள்ளனர்.

முதல்வருக்கு மனமார்ந்த நன்றி!

துபாய் தமிழ் அமைப்பான ஈமானின் தலைவர் ஹபிபுல்லா கூறுகையில், 'தமிழர்களின் நிலை அறிந்து, உடனடியாக 'வெளிநாடு வாழ் தமிழர் நல வாரியம்' அமைக்கும் அறிவிப்பை வெளியிட்ட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மனமார்ந்த நன்றி.

எங்களின் நீண்டகால கோரிக்கையை பதவியேற்ற சில நாட்களில் அவர் நிறைவேற்றி கொடுத்தது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.' என்று கூறியுள்ளார்.

தினத் தந்தி
DAILY THANTHI

Date : 08-Oct-2021

நடைபயிற்சியின் போது மு.க.ஸ்டாலினிடம் எதிரே வந்த ஒருவர் பாராட்டி பேசிய காட்சி.

தடுப்பூசி பணியில் தீவிரம் காட்டியதால்தான்

கொரோனா அச்சமின்றி வெளியே தைரியமாக நடமாட முடிகிறது

நடைபயிற்சியின்போது மு.க.ஸ்டாலினுக்கு மக்கள் பாராட்டு

சென்னை, அக்.8-

கொரோனா தடுப்பூசி பணியில் அரசு தீவிரம் காட்டியதால்தான் தைரியமாக வெளியே நடமாட முடிகிறது என்று மு.க.ஸ்டாலினை மக்கள் பாராட்டினர்.

மு.க.ஸ்டாலின் நடைபயிற்சி

தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது கடுமையான பணிச்சுமைக்கு மத்தியிலும் உடல்நலனில் தனி கவனம் செலுத்தி வருகிறார். அதிகாலை வேளையில் சைக்கிளிங் செல்வது, நடைபயிற்சி செய்வது என்று உடற்பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

அவர், சென்னை அடையார் தியாசபிகல் பூங்காவில் மக்களோடு மக்களாக தினமும் நடைபயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். அப்போது மு.க.ஸ்டாலின் மக்களுடன் சகஜமாக உரையாடுவதை வழக்கமாக வைத்துள்ளார். அதே போன்று மு.க.ஸ்டாலினுடைய செயல்பாடுகளுக்கு மக்கள் நேரடியாக பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர்.

பாராட்டு

அந்தவகையில் மு.க.ஸ்டாலின் நேற்று நடைபயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது எதிரே வந்த ஒருவர் 'நீங்கள் கொரோனா தடுப்பூசியை 5 கோடி மக்களுக்கு விரைவில் போட்டுள்ளீர்கள். இதனால் தான் தைரியமாக வெளியே நடமாட முடிகிறது. நிர்வாகத்திலும் நல்ல முன்னேற்றத்தை கொண்டு வந்துள்ளீர்கள். இதனை அப்படியே கடைபிடித்து லஞ்சத்தை கட்டுப்படுத்தினால் தமிழ்நாடு இந்தியாவில் மட்டும் அல்ல வெளியேயும் முதல் இடத்துக்கு கொண்டு வருவதை யாராலும் தடுக்க முடியாது. உங்களுடைய உடல்நலத்தை பார்த்துக் கொள்ளுங்கள்' என்று கூறினார்.

அவருடைய பேச்சை மு.க.ஸ்டாலின் பவ்யமாக கேட்டுக்கொண்டு வணங்கியபடி நடைபயிற்சியை தொடர்ந்தார்.

மக்கள் மகிழ்ச்சி

வழியில் நடைபயிற்சியில் ஈடுபட்டிருந்த பெண்மணி ஒருவர், 'உங்களை நினைத்தால் எங்களுக்கு ரொம்ப பெருமையாக இருக்கிறது. இதே மாதிரி எப்பவும் இருங்கள். உங்கள் சேவை நல்லபடியாக இருக்கிறது.' என்று மனதார பாராட்டினார். அதற்கு மு.க.ஸ்டாலின் சிரித்தபடி கட்டாயம் என்று கூறினார்.

இதே போன்று நடைபயிற்சியில் ஈடுபட்டவர்கள் மு.க.ஸ்டாலினிடம், உங்களுடைய ஆட்சி சிறப்பாக இருக்கிறது என்று தங்களது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்தனர். அதற்கு நன்றி என்று சிரித்த முகத்துடன் கூறியபடி நடைபயிற்சியை தொடர்ந்தார்.

மு.க.ஸ்டாலின் முதல்-அமைச்சர் என்ற உயர்ந்த பதவியில் இருந்தாலும் தங்களுடன் நடைபயிற்சியில் ஈடுபட்டு சகஜமாக பேசி வருவதை நினைத்து மக்கள் மனம் மகிழ்கின்றனர்.

दினத்தந்தி

Date : 08-Oct-2021

புலம்பெயர் தமிழர் நல வாரியம்:

மு.க.ஸ்டாலினுக்கு கி.வீரமணி பாராட்டு

சென்னை, அக்.8-

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாட்டில் 150 நாட்களை கடந்து முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஒரு விடியல் ஆட்சி, விரைந்து செயல்படும் விவேகமான ஆட்சியாக நடைபெற்று வருகிறது. வள்ளலார் பிறந்த நாளான அக்டோபர் 5-ந்தேதியை தனிப்பெருங் கருணை நாளாக தமிழக அரசு அறிவித்துள்ளது மிகவும் பாராட்டி வரவேற்கத் தக்கது. புலம் பெயர் தமிழர் நல வாரியம் அறிவித்து அதற்கு ரூ.20 கோடி ஒதுக்கி, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12-ந்தேதி அந்த நாளாக கொண்டாடப்படும் என்பது தேனிசையாக உலகத் தமிழர்களின் காதுகளில் கேட்டு, எல்லையற்ற மகிழ்ச்சியை தமிழ்நாட்டின் ஈத்துவக்கும் இன்பமாக எண்ணி, எண்ணிப் பெருமிதம் கொள்ளுகிறோம்.

முதல்-அமைச்சரை, தமிழ்நாடு அரசை மனமார வாழ்த்துகிறோம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தமிழ் முரசு

Date : 08-Oct-2021

தமிழர்களின் நலனுக்கான தனி வாரியம் என்ற அறிவிப்பு

புலம் பெயர் தமிழர்களின் வாழ்வில் முதல்வர் விளக்கேற்றி வைத்துள்ளார்

கத்தார் பன்னாட்டு திமுக பாராட்டு

சென்னை, அக்.8-

தமிழர்களின் நலனுக்கான தனி வாரியம் என்று அறிவித்து புலம் பெயர் தமிழர்களின் வாழ்வில் முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கேற்றி வைத்துள்ளார் என்று கத்தார் பன்னாட்டு திமுக பாராட்டு தெரிவித்துள்ளது.

கத்தார் பன்னாட்டு திமுக ஒருங்கிணைப்பாளர் நா.சதக்கத்துல்லா, செயலாளர் ப.அப்துல் ரசீத் ஆகியோர் வெளியிட்ட அறிக்கை:

முதல்வர் மு.க.ஸ்டாலின் பதவி ஏற்றது முதலே எண்ணற்ற மக்கள் நலதிட்டங்களை செயல்படுத்தி உலக அளவில் பாராட்டுகளை பெற்று வருகிறார். அந்த வரிசையில் நேற்று முன்தினம் அவர் அறிவித்த புலம் பெயர் தமிழர்களின் நலனுக்கான தனி வாரியம் என்ற அறிவிப்பு தாய் மண்ணையும் நேசித்த உறவுகளையும் பிரிந்து வாழ்வாதாரத்துக்காக புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் வாழ்வில் விளக்கு ஏற்றி வைத்துள்ளது. உலகில் 90க்கும் மேற்பட்ட நாடுகளில் தமிழ்நாட்டிலிருந்து புலம் பெயர்ந்து தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் நலன் பேண ஒரு நல வாரியம் அமைக்க வேண்டுமென்பது அவர்களது நீண்ட கால கோரிக்கையாகும். இந்த நீண்டநாள் கோரிக்கையை ஏற்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், திமுகவின் தேர்தல் அறிக்கையிலும் வெளிநாடுவாழ் தமிழர்களின் நலன் காக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்திருந்தார்.

இதன் தொடர்ச்சியாக தற்போது புலம்பெயர் தமிழர் நல வாரியம் என்ற புதிய வாரியத்தை அமைத்துத் தந்துள்ளார். அரசு மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்களின் பிரதிநிதிகள் 13 பேரைக் கொண்டு இந்த வாரியம் அமைக்கப்படும் எனவும் வாரியத்தின் மூலதனச் செலவினங்களுக்காக ஒரு கோடியே 40 லட்சம் ரூபாயும் நலத்திட்டம் மற்றும் நிர்வாக செலவினங்களுக்காக ஆண்டுதோறும் 3 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்றும் தமிழக அரசு அறிவித்துள்ளது பெரு மகிழ்ச்சியைத் தருகிறது.

முதல்வரின் முத்தான அறிவிப்புகள் புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு செயலூக்கம் தருபவையாகும். எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக புலம் பெயர்ந்த தமிழர்கள் அந்தந்த நாடுகளில் உருவாக்கிய நலச்சங்கங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு கலை இலக்கியம் பண்பாடு பரிமாற்றங்கள் நடத்த நான்கு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பதும் பல்வேறு நாடுகளில் உள்ள தமிழர்களை ஒருங்கிணைக்கும் விதமாகவும் அங்கீகரிக்கும் விதமாகவும் வெளிநாடுகளில் உள்ள தமிழ் சங்கங்களுடன் இணைந்து ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12ம் நாள் புலம்பெயர்ந்த உலகத்தமிழர் நாளாக கொண்டாடும் அறிவிப்பும் எங்கள் நிலையை அறிந்த தாயுள்ளத்துடன் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு ஆகும். மொத்தத்தில் 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து புலம்பெயர்ந்து பணி செய்யும் கோடிக்கணக்கான தமிழர்களின் வாழ்க்கையின் பாதுகாப்பையும் வாழ்வாதாரத்தையும் இந்த அறிவிப்பு உறுதி செய்திருக்கிறது என்றால் அது மிகையல்ல. உலகம் எங்கும் வாழும் தமிழர்களின் வாழ்வில் ஒளியேற்றிய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கத்தார் பன்னாட்டு திமுக சார்பில் நெஞ்சம் நிறைந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

முரசொலி

Date : 09-Oct-2021

உலகளாவிய தமிழன் ஆட்சி!

தமிழ்நாட்டுத் தமிழர்க்கு மட்டுமல்ல, உலகம் முழுவதும் பரவியுள்ள தமிழர்கள் நலனிலும் அக்கறை கொண்ட ஆட்சியாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி அமைந்துள்ளது. உலகளாவிய தமிழன் ஆட்சியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடத்தி வருகிறார்கள்.

புலம் பெயர் தமிழர் நலவாரியம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் நேற்று முன்தினம் அறிவித்தது, உலகம் முழுவதும் உள்ள தமிழர் நெஞ்சங்களில் பால் வார்த்துள்ளது. 'கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது, கடல் கடந்து போன தமிழனின் கண்ணீரால்' என்று எழுதினார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். இதோ இப்போது முதலமைச்சரின் அறிவிப்பால் ஆனந்தக் கண்ணீர் விடுகிறார்கள் புலம் பெயர் தமிழர்கள்! தாய்க்கோழியின் அன்போடு குஞ்சுகளைப் பாதுகாக்கும் நெஞ்சோடு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சொற்களை உச்சரித்தார்கள்.

புலம் பெயர் தமிழனுக்காகத் துடிக்கும் நெஞ்சம் என்பது இன்று நேற்று உருவானது அல்ல.

தி.மு.க.வின் முதல் மாநில மாநாட்டில் பேசும் போது பேரறிஞர் அண்ணா அவர்கள், "இலங்கைவாழ் திராவிட மக்களுக்காக வோட்டு உரிமையைக் கொடுத்து நீதியை நிலைநிறுத்துங்கள். ஜனநாயகத்தைக் கேலி செய்யாதீர். வீண் போக்கு வெற்றியைத் தராது. அதிருப்தி அனல் விரைவில் எழும்பும். அது நல்லதல்ல" என்று 1952 ஆம் ஆண்டே பேசி இருக்கிறார்.

29.1.1956 அன்று சிதம்பரத்தில் நடந்த பொதுக்குழுவில் சிங்கள ஆதிக்கத்துக்கு எதிரான கண்டனத் தீர்மானத்தை முத்தமிழறிஞர் கலைஞரும், அ.பொன்னம்பலனாரும் கொண்டு வந்தார்கள். "இலங்கையில் சிங்கள மொழி ஆதிக்க ஆட்சியாளர்கள் அங்குள்ள தமிழர்களின் உரிமைகளைப் பறிப்பதோடு, சிங்கள மொழி ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்த முயலும் போக்கினை இப்பொதுக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. அங்குள்ள தமிழர்களின் விருப்பங்களும் முயற்சிகளும் வெற்றி பெற இப்பொதுக்குழு மனதார விரும்புகிறது. தாய்த் தமிழகத்திலுள்ள தமிழர்கள் அனைவரும் தங்களாலான எல்லா ஆதரவையும் இலங்கை வாழ் தமிழர்களுக்கு அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறது" என்பதுதான் அந்தத் தீர்மானம்.

இப்படி 1950 முதல் ஈழத் தமிழினத்துக்காகக் குரல் கொடுத்த இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

அதேபோல் மலேசியாவாக இருந்தாலும், சிங்கப்பூராக இருந்தாலும் எங்கு தமிழர்கள் பாதிக்கப்பட்டாலும் அவர்களுக்காக முதல் குரல் கொடுக்கும் இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகம் இருந்துள்ளது. அந்த நாடுகளில் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டு செயல்பட்டும் வருகிறது. அந்த வகையில் பார்த்தால் திராவிட முன்னேற்றக் கழகம் என்பது தமிழர்கள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அங்கெல்லாம் வாழும் தமிழர்களுக்கான இயக்கமாகத் தான் செயல்பட்டு வருகிறது.

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் உளப்பூர்வமான மற்றும் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வெளிநாடு வாழ் தமிழர் நலச்சட்டம் 2011 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் நாள் கழக அரசால் இயற்றப்பட்டது. வெளிநாடு வாழ் தமிழர் நலவாரியம் ஒன்றை உருவாக்கி அவர்களுக்கு நலத்திட்டங்களைச் செயல்படுத்துவோம் என்று அறிவிக்கப்பட்டது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் காரணமாக அமைக்க முடியவில்லை. அடுத்து வந்த ஆட்சியாளர்களும் இதனை அமைக்கவில்லை. இந்த நிலையில், 'வெளிநாடு வாழ் தமிழர் நல வாரியம்' என்ற அமைப்பை மறக்காமல் அமைத்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

- பதினைந்து பேரைக் கொண்டு இந்த வாரியம் அமைக்கப்படும்.
- 5 கோடி ரூபாய் வெளிநாடு வாழ் தமிழர் நலநிதி உருவாக்கப்படும்.
- வெளிநாடு வாழ் தமிழர் குறித்த தரவு தளம் (Data Base) ஏற்படுத்தப்படும்.
- தமிழர்கள் பணியின் போது இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்தில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு, கல்வி உதவித்தொகை, திருமண உதவித் தொகை வழங்கப்படும்.
- தமிழர்கள் புலம் பெயரும் பொழுது பயணப் புத்தாக்கப் பயிற்சி பல்வேறு ஊர்களில் நடத்தப்படும்.
- ஆலோசனை பெற வசதியாக கட்டணமில்லாத் தொலைபேசி வசதி மற்றும் வலைதளம், கைப்பேசி செயலி (Mobile application) அமைத்துத் தரப்படும்.
- சட்ட உதவி மையம் அமைக்கப்படும்.
- தமிழ்நாடு திரும்பியவர்களுக்கு குறு தொழில்கள் செய்திட, அதிகபட்சமாக இரண்டரை இலட்சம் ரூபாய் மானியத்துடன் கூடிய கடன் வசதி செய்து தரப்படும். இதற்கென ஆறு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.
- வெளிநாடு வாழ் தமிழர்களின் முதலீடுகளை அரசு மற்றும் தொழில் நிறுவனங்களில் பாதுகாப்பான முதலீடு செய்ய ஏதுவான சூழல் உருவாக்கப்படும்.
- புலம் பெயர்ந்த தமிழர்கள், 'எனது கிராமம்' திட்டத்தின் மூலம் தங்களது சொந்த ஊருக்கு நன்மைகள் செய்து தரலாம்.
- புலம் பெயர்ந்தோர் பிள்ளைகள் தமிழ் கற்றுக் கொள்ள வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.
- புலம் பெயர்ந்துள்ள தமிழர்கள் வாழும் அந்தந்த நாடுகளில் உருவாக்கியுள்ள நலச்சங்கங்கள் ஒருங்கிணைக்கப்படும்.
- வெளிநாடுகளில் உள்ள தமிழ்ச் சங்கங்களுடன் இணைந்து ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12–ஆம் நாள் உலகத்தமிழர் புலம்பெயர்ந்தோர் தினமாகக் கொண்டாடப்படும்.

– இவை அனைத்துக்குமாக 20 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!

கரும்புத் தோட்டத்திலே தமிழர் படும் இன்னலை பாரதி எழுதினார். "அவர்கள் கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி வருந்துகிறார்கள். மெய் கருகுகிறார்கள். அவர்கள் துன்பம் நீக்க மருந்தில்லையா? வழியில்லையா? தெற்கு மாக்கடலுக்கு நடுவினிலே அங்கோர் கண்ணற்ற தீவினிலே தனிக் காட்டினில் பெண்கள் புழுங்குகின்றனரே!" என்று கண்ணீர் விட்டார் பாரதி!

பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைந்தால் சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு என்று கர்ஜித்தார் பாரதிதாசன்.

கண்ணீர் துடைத்தலையும், கர்ஜித்தலையும் தாண்டி கைதூக்கி அரவணைத்து அன்பு பாராட்டி வளர்த்தெடுக்கும் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் உயர்ந்து நிற்கிறார்.

கடல்கடந்தும் ஆண்டான் சோழன்! காக்கின்றார் இன்றைய முதலமைச்சர்! இது பேரறிஞர் அண்ணாவின் கனவு! தமிழினத்தலைவர் கலைஞரின் கனவு!

முரசொலி

Date : 09-Oct-2021

முதல்வர் மு.க.ஸ்டாலின், சிறந்த அரசியல் ஆளுமை!

லேனா தமிழ்வாணன் பாராட்டு!

'நக்கீரன்' வாரமிரு முறை இதழின் பொறுப்பாசிரியர் கோவி. லெனின் – அண்மையில், 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் – பெயர் அல்ல – செயல்' எனும் தலைப்பில் நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார்.

அந்த நூலை நமக்குப் படிக்கக் கிட்டிய வாய்ப்பினை விளக்கியும் – அந்நூலில் முதல்வர் அவர்களைப் பற்றி நடுநிலையோடு எடுத்துரைக் கப்பட்ட கருத்துகளைப் பாராட்டியும் – மூத்த பத்திரிக்கையாளரும் முன்னணிப் பதிப்பாளருமான – கலைமாமணி லேனா தமிழ்வாணன் அவர்கள், கோவி.லெனினுக்கே ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது–

இரண்டு வாரங்களுக்கு முன்பு என் ஏற்காட்டுப் பயணத்தின்போது என்னுடன் சக பயணியாகப் பயணித்த நம் அருமை நண்பர் வி.பி.மணி அவர்கள் தங்களின் படைப்பில் உருவான 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் – பெயர் அல்ல – செயல்' நூலினை எனக்குத் தந்து அசத்தினார். வாசிப்புப் பழக்கம் அருகிப் போய் வரும் வேளையில் நிறைய நூல்களை வாங்கி, அதற்றுள் ஒன்றை என்னிடம் தந்து "இதை அவசியம் படித்துப் பாருங்கள்" என்றார். எனக்கு அப்படியொரு மகிழ்ச்சி.



கோவி.லெனின்

"மாலைகளையும், சால்வைகளையும், மலர்க் கொத்துகளையும் தந்து வீணாகிப் போவதைத் தவிர்க்க என்றென்றும் அழியாக் கல்வெட்டுகளாகத் திகழும் நூல்களை எனக்குத் தாருங்கள்" எனச் சொல்லிய நம் அரிய முதல்வரைப் பற்றி தாங்கள் நூல் எழுதி விருப்பதைக் கண்டு நெகிழ்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞரின் கரங்களால் முரசொலி நாளிதழில் பாராட்டு வரிகளை பரிசுகளாகப் பெற்ற தாங்கள், 'திருவாரூர்க்காரர் பாராட்டிய திருவாரூரார்' என்பதில் எனக்கு மகிழ்ச்சி.

பெரும்பாலும் தனிமனிதரின் நூல் என்றாலே இந்திரன், சந்திரன், இமயமலை, எவரெஸ்ட் என்பன போன்ற துதிகளே நிறைந்து காணப்படும். அப்படியின்றி தங்கள் மனதில் நன்கு தங்கிவிட்ட ஓர் உயர்ந்த மனிதரை அவரது தந்தைக்காலம் முதற் கொண்டு உள்ளித்து வந்திருக் கிறீர்கள்.

பள்ளிக்காலம், அரசியல் நுழைவு, அரசியலில் சந்தித்த அவமானங்கள், மிசாவில் கிடைத்த ரணங்கள், ஆட்சி மாற்றத்தால் கிடைத்த வலிகள், கலைஞரின் மறைவின்போது பெற்ற அனுபவங்கள், தந்தை வழியைத் தடம் மாறாமல் பின்பற்றி வரும் பண்பு ஆகியவை பற்றி, தொட்ட களத்தை விட்டு அடி பிறழாமல் குறி தவறாத் தோட்டாவாக, சொல்ல வந்ததை ஒளிவு மறைவு இன்றி, அதே நேரம் மிகக் கவனமாக **நடுக்கோடு போட்டுச் சொல்லியுள்ள தங்களின் எழுத்தாற்றலைக் கண்டு வியக்கிறேன்.**

குவி ஆடி கொண்டு குற்றங்களைப் புலன்நோக்கும் உங்கள் கூரிய பார்வைகளைத் தாண்டி, ஓர் அரசியல்வாதி உங்கள் நன்மதிப்பைப் பெற்றுள்ளார் என்றால், உண்மையில் அவர் சிறந்த அரசியல் ஆளுமையாகத்தான் இருக்க முடியும். இந்த வகையில் நம் முதல்வர் மீதான நன்மதிப்பு உங்கள் நூலிற்குப் பிறகு என்னுள் நன்கு உயர்ந்துள்ளது.

நம் முதல்வரின் நேர உணர்வை ஓர் இடத்தில் நன்கு பாராட்டு கிறீர்கள். நான் பெரிதும் விரும்பும் உலகப் பண்பு இது. யதார்த்த மனிதர் என்கிறீர்கள் உண்மை.

நூற் பதிப்பு மிக உன்னதமாக வந்துள்ளது. ஒரு பதிப்பாளனாக நான் தரும் இப்பாராட்டை நன்கு கணக்கில் கொள்வீர்கள் என நம்புகிறேன்.

நல்லதொரு படைப்பைத் தந்த தங்களுக்கும், இதை நான் உடனே படித்து என் கருத்துகளை தங்களுடன் பகிர்ந்து கொள்ளக் காரணமாக இருந்த அருமை நண்பர் வி.பி.மணி அவர்களுக்கும் என் நன்றி.

அன்பன்,
லேனா தமிழ்வாணன்.

முரசொலி

Date : 09-Oct-2021

புலம்பெயர்ந்த தமிழர் நலவாரியம் அறிவிப்பு!

வையகத் தமிழர்கள் சார்பில் முதல்வரை வாழ்த்திப் போற்றுவோம்!

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அறிக்கை!

சென்னை, அக்.9-

முதல்வரின் தமிழர் நலன் காக்க அமைக்கும் 'புலம்பெயர்ந்த தமிழர் வாரியம்' உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்கும் கலங்கரை விளக்கம் வையகத் தமிழர்கள் சார்பாக முதல்வரை வாழ்த்திப் போற்றுவோம் என பன்னாட்டுத் தமிழுறவுமன்ற உலக அமைப்பாளர் பெருங்கவிக்கோ அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

தமிழக முதல்வர் ஆட்சிப் பொறுப்பேற்ற குறுகிய காலத்திற்குள்; அளப்பரிய தமிழ்வளர்ச்சித் திட்டங்களை அறிவித்துச் செயலாக்கம் கண்டு வருகிறார். எந்த விதப் போற்றுதல், ஏற்றுதல்களுக்கெல்லாம் அப்பால், செய்ய வேண்டிய தமிழ், தமிழர் நலம் சார்ந்த செயற்பாடுகளை முதல்வர் அவர்கள் உன்னதமாகச் செய்து நடைமுறைப்படுத்தி வருவது பெரிதும் போற்றத்தக்கதாகும். ஆலயங்களில் தமிழ் வழிபாடு, பொறியியல் நூல்கள் தமிழில் மொழிபெயர்ப்பு,

ஆலயங்களில் தேவாரம், திருவாசகம் ஓதுதல், தமிழ்ச்சிறந்த நூல்களை அரசே! வெளியிடல், பிற மொழிகளில் மொழிபெயர்த்தல், தமிழ்வழிப் படித்தவர்களுக்கு அரசு வேலை தமிழ்ப்படித்துத் தேர்ந்தால் மட்டுமே அரசு வேலை,

மருணவர்களுக்கு நூலகம், தமிழ் எழுத்தாளர்களைப் போற்றுதல் போன்ற தமிழ் வளர்ச்சிக்குச் சிறப்புச் செய்யும். தமிழாக்கங்களை ஆர்ப்பாட்டம் இன்றி அமைதியாக ஆளுமையாக்கிக் கொண்டு வருகிறார் நம் முதல்வர். இந்த வரிசையில் இப்போது மகத்தான ஒரு அறிவிப்பாக வெளிநாடுகளில் வாழும், தமிழர்களை ஒருங்கிணைக்கும் வகையில் 'புலம்பெயர் தமிழர் வாரியம்' என்ற அமைப்பை உருவாக்கம் கண்டுள்ளார்.

இன்று உலகில் 180 நாடுகளுக்கு மேலாகத் தமிழர்கள் வாழ்கிறார்கள். பலப்பணி வாய்ப்புகளின் தொடர்பாகத் தமிழர்கள் பன்னாடுகளில் வாழ்கிறார்கள். நம் முதல்வர் கூறியிருப்பதைப் போல், அவர்கள் தாயகம் தமிழ்நாடு தான். எனவே தமிழக அரசு உலகளாவிய தமிழர்களை தொழில்நலம், இலக்கிய வளம், சமூக நீதி வளர்ச்சி, அயலகம் சென்றார் துயருக்கு உதவுதல், தமிழ்க் கல்வியினை மேம்படுத்தல், இறைவழிபாடுகள் போன்ற அனைத்திற்கும் உதவும் வண்ணம் இந்தப் புலம் பெயர்ந்த தமிழர் வாரியம், அமைத்துள்ளமை முதல்வரின் எதிர்காலக் கண்ணோட்டத்தின் எடுத்துக்காட்டாக அமைகிறது.

இந்த வாரியம் புலம்பெயர் தமிழர்களுக்குக் கலங்கரை விளக்கமாகத் திகழும் என்பது உறுதி. குறிப்பாக, ஈழத்தமிழர்கள் உலகமெங்கும் புலம்பெயர்ந்த நிலையில் தமிழகக் கல்வி, கலைகளை மேம்படுத்தி வருகிறார்கள்.

தமிழகத் தமிழர்கள் அயலகத்தில் தமிழ் அமைப்புகளை நிறுவி கல்விப்பணி, கலைப்பணி, இறைப்பணி புரிந்து வருகிறார்கள். அனைவரும் ஒருகுடைக்கீழ்; 'புலம்பெயர் தமிழர் வாரியத்தால்' இணைத்து, ஒரு புதிய எழுச்சியை, மறுமலர்ச்சியை முதல்வரின் புத்துணர்ச்சித் திட்டம் உருவாக்கும். செயற்கரிய வாரியம் அமைத்த முதல்வரைப் போற்றுவோம். வணங்குவோம். வெல்க தமிழ்! தமிழர்!!

இவ்வாறு பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் முரசு

Date : 09-Oct-2021

கொரோனாவை கட்டுப்படுத்திய

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு கோயம்பேடு வியாபாரிகள் நன்றி

அண்ணாநகர், அக். 9- கோயம்பேடு மார்க்கெட்டில் கொரோனாவை கட்டுப்படுத்தியதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வியாபாரிகள் நன்றி தெரிவித்துள்ளனர்.

கொரோனா பாதிப்பு காரணமாக கடந்த 2 வருடங்களாக கோயம்பேடு மார்க்கெட் மூடப்பட்டது. மு.க.ஸ்டாலின் முதல்வராக பொறுப்பேற்றபிறகு கோயம்பேடு மார்க்கெட் முழுமையாக திறக்கப்பட்டு கொரோனா தடுப்புப் பணிகள் முடுக்கி விடப்பட்டன. சிறப்பு முகாம்கள் மூலம் இதுவரை 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வியாபாரிகள், கூலித் தொழிலாளர்களுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளது. கோயம்பேடு மார்க்கெட் வளாகத்தில் வியாபாரிகள், பொதுமக்கள் மற்றும் கூலித் தொழிலாளர்கள் என அனைத்து தரப்பினரும் முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளியை கடைப்பிடித்து வருகிறார்களா என்று மார்க்கெட் நிர்வாக அலுவலர் சாந்தி தலைமையில் அதிகாரிகள் தினமும் தீவிரமாக ஆய்வு செய்து வருகின்றனர்.

''முதல்வர் மு.க.ஸ்டாலினின் தீவிர முயற்சியால் தான் கோயம்பேடு மார்க்கெட்டில் கொரோனா தொற்று பரவல் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, முதல்வருக்கு எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறோம்'' என்று அனைத்து வியாபாரிகள் கூட்டமைப்பு சங்க நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

தினகரன்

Date : 10-Oct-2021

நதிகளை இணைப்போம்

இந்தியாவின் பூகோள அமைப்பு காரணமாக, தென் கோடி மாநிலங்களில் எப்போதுமே தண்ணீர் பற்றாக்குறைதான். தென்னகம் வறட்சி, பஞ்சத்தால் வாட, வடக்கில் மட்டும் எப்போதுமே செழிப்புதான். இதற்கு காரணம் பிரம்மபுத்ரா, கங்கை உள்ளிட்ட ஜீவ நதிகள் வடக்கே ஏராளம்.

இந்த பிரச்னைக்கு தீர்வு இந்திய நதிகள் இணைப்பு, அதிலும் குறிப்பாக கங்கை-காவிரி இணைப்புதான் என்பதை, 19-ம் நூற்றாண்டிலேயே உறுதிபட தெரிவித்தவர், ஆங்கிலேயர் ஆட்சியில் தலைமை பொறியாளராக இருந்த சர்.ஆர்தர் காட்டன். கிணற்றில் போட்ட கல்லாக இருந்த இந்த திட்டத்தை 1972-ல் மத்திய நீர் பாசனத் துறை அமைச்சராக இருந்த டாக்டர் கே.எல்.ராவ் செயல்படுத்த ஆர்வம் காட்டினார். ஆனால், நடைமுறையில் இது சாத்தியமா என்ற சந்தேகம் காரணமாக, திட்டம் கிடப்பில் போடப்பட்டது.

எனவே, இந்திய நதிகள் இணைப்பில் நடைமுறை சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து விரைந்து செயல்படுத்த வேண்டும் என 2002ல் உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது. அப்போது, அதன் திட்டமதிப்பு வெறும் ₹5.60 லட்சம் கோடி தேவையாக இருந்தது. ஆனால், 2012ல் மறு மதிப்பீடு செய்தபோது திட்ட செலவு ₹11 லட்சம் கோடியாக அதிகரித்தது.

இதன் ஒரு கட்டம்தான் கோதாவரி- காவிரி இணைப்பு. இந்த திட்டம் தமிழகத்தை பொறுத்த வரை வரப்பிரசாதமாகும். காவிரி டெல்டா பாசனத்துக்கு கர்நாடகா, காவிரியில் திறந்து விடும் தண்ணீரை மட்டுமே நம்பி இருக்காமல் விவசாயம் செய்ய முடியும். இதனால், தமிழகம் அதிக ஆர்வம் காட்டி வருகிறது. ஆனால், ஒன்றிய அரசு, மாநிலங்களுக்கு இடையிலான கருத்தொற்றுமை ஏற்படுத்துதல், திட்டப்பணிகளை துவங்குதல் என்று எந்த நடவடிக்கையையும் உருப்படியாக எடுக்கவில்லை. தேர்தல் நேரத்தில் கோதாவரி-காவிரி பற்றி பேசும் பாஜ, அதன் பின்னர் வாய்மூடி மவுனியாக மாறிவிடுவது வாடிக்கை.

தமிழகத்தில் முதல்வராக பதவி ஏற்றது முதல் மு.க.ஸ்டாலின் மக்கள் நல திட்டங்களை அமல்படுத்துவதில் ஆர்வம் காட்டி வருகிறார். கோதாவரி- காவிரி இணைப்பு திட்டத்தை கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவாரா என்ன. பிரதமர் மோடியை சந்தித்தபோது முதல்வர் வைத்த கோரிக்கைகளுள் ஒன்று, கோதாவரி- காவிரி இணைப்பு திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும் என்பதாகும். இந்த நிலையில், தமிழக அரசின் சார்பில், ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா அரசுகளுக்கு கடிதம் ஒன்று அண்மையில் அனுப்பப்பட்டுள்ளது. அதில், நதிகள் இணைப்பு திட்டத்துக்கு ஒத்துழைப்பு தாருங்கள் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இது ஒன்றிய அரசு செய்ய வேண்டிய ஒன்று. அவர்கள் அதை செய்யாததால், முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு கையில் எடுத்துள்ளது. இந்த விவகாரத்தை இத்தோடு விட்டுவிடாமல், தொடர் நடவடிக்கைகளை எடுத்து, விடா முயற்சியின் மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின், நதிகள் இணைப்பு திட்டத்தையும் சாத்தியமாக்குவார் என்ற நம்பிக்கை மக்களுக்கு உள்ளது.

மாலைமலர்

Date : 10-Oct-2021

புலம் பெயர் தமிழர் நலவாரியம்:

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு டாக்டர் பஜிலா ஆசாத் நன்றி

சென்னை, அக். 10–

வெளிநாடு வாழ் தமிழர் களின் நலன் காக்க புலம் பெயர் தமிழர் நல வாரியம் அமைக்கப்படும் என்று முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

தமிழக அரசின் இந்த நடவடிக்கைக்கு வளைகுடா நாட்டில் வசித்து வரும் தமிழரான சர்வதேச வாழ்வியல் ஆலோசகர் டாக்டர் ஃபஜிலா ஆசாத் நன்றி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சொந்த நாட்டிலிருந்து எந்த நாட்டிற்கு சென்று வசித்தாலும், எத்தனை வசதி வாய்ப்புகள் பணம் பதவி அந்தஸ்து இருந்தாலும், தாய் வீட்டு ஏக்கமாய் தாய் நாட்டு ஏக்கம் எல்லோருக்குள்ளும் இருக்கும். அதிலும் இந்த கொரானா காலகட்டத்தில், நினைத்த நேரத்தில் தாயகம் கிளம்பி வேண்டியவர்களை சந்திக்க முடியாத, வேண்டிய உதவிகளை எளிதில் பெற முடியாத சூழல் உள்ளது.

இந்தநிலையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், புலம்பெயர் தமிழர் நல வாரியம் அமைத்திருப் பதும், சட்ட உதவி மையம் அமைப் பதும் மிகவும் ஆறுதலானது பெரும் பாராட்டுக் குரியது.

டாக்டர் ஃபஜிலா ஆசாத்

உலகமெங்கும் பரவி இருக்கும் பல லட்சம் தமிழர்களின் மனம் அறிந்து சிறப்பான வாரியத்தையும் அதற்கான மானியத்தையும், சட்ட உதவி மையம் அமைப் பதையும் அறிவித்திருக்கும் முதல்வருக்கு, உலகலாவிய பல லட்சம் தமிழர்கள் சார்பிலும், வளைகுடா நாட்டில் வாழும் பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்களின் சார்பிலும் நன்றியும் வாழ்த்துகளும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

முரசொலி

Date : 11-Oct-2021

"புலம் பெயர் தமிழர் நல வாரியம்" –

இந்தியாவின் பிற மாநிலங்கள் வாழ் தமிழர் நலம் பேரமைப்பு முதல்வருக்கு நன்றி!

அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சு.குமணராசன் அறிக்கை!

தானே, அக். 11 - புலம் பெயர் தமிழர் நல வாரியம் அமைத்த முதல்வருக்கு - இந்தியாவின் பிற மாநிலங்கள் வாழ் தமிழர் நலப் பேரமைப்பு சார்பில், அதன் ஒருங்கிணைப்பாளர் சு.குமணராசன் நன்றி தெரிவித்துள்ளார்.

உலகின் தொன்மை இனமாக விளங்கும் தமிழினம் உலகளாவிய அளவில் சற்றொப்ப 155 நாடுகளிலும், இந்தியாவின் பிற மாநிலங்களிலும் பல்லாண்டு காலமாக வாழ்ந்து வருகின்றனர். தமிழர் உலகின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் அவர்களுக்குத் தாய் வீடாக விளங்குவது இந்தியாவின் தமிழ் நாடு மாநிலம் ஆகும்.

தமிழின உணர்வுகளை மதிக்கும் ஒரு முதலமைச்சராக மு.க. ஸ்டாலின் அவர்கள் பதவியேற்ற நாள் முதல் தமிழ் நாட்டு மக்களுக்கு சமூகம், கல்வி மற்றும் பொருளாதாரம் சார்ந்த பல்வேறு திட்டங்களை அறிவித்து வருவதின் தொடர்ச்சியாக 6-10-2021 அன்று புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றும் விதமாக "புலம் பெயர் தமிழர் நலம் வாரியம்" அமைக்கப் பெற்று அதற்குரிய நிதி ஒதுக்கீடுகளையும் வழங்கியிருப்பது பெரிதும் வரவேற்கக் கூடிய ஒன்றாகும்.

வெளிநாடுகளிலும், வெளிமாநிலங்களிலும் உள்ள தமிழ்ச் சங்கங்கள், தமிழ் அமைப்புகள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் என பலரும் விடுத்தக் கோரிக்கைகள் அனைத்தையும் மனதில் கொண்டு இந்த இனிப்பான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. என எண்ணுகின்றோம்.

எனவே தமிழர் நலங் காக்கும் தமிழ் நாடு அரசு, அதன் முதலமைச்சராகப் பொறுப்பேற்று இதை மக்கள் நலம் போற்றும் ஒரு முழு சனநாயக அரசாக மாற்றியிருக்கும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களைப் பெரிதும் போற்றி வணங்குவதுடன் அவர்களுக்கு இந்தியாவின் பிற மாநிலங்கள் வாழ் தமிழர் நலப் பேரமைப் பின் சார்பாக எங்கள் நெஞ்சார்ந்த நன்றியினை அனைத்து மாநில தமிழ் மக்களின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

Date : 11-Oct-2021

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்து

வளைகுடா மலேசியா தளபதி பேரவை சார்பில் கருத்தரங்கம்!

புலம்பெயர் தமிழர் நலம் வாரியம் அமைத்ததற்கு பாராட்டு!

கோலாலம்பூர், அக். 11- வளைகுடா மலேசியா தளபதி பேரவை கூட்டமைப்பு நடத்திய காணொலிக் கருத்தரங்கம் ராமநாதபுரம் காபைராம்கான் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் சோளிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நல்லாட்சி மக்களே சாட்சி என்கின்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் அமைப்பாளர் எஸ்.கே.எஸ். சிக்கந்தர் பாபு, அவைத் தலைவர் முகம்மது ஜெய்லானி, செயலாளர் ஹச்.எம். ஜெயினுதீன், ஒருங்கிணைப்பாளர் உமர் சா, பொருளாளர் சிவானந்தம், முகவை சக்திவேல், எம்.நிஜாம்கான், புருஷோத்தமன், ஆப்டிகல்ஸ் உரிமையாளர் ஆவுடை யூனுஸ் பரக்கத், அரிசி கடை மேனேஜர் ஆசிப் அலி சேட், வரகனேரி அசாருதீன், சதாம் உசேன், ஆரிப் கான் பாருக், அன்சாரி, மலேசியா நாகேந்திரன், மலேசியா காதர், அமல்ராஜ், ராஜா முஹம்மது, அருள் முருகன், செயலாளர் குண்டு பிலால், ஏ.எம். மீரான், பொருளாளர் மருதூம் ஜஹான், சவுதி சாதிக்பாட்சா, சத்திய மூர்த்தி, பாலா, குரு கிருஷ்ணா, பாண்டியன், சலாஹுதீன், இஸ்மாயில்,

குவைத் அவைத் தலைவர் மஹாதீர் முஹம்மத், கஜினி முகமது, பொதக்குடி அமீரக தாரிக் அப்பா நாசர், ஓமன் அக்கம் தீன், திருவைகாமு சித்திக், இப்ராஹீம் அலி சேட், அசன் முகமது, அபுதாபி மூர்த்தி, கந்தர், ரபிக் முகமத், புருணை சலீம், அல்லா பிச்சை, வெற்றிவேல், முருகன், ஐஸ் அகமதுல்லா, இம்ரான் கான், மகளிரணி ருக்கு மணி, தஞ்சை மோகனா, மகாலட்சுமி, அகிலா, மேடம். அரிஹியா பேகம், பர்வீன் பானு, தமிழ்ச் செல்வி, ஏஞ்சல், பெருந் தலைவர் சுமதி கண்ணதாசன் அனைவரும் வெளி நாடு வாழ் தமிழர்களின் நலன் காக்க புலம்பெயர் தமிழர் நலம் வாரியம் அமைத்த முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு வளைகுடா மலேசியா தளபதி பேரவை கூட்டமைப்பு சார்பாக நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

முடிவில் நியமத் அப்துல் ரஹீம் நன்றி உரையாற்றினார்.

விஜயபிரபாகரன் பாராட்டு

சிறப்பாக ஆட்சி செய்கிறார் மு.க.ஸ்டாலின்

திருவில்லிபுத்தூர், அக். 11: விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூரில் தேமுதிக சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. இதில் பங்கேற்ற தேமுதிக தலைவர் விஜயகாந்தின் மகன் விஜயபிரபாகரன் அளித்த பேட்டி: "எங்கள் வாக்கு சதவீதம் அப்படியே உள்ளது. திமுகவுடன் கூட்டணி குறித்து காலம் பதில் சொல்லும். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நல்ல திட்டங்களைக் கொண்டு வந்து சிறப்பாக ஆட்சி செய்கிறார். தேமுதிக தலைவர் விஜயகாந்த் உடல்நிலை நலமாக உள்ளது. பழைய நிலைக்கு திரும்ப இன்னும் சிறிது நாளாகும். எங்களால் முடிந்த முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். மக்களை சந்திக்க வேண்டிய நேரத்தில் விஜயகாந்த் சந்திப்பார்" என்றார்.

Date : 11-Oct-2021

வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலாருக்கு புகழ்!

இன்றைக்கும் பல பள்ளிக்கூடங்களில் காலையிலும், மாலையிலும் நடக்கும் பிரார்த்தனை கூட்டங்களில் எல்லா மதங்களுக்கும் பொதுவான ஒரு பாடல் பாடப்படுகிறது. "ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவுவேண்டும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமைவேண்டும்" என்ற பாடல்தான் அது. ஆனால், இதை பாடியது யார்? என்று பெரும்பாலானவர்களுக்கு தெரியாது. 5-10-1823-ம் ஆண்டு கடலூர் மாவட்டம் சிதம்பரத்திலிருந்து 16 கி.மீ. தூரத்திலுள்ள மருதூர் என்ற சிற்றூரில் பிறந்த அருட்பிரகாச வள்ளலார் என்று அழைக்கப்பட்ட ராமலிங்க அடிகளார் பாடிய பாடல்தான். இந்தப்பாடலை அவர் சென்னை கந்தக்கோட்டத்தில் 9 வயதில் பாடியதாக வரலாறு இருக்கிறது.

"வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன். பசியால் இளைத்தே வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன். நீடிய பிணியால்

வருந்துகின் றோர்என் நேர்உறக் கண்டுளம் துடித்தேன். ஈடில் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சு இளைத்தவர் தமைக் கண்டே இளைத்தேன்" என்று பசியால் வாடுபவர்கள் கண்டு மனம் பதைபதைத்து வள்ளலார் பாடிய 6 ஆயிரம் பாடல்களின் திரட்டான திருவருட்பாவில் மனமுருக பாடியிருப்பது அவரது அருட்பெருங்கருணை உள்ளத்தை பறைசாற்றுகிறது.

உடலை வருத்தும் பசிப்பிணி போக்க வாடிய வள்ளலார், "சாதி, மத பேதங்களை போக்க சாதியும், மதமும், சமயமும் தவிர்த்தேன். சாத்திர குப்பையும் தவிர்த்தேன்" என்று பாடி சாதி, மத, பேதமற்ற சன்மார்க்கர்களாய் மக்கள் வாழ ஆசைப்பட்டார். அதற்காக கடலூரை அடுத்த வடலூரில் பசியால் வாடும் மக்களுக்கு உணவளிக்க 1867-ம் ஆண்டிலேயே சத்ய தர்ம சாலை கட்டி அவர் ஏற்றிவைத்த அடுப்பு இன்றளவும் எரிந்துகொண்டே இருக்கிறது. 1872-ம் ஆண்டு சத்யஞான சபையை கட்டினார். அதற்கு முன்பாக சமரச சன்மார்க்க சங்கத்தை தோற்றுவித்தார். "கடவுள் ஒருவரே. அவரை ஜோதி வடிவில் உண்மையான அன்பால் வழிபடவேண்டும்" என்பதுதான் வள்ளலாரின் கொள்கை. அதற்காகத்தான் வடலூரில் அவர் ஏற்றிவைத்த அருட்பெருஞ் ஜோதி தீபம் அணையா விளக்காக இன்றும் எரிந்து கொண்டிருக்கிறது. ஒரு பக்கம் பசி தீர்க்கும் தலையாயப்பணி, மற்றொரு பக்கம் சாதி, மதம் கடந்த ஆன்மிகப்பணி மட்டுமல்லாமல், சாதி ஒழிப்பு, பெண்கள் விடுதலை போன்ற புரட்சிகரமான கொள்கைகளை கொண்ட அவர், ஒரு சமூக சீர்திருத்தவாதியாக தந்தை பெரியார் உள்பட பலரால் பாராட்டப்பட்டவர்.

இவ்வளவு சீரிய புகழைக்கொண்ட வள்ளலாருக்கு தமிழ்நாட்டில் சரியான கவுரவம் அளிக்கப்படவில்லையே என்றிருந்த பெரிய மனக்குறையை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் போக்கிவிட்டார். இந்த ஆண்டு இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட அறிவிப்பில், திருவருட்பிரகாச வள்ளலாரின் புகழைப் போற்றும் வகையில், "வள்ளலார் சர்வதேச மையம்" வடலூரில் அமைக்கப்படும் என்று கூறப்பட்டிருந்தது. இப்போது முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வள்ளலாரின் பிறந்தநாளான அக்டோபர் 5-ந்தேதி இனி தனிப்பெருங்கருணை நாளாக கடைப்பிடிக்கப்படும். இந்த நாளில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து இறைச்சி கடைகளும் மூடப்படும் என்று அறிவித்திருக்கிறார்.

பசிப்பிணி நீக்கும் மருத்துவராக வாழ்ந்து காட்டிய வள்ளலாரின் "அருட்பெருஞ் ஜோதி!! தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி" என்ற ஆன்மநேய ஒருமைப்பாட்டு ஒளி இன்றும் அறியாமையை நீக்கி அன்பை ஊட்டிவருகிறது. இப்போது வடலூரில் 72 ஏக்கர் நிலப்பரப்பில் "வள்ளலார் சர்வதேச மையம்" அமைப்பதற்கான ஆரம்பக்கட்ட பணிகளை தமிழக அரசு தொடங்கிவிட்டது. அடுத்த ஆண்டு வள்ளலாரின் 200-வது ஆண்டு தொடங்கப்போகிறது. அவருக்கு பெருமை சேர்க்கும்விதமாக புதியதோர் யுகம் படைக்கும் முயற்சியாக இன்னும் பல திட்டங்களை அரசு நிறைவேற்றவேண்டும். அவர் எழுதிய திருவருட்பா, மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் ஆகியவற்றுள் கூறப்பட்டுள்ள முக்கிய கருத்துகள் பள்ளிக்கூடம், கல்லூரிகளில் பாடமாக கொண்டுவரவேண்டும். இன்றைய சமுதாயத்துக்கு வள்ளலார் பற்றி முழுமையாக தெரியவேண்டும்.

தமிழ் முரசு

Date : 11-Oct-2021

புலம்பெயர் தமிழர்நல வாரியம் அமைப்பு

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு அபுதாபி தமிழர்கள் பாராட்டு

சென்னை, அக். 11- வெளிநாடு தமிழர்களின் நலன் காக்க புலம்பெயர் தமிழர் நல வாரியம் அமைத்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு அபுதாபிவாழ் தமிழர்கள் பாராட்டு தெரிவித்தனர்.

ஐக்கிய அரபு அமீரக தலைநகர் அபுதாபியில் ஏராளமான தமிழர்கள் உள்ளனர். அங்கு சமூகநல பணிகள் மேற்கொள்ள ஏதுவாக, இவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து அபுதாபி தமிழ் சங்கமாக உருவாக்கும் பணிகளில் அங்கு வாழும் தமிழ் பிரமுகர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் நலனுக்காக புலம்பெயர் தமிழர் நல வாரியம் அமைக்க சமீபத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார். இந்த நடவடிக்கை, வெளிநாடு வாழ் தமிழர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இதுகுறித்து அபுதாபி வாழ் தமிழர்கள் கூறுகையில், எங்களின் நீண்ட கால கோரிக்கையான வெளிநாடுவாழ் தமிழர் நல வாரியத்தை செயல்படுத்த முன்வந்திருக்கும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு அபுதாபிவாழ் தமிழர்களின் நெஞ்சார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம் எனத் தெரிவித்தனர்.

Date : 11-Oct-2021

MMC students thank CM for fiat to Metro

SPECIAL CORRESPONDENT
CHENNAI

Madras Medical College Students Council has thanked Chief Minister M.K. Stalin for issuing orders to the Chennai Metro Rail Ltd. to find an alternative passage for students to access their college on the erstwhile Central Jail premises.

For over two years, the students had been appealing to the State government to provide an alternative as they had access to their college only through Pallavan Salai. Students had to take a circuitous route to reach the college. The students had petitioned the Chief Minister at a function on September 26 in the college. The students said Mr. Stalin inspected the CMRL site.

THE TIMES OF INDIA

Date : 11-Oct-2021

INCLUSIVE GROWTH & TRILLION-$ GOAL

Chief minister M K Stalin said TN has right ecosystem for all sectors. Sridhar Vembu, founder & CEO, Zoho Corporation; Ranganathan, MD, Roca Parryware; S Narayan, member, TN CM's Economic Advisory Council and former Union finance secretary; and N Muruganandam, principal secretary, industries department, TN government, were present

Chief minister M K Stalin on Sunday launched 'Merchants of Madras', a special page of The Times of India that will offer readers intimate stories of TN businesses every Monday.

MoM

INTIMATE STORIES OF TAMIL NADU BUSINESSES

முரசொலி

Date : 12-Oct-2021

தொழில் துறையில் ஒரு புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தி

தொழிற்சாலைகளுக்கு கால அளவினை நீட்டித்து தொகுப்பாக வழங்க அரசாணை வெளியீடு!

முதல்வருக்கு டாக்டர் ஆ.சக்திவேல் மனமார்ந்த நன்றி!

திருப்பூர், அக்.12-

தொழில் துறையில் ஒரு புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, தொழிற்சாலைகளுக்கு கால அளவினை நீட்டித்து தொகுப்பாக வழங்க அரசாணை வெளியிட்ட தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு ஆயத்த ஆடை ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (AEPC) மற்றும் இந்திய ஏற்றுமதி நிறுவனங்களின் கூட்டமைப்பு (FIEO) தலைவர் டாக்டர். ஆ.சக்திவேல் அதை வரவேற்று முதல்வர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றி கூறியுள்ளார்.

தொழிற்சாலைகள் தொடர்ந்து இயக்குவதற்கு பெற வேண்டிய மாசுக்கட்டுப்பாடு உரிமத்தை ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிப்பதற்கு பதிலாக தகுதியான தொழிற்சாலைகளுக்கு கால அளவினை நீட்டித்து தொகுப்பாக வழங்கப்படும் என்று அரசாணை வெளியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு ஆயத்த ஆடை ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (AEPC) மற்றும் இந்திய ஏற்றுமதி நிறுவனங்களின் கூட்டமைப்பு (FIEO) தலைவர் டாக்டர். ஆ.சக்திவேல் அதை வரவேற்று முதல்வர் அவர்களுக்கு நன்றி பாராட்டி கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், எங்களது நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, முதல்வர் அவர்கள் கடந்த சட்டசபை கூட்டத்தொடரின் போது அறிவிக்கப்பட்ட தொழிற்சாலைகள் இயக்குவதற்கு பெற வேண்டிய மாசுக் கட்டுப்பாடு உரிமத்தை ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிப்பதற்கு பதிலாக தகுதியான தொழிற்சாலைகளுக்கு கால அளவினை தொகுப்பாக நீட்டித்து வழங்கப்படும் என்று அறிவித்து அதற்குரிய ஆணையை விரைவாக பிறப்பித்த முதல்வர் அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த அறிவிப்பானது உள்ளபடியே தமிழகத்தில் எளிதாக தொழில் செய்யலாம் என்ற நமது தமிழக முதல்வரின் அழைப்பிற்கு வலுசேர்க்கும் விதமாக அமைந்துள்ளது. இந்த அறிவிப்பு தொழில் துறையில் மேலும் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்க உதவும். இது மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னோடியாக விளங்கும். இதனால் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி அதிகரிக்க பேருதவியாக இருக்கும் என்பது திண்ணம்.

இந்த அரசாணையின் மூலம் இனி வரும் நாட்களில் தொழில் துறையினர் தங்களின் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்ட தகுதிக்கு தக்கவாறு (சிகப்பு, ஆரஞ்சு, பச்சை) உரிமத்தை ஒவ்வொரு ஆண்டும் வழங்குவதற்கு பதிலாக தொகுப்பாக அதாவது 5, 10, 14 வருடம் என்று கால அளவினை நீட்டித்து வழங்கப்படும் என்ற அறிவிப்பானது உள்ளபடியே எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

தொழில் துறையில் ஒரு புதிய மறு மலர்ச்சியை ஏற்படுத்தி, அத்துறையை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்லும் முதல்வரின் இந்த அறிவிப்பானது தொழில் துறையினருக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும். இது உள்ளபடியே தொழில் துறையினரின் இன்னல்களை புரிந்து கொண்டு, அதை எளிமை படுத்தி அவர்களை ஊக்குவிக்கும் வண்ணம் உள்ளது.

இதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு ஆயத்த ஆடை ஏற்றுமதி மேம்பாட்டு கழகத்தின்-(AEPC) சார்பாகவும் அகில இந்திய ஏற்றுமதியாளர்களின் கூட்டமைப்பின் - (FIEO) சார்பாகவும் மனமார்ந்த பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துள்ளார்.

முரசொலி

Date : 13-Oct-2021

"சென்னை மருத்துவக் கல்லூரிக்கு மாற்றுப் பாதை" எனும் கோரிக்கைக்கு 10 நாட்களிலேயே தீர்வு கண்ட

முதல்வருக்கு - சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர் மன்றம் நெஞ்சார்ந்த நன்றி!

மாணவர் மன்ற நிர்வாகிகள் அறிக்கை!

சென்னை, அக்.13-

சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர் மன்றத் தலைவர் மு.மோகன், மாணவர் மன்ற முன்னாள் செயலாளர் அருள் பிச்சை ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில், "சென்னை மருத்துவக் கல்லூரிக்கு மாற்றுப் பாதை அமைத்திட வேண்டும் என நாங்கள் கோரிக்கை விடுத்து 10 நாட்களிலேயே, அக் கோரிக்கையினைப் பரிசீலித்து அதனை நேரில் ஆய்வு செய்த தமிழக முதல்வர் அவர்களுக்கு எங்களின் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்றும் - "எங்கள் இன்னல் தீர்த்து மாற்றுப் பாதையை விரைவில் அமைத்து விடியல் தருவார் முதல்வர் என நம்புகிறோம்" என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இதுகுறித்து அவர்களின் அறிக்கை வருமாறு:-

பழைய மத்திய சிறை இருந்த வளாகத்தில் தற்போது அமைந்துள்ள சென்னை மருத்துவக் கல்லூரி பல்லவன் சாலையில் உள்ள ஒரே ஒரு ஒற்றை சுற்றுப்பாதையை இத்தனை காலங்களாகப் பயன்படுத்தி வருகிறோம். ஆகையால் மருத்துவமனைக்கும் வேறு இடங்களுக்குச் செல்வதற்கு வெகு தூரம் சுற்றிவர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்தச் சிரமத்தில் இருந்து விடியல் பெற கடந்த செப்டம்பர் 26-ஆம்தேதி உலக காது கேளாதோர் வாரத்திற்கு வருகை தந்திருந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் ஈ.வெ.ரா. சாலையில் எங்களுக்கு மாற்றுப் பாதை அமைத்துத் தர வேண்டிய கோரிக்கையை நேரில் சமர்ப்பித்தோம்.

எங்கள் கோரிக்கையை ஏற்று சென்னை சென்ட்ரல் பகுதியில் நடக்கும் மெட்ரோ தொடர் வண்டிப் பணிகளைப் பார்வையிட வந்த முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிய அளவில் முதன்மையான மற்றும் இந்திய அளவில் பழமையான பெருமை மிக்க கல்லூரி மாணவர்களின் கோரிக்கையை ஏற்று 10 நாட்களில் கட்டுமான இடத்திற்கு நேரில் வருகை தந்த முதல்வர் அவர்களுக்கு நன்றி!.

முன்னாள் மருத்துவ மாணவர்கள் அமைப்பு எடுத்த மாபெரும் முன்னெடுப்பில் சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவ மாணவர்கள் மன்றம் இணைந்து தமிழக அரசாங்கத்தை ஈ.வெ.ரா. சாலையில் மாற்றுப் பாதை அமைப்பதற்கான கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்தி வந்தது.

நாங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து விடுத்த கோரிக்கைக்கு பதவிக்கு வந்த சில மாதங்களில், வேண்டுகோள் வைத்த 10 நாட்களில் செவிமடுத்துள்ள முதலமைச்சர் அவர்கள், கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு, மாணவர்களின் இடையூறுகளை அகற்றுவதற்காக எடுத்த ஆக்கப்பூர்வமான நடவடிக்கைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் முதல்வர் அவர்கள் எங்கள் இன்னல் தீர்த்து மாற்றுப் பாதையை விரைவில் அமைத்து விடியல் தருவார் என நம்புகிறோம்.

நாங்கள் கடிதம் கொடுத்த சில நாட்களில் நேரில் வந்து பார்வையிட்ட முதலமைச்சர் எங்களுக்கு விரைவில் விடியல் தருவார் என உறுதி பட நம்புகிறோம்.

இவ்வாறு அவ்வறிக்கையில் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

முரசொலி

Date : 13-Oct-2021

'புலம் பெயர் தமிழர் நல வாரியம்' அமைத்ததற்கு

ஓமன் கழகத்தின் சார்பில் முதல்வருக்கு நன்றி!

பி.கே.சிவக்குமார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம்!

மஸ்கட், அக். 13 -

ஓமன் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக புலம்பெயர் தமிழர் நலவாரியம் அமைத்து தந்த முதலமைச்சருக்கு நன்றி தெரிவிக்கும் சிறப்பு கூட்டம் ஓமன் தலைநகர் மஸ்கட்டில் ஓமன் கழகச் செயலாளர் பி.கே. சிவகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு தீர்மானமாக,

வெளிநாடுவாழ் தமிழர்களின் நீண்ட நாள் கோரிக்கையான தமிழர் நல வாரியம் அமைத்துத் தந்த முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்தல்.

வெளிநாடு வாழ் தமிழர் நலன் அணி அமைவதற்கு காரணமாய் இருந்த இத்துறையின் அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்களுக்கும் வெளிநாடு வாழ் நல அணியின் செயலாளர் திருவாளர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் இணைச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா, டாக்டர் செந்தில்குமார் அவர்களுக்கு நன்றி அறிவித்தல் போன்றவை அனைவரின் ஒப்புதலோடு நிறைவேற்றப் பட்டது.

மேலும் புலம்பெயர் தமிழர் குறித்த தரவு தளம் அமைத்தல், வெளி நாடுகளில் தமிழர் பணியின் போது இறப்பு நேரிட்டால் அவரது குடும்பத்தினருக்கு கல்வி மற்றும் திருமணம் உதவித் தொகை வழங்குவது. தனியார் சட்ட உதவி மையம் அமைத்து தருவது. குறைவான சம்பளத்தில் வேலை பார்த்து நாடு திரும்பும் தமிழர்களுக்கு மானியத்துடன் கடன் வசதி செய்து தருவது. சொந்த கிராமத்திற்கு உதவிட விரும்புகிறவர்களுக்கு "எனது கிராமம்" என்ற திட்டத்தின் கீழ் பங்குகொள்ள செய்வது. புலம்பெயர் தமிழர்கள் அரசு மற்றும் தொழில் நிறுவனங்களில் பாதுகாப்பாக முதலீடு செய்ய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்ய உதவி செய்வது, எல்லா வற்றுக்கும் மேலாக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12ஆம் தேதியை புலம்பெயர்ந்த உலக தமிழர் நாள் என அறிவித்தது போன்ற எண்ணற்ற பயன்களை வழங்கிய நம் முதலமைச்சர் இனிவரும் காலங்களில் உலகத் தமிழர்களின் தலைவனாக போற்றப்படுவார் என நிகழ்ச்சியில் பங்கு கொண்டவர்கள் விவரமாக எடுத்துப் பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில் ஓமன் திமுகவின் அவைத் தலைவர் இரா. பாலமுருகன் பொருளாளர் சிவசெந்தில், தலைமை ஆலோசகர் பாலூர் தேவா, கொள்கை பரப்பு செயலாளர் முனைவர் சுந்தர வடிவழகன், கருணாநிதி, கவிஞர் மு.பஷீர், அன்பில் சிவா, மாணிக்கவேல், ரவி சங்கர், ஷாஜி, சக்திவேல், திருமாவளவன், கரிகாலன், தினேஷ் ராஜா, முத்துக்குமரன், தங்கதுரை, வெங்கடேசபாபு, மனோகர், அயூப்கான், சுபமலர்வண்ணன், கோபாலகிருஷ்ணன், மருத்துவர் இளஞ்செழியன், திராவிடமணி, அக்கம்தீன், சிவக்குமார் மகளிர் அணியைச் சார்ந்தவர்கள் மற்றும் பல் வேறு நாடுகளைச் சேர்ந்த கழகத்தின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தமிழ் முரசு

Date : 13-Oct-2021

வெளிநாட்டு வாழ் நலவாரியம் அறிவிப்பு

முதல்வருக்கு தமிழர்கள் நன்றி

துபாய், அக்.13-

தமிழகத்தை சேர்ந்த அமீரக வாழ் தொழிலதிபர் கமால் வெளியிட்டுள்ள அறிக்கை:

வெளிநாட்டு வாழ் இந்தியர்கள், குறிப்பாக லட்சக்கணக்கான தமிழர்கள் தாயகத்தை முக்கிய இடத்தில் வைத்துள்ளனர். பல்லாண்டு காலமாக வெளிநாட்டு வாழ் கேரளாவை சேர்ந்தவர்களுக்கு அரசு சார் அமைப்பு செயல்படுவது போன்று தமிழகத்திலும் வெளிநாட்டு வாழ் தமிழர் நல வாரியம் அமைக்க வேண்டும் என தமிழக முதல்வருக்கு கோரிக்கை வைக்கப்பட்டு இருந்தது. வளைகுடா நாடுகளில் குறிப்பாக ஐக்கிய அரபு அமீரகத்தில் 3 லட்சத்திற்கும் அதிகமான தமிழர்கள் உள்ளனர். இந்த நிலையில், வெளிநாட்டு வாழ் தமிழர் நலனுக்காக புலம் பெயர் தமிழர் நல வாரியம் அமைக்க தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டு இருப்பது தமிழர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தகுந்த நேரத்தில் அறிவிப்பு வெளியிட்ட தமிழக முதல்வருக்கு எங்கள் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

முரசொலி

Date : 14-Oct-2021

"தங்களின் நல்லாட்சிக்கு மக்களின் பரிசுதான் இம்மகத்தான வெற்றி!"

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு – இளமாறப் பேராசிரியரின் புதல்வர் அ.அன்புச்செல்வன் கடிதம்!

அன்புச் சகோதரர் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களே,

வணக்கம்,

முதற்கண் நன்றி கலந்த வணக்கங்கள்,

அதியமான் கோட்டை காவல் நிலையத்தில் ஆய்வு, தேசத் தந்தை காந்தியார் பிறந்த நாளில் தமிழகத்தின் பாப்பா பட்டி கிராம சபைக் கூட்டங்களில் கலந்து கொண்டது என்ற செயற்பாடுகள் மிகவும் அருமை. பொதுமக்களின் கவனத்தையும், பாராட்டையும் வெகுவாகப் பெற்றுள்ளது.

உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி அழகன் மதுராந்தகம் ஒன்றியத்தில் தேர்தல் பணிகளை ஒருங்கிணைத்து கவனித்து வந்தான், தலைவர் அவர்களின் Reach கிராமங்கள் வரையில் உள்ளது, சின்னஞ்சிறிய கிராமத்தில் கூட பெண்களின் ஆதரவு பன்மடங்கு பெருகியுள்ளதைப் பற்றி மகிழ்ந்து குறிப்பிட்டான்.

இனிமேல் எதிர்வரும் அனைத்துத் தேர்தல்களிலும் கழகத்திற்கு வெற்றிதான் என்று உறுதியாகத் தெரிவித்தான்.

இக்கூற்றை மெய்ப்பித்துக் காட்டியுள்ளது, 9 மாவட்ட உள்ளாட்சித் தேர்தல். இமாலய வெற்றிக்கு வாழ்த்துக்கள்.

எதிரிகளே இல்லாத நிலை தமிழகத்தில் என்று மறைந்த அ.தி.மு.க. தலைவர் செல்வி. ஜெயலலிதா கூறுவார், அதை உண்மையாக்கியவர் தாங்கள் தான்,

தங்களின் நல்லாட்சிக்கு மக்களின் பரிசுதான் இம்மகத்தான வெற்றி.

வாழ்க தங்கள் நற்றமிழர் தொண்டு!

வளர்க உங்கள் புகழ் வெல்க! நம் அரசு!

வணக்கம்,

நட்புடன்,

அ.அன்புச்செல்வன்

13.10.2021

தினகரன்
ஒரு புதிய அனுபவம்
Date : 14-Oct-2021

உள்ளாட்சி தேர்தல் வெற்றி

மு.க.ஸ்டாலின் ஆட்சிக்கு மக்கள் நற்சான்றிதழ்

கே.எஸ்.அழகிரி நன்றி

சென்னை, அக். 14: தமிழக காங்கிரஸ் கட்சி தலைவர் கே.எஸ்.அழகிரி வெளியிட்ட அறிக்கை:

9 மாவட்டங்களில் நடந்த ஊரக உள்ளாட்சித் தேர்தலில் திமுக தலைமையிலான காங்கிரஸ் உள்ளிட்ட மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி மகத்தான வெற்றி பெற்றிருக்கிறது. கடந்த மக்களவை, சட்டமன்றத் தேர்தல்களில் வழங்கிய வெற்றியை விட அமோக ஆதரவுடன் உள்ளாட்சித் தேர்தலிலும் மக்கள் வாக்களித்து வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள்.

கடந்த 5 மாதங்களாக தமிழகத்தில் நடந்து வருகிற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ஆட்சிக்கு நற்சான்றிதழை இத்தேர்தல் வெற்றி மூலம் மக்கள் வழங்கியிருக்கிறார்கள். தமிழக அரசு நிறைவேற்றுகிற திட்டங்கள் உள்ளாட்சி அமைப்புகளின் மூலமாக பயனாளிகளுக்கு முழுமையாக சேருவதற்கு இந்த வெற்றி உறுதுணையாக இருக்கும்.

ஊரக உள்ளாட்சித் தேர்தலில் மூன்றாவது பெரிய கட்சியாக காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றிருக்கிறது. அதேநேரத்தில், மக்கள் நீதி மய்யம், நாம் தமிழர் கட்சி, தேமுதிக ஆகிய கட்சிகள் ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியாத அளவிற்கு படுதோல்வியை மக்கள் வழங்கியிருக்கிறார்கள். அதேபோல, சந்தர்ப்பவாத கூட்டணியாக செயல்படுகிற பாஜவுக்கும், பாமவுக்கும் மக்கள் பாடம் புகட்டியிருக்கிறார்கள்.

Date : 14-Oct-2021

DMK: Great expectations

The overwhelming victory of DMK in the rural body elections is a sign of the great expectations that the people of Tamil Nadu have from the present government. Though it did not look like a cakewalk during the hustings with the main Opposition AIADMK going all out to malign the DMK, accusing it of taking the people for a ride by dishing out false promises during the Assembly elections, the party pulled it off convincingly, even capturing AIADMK strongholds. One reason for it was the government making a colourful start with a few popular schemes like making bus rides free for women, reducing milk prices and tackling the coronavirus pandemic, whose second wave was at its peak when it was sworn in.

Despite the Opposition, particularly the AIADMK and the vociferous BJP, going gung ho against the government, the DMK managed to send across the message that it had indeed done a magnificent job in a short span of time to the voters in the local body elections. Obviously, the electorate has bought the DMK's claim that it had fulfilled 202 of the 505 promises given to the people and ignored the AIADMK's vociferous campaign that it had reneged in its promises.

These claims and counter-claims at the hustings apart, the skyrocketing of support to DMK was fuelled by the personal charisma of chief minister M.K. Stalin and people's hope that he means good to them. The latest perception of Stalin being a down to earth person, easily accessible to all and responsive to the needs of the common man did the trick. The DMK exemplifying itself as the inheritor of the Dravidian legacy through a plethora of announcements like declaring Periyar E.V. Ramasamy's birth anniversary as social justice day, too, made many believe that the present dispensation is rooted to its basic ideology, thus regaining the confidence of traditional voters.

மக்கள் குரல்

Date : 15-Oct-2021

வழிபாட்டு தலங்கள் திறப்பு: முதலமைச்சருக்கு பா.ஜ.க. அண்ணாமலை நன்றி

சென்னை, அக். 15–

பாஜகவின் வேண்டுகோளுக்கிணங்க தமிழகத்தில் அனைத்து நாட்களிலும் வழிபாட்டு தலங்கள் திறக்கப்படும் என்று அறிவித்த முதல்வர் ஸ்டாலின், அமைச்சர் சேகர்பாபுவுக்கு பாஜக தலைவர் அண்ணாமலை தனது டுவிட்டர் பக்த்தில் நன்றி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் வழிபாட்டு தலங்களை திறக்க அரசு அனுமதி அளித்துள்ளது. தமிழக அரசின் இந்த அறிவிப்புக்கு தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது ட்விட்டர் பக்கத்தில், "நவராத்திரி திருநாளில் பாஜகவின் வேண்டுகோளுக்கிணங்க எல்லா நாட்களிலும் திருக்கோயில்களை திறக்க உத்தரவிட்ட முதல்வர் ஸ்டாலினுக்கும் அறநிலை அமைச்சர் சேகர்பாபுவுக்கும் நன்றி" என்று பதிவிட்டுள்ளார்.

Date : 16-Oct-2021

உள்ளாட்சியிலும் நல்லாட்சி

தமிழகத்தில் கடந்த 2011ம் ஆண்டில்தான் உள்ளாட்சி தேர்தல் முழுமையான அளவில் நடந்தது. 5 ஆண்டுகள் முடிந்த பின் மீண்டும் உள்ளாட்சி தேர்தல், கடந்த 2016ம் ஆண்டு நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், தேர்தலை நடத்துவதற்கான எந்தவித முயற்சியும், அப்போதைய அதிமுக அரசு மேற்கொள்ளவில்லை. பல்வேறு காரணங்களை கூறி இத்தேர்தல் தொடர்ந்து தள்ளிப் போடப்பட்டு வந்தது. இதனால் தனி அலுவலர்கள் கண்காணிப்பில் உள்ளாட்சிகள் செயல்பட்டு வந்தன. இதனால் மக்கள் அடிப்படை வசதிகளுக்கு அல்லல்பட்டு வந்தனர். இதுதொடர்பாக தொடரப்பட்ட வழக்குகளிலும், தமிழகத்தில் உள்ளாட்சி தேர்தலை உடனடியாக நடத்தக்கோரி நீதிமன்றங்களும் உத்தரவிட்டிருந்தன.

இதையடுத்து முதல் கட்டமாக ஊரக உள்ளாட்சி தேர்தல், புதியதாக துவங்கப்பட்ட 9 மாவட்டங்களை தவிர்த்து, மற்ற மாவட்டங்களில் கடந்த 2019, டிச.27, 30 ஆகிய தேதிகளில் 2 கட்டமாக நடந்தது. 514 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினருக்கான தேர்தலில் திமுக 244, அதிமுக 214 இடங்களில் வெற்றி பெற்றன. 5,090 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினருக்கான தேர்தலில் திமுக 2,095, அதிமுக 1,792 இடங்களை பிடித்தன. அதிமுக ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதே திமுக அதிக இடங்களை கைப்பற்றின.

இதைத்தொடர்ந்து சமீபத்தில் நடந்த 9 மாவட்ட ஊரக உள்ளாட்சி தேர்தலில் திமுக மற்றும் அதன் தோழமை கட்சிகள் அபாரமாக வென்று சாதனை படைத்துள்ளன. மொத்தமுள்ள 74 ஊராட்சி ஒன்றியங்களில் அனைத்தையும் திமுகவே கைப்பற்றியுள்ளது. 140 மாவட்ட கவுன்சிலர் பதவிக்கு நடந்த தேர்தலில் 138 இடங்களில் திமுக வெற்றி பெற்றுள்ளது. வெற்றி முடிவுகளின்படி, 9 மாவட்ட ஊரக உள்ளாட்சி தேர்தலில், திமுக கூட்டணி 95 சதவீதத்துக்கும் அதிகமான இடங்களை பிடித்துள்ளது. மாவட்ட கவுன்சிலர் தேர்தலில் திமுகவுக்கு அடுத்த இடத்தில் காங்கிரஸ் 5, விடுதலை சிறுத்தைகள் 3 இடங்களை பெற்றுள்ளன. அதிமுக 4வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டு காலங்களில் மக்கள் நலனை கருத்தில் கொள்ளாமல், தங்களது வளத்தை பெருக்கிக் கொள்வதிலேயே குறியாக செயல்பட்ட அக்கட்சியினருக்கு தேர்தலில் மக்கள் மரண அடி கொடுத்துள்ளனர். இதன்மூலம் தோல்வி பயத்திலேயே பல்வேறு காரணங்களை கூறி உள்ளாட்சி தேர்தல் தள்ளிப் போடப்பட்டது அம்பலமாகி உள்ளது. மேலும், மநீம, நாம் தமிழர் கட்சிகளின் நிலைமையும் கவலைக்கிடமாக மாறி உள்ளது.

அடுத்ததாக நகராட்சி, மாநகராட்சி பகுதிகளில் உள்ளாட்சி தேர்தலை நடத்த வேண்டும். இந்த தேர்தல் அடுத்தாண்டு நடக்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. அரசின் சிறப்பான நடவடிக்கைகள், தேர்தல் வாக்குறுதிகளை விரைந்து நிறைவேற்றுதல் உள்ளிட்ட காரணங்களால், தற்போதைய நிலவரப்படி இந்த தேர்தலிலும் திமுக அபாரமாக வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன. மேலும், கொரோனா பரவல் குறையும் சூழலில், பொது சுகாதாரத்தை மேம்படுத்த நகரங்களிலும் விரைவில் உள்ளாட்சி தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்பதே மக்களின் கோரிக்கையாக உள்ளது.

Date : 16-Oct-2021

இது மு.க.ஸ்டாலினின் இமாலய வெற்றி!

கிராமங்கள்தான் ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கான முதுகெலும்பு என்று காந்தியடிகள் நம்பினார். அந்த முதுகெலும்பான கிராமங்களை வளர்க்கவேண்டும். அந்த கிராமங்கள் இன்னும் வளம்பெறவேண்டும். பட்டணங்களில் உள்ள வசதி, வாய்ப்புகளை கிராமங்களுக்கும் தரவேண்டும்' என்றார் மறைந்த முன்னாள் முதல்-அமைச்சர் கருணாநிதி. அந்தவகையில் கிராம நிர்வாகங்களை மேற்கொள்வது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, மக்கள் பிரதிநிதிகளை கொண்ட கிராமப்பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், மாவட்டப்பஞ்சாயத்து ஆகியவை ஆகும். தமிழ்நாட்டில் மொத்தம் 12 ஆயிரத்து 524 கிராமப்பஞ்சாயத்துகளும், 388 பஞ்சாயத்து யூனியன்களும், 37 மாவட்ட பஞ்சாயத்துகளும் இருக்கின்றன. இதில் ஏற்கனவே 28 மாவட்டங்களுக்கு 2019-ம் ஆண்டு டிசம்பர் 27 மற்றும் 30-ந்தேதிகளில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நடந்துமுடிந்தது. மாவட்டப்பிரிவினை காரணமாக 9 மாவட்டங்களில் இந்த தேர்தல் நடக்கவில்லை. இந்த

தேர்தல் நடந்தநேரத்தில் தி.மு.க. எதிர்கட்சியாக இருந்தது. கருணாநிதி மறைந்து, கட்சியின் தலைமை பொறுப்பை மு.க.ஸ்டாலின் ஏற்ற அந்தநேரத்தில் அவர்மீது நம்பிக்கை வைத்து தி.மு.க. அதிகஇடங்களில் வெற்றிபெற மக்கள் வாக்களித்தனர்.

இத்தகைய சூழ்நிலையில் மீதமுள்ள 9 மாவட்டங்களில் தேர்தல் நடத்தவேண்டும் என்று பல கோரிக்கைகள் எழுந்தன. வார்டுகள் மறுவரையறை செய்யப்பட வேண்டிய காரணத்தால், தேர்தல் தள்ளிப்போனது. அந்தப்பணிகளும் முடிவடைந்து, நீதிமன்றமும் உடனடியாக தேர்தலை நடத்தவேண்டும் என்று உத்தரவிட்ட நிலையில், 2 கட்டங்களாக அதாவது கடந்த 6 மற்றும் 9-ந்தேதிகளில் உள்ளாட்சித்தேர்தல் நடந்தது. இந்த தேர்தல்நேரத்தில் மு.க.ஸ்டாலின் சட்டமன்ற தேர்தலில் நல்லாட்சி மலர வாக்களித்த நீங்கள், 'உள்ளாட்சி தேர்தலிலும் நல்லாட்சி மலருவதற்காக தி.மு.க.வுக்கும், கூட்டணி கட்சிகளுக்கும் ஓட்டளிக்கவேண்டும்' என்றார். நடந்துமுடிந்த சட்டமன்ற தேர்தலில், 'உத்தரவிடுங்கள். உங்களுக்கு உழைக்க காத்திருக்கிறோம்' என்று ஓட்டுகேட்ட மு.க.ஸ்டாலின், இந்த 9 மாவட்ட உள்ளாட்சி தேர்தலில், 'மக்களுக்காகவே சிந்திக்கிறோம். மக்களுக்காகவே செயல்படுகிறோம். மக்களே எங்களை பயன்படுத்திக்கொள்ளுங்கள். உத்தரவிடுங்கள். உங்களுக்காக எந்நாளும் உழைப்போம். உங்களில் ஒருவனாக-சகோதரனாக-கலைஞரின் மகனாக-கடமை ஒன்றைமட்டும் வாழ்க்கை லட்சியமாக கொண்ட ஒருவனாக செயல்படும் நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்' என்று ஓட்டுக்கேட்டார்.

மக்களும் மு.க.ஸ்டாலின் மீது கொண்ட பெரும் நம்பிக்கையின் காரணமாக 140 மாவட்ட பஞ்சாயத்து வார்டுகளில் 128 இடங்களை தி.மு.க.வுக்கும், 7 இடங்களை கூட்டணி கட்சிகளான காங்கிரசுக்கும், 2 இடங்களை ம.தி.மு.க.வுக்கும், ஒரு இடத்தை வி.சி.க.வுக்கும் வழங்கினர். ஆக 140 இடங்களில் 138 இடங்களை தி.மு.க. கூட்டணியும், 2 இடங்களை மட்டும் அ.தி.மு.க.வும் பெற்றது. அதன் காரணமாகத்தான் 9 மாவட்ட பஞ்சாயத்துகளையும் தி.மு.க. கைப்பற்றியது. இதேபோல், பஞ்சாயத்து யூனியன்களை பொறுத்தமட்டில், 74 பஞ்சாயத்து யூனியன்களிலும் தி.மு.க. வெற்றியை பதிவுசெய்திருக்கிறது. கிராமப்பஞ்சாயத்து வார்டு உறுப்பினர்கள், தலைவர்கள் தேர்தலில் கட்சி சின்னம் கிடையாது என்றாலும், மக்களின் தேர்வும் மகத்தான தேர்வாக இருந்தது. தென்காசி மாவட்டம் கடையம் ஊரிலுள்ள வெங்கடாம்பட்டி கிராமத்தலைவராக 22 வயது என்ஜினீயரிங் கல்லூரி மாணவி சாருகலா தேர்ந்தெடுக்கப்பட்டார். அதுபோல பாளையங்கோட்டை பஞ்சாயத்து யூனியனிலுள்ள சிவந்திப்பட்டி கிராமத்தலைவராக 90 வயது பெருமாத்தாள் தேர்ந்தெடுக்கப்பட்டார். பஞ்சாயத்துகளில் யாரை தேர்ந்தெடுத்தால் நமக்கு நல்ல பணியாற்றுவார் என்று மனத்தராசில் எடைபோட்டு மக்கள் வாக்களித்திருக்கிறார்கள்.

தி.மு.க. பெற்ற வெற்றிக்கு தி.மு.க. தலைவரும், முதல்-அமைச்சருமான மு.க.ஸ்டாலின் மீது மக்கள் வைத்த நம்பிக்கைதான் காரணம். இது அவருடைய 5 மாதகால ஆட்சிக்கு கிடைத்த நற்சான்று. மக்கள் அவருடைய ஆட்சிக்கு போட்ட மதிப்பெண்கள்தான் இந்த இமாலய வெற்றி என்பதே உண்மையான காரணமாகும். கிராம மக்களின் உணர்வுதான் ஒட்டுமொத்த மாநிலத்தின் உணர்வு. அந்தவகையில் மக்களின் நம்பிக்கையை பெற்றுள்ள மு.க.ஸ்டாலின் விரைவில் நகராட்சி மற்றும் மாநகராட்சி தேர்தலையும் நடத்தி மக்கள் பிரதிநிதிகளின் கையில் நிர்வாகத்தை வழங்குவதே இப்போதைய மக்களின் கோரிக்கையாக இருக்கிறது.

Date : 16-Oct-2021

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு

டாஸ்மாக் ஊழியர்கள் பாராட்டு

சென்னை, அக். 16-

தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர்கள் சங்கம் மாநில தலைவர் பெரியசாமி, பொதுச் செயலாளர் தனசேகரன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

மக்கள் நலனிலும், மாநில வளர்ச்சியிலும் சீரிய அக்கறை காட்டி, சிறப்பான திட்டங்களை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்தி வருகிறார். உயிர் பலியான துளசிதாஸ் குடும்பத்துக்கு நிதி உதவியும், வேலை வாய்ப்பும் வழங்கப்படும் என அறிவித்ததோடு டாஸ்மாக் ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்தினால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கபப்படும் என்று உத்தரவிட்டு இருப்பது நம்பிக்கையும், தைரியமும் ஏற்படுத்தி உள்ளது.

இதனை பாராட்டுகின்றோம். டாஸ்மாக் பணியாளர்களை நிரந்தரப்படுத்தும் சிறப்பு திட்டத்தை அறிவிக்க வேண்டும். தீபாவளி போனஸ் 40 சதவீதம் வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறியுள்ளனர்.

முரசொலி

Date : 17-Oct-2021

முதலமைச்சரின் குரலை தொலைபேசியில் கேட்டு

இன்ப அதிர்ச்சியடைந்த 5ஆம் வகுப்பு மாணவி!

‘தி இந்து’ ஆங்கில நாளேடு வர்ணனை!

ஒசூர், அக்.17–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் குரலை தொலைபேசியில் கேட்டதால் 5ஆம் வகுப்பு மாணவி திக்குமுக்காடிப் போயுள்ளார்.

இதுகுறித்து 16.10.2021 தேதியிட்ட ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டில் வெளியான செய்தி வருமாறு–

‘அன்பார்ந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களே’ என்று சாதாரண ஊதா நிற அட்டையில் கிரையான் பென் சிலால் எழுதிய 5ஆம் வகுப்பு பயிலும் 10 வயது மாணவிக்கு, முதலமைச்சர் அவர்களே தொலை பேசி மூலம் தொடர்பு கொண்டு பேசிய நிகழ்வு ஒன்று நடை பெற்றுள்ளது.

ஒசூர் டைடான் பள்ளியில் 5ஆம் வகுப்பு பயிலும் பிரஜ்னா என்ற அந்த மாணவி, ‘பள்ளிக்கூடங்களை திறக்க வேண்டும்’ என்று கோரிக்கை விடுத்ததை யடுத்து, முதலமைச்சரே அம்மாணவியிடம் நேரடியாகத் தொடர்பு கொண்டதால், என்ன செய்வதென்றே அறியாமல் திக்குமுக்காடிப் போயிருக்கிறார்.

அண்மையில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பிரஜ் னாவின் பாட்டி வாலாஜாபேட்டையில் கவுன்சிலராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதை யடுத்து அதுபற்றிய தகவல் களோடு பிரஜ்னாவின் தந்தை ரவிராஜன் முதலமைச்சர் அலுவ லகத்திற்குச் சென்றார்.

‘முதலமைச்சரிடம் நான் சென்றபோது, எனது மகள் எழுதிய கடிதத்தையும் கொண்டு சென்று முதல்வரிடம் அளித் தேன். நான் கொடுத்த கடிதத்தை கூர்ந்து கவனித்த முதலமைச்சர், அதை தன் உதவியாளரிடம் தந்து பத்திரமாக இதை வைத்துக்கொள் என்று கூறியதை நான் கவனித் தேன்’ என்று குறிப்பிட்ட ரவிராஜன்,

‘எனது மகள் ஊதா நிற அட்டையில்–போஸ்ட் கார்டு வடிவிலானது–கிரையான் பென்சிலால் உதயசூரியன் சின்னத்தை வரைந்து, கூடவே பள்ளிகளை முதலமைச்சர் உடனே திறக்க வேண்டும் என்று எழுதியிருந் தார். இதைத்தான் நான் முதலமைச்சரிடம் அளித்தேன்’ என்று தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமையன்று காலை ரவிராஜன் தனது குடும்பத்தாருடன் சென்னையிலிருந்து ஒசூருக்கு திரும்பி வந்துக் கொண்டிருந்தபோது, முதலமைச்சர் அலுவலகத்திலிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. முதலில் முதலமைச்சரின் உதவியாளர்தான் பேசுகிறார் என்று எண்ணினேன். ஆனால் முதலமைச்சரே நேரடியாக தொலைபேசியில் பேசினார் என்று குறிப்பிட்ட ரவிராஜன், “உங்கள் மகளை பேசச் சொல்லுங்கள்” என்றும் முதல்வர் என்னைக் கேட்டுக் கொண்டார், என்றார்.

அதையடுத்து பிரஜ்னாவுடன் பேசிய முதலமைச்சர், **‘நவம்பர் 1ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்பட இருக்கின்றன.’ பள்ளிக்குச் சென்று நன்றாகப் படிக்கவும்’ என்று தெரிவித்துள்ளார். பிரஜ்னா அனுப்பிய கடிதத்தை தாம் பார்த்ததாகவும் எங்கு படித்துக் கொண்டிருக்கிறாய் என்று முதல்வர் கேட்டதாகவும் அம்மாணவி தெரிவித்தார்.**

‘எங்கள் ஆசிரியர்களையும், நண்பர்களையும் பார்த்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், நாங்கள் பள்ளிக்குச் செல்ல ஆர்வமுள்ளதாகக் குறிப்பிட்டு, முதல்வருக்கு கடிதம் எழுதியதாகவும் பிரஜ்னா தெரிவித்தார்.

அக்கடிதத்தில் அவரது தங்கையும் கையெழுத்திட்டிருந்தார்.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்

Date : 17-Oct-2021

முதல்வரின் முயற்சி

தீபாவளி பண்டிகைக்கு இன்னும் 19 நாட்களே உள்ள நிலையில் சிவகாசியில் பட்டாசு உற்பத்தி விறுவிறுப்படைந்துள்ளது. இந்த ஆண்டு 2,300 கோடி ரூபாய் அளவிலான பட்டாசுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அவற்றில், 90 சதவீதம் வெளிமாநிலங்களுக்கு விற்பனைக்காக அனுப்பப்பட்ட நிலையில், பல மாநிலங்களில் பட்டாசு வெடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் இப்படி பட்டாசு வெடிக்க தடை விதிப்பது வாடிக்கையாகிவிட்டது. கேட்டால், காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்த நடவடிக்கை என்கின்றனர். அடப்பாவிகளா? வாகனங்கள், அனல் மின் நிலையங்கள் மற்றும் தொழிற்சாலைகள் வருடம் 365 நாளும் ஏற்படுத்தும் காற்று மாசைவிட ஒரு நாள் மட்டுமே வெடிக்கும் பட்டாசு பெரிய ஆபத்தையா ஏற்படுத்திவிடப்போகிறது?.

உச்ச நீதிமன்றம் ஏற்கனவே சில வகையான பட்டாசுகளுக்கு தடை விதித்துள்ளது. காற்று மாசு ஏற்படுத்தும் பட்டாசுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. குறைந்த அளவு மாசு ஏற்படுத்தும் பசுமை பட்டாசுகளை தயாரிக்கலாம் என்று உச்ச நீதிமன்ற உத்தரவில் கூறப்பட்டுள்ளது. ஆனால், அப்படி தயாரிக்கப்படும் பசுமை பட்டாசுகள் உட்பட அனைத்து வகை பட்டாசுகளுக்கும் தடை விதிப்பது நியாயம் தானா?

இந்தியாவின் பட்டாசு தலைநகரம் சிவகாசி. சிவகாசி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் 1,070 பட்டாசு ஆலைகள் இயங்கி வருகின்றன. இந்த ஆலைகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் 8 லட்சம் தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இங்கு நாட்டின் மொத்த பட்டாசு தேவையில் சுமார் 90 சதவீத பட்டாசு உற்பத்தி ஆகிறது. பட்டாசு என்பது 8 லட்சம் குடும்பங்களின் வாழ்வாதாரம் சம்பந்தப்பட்ட விஷயம். கடந்த 2020ல் கொரோனா பரவல் காரணமாக சுமார் ₹1000 கோடி அளவில் பட்டாசு தேங்கியது. இதனால், இந்த ஆண்டு உற்பத்திக்கு சிவகாசியில் கால தாமதமாகவே பட்டாசு ஆலைகள் திறக்கப்பட்டன. வாரத்தில் 3 நாட்கள் மட்டுமே வேலை கொடுக்க முடிந்ததால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், பட்டாசு வெடிக்க தடை விதித்துள்ள டெல்லி, ஒடிசா, ராஜஸ்தான், அரியானா மாநில முதல்வர்களுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். பதவி ஏற்ற நாள் முதல் தமிழகம், தமிழக மக்களை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்பட்டு வரும் முதல்வர், சரியான காரணங்கள் இல்லாமல் ஒட்டுமொத்தமாக பட்டாசுகளுக்கு தாங்கள் தடை விதித்திருப்பது சரியானதல்ல. இதுபோன்ற தடை உத்தரவுகள் எந்த நாட்டிலும் இல்லாத ஒன்றாகும். இது தொடர்ந்தால் பட்டாசு தொழிலை மூட வேண்டிய நிலை வரும் என்று கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வரின் முயற்சிக்கு உடனடியாக கைமேல் பலன் கிடைத்துள்ளது. அவரது கடிதம் கிடைத்ததும் ராஜஸ்தான் அரசு பசுமை பட்டாசுகளை வெடிக்க அனுமதி அளித்துள்ளது. மற்ற மாநில அரசுகளும் இதே போன்ற முடிவை விரைவில் எடுக்கும். தீபஒளி திருநாளாம், தீபாவளியையொட்டி பட்டாசு தொழிலாளர்கள் வாழ்வில் ஒளி வெள்ளம் பாயச் செய்ய முயற்சி எடுத்துள்ள முதல்வருக்கு வாழ்த்துக்கள்.

முரசொலி

Date : 19-Oct-2021

ஆசிரியர்களின் போராட்டம் மற்றும் பணி நீக்கக் காலத்தை

பணிக்காலமாக முறைப்படுத்தி அறிவித்த முதல்வருக்கு நன்றி!

தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்ற பொதுச் செயலாளர் நா.சண்முகநாதன் அறிக்கை!

சென்னை, அக். 19-

வேலை நிறுத்தப் போராட்டக் காலங்கள், தற்காலிக பணிநீக்கக் காலங்களை பணிக் காலமாக முறைப்படுத்தி அரசாணை வெளியிட்ட முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் பெரும் நன்றி பாராட்டுகிறது என தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் முனைவர்-மன்றம் நா.சண்முகநாதன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த 07.09.2021 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் அவைவிதி 110 இன்கீழ் வெளியிட்ட அறிவிப்புகளின் அடிப்படையில் தமிழ்நாடு மனித வள மேம்பாட்டுத்துறை வெளியிட்டுள்ள அரசாணை எண்:113 /நாள்:13.10.2021 ஐ தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றம் பெரிதும் வரவேற்கிறது. பெரும் நன்றி பாராட்டுகிறது.

முதலமைச்சர் அவர்களின் சட்டமன்றப் பேரவை அறிவிப்பின்படி, கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டின் ஆசிரியர்-அரசு ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளுக்காக நடத்திய வேலைநிறுத்தப் போராட்டக்காலங்களும் மற்றும் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஒட்டி மேற்கொள்ளப்பட்ட தற்காலிக பணி நீக்க பணிக்காலங்களும் பணிக்காலமாக முறைப்படுத்தப்பட்டு உள்ளது பெரும் வரவேற்புக்குரியதாகும்.

மேற்கண்ட வேலை நிறுத்தப் போராட்டக் காலங்களில் ஆசிரியர் மற்றும் அரசு ஊழியர்களின் மீது தொடுக்கப்பட்ட குற்ற வியல் வழக்குகளும் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகளும் இரத்து செய்யப்பட்டு உள்ளது பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது.

மேற்கண்ட வேலை நிறுத்தப் போராட்டக் காலங்களில் பதவி உயர்வு வாய்ப்பினை இழந்துள்ள ஆசிரியர் மற்றும் அரசு ஊழியர்களின் பதவி உயர்வு பாதிப்புகள் களையப்படும் என்பதும், கட்டாய பணியிட மாறுதல்களினால் பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்-அரசு ஊழியர்களுக்கு பொது மாறுதல் கலந்தாய்வில் முன்னுரிமை வழங்கப்படும் என்பதும் பெரும் பாராட்டுக்குரியதாகும்.

முதலமைச்சர் அவர்கள் "சொன்னதை செய்வார்; செய்வதை தான் சொல்லுவார்" என்பதற்கேற்ப தமிழ்நாட்டின் ஆசிரியர் மற்றும் அரசு ஊழியர்களின் கடந்த 2016 ஆம் ஆண்டு முதலான வேலை நிறுத்தப் போராட்டக் காலப் பாதிப்புகள் முழுமையாக போக்கப்பட்டு உள்ளதையும்-நீக்கப்பட்டு உள்ளதையும், முழுமையாக களையப்பட்டு உள்ளதையும் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் பெரிதும் வரவேற்கிறது. பெரும் நன்றி பாராட்டுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

மாலைமலர்

Date : 19-Oct-2021

ஆதி திராவிடருக்கு நல ஆணையம்:

முதல்வர் ஸ்டாலினுக்கு அம்பேத்கர் முன்னணி கழகம் பாராட்டு



அம்பேத்கர் முன்னணி கழகம் மற்றும் சென்னை துறைமுக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல தொழிலாளர்கள் சங்க நிறுவனர் மற்றும் பொதுச் செயலாளர் டாக்டர் திண்டிவனம் ஸ்ரீராமுலு விடுத்துள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

தமிழ்நாட்டில் உள்ள ஏழை-எளிய மக்களுக்காக மாநில அளவில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோரின் நலனுக்காக சட்டப்பூர்வமான உரிமைகளை பாதுகாத்து எங்களுடைய முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையத்திற்கு தலைவர், துணைத் தலைவர் மற்றும் துணை நிர்வாகிகளை நியமித்துள்ளது தமிழ்நாடு அரசு. இந்த புதிய அமைப்பானது எதிர் காலத்தில் ஏழை, நடுத்தர மக்கள் அரசு மூலம் முன்னேற்றம் அடைந்திட ஏதுவாக இருக்கும். சமூக நீதிக்காக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்த ஆணையத்தின் மூலம் மக்களுக்கு பல நலத்திட்டங்களை செயல்படுத்த முடிவு செய்துள்ளார்.

தமிழக அரசு குறுகிய காலத்தில் கொரோனா என்ற கொடிய நோயில் இருந்து மக்களை காப்பாற்றி உள்ளது. இனி வரும் காலங்களில் தமிழ்நாட்டில் உள்ள ஏழை-எளிய நடுத்தர மக்களுக்காக தமிழக முதல்-அமைச்சர் உருவாக்கி உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம் அமைப்பில் உள்ள தலைவர், துணைத்தலைவர் மற்றும் நிர்வாகிகள் பாடுபடுவார்கள். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம் அமைத்துள்ள முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டும், நன்றியும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

Date : 20-Oct-2021

ஆசிரியர் பணிகளுக்கான

வயது உச்சவரம்பு உயர்வுக்கு அன்புமணி வரவேற்பு

■ **சென்னை**

ஆசிரியர் பணிகளுக்கான வயது உச்சவரம்பு உயர்த்தப்பட்டதற்கு பாமக இளைஞர் அணித் தலைவர் அன்புமணி வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட ட்விட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:

அரசுப் பள்ளி ஆசிரியர் பணிகளுக்கான வயது வரம்பு பொதுப்பிரிவினருக்கு 40-லிருந்து 45 ஆகவும், இட ஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு 45-லிருந்து 50 ஆகவும் உயர்த்தி அரசாணை பிறப்பிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இது 40 வயதைக் கடந்தவர்களின் ஆசிரியர் பணி கனவை நனவாக்க உதவும்.

ஆசிரியர் பணிக்கு நிர்ணயிக்கப்பட்ட வயதுவரம்பை அகற்ற வேண்டும் என்று பாமக தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. கடந்த ஒரு மாதத்தில் பாமக நிறுவனர் ராமதாஸ் இருமுறை இந்த கோரிக்கையை வலியுறுத்தினார். பாமகவின் கோரிக்கை ஓரளவாவது ஏற்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

10 ஆண்டுகளுக்கு..

வயது வரம்பு உயர்வு அடுத்த ஆண்டு வரை மட்டுமே செல்லும் என அரசு அறிவித்திருப்பது நியாயமல்ல. அடுத்த ஆண்டிற்குள் 42 வயதைக் கடந்த அனைவருக்கும் ஆசிரியர் பணி வழங்க முடியாது. எனவே, வயது வரம்பு உயர்வு குறைந்தது 10 ஆண்டுகளுக்கு செல்லும் என்று அறிவிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

மாலை மலர்

Date : 21-Oct-2021

மக்கள் செல்வாக்கு அதிகம் பெற்ற

சிறந்த முதல்-மந்திரிகளில் மு.க.ஸ்டாலினுக்கு முதலிடம்

80 சதவீதம் பேர் திருப்தி தெரிவித்து ஆதரவு

சென்னை, அக். 21-

இந்தியாவில் முதல்-அமைச்சர்களின் செல்வாக்கு குறித்து 'சி.என்.ஒ.எஸ். ஒபினியோம்" என்ற அமைப்பு நடத்திய கணக்கெடுப்பில் நாட்டில் சிறந்த முதல்-அமைச்சர்களாக 5 முதல்-அமைச்சர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மு.க.ஸ்டாலின் முதலிடம்

இதில் தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் முதலிடம் பெற்றுள்ளார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கணக்கெடுப்பு நடத்திய அமைப்பில் தெரிவிக்கப்பட்டு இருப்பதாவது:-

தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் நாட்டிலேயே மிகவும் மக்கள் செல்வாக்கு பெற்ற முதல்-அமைச்சராக திகழ்கிறார்.

79 சதவீதம்

இந்த கணக்கெடுப்பில் அவர் பெற்றுள்ள நிகரப் புள்ளிகள் 67 ஆகும். அவருடைய மாநிலத்தில் (தமிழ்நாட்டில்) கணக்கெடுப்பு நடத்தப்பட்டவர்களில் 79 சதவீதம் பேர் அவருடைய தலைமையில் திருப்தி அடைந்து இருப்பதாக தெரிவித்து உள்ளனர்.

12 சதவீதம் பேர் அவருடைய செயல்பாடுகளில் திருப்தி இல்லை என்று கூறி உள்ளனர்.

67 புள்ளிகள்

இந்தக் கணக்கெடுப்பில் திருப்தி அடைந்தவர்களின் சதவீதத்தில் திருப்தி இல்லை என்று கூறுபவர்களைக் கழித்து மீதமுள்ளவர்களே நிகர ஆதரவாளர்களாகக் கணக்கிடப்படுகிறது.

அதன்படி தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் நிகரப்புள்ளிகள் 67 பெற்று இந்தியாவிலேயே தலைசிறந்த மக்கள் செல்வாக்கு பெற்ற முதல்-அமைச்சராக முதலிடம் பெற்று உள்ளார்.

2-வது இடம்

தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினை தொடர்ந்து. மகாராஷ்டிரா முதல்-மந்திரி உத்தவ் தாக்கரே மக்கள் செல்வாக்கு பெற்ற சிறந்த முதல்-அமைச்சர்களில் 2-ம் இடம் பிடித்துள்ளார்.

அவரைத் தொடர்ந்து உத்தரபிரதேச முதல்-மந்திரி யோகி ஆதித்யநாத் 3-வது இடம் பெற்றுள்ளார். ஒடிசா முதல்-மந்திரி நவீன் பட்நாயக் 4-வது இடத்திலும், அசாம் முதல்-மந்திரி ஹேமந்த் பிஸ்வா சர்மா 5-வது இடத்திலும் உள்ளனர்.

இவ்வாறு சி.என்.ஒ.எஸ். ஒபினியோம்" அமைப்பு தெரிவித்து உள்ளது.

முரசொலி

Date : 22-Oct-2021

மு.க.ஸ்டாலின் ஆட்சி குறித்து

வைகைப் புயல் வடிவேலு!

சென்னை, அக்.22–

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சி குறித்து நடிகர் வடிவேலு 27.10.2021 தேதியிட்ட 'ஆனந்த விகடன்' வார ஏட்டில் அளித்துள்ள பேட்டியின் கேள்வி பதில் வருமாறு :–

"ஸ்டாலின் ஆட்சியை எப்படிப் பார்க்கிறீங்க.?"

"அண்ணே... கவனத்துல வைங்க. நான் அரசியல் பேசல. மக்கள் கிட்டே ஒரு சந்தோசம் இருக்கு. சனங்களுக்கு நம்பிக்கை வருது. மக்கள் அவங்களை ஈஸியா அணுக முடியுது. ஸ்டாலின் அய்யா நடைப்பயிற்சி செய்யும்போதுகூட மக்களைச் சந்திச்சுப் பேசுறார். தேவையில்லாம ஒரு வார்த்த பேசுறது கிடையாது.

வந்ததும், உட்கார்ந்து கொரோனாவைப் பெருமளவு ஒழிச்சது பெரும் சாதனை. மக்கள் எதைப் பேசினாலும் காது கொடுத்து அக்கறையாக் கேட்டு ஆவன செய்யுறார். சட்டுனு கையை ஆட்டிட்டுப் போயிடலை.

சுகாதாரத் துறையை வச்சிருக்கிற மா.சுப்பிரமணியன், அறநிலையத் துறை சேகர் பாபுவெல்லாம் அநியாயங்க, நேரத்திற்கு சாப்பிடுவாங்களான்னு தெரியல. எப்ப போனைப் போட்டாலும் அவங்களே எடுக்கிறாங்க. அவங்க பி.ஏ–க்கள் கவலையா இருக்கிறதா கேள்வி.

ஒருநாள் சேகர்பாபு அண்ணனுக்குப் போனைப் போட்டு 'எங்க ஊர் காட்டுப்பரமக்குடி ஐயனார் கோயில் நிலங்கள் இப்ப சாமி கைவசம் இல்லை. மீட்டுக் கொடுங்க'ன்னு சொன்னேன். 'புள்ளி விவரங்களோடு வாங்க'ன்னு சொன்னார். ஊர்ல ஆட்கள் விழுந்தடிச்சு வந்து. இப்ப நில மீட்பு நடந்தாச்சு. நன்றி தெரிவிக்கப் போகணும். மக்களோட சேர்ந்து சாமியே சந்தோசமாயிருக்கு.

இந்த உதயநிதி தம்பி தொகுதியெங்கும் இண்டு இடுக்கெலாம் சுத்திட்டுத் திரியுறாங்க. இனிமேல் அந்தத் தொகுதி மட்டுமல்ல, எந்தத் தொகுதிலயும் தம்பி அன்னப் போஸ்டாதான் வரும் போல இருக்கு.

அதிகாரிகள் எல்லாம் நல்ல மனுசங்களா போட்டு ஆட்சி நடக்குது.

பெரிய செயலாளராக இறையனும் அன்பு சேர்ந்த மாதிரி இறையன்பு சார் இருக்காங்க. அவரே பெரிய பேச்சாளர். சைலேந்திரபாபுன்னு கம்பீரமாக அவரும் நல்ல ஆபீசர்.

எல்லோரையும் அரவணைச்சுப் போறதில் ஸ்டாலின் அய்யா முதல்ல நிக்கிறார். தாழ்மையா கேட்டுக்கிறேன். இந்த நல்லாட்சியை அப்படியே நல்லபடியா நடக்க விடுங்க. 'நாய் சேகர் ரிட்டர்ன்ஸ்' பார்த்து நல்லா வயிறு குலுங்கச் சிரிக்கத் தயாரா இருங்க!"

– நன்றி:

'ஆனந்த விகடன்'

27.10.2021

தினகரன்
ஒரு புதிய அனுபவம்

Date : 22-Oct-2021

இது செயல்படும் அரசு

தமிழகத்தில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் மாநிலம் முழுவதும் 1,352 ஏரிகள் முழு கொள்ளளவை எட்டியுள்ளது.

இந்தச் சூழலில், தமிழகத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் அதிக மழைப்பொழிவை தரும் வடகிழக்கு பருவமழை வருகிற 26ம் தேதி தொடங்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இதை வெறும் அறிவிப்பாக மட்டுமே பார்க்க முடியாது. தமிழகத்திற்கு விடப்பட்ட எச்சரிக்கையாகவே பார்க்க வேண்டியுள்ளது. ஏற்கனவே நீர்நிலைகள் முழு கொள்ளளவையும், முக்கால் அளவையும் தாண்டி நிரம்பியுள்ள நிலையில், வடகிழக்கு பருவமழை வந்து வெளுத்து வாங்கினால், நிலைமை சிரமமாகி விடும்.

குறிப்பாக, 2015ல் சென்னை மாநகரம் வெள்ளத்தில் மிதந்த காட்சியை மறக்கவே முடியாது. இதன்பிறகு வடகிழக்கு பருவமழை என்றாலே சென்னைவாசிகள் வெடவெடத்து போகும் அளவிற்கு அந்த சம்பவம் அமைந்து விட்டது.

இந்த அபாயகர சூழலில், தமிழக அரசு எடுத்து வரும் மின்னல்வேக நடவடிக்கைகள் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளன. தமிழகம் முழுவதும் மழை பாதிப்பு அதிகம் இருக்கக்கூடிய பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையை முதல்வர் மு.க.ஸ்டாலின் முடுக்கிவிட்டுள்ளார். அமைச்சர்கள் முதல் அதிகாரிகள் வரை பம்பரமாய் சுழன்று வருகின்றனர்.

தமிழகம் முழுவதும் உள்ள நீர்நிலைகள், கால்வாய்கள் முற்றிலுமாக தூர்வாரப்பட்டு, தண்ணீரை தேக்கவும், உபரிநீர் தடையின்றி வெளியேறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சென்னை மண்டலத்திற்கு மட்டும் ₹11.70 கோடி ஒதுக்கப்பட்டு வெள்ள தடுப்பு பணிகள் நடந்து வருகின்றன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள செம்பரம்பாக்கம் ஏரியின் மதகுகளில் உள்ள அடைப்பான்கள் ₹2 கோடியே 24 லட்சம் செலவில் சீரமைக்கப்பட்டு வருகின்றன. இந்த ஏரியின் உபரிநீர் தடையின்றி செல்ல ₹37.50 லட்சம் செலவில் கால்வாய்கள் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

வடகிழக்கு பருவமழை குறித்து வானிலை மையம் அறிவித்த அன்றைய தினமே, சென்னையின் முக்கிய குடிநீர் ஆதாரமான காஞ்சிபுரம் மாவட்டத்தின் செம்பரம்பாக்கம், திருவள்ளூர் மாவட்டத்தின் புழல் ஏரிகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரடியாக ஆய்வு செய்துள்ளார். இங்கு வடகிழக்கு பருவமழை காலத்தில் கிடைக்கும் நீரை சேமித்து வைத்தால் மட்டுமே, அடுத்த ஒரு ஆண்டு முழுவதும் விவசாயம் மற்றும் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய முடியும். எனவே மழைநீரை சேமித்து வைப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். மேலும் 2015 சம்பவம் போல் மீண்டும் நடக்காமல் இருக்க 24 மணி நேரமும் விழிப்புடன் இருக்க வேண்டும்; ஏரியின் கரைகளை தொடர்ந்து கண்காணித்திட வேண்டும் என பொதுப்பணித்துறை அதிகாரிகளை அறிவுறுத்தி உள்ளார். பேரிடர் வரும் முன்பே, அதை தடுப்பதற்காக களத்தில் இறங்கி செயல்பட்டு வரும் முதல்வர் மு.க.ஸ்டாலினின் அரசு "செயல்படும் அரசு" என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது.

Date : 22-Oct-2021

மக்கள் செல்வாக்கு அதிகம் பெற்ற

சிறந்த முதல்-மந்திரிகளில் மு.க.ஸ்டாலினுக்கு முதலிடம்

தனியார் அமைப்பு நடத்திய கணக்கெடுப்பில் தகவல்

சென்னை, அக்.22-
மக்கள் செல்வாக்கு அதிகம் பெற்ற சிறந்த முதல்-மந்திரிகளில் மு.க.ஸ்டாலினுக்கு முதலிடம் கிடைத்திருப்பதாக தனியார் அமைப்பு நடத்திய கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

யாருக்கு செல்வாக்கு அதிகம்?

இந்தியாவில் உள்ள மாநில முதல்-மந்திரிகளில் யாருக்கு செல்வாக்கு அதிகம்? என்பது குறித்து, "சி.என்.ஓ.எஸ். ஒபினியோம்" என்ற அமைப்பு கணக்கெடுப்பு நடத்தியது. அதில், நாட்டில் சிறந்த முதல்-மந்திரிகளாக 5 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முதல் இடத்தை தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பிடித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, கணக்கெடுப்பு நடத்திய அமைப்பு கூறியிருப்பதாவது:-

திருப்தி தெரிவித்த 79 சதவீதம் பேர்

தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் நாட்டிலேயே மிகவும் மக்கள் செல்வாக்கு பெற்ற முதல்-அமைச்சராக திகழ்கிறார். இந்த கணக்கெடுப்பில் அவர் பெற்றுள்ள நிகரப் புள்ளிகள் 67 ஆகும். தமிழகத்தில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டவர்களில் 79 சதவீதம் பேர் அவருடைய தலைமையில் திருப்தி அடைந்து இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

12 சதவீதம் பேர் அவருடைய செயல்பாடு திருப்தி இல்லை என்று கூறியுள்ளனர். இந்தக் கணக்கெடுப்பில் திருப்தி அடைந்தவர்களின் சதவீதத்தில் திருப்தி இல்லை என்று கூறுபவர்களைக் கழித்து மீதமுள்ளவர்களே நிகர ஆதரவாளர்களாக கணக்கிடப்படுகிறது.

மு.க.ஸ்டாலினுக்கு முதலிடம்

அதன்படி, தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் நிகரப் புள்ளிகள் 67 பெற்று இந்தியாவிலேயே தலைசிறந்த மக்கள் செல்வாக்கு பெற்ற முதல்-அமைச்சராக முதலிடம் பெற்றுள்ளார். மராட்டிய மாநில முதல்-மந்திரி உத்தவ் தாக்கரே 2-வது இடத்தை பிடித்துள்ளார்.

அவரைத் தொடர்ந்து, உத்தரபிரதேச முதல்-மந்திரி யோகி ஆதித்யநாத் 3-வது இடம் பெற்றுள்ளார். 4-வது இடத்தை ஒடிசா முதல்-மந்திரி நவீன் பட்நாயக்கும், 5-வது இடத்தை அசாம் முதல்-மந்திரி ஹேமந்த் பிஸ்வா சர்மாவும் பிடித்துள்ளனர்.

இவ்வாறு சி.என்.ஓ.எஸ். ஒபினியோம் அமைப்பு கூறியுள்ளது.

முரசொலி

Date : 23-Oct-2021

கொளத்தூரில் – அருள்மிகு கபாலீஸ்வரர் கலை – அறிவியல் கல்லூரியில்

ஒரு ரூபாய் செலவில்லாமல் உதவிப் பேராசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளோம்!

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நெஞ்சார்ந்த நன்றி – உதவிப் பேராசிரியை பாராட்டு!

சென்னை, அக்.23–

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் கொளத்தூரில் புதியதாக அருள்மிகு கபாலீஸ்வரர் கலை – அறிவியல் கல்லூரி துவக்கப்பட்டது. இக்கல்லூரியில் புதியதாக உதவிப் பேராசிரியர்களுக்கான பணி நியமன ஆணையை நேற்று முன்தினம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் வழங்கி வாழ்த்தினார்.

பணி நியமனம் ஆணை பெற்ற உதவி பேராசிரியர்களில் பெண் உதவிப் பேராசிரியை ஒருவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், ரூ.25 லட்சம் முதல் ரூ.40 லட்சம் வரையில் இந்தப் பதவிக்குப் பேரம் பேசப்பட்டது. ஆனால், ஒரு ரூபாய் செலவில்லாமல் நாங்கள் பணி நியமன ஆணை பெற்றுள்ளோம். அதற்காக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை பணி நியமனம் பெற்ற உதவிப் பேராசிரியர்கள் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன் என்று நெகிழ்ச்சியுடன் கூறினார்.

சென்னை கொளத்தூரில் அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் புதியதாக உதவிப் பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு பணி நியமன ஆணையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். பணி நியமனம் பெற்றவர்கள் சார்பில் பெண் உதவிப் பேராசிரியர் ஒருவர் கூறியதாவது :–

அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் எங்களைப் போன்ற தமிழ்ப் படித்தவர்களுக்கு ஒரு ரூபாய்கூட செலவு செய்யாமல் முதல்வர் அய்யா அவர்கள் பணி வழங்கி இருக்கிறார்கள். அவர்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கின்றோம்.

எங்களைப் போன்று தமிழ்ப் படித்த வர்களுக்கு இப்போதுதான் விடிவு காலம் பிறந்திருக்கின்றது. ஏனென்றால் ரூ.25 லட்சம் தொடங்கி ரூ.40 லட்சம் வரையில் பேராசிரியர் பணியில் பேரம் பேசப்பட்டது. ஆனால் ஒரு ரூபாய் கூட செலவு செய்யாமல் எங்கள் அனைவருக்கும் நேரடி நியமனம் செய்து இருக்கிறார்கள். அய்யா முதல்வர் அவர்களுக்கு எங்கள் அனைவ ரின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு பெண் உதவிப் பேராசிரியை கூறினார்.

மாலை மலர்

Date : 24-Oct-2021

தியேட்டர்களில் 100 சதவீதம் அனுமதி

தயாரிப்பாளர்கள் சங்கம் முதல்வருக்கு நன்றி

சென்னை அக்.24

கொரோனா பரவலின் காரணமாக தமிழகம் முழுவதும் திரையரங்கங்கள் மூடப்பட்டுவிட்டன. தியேட்டர்களை நம்பி இருந்த பல்லாயிரம் தொழிலாளர்களின் குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு திரையரங்குகளில் 50 சதவீத பார்வையாளர்களோடு இயங்கலாம் என்று அரசு அறிவித்தது. அதன் பிறகு ஓரளவுக்கு மக்கள் தியேட்டர்களுக்கு வரத்தொடங்கினர்.

இதன் மூலம் திரையரங்கையே நம்பி இருந்த ஊழியர்களின் குடும்பங்கள் நிம்மதி பெருமூச்சு விட்டன. ஆனால் பண்டிகைக்காலங்கள் நெருங்குவதால் அவர்களுக்கு ஊதியம் சரியான முறையில் வழங்கவேண்டுமென்றால்நூறு சதவீதம் பார்வையாளர்களை அனுமதித்தால்தான் முடியும் என்கிற நிலை தொடர்ந்தது.

100 சதவீதம்

இந்நிலையில் கொரோனாவை கட்டுப்படுத்தும் பணியில் தீவிரமாக ஈடுபட்ட அரசு அதை கட்டுப்படுத்தி சாதித்துக் காட்டியது. இந்த நேரத்தில் திரைத்துறையினரும் நூறு சதவீத பார்வையாளர்களை அனுமதிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். இந்தக் கோரிக்கையை ஏற்று தமிழக முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் அமைச்சர்கள், அதிகாரிகளோடு தீவிர ஆலோசனை செய்த பிறகு நூறு சதவீத பார்வையாளர்களை அனுமதிக்கலாம் என்று உத்தரவிட்டார்.

இதற்கு நன்றி தெரிவித்து தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் சார்பில் தலைவர் என்.ராமசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

நன்றி

"தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் சார்பில் தமிழக முதல்வருக்கு திரையரங்குகளில் 100 சதவீத இருக்கைகளில் மக்கள் அமர்ந்து படம் பார்த்து கண்டு களிக்க ஆணை பிறப்பிக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தோம். அந்த வேண்டுகோளை ஏற்று இன்று தமிழக முதல்வர் திரையரங்குகளில் நூறு சதவிகித இருக்கைகளில் அமர்ந்து படம் பார்க்க ஆணை பிறப்பித்துள்ளார். 100 சதவீதம் அனுமதி வழங்கிய முதல்வருக்கும், தமிழக அரசிற்கும் தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் சார்பில் இருகரம் குவித்து நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

Date : 25-Oct-2021

பயன்மிகு பனைவெல்லம்

தமிழ் மண்ணில் காணப்படும் மரங்களில் கற்பகத்தரு என்ற சிறப்பான பெயரை பெற்றது பனைமரம். எனவேதான் அதை நம் மாநில மரமாக அறிவித்தனர். பனைமரத்தின் அனைத்து பாகங்களுமே பயன்தரக்கூடியவை. சூட்டை தணிக்கும் நுங்கு, பனங்கிழங்கு, பனையோலை, பதனீர், பனை வெல்லம், பனங்குருத்து, பனங்காய், பனை மட்டை என பல பொருட்களை தரும் ஒரே மரமாக பனைமரம் காட்சியளிக்கிறது. மேலும் பனை மரத்தில் இருந்து கிடைக்கும் பொருட்கள் அனைத்தும் குளிர்ச்சியை அளிப்பவையாகும்.

நம் மண்ணின் கற்பகத்தருவான பனை மரங்களை காப்பாற்ற வேண்டும் என்ற குரல் நெடுங்காலமாக ஒலித்து வருகிறது. எத்தகைய தட்பவெப்ப நிலையிலும் வளரும் பனைமரங்கள் தமிழகத்தில் முன்பு 30 கோடி எண்ணிக்கையில் காணப்பட்டன. தற்போது 5 கோடிக்கும் கீழே உள்ளது. எனவே பனைமரங்களை காப்பாற்றவும், அவற்றின் பெருமையை உலகுக்கு உணர்த்தவும் தமிழக அரசு தந்துள்ள நல்ல திட்டமே 'ரேஷன் கடைகளில் பனை வெல்லம்' விற்பனையாகும்.

தமிழக அரசின் வேளாண் பட்ஜெட்டில் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பனை வெல்லம் விற்பனைக்காக 'கற்பகம்' என்ற பெயரில் ரேஷன் கடைகள் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. பட்ஜெட்டில் சொன்னதை மெய்ப்பிக்கும் வகையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ரேஷன் கடைகளில் பனைவெல்லம் விற்பனையை தொடங்கி வைத்துள்ளார். அரசின் இந்த நல்ல முடிவுக்கு பலர் வரவேற்பு தெரிவித்துள்ளனர். நிச்சயமாக இத்திட்டம் விவசாயிகள், பனை தொழிலாளர்கள் வாழ்வில் ஒளியேற்றுவது மட்டுமின்றி, பொதுமக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

தமிழகத்தில் 25 ஆண்டுகளுக்கு முன்பு வரை பனை தொழில் கொடிகட்டி பறந்தது. பதனீரும், கருப்பட்டியும், நுங்கும் கிராம மக்களின் அன்றாட உணவில் இடம்பெற்றன. காலமாற்றம் காரணமாக அத்தொழில் அழிந்ததோடு, பனங்கிழங்கு உள்ளிட்ட ஓரிரு பனை பொருட்கள் பொங்கல் பண்டிகையை ஒட்டி நினைவு கூரப்படுகின்றன. எனவே பனை தொழிலாளர்களுக்கும், விவசாயம் சார்ந்து பனைமரம் வளர்ப்போருக்கும் ரேஷன் கடைகளில் பனை வெல்லம் விற்பனை கைகொடுக்கும். நமது பாரம்பரிய பொருட்களும் மீட்டுருவாக்கம் செய்யப்படும். அருங்காட்சியகத்தில் இடம்பெறும் வாள், கற்சிலைகள் போன்று, பனை பொருள் விற்பனை அங்காடியில் பனை பொருட்களும் முடக்கப்படுவது நல்லதல்ல. மக்கள் புழக்கம் நிறைந்த ரேஷன் கடைகளுக்கு பனை பொருட்கள் வருவதே மறுமலர்ச்சியை ஏற்படுத்தும்.

தமிழகத்தில் இன்றைய சந்ததிக்கு கருப்பட்டி என்ற சொல்லே கசக்கிறது. பனை வெல்லம் என்ற ஒன்று இருப்பதே பலருக்கும் தெரியாது. காபி, டீ உள்ளிட்ட உற்சாக பானங்களிலும், பலகாரங்களிலும் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் சர்க்கரை அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. உடலில் குளிர்ச்சியை உருவாக்கி, ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பனை வெல்லம் பயன்பாடு மீண்டும் தமிழர்கள் வாழ்வில் வருவது மிகவும் நல்லது. அதற்கான முதல் முயற்சியாக கற்பகம் கடைகள் அமையட்டும்.

தினமலர்

உண்மையின் உரைகல்

Date : 25-Oct-2021

ரேஷனில் பனை வெல்லம் குமரி அனந்தன் பாராட்டு

சென்னை, அக். 25–

குமரி அனந்தன்

'பனை வெல்லத்தை, ரேஷன் கடைகளில் விற்பனை செய்யும் நடைமுறையை, முதல்வர் ஸ்டாலின் துவக்கி வைத்து, தமிழர் அடையாளத்தை காப்பாற்றி உள்ளார்' என காந்தி பேரவை த்லைவர் குமரி அனந்தன் கூறினார்.

அவரது அறிக்கை:

கற்பகம் எனப்படும் கருப்புக் கட்டியில், மனித ரத்தத்தை அபிவிருத்தி செய்யும் தயமின், ரிபோபிளேவின் என்ற பி – வைட்டமின்; நிகோடினிக் ஆசிட் என்ற பி –3; அஸ்கார்பிக் ஆசிட் என்ற சி – வைட்டமினும் உள்ளன.

இவை மனித உடல் வளர்ச்சிக்கு மிகவும் தேவை. ரேஷன் கடைகள் வாயிலாக இவை எல்லா மக்களையும் சென்றடைந்து விடும்.

தமிழ்த்தறி என்ற தலைப்பில், ஆரணி, சேலம், கோவை, சின்னாளப்பட்டி, திண்டுக்கல், பரமக்குடி ஊர்களில் நெய்யப்படும் புகழ் பெற்ற, பாரம்பரிய பட்டுச் சேலைகள்.

ஜமுக்காளம், காஞ்சிபுரம் பட்டுப்பாவாடை, சட்டை ஆகியவை விற்பனைக்கு வினியோகிக்கப்பட்டு, நெசவாளர்களுக்கு ஊக்கம் அளித்திருப்பதையும் போற்றுகிறேன்.

இந்த முயற்சிகளை, தமிழக முதல்வர் தொடர்ந்து மேற்கொள்வதன் வாயிலாக, தமிழர்களின் அடையாளம் காக்கப்பட்டு, நிச்சயம் உயர்நிலைக்கு செல்கிற வாய்ப்பு ஏற்படும்.

இவ்வாறு குமரி அனந்தன் கூறியுள்ளார்.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்

Date : 28-Oct-2021

தட்டுப்பாடில்லை

தமிழகத்தில் தற்சமயம் சாதகமான பருவ மழை சூழல் நிலவி வருகிறது. மேலும் அண்டை மாநிலங்களில் பெய்து வரும் கனமழையால் அணைகளில் நீர்வரத்து அதிகரித்து நிரம்பியுள்ளது. எனவே அணைகளின் உறுதி தன்மையை ஆய்வு செய்து உபரி நீரை வெளியேற்ற வேண்டும் என்று தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார். நடப்பு சம்பா பயிர்கள் செழிப்பாக வளர்ந்து விவசாயிகள் வளம் பெறுவதற்கு தேவையான தண்ணீரும் உள்ளது. எனவே, விவசாயத்துக்கு தண்ணீர் பற்றாக்குறை என்பது தற்போதைக்கில்லை. நெல், பயிறு, சிறுதானியம், எண்ணெய் வித்துக்கள், கரும்பு, பருத்தி ஆகியன 24,829 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி மேற்கொள்ளப்படும் என்று தெரியவருகிறது. எனவே, விவசாயிகள் தங்கள் பயிர் சாகுபடியை எந்த வித இடையூறும் இன்றி நல்லபடியாக செய்வதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது.

விவசாய பயிர்கள் நன்கு செழித்து வளரவும், ஆரோக்கியமான சாகுபடியை நல்கவும் அதை புழு, பூச்சி, எலி போன்றவற்றின் தாக்குதல்களில் இருந்து காக்கவும் விவசாயிகள் தங்கள் பயிர்களுக்கு தேவையான உரம், யூரியா இன்றி கஷ்டப்படக்கூடாது என்பதை உணர்ந்து தமிழகத்துக்கு தேவையான உரம் மற்றும் யூரியாவை உடனடியாக வழங்க வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கு தமிழக அரசு கடிதம் எழுதியது. இந்த கடிதத்தை பரிசீலித்த ஒன்றிய அரசு தமிழகத்துக்கு 90 ஆயிரம் மெட்ரிக் டன் யூரியாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

யூரியா, டிஏபி, பொட்டாஷ் உரங்கள் தட்டுப்பாடின்றி தமிழக விவசாய மக்களுக்கு கிடைத்திட உரிய காலத்தில் குறைவின்றி வழங்க வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கு தமிழக அரசு விடுத்த கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளது. இதையடுத்து, காரைக்கால் துறைமுகத்துக்கு வரவுள்ள 90 ஆயிரம் மெ.டன் அப்படியே தமிழகத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. நவ.2ம் தேதி காக்கிநாடா துறைமுகத்துக்கு வரும் டி.ஏ.பி உரத்தில் பெரும் பங்கு தமிழகத்துக்கு ஒதுக்கீடு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் பல்வேறு உர நிறுவனங்களில் இருந்து உரத்தை பெறுவதற்கான நடவடிக்கையில் வேளாண் துறை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

தூத்துக்குடி துறைமுகத்தில் இருப்பில் உள்ள 27 ஆயிரம் மெ.டன் பொட்டாஷ் உரத்திலிருந்து தமிழக மாவட்டங்களுக்கு அதிக அளவில் அனுப்புவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருவதால் விவசாயிகள் தங்கள் பயிர்களை முறையாக பாதுகாத்து உரம் தெளித்து செழிப்பான சாகுபடியை காணமுடியும்.

விவசாய தேவை மற்றும் விவசாயிகளின் தேவையை முன்கூட்டியே அறிந்து தமிழக முதல்வரும், தமிழக அரசும் உரத்தட்டுப்பாடு ஏற்படாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்துள்ளதற்கு விவசாய சங்கங்கள் பாராட்டு தெரிவித்துள்ளது. விவசாயிகள் தங்கள் கோரிக்கையை போராட்டத்தின் மூலம் அரசுக்கு தெரியப்படுத்த வேண்டிய அவசியமே இல்லாமல் முதல்வர் விவசாயிகள் தேவைகளை பூர்த்தி செய்திருப்பது வரவேற்புக்குரியது என்று விவசாய தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

முரசொலி

Date : 29-Oct-2021

இல்லம் தேடி முதல்வர்!

குழந்தை முன்
குனிந்து கேட்கிறது
குவலயம்!

பள்ளியை நோக்கி
நகர்ந்து வருகிறது
கோட்டை!

கோடி மக்களின் முதல்வன்
குழந்தை முன் மண்டியிடும் காட்சி
இலக்கியங்களிலே காணப்படாதது!

சாமானியர்களின் இயக்கம்
மட்டுமல்ல
இது சாமான்யன் ஆட்சி!

இந்தத் திட்டத்தின் பேரையே
இல்லம் தேடி முதல்வர்
என்று மாற்றிவிடுங்கள்!

முரசொலி

Date : 30-Oct-2021

கல்வியில் சிறந்த தமிழ்நாடு!

தமிழ்நாட்டைக் கல்வியில் சிறந்த தமிழ்நாடாக மாற்றுவதற்கான அனைத்து முயற்சிகளையும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்து வருகிறார்!

'அனைவருக்கும் அடிப்படைக் கல்வி' என்பதை அடிப்படை இலக்காகவும் –

'அனைவருக்கும் உயர்கல்வி' என்பதை உன்னத இலக்காகவும் கொண்டு தமிழ்நாடு அரசு திட்டங்களை வகுத்துவருவதாக முதலமைச்சர் சொல்லி வருகிறார்.

கடந்த மாதம் உயர்கல்வித் துறையின் சார்பில் நடந்த விழாவில் பேசும்போது, "பெருந்தலைவர் காமராசர் காலம் என்பது பள்ளிக் கல்வித் துறையின் பொற்காலமாகச் சொல்லப்படுகிறது. நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களது ஆட்சிக் காலம் கல்லூரிக் கல்வியின் பொற்காலமாகப் போற்றப்படுகிறது. இந்த ஆட்சிக் காலம் உயர்கல்வி, தொழிற் கல்வி, ஆராய்ச்சிக் கல்வியின் பொற்காலமாக மாற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்" என்று முதலமைச்சர் அவர்கள் கூறினார். அந்தளவுக்கு உயர் கல்விக்கு உன்னதமான இலக்கை முதலமைச்சர் எடுத்துக் காட்டி உள்ளார்.

இந்த நிலையில் பள்ளிக் கல்வித் துறைக்கு ஒரு இலக்கைக் காட்டி இருக்கிறார் முதலமைச்சர். அதுதான் அனைவருக்கும் கல்வி; அடிப்படையான கல்வி; முழுமையான கல்வி; கற்றல் குறைபாடு இல்லாத கல்வி! இதற்கு அவர் சூட்டிய பெயர்தான் 'இல்லம் தேடிக் கல்வி' என்பதாகும்!

மாணவக் கண்மணிகள் கடந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் மிகப்பெரிய நெருக்கடியைச் சந்தித்தார்கள். துள்ளித் திரிந்த பள்ளிப் பருவத்தை கொரோனா காலம் கிள்ளி எறிந்து விட்டது. அதனை மீண்டும் துளிர்க்க வைக்கவே 'இல்லம் தேடிக் கல்வி' என்ற திட்டத்தை முதலமைச்சர் தொடங்கி வைத்திருக்கிறார்.

பூட்டியே கிடந்தன பள்ளிகள். பல மாணவக் கண்மணிகளின் மனங்களும் தான்! இதனைச் சரி செய்தாக வேண்டும். பள்ளிக்குச் செல்லாமல் வீட்டிலேயே இருக்கப் பழகி விட்டால் என்ன ஆகும்? ஆசிரியர்களைத் தடுப்புச் சுவர்களாகக் கருதும் மாணவர்கள் பெருகிவிட்டால் என்ன ஆகும்? அதனால் தான் இத்தகைய ஒரு திட்டம் தேவைப்படுகிறது.

படிப்பின் அவசியத்தை மாணவர்களுக்கு உணர்த்த வேண்டும். அத்தகைய படிப்பை முழுமையானதாக்க வேண்டும். கல்வியின் மீது ஆர்வத்தை உருவாக்க வேண்டும். அவர்களை மீண்டும் பள்ளிகளை நோக்கி அழைத்து வர வேண்டும். அதற்காகத்தான் இந்தத் திட்டம் தேவைப்படுகிறது.

"பள்ளிகள் பல மாதங்களாக மூடப்பட்டிருந்த நிலையில் ஏற்பட்டுள்ள கற்றல் பாதிப்பினைக் குறைக்கவும், சரிசெய்யவும், வேறு எந்த மாநிலமும், எந்தவொரு திட்டத்தினையும் செயல்படுத்தாத நிலையில், ஒரு முன்னோடித் திட்டமாக மாணவச் செல்வங்களும், அவர் தம் பெற்றோர்களும் எளிதில் அணுகிப் பெறும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது." என்று முதலமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்.

ஏற்கனவே இருக்கும் ஆசிரியர்களைத் தாண்டி தன்னார்வலர்கள் இந்தத் திட்டத்தில் ஒருங்கிணைக்கப்படுவார்கள்.

இதுவரை 67 ஆயிரத்து 961 பெண்களும், 18 ஆயிரத்து 557 ஆண்களும், 32 திருநங்கையரும் என மொத்தம் 86 ஆயிரத்து 550 நபர்கள் இத்திட்டத்தில் சேவையாற்ற பதிவு செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இப்படிப் பதிவு செய்பவர்களை முன்வைத்து சில சந்தேகங்கள் சமூக வலைத்தளங்களில் முன்வைக்கப்படுகிறது. 'ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சேர்ந்த மதவாதிகள் தன்னார்வலர்கள் என்ற போர்வைக்குள் நுழைந்து விடுவார்கள்' என்ற சந்தேகத்தை சமூக ஊடகங்கள் கிளப்பி உள்ளன. அதற்கும் முதலமைச்சர் அவர்கள் தெளிவான பதிலைக் கொடுத்து விட்டார்.

"இவ்வாறு பதிவு செய்தவர்களின் கல்வித் தகுதி, இருப்பிடம், முன்னனுபவம் போன்ற பல்வேறு அளவீடுகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட பள்ளி மேலாண்மைக் குழுக்கள் மூலம் அவர்கள் நேரடியாகத் தேர்வு செய்யப்படுவர். இந்தப் பள்ளி மேலாண்மைக் குழுவில் பள்ளித் தலைமையாசிரியர், ஆசிரியர்கள், பெற்றோர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் இடம் பெறுவர். தேர்ந்தெடுக்கப்படும் தன்னார்வலர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது" என்று முதல்வர் அவர்கள் கூறி இருக்கிறார்.

ஏதோ பள்ளிக் கல்வித்துறைக்கும் இதற்கும் எந்த சம்பந்தமுமில்லாமல் போகப் போகிறது என்றோ, தன்னார்வலர்கள் வசம் மாணவக் கண்மணிகள் போய்விடுவார்கள் என்றோ யாரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை!

ஆசிரியர்களுக்கு உறுதுணையாக இருக்கவே தன்னார்வலர்கள் இருக்கப் போகிறார்கள். தன்னார்வலர்களைத் தேர்வு செய்யும் முறை, அவர்களுடைய பங்களிப்பு, அவர்களால் கற்பிக்கப்படும் மாணவ மாணவியரின் கற்றல் மேம்பாடு ஆகியவை; தொடர்ந்து கல்வியாளர்கள் கொண்ட குழுவால் கண்காணிக்கப் படும். எனவே அனைத்தும் அரசின் கட்டுப்பாட்டில் தான் இருக்கப் போகிறது.

தன்னார்வலர்கள் குறித்த சந்தேகங்களை திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் அவர்கள் தனது அறிக்கையில் தெளிவுபடுத்தி இருக்கிறார்.

"புதிய கல்விக் கொள்கையின் கீழ் தன்னார்வலர்கள் என்பவர்கள், பள்ளி நிர்வாகத்தில் நேரடியாகத் தலையிடுவதற்கு உரிமை வழங்கப்பட்டு இருந்தது. அதுமட்டுமின்றி பள்ளிகளுக்கு வெளியே முறைசாராக் கல்வியைக் கற்பிக்கிற உரிமையும் அவர்களுக்கு வழங்கப்பட்டு இருந்தது. இதைப் பயன்படுத்தி ஆர்.எஸ்.எஸ். காரர்கள் தன்னார்வலர்கள் என்ற பெயரில் ஊடுருவி, கல்வியை தங்கள் வசப்படுத்திக் கொள்கிற வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், கல்வியாளர்கள் பலரும் எதிர்த்தார்கள், நாமும் எதிர்த்தோம்.

ஆனால் தமிழ்நாடு அரசின் இந்தத் திட்டத்தின்கீழ் தன்னார்வலர்கள் எந்த நோக்கத்தின்கீழ் பயன்படுத்தப்படுகிறார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

'தமிழ்நாடு மாநில கல்விக் கொள்கை குழு உருவாக்கப்படும். அந்தக் கொள்கையின் அடிப்படையிலேயே தன்னார்வலர்கள் செயல்படுவார்கள்' என்றும் முதலமைச்சர் அறிக்கையில் தெளிவுபடுத்தியிருக்கிறார். குழந்தைகளுக்கு பள்ளிக்கு வெளியே எதைக் கற்பிக்க வேண்டும் என்பதற்கான பாடத்திட்டத்தையும் தமிழ்நாடு அரசு வகுத்துத் தந்திருக்கிறது." என்பதை அவர் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

'இல்லம் தேடிக் கல்வி' திட்டத்தின் மிக முக்கியமான இலக்காக, பள்ளி செல்லும் வயதுள்ள அனைவரையும் பள்ளிக்கு அழைத்து வருவது ஆகும். இந்த தன்னார்வலர்கள் வீடு வீடாகச் சென்று பிள்ளைகளை பள்ளிகளுக்கு அழைத்து வருவார்கள். வருகிற கல்வியாண்டில் குறைந்தபட்சம் ஒரு இலட்சம் மாணவர்கள் அரசுப் பள்ளிகளில் கூடுதலாகச் சேர்க்கப்பட வேண்டும் என்றும் முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

'புதிய கல்விக் கொள்கை' பல்வேறு தடுப்புச் சுவர்களைக் கொண்டது.

'இல்லம் தேடிக் கல்வி' என்பது அனைத்து தடுப்புச் சுவர்களையும் உடைப்பது.

'புதிய கல்விக் கொள்கை' என்பது தகுதி திறமையை அளவு கோலாகக் கொண்டது.

'இல்லம் தேடிக் கல்வி' என்பது அனைத்துப் பிள்ளைகளையும் அரவணைக்கிறது.

அனைவரையும் பள்ளியில் சேர்ப்போம்!
அனைவர்க்கும் கல்வியைக் கொடுப்போம்!
சமநிலைச் சமுதாயம் அமைப்போம்!

தினகரன்

Date : 30-Oct-2021

எச்சரிக்கை அவசியம்

தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழைக்காலம் துவங்கிவிட்டது. தலைநகர் சென்னை உள்பட மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. இது, கனமழையாக உருவெடுத்து, பேரழிவை ஏற்படுத்தும் முன்னர், முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வது அவசியமாகிறது.

கடந்த 2015-ம் ஆண்டு நவம்பர் இறுதியில், சென்னையில் பெருமழை பெய்து, மிகப்பெரிய சேதத்தை ஏற்படுத்தியது. தலைநகரே தண்ணீரில் மிதந்தது. கடந்த காலத்தில், வடகிழக்கு பருவ மழையின்போது, ஒக்கி புயல், வர்தா புயல், கஜா புயல் போன்றவை தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் கடும் சேதத்தை ஏற்படுத்தின.

இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, தமிழக அரசு பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஏரிகள், நீர்நிலைகள், நீர்வழித்தடங்கள், ஆறுகள் போன்றவற்றில் தூர்வாரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னை மாநகராட்சி சார்பில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் தூர்வாரும் பணிகளை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சமீபத்தில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். சென்னைக்கு குடிநீர் வழங்கும் புழல் ஏரி நிரம்பி வருவதையும் பார்வையிட்டார். பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து சென்னை தலைமை செயலகத்தில் அனைத்து துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். என்னென்ன தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள முடியுமோ, அத்தனை பணிகளையும் துரிதப்படுத்த அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

சவால்களை திறம்பட கையாள்வது, நீர்நிலைகள், கால்வாய்கள், அணைக்கட்டுகளின் கதவுகள், கரைகளை கண்காணித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பது குறித்த அறிவுரைகள், அனைத்து மாவட்ட நிர்வாகத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது. கடந்தகால புயல் பாதிப்புகளின் அடிப்படையில், முன்னெச்சரிக்கை பணிகளை அரசு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். மக்களுக்கு நிவாரண பொருட்கள் தேவைப்படும் பட்சத்தில், அவற்றை உடனடியாக வழங்கவும் ஆயத்தமாகி வருகின்றனர்.

தமிழக அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஒருபுறம் இருந்தாலும், இன்னொருபுறம் மக்கள் விழிப்புடன் இருப்பது அவசியமாகிறது. மழை வெள்ள பாதிப்பைவிட, பருவநிலை மாற்றம் காரணமாக ஏற்படும் நோயின் பாதிப்பு இன்னும் கொடூரமானது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து தரப்பினரையும் வைரஸ் காய்ச்சல், டெங்கு காய்ச்சல் தாக்குகிறது. மாவட்ட அளவில் நாள்தோறும் 20 பேர் முதல் 30 பேர் வரை டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல் காரணமாக அந்தந்த அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகின்றனர்.

மழைக்காலங்களில் அசுத்தமான குடிநீர் குடிப்பது, மழைநீரில் நனைந்த உணவுகளை உண்பது போன்ற காரணங்களால் சளி மற்றும் வயிற்றுப்போக்கு பிரச்னை ஏற்படுகிறது. நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பவர்கள் மற்றும் ஆஸ்துமா பாதிப்பு இருப்பவர்கள் இன்னும் கூடுதலான சிரமத்துக்கு ஆளாகின்றனர். எனவே, மழைக்காலத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பது ஒவ்வொரு தனி மனிதனின் கடமை ஆகும்.

Date : 30-Oct-2021

மு.க.ஸ்டாலின் விளக்கத்துக்கு வரவேற்பு:

‘இல்லம் தேடி கல்வி திட்டத்துக்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சி ஆதரவு’

முத்தரசன் அறிக்கை

சென்னை, அக்.30-

இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாநில செயலாளர் முத்தரசன் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

இல்லம் தேடி கல்வித் திட்டத்தை விளக்கி தமிழக முதல்-அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கை மதிப்புமிக்கதாகும். இந்தத் திட்டத்தில் சங்பரிவார் கும்பல் ஊடுருவி பிஞ்சு மனங்களில் மதவெறி நஞ்சை விதைக்கும் விபரீதம் ஏற்படக் கூடும் என்பதை கருத்தில் கொள்ளுமாறு இந்திய கம்யூனிஸ்டு கட்சி வேண்டுகோள் விடுத்திருந்தது.

இதனை கருத்தில் கொண்டு 86 ஆயிரத்து 550 பேர் இத்திட்டத்தில் பணியாற்றப் பதிவு செய்துள்ளதாகவும், அவர்களின் செயல்பாடு கல்வியாளர்கள் கொண்ட குழுவால் கண்காணிக்கப்படும் என்றும், அரசின் வழிகாட்டுதல்களை முறையாகக் கடைப்பிடிப்பவர்கள் மட்டுமே தன்னார்வலர்களாகத் தொடர அனுமதிக்கப்படுவார்கள் என்றும் முதல்-அமைச்சர் தெளிவுபடுத்தி இருக்கிறார். மாற்றுக் கருத்துக்களை உள்வாங்கி, அதில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் குறித்து விழிப்புடன் இருப்பதாக விளக்கம் தரும் பொறுப்புணர்வு மெச்சத்தக்கதாகும்.

தமிழக அரசு முன்வைத்துள்ள உன்னத நோக்கங்களுக்கு ஏற்ப ‘இல்லம் தேடி கல்வித் திட்டம்’ செயல்படுத்தப்படுமானால், அத்திட்டம் வெற்றி பெற இந்திய கம்யூனிஸ்டு கட்சி முழு ஒத்துழைப்பை வழங்கும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Date : 30-Oct-2021

CPI now backs *Illam Thedi Kalvi* scheme

CHENNAI: Days after opposing the Illam Thedi Kalvi scheme, CPI state secretary R Mutharasan on Friday said that though his party had urged the government to reconsider the scheme as it could be used by the Sangh Parivar groups to infiltrate and sow the seeds of sectarianism among the children, the Chief Minister has clarified that volunteers' activities would be monitored by a committee of academics.

"About 86,550 persons have registered as volunteers for the scheme, their functioning would be monitored by a committee of educationists and those who are following the government guidelines would be allowed to volunteer," Mutharasan said in a statement quoting the Chief Minister.

He noted that the Chief Minister has reiterated that the National Education Policy would not be implemented in the state and a panel of academics would be formed to frame the state's education policy. He also commended the state's target to admit one lakh students in the government schools.

Mutharasan noted that the Chief Minister has reiterated that the National Education Policy would not be implemented in the state

"The CPI will extend full cooperation to make the *Illam Thedi Kalvi* scheme a success if it was implemented in line with the lofty objectives put forward by the government," he said.

ஊதிய உயர்வு தொகையில் 50 சதவீதம் வழங்க உத்தரவிட்ட

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

கோ.ஆப்டெக்ஸ் தொ.மு.ச. பேரவை மு.அன்பழகன் அறிக்கை!

தஞ்சை, அக்.31-

கோ-ஆப் டெக்ஸ் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு தொகையில் 50 சதவிதம் வழங்க உத்தரவிட்ட முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து கோ-ஆப்டெக்ஸ் தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு.அன்பழகன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் கோ-ஆப்டெக்ஸ் ஊழியர்களுக்கு நீண்ட காலமாக வழங்கப்படாமலிருந்த ஊதிய உயர்வு நிலவைத் தொகையில் 50 சதவீதம் வழங்க உத்தரவிட்ட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்திக்கும் மற்றும் கோ-ஆப் டெக்ஸ் மேலாண்மை இயக்குனர் அவர்களுக்கு கோ-ஆப் டெக்ஸ் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் மற்றும் ஊழியர்கள் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு கோ-ஆப்டெக்ஸ் தொ.மு.ச. பொதுச்செயலாளர் எம்.அன்பழகன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஜூலை 18 'தமிழ்நாடு நாளாக' கொண்டாடப்படும் எனும்

முதல்வரின் அறிவிப்பு வரவேற்கத்தக்கது - பாராட்டுக்குரியது!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, அக். 31- ஜூலை 18 'தமிழ்நாடு நாளாக' கொண்டாடப்படும் எனும் முதல்வரின் அறிவிப்பு வரவேற்கத் தக்கது - பாராட்டுக்குரியவை என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் பாராட்டியுள்ளார்.

இது குறித்து கி.வீரமணி அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

1967 ஜூலை 18 அன்று சென்னை மாநிலத்திற்கு "தமிழ்நாடு" என்று முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்தார். அந்த நாளை, தமிழ்நாடு நாளாக அரசு சார்பில் கொண்டாட வேண்டும் என்று நாம் கேட்டுக் கொண்டோம்.

முதல் அமைச்சர் அவர்களும் சிந்தித்து அந்த நாளை "தமிழ்நாடு நாளாக" அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது - பாராட்டுக்குரியது ஆகும்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலை துணைவேந்தர்கள் அறிமுக கூட்டம்

▸ சென்னை கிண்டி ஆளுநர் மாளிகையில், தமிழகத்தில் உள்ள அனைத்து பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்கள் அறிமுக கூட்டம் ஆளுநரும், பல்கலைக்கழகங்களின் வேந்தருமான ஆர்.என்.ரவி தலைமையில் நேற்று நடந்தது. இதில், அரசின் பதிவாளர்கள், மூத்த அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

பல்கலைக் கழகங்கள் செயல்பாடு

தமிழக அரசுக்கு ஆளுநர் பாராட்டு

சென்னை, அக். 31: பல்கலைக் கழக துணை வேந்தர்களுடன் முதல் சந்திப்பை நடத்திய ஆளுநர் ஆர்.என். ரவி, பல்கலைக் கழகங்களின் வளர்ச்சிக்கு உதவும் தமிழக அரசின் நடவடிக்கைகளுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

ஆளுநரும், பல்கலைக் கழகங்களின் வேந்தருமான ஆர்.என்.ரவி, தமிழக பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களுடன் நேற்று ஆலோசனை நடத்தினார். ஆளுநராக அவர் பொறுப்பேற்ற பிறகு நடக்கும் முதல் ஆலோசனைக் கூட்டம் இது. கிண்டி ஆளுநர் மாளிகையில் நடந்த இக்கூட்டத்தில், பல்கலைக் கழக துணை வேந்தர்கள், பல்வேறு துறைகளின் செயலாளர்கள் பங்கேற்றனர்.

தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்கள் மற்றும் அவற்றின் சாதனைகள் குறித்தும், பல்கலைக் கழகங்களுக்கு மாநில அரசு செய்து வரும் நிதி உதவி உள்ளிட்ட விஷயங்கள் குறித்தும் ஆளுநரிடம், துறை செயலாளர்கள் விளக்கினர்.

பின்னர், ஆளுநர் ரவி பேசுகையில், 20 மாநில பல்கலைக் கழகங்களில் மாணவர் சேர்க்கை தொடர்ந்து அதிகரித்து வருவதற்கும், பல்கலைக் கழகங்களின் நிதி தேவையை தமிழக அரசு பூர்த்தி செய்து தருவதற்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டார். தமிழகத்தில் உயர்கல்வி கணிசமான வளர்ச்சியை எட்டியுள்ள நிலையில், கல்வித்திறன் மற்றும் தரமான ஆராய்ச்சிகளில் துணை வேந்தர்கள் கவனம் செலுத்த வேண்டுமென அவர் வலியுறுத்தினார். உயர் கல்வியின் தரத்தை உறுதிப்படுத்த ஆராய்ச்சிகள் மூலம் அறிவு உருவாக்கத்தை தொடர்ந்து மேம்படுத்த வேண்டுமென அவர் அறிவுறுத்தினார்.

முரசொலி

Date : 01-Nov-2021

அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் நாளில்

பணியிடை நீக்கம் செய்வதைத் தவிர்க்கும் அரசாணை!

முதல்வருக்கு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பாராட்டு!

சென்னை, நவ.1-

அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் நாளில் பணியிடை நீக்கம் செய்வதைத் தவிர்க்கும், தமிழ்நாடு முதலமைச்சர் சமூக நீதிக்கான சரித்திர நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அரசாணை மனிதநேயம் மிக்க அறிவிப்பாகும் என திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

நமது முதலமைச்சர் சமூக நீதிக்கான சரித்திர நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கால திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் நாளும் வளர்ந்தோங்கி வரலாறு படைக்கின்றன.

முன்பு, சட்டமன்றத்தில் 110 ஆவது விதியின்கீழ் அவர் அறிவித்தபடி "அரசுப்பணியாளர்களின் நியாயமான கோரிக்கைகளில் ஒன்றான - அரசு ஊழியர் பணி நிறைவடைந்து ஓய்வுபெறும் நாளில், அவர் மீது ஏதாவது ஒரு காரணம் - குற்றச்சாற்று கூறி, கடைசி நேரத்தில் பணியிடை நீக்கம் செய்து, அவரது ஓய்வூதியம் போன்ற ஓய்வு காலப்பலன்களைக் கிட்டாமல் செய்யும் மனிதாபிமானமற்ற, கருணையற்ற செயல்முறை இனி இருக்காது" என்று தற்போது அறிவித்து அரசாணை வெளியிட்டுள்ளது மிக மிகப் பாராட்டி வரவேற்கப்பட வேண்டிய சிறந்த ஓர் அறிவிப்பு ஆகும்!

அரசு இயந்திரத்தின் அச்சாணி

அரசுப் பணியாளர்கள் தான் அரசு இயந்திரத்தின் அச்சாணி - அந்த உருள் பெருந்தேருக்கான அச்சாணி பல ஆண்டுகள் உழைத்து இறுதியில் பதவியிலிருந்து ஓய்வு பெறும் நாளில் இப்படி ஓர் அதிர்ச்சி அறிவிப்பு தான் அவருக்குப் பரிசு - என்றால் அவரும், அவர் குடும்பமும் என்ன பாடுபடும் என்பதை மிக சக உணர்வோடு உணர்ந்து, பிறிதின் நோய்ப் போக்கும் ஆட்சியாக தமது ஆட்சியை நடத்தி இன்றைய முதலமைச்சர் நாளும் உயருகிறார்!

மவுனப் புரட்சியை செய்துள்ளது

திராவிட மாடல் ஆட்சி முன்பு கலைஞர் தலைமையில் நடந்த போது 1972- வாக்கில் றி மீ க்ஷீ ள ஷ் ஷி ணீ றி றிவீறிமீ - என்ற ரகசியக் குறிப்பேட்டு முறையை ஒழித்து வரலாறு படைத்தது போன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது தலைமையில் நடைபெறும் இன்றைய மனிதநேயம் மிக்க ஆட்சி - இந்த மவுனப் புரட்சியை செய்துள்ளது.

இதனால் சுமார் 5 லட்சம் அரசுப் பணியாளர்களும், அவர்தம் குடும்ப உறுப்பினர்களும் மிகுதியும் பயனடைவர், நிம்மதிப் பெருமூச்சு விடுவர் என்பது உறுதி.

இதனால் தவறு செய்பவர்கள், லஞ்ச ஊழலில் திளைப்பவர்கள் - 'வாங்கிப் பழகிய கையர்கள்' காப்பாற்றப்படுவார்கள்; அல்லது காப்பாற்றப்பட வேண்டும் என்பதல்ல பொருள்.

எந்த சமரசமும் தேவையில்லை

குற்றங்களை அவ்வப்போது காலந்தாழ்த்தாது கண்டறிந்து, நிரூபணம் ஆனால், உரிய நீதி வழங்குவதில் எந்த சமரசமும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய தேவையில்லை; கடைசி நேரத்தில் பணியிடை நீக்கம் செய்து அதிர்ச்சியைத் தருவது தவிர்க்கப்பட வேண்டும் என்பதே இதன் முக்கிய உட்கருத்தாகும்.

இன்னமும் ஆட்சி இயந்திரத்தில் நிலவும் பழைய பாணி நடைமுறை - கைநீட்டலும், காரியங்களைச் செய்து முடித்திட கையூட்டு எதிர்பார்ப்பதும் தவிர்க்கப்படுவதோடு, முந்தைய திமுக தேர்தல் அறிக்கையில் கூறிய வாக்குறுதிகள் படி காலதாமதம் இன்றி கோப்புகள் பைசல் செய்யப்படுவதும், காலதாமதம் ஏற்பட்டால் அதற்கு சம்பந்தப்பட்டத் துறை அதிகாரிகள் தக்க பதில் அளிப்பதோடு, உரிய திருப்திகரமான விளக்கம் தரவில்லை என்றால், உரிய தண்டனை - தரும் வகையில் சட்ட திட்டங்களும் திருத்தி அமைக்கப்பட்டால், அதன் மூலம் பல துறைகளிலும் நல்ல முன்னேற்றமும், வளர்ச்சியும் ஏற்படும்; சிவப்பு நாடா முறை தானே மறைந்து விடவும் முடியும்.

இவ்வாறு கி.வீரமணி தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தினகரன்

Date : 01-Nov-2021

இன்று முதல் தமிழக

திரையரங்குகளில் 100 சதவீதம் பார்வையாளர்களுக்கு அனுமதி

▶ சென்னை அண்ணாசாலையில் உள்ள திரையரங்கு ஒன்றில் இருக்கைகளில் கிருமிநாசினி தெளிக்கப்படுகிறது.

■ திரையரங்கு உரிமையாளர்கள் சங்கம் வரவேற்பு
■ தமிழக முதல்வருக்கு நன்றி

சென்னை, நவ.1: இன்று முதல், தமிழகம் முழுவதும் உள்ள திரையரங்குகளில் 100% பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கி தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இதை, தமிழ்நாடு திரையரங்கு உரிமையாளர்கள் சங்கம் வரவேற்றுள்ளது. மேலும், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சங்கம் சார்பில் நன்றி தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து தமிழ்நாடு திரையரங்குகள் மற்றும் மல்டிபிளக்ஸ் தியேட்டர்கள் உரிமையாளர்கள் சங்க தலைவர் திருப்பூர் சுப்பிரமணியம் கூறியதாவது:

இன்று முதல், தமிழகம் முழுவதும் உள்ள திரையரங்குகளில் 100 சதவீத பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கி தமிழக அரசு ஏற்கனவே உத்தரவு பிறப்பித்துள்ளது. இதை நாங்கள் வரவேற்கிறோம். இன்று முதல், தியேட்டருக்கு படம் பார்க்க வரும் அனைத்து ரசிகர்களுக்கும், அவர்களில் யார் முகக்கவசம் அணியவில்லையோ அவருக்கு, தியேட்டர் நிர்வாகமே இலவச முகக்கவசம் வழங்க உள்ளது. மேலும், தியேட்டர் வாசலிலேயே அனைவருக்கும் உடல் வெப்பநிலை பரிசோதனை செய்யப்பட உள்ளது. அரசாங்கத்தின் கொரோனா தடுப்பு விதிமுறைகளை கட்டாயம் அனைவரும் பின்பற்றுவோம். சானிடைசர் வழங்கவும் தியேட்டர் நிர்வாகிகளுக்கு சொல்லி இருக்கிறோம்.

தமிழகம் முழுவதும் 1,112 ஸ்கிரீன்கள் உள்ளது. அனைத்திலும் 100 சதவீத பார்வையாளர்கள் பாதுகாப்புடன் படம் பார்த்து ரசிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. 100 சதவீத பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கிய தமிழக அரசுக்கும், முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்
Date : 01-Nov-2021

புதிய அத்தியாயம்

கொரோனா பரவல் காரணமாக கல்வி கூடங்கள் தொடர்ந்து மூடப்பட்டதால், மாணவர்கள் வீடுகளிலேயே அடைந்து கிடக்க வேண்டிய அவலம் நிலவியது. மாணவர்களுக்கு தொடர்ச்சியான கல்வி என்பது கேள்விக்குறியாகவே இருந்தது. இந்நிலையில் இன்று முதல் தமிழகத்தில் 1ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரையிலான பள்ளிகள் திறப்பு மாணவர்களுக்கு மகிழ்ச்சியை உருவாக்கும். தமிழகத்தில் கடந்தாண்டு மார்ச் 2வது வாரத்தில் பள்ளி, கல்லூரிகள் மூடப்பட்டன. அதன் பின்னர் ஆசிரியர் - மாணவர்கள் சந்திப்பு, ஆன்லைன் சந்திப்பானது. கல்வி தொலைக்காட்சியும் அடிக்கடி கைகொடுத்தது. இவ்வாண்டு ஜனவரி, பிப்ரவரியில் 9 முதல் 12ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு வகுப்புகள் தொடங்கியது. அடுத்த மாதமே தொடங்கிய கொரோனா 2ம் கட்ட அலை, நேரடி வகுப்புகளுக்கு வேட்டு வைத்தது. அதன் பின்னர் செப்டம்பர் முதல் உயர்நிலை, மேல்நிலை வகுப்புகள் மீண்டும் தொடங்கப்பட்டு நடந்து வருகிறது.

இந்நிலையில் தமிழகத்தில் 19 மாதங்களுக்கு பிறகு 1ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு பள்ளிகள் இன்று திறக்கப்படுகின்றன. வழக்கம்போல் சுழற்சி அடிப்படையில் மாணவர்களுக்கு வகுப்புகள் நடத்தப்பட்டாலும், வாரத்தில் 3 தினங்களாவது மாணவர்கள் ஆசிரியர்களை நேரடியாக சந்தித்து பாடங்களை கற்க முடியும்.

"இளமையில் கல்" என்பதற்கு ஏற்ப ஆரம்ப கல்வியானது ஒவ்வொருவருக்கும் மிகவும் முக்கியமானதாகும். ஆசிரியர்கள் முன் நின்று நடத்தும் நேரடி வகுப்புகளே இளம்பிராயத்தில் மாணவர்களுக்கு கல்வி அறிவை ஊட்டும். அதற்கு பள்ளிகள் திறப்பு நல்லதொரு வாய்ப்பாகும். மாணவர்கள் பள்ளிக்கு வருவது கட்டாயமில்லை என அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டாலும், வீட்டுக்குள் பல மாதங்களாக முடங்கி கிடந்த மாணவர்கள் பள்ளிகள் திறப்பை மகிழ்ச்சியான தருணமாகவே எதிர்நோக்குகின்றனர். நண்பர்கள் சந்திப்பு, நேரடி வகுப்புகள், மைதானம் சார்ந்த விளையாட்டுகள் பள்ளியில் கிடைக்கும் இன்பத்திற்கு ஈடு, இணை எதுவுமில்லை.

இன்று தொடங்கி 15 தினங்களுக்கு மாணவர்களுக்கு கதை சொல்லுதல், பாடல், விளையாட்டு, ஓவியம் வரைதல், அனுபவ பகிர்வு உள்ளிட்டவை கற்பிக்கப்பட உள்ளது. அதை தொடர்ந்து புத்தாக்க பயிற்சி வகுப்புகள் நடக்கும். எப்படி பார்த்தாலும் சீருடை அணிந்து, புத்தகப்பையோடு மாணவர்கள் பள்ளி செல்லும் அழகே தனிதான். எனவேதான் தமிழக முதல்வர் ஸ்டாலின் பள்ளிகளுக்கு வரும் மாணவர்களை இன்று வாசலில் நின்று இனிப்புகள், ரோஜா வழங்கி வரவேற்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

கொரோனாவிற்கு முற்றிலுமாக முடிவுரை எழுதப்படாத காலக்கட்டத்தில் மாணவர்களுக்கு பாதுகாப்பும் முக்கியம். பள்ளிகளில் கிருமி நாசினி தெளித்தல், சமூக இடைவெளியோடு மாணவர்கள் அமருதல், தெர்மல் ஸ்கேனர் மூலம் காய்ச்சல் பரிசோதனை உள்ளிட்டவைகளும் பள்ளிகளில் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும். கிருமிநாசினியை மாணவர்கள் கையில் வைத்து கொண்டு அடிக்கடி கை கழுவி கொள்ளுதலும் அவசியம். பள்ளி மாணவர்களுக்கான புதிய அத்தியாயம் பாதுகாப்பு அம்சங்களோடு தொடங்கட்டும்.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

Date : 01-Nov-2021

இல்லம் தேடி கல்வி - இது ஒரு மறுமலர்ச்சி திட்டம்!

கடந்த 19 மாதங்களாக தமிழ்நாட்டையே முடக்கிப்போட்ட கொரோனா பாதிப்பில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக இயல்பு நிலை திரும்புவதற்கான வழிமுறைகளை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் செய்து வருகிறார். கொரோனாவால் எல்லோருமே அதிகமாக பாதிக்கப்பட்டார்கள் என்றாலும், மிகமிக அதிகமாக பாதிக்கப்பட்டது மாணவர்கள்தான். கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் மூடப்பட்ட நிலையில், இப்போது முதலில் கல்லூரிகளும், தொடர்ந்து 9, 10, பிளஸ்-1, பிளஸ்-2 வகுப்புகளும் திறக்கப்பட்டன. இன்று முதல் 1 முதல் 8-ம் வகுப்புவரை உள்ள மாணவர்களுக்கு பள்ளிகள் திறக்கப்பட இருக்கின்றன.

19 மாதங்களுக்கு பிறகு பள்ளிக்கு வரும் மாணவர்களை வரவேற்குமாறு முதல்-அமைச்சர்

மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார். "கல்விச் சாலைகளின் கதவுகளை நோக்கிவரும் மாணவச் செல்வங்களை வரவேற்க எம்.பி., எம்.எல்.ஏ.க்களையும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளையும், பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்களையும், பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகளையும், தலைமை ஆசிரியர்களையும், ஆசிரியர்களையும் கேட்டுக்கொள்கிறேன். விருந்தினர்களை வாசலுக்கு வந்து வரவேற்பதைப்போல வரவேற்பு கொடுங்கள்" என்று அவர் கூறியுள்ளார்.

தமிழகத்தில் 92,297 குடியிருப்புகளில் உள்ள 34 லட்சத்து 5 ஆயிரத்து 856 மாணவர்கள் பள்ளிக்கூடங்களில் 1 முதல் 8-ம் வகுப்புவரை கல்வி பயின்று வருகிறார்கள். இந்த கொரோனா காலத்தில் அவர்களுக்கு ஆன்லைன் மூலம் இதுவரை கல்வி கற்று கொடுத்தாலும், கிராமப்புறங்களில் உள்ள ஏழை - எளிய மாணவர்களுக்கு ஆன்லைன் மூலம் கல்வி கற்க வசதியில்லை. இந்த பிஞ்சு வயதில் ஆன்லைன் மூலம் கல்வி கற்கும் திறனும் இல்லை என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. இந்த 19 மாதங்களில் அவர்களுக்கு கற்றல் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் நேரடியாக கற்றுக்கொடுக்காததால் பாடங்கள் எல்லாம் மறந்திருக்கும். என்னதான் ஆன்லைன் மூலம் கல்வி என்றாலும், நேரடி கல்விக்கு அது நிச்சயமாக ஈடாகாது.

எனவே, "இல்லம் தேடி கல்வி" என்ற ஒரு திட்டத்தை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் விழுப்புரம் மாவட்டம் முதலியார் குப்பத்தில் கடந்த வாரம் தொடங்கிவைத்தார். அவர் கூறியதுபோல, இல்லம் தேடி கல்வி என்பது சாதாரண திட்டம் அல்ல. இது லட்சக்கணக்கான மாணவ, மாணவியர் வாழ்வில் ஒளியேற்றப்போகிறது. மிகப்பெரிய கல்வி புரட்சிக்கு, மறுமலர்ச்சிக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம், எப்படி மாணவர்களுக்கு டியூசன் நடத்தி படிப்பாற்றல் அதிகரிக்கப்படுகிறதோ, அதுபோல ஒவ்வொரு நாளும் மாலையில், குறைந்தது ஒரு மணி நேரம் முதல் 1½ மணி நேரம் வரை, சூழ்நிலைக்கு ஏற்ப தன்னார்வலர்கள், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், மனிதநேயம் கொண்ட இளைஞர்களை கொண்டு தலைமை ஆசிரியர்கள் மேற்பார்வையில் அந்த குழந்தைகளுக்கு பாடம் கற்றுக்கொடுக்கப்பட இருக்கிறது.

1 முதல் 5-ம் வகுப்புவரை படிக்கும் மாணவர்களுக்கு பாடம் நடத்துவோருக்கு குறைந்தபட்ச கல்வி தகுதியாக 12-ம் வகுப்பும், 6 முதல் 8-ம் வகுப்பு மாணவர்களுக்கு பாடம் எடுக்க குறைந்தபட்ச கல்வியாக இளங்கலை பட்டப்படிப்பில் தேர்ச்சியும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது மாநில அரசின் 100 சதவீத நிதி பங்களிப்பின் கீழ் ரூ.200 கோடி மதிப்பில் நிறைவேற்றப்பட இருக்கிறது. இன்று முதல் விழுப்புரம், கடலூர், திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மதுரை, திண்டுக்கல், ஈரோடு, காஞ்சீபுரம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி மற்றும் நீலகிரி ஆகிய 12 மாவட்டங்களிலும், 15-ந்தேதிக்கு பிறகு அனைத்து மாவட்டங்களிலும் இந்த திட்டம் படிப்படியாகவும், தொடர் பணியாகவும் நிறைவேற்றப்பட இருக்கிறது.

மாணவர்களுக்கு இந்த திட்டம் மிக இனிமையான திட்டம், பயனளிக்கும் திட்டம், முடங்கிப்போன கல்வியை வேகமாக முன்னெடுத்து செல்லும் திட்டம் என்றவகையில், இது மிகமிக பாராட்டுக்குரிய, பயனுள்ள திட்டம் என்றே சொல்ல வேண்டும்.

மாலை மலர்

Date : 01-Nov-2021

இன்றைய வரவேற்புடன் நாளைய பாதுகாப்பும் முக்கியம்

முதுகில் புத்தக சுமையும், முகத்தில் புன்சிரிப்புமாக வீட்டில் இருந்து புறப்படும் குழந்தைகளை வாரி அணைத்து முத்தமிட்டும், தெருவில் இறங்கி நடந்து செல்வதை தலை மறையும் வரை பார்த்து டாடா காட்டியும் பள்ளிக்கு அனுப்புவதே ஒரு சுகமான அனுபவம்.

பாழாய் போன கொரோனா வைரசால் 2 ஆண்டுகளாக இழந்த அந்த சுகமான அனுபவத்தை இன்று தமிழகத்தில் உள்ள பெற்றோர்கள் அனுபவித்து மகிழ்ந்தார்கள்.

ஆம்! 1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரையிலான பள்ளிகள் இன்று திறந்துள்ளன. கடந்த 19 மாதங்களுக்கும் மேலாக வீட்டில் முடங்கிக்கிடந்த குழந்தைகள் இன்று முக மலர்ச்சியோடு துள்ளி குதித்து பள்ளிகளை நோக்கி வந்தனர்.

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்பட மக்கள் பிரதிநிதிகள் அத்தனை பேரும் தெருக்களில் இறங்கி மழலைகளின் கையில் பூங்கொத்து கொடுத்தும், இனிப்புகள் வழங்கியும் சென்று வா பள்ளிக்கு... என்று அனுப்பிய காட்சிகள் தமிழகம் முழுவதும் அரங்கேறியது.

18 மாதங்களில் பெற்றோர்கள் மட்டும் சுகத்தை தொலைக்கவில்லை. குழந்தைகளும் சுகத்தையும், தங்கள் சுதந்திரத்தையும் தொலைத்து விட்டார்கள் என்பதுதான் உண்மை.

ஆன்லைன் வகுப்புகள் என்ற பெயரில் வீடுகளுக்குள் முடக்கப்பட்ட குழந்தைகள் பாடங்களை படிப்பதை விட அனுபவித்த வேதனைகள்தான் அதிகம் என்பதை மறுப்பதற்கு இல்லை. வீட்டை விட்டு வெளியே போக முடியாத நிலை. எந்த நேரமும் ஆன்லைன் வகுப்பில் இருந்து இமை மூடாமல் செல்போன்களையோ, கம்ப்யூட்டர் திரைகளையோ பார்த்து பார்த்து பார்வை குறைபாடு உள்பட பல வியாதிகள் வந்ததுதான் மிச்சம்.

பள்ளிகளுக்கு பணத்தை கட்டி குழந்தைகளுக்கு உடல் ரீதியான பிரச்சினைகளை பெற்றோர்கள் வாங்கி கொடுத்தார்கள். பள்ளி வளாகங்களுக்குள் குதூகலமாக கூடி, ஓடி, ஆடி உற்சாக ஒலி எழுப்பி மகிழ்ந்த நினைவுகள் எல்லாம் அவர்களுக்கு இன்றுதான் மீண்டும் நினைவுக்கு வந்தது.

அவ்வளவு உற்சாகத்துடன் பள்ளி வளாகங்களுக்குள் வந்தார்கள். ஆசிரியர்களின் நேசமும், கனிவானப் பார்வையும் நிச்சயம் இளம் மாணவ, மாணவிகள் மனதில் குதூகலத்தை உருவாக்கி இருக்கும்.

துள்ளி திரியும் பசுவின் கன்றுகள் உடலுக்கு ஒத்துக் கொள்ளாத எதையும் தின்றுவிடக்கூடாது என்பதற்காக முகத்தில் ஓலையால் செய்யப்பட்ட ஒரு கூடையை கிராமங்களில் கட்டி விட்டிருப்பார்கள்.

அதேபோல்தான் குழந்தைகளையும் கொரோனா வைரஸ் தாக்கி விடக்கூடாது என்பதற்காக முகக்கவசத்தை அணிவித்து அனுப்பி இருந்தார்கள். சிரமமாகத்தான் இருந்திருக்கும். வேறு வழியில்லை.

பள்ளிகள் அனைத்தும் இன்று புதுமையாக காட்சி அளித்தன. நீண்ட நாட்களுக்கு பிறகு பள்ளிகளுக்கு வருவதால் 15 நாட்கள் கதை சொல்லிக்கொடுப்பது, பாடல்கள் பாட வைப்பது, விளையாட வைப்பது, ஓவியம் வரைந்து வர்ணம் தீட்டுதல், கலந்துரையாடுதல் போன்ற ஆசிரியர்கள் செயல்பாடுகளை வகுப்பறைகளில் இருக்கிறது.

இந்த புத்தாக்கப் பயிற்சிகள் மாணவ, மாணவிகளுக்கு அடுத்த 15 நாட்களுக்கு புதுமையான அனுபவங்களை அள்ளிக்கொடுக்கும். குறிப்பாக மாணவ சமுதாயத்தின் மனதில் நம்பிக்கை விதை விதைக்கப்படும்.

வாழ்க்கை அவ்வளவுதானோ! இனி பள்ளிக்கூடம் பக்கம் போக முடியாதோ என்றெல்லாம் சலித்து போய் இருந்த மாணவ-மாணவிகளுக்கு உற்சாக மூட்டுவதற்காக இந்த 15 நாட்களும் இப்படிப்பட்ட கற்றல் செயல்பாடுகள் நடத்தப் படுகிறது. ஆசிரியர்கள் இந்த விசயத்தில் கூடுதல் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். மாணவர்களின் மனச்சுமையை இறக்கி வைக்க வேண்டும்.

அதேநேரம் இன்னும் கொரோனா பயம் நீங்கிவிடவில்லை. 18 வயதுக்கு மேற்பட்டோர்களுக்கு மட்டுமே தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. எனவே குழந்தைகளுக்கும் பாதுகாப்பு அவசியம். அதை கருத்தில் கொண்டு கடமைக்காக ஓரிரு நாட்களுக்கு கட்டுப்பாடு என்று இல்லாமல் தினமும் குழந்தைகளை பாதுகாப்புடன் பள்ளியில் பராமரித்து வீடு திரும்ப வைக்க வேண்டிய பொறுப்பும் ஆசிரியர்களிடம்தான் உள்ளது.

சமூக இடைவெளியை கடைபிடிக்க செய்ய வேண்டும். அடிக்கடி கைகளை கழுவச் செய்ய வேண்டும். குதூகலம் இருக்கலாம். ஒன்றாக கும்மாளம் போடும்போது கண்காணிக்க வேண்டும். சிறு நெருப்பு பொறிதான் பெரிய தீயாக மாறிவிடும். எனவே சிறு சலசலப்புக்கும் இடம் கொடுத்துவிடக்கூடாது.

அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள், முக்கிய பிரமுகர்கள் என்று ஒவ்வொருவரும் முதல் நாள் என்று இன்று எடுத்துக்கொண்ட இதே முயற்சியை இன்னும் பல நாட்கள் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். தங்கள் பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு அடிக்கடி செல்ல வேண்டும். குறைகள் இருந்தால் அவற்றை நிவர்த்தி செய்ய தங்களால் ஆன ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

எல்லா பள்ளிகளிலும் எல்லா வசதிகளும் நிச்சயமாக இருக்காது. அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். இதன்மூலம் குழந்தைகளை கொரோனா வைரஸ் நெருங்க முடியாத சூழ்நிலையை உருவாக்க முடியும்.

முதல் நாளான இன்று வரவேற்பதற்காக கொரோனா கட்டுப்பாட்டு விதிமுறைகளுடன் பளிச்சென்று இருந்தது வகுப்பறைகள். இதேநிலை கொரோனா பயம் நீங்கும்வரை இருக்க வேண்டும்.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்
Date : 02-Nov-2021

மக்களுக்கான அரசு

திமுக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு கொரோனாவை கட்டுப்படுத்த அதிரடி நடவடிக்கை எடுத்தது. இதன் மூலம் கொரோனா பரவல் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. தமிழகம் முழுவதும் மாவட்டம் வாரியாக துரித நடவடிக்கையால் தொற்றின் வேகம் தற்போது கட்டுக்குள் வந்தது. இதனால் பொதுமக்கள் நிம்மதி அடைந்துள்ளனர்.

கடந்த 10 ஆண்டுகளாக பின் தங்கியிருந்த தமிழகம், தற்போது வளர்ச்சி என்ற பாதையில் பயணிக்க ஆரம்பித்துள்ளது. இதற்கு தமிழக முதல்வரின் அயராத உழைப்பு தான் காரணம். மிக குறுகிய காலத்தில் வளர்ச்சி என்ற இலக்கை தமிழகம் எட்டும். முக்கியமாக, அனைத்து தரப்பு மக்களும் பயன்படும் வகையில் பல்வேறு திட்டங்களும் அறிவிக்கப்பட்டு வருகிறது. இது மக்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது. தமிழக அரசின் செயல்பாடுகளை மக்கள் பாராட்டி வரும் நிலையில், அதை பொறுத்து கொள்ள முடியாத சிலர், "தங்கள் இருப்பை காட்டி கொள்ள துளியளவு கூட ஆதாரம் இல்லாமல் பொய் குற்றச்சாட்டுகளை" தெரிவித்து வருகின்றனர். இதை மக்கள் ஒருபோதும் நம்ப மாட்டார்கள் என்பதை அவர்கள் அழுத்தமாக புரிந்து கொள்ள வேண்டும்.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தலால் மாணவர்களுக்கு நேரடி வகுப்புகள் நடக்கவில்லை. இதனால் கற்றல் திறன் மற்றும் இடைவெளியும் ஏற்பட்டது. கல்வியில் பின்னடைவை மாணவர்கள் சந்தித்தால் அவர்களின் எதிர்காலம் பாதிக்க நேரிடும். முக்கியமாக, டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் புதிய கண்டுபிடிப்புகளில் தொய்வு ஏற்படும். இதனால் அறிவியலில் அடுத்தடுத்து முன்னேற்றம் குறைய வாய்ப்பு உள்ளது. திமுக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு கொரோனா பரவல் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. 9ம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை பள்ளிகள் திறக்கப்பட்டு பாடம் நடத்தப்படுகிறது. 1 முதல் 8ம் வகுப்புகளுக்கும் பள்ளிகள் திறக்கப்பட்டு இருப்பது பெற்றோர் மற்றும் சமூக ஆர்வலர்களிடம் வரவேற்பை பெற்றுள்ளது. தமிழக மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என அவர்களுக்காக புதுப்புது திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கல்வி, வளர்ச்சி, அமைதி, விவசாயம் உள்ளிட்ட அனைத்திலும் தமிழகம் முன்னேற்றம் கண்டு வருகிறது. மழையால் ஏற்படும் பாதிப்புகளை முன்கூட்டியே கண்டறிந்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு வருகிறது. குற்றச்சாட்டு சொல்ல முடியாத அளவுக்கு அரசின் நடவடிக்கை சிறப்பாக இருப்பதை சில கட்சிகளால் பொறுத்து கொள்ள முடியவில்லை. அனைத்து துறைகளிலும் தமிழகம் முன்னேறி வருவதை அவர்கள் விரும்பவில்லையா?. பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தி மக்களை திசை திருப்பும் முயற்சி நடந்து வருகிறது. மக்கள் தெளிவாக உள்ளனர். அவர்களை ஏமாற்ற முடியாது. அரசின் நடவடிக்கைக்கு மக்கள் முழு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். அனைத்து தரப்பு மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு தடைகளை தகர்த்து, வளர்ச்சி என்ற இலக்கை தமிழகம் விரைவில் எட்டும்.

வேலூரில் அடிக்கல் நாட்டு விழா:

சாகும்வரை முதல்வருக்கு நன்றியுடன் இருப்போம்!

இலங்கைத் தமிழ்ப் பெண் உருக்கம்!!

வேலூர், நவ.2

சாகும்வரை முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றியுடன் இருப்போம் என்று வேலூரில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் இலங்கைத் தமிழ்ப் பெண் உருக்கமாக பேசியுள்ளார்.

இலங்கைதமிழர்களுக்கு புதிய குடியிருப்பு கட்டிடங்கள் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா இன்று வேலூர்அருகே உள்ள மேல்மொணவூர் பகுதியில் நடைபெற்றது. இதில் இலங்கைத் தமிழர்களுக்கு புதிய குடியிருப்புகள்கட்டுவதற்குமுதல்வர்ஸடாலின்அடிக்கல்நாட்டினார். மேலும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை ஸ்டாலின் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மேல்மொணவூரில்அமைந்துள்ள இலங்கைத்தமிழர்முகாமில் வசித்து வரும் ஜெசிந்தா மேரிஎன்றபெண்பேசினார். மேடையில் ஏறி அவர் பேசியதாவது:

இலங்கைத் தமிழர்களுக்கு புதிய குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட உள்ளன. இதனால் நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்துள்ளோம்.

இங்குள்ள மாணவர்கள் பள்ளி, கல்லூரி என எங்கு சென்றாலும் இலங்கை அகதிகள் என்று பிறர் கூறும் வார்த்தைகளைக் கேட்டு மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். அவர்களை அகதிகள் என்று அழைக்கக் கூடாது. இலங்கைத் தமிழர்கள் என்றுதான் அழைக்க வேண்டுமென்று இந்த நிகழ்ச்சியில் முதல்வர் கூறியுள்ளார். சாகும் வரை முதல்வர் ஸ்டாலினுக்கு நாங்கள் நன்றியுடன் இருப்போம்.

இவ்வாறு பேசினார். ஜெசிந்தா மேரி உருக்கமாக பேசியதைக் கண்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களும் கண் கலங்கினர்.

Date : 02-Nov-2021

எல்லை போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளுக்கு பொற்கிழி

தமிழக அரசுக்கு ஜவாஹிருல்லா பாராட்டு

மனிதநேய மக்கள் கட்சி தலைவர் ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாடு என்று பெயரிட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பட்டினி போர் நடத்தி உயிர்நீத்த தியாகி சங்கரலிங்கனாரின் தியாகத்தின் அடிப்படையில் 1967 ஜூலை 18 அன்று உருவான தமிழ்நாடு என்ற ஆட்சி ரீதியான பெயர் சூட்டப்பட்டதால் போற்றப்படவேண்டிய நாளே. மொழி வாரி மாநிலங்கள் பிரிந்த நவம்பர் 1-ந்தேதியும் கொண்டாடப் பட வேண்டும். தமிழ்நாட்டில் எல்லை போராட்டத்தில் ஈடுபட்ட கொடிக்கால் சேக் அப்துல்லா உள்ளிட்ட 110 பேருக்கு தலா ரூ.1 லட்சம் பொற்கிழி வழங்கியுள்ள முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டுகளை தெரி வித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

முரசொலி

Date : 03-Nov-2021

கோயம்பேடு மேம்பாலம் திறக்கப்பட்டதால்

போக்குவரத்து நெரிசல் பெருமளவிற்குக் குறைந்தது!

பொதுமக்கள் மகிழ்ச்சி!

சென்னை, நவ.3-

சென்னை கோயம்பேடு மற்றும் வேளச்சேரி மேம்பாலங்கள் திறக்கப்பட்டுள்ளதால், அப்பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் குறைந்துள்ளது. இதனால் வாகன ஓட்டிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

சென்னையில் கோயம்பேடு மற்றும் வேளச்சேரியில் மேம்பாலப்பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து அதனை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் திறந்து வைத்ததை அறிவோம்!

கோயம்பேடு மேம்பாலத்தால், போக்குவரத்து நெரிசல் வெகுவாக குறைந்துள்ளது. இதனால், கோயம்பேடு 100 அடி சாலை வழியாக பயணிக்கும் பொதுமக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

போக்குவரத்து நெரிசல் மிகுந்த நேரங்களில் கோயம்பேடு பகுதியை கடக்க 30 நிமிடங்கள் காத்திருக்கும் நிலைமாறி, தற்போது 5 நிமிடங்களில் கடக்க முடிவதாக பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

கோயம்பேடு மேம்பாலப்பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுத்த முதலமைச்சர் அவர்களுக்கு வாகன ஓட்டிகள் நன்றி தெரிவித்துள்ளனர்.

இது குறித்து வாகன ஓட்டிகளில் சிலர் கூறியதாவது:-

ஆண் வாகன ஓட்டி!: இந்தப் பாலம் திறந்ததற்குப் பிறகு போக்குவரத்து நெரிசல் குறைந்துள்ளது. கோயம்பேட்டிலிருந்து மாதவரம் செல்வதற்கு குறைந்தது 45 நிமிடம் ஆகும். மழை நேரங்களில் 1 மணி நேரத்திற்கு மேலாகும். இப்போது 15 நிமிடத்தில் செல்லக்கூடிய வகையில் இந்த பாலம் அமைந்துள்ளது.

பெண் வாகன ஓட்டி: கொரோனா காலகட்டத்திலேயும் இந்த பாலப் பணிகளை முதல்வர் அவர்கள் துரிதப்படுத்தி விரைவில் பணி முடிக்க காரணமாக இருந்த நம்முடைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு ரொம்ப ரொம்ப நன்றி! இந்த பாலம் திறந்து வைக்கப்பட்டதால் பல லட்சம் பேர் பயனடைகிறார்கள்.

ஏனென்றால் ஒரு ஆம்புலன்ஸ் வந்தால் கூட நகர்ந்து போகக்கூட குறைந்தது கால் மணி நேரம் ஆகும். இப்போது இந்த பாலம் திறந்ததால் எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. விரைவில் சிரமமின்றி வீடு செல்கிறோம். இதற்காக முதல்வர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆண் வாகன ஓட்டி!: சாதாரணமாக கோயம்பேடு வர வேண்டும் என்றால் குறைந்தபட்சம் $1\frac{1}{2}$ மணி நேரம் ஆகும். இந்த பகுதி எப்போதும் மிகுந்த போக்குவரத்து நெரிசல் இருக்கும். இப் போது இந்தப் பாலத்தை முதல்வர் அவர்கள் திறந்து வைத்ததிலிருந்து 5 நிமிடத்தில் என்னால் அண்ணா நகர் செல்ல முடிகிறது. அதனால் இந்தப் பாலம் எல்லோருக்கும் ரொம்ப வசதியாக உள்ளது.

மழைக் காலத்திலும் சரி, சாதாரணமாக கோயம்பேடு வருபவர்களுக்கும் எந்தவிதத் தடையும் இல்லாமல் செல்வதற்கு மிகப் பெரிய வசதியை செய்து கொடுத்திருக்கிறார் முதல்வர் அவர்கள்.

வாகனத்தில் பயணித்த பெண்: ஆவடி அம்பத்தூர் செல்லவேண்டுமானால் குறைந்தபட்சம் 2 மணி நேரம் ஆகும். இந்தப் பாலத்தை முதல்வர் அவர்கள் திறந்து வைத்திருப்பதால் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. கடந்த 4 வருடமாக கிடப்பில் போட்டு வைத்திருந்தார்கள். ஆனால் முதல்வர் அவர்கள் ஆட்சிக்கு வந்து 4 மாதத்திலேயே பணிகளை விரைந்து முடித்து திறந்து வைத்திருக்கிறார்கள். இது எங்களுக்கு மகிழ்ச்சியாக உள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

தினகரன்

Date : 03-Nov-2021

நிறைவேறும் வாக்குறுதிகள்

கூட்டுறவு வங்கிகளில் 5 பவுனுக்கும் கீழ் நகைக்கடன் தள்ளுபடி செய்து அரசாணை வெளியிட்டுள்ளது தமிழக அரசு. இதன் மூலம் தமிழகத்தில் கூட்டுறவு வங்கியில் நகைக்கடன் வாங்கிய 16 லட்சம் பேர் பயன்பெறுவார்கள். அதனால் அரசுக்கு ₹6 ஆயிரம் கோடி வரை செலவாகும். அதையெல்லாம் பற்றி கவலைப் படாமல் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி இருக்கிறார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்.

கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அளவுக்கு யாரும் மெனக்கெட்டது இல்லை. ஆனால் முதல்வர் மு.க.ஸ்டாலின் முழு எண்ணமும் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்ற துடிப்பில் இருக்கிறது. அவரது உறுதியை பார்த்து, அவரது வேகத்தை பார்த்து மற்ற அமைச்சர்களுக்கும் வேகம் தொற்றிக்கொள்கிறது. குறிப்பாக ஏழை, எளிய மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள், வெற்று வாக்குறுதிகளாக மாறிவிடக்கூடாது என்பதில் அவர் காட்டும் சிரத்தை, அக்கறை அத்தனையும் தனிப்பெரும் தலைவனுக்கு உள்ள தனித்திறன்.

இது தேர்தல் நேரத்து வாக்குறுதிதானே என்ற அலட்சியம் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் இல்லை. அத்தனை வாக்குறுதிகளையும் நிறைவேற்றி விட வேண்டும் என்ற லட்சியம் அவரது செயலில் தெரிகிறது. 250 வாக்குறுதிகளை நிறைவேற்றிய பிறகும் அதை நிறைவேற்றவில்லை, இதை நிறைவேற்றவில்லை என்று ஆட்சி அமைத்து 5 மாதம் முடிவதற்குள் கணக்கு கேட்கிறார்கள். அவர்கள் 10 ஆண்டுகளாக நிறைவேற்றிய வாக்குறுதிகள் என்ன என்று பட்டியல் போட்டால் முதலில் நல்லது.

இன்னொரு புறம் ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை, வங்கி கணக்கில் தலா ₹15லட்சம், ₹50க்கும் கீழ் பெட்ரோல், டீசல் விலை, டாலருக்கு நிகராக இந்திய ரூபாயின் மதிப்பு உயர்த்தப்படும் என்றெல்லாம் கொடுத்த வாக்குறுதிகள் எங்கே போனது என்று தெரியவில்லை. ஆனால் இன்று மக்களுக்கு தீபாவளி பரிசாக கேஸ் சிலிண்டர் விலை ₹915.50, மு.க.ஸ்டாலின் அரசு ₹3 குறைத்தபின்னரும் சென்னையில் பெட்ரோல் ஒரு லிட்டர் ₹106.67, டீசல் ₹102.59 எட்டியிருக்கிறது. எல்லோரும் வேடிக்கை மட்டும் பார்க்கிறார்கள். அளித்த வாக்குறுதிகள் எங்கே என்று அங்கே யாரும் கேட்பதில்லை. கருப்பு பணம் எங்கே, கருப்பு பணம் பதுக்கியவர்கள் பட்டியல் எங்கே என்ற குரலையும் காணவில்லை.

ஆனால் அளிக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றுவதிலும், அளிக்கும் வாக்குறுதியை செயல்படுத்துவதிலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்மாதிரியாக நிற்கிறார். அதனால்தான் இந்தியாவிலேயே சிறந்த முதல்வர் பட்டியலில் முதல் இடத்தில் இருக்கிறார். மக்கள் மனங்களை வென்ற தனிப்பெரும் தலைவராக உருவெடுத்து இருக்கிறார். அவரிடம் என்ன தேவை என்றாலும் சொல்லலாம். யார் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் அணுகலாம். இத்தனை பெரிய உயரம் எட்டிய பிறகும் அவரிடம் உள்ளது அத்தனை எளிமை. அதனால்தான் 9 மாவட்ட ஊரக உள்ளாட்சி தேர்தல் ஒட்டுமொத்தமாக திமுக வசம் வந்தது. ஏனெனில் அவர் காணொலி காட்சி முதல்வர் இல்லை. மக்கள் கண்முன்னே நேரில் வந்து நிற்கும் முதல்வர்.

THE TIMES OF INDIA

Date : 04-Nov-2021

Narikuravas of Mahabs to celebrate Diwali with Stalin

Shanmughasundaram.J
@timesgroup.com

Chennai: Twenty-one-year-old Ashwini, a Narikurava woman, and her community members living in Pooncheri village near the famous seashore temple in Mamallapuram will celebrate Diwali with none other than **chief minister M K Stalin**.

Ashwini shot into limelight when she aired her grievance and alleged discrimination which was videographed and widely circulated. It caught the, attention of HR & CE minister P K Sekar Babu, who sat with her for Annadhanam at a temple in Mamallapuram on Friday.

The Narikurava families would receive house pattas, ration cards, community certificates, welfare board membership cards, and financial aid as a Diwali gift hamper from the CM.

"We are all excited to see the CM. We were stunned when we learnt about the Diwali gifts from Stalin Aiya. We struggled for basic amenities and ration cards all these years. Now, Aiya (CM) will come here to give it to us," said Ashwini's younger sister Keerthika.

The government machinery swung into action and installed five water tanks to provide tap water to the 68 families in the village. "Five (street) lights have been installed and there is no darkness amy more. There is no more fear about living here," said Keerthika.

"The minister (Sekar Babu) fulfilled the promise he made to my sister within four days," she said. Ashwini's father Sekar said he was proud of his daughter for bringing light to the community. "We have no words to thank the minister and the CM," he said and added that he never thought he would see his village with streetlights and other basic amenities in his lifetime.

முரசொலி

Date : 06-Nov-2021

முதல்வர் மு.க.ஸ்டாலின் இருளர் – நரிக்குறவர்களுக்கு

பூஞ்சேரியில் வழங்கியது வெறும் பட்டா அல்ல; ஆழமான நம்பிக்கை!

ஏ.பி.பி. நாடு இணையதள தொலைக்காட்சியில் நடிகர் சூர்யா – ஜோதிகா மனமார்ந்த பாராட்டு!

சென்னை, நவ. 6–

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இருளர் மற்றும் நரிக்குறவர்களுக்கு பூஞ்சேரியில் வழங்கியிருப்பது வெறும் பட்டா அல்ல; ஆழமான நம்பிக்கை என்று நடிகர் சூர்யா பாராட்டியுள்ளார். மேலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நடிகை ஜோதிகாவும் சூர்யாவும் நெகிழ்ச்சியுடன் நன்றியுடன் பாராட்டும் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து "abpநாடு" இணைய தள தொலைக்காட்சி வெளியிட்டுள்ள சிறப்புச் செய்தி வருமாறு:-

செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரம் அடுத்துள்ள பூஞ்சேரியில் நரிக் குறவர்கள், இருளர் சமுதாய மக்கள் என்று 81 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்த மக்கள் மாமல்லபுரத்துக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளிடத்தில் ஊசி, பாசிமணி விற்றுப் பிழைப்பு நடத்தி வருகிறார்கள். மாமல்லபுரத்தில் உள்ள ஸ்தலசயன பெருமாள் கோவிலில் தமிழக அரசு சார்பில் அன்னதானத் திட்டத்தின்படி தினமும் அன்னதானம் வழங்கப் பட்டு வருகிறது.

இந்த நிலையில் கடந்த அக்டோபர் 24ஆம் தேதி, அங்கு உணவருந்தச் சென்ற பழங்குடியினத்தவரை அவமதித்ததாகவும், அவர்களை எல்லோருடனும் சேர்ந்து உணவருந்த அனுமதிக்கவில்லை என்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த அஸ்வினி என்ற பெண் பேட்டி ஒன்றில் ரொம்ப வேதனையோடு தெரிவித்து இருந்தார். இந்தப் பெண் பேசிய வீடியோ சமூக வலை தளங்களில் வைரலாகவும் ஆனது.

இந்த நிலையில்தான் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அந்தக் கோவிலில் ஆய்வு மேற்கொண்டார். இதுமட்டுமல்லாமல் அங்கு நடந்த அன்னதானத்தில் புகார் சொன்ன பழங்குடிப் பெண் அஸ்வினி உள்ளிட்ட பொதுமக்களோடு அமைச்சர் சேகர்பாபுவும் சேர்ந்து உணவருந்தினார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபுவிடம் கோரிக்கை!

இது தொடர்பான புகைப்படம் சமூக வலை தளங்களில் வைரலானது. அதனைத் தொடர்ந்து அஸ்வினி என்ற அந்தப் பெண்ணிடம் அமைச்சர், 'வேறு ஏதேனும் குறைகள் இருக்கா?' என்று கேட்டார். அப்போது அஸ்வினி, 'தங்கள் பகுதியில் 25 வருடங்களாக தங்கள் சமூகத்தினர் புறம்போக்கு நிலத்தில் வசித்து வருவதாகவும், பட்டா உட்பட எந்தவித அடிப்படை வசதிகளும் தங்களுக்கு இல்லை' என்றும் 'இது சார்ந்த குறைகளைத் தீர்த்து வைக்க வேண்டும்' என்றும் பல்வேறு

கோரிக்கைகளை முன் வைத்தார். இந்தக் கோரிக்கைகளை அமைச்சர் சேகர்பாபு முதல்வர் கவனத்திற்கு எடுத்துச் சென்றார்.

முதல்வர் உத்தரவு!

இதையடுத்து அந்தப் பகுதியில் ஒரு வாரத்திற்குள் எல்லா வசதிகளும் செய்து முடிக்கணும் என அதிகாரிகளுக்கு முதல்வர் உத்தரவிட்டார்.

முதல்வர் உத்தரவின்படி அந்தக் கிராமத்தில் அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்றது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் காலை (4.11.2021) பூஞ்சேரி கிராமத்திற்குச் சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் நரிக்குறவர், இருளர் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா, வாக்காளர் அடையாள அட்டைகள், சாதிச் சான்றிதழ்கள் உள்ளிட்ட ரூபாய் 4.5 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய இந்த நடவடிக்கை அனைத்துத் தரப்பு மக்களிடமும் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது என்றே சொல்ல முடியும்.

சூர்யா – ஜோதிகா பாராட்டு!

இந்த நிலையில் தமிழ் சினிமாவினுடைய முன்னணி நடிகராக இருக்கக்கூடிய சூர்யா முதல்வரைப் பாராட்டி தன்னுடைய 'ட்விட்டர்' பக்கத்தில் ஒரு பதிவை வெளியிட்டு இருக்கிறார். அதில் அவர்,

மாண்புமிகு தமிழக முதல்வர் எம்.கே. ஸ்டாலின் அவர்கள், எளிய பழங்குடி மக்களின் இல்லம் தேடிச் சென்று வழங்கியிருப்பது வெறும் பட்டா அல்ல; புதிய நம்பிக்கை. காலம் காலமாகத் தொடரும் எளிய மக்களின் இன்னல்களுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் என்கிற நம்பிக்கையை அளித்துள்ளது.

– என்று பதிவிட்டுள்ளார்.

நடிகர் சூர்யாவைத் தொடர்ந்து நடிகை ஜோதிகாவும், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களைப் பாராட்டி தன்னுடைய Instagram பக்கத்தில் ஒரு நெகிழ்ச்சியான பதிவை வெளியிட்டு இருக்கிறார். அதில்

நடிகை ஜோதிகா, "இந்த வார்த்தைகள் உண்மையிலேயே என்னுடைய இதயத்தில் இருந்து வருது. 'Justice is truth action' இதனை நீங்க proof செய்துட்டீங்க சார். மக்களுடைய தேவைகளைக் கேட்டறிந்து, அதனை fulfil செய்வதற்கு உங்களால் ஆன முயற்சியினை நீங்க எடுக்குறீங்க. இதில் ரொம்ப முக்கியமான விஷயம் என்ன என்றால், உங்களுடைய உழைப்பு, உடனடி நடவடிக்கைகள். leadership என்பது செயலில் இருக்கு; பதவியில் இல்லை என்பதை proof செய்துட்டீங்க.

education system–இல் நீங்கள் கொண்டு வந்திருக்கிற positive ஆன changes ஒரு குடிமகனா நானும், அகரம் Foundation–ம் கடந்த 16 வருடங்களில் எக்ஸ்பீரியன்சே பண்ணியது கிடையாது.

மனித நேயம் வெற்றி!

இருளர் மற்றும் குறவர் குடும்பத்தினர்களுக்கு பட்டா, பட்டாக்கள், சாதிச் சான்றிதழ்கள் உள்பட பல நலத்திட்ட உதவிகளை நீங்கள் வழங்கி இருக்கீங்க. இதன் மூலமா மனித நேயம் வெற்றி கண்டிருக்குதுன்னே சொல்ல முடியும். உங்களுடைய இந்தச் செயல்கள், நம்முடைய 'political system' மேலே ஒரு நம்பிக்கையைக் கொண்டு வந்திருக்கு.

அம்பேத்கர் 'we are indian firstly and lastly' என்று சொன்னார். அவருடைய நம்பிக்கையை ரியாலிட்டியிலே கொண்டு வந்ததற்காக உங்களுக்கு நன்றி. இதை குடிமகளாக மட்டுமில்லாமல் தியா – தேவ்வுடைய (diya and dev) தாயாகவும் நான் இதைத் தெரிவிக்கக்கிறேன். வருங்கால சந்ததியினருக்கு நீங்க ஒரு முன்னுதாரணமா இருக்கிறதுக்காக உங்களுக்கு நன்றி!

– என்று ஜோதிகா தெரிவித்து இருக்கிறார்.

அண்மையில் சூர்யா, ஜோதிகா இணைந்து தயாரித்த ஜெய்பீம் படம் வெளியாகியிருந்தது. ஞானவேல் இயக்கிய இந்தப் படம் 1995 ஆம் ஆண்டு இருளர் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை ரொம்ப உக்கிரமா சொல்லி இருந்தது. மக்கள் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்ற இந்தப் படத்தை மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்பே பார்த்து பாராட்டி இருந்தது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு "ஏ.பி.பி. நாடு" இணையதள தொலைக் காட்சி சிறப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

முரசொலி

Date : 06-Nov-2021

நரிக்குறவப் பெண்ணிடம் கருணை காட்டிய முதல்வர்!

நெகிழ்கிறார் "யுனெஸ்கோ" விருது பெற்ற கல்வியாளர் - எழுத்தாளர் அசோக் ஸ்வைன்!

மு.க.ஸ்டாலின் சிறந்த தலைவராக திகழ்வதாகப் பாராட்டு!

சென்னை, நவ. 6 –

தன்னைச் சந்தித்த நரிக்குறவப் பெண்ணுக்கு ஆறுதல் கூறியதோடு, அவர்கள் சமுதாயத்துக்கு நலத்திட்டம் அறிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கருணையைக் கண்டு நெகிழ்ந்த யுனெஸ்கோ பீடம் விருது பெற்ற உப்சலா பல்கலைக் கழகப் பேராசிரியரும், சிறந்த கல்வியாளரும், எழுத்தாளருமான அசோக் ஸ்வைன் 'ஒரு தலைவர் என்ன செய்ய வேண்டுமோ அதை முதல்வர் மு.க.ஸ்டாலின் செய்து கொண்டிருக்கிறார்' என்று பாராட்டியுள்ளார்.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.11.2021) செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், பூஞ்சேரியில் வசிக்கும் நரிக்குறவர் மற்றும் இருளர் இன மக்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, பயனாளி திருமதி. அஸ்வினியின் அழைப்பை ஏற்று, அவரது இல்லத்திற்கு நேரில் சென்று நலம் விசாரித்தார். உடன் ஊரக தொழில்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

உலகப்புகழ் பெற்ற எழுத்தாளரும், கல்வியாளருமான அசோக் ஸ்வைன் (1965 ஆம் ஆண்டு பிப்ரவரி 19ல் பிறந்தவர்) உப்சலா பல்கலைக் கழகத்தில் சமுதாயம் மற்றும் மோதல்கள் ஆராய்ச்சித் துறையின் பேராசிரியர் ஆவார். இவர் 2017ஆம் ஆண்டு சர்வதேச தண்ணீர் ஒத்துழைப்புக்கான யுனெஸ்கோ இருக்கையாளராக நியமிக்கப்பட்டார். இதன்மூலம் உப்சலா பல்கலைக் கழகத்தின் முதல் "யுனெஸ்கோ" இருக்கையாளர் என்ற பெருமை பெற்றார்.

இணையதளத்தில் நெகிழ்வுடன் பாராட்டு!

இந்நிலையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சில நாட்களுக்கு முன் மாமல்லபுரம் கோவில் ஒன்றில் நடைபெற்ற "அன்னதானம்" நிகழ்ச்சியில், அனுமதி மறுக்கப்பட்ட பெண்மணியான அஸ்வினி என்பவர் தன்னை வந்து சந்தித்ததைப் பற்றி 'ட்விட்டர்' இணையதளத்தில் குறிப்பிட்டிருந்ததை அறிந்து மிகவும் நெகிழ்ந்துள்ளார்.

அசோக் ஸ்வைன்
கல்வியாளர் - எழுத்தாளர்

அந்த நிகழ்வைக் குறிப்பிட்டு பிரபல கல்வியாளரான அசோக் ஸ்வைன் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களைப் பாராட்டி 'ட்விட்டர்' இணையதளத்தில் பதிவிட்டுள்ளார். அசோக் ஸ்வைன் தனது பதிவில் குறிப்பிட்டிருப்பதாவது–

"அவருடைய பெயர் ஸ்டாலின். ஆனால் அவர் ஒரு தலைவர் எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்து கொண்டிருக்கிறார். ஆதங்கத்தோடு வந்த பெண் அஸ்வினிக்கு ஆறுதல் கூறியது மட்டுமில்லாமல் மு.க.ஸ்டாலின் அவர்கள் செங்கல்பட்டில் உள்ள நரிக்குறவர் மற்றும் இருளர் சமுதாயங்களுக்கு ரூ.4.53 கோடி நலத்திட்டத்தையும் அறிவித்துள்ளார்.

இவ்வாறு பிரபல எழுத்தாளரும், கல்வியாளரும், கல்லூரிப் பேராசிரியருமான அசோக் ஸ்வைன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

முரசொலி

Date : 06-Nov-2021

நரிக்குறவர்களின் இல்லம் தேடிச் சென்ற முதல்வர்!

'மாத்ருபூமி' மலையாள தொலைக்காட்சி பாராட்டு!

'இதெல்லாம் கனவோ' என நரிக்குறவர்கள் புகழாரம்!

சென்னை, நவ. 6 –

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன் தினம் மாமல்லபுரம் பூஞ்சேரி கிராமத்தில் 25 ஆண்டுகாலமாக வசித்து வரும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த நரிக்குறவர் குடும்பத்தினரை நேரில் சந்தித்து அவர்களுக்கு பட்டா, வாக்காளர் அட்டை உள்ளிட்டவற்றை வழங்கி ரூ4.5 கோடி மதிப்பிலான நலத் திட்டங்களை தொடங்கி வைத்தார். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இச்செயலை கேரளாவில் இருந்து வெளிவரும் புகழ் பெற்ற தொலைக்காட்சியான 'மாத்ருபூமி' தொலைக் காட்சி சிறப்புச் செய்தியாக தொகுத்து ஒளிபரப்பியது.

இதுகுறித்து "மாத்ருபூமி" தொலைக்காட்சி ஒளிபரப்பிய சிறப்பு செய்தி வருமாறு:–

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஸ்தல சயனப் பெருமாள் கோவிலில் அன்னதானம் சாப்பிட அனுமதிக்காத நரிக்குறவர் பெண்ணின் இல்லத்திற்குச் சென்று அவரது குடும்பத்தினரிடம் நலம் விசாரித்தார்.

(இச்செய்தியறிந்து அமைச்சர் சேகர்பாபு அதே கோவிலில் அப்பெண்மணியுடன்" அருகில் அமர்ந்து சாப்பிட்ட செய்திகள் சமூக வலைதளங்களில் பரவியது குறிப்பிடத்தக்கது)

மேலும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பழங்குடி இனத்தைச் சேர்ந்த நரிக் குறவர் இன மக்களைச் சந்தித்து, 81 குடும்பங்களுக்கு பட்டாவோடு நிலம், ரூபாய் 4.53 கோடி மதிப்பீட்டில் அங்கன் வாடி கட்டிடங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மேலும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், 21 பேருக்கு வாக்காளர் அடையாள அட்டை, 88 நபர்களுக்கு கம்யூனிட்டி சர்டிபிகேட் வழங்கினார்.

ஒடுக்கப்பட்ட மக்களை கைதூக்கி விடும் முதல்வர்!

ஒடுக்கப்பட்ட (ஒதுக்கி வைக்கப்பட்ட) மக்கள் என்று கருதப்பட்ட பழங்குடி இன மக்களை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சந்தித்தது மட்டுமின்றி அவர்களின் இல்லங்களுக்கு நேரில் சென்று நலம் விசாரித்துள்ளார்.

இது குறித்து மாமல்லபுரத்தில் வசிக்கும் பழங்குடி இன மக்கள் கூறுகையில், "எங்கள் வாழ்க்கையிலேயே இது போன்ற மகிழ்ச்சிகரமான சம்பவம் இதுவரை நடந்ததே இல்லை. இதுவெல்லாம் கனவாக இருக்குமோ? என்று எண்ணக் கூடிய வகையில் இந்த நிகழ்ச்சியை முதல்வர் அவர்கள் எங்களுக்கு செய்துக் கொடுத்திருக்கிறார்."

– என்று நெகிழ்ச்சியுடன் உணர்வுப் பூர்வமாக கூறினர்.

மாமல்லபுரம் ஸ்தலசயனப் பெருமாள் கோவிலில் இரண்டு வாரத்திற்கு முன்பு அங்கு நடைபெற்ற அன்னதானம் வழங்கும் நிகழ்வில், நரிக்குறவ இனத்தைச் சேர்ந்த அஸ்வினி என்ற பெண் கைக் குழந்தையுடன் சாப்பிட சென்றபோது அனுமதிக்கப்படவில்லை. அப்பெண்மணி மற்றும் நரிக்குறவர்களுடன் அமர்ந்து அமைச்சர் சேகர்பாபு உணவருந்திய நிகழ்வு இன்னும் நம் நினைவில் இருந்து அகலாத நிலையில், முதல்வர் அவர்கள், நரிக்குறவ இன மக்களை நேரில் சந்தித்தது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் முதல்வர் அவர்கள் அம்மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றது மட்டுமின்றி, அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதாகவும் உறுதி அளித்துள்ளார்.

இதன் மூலம் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கையால், தமிழகத்தில் சாதிக்கு அளிக்கும் முக்கியத்துவம் ஒழிந்து புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு மாத்ருபூமி தொலைக்காட்சி சிறப்பு செய்தியில் ஒளிபரப்பியுள்ளது.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்
Date : 06-Nov-2021

ஆதரவுக்கரம் நீட்டிய முதல்வர்

செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் பூஞ்சேரி கிராமத்தை சேர்ந்த நரிக்குறவர், இருளர் சமூக மக்களுக்கு, மாமல்லபுரத்துக்கு சுற்றுலா வரும் பயணிகளிடம் ஊசி, பாசிமணி விற்பதுதான் முழுநேர தொழிலாக உள்ளது. இவர்கள், கடந்த அக்டோபர் மாதம் 24-ம் தேதி அங்குள்ள ஸ்ரீதலசயன பெருமாள் கோவிலில் அன்னதானம் சாப்பிட சென்ற போது, சிலரால் விரட்டியடிக்கப்பட்டனர். இதனால், மனவேதனை அடைந்த நரிக்குறவ சமுதாய பெண் அஸ்வினி, தனது மனக்குமுறலை வெளியிட்டார். இந்த காட்சி, சமூக வலைதளங்களில் வைரலானது.

இதனை கவனித்த தமிழக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, ஸ்ரீதலசயன பெருமாள் கோவிலுக்கு நேரடியாக சென்றார். எந்த அன்னதான கூடத்தில் உணவு மறுக்கப்பட்டதோ, அதே அன்னதான கூடத்தில் அஸ்வினி மற்றும் அவரது சமுதாய மக்களுடன் அமர்ந்து உணவு அருந்தினார். இந்த விவகாரம், தமிழக் முதல்வரின் கவனத்துக்கு சென்றது. உடனே அவர், அப்பகுதி மக்களுக்கு ஒரு வாரத்தில் அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டும் என உத்தரவிட்டார். இதையடுத்து, மின்கம்பம் அமைத்தல், குடிநீர் குழாய் பொருத்துதல், புதிய சாலைகள் அமைத்தல் என அரசுத்துறை அதிகாரிகள் மின்னல் வேகத்தில் செயல்பட்டு, பூஞ்சேரி கிராமத்தின் தோற்றத்தையே மாற்றிவிட்டனர்.

இந்நிலையில், தீபாவளி பண்டிகை அன்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், பூஞ்சேரி கிராமத்துக்கு சென்றார். நரிக்குறவர் மற்றும் இருளர் இன மக்கள் என 283 பேருக்கு ₹4.53 கோடி மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இதை பார்த்து அச்சமுதாய மக்கள் நெகிழ்ந்து போயினர். அன்று குரல் கொடுத்த அதே அஸ்வினி, இன்று முதல்வருக்கு, மேடையிலேயே நன்றி தெரிவித்து உணர்ச்சி பொங்க பேசினார். புதிதாக தயாரித்த ஊசி, பாசிமணி மாலையை முதல்வருக்கு அணிவித்து மகிழ்ந்தார்.

நலத்திட்ட உதவி வழங்கியது மட்டுமின்றி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், நரிக்குறவர் சமுதாய வீடுகளுக்கு சென்று, அவர்களின் வாழ்வாதார நிலையை நேரில் பார்வையிட்டார். சிறிது நேரம் அங்கு அமர்ந்து பேசிவிட்டு சென்னை திரும்பினார். எந்த முதல்வரும் காட்டாத பரிவை மு.க.ஸ்டாலின் காட்டியதால், நரிக்குறவர் இன மக்கள் மகிழ்ச்சியில் திக்குமுக்காடி போய்விட்டனர்.

'தமிழக முதல்வர் எந்த ஆதரவும் இல்லாமல் தவித்த எங்கள் சமுதாய மக்களுக்கு, வீட்டு மனை பட்டா, வாக்காளர் அடையாள அட்டை, ரேஷன் கார்டு, ஆதார் அட்டைன்னு எல்லாத்தையும் கொடுத்துட்டு போறாரு. எங்களை நோக்கி ஆதரவுக்கரம் நீட்டியிருக்காரு. அவருக்கு என்ன கைமாறு செய்யப்போறோம்னு தெரியலை'' என்று ஆனந்த கண்ணீருடன் அஸ்வினி தெரிவித்தார்.

விளிம்புநிலை மக்களின் துயர் துடைத்தும் அவர்களின் வாழ்வாதாரம் மேம்படவும் நற்பணிகள் செய்துவரும் தமிழக முதல்வர் மாநிலம் கடந்து நாடு முழுக்க பாராட்டப்பட்டு வருகிறார். மக்களின் ஆட்சி என்பதன் காட்சியே இது.

போலீசாருக்கு ஒரு நாள் ஓய்வு

முதலமைச்சருக்கு பாராட்டு!

சென்னை,நவ.6–

போலீசாருக்கு வாரத்தில் ஒரு நாள் ஓய்வு கொடுத்துள்ள முதலமைச்சருக்கு போலீஸ் சங்கம் பாராட்டு தெரிவித்துள்ளது

இது தொடர்பாக போலீஸ் ஆதரவு சங்கம் செயலாளர் முகமது ஜாபர் அலி விடுத்துள்ள அறிக்கையில் கூறியதாவது:–

150 ஆண்டு வரலாறு கண்ட இந்திய போலீஸ் வரலாற்றில் அவர்களுடைய நலனை கருதி வாரம் ஒரு நாள் போலீசாருக்கு ஓய்வு என்பது பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய மகத்தான வரலாற்றுச் சாதனை மிக்க அறிவிப்பாகும்.

சட்டசபை கூட்டத்தொடரில் அறிவித்ததை வெறும் அறிவிப்போடு நின்று விடாமல் சொன்னதை போல் சட்டமாக கொண்டுவந்து போலீசாருடைய வாழ்வில் ஒளியேற்றியுள்ளார் முதலமைச்சர் ஓடிக் கொண்டே இருக்கும் போலீசாருக்கு ஒரு நாள் ஓய்வு கொடுத்து நாடும் வீடும் நன்றாக இருக்க வழிகாட்டிய முத்தான முதல்வருக்கு நெஞ்சார்ந்த நன்றிகளை காணிக்கையாக்குகிறோம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசு பதவியேற்றதுமே, இலங்கைத் தமிழ் அகதிகளின் நலனை மேம்படுத்துவதில் தனிக்கவனம் செலுத்தியது. முதலாவதாக, இலங்கை அகதிகள் முகாம் என்ற பெயரிலிருக்கும் 'அகதிகள்' என்ற அதிக வலி தரக்கூடிய வார்த்தையை நீக்கிவிட்டு, இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாம் என்று மாற்றியமைத்தார். அடுத்ததாக, தமிழ்நாடுவாழ் இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வுக்கான திட்டங்களை செம்மைப்படுத்துவதற்காக, சிறுபான்மையினர் நலம் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில், இலங்கைத் தமிழர் நலன் காக்கும் குழுவை, கடந்த அக்டோபர் 28-ம் தேதி முதல்வர் அறிவித்தார்.

இலங்கைத் தமிழர்களின் நலன் காக்கும் குழு அமைக்கப்பட்டதுமே, துரிதகதியில் முதற்கட்டப் பணியில் தமிழக அரசு இறங்கிவிட்டது. அதன்படி, தமிழகப் பொது மறுவாழ்வுத் துறை சார்பில், தமிழகம் முழுவதும் உள்ள 106 இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிப்பவர்களுக்கு புதிய குடியிருப்புகளுக்கான அடிக்கல் நாட்டு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, வேலூரையடுத்த மேல்மொணவூரில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி, சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில், இலங்கைத் தமிழர்களுக்கு ரூ.142.16 கோடி மதிப்பீட்டில், 3,510 குடியிருப்புகள் கட்டுவதற்கான திட்டத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. 78 மறுவாழ்வு முகாம்களில் குடிநீர், மின்சாரம், சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.30 கோடியும், 58,747 பேருக்கு இலவச அரிசி, உயர்த்தப்பட்ட பணக்கொடை மற்றும், இலவச கைத்தறித் துணிமணிகள் வழங்குதல், 18,890 குடும்பங்களுக்கு இலவச எரிவாயு அடுப்பு, மானிய விலையில் 5 எரிவாயு சிலிண்டர்கள் மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள் வழங்குதல், 5000 பேருக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் உபகரணங்களும் வழங்குதல், அவர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம்களை அமைத்தல், 92 மாணவர்களின் கல்லூரிப் படிப்புக்கு கல்வி மற்றும் விடுதிக் கட்டணத்தை வழங்குதல், 940 மாணவ மாணவியர்களுக்கு உயர்த்தப்பட்ட கல்வி உதவித்தொகை வழங்குதல் உள்பட மொத்தம்

மேல்மொணவூர் முகாமில் முதல்வர் ஸ்டாலின்

ரூ.225.86 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

விழாவில் பேசிய முதல்வர், "உலகின் பல்வேறு பகுதிகளிலும் தமிழர்கள் வசித்துவருகிறார்கள். எந்த நாட்டில் வசித்துவந்தாலும், தமிழர்கள் அனைவரும் ஒரு தாய் மக்கள்தான். குறிப்பாக, நாம் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள். இலங்கையில் வசித்துவந்த தமிழர்கள், 1983-ம் ஆண்டிலிருந்து, ஈழத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இங்கே வந்த தமிழர்கள், மறுவாழ்வு முகாம்களிலும், முகாம்களுக்கு வெளியிலுமாகத் தங்கியுள்ளனர்கள்.

1997-ம் ஆண்டில் கலைஞர் முதல்வராகப் பொறுப்பேற்றிருந்த போது இலங்கைத் தமிழர்களுக்காக ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்தினார். தமிழ்நாட்டில் கடந்த 10 ஆண்டுகளாக ஆட்சிப் பொறுப்பிலிருந்த அ.தி.மு.க. அரசு, இங்குள்ள இலங்கைத் தமிழர்களுக்கு எவ்வித நலத்திட்ட உதவிகளையும் செய்து தரவில்லை. தற்போது, தி.மு.க. அரசு பொறுப்பேற்றதும் இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வுத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இலங்கைத் தமிழர்களுக்காக 1997-ல் 3,594 புதிய வீடுகள் கட்டப்பட்டன. 1998-99இல் 3,816 வீடுகள் கட்டப்பட்டன. 2009-ல் 100 கோடி ரூபாய் மதிப்பில் அடிப்படை வசதிகள் மேம்படுத்த நிதி ஒதுக்கப்பட்டது. தமிழ்நாட்டிலுள்ள 106 முகாம்களில், 19,046 குடியிருப்புகளில், மிகவும் பழுதடைந்த 7,469 குடியிருப்புகள் புதிதாக கட்டப்பட உள்ளன. முதல் கட்டமாக 290 சதுரடி பரப்பளவுள்ள 3,510 புதிய வீடுகள் கட்டப்பட உள்ளன" என்று குறிப்பிட்ட முதல்வர், "நீங்கள் அகதிகள் இல்லை என்பதுடன் அகதிகள் முகாம் என்பதை இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இலங்கைத் தமிழர்கள் ஆதரவற்றவர்கள் அல்ல... என்னை உங்களின் உடன்பிறப்பாக ஏற்றுக் கொள்ளுங்கள். இலங்கைத் தமிழர்களுக்கான நலத்திட்டங்கள் மேலும் தொடரும். இலங்கைத் தமிழர்களுக்கு இந்த அரசு உற்ற துணையாக நிற்கும்" என்று உருக்கமாகக் குறிப்பிட்டார்.

இலங்கைத் தமிழர் நலன் காக்கும் குழுவில் தலைவராக அமைச்சர் மஸ்தானும், துணைத் தலைவராக வட சென்னை எம்.பி. கலாநிதி வீராசாமியும் மற்றும் உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டனர். மூத்த பத்திரிகையாளர் என்ற முறையில் இடம்பெற்றுள்ள நம்முடைய நக்கீரன் இதழின் பொறுப்பாசிரியர் கோவி.லெனினும் குழு உறுப்பினர்களும், இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாமைப் பார்வையிட்டு... அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தனர். எந்த ஆண்டில் இங்கு வந்து குடியேறினார்கள், அடிப்படை வசதிகள் எப்படி உள்ளன என்று கேட்டறிந்தனர். தங்களுக்கு குடியுரிமையும், வாக்குரிமையும் வேண்டுமென்பதை முக்கிய கோரிக்கையாக வைத்தனர். மேலும், அரசு வேலைவாய்ப்புகள், மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைப்பதில் சிக்கல்கள் இருப்பதாகத் தெரிவித்தனர். ஒரு கல்லூரி மாணவி, தங்களுக்கு முகாம்களில் நூலகம் வேண்டுமென்று கேட்டார். 'அவர்களுடைய கோரிக்கைகள் அனைத்தும் அரசின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார் பொறுப்பாசிரியர். நூலகம் வேண்டுமென்று கேட்ட மாணவியைப் பாராட்டிய பொறுப்பாசிரியர், தன்வசமிருந்த நூல்களைப் பரிசளித்தார்.

'இன்றைய நலத்திட்ட விழாதான் எங்களுக்கு உண்மையான தீபாவளி' என்று அங்குள்ளவர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

-தெ.சு.கவுதமன், ராஜா

வாழ்க்கை ஒரு வட்டம்... இன்று நீ பிறருக்கு செய்வதை, நாளை பிறர் உனக்கு அதையே செய்வார்கள்

கொங்கு நிர்வாகிகள் முதல்வருக்கு நன்றி

சென்னை, நவ. 7–

மகளிர் கல்லூரி அமைக்க உதவிய, முதல்வர் ஸ்டாலினுக்கு, கொங்கு வேளாளர் அறக்கட்டளை நிர்வாகிகள் நன்றி தெரிவித்தனர்.

திருப்பூர் – அங்கேரி பாளையம் சாலையில், கொங்கு வேளாளர் அறக்கட்டளை சார்பில், கொங்கு வேளாளர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, 30 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது. இப்பள்ளியில் 4,000 ஏழை மாணவ – மாணவியர் மிகக் குறைந்த கட்டணத்தில் படித்து வருகின்றனர்.

இவர்களின் மேற்படிப்புக்காக, திருப்பூர் மாவட்டம், அவிநாசி – வஞ்சிபாளையம் நெடுஞ்சாலையில், கொங்கு வேளாளர் அறக்கட்டளைக்கு சொந்தமான நிலத்தில், தீரன் சின்னமலை கலை அறிவியில் கல்லூரி என்ற பெயரில், மகளிர் கல்லூரி துவங்க நிர்வாகம் முடிவு செய்தது.

இதற்காக, விவசாய நிலத்தை கல்விப் பணிக்கு மாற்றி தரக்கோரி, நான்கு ஆண்டுகளாக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இது குறித்து முதல்வர் ஸ்டாலினிடம் கோரிக்கை வைத்ததும், ஒரே வாரத்தில் பிரச்னைக்கு தீர்வு கண்டார்.

அதைத் தொடர்ந்து, கொங்கு வேளாளர் அறக்கட்டளை தலைவர் 'பெஸ்ட்' ராமசாமி மற்றும் நிர்வாகிகள், எம்.பி., சுப்பராயன் ஆகியோர், நேற்று தலைமைச் செயலகத்தில், முதல்வரை சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

10.5% இடஒதுக்கீடு ரத்தை எதிர்த்து மேல்முறையீடு

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வன்னியர் சங்கத்தினர் நன்றி

சென்னை, நவ. 17: வன்னியர் குல சத்திரியர் கூட்டு இயக்கத் தலைவர் ராம. நாகரத்தினம், பொதுச் செயலாளர் ஆர்.ஏ.ஆர். கே.சத்திரியர், ஆலோசகர் பெருந்தமிழன் ஆகியோர் வெளியிட்ட அறிக்கை:

வன்னியர் குலசத்திரியர்களுக்கு 10.5சதவீதஉள் இட ஒதுக்கீட்டை உயர்நீதிமன்ற மதுரை கிளை ரத்து செய்துவிட்டது. இதுவன்னியர் சமுதாயத்திற்கு பேரிடியாக விழுந்தது. அப்போதே தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்வோம் என்று அறிவித்தது. அதன் பேரில் 10.5% சதவித, உள்ஒதுக்கீட்டு வழக்கில், தமிழக அரசால், உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2011ம் ஆண்டு சட்டமன்ற பொதுத்தேர்தலில் முத்தமிழறிஞர் கலைஞர் நான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் வன்னியர் சமுகத்திற்கு அவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப உள் தனி இடஒதுக்கீடு தருவேன் என்று திண்டிவனம் தேர்தல் பிரசார பரப்புரையில் உறுதியளித்தார். அவர் அளித்த உறுதியை விக்கிரவாண்டி தேர்தலுக்கு முன்பு 7.10.2019 அன்று விரிவான அறிக்கையின் மூலம் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

எனவே, கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் வன்னியர்களின் வாழ்வாதார உரிமையை மேல்முறையீடு செய்து சமூகநீதியை கட்டிக்காக்கும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு 2.5 கோடி வன்னியர் குல சத்திரியர்கள் சார்பாக கோடானுகோடி நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழ் முரசு

Date : 07-Nov-2021

முதல்வர்களில் முன்னுதாரணமாக திகழ்பவர்

மு.க.ஸ்டாலினுக்கு கமல் நன்றி

சென்னை, நவ.7-
முதல்வர்களில் முன்னுதாரணமாக திகழும் மு.க.ஸ்டாலினுக்கு மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் நன்றி தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் தனது டிவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:

இனிய நண்பரும், முதல்வர்களில் முன்னுதாரணமாக திகழ்பவருமான மு.க.ஸ்டாலின், தங்களின் மனப்பூர்வமான வாழ்த்துகள் என் பிறந்தநாளுக்கு மேலும் வர்ணம் சேர்க்கிறது. அன்பும் நன்றியும்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

THE NEW INDIAN EXPRESS

Date : 07-Nov-2021

Kongu Vellalar Trust calls on CM Stalin

Chennai: Office bearers of Kongu Vellalar Trust, led by Best S Ramasamy, thanked Chief Minister MK Stalin for resolving an issue on establishing an arts and sciences college for women in the name of freedom fighter Dheeran Chinnamalai on Avinashi-Vanjipalayam High Road. The trust had been trying for long to convert its agricultural land to establish the college, they said.

முரசொலி

Date : 08-Nov-2021

பூஞ்சேரியில் நடைபெற்ற வரலாற்று நிகழ்வு!

முதல்வரை வாழ்த்திப் பாராட்டாதோரே இல்லை!

அரசு ஊழியர் – ஆசிரியர் நலக் கூட்டமைப்பின் தலைவர் சா.அருணன் அறிக்கை!

சென்னை, நவ. 8-

தமிழ்நாடு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நலக் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

செங்கல்பட்டு மாவட்டம் மகாபலிபுரம் பூஞ்சேரி கிராமத்தில் நரிக் குறவர் இருளர் இன 81 குடும்பங்களுக்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆட்சி காலத்தில் வீடுக்கட்டி குடியேர இடம் ஒதுக்கித் தந்தார். பின்பு வந்த ஆட்சியாளர்கள் அவர்களுக்கு பட்டா சாதி சான்று, குடும்ப அட்டை, வாக்காளர் இருப்பிட சான்று உள்ளிட்டவை வழங்க மறுத்தனர்.

இந்நிலையில் சமீபத்தில் அப்பகுதியில் உள்ள பெருமான் கோயிலில் அன்னதானம் வழங்க மறுக்கப்பட்டதாக அஸ்வினி என்ற நரிக்குறவர் பெண்மணி சமூக வலைதளங்களில் தனது ஆதங்கத்தையும் வேதனையையும், உரிமை மறுக்கப்பட்டதையும், தைரியமாகவும், துணிச்சலுடனும் வெளிப்படுத்தினார்.

இதனை அறிந்த தமிழ்நாடு முதலமைச்சர், தமிழ்நாடு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களை அழைத்து விசாரிக்கச் சொன்னது மட்டுமல்லாமல், அன்னதான நிகழ்ச்சியில் அத்துறை அமைச்சரையே அஸ்வினியை பக்கத்தில் அமரவைத்து உணவு சாப்பிட வைத்து அவர்களுக்கு என்ன குறைகள் என்ன தேவைகள் இருக்கிறது என கேட்டறியச் சொல்லி அனைத்தும் உடனே நிறைவேற்ற வேண்டும் என உத்தரவு பிறப்பித்து பூஞ்சேரியில் அதற்கான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யச் சொல்லி பாசிமணி ஊசி போன்றவற்றை மகாபலிபுரத்திற்கு வரும் சுற்றுலா பயணிகளிடம் அன்றாடம் விற்றுப் பிழைப்பை ஓட்டி வரும் நரிக்குறவர், இருளர் இன 81 குடும்பங்களுக்கு கலைஞர் ஆட்சிக் காலத்தில் ஒதுக்கப்பட்ட வீட்டு மனைகளுக்கு பட்டா, சாதி சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை, இருப்பிட சான்று, கடன் உதவி என சுமார் ரூ. 4.5 கோடி செலவில் நலத்திட்ட உதவிகளை ஓயா உழைப்பாளி சமத்துவ நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிகழ்ச்சியில கலந்து கொண்டு வழங்கினார்.

விழா மேடையில் அஸ்வினி அணிவித்த பாசிமணியை முதல்வர் அவர்கள் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டார். பிறகு அவர் அணிவித்த பொன்னாடையையும் பெற்றுக்கொண்டது போற்றுதலுக்கு உரியது. ஒரு தலைவர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இது முன்மாதிரி உதாரணம். அதோடு அவர்கள் வசிக்கும் ஒவ்வொரு இல்லத்திற்கும் நேரடியாகச் சென்று அவர்களுடன் அமர்ந்து கலந்துரையாடிய நிகழ்வு என்பது அனைவரையும் நெகிழ்ச்சியடையச் செய்தது. இந்தியாவே திரும்பி பார்க்க செய்தது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடத்தில் பெரியாரின் சமத்துவச் சிந்தனையை கண்டேன், பேரறிஞர் அண்ணாவின் கூற்றுப்படி ஏழையின் சிரிப்பில் இறைவன் தோன்றினான், அண்ணல் அம்பேத்காரின் சட்டத்திற்கு வடிவம் கிடைத்ததை உணர்ந்தேன். முத்தமிழ் அறிஞர் கலைஞரின் ஆற்றல் அறிவு சமத்துவபுரத்தை கண்டேன். அதாவது தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, அண்ணல் அம்பேத்கர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் மறு உருவமாக சமத்துவ நாயகனாக அனைவரையும் ஒரே நிலையில் நேசிக்கும் ஒப்பற்ற தலைவர், ஒரு தலைவர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு தங்களைத் தவிர வேறு உதாரணம் வேறு என்ன இருக்க முடியும்.

இந்தியாவில் இருக்கும் முதலமைச்சர்களில் முதன்மை முதலமைச்சர் என்றால் அது மிகையாகாது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நலகூட்டமைப்பு நிறுவனத் தலைவர் சா. அருணன் தெரிவித்தார்.

தினகரன்

Date : 08-Nov-2021

மீண்டும் வெள்ளம்

கொரோனா பாதிப்பில் இருந்து ஓரளவுக்கு மீண்டு விட்ட தமிழகத்திற்கு பருவமழை மற்றுமொரு பேராபத்தை உருவாக்கி நிற்கிறது. தமிழகத்தில் கடந்த 26ம் தேதி வடகிழக்கு பருவமழை தொடங்கி விட்டது. இவ்வாண்டு தொடக்கம் முதலே நல்ல மழையை காணமுடிகிறது. தீபாவளி பண்டிகையை ஒட்டி தென்மாவட்டங்களில் கனமழை கொட்டித் தீர்த்தது. இப்போது சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு உள்ளிட்ட மாவட்டங்களில் மழை சுழன்று அடிக்கிறது.

2015க்கு பின்னர் கனமழையை தமிழகத்தின் தலைநகர் இப்போது எதிர்கொண்டுள்ளது. விடிய விடிய கொட்டி வரும் மழையால் பல்வேறு இடங்களில் குடியிருப்புகளில் வெள்ளம் புகுந்துள்ளது. செம்பரம்பாக்கம், பூண்டி, புழல் உள்ளிட்ட ஏரிகள் நிரம்பிவிட்ட நிலையில், உபரிநீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் கூவம், அடையாறு, கொசஸ்தலை ஆறுகளில் வெள்ளம் வர தொடங்கியுள்ளது.

வானிலை ஆய்வு மையம் சென்னைக்கு ரெட் அலர்ட் விடுத்துள்ள சூழலில், அடுத்த 3 தினங்களுக்கு கனமழை பெய்யும் என்பதால் சென்னை வாசிகள் அச்சத்தில் உள்ளனர். திரும்பிய திசையெல்லாம் வெள்ளக்காடாக காட்சியளிப்பதால், போக்குவரத்தும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், தமிழக அரசின் வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகளும் மக்கள் பாராட்டும் வகையில் உள்ளது.

நவம்பர், டிசம்பர் மாதங்களில் கனமழை பெய்யும் என வானிலை ஆய்வாளர்கள் எச்சரித்த நிலையில், கடந்த மாதமே தமிழக அரசு வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளில் களமிறங்கி விட்டது. இப்பணிகளுக்காக மாவட்டத்திற்கு ஒரு அமைச்சரை நியமனம் செய்ததோடு, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலெக்டர்களுடன் ஆலோசனை நடத்தி தேவையான உத்தரவுகளை பிறப்பித்தார். தமிழகத்தில் கடந்த 6 தினங்களில் இயல்பை விடவும் கூடுதலாக 40 சதவீதம் மழை பெய்துள்ளது. வெள்ள தடுப்புக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் முகாமிட்டுள்ள அமைச்சர்கள் பம்பரமாக சுழன்று பணியாற்றி வருகின்றனர்.

சென்னையில் தற்போது பெய்து வரும் கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை முதல்வரே நேரில் களமிறங்கி பார்வையிட்டு வருகிறார். மாநகராட்சி அதிகாரிகளை அவர் முடுக்கி விட்டு, மழைநீர் தேங்குவதை அகற்றும் பணிகளை வேகப்படுத்தி வருகிறார். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் மீட்பு பணிகளுக்காக அரசு இயந்திரம் முழுவீச்சில் இயங்குகிறது. வெள்ள பாதிப்பு மற்றும் உதவிகளுக்காக தொலைபேசி எண்கள் அரசு சார்பில் அறிவிக்கப்பட்டு, துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னையில் கனமழையை கருத்தில் கொண்டே தீபாவளி விடுமுறை முடிந்து சென்னைக்கு திரும்புவோர் பயணத்தை தள்ளி வைக்குமாறு தமிழக முதல்வர் கேட்டுக் கொண்டுள்ளார். மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண பணிகளை உடனடியாக செய்திடவும் எம்.பி. எம்எல்ஏக்கள், உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார். கனமழை ஒருபக்கம் பயமுறுத்தினாலும், அரசு இயந்திரம் நம்மோடு இருக்கிறது என்ற நம்பிக்கை பொதுமக்களுக்கு ஓர் உந்துசக்தியாய் உள்ளது.

முரசொலி

Date : 09-Nov-2021

முதல்வர் மு.க.ஸ்டாலின் ஓர் உதாரண புருஷர்!

கால்டாக்ஸி ஓட்டுநர் ஞானராஜ் நெகிழ்ச்சி!

சென்னை, நவ. 9 –

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஓர் உதாரண புருஷர் ஆகிவிட்டார் என்று நெகிழ்ந்துபோய் சொல்லி இருக்கிறார் கால் டாக்ஸி ஓட்டுநர் ஞானராஜ்.

அவரது கால்டாக்ஸியில் பயணம் செய்த 'மக்கள் குரல்' ராம்ஜி, ஓட்டுநர் ஞானராஜின் நெகிழ்ச்சி மிகுந்த வார்த்தைகளால் பூரித்து போய் அதை அப்படியே தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகனுக்கு கடிதமாக எழுதியுள்ளார்.

அந்தக் கடிதம் வருமாறு:–

கொட்டும் மழை. அதன் காரணமாய் இன்று (8 ஆம் தேதி) காலை சாலிகிராமம் எல்.ஐ.சி. வரையிலான ஷேர் ஆட்டோ / கால் டாக்ஸியில் பயணிக்கும் சூழல் ஏற்பட்டது. அந்த ஆட்டோ ஓட்டுனர் பெயர் ஞானராஜ். (அலைபேசி எண் 93804 37734.)

தலைவர் முதல்வர் பற்றிய பேச்சு வந்தது. வடசென்னை பெரம்பூர் பேரக்ஸ் சாலையில் நேற்று 7 ஆம் தேதி வெள்ளம் பாதித்த பகுதிகளை பார்வையிட்டு நேரில் ஆறுதல் சொன்னதையும், கொளத்தூர் பகுதியில் பகல் 12 மணி அளவில் பாதித்த மக்களுக்கு தன் கையால் உணவுப் பொட்டலங்கள் வினியோகம் செய்ததையும் முதல்வரின் இந்த இரு செயல்களையும் மதிய உணவு சாப்பிடும் நேரம் தொலைக்காட்சியில் பார்த்த ஞானராஜ், இன்ப அதிர்ச்சி யில் உறைந்து இருக்கிறார்.

"சான்சே.... இல்லை.... இப்படியும் ஒரு முதல்வரா ? மழைக் கோட்டு அணிந்து முழங்கால் அளவு தண்ணீரில் நடந்து, குறை கேட்டு, நிவாரணப் பணிகளை முடுக்கி விட்டது கண்டு நெகிழ்ந்து போனேன்.

எத்தனை மக்கள், எத்தனை இடங்களில் மழை வெள்ளத்தில் சிக்கி வீட்டுக்குப் போக தவிப்பார்கள் என்று ஒரு நினைப்பு எனக்கு வந்தது.

தலைவர் காட்டிய வழியில் நாமும் நடப்போம் என்றதன் உணர்வில்... ஷேர் ஆட்டோ/ கால் டாக்ஸி எடுத்து ஓட்டி, நடுவழியில் நின்ற மக்களை அவரவர் இறங்கும் இடத்தில் இறக்கி விட்டு வந்தேன் (கட்டணம் வசூலித்து).

இன்று காலையில் இருந்து மழை தூறிக் கொண்டு இருந்த சூழ்நிலையிலும், வீட்டில் முடங்கிவிடாமல், மக்கள் சேவையில் மகிழ்ச்சியோடு பயணித்துக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னதுடன் முதல்வர் உதாரண புருஷர் ஆகி விட்டார்'' என்றும் நெகிழ்ந்து போய் சொன்னார் ஞானராஜ்.

இதை தங்களின் பார்வைக்கு கொண்டு வருகிறேன். தலைவரின் காதுகளுக்கும் இத்தகவல் எட்டட்டும்.

இவ்வாறு 'மக்கள் குரல்' ராம்ஜி தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தினத் தந்தி

Date : 09-Nov-2021

வெள்ளக் காடாக்கிய கனமழை; ஓடோடி வந்த மு.க.ஸ்டாலின்!

தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை காலங்களில் பெய்யும் மழையைத்தான் தமிழகம் நம்பியிருக்கிறது. அதுவும் அதிகமழை பொழியும் வடகிழக்கு பருவமழையைத்தான் ஒட்டுமொத்த தமிழ்நாடே எதிர்நோக்கி இருக்கிறது.

வடகிழக்கு பருவமழையை பொருத்தமட்டில், "பெய்தால் பெருவெள்ளம், குறைந்தால் வறட்சி" என்ற நிலைதான் இருக்கிறது. அந்தவகையில், 2015-ம் ஆண்டு வடகிழக்கு பருவமழையின்போது, சென்னையில் ஒரே நாளில் 29 செ.மீ. மழை கொட்டித்தீர்த்தது. அதன்பிறகு, 2016-ல் 15 செ.மீ., 2017-ல் 18 செ.மீ., 2018 மற்றும் 2019-ல் தலா 15 செ.மீ., 2020-ல் 16 செ.மீ. மழை ஒரே நாளில் பதிவாகியுள்ளது.

இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை கடந்த மாதம் (அக்டோபர்) 25-ந்தேதி தொடங்கியது. அப்போது முதல், மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. டெல்டா மாவட்டங்களில் கனமழை பெய்தது. கடந்த சனிக்கிழமை முதல் சென்னை மற்றும் பெரும்பாலான

மாவட்டங்களில் அதிகனமழை பெய்து வருகிறது. சென்னையில் சனிக்கிழமை நள்ளிரவு 1 மணி முதல் 1½ மணிவரை வானத்திலிருந்து அருவிபோல மழை கொட்டியது. அந்த ஒரேநாளில் 23 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. அக்டோபர் 1-ந்தேதி முதல் நவம்பர் 7-ந்தேதி வரை பெய்த மழையை கணக்கிட்டால், தமிழ்நாட்டில் வழக்கமான அளவைவிட 43 சதவீதம் கூடுதல் பெய்துள்ளது.

ஏரி, குளம், அணைகள் எல்லாம் நிரம்பிவிட்டதால், அடுத்த ஓராண்டுக்கு தண்ணீர் பஞ்சம் இருக்காது என்று மனநிறைவு கொண்டாலும், இனி பெய்யும் மழைநீர் வீணாகக் கடலில் போய் சேருமே என்ற மனக்குறையும் இருக்கிறது. ஏரி, குளங்களின் கரைகளை உயர்த்தி, கொள்ளளவை அதிகரித்து, புதிய நீர் ஆதாரங்களை உருவாக்கினால், தமிழ்நாடு தண்ணீர் வளமிக்க மாநிலம் என்ற பெயரை பெற்றுவிடுமே என்ற ஆசையும் மக்கள் மனதில் இருக்கிறது.

தமிழ்நாட்டில் அடுத்த 5 நாட்களுக்கு காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியிருக்கிறது. ஆனால், வானிலை ஆராய்ச்சி நிலையத்திடம், மழை வருவதை துல்லியமாக கணித்துச்சொல்லும் ரேடார்கள் இல்லை என்பது சற்று வருத்தத்திற்குரியது. உடனடியாக, அதற்கான ஏற்பாடுகளையும் செய்யவேண்டும்.

சென்னைவாசிகளால் ஒருநாள் மழையையே தாங்க முடியவில்லை. வடகிழக்கு பருவமழை காலம் 2 மாதம் இருக்கும் நிலையில், தொடர்ந்து மழை பெய்தால் என்ன நிலை ஏற்படுமோ? என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது. முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், சென்னையில் நேற்று முன்தினமும், நேற்றும் அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர்பாபு, தலைமைச்செயலாளர் வெ.இறையன்பு, பெருநகர சென்னை மாநகராட்சி கமிஷனர் ககன்தீப்சிங் பேடி, போலீஸ் டி.ஜி.பி. சைலேந்திரபாபு ஆகியோருடன் மழை வெள்ளப்பகுதிகளை பார்வையிட்டார். முட்டளவு தண்ணீரில் நடந்து சென்றபடியே அதிகாரிகளுக்கு அடுக்கடுக்கான உத்தரவுகளை பிறப்பித்தார். பாதிக்கப்பட்ட மக்களிடம் குறைகேட்டது மட்டுமல்லாமல், நிவாரண உதவிகளும் வழங்கினார். மேலும், அதிகாரிகளுடன் ஆய்வுக்கூட்டங்களையும் நடத்தி மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டார். இதுபோல, மற்ற மாவட்டங்களிலும் பணிகளை துரிதப்படுத்த அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

தேசிய பேரிடர் மீட்புப் படையினர் சென்னை, திருவள்ளூர், மதுரையில் தயார் நிலையில் உள்ளனர். மழை வெள்ள பாதிப்பு குறித்து, பிரதமர் நரேந்திரமோடி முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் தொலைபேசி மூலம் கேட்டறிந்தார். அப்போது முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், மழை பாதிப்பு குறித்தும், தமிழக அரசு மேற்கொண்டுவரும் நிவாரணப் பணிகள் குறித்தும் எடுத்துரைத்தார். மாநில பேரிடர் நிதி கொரோனா நிவாரண பணிகளுக்கும், இதுவரை ஏற்பட்ட பல்வேறு பாதிப்புகளுக்கும் செலவாகிவிட்டதால், தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து போதுமான நிதியை ஒதுக்கும்படியும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மத்திய அரசாங்கம் உடனடியாக உயர்மட்டக் குழுவினரை அனுப்பி, தமிழக அரசிடம் இருந்து அறிக்கை பெற்று போதிய நிவாரண நிதியை அளிக்கவேண்டும்

முரசொலி

Date : 11-Nov-2021

சிறுபான்மையினர் தங்கள் நிறுவனங்கள் மூலம் உதவிடுவீர்!

மழை வெள்ளத்தில் நடந்து அயராது பாடுபடுகிறார் முதல்வர்!

எஸ்.பீட்டர் அல்போன்ஸ் நன்றி – பாராட்டு!

நெல்லை, நவ.11-

நெல்லையில் மாநில சிறுபான்மையினர் ஆணைய தலைவர் எஸ்.பீட்டர் அல்போன்ஸ் செய்தியாளர்களிடம் பேட்டியின்போது கூறியதாவது:

இன்றைக்கு தமிழகத்தில் வரலாறு காணாத மழை. தமிழக முதல்வர் அமைச்சர்கள் அதிகாரிகள் மிக சிறப்பாக பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். அதுவும் முதல்வர் அவர்களை இந்தியாவே வியந்து பாராட்டக் கூடிய அளவுக்கு பிரதமர் உட்பட பிற மாநில முதலமைச்சர்கள் பாராட்டக்கூடிய அளவுக்கு இரவும், பகலும், பாராது, இரவு முழுவதும் கண் விழித்திருந்து தெருத் தெருவாக இன்றைக்கு மழைக்கு இடையே அவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

அதை பார்க்கின்ற பொழுது மக்களுக்கு ஜனநாயகத்தின் மீது இருக்கக் கூடிய நம்பிக்கை உயர்ந்திருக்கிறது.

மக்கள் மனமார பாராட்டுகின்றனர்!

முதலமைச்சரை மனமார பாராட்டுகிறார்கள். இந்த பணிக்கு அவரோடு துணை நிற்கின்ற அமைச்சர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியோரை சிறுபான்மை இனத்தின் சிறுபான்மை இன ஆணையத்தின் சார்பாக பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இருக்கின்ற பல்வேறு இடங்களில் இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு சிறுபான்மை கல்வி நிறுவனங்களைச் சார்ந்த நிர்வாகிகள், ஆசிரியப் பெருமக்கள், சிறுபான்மை சமூகங்களைச் சார்ந்த மத தலைவர்களும், சாதி, மதம் என்கிற வேறுபாடு இல்லாமல் வெள்ளத்தால் மழையால் பாதிக்கப்பட்ட அத்தனை ஏழைகளுக்கும், உதவுவதற்கு முன்வர வேண்டும். சிறுபான்மை கல்வி நிறுவனங்கள், சிறுபான்மை தொழில் நிறுவனங்கள், சிறுபான்மை மார்க்க தலைவர்கள், அறிஞர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக பா.ஜ.க. தலைவர் முல்லை பெரியாறு அணையில் ஒரு குறிப்பிட்ட அளவு நீரை கொடுக்கவில்லை என்று ஒரு பெரிய போராட்டம் நடத்தி இருக்கிறார். அவருக்கும் பாராட்டுக்கள் வாழ்த்துக்கள்' அதைப் போல அவரை நான் கேட்டுக்கொள்வது தயவு செய்து மதுரையில் இருக்கிற எய்ம்ஸ் மருத்துவமனை கடந்த 4.5 ஆண்டுகளாக முதலமைச்சர் பிரதமர் அடிக்கல் நாட்டிய பிறகும் கட்டப்படாமல் இருக்கிறது. அதற்காக அவர்கள் ஒரு ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும்.

கடந்த 10 ஆண்டுகளாக பல இடங்களில் குளங்களை தூர் வாருவதற்காக ரூ.10 ஆயிரம் கோடி செலவழிக்கப்பட்டிருக்கிறது அந்த குளங்கள் அந்த பணிகள் விவரங்கள் என்ன? என்பதை இந்த அரசாங்கம் தெளிவு படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த ஆட்சி அனுமதி தரவில்லை!

சென்னையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் நீர் நிலைகள் சரி செய்ய ரூபாய் 3000 கோடி செலவு செய்துள்ளனர். ஆனால் தற்போது விரைவாக பணிகள் நடைபெறுகிறது என்றால் கடந்த 5 மாதங்களில் திமுக எடுத்த நடவடிக்கை தான். கடந்த 10 ஆண்டுகளாக சிறுபான்மையின கல்வி நிறுவனங்களுக்கு தர வேண்டிய பணியிடங்கள் முறையாக தரப்படவில்லை பல சிறுபான்மை கல்வி நிறுவனங்களில் பல சிறுபான்மை பணிகளில் இறந்ததனால் ஏற்பட்ட காலியிடங்கள், பணி ஓய்வின்போது ஏற்பட்ட காலியிடங்களை நிரப்புவதற்கு கூட கடந்த ஆட்சி அனுமதி கொடுக்கவில்லை.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்வழி கல்வி பள்ளிக்கூடத்திலே அது சிறுபான்மை பள்ளிக் கூடங்கள் ஆக இருந்தாலும் சரி, அல்லது மற்ற பள்ளிகளாக இருந்தாலும் சரி அனைத்திற்கும் தேவைப்படுகின்ற பணியிடங்களை 1999 வரை உள்ள நிலவரப்படி ஒரே உத்தரவில் ஏறக்குறைய 14 ஆயிரம் பணியிடங்கள் நிரப்ப அனுமதித்தார். அதன் பிறகும் தேர்தல் முடிந்தவுடன் பணியிடங்களை நிரப்புவதற்கு அனுமதி தரப்படும் என்று கலைஞர் அவர்கள் தெரிவித்தார். ஆனால் ஆட்சி மாற்றம் வந்தது.

இப்போது தமிழக முதலமைச்சர் அவர்களையும் பள்ளி கல்வித் துறை மற்றும் உயர் கல்வித்துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து இந்த கோரிக்கையை வைத்திருக்கிறோம். நிச்சயமாக இதை பரிசீலித்து நல்ல உத்தரவை அளிக்கிறேன் என்று முதல்வர் அவர்கள் கூறியிருக்கிறார். நிச்சயமாக அதற்கான ஏற்பாடுகளைச் செய்வோம்.

கடந்த 10 ஆண்டுகளாக அதுவும் கடந்த 4 ஆண்டுகளில் சிறுபான்மை ஆணையம் செயல்படவே இல்லை. அந்த சிறுபான்மை ஆணையத்தில் எந்த தரவுகளும் இல்லை. இப்போதுதான் அந்த தரவுகளை எல்லாம் நாங்கள் சேகரித்து வருகிறோம். தமிழகத்தைப் பொறுத்தவரை குறிப்பாக சில மாவட்டங்களில் தான் சிறுபான்மை மக்களுக்கு எதிரான குற்றங்கள் நடந்துள்ளது. எங்கே அடிப்படைவாத அரசியல் வந்து வேகமாக இருக்கிறதோ அந்த மாவட்டங்களில் தான் இந்தப் பிரச்சினைகள் மிக அதிகமாக இருக்கின்றன. அதை அரசினுடைய கவனத்திற்கு நாங்கள் கொண்டு போயிருக்கிறோம்.

உத்தரவாதம் அளித்திருக்கிறார்!

அதைப்பற்றிய புரிதல் இப்போது அரசுக்கு ஏற்பட்டுள்ளது. நிச்சயமாக அதை போன்ற வன்முறைகள் சிறுபான்மை இனத்திற்கு அச்சமூட்டக்கூடிய அளவுக்கு வன்முறைகளோ, அசம்பாவிதங்களோ நடந்தால் இந்த அரசு அதன் மேல் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். என்று முதலமைச்சர் உத்தரவாதம் கொடுத்திருக்கிறார்கள்.

பொதுவாக எந்த மதங்களிலும் புறம் போக்கு இடங்களில் தேவாலயங்களையும், வழிபாட்டுக் கூடங்களும் அமைக்காதீர்கள் புறம்போக்கு இடத்தில் கட்டி விட்டு அனுமதி கேட்கும் போது அரசால் கொடுக்க முடியாது பட்டா இடங்களில் வழிபாட்டுத்தலங்கள் கட்டுவதாக இருந்தால் அதற்கான அனுமதியை மாவட்ட ஆட்சியர்கள் விரைந்து அளிக்க வேண்டும். பல இடங்களில் கல்லறைகளில் மதவேறுபாடுகள் இருப்பதால் சில பேரை அடக்கம் செய்ய அனுமதி மறுக்கின்றனர். எனவே சாதி, மத வேறுபாடின்றி உருவாக்கி தர முதல்வருக்கு கோரிக்கை வைத்துள்ளோம்.

இவ்வாறு மாநில சிறுபான்மையினர் ஆணைய தலைவர் எஸ்.பீட்டர் அல்போன்ஸ் கூறினார்.

முரசொலி

Date : 11-Nov-2021

இந்தியாவிலேயே

முதன்மையான முதல்வர் மு.க.ஸ்டாலின்தான்!

நடிகர் கே.ராஜன் பாராட்டு!

சென்னை, நவ.11–

"இந்தியாவிலேயே முதன்மையான முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்தான்'' என்று நடிகர் கே.ராஜன் சமூகவலைத் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் சமூக வலைத் தளத்தில் பதிவிட்டிருப்பதாவது:–

கேள்வி: *மழை வெள்ள காலத்தில் நம்முடைய தமிழக முதல்வர் ரொம்ப ஆக்டிவாக செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார். ஆகையால் இந்த அரசும் மற்றும் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளும் பற்றி?*

பதில்: தமிழக முதல்வருக்கு என்னுடைய முதல் வணக்கம், வாழ்த்துகள், பாராட்டுகள்.

சுறுசுறுப்பாக அற்புதமாக செயல்படுகிறார். அவர் பதவி ஏற்றுக்கொண்ட காலம் கொரோனாவின் கொடுமையான காலம். நிதி பற்றாக்குறை. அன்றையிலிருந்து அவர் கொரோனாவை 800 க்குள்ளாக கட்டுப்படுத்தியிருக்கிறார். முன்பெல்லாம் ஒரு நாளைக்கு 36000 ஆக இருந்தது. ஆனால் இப்பொழுது ஒரு நாளைக்கு 800 ஆக குறைத்திருக்கிறார். அந்த வேலைகளை பார்த்துக் கொண்டு இருந்தவர் பிறகு அப்படியே படிப்படியாக மக்களைச் சந்தித்து நல உதவிகளை செய்திருந்தார்.

போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று ஆய்வுகள் செய்திருந்தார். ஆதிதிராவிடர் மாணவர்கள் படிக்கும் ஹாஸ்டலுக்கு சென்று பார்வை யிட்டார். சாப்பாடு சரியாக இருக்கிறதா ? என்று பார்வையிட்டார். கொரோனா வார்டுக்குச் சென்றார். கொளத்தூர் சென்றபோது ஒரு பெரியவரைப் பார்த்து நலம் விசாரிக்க அவர் வீட்டிற்குள்ளேயே சென்றார். நன்றாக இருக்கிறீர்களா என்று நலம் விசாரித்தார். இது எல்லாம் பெரிய விஷயம்.

தண்ணீரில் இறங்கி நடக்கிறார்!

இன்றைக்கு தண்ணீரில் இறங்கி போறாரு. தண்ணீர் தேங்கிய இடம் எல்லாம் பார்த்து போறாரு. மக்களுக்கு ஆறுதல் சொல்றாரு. நல உதவிகளை எல்லாம் வழங்குகிறார். நான் டிவியில் பார்த்தேன். எனக்கு வருத்தம் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, கலைஞர், காமராஜர் அவர்கள் எல்லாம் போனதையும் தொலைக்காட்சியில காட்றாங்க. தலைவர் காமராஜர் வேட்டியை மடித்து கட்டிக் கொண்டு வெள்ளப் பகுதியில் சென்று பார்வையிட்டார்.

அவர் காலத்திலிருந்து நடந்து கொண்டு இருக்கிறது. அண்ணாவை சொல்லவேண்டு மென்றால் அவர் கொஞ்சம் காலம்தான் இருந்தாரு. அவர் இருந்த காலத்தில் இப்படி வெள்ளம் எல்லாம் வரவில்லை. உடல்நலம் சரியில்லை. இல்லையென்றால் அவரும் இதுபோல செய்திருப்பார். கலைஞர் அவர்கள் வெள்ளத்தை பார்வையிட்டு நல உதவிகள் செய்தார். ஆனால் எல்லாவற்றையும்விட அதிகளவில் இன்றைக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் அதிகமாக செய்கிறார்.

தாய்மார்களின் மனதை குளிர வைத்துள்ளார்!

இவர் பதவி ஏற்ற உடனே தாய்மார்களின் உள்ளங்களை குளிர வைக்கிற அளவிற்கு பால் விலையை 3 ரூபாய் குறைத்தார். பெட்ரோல் விலையை குறைத்தார். பெண்களுக்கு பேருந்துகளில் பயணிக்க இலவச டிக்கெட் அளித்தார். நஷ்டமான நேரத்திலும் பேருந்துகளில் இலவச டிக்கெட் அறிவித்தார். எவ்வளவு நல்ல காரியங்களை அவர் செய்திருக்கிறார்!

ஒரு பெண் வெளியூரிலிருந்து போன் பேசினால் அந்த பெண்ணிடம் பேசுகிறார். ரொம்ப இறங்கி இதற்கென ஐக்கியமாகி விட்டார். இனி மக்கள் தான். மக்களை கவனித்து நலம்பெற செய்ய வேண்டும். நாட்டை முன்னேற்ற – தமிழ்நாட்டை முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும்.

எல்லா முதல்வர்களுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறார்!

இன்றைக்கு நான் முதல் மனிதன் என்ற ஆடியோ நிகழ்ச்சிக்கு சென்றிருந்தேன். முதல் மனிதன் யார் யாரோ இருக்காங்க. நிறைய வாழ்ந்து காட்டியவர் எல்லாம் இருக்காங்க. ஆனால் இப்போ இந்தியாவிலேயே முதன்மையான முதல்வர் என்று சொன்னால் அது முதல்வர் ஸ்டாலின் அவர்கள் தான். எல்லா முதல்வருக்கும் எடுத்துக்காட்டாக அவர் விளங்கி வருகிறார். அவர் 'நீட்' தேர்வுக்கு எதிராக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினார். உடனே மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, எல்லா முதலமைச்சருக்கும் கடிதம் எழுதினாங்க. தமிழகத்தில் மு.க.ஸ்டாலின் அவர்கள் போட்ட தீர்மானத்தை எல்லா சட்டமன்றத்திலும் அனைத்து முதல்வர் களும் நிறைவேற்றணும் என்று சொன்னார்கள். ஆகையால் முதல்வர் அவர்கள் வழிகாட்டி ஆனார்கள்.

சிறிது காலம் கலைஞர் அவர்கள் சொல்வதை வாஜ்பாயிலிருந்து பல பிரதமர்கள் ஆலோசனைகளை கேட்டார்கள். ஆனால் இன்றைக்கு ஸ்டாலின் தமிழகத்தை இந்தியாவிலேயே உயர்த்தி விட்டார். ஐக்கியமாகி விட்டார். பொது நலனுக்கு வந்தால் மக்களோடு ஐக்கியமாகி விட்டால் மக்கள் எப்படி எம்.ஜி.ஆரை இதயக்கனி ஆக்கிக் கொண்டார்களோ, அதேபோல் முதல்வர் அவர்களையும் மக்கள் இதயக்கனியாக ஏற்றுக்கொண்டார்கள். எம்.ஜி.ஆருக்கு தாய்மார்களின் ஆதரவு எப்படி இருந்ததோ அதேபோல் முதல்வர் அவர்களுக்கும் இன்றைக்கு தாய்மார்களின் ஆதரவு பெருகிக் கொண்டு இருக்கின்றது.

வாழ்க தமிழர்கள்! வாழ்க தமிழர்கள்!

இவ்வாறு அவர் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

தினத்தந்தி DAILY THANTHI
வெல்க தமிழ்

Date : 11-Nov-2021

'சொல்லுங்கள் என்ன பிரச்சினை?'

கட்டுப்பாட்டு அறைக்கு வந்த தொலைபேசி அழைப்பை எடுத்து பேசிய மு.க.ஸ்டாலின்

உடனடி நடவடிக்கையால் நெகிழ்ந்துபோன சென்னை பெண்

சென்னை, நவ.11-

மழைநீர் தேங்கியதாக கட்டுப்பாட்டு அறைக்கு விடுத்த தொலைபேசி அழைப்பை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் எடுத்து பேசினார். அவரிடம் பேசிய சில நிமிடங்களில் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டதால் சென்னை பெண் நெகிழ்ந்து போனார்.

கட்டுப்பாட்டு அறையில் ஆய்வு

சென்னை எழிலகத்தில் உள்ள வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்துக்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று ஆய்வு செய்தார். மேலும் பொதுமக்கள் தெரிவிக்கும் கோரிக்கைகளை கட்டுப்பாட்டு அறையின் தொலைபேசி வாயிலாக நேரடியாக கேட்டறிந்தார். பொதுமக்கள் தெரிவித்த கோரிக்கைகள், புகார்களை உடனடியாக நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மாநில அவசர கட்டுப்பாட்டு அறையில் உள்ள தொலைபேசிக்கு வந்த அழைப்பை மு.க.ஸ்டாலின் எடுத்து பேசினார். சென்னை கோடம்பாக்கத்தை சேர்ந்த அகிலா என்ற பெண்ணிடம் இருந்து 1070 என்ற எண்ணுக்கு ஒரு அழைப்பு வந்தது. அந்த பெண், தங்கள் பகுதியில் மழைநீர் தேங்கியிருப்பதாக புகார் தெரிவித்தார். மறுமுனையில் அழைப்பில் மு.க.ஸ்டாலின் பேசியது கண்டு நெகிழ்ந்து போனார். அந்த பெண் தெரிவித்த புகாரை நிவர்த்தி செய்ய

அகிலா

தற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார்.

பேச தயங்கினேன்

அவசர கட்டுப்பாட்டு மையத்துக்கு விடுத்த அழைப்பை, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினே எடுத்து பேசியது குறித்து அகிலா கூறியதாவது:-

முதல்-அமைச்சர் எனது அழைப்பை எடுத்ததும் மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. உடனே நான் பேச தயங்கினேன். பரவாயில்லை பேசுங்கள் என்று முதல்-அமைச்சர் கூறினார். மிகவும் கருணையோடு பேசினார். என்ன பிரச்சினை என்று என்னிடம் கேட்டார். நான் தண்ணீர் தேங்கியிருப்பதாக சொன்னேன். கோடம்பாக்கத்தில் நிறைய இடங்களில் தண்ணீர் வடிந்து விட்டதென்று முதல்-அமைச்சர் கூறினார்.

குறிப்பாக ரங்கராஜபுரத்தில் இருந்து விஸ்வநாதபுரம் முதல் தெரு வரை தண்ணீர் வடியவில்லை. டெங்கு காய்ச்சல் வந்துவிடுமோ என்ற பயம் இருக்கிறது. மேலும் கனமழை இருக்கும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்ததால், தேங்கிய மழை நீரை வடிய நடவடிக்கை எடுத்தால் மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று கூறினேன். நான் கண்டிப்பாக செய்கிறேன். நான் பார்த்துக் கொள்கிறேன் என்று முதல்-அமைச்சர் கூறினார். மழை முடிந்ததும் செய்யட்டுமா? என்று கேட்டார். உடனே செய்துகொடுத்தால் நன்றாக இருக்கும் என்றேன். சரி உடனே நடவடிக்கை எடுக்கிறேன் என்றார்.

முதல்-அமைச்சருக்கு நன்றி

நான் விடுத்த அழைப்பை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் எடுப்பார் என்று நினைக்கவில்லை. ஆச்சரியமாகவும், அதிர்ச்சியாகவும் இருந்தது. முதல் ஒரு நிமிடம் என்ன பேசுவதென்று தெரியவில்லை. "சொல்லுங்கள் அம்மா, என்ன பிரச்சினை?" என்று கேட்டார். அப்புறம் சிறிது நேரம் சுதாரித்துக்கொண்டுதான் என்னுடைய பிரச்சினையை சொல்ல முடிந்தது.

முதல்-அமைச்சரிடம் புகாரை தெரிவிக்கலாமா? வேண்டாமா? என்பதில் தயக்கம் இருந்தது. முதல்-அமைச்சர் பொறுமையாக என்ன சொல்லுங்கள் என்று கூறினார். சுமார் 3 நிமிடம் என்னிடம் பேசினார். நான் குழுக்களை அனுப்பி வைக்கிறேன் கவலைப்படாதீர்கள் என்றார். இந்தமாதிரி பேரிடர் சமயத்தில் ஒருவர் நம்பிக்கையோடு சொல்வதே பெரிய ஆதரவு. அதை செய்ததற்காக முதல்-அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

உடனடி நடவடிக்கை

முதல்-அமைச்சர் பேசி முடித்த உடனேயே அதிகாரிகளிடம் இருந்து எனக்கு அழைப்பு வந்தது. மழை நீர் வடியாமல் தேங்கி நிற்கும் இடங்கள் தொடர்பான விவரங்களை அவர்கள் கேட்டனர். அடுத்த சில நிமிடங்களிலேயே சம்மந்தப்பட்ட ஊழியர்கள் விரைந்துவந்தார்கள். அவர்கள் தேங்கிய மழை நீரை அகற்றினார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்

Date : 12-Nov-2021

விரைவில் மீள்வோம்

2015ம் ஆண்டுக்கு பிறகு பெய்த மிக கனமழை, சென்னையை மீண்டும் வெள்ளத்தில் மிதக்க வைத்திருக்கிறது. கடந்த அதிமுக ஆட்சியில் மழை வெள்ளத்தில் சென்னை தத்தளித்தபோது, நிவாரணப்பணிகள் துரிதமாக நடைபெறவில்லை. விளைவு... மக்கள் உணவு, இருப்பிட வசதி மற்றும் இயல்பு வாழ்க்கையை மீட்டெடுக்க முடியாமல் மிகுந்த அவதிபடைந்தனர்.

தற்போது புதிதாக பொறுப்பேற்றுள்ள திமுக அரசு, மீட்பு நடவடிக்கைகளில் கடும் வேகம் காட்டி வருகிறது. உத்தரவு போடும் முதல்வராக இல்லாமல், உதவி வேண்டுவோருக்கு முன்வந்து நிற்கும், முன்னுதாரண முதல்வராக திகழ்கிறார் மு.க.ஸ்டாலின். ஆபத்தின் வண்ணம் என்றாலும் கூட, ஆபத்தில் இருந்து காக்கும் வண்ணமாக மாறியிருக்கிறது சிவப்பு. ஆம்... அந்த சிவப்பு ஜீப்பில், வெள்ளம் சூழ்ந்த பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு, கடந்த சில நாட்களாக ஓய்வின்றி கொட்டும் மழையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்று வருகிறார். நிவாரணப்பணிகளை முடுக்கி விடுவதோடு, மக்களையும் சந்தித்து ஆறுதல் கூறி வருவது தமிழக மக்களை வெகுவாக கவர்ந்துள்ளது.

கடந்த அதிமுக ஆட்சியில் உலக வங்கி நிதியின் கீழ், 2015 முதல் 2020 வரை 5 ஆண்டுகளில் ஆயிரம் கி.மீ நீளத்துக்கு மழைநீர் வடிகால் கட்டப்பட்டுள்ளது. தொடர்ந்து ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் ரூ.200 கோடியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கப்பட்டது. மேலும், ஆசிய வளர்ச்சி வங்கியின் மூலம் ₹3,220 கோடி பெறப்பட்டு பணிகள் நடந்தன. ஆனால், மழைநீர் வடிகால்வாயை தரமின்றி அமைத்ததால், சாலை மற்றும் குடியிருப்பில் தண்ணீர் மீண்டும் தேங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. சுமார் ரூ.11 ஆயிரம் கோடிக்கு மேல் மழைநீர் வடிகால்வாய் பணிகள் நடந்தும் சென்னை மற்றும் புறநகர், ஸ்மார்ட் சிட்டி திட்டம் செயல்படுத்தப்பட்ட தி.நகரும் வெள்ளத்தில் மிதப்பதற்கு, முந்தைய ஆட்சியாளர்களும், அவர்களுக்கு உடந்தையாக செயல்பட்ட அதிகாரிகளும்தான் உரிய பதிலளிக்க வேண்டும். இதுதொடர்பாக உரிய விசாரணை நடத்தப்பட வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போதைய வெள்ளத்தை ஆய்வு செய்த முதல்வர் மு.க.ஸ்டாலின், "ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் லஞ்சம் வாங்கி, ஊழல் செய்து, கமிஷன் பெற்று அரைகுறையாக பணிகளை செய்திருக்கின்றனர். அதனால்தான் தி.நகரில் இவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்கிறது. மழைக்காலம் முடிந்தவுடன் சேதாரம் இல்லாத சென்னையாக மாற்றுவோம்" என நம்பிக்கையோடு பேசியிருக்கிறார். அதற்கான நடவடிக்கைகள் விரைவில் துவங்கும் என சென்னை மக்களும் எதிர்பார்ப்புடன் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஒருபுறம் "போட் ஷூட்டிங்" நடத்தி, "காமெடி டிராமா" அரங்கேறிக் கொண்டிருக்க, மறுபுறம் பாதிக்கப்பட்ட மாவட்டங்களை கண்காணிக்க அமைச்சர்கள் மற்றும் ஐஏஎஸ் அதிகாரிகள் தலைமையில் குழு அமைத்தது, துரித நேரத்தில் மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கியது, நிவாரண முகாம்களில் தங்க வைத்தது, ராட்சத மோட்டார்கள் மூலம் தண்ணீரை வெளியேற்ற வைத்தது என பேரிடர் காலத்தில் ஒரு முதல்வர் எப்படி செயல்பட வேண்டுமென்பதற்கு தகுந்த உதாரணமாக திகழ்கிறார் மு.க.ஸ்டாலின். இதன்மூலம் பாதிப்பிலிருந்து விரைவில் மீள்வோமென்ற நம்பிக்கை தமிழக மக்களிடமும் பிறந்திருக்கிறது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

Date : 12-Nov-2021

இது நடமாடும் கோவில் திருப்பணி!

பண்டிகைகள் என்பது, நாம் கொண்டாடி மகிழ்ச்சியடைவதைப்போல, மற்றவர்களையும் மகிழ்ச்சியடைய செய்வதுதான். எல்லா பெரிய தலைவர்களும், மதங்களும் அந்த தத்துவத்தைத்தான், வழிகாட்டும் விளக்காக தெரிவிக்கின்றன. அந்தவகையில், கடந்த தீபாவளி அன்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், தான் தீபாவளி கொண்டாடாவிட்டாலும் ஏழை இருளர், நரிக்குறவர்கள் வீடுகளுக்கு சென்றதோடு மட்டுமல்லாமல், அந்த கிராமத்திலுள்ள இந்த இன மக்களுக்கு பல்வேறு உதவிகளை வாரிவாரி வழங்கி எல்லோரையும்விட அதிகமான மகிழ்ச்சியில் தீபாவளி தினத்தன்று திக்குமுக்காட செய்துவிட்டார்.

சில நாட்களுக்கு முன்பு மாமல்லபுரம் தல சயன பெருமாள் கோவிலில் நடந்த அன்னதானத்தில், நரிக்குறவர் இனத்தை சேர்ந்த அஸ்வினி என்ற பெண், தன் கைக்குழந்தையுடன் மற்றவர்களோடு சேர்ந்து சாப்பிட அனுமதிக்கவில்லை என்று கூறியதை கேள்விப்பட்ட இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அந்த பெண்ணை மட்டுமல்லாமல், அந்த கிராமத்திலுள்ள அந்த சமூகத்தை சேர்ந்த மற்றவர்களையும் அழைத்து அவர்களுக்கு அன்னதானம் வழங்கி, தானும்

அவர்களுடன் அமர்ந்து சாப்பிட்டார். அந்த பெண்ணிடம் அவர், "உங்களுக்கு ஏதாவது குறை உள்ளதா?" என்று கேட்டபோது, ஒரு நீண்ட பட்டியலை கூறினார்.

இதை அமைச்சர் சேகர்பாபு முதல்-அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு சென்றார். யாரும் எதிர்பாராத விதமாக செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள நரிக்குறவர் மற்றும் இருளர் இன மக்கள் வசிக்கும் பூஞ்சேரி கிராமத்துக்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்றதோடு மட்டுமல்லாமல், அங்குள்ள 282 பேர்களுக்கு வீட்டுமனை பட்டாக்கள், குடும்ப அட்டைகள், வாக்காளர் அடையாள அட்டைகள், சாதி சான்றிதழ்கள், நலவாரிய அட்டைகள், தொழில் பயிற்சிக்கான ஆணைகள், சிறு தொழில் செய்ய வங்கிக் கடன்கள், கலைஞர் நகர மேம்பாட்டு திட்ட முன்மொழிவு ஒப்புதல், அங்கன்வாடி மற்றும் பள்ளி வகுப்பறைகள் கட்டுவதற்கான ஆணைகள் மற்றும் வளர்ச்சி திட்ட பணிகளை ரூ.4.53 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கான ஆணைகளை வழங்கினார்.

மேலும், "அவர்களின் குடியிருப்புகளுக்கு தேவையான குடிநீர், மின்சாரம் மற்றும் சாலை வசதிகளை முழுமையாக ஏற்படுத்தி, அவர்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்" என்று மு.க.ஸ்டாலின் உறுதியளித்தார். இதுமட்டுமல்லாமல், எந்தப் பெண்ணுக்கு அன்னதானத்தில் சாப்பிட அனுமதி மறுக்கப்பட்டதோ, அதே அஸ்வினி மற்றும் பவானி ஆகியோர் வீடுகளுக்கு சென்று குடும்பத்தாரிடம் நலம் விசாரித்துவந்த பாங்கு, நிச்சயமாக இருளர் மற்றும் நரிக்குறவர் வாழ்வில் ஒளியேற்றும் தீபாவளி நன்னாள்.

அந்த கிராமத்து மக்களுக்கு மட்டுமல்லாமல், அடுத்த 2 வார காலத்திற்கு தமிழ்நாடு முழுவதிலும் உள்ள இருளர் மற்றும் நரிக்குறவர் இன மக்களுக்கான நலத்திட்ட உதவிகளை வழங்க உத்தரவிட்டுள்ளார். சமூகத்தில், விளிம்பு நிலையில் இருக்கும் ஒருவரையும் விடாது சுயமரியாதையையும், சமூக நீதியையும் காப்பதே திராவிட இயக்கத்தின் பணி என்று மு.க.ஸ்டாலின் பறைசாற்றியுள்ளார். மறைந்த கருணாநிதி, "நடமாடும் கோவில் திருப்பணியைத்தான் தி.மு.க. ஆட்சிக்கு வரும்போதெல்லாம் செய்கிறது" என்று கூறியதை மு.க.ஸ்டாலின் இப்போது நிறைவேற்றியுள்ளார். இந்த மனிதாபிமான செயலை "மாத்ருபூமி" மலையாள தொலைக்காட்சி மட்டுமல்லாமல், பல்வேறு பத்திரிகைகள், ஊடகங்கள் பெரிதும் பாராட்டியுள்ளன.

யுனஸ்கோ விருது பெற்ற கல்வியாளர்-எழுத்தாளர் அசோக் ஸ்வைன், "ஒரு தலைவர் என்ன செய்ய வேண்டுமோ, அதை மு.க.ஸ்டாலின் செய்து கொண்டிருக்கிறார்" என்று பாராட்டியிருக்கிறார். கவிஞர் வைரமுத்து, நடிகர் சூர்யா-ஜோதிகா என்று எல்லோரும் மு.க.ஸ்டாலினை பாராட்டியிருக்கிறார்கள்.

மகாகவி பாரதியார், "ஏழை என்றும், அடிமை என்றும் எவனும் இல்லை சாதியில், இழிவுகொண்ட மனிதரென்பது இந்தியாவில் இல்லையே" என்று பாடினார் அன்று. ஆனால் இன்று, "ஏழை என்றும், அடிமை என்றும் எவரும் இல்லை சாதியில், இழிவுகொண்ட மனிதரென்பது தமிழ்நாட்டில் இல்லையே" என்பதை இலக்காகக்கொண்டு, மு.க.ஸ்டாலின் செயல்பட்டுவருகிறார் என தமிழ்கூறும் நல்லுலகம் வாழ்த்துகிறது, பாராட்டுகிறது, மகிழ்ச்சியடைகிறது, பெருமைகொள்கிறது.

தமிழ் முரசு

Date : 12-Nov-2021

சென்னையில் இருந்து ஹஜ் பயணத்துக்கு விமான சேவை

முதல்வருக்கு ஹஜ் அசோசியேஷன் பாராட்டு

சென்னை, நவ.12- இந்திய ஹஜ் அசோசியேஷன் தலைவர் பிரசிடெண்ட். அபுபக்கர் வெளியிட்ட அறிக்கை: தமிழகத்தில் இருந்து அடுத்த அண்டு ஹஜ் பயணம் செல்வோருக்கு கொச்சியில் இருந்து விமானம் இயக்கப்படுவது பெரும் சிரமத்தைக் கொடுக்கும் என்று பிரதமருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதி இருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

வழக்கமாக சென்னையிலிருந்து விமானம் இயக்கப்படும் போது ஏராளமான ஹஜ் பயணிகள் செல்வதற்கு வசதியாக இருந்தது. ஆனால் தற்போது ஹஜ் செல்ல கொச்சி விமான நிலையத்திலிருந்து விமானங்கள் இயக்கப்படுவது தமிழக ஹஜ் பயணிகளுக்கு பெரும் தூரமாகவும் பாரமாகவும் அமைந்திருப்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். சென்னையில் இருந்து இந்த ஆண்டு ஹஜ் செல்வதற்கான விமானத்தை இயக்குவது குறித்து உடனடியாக பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தி இருப்பது அனைத்து இஸ்லாமியர்களுக்கும் ஹஜ் பயணிகளுக்கும் மிகுந்த மன மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. சிறுபான்மை மக்களின் காவலனாக இருக்கும் தமிழக முதல்வர் எப்போதும் தந்தையைப் போலவே மகனும் என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறார். இஸ்லாமியர்கள் அனைவரும் அவருக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். இந்த நேரத்தில் இந்திய ஹஜ் அசோசியேஷன் சார்பில் மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் முதலமைச்சருக்கு தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

THE HINDU

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

Date : 12-Nov-2021

Season of floods

Tamil Nadu's cities need long-term solutions to avoid the monsoon woes

The ongoing spell of heavy rain in Chennai has again exposed the vulnerability of the city, a coastal metropolis with a flat terrain, to floods, and raised more questions than answers about the Government's preparedness to deal with the northeast monsoon. The first spell of heavy rain of 21 cm, mostly in the early hours of Sunday (November 7), caught everyone by surprise. Despite storm water drains and waterways running to about 700 km being cleared in the last four months, no tangible improvement was seen in the problem of inundation. The nightmare of the 2015 December floods haunted Chennai in the backdrop of the authorities monitoring the release of surplus water from the reservoirs on the outskirts. Even as the city was struggling to get back to normality, there was a depression in the Bay of Bengal, which crossed the coast near Chennai on Thursday. This time, the city did not experience very heavy rainfall but several suburbs such as Tambaram and Red Hills recorded over 22 cm of rain. In the last four days, other parts of the State too were at the receiving end of the monsoon. Nagapattinam, one of the backward areas of the Cauvery delta, was battered after 31 cm fell in a day.

The crux of the problem is the issue of drainage, be it in Chennai or in Nagapattinam. In a large urban setting such as Chennai, shrinking open space, the gap between the coverage of the drains and that of sewer lines, ageing drains and sewer networks in core areas of the city, and encroachments or obstructions hampering the free flow of water are responsible for the mess. The city is blessed with a few rivers such as the Cooum and the Adyar, apart from a number of canals including the Buckingham Canal. All these waterbodies, if properly maintained, can be very effective flood carriers, sparing several residential localities from inundation. The State Government, which is executing a couple of integrated storm water drain projects, should look for durable solutions to the city's long-standing woes and executing them in a short span of time. The Government has been swift in providing relief and its seriousness in the matter can be seen from the fact that Chief Minister M.K. Stalin visited flood-hit areas continuously since Sunday for a first-hand account of the problems. Often in the past, the determination shown in finding a long-term solution to waterlogging waned during the non-monsoon periods. Mr. Stalin, who was Chennai Mayor and Local Administration Minister earlier, is well-placed now to put his experience to use and pull the city out of the quagmire. The people too should be responsible enough in ensuring that the waterbodies and drains are not turned into dumps.

STATE OF PLAY

A row over education

In launching the 'Illam Thedi Kalvi', the DMK government has attracted criticism from its allies

D. SURESH KUMAR

Education policies have often been mired in controversies in Tamil Nadu. The attempted Hindi imposition in 1937 and the 1960s, the Modified Scheme of Elementary Education in 1953 and the three-language formula mooted in the 2020 National Education Policy (NEP) generated intense political heat. The Dravidian parties were at the forefront of these agitations. The DMK and AIADMK have carefully handled education policies and devised a social justice model that has paid quantifiable dividends.

Various concerns

Against this backdrop, when the DMK government recently launched the 'Illam Thedi Kalvi' (ITK), a scheme to take education to the doorsteps of schoolchildren, it came as a surprise that its parent outfit, the Dravidar Kazhagam (DK); its ally, the Communist Party of India (CPI); and left-leaning activists opposed it. The stated objective of the six-month project with a budgetary allocation of ₹200 crore is to bridge the learning gap of students of Classes I to 8 who have not attended physical classes since March 2020 due to the pandemic. It involves enrolling 18- to 60-year-old volunteers or "ambassadors", as Chief Minister M.K. Stalin put it. These volunteers will teach an estimated 34.05 lakh children in 93,000 neighbourhoods for 60 to 90 minutes between 5 p.m. and 7 p.m.

The opposition to the ITK, though not intense, is the first that the DMK government has faced from its allies. The primary objection is that the ITK could turn out to be a 'soft launch' of the BJP-led Union government's NEP, which provides for engagement with children through volunteers. The DK and CPI were apprehensive that Sangh Parivar members would enrol themselves as volunteers and further their "sectarian" agenda. A day before the ITK's roll-out in 12 districts, DK leader K. Veeramani dubbed the scheme a "sweet coated poisonous (RSS) ball" and called upon the government to reconsider its decision.

Mr. Stalin and School Education Minister Anbil Mahesh Poyyamozhi have sought to counter such apprehensions by insisting that they remain opposed to the NEP. Launching the scheme, Mr. Stalin said the ITK was the foundation for a renaissance in education and is in the spirit of Dravidianism. He equated it with the flagship noon-meal scheme. Accepting the argument that under the NEP, volunteers "could even interfere in the management of schools", Mr. Poyyamozhi said no such scope would be provided in the ITK. Mr. Veeramani's "apprehensions will help us be doubly careful, and we will pay attention to the selection of volunteers," he told *The Hindu*.

The DK and CPI have since softened their views. However, opposition from activists continues. State Platform for Common School System-Tamil Nadu general secretary P.B. Prince Gajendra Babu fears that parents may stop sending girls to school if education is offered at their doorstep. Stating that the scheme is not a substitute for regular schooling, Mr. Poyyamozhi responded that there is awareness on the importance of educating girl children, and volunteers will play a pivotal role in encouraging parents to send them to school.

Mr. Babu also said that it should be the responsibility of teachers, and not volunteers, to help students acquire reading and writing skills. Besides, the scheme could plant the idea that non-formal education is better and convenient. While Mr. Stalin has said the "ambassadors" will be a bridge between schools and society, the ITK handbook seeks to give them a larger role of teaching literacy and numeracy. The ITK will be extended to the whole of Tamil Nadu from November 14. Only a holistic review at the end of the six-month period will help assess its impact.

sureshkumar.d@thehindu.co.in

முரசொலி
Date : 13-Nov-2021

முதல்வர் முகத்தில் ஒரு பிரகாசம் தென்பட்டது!

உறவினர் முன்பு அமர்ந்திருப்பது போல உணர்ந்தேன்!

முதல்வரின் எளிமையைப் புகழ்ந்து – காவல் பெண் ஆய்வாளர் ராஜேஸ்வரி பேட்டி!

சென்னை, நவ. 13–

சென்னை – டி.பி.சத்திரம் காவல் ஆய்வாளர் இராஜேஸ்வரி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று காலை அவரது இல்லத்தில் சந்தித்து வாழ்த்து மடல் பெற்றார்.

அந்நிகழ்வு குறித்து ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், "முதல்வர் முகத்தில் ஒரு பிரகாசம் தெரிந்தது... ஒரு உறவினர் முன்னிலையில் அமர்ந்திருப்பது போல உணர்ந்தேன்" என்று கூறி நெஞ்சம் நெகிழ்ந்துள்ளார்.

காணொலியில் ஒளிபரப்பான அந்த வீடியோவில், ஆய்வாளர் இராஜேஸ்வரி குறிப்பிட்டதாவது–

இன்று காலை முதலமைச்சர் வீட்டுக்கு வருமாறு கூறினார்கள். சென்றேன். நல்ல ஒரு காஃபி கொடுத்தார்கள். குடித்தேன். என்னை உட்கார வைத்தார்கள். நல்ல முறையில் என்னை உபசரித்தார்கள்.

பிறகு முதலமைச்சர் அவர்கள், உள்ளே வருமாறு கூறினார்கள். வரச் சொல்லிவிட்டு, என்னை விசாரித்து விட்டு உட்காரச் சொன்னார்கள். உட்காரச் சொல்கிறார்களே, என்று தயக்கமாக இருந்தது.

முதலமைச்சர் அவர்கள், "உட்காருங்கம்மா" என்றார்கள். உட்கார்ந்தேன். அப்புறம் என்னை விசாரித்தார்கள். என்னைப் பாராட்டினார்கள். எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது.

மிகுந்த மாண்புக்குரிய ஒரு முதலமைச்சர் முன்னால் உட்கார்ந்திருந்தது போலவே இல்லை. ஒரு உறவுக்காரர் முன்னால் அமர்ந்திருப்பது போல இருந்தது எனக்கு.

முதல்வர் அவர்கள், நல்லா – ஃப்ரீயா பேசினாங்க... முதல்வரைப் பார்த்தால், ஒரு பயம் இருக்கும் இல்லையா! அந்த பயமே இல்லை. அந்த அளவிற்கு முதல்வர் முகத்தில் ஒரு பிரகாசம் இருந்தது. முதல்வர் அவர்கள் தெளிவாகப் பேசினார்கள். அதனால் எனக்கு ரொம்ப, ரொம்ப சந்தோஷம்.

இவ்வாறு காவல் ஆய்வாளர் ராஜேஸ்வரி குறிப்பிட்டார்.

முரசொலி

Date : 14-Nov-2021

முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் நல்லாட்சி நடத்துகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

சென்னையிலிருந்து ஹஜ் பயணம் - பிரதமரை வலியுறுத்திய முதல்வருக்கு நன்றி!

இந்திய ஹஜ் அசோசியேஷன் தலைவர் – பிரசிடெண்ட் அபுபக்கர் அறிக்கை!

சென்னை, நவ.14-

இந்திய 'ஹஜ்' அசோசியேஷன் தலைவர் - பிரசிடெண்ட் அபுபக்கர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

2022ஆம் ஆண்டு ஹஜ் பயணம் மேற்கொள்ள தமிழகத்தில் இருந்து செல்லும் ஹஜ் பயணிகளுக்கு விமானம் சென்னையிலிருந்து இயக்கப்படாமல் கொச்சியில் இருந்து இயக்கப்படுவது பெரும் சிரமத்தைக் கொடுத்து வருகிறது.இது குறித்து பிரதமருக்கு தமிழக முதலமைச்சர் கடிதம் எழுதி இருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. வழக்கமாக சென்னையிலிருந்து விமானம் இயக்கப்படும் போது ஏராளமான ஹஜ் பயணிகளுக்கு செல்வதற்கு வசதியாக இருந்தது. ஆனால் தற்போது ஹஜ் செல்ல கொச்சி விமான நிலையத்திலிருந்து விமானங்கள் இயக்கப்படுவது தமிழக ஹஜ் பயணிகளுக்கு பெரும் தூரமாகவும், பாரமாகவும் அமைந்திருப்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

சென்னையில் இருந்து இந்த ஆண்டு ஹஜ் செல்வதற்கான விமானத்தை இயக்குவது குறித்து உடனடியாக பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தி இருப்பது அனைத்து இஸ்லாமியர்களுக்கும், ஹஜ் பயணிகளுக்கும் மிகுந்த மன மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

சிறுபான்மை மக்களின் காவலனாக இருக்கும் தமிழக முதலமைச்சர் எப்போதும் தந்தையைப் போலவே மகனும் என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறார்.

இஸ்லாமியர்கள் அனைவரும் அவருக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறோம்.இந்த நேரத்தில் இந்திய ஹஜ் அசோசியேஷன் சார்பில் மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் முதலமைச்சருக்கு தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

Date : 14-Nov-2021



EMOTIONAL CONNECT

Tamil Nadu Chief Minister M.K. Stalin, despite his busy schedule, has found time to watch actor Suriya's latest film *Jai Bhim*. The film, portraying a lawyer's fight for tribal men who face police torture, touched Stalin so much that he sent a long letter to its makers. He wrote the film brought back memories of the Emergency era, and of his friend C. Chittibabu, who died of police torture while trying to save him in Madras Central Prison.

Date : 15-Nov-2021

மனிதாபிமானம் கலந்த கடமை!

கடந்த ஒருவார காலமாக, சென்னை உள்பட பல மாவட்டங்களை புரட்டிப்போட்ட வடகிழக்கு பருவமழையின் தொடக்கம், தன் ஆட்டத்தை முடித்து, இப்போது இயல்பு வாழ்க்கை திரும்பிக் கொண்டிருக்கிறது. இந்த மழையினால் மக்கள் பெரும் பாதிப்பு அடைந்துள்ளனர். பெரும்பாலான இடங்களில் இடுப்பளவுக்கு மேல் தண்ணீர் தேங்கிநின்றது. பல இடங்களில் தரைத்தளங்களில் தண்ணீர் புகுந்தது. சாலைகளிலும் ஆறுபோல வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

இந்தநிலையில், அரசு எந்திரமே பம்பரமாக சுழன்றது. அதற்கு ஒரு காரணம், முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆற்றிய பணி காட்டிய உற்சாகம்தான். இந்த நிவாரணப்பணிகளில் ஒட்டுமொத்த அதிகாரவர்க்கமே திறன்பட பணியாற்றினாலும், பெண் அதிகாரிகள், குறிப்பாக ஊரக வளர்ச்சித்துறை முதன்மை செயலாளர் அமுதா, காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் டாக்டர் எம்.ஆர்த்தி, தீயணைப்புத்துறை இணை இயக்குனர் பிரியா ரவிச்சந்திரன், சென்னை

பெருநகர குடிநீர் வழங்கல் வாரிய செயற்பொறியாளர் ஜி.பி.வைதேகி, மின்வாரிய உதவிப் பொறியாளர் என். சுமதி, பெருநகர சென்னை மாநகராட்சி உதவி பொறியாளர் வி.ஹேமமாலினி உள்பட நிறைய பெண் அதிகாரிகள் தண்ணீருக்குள் நடந்துசென்று, தங்கள் பணிகளை ஆற்றினர்.

இந்த வரிசையில், சென்னை டி.பி.சத்திரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் ராஜேஸ்வரி, துணிச்சலோடு மனிதாபிமானத்தையும், இரக்கத்தையும் கலந்து ஆற்றிய பணி, எல்லோருடைய பாராட்டுகளையும் பெற்றுள்ளது. டி.பி.சத்திரம் பகுதியிலுள்ள ஒரு கல்லறை தோட்டத்தில் வேலை பார்த்துவந்த உதயகுமார் என்ற 28 வயது இளைஞர், பெருமழையில் சிக்கித்தவித்து, முறிந்து விழுந்த மரத்தின் கீழே கல்லறை மீது சுயநினைவு இல்லாமல் உயிருக்கு போராடிக்கொண்டிருந்த நிலையில், அவரை இன்ஸ்பெக்டர் ராஜேஸ்வரி அப்படியே தூக்கி, தன் தோளில்போட்டு சுமந்துகொண்டு வேகமாக ஓடோடி வெளியே வந்தார். அந்த பக்கமாக வந்த ஒரு ஆட்டோவை நிறுத்தி, தன்னிடம் இருந்த போர்வையையும் கொடுத்து அதில் ஏற்றி, சிலர் உதவியுடன் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்.

உதயகுமார் சிகிச்சை பலனளிக்காமல் மரணம் அடைந்துவிட்டாலும், இன்ஸ்பெக்டர் ராஜேஸ்வரியின் செயல் சமூக வலைதளங்களில் வைரலானது. அர்ப்பணிப்புடன் ஆற்றிய இந்தப்பணியை கேள்விப்பட்ட முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், அவரை வீட்டுக்கு வரவழைத்து பாராட்டு தெரிவித்தார். "காவல்துறை உங்கள் நண்பன் என்பதற்கு ஏற்ப, கம்பீரமாகவும், கருணை உள்ளத்துடனும் ராஜேஸ்வரி மேற்கொண்ட பணி, காவல் துறையில் உள்ள அனைவருக்கும் பெருமையையும், ஊக்கத்தையும் அளிக்கக்கூடியதாகும். உங்களுடைய சேவைக்கு வாழ்த்துகள். சட்டத்தையும், மக்களையும் காக்கின்ற பணி தொடரட்டும். காவல்துறைக்கு பொறுப்பு வகிக்கும் முதல்-அமைச்சர் என்ற முறையிலும், மழைகால பேரிடர் நேரத்தில் தொடர்ச்சியாக பொதுமக்களை நேரில் சந்தித்து அவர்களின் தேவைகளை கேட்டறிந்தவன் என்ற முறையிலும், உங்களின் மனிதாபிமான உயிர்காப்பு பணிக்கு என் மனப்பூர்வமான வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்" என்று பாராட்டினார்.

முதல்-அமைச்சர் தன் வீட்டுக்கே அழைத்து பாராட்டியதை குறிப்பிட்ட இன்ஸ்பெக்டர் ராஜேஸ்வரி, தன்னை அங்கு உபசரித்த விதமும், ஒரு உறவுக்காரர் முன்பு அமர்ந்திருந்த உணர்வு ஏற்பட்டதையும், நன்றி கலந்த மகிழ்ச்சியோடு தெரிவித்தார். பெண்களுக்கு வேலைவாய்ப்பில் 30 சதவீத இடஒதுக்கீட்டை மறைந்த முன்னாள் முதல்-அமைச்சர் கருணாநிதி கொண்டுவந்ததில் இருந்து, தமிழ்நாட்டில் எல்லா துறைகளிலும் பெண்களின் பங்கு அதிகரித்துக்கொண்டிருக்கிறது.

சமுதாயத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை கையாள்வதில் போலீசாருக்கு உதவும் நோக்கில், 1973-ம் ஆண்டு கலைஞர் கருணாநிதியால் மகளிர் காவல் அணி தொடங்கப்பட்டது. கடந்த 48 ஆண்டுகளில் நிலைமைமாறி, தற்போது சட்ட ஒழுங்கை பராமரித்தல், குற்றத்தடுப்பு மற்றும் கண்டுபிடிப்பு, போக்குவரத்து சீரமைத்தல் உள்பட அனைத்து வகையான பணிகளையும் மேற்கொள்ளும் வகையில், காவல் துறையில் பெண் போலீசார் ஒரு அங்கமாகவே செயல்பட்டுவருவது தமிழ்நாட்டுக்கு பெருமையளிக்கிறது. அவர்களை வாழ்த்தி, "பெண்மை வாழ்கென்று கூத்திடு வோமடா. பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா" என்று பாரதியார் பாடலைக்கூறி மக்கள் பரணி பாடுகிறார்கள்.

தமிழ் முரசு

Date : 15-Nov-2021

வெள்ள பாதிப்பிலிருந்து மக்களை பாதுகாக்க

ஓய்வின்றி முதல்வர் உழைக்கிறார்

முத்தரசன் பேட்டி

திருத்துறைப்பூண்டி, நவ. 15- மழை வெள்ள பாதிப்பிலிருந்து மக்களை பாதுகாக்க ஒருநாள் கூட ஓய்வின்றி மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உழைத்து வருகிறார் என்று இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன் கூறினார்.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகே பிச்சன்கோட்டகம் பகுதியில் தொடர் கனமழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன் நேற்று பார்வையிட்டார். இதை தொடர்ந்து முத்தரசன் அளித்த பேட்டி:

வடகிழக்கு பருவமழையால் தமிழ்நாட்டில் சென்னை உட்பட பலமாவட்டங்கள் மிக கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த பாதிப்பில் இருந்து மீட்பதற்காக கடுமையான முயற்சிகளை தமிழக முதல்வர் மற்றும் அமைச்சர்கள், அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக முதல்வர் ஒருநாள் கூட ஓய்வின்றி பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் நேரடியாக சென்று பாதிப்பிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கும், மழைநீர் தேங்கியுள்ள இடங்களில் மழைநீரை வடிய வைப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் வளவனாறு அருகில் பிச்சன்கோட்டகம் பகுதியில் உடைப்பு ஏற்பட்டு அந்த பகுதியில் சம்பா பயிர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. முந்தைய ஆட்சியில் வளவனாறு தூர்வார ஒரு பெரும்தொகை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. அந்த நிதியில் முறையாக செலவு செய்யப்படாததால் தூர்வாரும் பணி முழுமை பெறாத காரணத்தால் பெரிய பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது. அதிமுக ஆட்சியில் இதுபோன்ற தூர்வாரும் பணிக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் முழுமையாக பணிகள் நடந்திருந்தால் இத்தகைய பாதிப்பு ஏற்பட்டு இருக்காது.

இவ்வாறு அவர் கூறினார்.

முரசொலி

Date : 16-Nov-2021

மற்ற மாநில முதல்வர்கள் மட்டுமின்றி

உலகமே திரும்பிப் பார்க்கும் வகையில் ஆட்சி செய்கிறார்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் குறித்து தெலுங்கு 10-T.V. செய்தி ஒளிபரப்பில் புகழாரம்!

ஐதராபாத், நவ.16-

"மற்ற மாநில முதல்வர்கள் மட்டுமின்றி உலகமே திரும்பிப் பார்க்கும் வகையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி செய்து வருகிறார்" என்று தெலுங்கு 10-TV தொலைக்காட்சி செய்தி ஒளிபரப்பில் புகழாரம் சூட்டியுள்ளது.

(தெலுங்கானா மாநிலத்தை தலைமையிடமாகக் கொண்ட 10-TV எனும் புகழ்பெற்ற தெலுங்கு மொழி தொலைக்காட்சி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் செயல்பாடுகள் குறித்த ஒரு சிறு தொகுப்பினை ஒளிபரப்பியிருந்தது.

அதனை நண்பர் ஒருவர் உதவியுடன் தமிழில் மொழி பெயர்த்து படித்துப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன் என்று முதல்வர் அவர்களுக்கு பதாகைக்கவி எம்.எஸ். அனுப்பியுள்ளார்.)

தெலுங்கு 10-TV ஒளிபரப்பிய அந்தச் செய்தி வருமாறு :-

"முதல்வர் பதவி என்றால் என்னவென்று தெரியுமா? உனது வாழ்நாளில் ஒரு நாளாவது முதல்வர் அலுவலக அறை வாசற்படியை மிதித்தது உண்டா?

நீ ஒரு நாள் வந்து பார்!

ஒரு நாளைக்கு எத்தனை பேர் என்னை வந்து சந்திக்கின்றனர்.

எத்தனை சந்தேகங்கள், எத்தனை கண்ணீர்கள், எத்தனை பிரச்சினைகள், எத்தனை போராட்டங்கள், எத்தனை சிக்கல்கள், எத்தனை டென்ஷன்கள். முதல்வராய் இருப்பவருக்குத்தான் அந்தக் கஷ்டம் தெரியும்.

"ஒரு நாள் நீ முதல்வராய் இருந்து பார்!" என்று நடிகர் ரகுவரன் சொன்னது போல, ஒரு நாள் முதல்வராய் இருந்து ஆயிரம் நன்மைகள் செய்தார் நடிகர் அர்ஜுன்.

24 மணி நேர முதல்வராய் இருந்து ஆயிரம், ஆயிரம் நன்மைகள் உருவாக்கியதை நாம் சினிமாவில் பார்த்தோம்.



ஒவ்வொரு நாளும் மக்களுக்காகவே உழைக்கிறார்!

ஆனால் இன்று தமிழ்நாட்டைக் கண்ட முதல்வர் ஒவ்வொரு நொடி, ஒவ்வொரு மணி நேரம், ஒவ்வொரு நாளும் 24 x 7 என்று ஒவ்வொரு மணித்துளியும் மக்களுக்காகவே மக்கள் நலனுக்காகவே உழைத்துக் கொண்டிருக்கிறார்! மக்களுக்காக ஓய்வின்றி உழைக்கிறார்.

முதல்வர் பதவி என்றால் அவர் செல்லும் வழித் தடம் நிறுத்தப்படும். ஆனால், நடுரோட்டில் சென்று பேருந்தை நிறுத்தியும், யாரோ வந்து ஏறி பயணிக்கப் போகிறார் என்று மக்கள் நினைக்க, முதல்வரே பேருந்தில் ஏறி மக்களோடு மக்களாக பயணித்து அனைவரையும் வியக்கவைத்தார்.

முதல்வர் பதவி என்றால் அவர் சிம்மாசனத்தில் அமர்ந்து அதிகாரம் செய்து ஜோராய் இருப்பதல்ல.

சிறப்பான ஆட்சி செய்து வருகிறார்!

ஏழையின் குடிசைக்கு சென்று அவர்களின் குறைகளை கேட்டு மக்களோடு மக்களாக பயணிப்பது. மூத்த அரசியல் தலைவர்களையும் அதிகாரிகளையும் தன்னுடன் அரவணைத்து, அவர்களின் கருத்துகளை கேட்டு சிறப்பான ஆட்சி செய்து வருகிறார்.

எளிமையின் உருவமாகத் திகழ்கிறார்!

எளிமையின் உருவமாக (Man of Simplicity) திகழ்கிறார் ஸ்டாலின். கலைஞர், ஜெயலலிதா போன்ற தலைவர்கள் தமிழகத்தை ஆண்டு உள்ளார்கள்.

அவர்களையும் மிஞ்சிவிட்டார் ஸ்டாலின். கவனத்தில் வையுங்கள். இந்த தலைமுறை மட்டுமல்லாமல் அடுத்த தலைமுறையும் பேசும்படி செய்யவே தன் பணி செய்து வருகிறார் ஸ்டாலின்.

காவல் நிலையம், பள்ளி, பொதுப் பணி, மக்கள் குறைதீர்த்தல் போன்ற அனைத்திலும் மக்களோடு மக்களாக நின்று பணி செய்து தனித்துவம் பெறுகிறார் ஸ்டாலின்.

தமிழ்நாடு Care of Stalin என்று முகவரியை மாற்றி விட்டார்!

"தமிழ்நாடு Care of Stalin என்று அவர் தன் முகவரியை மாற்றிக் கொண்டார். முதல்வர்களில் இரு வகை.
1. மக்கள் பணி செய்பவர். 2. மக்களோடு மக்களாக வாழ்பவர். இதில் ஸ்டாலின் இரண்டாம் வகை.
1. தன்னுடைய ஆட்சியில் புதிய பல சாதனைகளைப் படைக்கப் போகிறார்!
2. தனக்கென தனி முத்திரை படைக்கப் போகிறார்!
3. ஸ்டாலினைப் பார்த்து மற்ற முதல்வர்கள் என்ன கற்றுக் கொள்ள வேண்டும்.
4. ஸ்டாலின் ஸ்டைலில் தமிழ்நாட்டை போன்று மற்ற முதல்வரின் முடிவு என்ன?"

அவரின் தொண்டினை சொல்வது மட்டுமல்லாமல், நீங்களே பாருங்கள் இந்தப் பதிவை.

முதல்வர் என்றால் பல்வேறு விமர்சனங்கள் எழும். ஆனால், எந்தவொரு விமர்சனமும் ஸ்டாலின் வீட்டு வாசலைக்கூடத் தொடமுடியாது.

ஏனெனில், "தமிழ்நாடு Care of Stalin" என்று அவர் தன் முகவரியை மாற்றிக் கொண்டார்.

முதல்வர்களில் இரு வகை.

1. மக்கள் பணி செய்பவர்.
2. மக்களோடு மக்களாக வாழ்பவர்.

இதில் ஸ்டாலின் இரண்டாம் வகை.

1. தன்னுடைய ஆட்சியில் புதிய பல சாதனைகளைப் படைக்கப் போகிறார்!
2. தனக்கென தனி முத்திரை படைக்கப் போகிறார்!
3. ஸ்டாலினைப் பார்த்து மற்ற முதல்வர்கள் என்ன கற்றுக் கொள்ள வேண்டும்.
4. ஸ்டாலின் ஸ்டைலில் தமிழ்நாட்டை போன்று மற்ற முதல்வரின் முடிவு என்ன?

இவைகள் எல்லாம் ஸ்டாலினை பற்றி மக்கள் மத்தியில் மட்டுமல்லாமல் உலகமே பேசும் கருத்துகள்.

அனைவரும் வியக்கும் வண்ணம் ஆட்சி செய்கிறார்!

ஸ்டாலின் செய்வது அரசியல் அல்ல; மக்கள் பணி! அனைவரும் வியக்கும் வண்ணம் ஆட்சி செய்து வருகிறார் ஸ்டாலின்.

அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு உயர்கல்வியிலும் முன்னுரிமை அளித்து ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்கிறார். நீட் தேர்வுக்காக போராடியுள்ளார்.

முதல்வர் வருகிறார் என்றால் அவர் செல்லும் வழியில் இரண்டு கிலோமீட்டர் தூரத்திற்கு போக்குவரத்து தடை செய்யப்படும்.

அம்மையார் என்றாலும் நின்றுதான் செல்லவேண்டும் என்ற நிலை மாறி எந்த ஒரு ஆடம்பரமும் ஆர்ப்பரிப்புமின்றி எளிமையாக சாதித்து வருகிறார் ஸ்டாலின்.

ஜெயலலிதா அம்மையார் புகைப்படம் போட்ட புத்தகப் பையில் அந்த புகைப்படத்தை நீக்காமல் அப்படியே மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டார். அம்மா உணவகம் தொடர்ந்து சிறப்பாக செயலாற்ற செய்துள்ளார்.

சட்டமன்ற உறுப்பினர்களும் பூங்கொத்து மற்றும் புத்தகம் தவிர எந்த ஒரு பொருளையும் பரிசாக பெறக்கூடாது.

மதிய உணவை வீட்டிலிருந்து கொண்டு வந்து சாப்பிடவேண்டும் என்று அன்பாக வேண்டுகோள் விடுத்தார். அதன்படி அனைவரும் முதல்வர் வழியில் பணியாற்றி வருகிறார்கள்.

தமிழ்நாடு மட்டுமின்றி மற்ற மாநில முதல்வர்களும், ஏன் உலகமே திரும்பி பார்க்க செய்து அசத்திவருகிறார். தனக்கென உரிய தனி ஸ்டைலில் பணியாற்றி வருகிறார்.

இவரை பார்த்து மற்ற முதல்வர்கள் கற்றுக்கொள்வார்களா? இவரின் Man of Power என்னவென்று சொல்வது.

இவ்வாறு 10 T.V. தொலைக்காட்சி ஒளிபரப்பியுள்ளது.

Date : 16-Nov-2021

கூட்டுறவு சங்கங்களுக்கு ₹148 கோடி மானியம்

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஊழியர்கள் சங்கம் நன்றி

சென்னை, நவ.16: தமிழ்நாடு கூட்டுறவு பண்டகசாலை ஊழியர்கள் சங்க மாநில பொதுச்செயலாளர் க.வெங்கடாசலபதி நேற்று வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் கூட்டுறவுத்துறையின் கூட்டுறவு சங்கங்கள் 32 ஆயிரத்திற்கு மேற்பட்ட நியாய விலை கடைகள் நடத்தி வருகிறது.

இதில் சுமார் 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணி புரிந்து வருகின்றனர். இதன் ஊழியர்களுக்கு ஊதியம் பணிக்கால பயன்கள், கடை வாடகை, லாரி வாடகை போன்ற செலவினங்களுக்கு ஆண்டுதோறும் அரசு மானியம் வழங்கி வருகிறது.

இதன்படி தமிழகம் முழுவதும் அந்தந்த மண்டல இணைப் பதிவாளர்கள் பரிந்துரையின் படி நியாய விலைக்கடை நடத்தும் கூட்டுறவு சங்கங்களுக்கு 2018-19ம் ஆண்டிற்கு ₹398 கோடி அரசு வழங்க வேண்டியதில் நவம்பர் 2020ல் ₹250 கோடி வழங்கப்பட்டது. மீதி ₹148 கோடி வழங்க வேண்டிய நிலுவை இருந்தது.

தற்போது வெளியிட்டுள்ள அரசு ஆணையின்படி நிலுவையில் இருந்த ₹148 கோடி கூட்டுறவு சங்கங்களுக்கு முழுமையாக வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி சென்னைக்கு ₹10 கோடி, கோயம்புத்தூர் ₹8 கோடி, மதுரை ₹6 கோடி, திண்டுக்கல் ₹6 கோடி, சேலம் ₹6 கோடி, திருச்சி ₹4 கோடி, திருநெல்வேலி ₹3 கோடி, திருவண்ணாமலை ₹6 கோடி, விருதுநகர் ₹3 கோடி, காஞ்சிபுரம் ₹6 கோடி, ஈரோடு ₹6 கோடி, சிவகங்கை ₹4 கோடி, கன்னியாகுமரி ₹1 கோடி என 33 மாவட்டங்களுக்கு ₹148 கோடி மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது. இதற்கு தமிழ்நாடு கூட்டுறவு பண்டக சாலை சங்கம் சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மாலை முரசு
Date : 17-Nov-2021

வெள்ள நிவாரண பணிகளில்

முதல்வர் ஸ்டாலின் தொலைநோக்கு பார்வை பாராட்டத்தக்கது!

கே.எஸ்.அழகிரி அறிக்கை!!

சென்னை,நவ.17–

வெள்ளச் சேத பகுதிகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆற்றி வரும்பணிகளைபாராட்டாமல்இருக்க முடியாதுஎன்று தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

கடந்த சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு, மு.க.ஸ்டாலின் தலைமையில்அமைந்ததி.மு.க.ஆட்சி மக்கள் நலனில் மிகுந்த அக்கறையோடு நாள்தோறும் பணியாற்றி வருகிறது. தமிழக முதலமைச்சர் ஒரு நாள் கூட ஓய்வு எடுக்காமல் கடுமையாகஉழைத்துவருவதை எவரும் பாராட்டாமல் இருக்கமுடியாது.சிறியபிரச்சினைகள்முதல் பெரியபிரச்சினைகள் வரை தெளிவான அணுகுமுறையோடு எதிர்கொண்டு மிகச் சிறப்பாகச் செயல்பட்டுவ்ருகிறார்.ஒரு முதலமைச்சர் எப்படிச் செயல்பட வேண்டுமோ அதற்கு முன்னுதாரணமாக செயல்படுவதால் வாக்களித்த மக்களின் பாராட்டுதலை விட, வாக்களிக்காத மக்களும்முதலமைச்சரைப் பாராட்டுவதுமிகுந்தமகிழ்ச்சியைத் தருகிறது.

மக்கள்துன்பத்தில்பாதிக்கப்பட்டிருக்கிற போது, எத்தகைய நிவாரணங்களை வழங்க வேண்டுமோ,அதை அறிந்து, அதற்கேற்றாற் போல் உதவிகளை அறிவித்து வருகிற முதலமைச்சரின் -தொலைநோக்குப் பார்வைஅனைவரதுபாராட்டையும் பெற்றிருக்கிறது.

மு.க.ஸ்டாலின் தலைமையிலானஆட்சியில்மக்களைத் தேடி மருத்துவ திட்டத்தின்மூலமாக 37 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர். கனமழை பெய்த ஒரு வார காலத்துக்கு அம்மா உணவகத்தின் மூலம் 14 லட்சம் பேருக்கு இலவச உணவு வ்ழங்கப்பட்டிருக்கிறது. இவற்றைஎல்லாம்பார்க்கிற போது, கடந்த 6 மாத காலமாக தமிழக முதலமைச்சர் மிக அற்புதமாக செயல்பட்டு தமிழக மக்களின் நலனைப் பாதுகாத்து வருகிறார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் சீரிய பணிகளை தமிழ்நாடு காங்கிரஸ் சார்பாக பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம். அவரது பணி மேலும் சிறப்பாக தொடர கட்சி எல்லைகளை கடந்து அனைவரும் ஒத்துழைப்பு வழங்கினால், தமிழகம் வளர்ச்சிப் பாதையில் பீடு நடைபோடுவதற்கான வாய்ப்பு உருவாகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

மக்கள் குரல்
நடுநிலை நாளேடு

Date : 19-Nov-2021

'முதல்வரின் முகவரி'

சாமானிய மக்களின் குரலுக்கு வலுசேர்க்க ஸ்டாலின் திட்டம் பாரீர்

நாடும் நடப்பும்

ஆர் முத்துக்குமார்

தமிழகத்தில் உள்ள பின்தங்கிய கிராமப்பகுதிகள் உள்ளிட்ட அனைத்துப்பகுதி மக்களுக்கும் தங்களது நல்ல திட்டங்கள் சென்றடைய வேண்டும் என்ற குறிக்கோளுடன் முதல்வர் ஸ்டாலின் உறுதியாக இருக்கிறார். அதைத் தான் சில நாட்களுக்கு முன்பு துவக்கப்பட்டு இருக்கும் 'முதல்வரின் முகவரி' என்ற புதிய துறை சுட்டிக்காட்டுகிறது.

மாநிலத்தின் வளர்ச்சிக்கு பல புதிய திட்டங்களை தொழில் துறையும் இளைஞர்களும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில் ஏழை சாமானியர்களின் எதிர்பார்ப்புகள் கவனக்குறைவால் விடுபட்டு போய் விடக்கூடாது என்ற பரந்த நோக்கத்துடன் ஸ்டாலின் தலைமையிலான தற்போதைய தி.மு.க. அரசு ஆட்சி செய்வதை தான் சுட்டிக்காட்டுகிறது . இப்புதிய துறையின் துவக்கம்.

ஏங்கிக்கொண்டிருக்கும் தினவருவாய் பெறும் சாமானிய உழைப்பாளரின் தேவைகள் மிக சாதாரணமானதாக இருப்பதால் உயர் அதிகாரிகளின் கவனத்தைக் கவரத் தவறிவிடும் வாய்ப்பு அதிகமாக அதிகரித்துக் கொண்டும் தான் இருக்கிறது.

குறிப்பாக அரசு சேவைகள் சாமானியன் பெறுவதில் காலதாமதங்கள் முதல் பொறுப்பற்ற உதாசீனப்படுத்தப் படுவதையும் பார்க்கிறோம்.

இதற்கு ஒரு தீர்வு அமைவாயும் முதல்வரின் நேரடி கவனத்திற்கு சென்றடைவதில் உள்ளது! ஆனால் அது சாத்தியமா? என்ற கேள்வியும் எழுகிறது. அரசியல் முடிச்சுகள் முதல் அரசாட்சி சிக்கல்கள் வரை அனைத்தையும் அவர் தனிப்பட்ட முறையில் சிந்தித்து செயல்பட்டு கொண்டிருக்கும் நிலையில் முதல்வர் ஸ்டாலின் விடிய விடிய பரபரப்பாக செயல்பட்டு கொண்டிருந்தாலும் தமிழகத்தின் அனைத்து தரப்பு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்து விட முடியாது என்பதை உணர்ந்து அதற்கு சரியான தீர்வாக 'முதல்வரின் முகவரி' என்ற புதிய துறையை தொடக்கி உள்ளார் என்றே தெரிகிறது.

இது என்ன 'முதல்வரின் முகவரி?' இதுகுறித்து வெளியிடப்பட்ட அரசாணை கூறுவது:-

முதல்வரின் தனிப்பிரிவு, முதல்வரின் உதவி மையம், ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மை அமைப்பு, உங்கள் தொகுதியில் முதல்வர் துறை ஆகிய அலுவலகங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு 'முதல்வரின் முகவரி' என்ற புதிய துறை உருவாக்கப்படுகிறது.

முதல்வரின் தனிப்பிரிவில் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள சிறப்பு அலுவலர் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் இந்தத் துறையின் கீழ் செயல்படுவர்.

தகவல் தொழில்நுட்பவியல் துறையின் கீழ் தமிழ்நாடு மின்ஆளுமை முகமையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மை அமைப்பின் முதன்மை பொதுக்குறை தீர்வு அலுவலர் பதவி, முதல்வரின் முகவரி துறை சிறப்பு அலுவலர் பதவியுடன் இணைக்கப்படுகிறது.

மேலும் 6 பொதுக்குறை தீர்வு மேற்பார்வை அலுவலர்கள் இனி முதல்வரின் முகவரி துறை சிறப்பு அலுவலரின் கட்டுப்பாட்டில் செயல்படுவார்கள்.

தலைமைச் செயலகத்தில் முதல்வரின் முகவரி துறைக்குத் தேவைப்படும் அனைத்து உதவிகள் வழங்கும் ஒருங்கிணைப்புத் துறையாக பொதுத்துறை செயல்படும்.

முதல்வரின் முகவரி துறையின் மனுக்களுக்குத் தீர்வுகாண ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மை அமைப்பு மாநிலம் முழுவதும் ஒற்றை இணையதள முகப்பாக (single portal) பயன்படுத்தப்படும். இது முதல்வரின் முகவரி துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மை அமைப்பின் ஹெல்ப்லைன், தகவல் அழைப்பு மையம், 1100 தொலைபேசி எண்ஆகியவை, மனுக்கள் தொடர்பாக விசாரிப்பதற்காகவும் மனுக்களைப் பதிவு செய்வதற்காகவும் இனி முதல்வரின் முகவரி துறையின் கீழ் இயங்கும்.

இந்த இணையதளம் தொடர்பான அன்றாட செயல்பாடுகள் குறித்து முதல்வரின் முகவரி துறையின் சிறப்பு அலுவலர், பொதுத்துறை செயலருடன் கலந்தாலோசித்து முடிவு செய்வார்.

மொத்தத்தில் ஆறு வெவ்வேறு பொதுக்குறை தீர்க்கும் அலுவலர்களின் பணிகளை நேரடியாக கண்காணித்து அவை சரிவர இயங்குகிறதா? என்பதை நேரடியாக கண்காணிக்க இப்புதிய துறை இருக்கும்.

திட்டத்தட்ட அந்த ஆறு குறைதீர்ப்பு துறைகளுக்கும் வரும் விண்ணப்பத் தேவைகள், புகார்கள் எல்லாம் பெரும்பாலும் ஒரே வகையறாக்களாய் இருக்கும் அல்லவா? . அப்படி இருந்தால் அதை முற்றிலும் சரி செய்ய உரிய முறைகளை எளிதாக ஸ்டாலின் முடிவு செய்து இருக்கிறார் என்பதையும் இப்புதிய துறை துவக்கம் சொல்லும் செய்தியாகும்.



2021 நிறைவு பெற இருக்கும் நிலையில் ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு கிட்டத்தட்ட 6 மாதங்கள் ஆட்சிப்பொறுப்பில் இருந்துள்ளது. பெரும்பாலும் கவனம் கொரோனா பரவலை கட்டுப்படுத்துவதிலும் அதன் பின் விளைவுகளை சமாளிப்பதிலும் கவனம் செலுத்தப்பட்டதால் நல்ல முறையில் தமிழகம் சுகாதார கேடுகளில் இருந்து தப்பித்து ஆரோக்கியமான தமிழகமாக உயர்ந்தது.

ஆனால் தமிழக மக்களின் அன்றாட குறைகளை வரும் நாட்களில் தீர்த்து வைப்பாரா? 2022-ல் தமிழகம் புது விடியலைக் காணுமா? என்ற கேள்விகளுக்கு பதிலை தெரிந்து கொள்ள மக்கள் ஆவலாக இருக்கிறார்கள். இப்படி பட்ட சாமானிய மக்களின் குரலைக் கேட்டுக் கொள்வதுடன் நில்லாமல் அவர்களின் வளமான எதிர்காலத்திற்கும் உறுதுணையாக இருக்கும் அரசாக தமிழக அரசை செயல்பட வைப்பதில் ஸ்டாலின் எடுத்து வரும் திட்டங்களை நாடே பாராட்டி மகிழ்கிறது.

முரசொலி

Date : 22-Nov-2021

கேப்டன் டோனியைப் பாராட்டிய போது,

முதல்வர் மு.க.ஸ்டாலின் அடித்த "சிக்ஸர்"!

இந்த உலகப்பந்தில் வேறு எந்த இனத் துக்கும் இல்லாத தனிப்பெருமை, தமிழ் இனத் துக்கு மட்டுமே உண்டு!

சரித்திரமும், சாதனையும் எந்த இடத்தி லும், தொடக்கம், முடிவு என்பது இரண்டுமே இல்லாமல், ஒரு தொடர்கதை போல போய்க் கொண்டிருப்பது இந்த இனத்துக்கு மட்டும்தான்.

இந்த இனத்தின் வரலாற்றில் சாதனை யாளர்களையோ, அவர்களது சாதனைப் படைப்புகளையோ, மதிப்பீடு வேண்டுமா னால் செய்து பார்க்கலாமே தவிர, ஒப்பீடு செய்து பார்க்க ஒருபோதும் முடியாது.

ஒவ்வொருவரும், ஒவ்வொரு படைப்பும் ஏதோ ஒருவிதத்தில் தனித்தன்மை வாய்ந்த தாகவே இருக்கிறது.

அந்தந்தக் காலகட்டத்தில் அவை சிறந்து விளங்கிற்று என எதையுமே நாம் இங்கு ஒதுக்கிவிட முடியாது.

ஏனென்றால் அந்தப் படைப்புகள் நேற்று, இன்று, நாளை என இல்லாமல், எந்தக் காலத் துக்கும் ஏற்றதாக வாழ்ந்து கொண்டிருக் கிறது. மொழி, கலை, கலாச்சாரம் என எல்லாத் துறைகளிலும் இந்த நிலைமைதான் நீடித்துக் கொண்டிருக்கிறது.

20.11.2021 மாலை சென்னை – கலை வாணர் அரங்கில், சூப்பர் கிங்ஸ் அணி, மாண்புமிகு முதல்வர் அவர்களால் பாராட்டப் பட்டது. கேப்டன் டோனியும் பாராட்டப்பட் டார்.

நான் இந்தக் கட்டுரையின் முதல் பகுதி யில் எழுதியிருப்பது எவ்வளவு உண்மை என் பதை அந்த நிகழ்ச்சியைப் பார்த்தவர்களால் உணர்ந்து கொள்ள முடியும்.

இந்தியாவுக்கு முதல் உலகக் கோப் பையை வென்று கொடுத்த கபில்தேவ் அவர் களும் அந்த மேடையில் அமர்ந்திருந்தார்.

அதன் பின், உலகக் கோப்பையை வென்ற டோனியும் அங்கே உடன் இருந்தார்.

அதை அழகாக மதிப்பீடு செய்தார், நமது மாண்புமிகு முதல்வர்.

"தோனியின் தனிப்பட்ட ஆட்டம் அபாரம்தான். ஆனால் அவர் தன்னுடைய அணியை நடத்துகிற பாங்கு தனித் தன்மை உடையது. வேறு யாரும் அதைப் பின்பற்ற முடியாது. வேறு யாரோடும் அவரை ஒப்பிட முடியாது.

நான் தோனி ரசிகன். நான் மட்டுமல்ல,

என் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் கூட அவருடைய ரசிகர்கள்தான்."

இப்படிச் சொன்ன முதல்வர், தொடர்ந்து சொன்னதுதான், நிகழ்ச்சியின் சிக்ஸர்..!

"தற்போது எனது அரசை, நான் நடத்துகிற விதமும் ஏறத்தாழ அந்த வகையதே" என்று சொன்னார் முதல்வர்.

"ஒரு அணி வெற்றி பெற இலக்கு அவசியம்தான். ஆனால் அதை விட உழைப்பு பல மடங்கு அவசியம்."

இப்படி முதல்வர் சொன்னதைக் கேட்ட நான் மலைத்துப் போனேன்.

கலைஞரையும், தோனியையும் ஒப்பிட்டுப் பேசினார் நமது முதல்வர்.

மிகச் சாமானிய நிலைகளிலிருந்து, உழைப்பின் மூலம் சரித்திர நிலைக்கு உயர்ந் தவர்கள் இந்த இருவரும் என்று சொன்னார் நமது முதல்வர்.

"அதுமட்டுமல்ல; விழுந்து விட்டால் உடைந்து விடாமல் மீண்டும் எழுந்து ஓடத் தெரிந்தவர்கள் இந்த இருவரும். ஓடுவது மட்டுமல்ல, ஜெயிக்கவும் தெரிந்தவர்கள்" என்று சொன்னார் நமது முதல்வர்.

தம்பி தளபதி அவர்களே !

பேரறிஞர் அண்ணா அவர்கள் இன்று இருந்திருந்தால், உங்களைக் கட்டி அணைத்து கனிவோடு முத்தம் கொடுத் திருப்பார்.

நீங்கள் சொன்ன கருத்துக்காக அல்ல! உங்கள் கணிப்புக்காக..!

ஒரு மனிதனின் ஆற்றல் என்பதே கணிப்பதில்தான் ஆரம்பமாகிறது.

பணிவு இல்லாத துணிவு பயன் தராது.

முட்டாள்களை முந்திக் கொண்டு ஓடுவது முன்னேற்றத்தைத் தராது.

பத்து மாடிக் கட்டிடத்தின் தரைத் தளத் தில் தூணுக்கு அருகே முட்டுக் கொடுப்பது போல பாவனை காட்டிக் கொண்டிருந்தால், அந்தக் கட்டிடத்தை அவன்தான் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறான் என, பார்ப் பவர்கள் எவரும் அதை நம்ப மாட்டார்கள்.

"Some are born great,
some achieve greatness,
and some have greatness thrust upon them."

இது நான் படித்த ஆங்கிலப் பழமொழி.

உங்கள் இலக்கு, அதை நோக்கிய உங் கள் பல வருட உழைப்பு, உங்கள் அணியை நீங்கள் அமைத்த பாங்கு, பதவி தேடி வந்த போதும் நீங்கள் காட்டிய பணிவு, உங்கள் அமைதி மூலம் மற்றவருக்கு வெளிக்காட் டும் துணிவு..!

ஒவ்வொன்றையும் கண்டு நான் வியந் தும், நெகிழ்ந்தும் போனேன்.

அது மட்டுமல்ல; சென்னை கிங்ஸ் விழா வில் நீங்கள் பேசியபோது என் கண்களுக்கு, தமிழ் அன்னையின் மலர்ச்சியும், மகிழ்ச்சி யும் தென்பட்டது.

கலைஞர் பாக்கியவான் என நினைத்த என் கண்களில் நீர் பொங்கி வழிந்தது.

அதேநேரம் ஜாதி, மதம், கட்சி என வேறுபாடு பார்க்காமல், தோனி என்ற மஞ்சள் தமிழ் மகனுக்கு விசில் அடித்து ஆதரவு தெரிவித்த தமிழக இளைஞர்

வி.செ.குகநாதன்
திரைப்பட இயக்குநர்

களைப் பார்த்தபோது சந்தோஷம் ஏற்பட்டது.

தமிழகத்தின் தங்க மகனான இன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலினையும் – அரசியல், ஜாதி மதம், கட்சி, வேறுபாடு பார்க்காமல், நாம் அனைவரும் ஏகமனதாக ஒரே குரலில் கொண்டாட ஆரம்பித்து விட்டால், தமிழகம் தலை நிமிரும். உலகம் நம்மை வியந்து பார்க்கும்.

இந்த மூத்தகுடியின் முன்னேற்றம் தடையின்றி முதல் இடத்தை அடைவது நிச்சயம்!

தினகரன்

Date : 23-Nov-2021

வலிமையான அரசு

சென்னை உள்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கனமழை கொட்டித் தீர்த்தது. திடீரென பெய்த இந்த கனமழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. முதல்வர் மு.க.ஸ்டாலின் முயற்சியால் பெரும் பாதிப்பில் இருந்து சென்னை உள்பட பல்வேறு பகுதிகள் காப்பாற்றப்பட்டுள்ளது. வெள்ள பாதிப்புகளை முதல்வர் தொடர்ச்சியாக பார்வையிட்டு வந்ததோடு பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளையும் கேட்டறிந்து அவர்களுக்கு தேவையான நிவாரண உதவிகளை வழங்கினார். டெல்டா மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களையும் பார்வையிட்டு விவசாயிகளிடம் முதல்வர் குறைகளை கேட்டறிந்தார். தமிழக அரசின் இந்த துரித நடவடிக்கையால் மக்கள் இயல்பு நிலைக்கு விரைவில் திரும்பியுள்ளனர்.

தமிழகத்தில் கொரோனா வைரஸ் தொற்று அதிகமாக இருந்தது. தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு கொரோனாவை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டார். தொடர்ந்து, கொரோனா பரவல் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

முக்கியமாக, கொரோனா தடுப்பூசி செலுத்துவதில் தமிழக அரசு 'ஜெட் வேகத்தில்' செயல்பட்டு வருகிறது. குறைகளை கேட்டறிந்து பொது மக்களின் வீடுகளுக்கே முதல்வர் நேரில் சென்று அவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறார். அனைத்து தரப்பு மக்களின் வாழ்வாதாரம் உயரும் வகையில் புதுப்புது திட்டங்களும் அறிவிக்கப்பட்டு வருகிறது.

பேரிடர் காலங்களில் மக்களை கண்ணும் கருத்துமாக தமிழக அரசு பாதுகாத்து வருகிறது. குடியிருப்பு பகுதிகளில் வெள்ள பாதிப்பு குறித்து தகவல் கொடுத்தால், உடனே உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மழைக்கால நோய்களை கட்டுப்படுத்தும் வகையில் முன்னெச்சரிக்கையாக மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த மருத்துவ முகாம்களை மக்கள் முழுமையாக பயன்படுத்தி கொள்ள வேண்டும். அரசின் நடவடிக்கைக்கு மக்கள் முழு ஒத்துழைப்பு தர வேண்டும். தற்போது, தரமான மருத்துவ சிகிச்சை அரசு மருத்துவமனைகளில் எளிதாக கிடைப்பதால் ஏராளமானோர் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர்.

எதிர்க்கட்சிகள் தாங்கள் செய்த தவறுகளை மறைப்பதற்காக ஆய்வு என்ற பெயரில் பொது மக்களை ஏமாற்றி வருகின்றன. ஆனால், மக்கள் தெளிவாக உள்ளனர். எதிர்க்கட்சிகள் நாடகத்தை ஒரு போதும் மக்கள் நம்பமாட்டார்கள். வெள்ள பாதிப்பு பகுதிகளை முதல்வரே நேரில் சென்று பார்வையிட்டு, அதற்கான மீட்பு பணிகளை துரிதப்படுத்தியுள்ளார். அரசியல் செய்வதற்காகவும், மக்களை திசை திருப்புவதற்காகவும் எதிர்க்கட்சிகள் ஆய்வு நடத்தி வருகிறது. அரசின் அதிவேக நடவடிக்கையால் பெரும் பாதிப்பில் இருந்து மக்கள் மீட்கப்பட்டுள்ளனர். இதை எதிர்க்கட்சிகள் அழுத்தமாக புரிந்து கொள்ள வேண்டும். தமிழகம் அனைத்து துறைகளிலும் வலுவான கட்டமைப்பை உருவாக்கி வருகிறது.

தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்ற பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. முக்கியமாக அனைத்து துறைகளிலும் கால் பதிக்க, வலிமையான கட்டமைப்பை தமிழக அரசு உருவாக்கி வருகிறது. விரைவில் அது சாத்தியமாகும்.

தினகரன்

Date : 24-Nov-2021

நமது பெருமை

நம்பர் 1 முதல்வர் மு.க.ஸ்டாலின் என்பதில் பெருமை இல்லை. நம்பர் 1 மாநிலம் தமிழகம் என்பதில் தான் எனக்கு பெருமை என்று உறுதி ஏற்று இருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின். ஒவ்வொரு நொடியையும் வீணாக்காமல் ஆக்கப்பூர்வமான முறையில் அமைச்சர்கள், அதிகாரிகள் துணையுடன் மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றியதால் இப்போது நாட்டிலேயே நம்பர் 1 முதல்வராக இருக்கிறார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்.

திமுக கொடுத்த தேர்தல் வாக்குறுதிகள், அதை நிறைவேற்றும் வேகம், மக்கள் நலப்பணிகளில் காட்டும் ஆர்வம் குறிப்பாக வெள்ள நிவாரண பணிகளில் வெள்ளம் பாதித்த இடங்கள் அத்தனையும் அவரே நேராக சென்று மேற்கொண்ட ஆய்வு என அனைத்தையும் பார்க்கும் போது முதல்வர் மு.க.ஸ்டாலினின் கடும் உழைப்பு, அர்ப்பணிப்பு உணர்வு அங்கு தெரிகிறது. துயர் துடைக்க ஓடோடி வரும் முன்மாதிரி முதல்வர் என்பதை கடைக்கோடி கன்னியாகுமரி மாவட்ட மக்கள் கூட இந்த வெள்ள பாதிப்பில் உணர்ந்து கொண்டனர். மக்களின் வலியை துடைக்க தேடி, ஓடிச்சென்று அத்தனை பேருக்கும் ஆதரவுக்கரம் நீட்டியிருக்கிறார்.

மே 7ம் தேதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்று கூறி முதல்வர் பதவி ஏற்ற போது தமிழ்நாடு வளம் மிக்கதாக இல்லை. ₹5 லட்சம் கோடிக்கு மேல் கடன். அதைவிட கொரோனா தொற்று உச்சத்தில் இருந்தது. அதிதீவிரமாக செயல்பட்டு அதை கட்டுக்குள் கொண்டு வந்த போது தமிழகம் முழுவதும் பெருவெள்ளத்தால் மக்கள் தத்தளித்து போனார்கள். கடந்த 3 வாரங்களாகவே வெள்ள நிவாரண பணிகளை முடுக்கி விட்டு கொண்டு இருந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் தற்போது தொழிற்துறையையும் முடுக்கி விடும் முனைப்பில் தீவிரம் காட்டத்தொடங்கி இருக்கிறார்.

2 நாட்களாக கோவையில் சுற்றுப்பயணம் செய்து வரும் அவர் பல்வேறு நலத்திட்டங்களை, வளர்ச்சிப்பணிகளை தொடங்கி வைத்ததுடன் 92 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டங்களை தொடங்கி வைத்து இருக்கிறார். கோவை மாவட்டத்தில், 10 சட்டமன்ற தொகுதிகளிலும் எதிர்க்கட்சிகள் வென்றாலும் கோவை விமானநிலையத்தில் இருந்து நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடக்கும் அரங்கிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் செல்ல 3 மணி நேரம் ஆகிவிட்டது. வீதிதோறும் திரண்ட மக்கள் வெள்ளம் கடந்த 6 மாதத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மீது கொண்ட நம்பிக்கையை காட்டி இருக்கிறது. அவர் ஓட்டு போட்டவர்களுக்கு மட்டுமல்ல ஓட்டு போடாதவர்களுக்கும், ஏன் ஒட்டுமொத்த தமிழ்நாட்டிற்கும் தான் முதல்வர் என்பதை தன் ஒவ்வொரு செயலாலும் நிரூபித்து கொண்டு வருகிறார்.

முதலில் குஜராத் மாடல் என்றார்கள், இப்போது டெல்லி மாடல் என்று சொல்கிறார்கள். அந்த டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் கூட திமுகவை பின்பற்றி 18 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு மாதம் தலா ₹1000 நிதியுதவி வழங்கப்படும் என்று தேர்தல் வாக்குறுதியை பஞ்சாப் மாநிலத்தில் அறிவித்து இருக்கிறார் என்றால் நாடு முழுவதுமே நமது முதல்வர் மு.க.ஸ்டாலினின் செயல்பாடுகளை உற்று நோக்குகிறது என்றுதானே அர்த்தம். நமது முதல்வர், நிச்சயம் நமது பெருமை.

தினகரன்

Date : 27-Nov-2021

தடுப்பூசியில் தமிழகம் சாதனை

இந்தியாவில் கடந்த ஜனவரி மாதம் 16-ம் தேதி முதல் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. கோவிஷீல்ட் மற்றும் கோவாக்சின் ஆகிய இரண்டு தடுப்பூசிகள் பிரதானமாக போடப்படுகின்றன. தடுப்பூசி மீதான பயம் காரணமாக முதலில் தடுப்பூசி போடுவதற்கு தயக்கம் காட்டிய மக்கள், தற்போது ஆர்வமாக போட்டு வருகின்றனர். தமிழ்நாட்டை பொறுத்தவரை தடுப்பூசி செலுத்தும் பணியை தமிழக அரசு விரைவுபடுத்தியுள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய அரசிடம் அடிக்கடி பேசி, கூடுதல் தடுப்பூசி பெற்றுக்கொடுத்துள்ளார். கொரோனா பரவலை முடிவுக்கு கொண்டுவரும் விதமாக தமிழ்நாட்டில் கடந்த செப்டம்பர் மாதம் முதல், மெகா சிறப்பு தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு தடுப்பூசி முகாமிலும் நிர்ணயித்த இலக்கைவிட கூடுதலாக தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. தமிழக அரசின் தீவிர நடவடிக்கை காரணமாக தற்போது கொரோனா பாதிப்பு வெகுவாக குறைந்துவிட்டது. தினசரி பாதிப்பு 800-க்குள் அடங்கிவிட்டது.

கடந்த 23-ம் தேதி நிலவரப்படி தமிழகம் முழுவதும் முதல் டோஸ் தடுப்பூசி 4.40 கோடி பேருக்கு போடப்பட்டுள்ளது. இது, 76 சதவீதம் ஆகும். இரண்டாவது டோஸ் தடுப்பூசி 2.31 கோடி பேருக்கு போடப்பட்டுள்ளது. இது 40 சதவீதம் ஆகும். மாவட்டம் வாரியாக ஒப்பிடுகையில் காஞ்சிபுரத்தில் முதல் டோஸ் 100 சதவீதம் பேருக்கும், இரண்டாவது டோஸ் 45 சதவீதம் பேருக்கும் போடப்பட்டு, இம்மாவட்டம் முதலிடத்தில் உள்ளது. கோவை மாவட்டத்தில் முதல் டோஸ் 91 சதவீதம் பேருக்கும், இரண்டாவது டோஸ் 55 சதவீதம் பேருக்கும் போடப்பட்டு 2வது இடத்தில் உள்ளது. அரியலூர் மாவட்டத்தில் முதல் டோஸ் 89 சதவீதம் பேருக்கும், இரண்டாவது டோஸ் 45 சதவீதம் பேருக்கும் போடப்பட்டு 3-வது இடத்தில் உள்ளது.

இந்திய அளவில் செலுத்தப்பட்ட தடுப்பூசி எண்ணிக்கை 120 கோடியை நெருங்கியுள்ளது. அதாவது, நேற்று முன்தினம் நிலவரப்படி 119.38 கோடியை கடந்துவிட்டது. வரும் டிசம்பருக்குள் 100 கோடி பேருக்கு தடுப்பூசி என்ற இலக்கை, இந்தியா, கடந்த அக்டோபர் மாதமே எட்டிவிட்டது. புதிய மைல்கல்லை எட்டிய இந்தியாவுக்கு, உலக சுகாதார நிறுவனம் உள்ளிட்ட பல்வேறு நாடுகளும் பாராட்டு தெரிவித்துள்ளன. இந்த ஆண்டு இறுதிக்குள் 100 கோடி பேருக்கு இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்தி முடிக்கவேண்டும் என்ற இலக்கு நிர்ணயித்து, இந்திய சுகாதாரத்துறை செயல்பட்டு வருகிறது. ஒன்றிய, மாநில அரசுகளின் முயற்சிகளால், தினசரி கொரோனா பாதிப்பு தொடர்ந்து 151 நாட்களாக 50 ஆயிரத்துக்கும் கீழ் உள்ளது. நாடு முழுவதும் கொரோனாவில் இருந்து குணமடைந்தோர் விகிதம் தற்போது 98.33 சதவீதமாக உள்ளது.

தடுப்பூசி செலுத்துவதில் தமிழக அரசு முழுவீச்சில் செயல்பட்டாலும், மக்களிடம் இன்னும் நூறு சதவீதம் விழிப்புணர்வு ஏற்படவில்லை. அதாவது, முதல் டோஸ் போட்டவர்கள், இரண்டாவது டோஸ் போட்டுக்கொள்வதில் ஆர்வம் செலுத்துவதில்லை. 75.83 லட்சம் பேர் இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்தாமல் உள்ளனர் என தமிழக அரசின் சுகாதாரத்துறை புள்ளிவிவரம் வெளியிட்டுள்ளது. தடுப்பூசி தொடர்பான புரிதல்களையும், விழிப்புணர்வையும் மக்கள் ஏற்படுத்திக்கொண்டால் 100 சதவீதம் இலக்கு என்பது மிக எளிதாகும். கொரோனா தொற்று முற்றிலும் நீங்கி, உயிரிழப்பும் அடியோடு குறையும்.

Date : 27-Nov-2021

"நம்மை காக்கும் 48"

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பதவியேற்ற நாளில் இருந்தே, துறைகளின் பெயர்களாகட்டும், திட்டங்களின் பெயர்களாகட்டும், "தமிழ் மணம் கமழும்" வகையில் பெயர்களை சூட்டி வருகிறார். வேளாண்மை துறை அமைச்சரை, வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் என்றும், சுகாதாரத்துறை அமைச்சரை மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் என்றும் அழைக்கும் வகையில் பெயர்களை மாற்றினார்.

இதுபோல, அனைத்து திட்டங்களின் பெயர்களும் கேட்பதற்கு இனிமையாக இருக்கும் வகையில் மாற்றப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, "மக்களை தேடி மருத்துவம், இல்லம் தேடி தடுப்பூசி, கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம், இல்லம் தேடி கல்வி" என்று தண்டமிழ் தலைப்புகளில் அருந்தமிழ் பெயர்கள் திட்டங்களுக்கு சூட்டப்படுகின்றன. இப்போது, சாலை விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, முதல் 48 மணி நேரத்திற்கான அவசர மருத்துவ கவனிப்பை அரசே மேற்கொள்ளும் வகையில், நம்மை காக்கும் 48 - அனைவருக்கும் முதல் 48 மணி நேர அவசர உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான இலவச மருத்துவ உதவி திட்டத்தை அறிவித்துள்ளார்.

சாலை பாதுகாப்பு - சாலை விபத்துகளை குறைப்பது - சாலை உயிரிழப்புகளை தடுப்பது குறித்து விரிவாக ஆலோசிப்பதற்காக முதல்-அமைச்சர் கூட்டிய கூட்டத்தில், சாலை பாதுகாப்பு மக்கள் இயக்கமாக மாற

பள்ளி, கல்லூரி மாணவர்கள், மக்கள் பிரதிநிதிகள், உள்ளாட்சி மற்றும் தன்னார்வ அமைப்புகள், விபத்தில் முதலுதவி செய்யும் பொதுமக்கள் அனைவருக்கும் பயிற்சி மற்றும் விழிப்புணர்வை உருவாக்கும் வகையில், "இன்னுயிர் காப்போம் - உதவி செய் திட்டம்" செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் விபத்துகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும், கடந்த 5 ஆண்டுகளாக குறைந்து வருகிறது. 2016-ம் ஆண்டில் நடந்த 71,431 விபத்துகளில் 17,218 பேரும், 2019-ம் ஆண்டில் நடந்த 57,728 விபத்துகளில் 10,525 பேரும் உயிரிழந்தனர். 2020-ம் ஆண்டில் விபத்துகளின் எண்ணிக்கை 45,489 ஆகவும், உயிரிழப்புகளின் எண்ணிக்கை 8,060 ஆகவும் குறைந்துள்ளது மனநிறைவு அளிக்கிறது. இருந்தாலும், சாலை விபத்து மற்றும் உயிரிழப்புகளில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக இருக்கும் தமிழ்நாட்டில், இன்னும் அதிகமாக குறையவேண்டும்.

தமிழ்நாடு இப்போது எடுத்துவரும் முயற்சிகளால் நிச்சயமாக எதிர்காலத்தில் இது சாத்தியமாகும் என்பது வல்லுனர்களின் கருத்து. 1 லட்சம் மக்கள்தொகையில் சாலை விபத்துகளின் இறப்பு விகிதம் 23.9 என்று இருப்பது குறைக்கப்படவேண்டும், சாலை பயணங்கள் பொதுமக்களுக்கு மிகவும் பாதுகாப்பான ஒன்றாக அமைந்திடும் வகையில், சாலையில் உயிரிழப்புகளை தடுப்பதற்கும், விபத்துகளை தவிர்ப்பதற்குமான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளவேண்டும் என்பது முதல்-அமைச்சரின் நோக்கம்.

விபத்தில் சிக்கியவர்களின் உயிரிழப்பை தடுக்கவேண்டும் என்றால், "கோல்டன் ஹவர்" என்று சொல்லப்படும் ஒரு மணி நேரத்திற்குள் மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சையளிக்கவேண்டும் என்பது உலகம் முழுவதும் ஏற்றுக்கொண்ட ஒரு கருத்தாகும். அந்த வகையில், சாலை விபத்தால் பாதிக்கப்பட்டவர்களை ஒரு மணி நேரத்திற்குள் மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டும். அதன்பிறகு, 48 மணி நேர சிகிச்சைக்கான செலவை அரசே ஏற்றுக்கொள்வது மிகவும் பாராட்டுக்குரியது. சாலையோரங்களில் உள்ள தனியார் மருத்துவமனைகள், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள் என மொத்தம் 609 மருத்துவமனைகள் இதற்கு என்று கண்டறியப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இதில் மிகவும் வரவேற்புக்குரியது, முதல்-அமைச்சரின் மருத்துவ காப்பீட்டு அட்டை இல்லாதவர்களும், பிற மாநிலத்தவர், வேற்று நாட்டவர் என யாவருக்கும் இந்த திட்டத்தின்கீழ் மருத்துவம் செய்யப்படும் என்று அறிவித்திருப்பது மு.க.ஸ்டாலின் அரசின் கருணையை காட்டுகிறது. விபத்துகளை தடுப்பதற்காக பல்துறை நிபுணர்களை உள்ளடக்கிய சாலை பாதுகாப்பு ஆணையம் அமைக்கப்படும் என்று அறிவித்திருப்பது, விபத்துகளை குறைப்பதற்கான திசையை நோக்கி எடுத்துச் செல்லும் என்பதில் சந்தேகம் இல்லை.

படிப்பு உதவி தொகைக்கு வருமான வரம்பு உயர்வு

தமிழக அரசுக்கு திருமாவளவன் நன்றி

சென்னை, நவ.29-

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் இன்று வெளியிட்டுள்ள அறிக்கை:

எஸ்சி- எஸ்டி மற்றும் கிறித்தவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவர்களுக்கு படிப்பு உதவித்தொகை பெறுவதற்கான பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு இதற்கு முன்பு ரூ.2.5 லட்சமாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. நீண்டகாலமாக அது மாற்றப்படாமலேயே இருந்தது. அதனை உயர்த்த வேண்டியதன் தேவையை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் நேரிலும், கடிதம் மூலமாகவும் வலியுறுத்தியிருந்தோம்.

அதை பரிசீலிப்பதாக முதல்வர் கூறியிருந்தார். தற்போது ஆராய்ச்சிக் கல்வி பயிலும் மாணவர்களுக்கான உதவித்தொகை பெறுவதற்கு வருமான வரம்பு ரூ.8 லட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதுமட்டுமின்றி அவர்களுக்கான உதவித்தொகையும் ஆண்டுக்கு ரூ.50 ஆயிரத்திலிருந்து ஒரு லட்சமாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. படிப்பு உதவித்தொகை பெறும் மாணவர்களின் எண்ணிக்கையும் 1200ல் இருந்து 1600 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே எஸ்சி, எஸ்டி பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் ஆராய்ச்சிக் கல்வி(பிஎச்டி) படிப்புக்கு அதிகமாகப் பெறும் மாநிலம் தமிழகம் தான். அர்களுக்கான கல்வி உதவித்தொகை உயர்த்தப்பட்டிருப்பதன் மூலம் கூடுதலாக 400 பேர் பி.எச்டி ஆராய்ச்சியில் ஈடுபட இது வழிவகுக்கும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

முரசொலி

Date : 30-Nov-2021

"எல்லா நிலைகளிலும்
எங்களுடனேயே இருப்பவர் மு.க.ஸ்டாலின்"!

டி.எஸ்.எம். இணையதளத் தொலைக்காட்சியில் பெண்மணி ஒருவரின் பெருமிதமும், உருக்கமும்!

சென்னை, நவ.30–

"எல்லா நிலைகளிலும் எங்களுடனேயே இருப்பவர் மு.க.ஸ்டாலின் என்று "டி.எஸ்.எம்." இணையதளத் தொலைக்காட்சியின் 'மக்கள் பார்வையில் மு.க.ஸ்டாலின்' சிறப்பு நிகழ்ச்சியில் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி பெருமிதமும், உருக்கமும் கொண்டு பேட்டியளித்தார்.

டி.எஸ்.எம். இணைய தள தொலைக்காட்சி வெளியிட்ட "மக்கள் பார்வையில் மு.க.ஸ்டாலின்" என்ற சிறப்பு நிகழ்ச்சியில் நடுத்தர வயதுப் பெண்மணி அளித்த பேட்டி வருமாறு:

முதலில் இருந்த ஆட்சியை விட இந்த ஆட்சிதான் சிறப்பாக செயல்படுகிறது. நாங்கள் கட்சிக்காரர் கிடையாது. பொதுமக்கள் தான்! இந்த ஆட்சி தான் எங்களுக்கு வேண்டும்.

இந்த ஆட்சி எடுத்த எல்லா வேலைகளும் வெற்றியாகத்தான் முடியும். எங்களுக்கு இந்த ஆட்சி எல்லா உதவிகளையும் நல்லா செய்யுறாங்க. எங்கள் பகுதிக்குத் தேவையான அனைத்தையுமே நன்றாக செய்யுறாங்க. இவர்களைத் தவிர வேறு ஆள் கிடையாது நல்லது செய்வதற்கு!

நாங்கள் மழையில் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறோம். எங்கள் வயிற்றுக்குத் தேவையான உணவையும், குடிதண்ணீரையும் எங்களைத் தேடி வந்துகொடுக்கிறார் பாருங்க. இதற்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அந்த அளவுக்கு எங்களுக்கு மகிழ்ச்சியா இருக்கு.

எங்களுக்கு சாப்பாடு கொடுப்பது மட்டு மல்ல, அந்தச் சாப்பாட்டை முதலில் அவர் சாப்பிட்டுப் பார்க்கிறார்.

ஒரு டீக்கடைக்குப் போனால் அவர் டீ குடிக்கிறார். முதல்வர் மக்களோடு மக்களாக கலந்து டீ குடிக்கிறார் என்றால் இதை என்னவென்று சொல்வது? இதை நினைத்தால் எங்களுக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கு!

முதலில் இருந்த ஆட்சி மழைக் காலத்தில் பிளேனில் இருந்துதான் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்த்தார்கள். ஜெயலலிதா தண்ணீரில் மக்கள் எப்படி தவிக்குறாங்க என்பதை பிளேனில் அமர்ந்து கொண்டு தான் பார்த்தார். அதே மாதிரி எடப்பாடி–ஓ.பி.எஸ். கூட எல்லாம் மழை பாதிப்புகளை பிளேனில் தான் பார்த்தாங்க. மக்கள் எப்படி பாதித்து இருக்காங்க? தண்ணீர் எங்கே தேங்கி இருக்குன்னு அப்படியே பிளேனில் தான் பார்த்துட்டு போனாங்க.

ஆனா இந்த ஆட்சியில் ஸ்டாலின் அண்ணன், மழைத் தண்ணீரில் இறங்கி மழையில் நனைந்து கொண்டே மக்களோடு மக்களாக கலந்து

மழைத்தண்ணீரில் நடந்து மக்களைச் சந்தித்து கோரிக்கையைக் கேட்டு, அதற்கேற்ற உதவிகளை செய்யுறார்! மக்களுக்காக ரொம்ப ரொம்ப அளவில்லாம நல்லதைச் செய்கிறார். அவர் செய்த அந்த அளவுக்கதிகமான உதவியை நாங்கள் மண்ணுக்குப் போகும் வரைக்கும் மறக்கவே மாட்டோம்.

இதே மாதிரி போன ஆட்சியும் சரி, அதற்கு முந்தைய ஆட்சியும் இதே மாதிரி உதவிகள் செய்தது கிடையாது. நமது முதல்வரை சொல்வதற்கு அளவே இல்லை என்று தான் எங்களால் சொல்ல முடியும்.

எங்களோடு சேர்ந்து, எங்களோடு பகிர்ந்து எங்கள் துயரங்களை எல்லாம் கேட்டு, அவற்றையெல்லாம் செய்து கொடுக்கிறார். சேற்றுத் தண்ணீரில் தான் நடக்கிறோம். இதில் இறங்கி எங்களோடு சேர்ந்து முதல்வரும் நடக்கிறார். அதற்குத் தீர்வு காணுகிறார்." எங்களுக்குத் தேவையான நன்மையைச் செய்கிறார்.

இவரை மாதிரி எந்த முதல்வரும் செய்த சரித்திரம் கிடையாது. இவரைப்பற்றிச் சொல்வதற்கு நிறைய இருக்கு. அவற்றையெல் லாம் எங்களால் சொல்ல முடியவில்லை. என்னால் உணர்ச்சி வசத்தால் என்ன சொல்வ தென்றே தெரியவில்லை. இதே மாதிரி எங்களுக்குத் தேவையான நன்மைகளை இந்த முதல்வர் தான் செய்துக்கிட்டு இருக்கிறார்.

இவர் தான் முதல்வரா இருக்கணும், திரும்ப மக்களாகிய நாங்கள் அவரைத்தான் மீண்டும் முதல்வரா தேர்ந்தெடுப்போம்.

இவ்வாறு அப்பெண்மணி கூறினார்.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்
Date : 30-Nov-2021

பொருளாதார தன்னிறைவு

தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு, அனைத்து தரப்பு மக்களின் வாழ்வாதாரமும் உயர தனிக்கவனம் செலுத்தி வருகிறார். தமிழகம் பொருளாதாரத்தில் தன்னிறைவு அடைய பல்வேறு வியூகங்கள் வகுத்து அதிரடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. கொரோனா தொற்று காலத்தில் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழகத்தில் கொரோனா கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி, நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது வரவேற்க வேண்டிய விஷயம்.

கல்வி, சுகாதாரம், பொருளாதார வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தமிழகம் முன்னேற்ற பாதையில் பயணிக்க துவங்கியுள்ளது. விரைவில், பொருளாதார ரீதியாக நாட்டிலேயே தமிழகம் முதலிடம் பெறும். அனைத்து தரப்பு மக்களின் முன்னேற்றத்துக்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் பல்வேறு திட்டங்களை அறிவித்து வருகிறார்.

தமிழக அரசின் நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களுக்கு பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. இதனாலேயே தமிழகத்தில் பல்வேறு நிறுவனங்கள் தொழில் துவங்க தாமாக முன் வந்துள்ளது.

இது ஒரு புறம் இருக்க, மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. கல்வியில் மாணவர்கள் சிறந்து விளங்கினால் தான், அறிவியலில் புதிய கண்டுபிடிப்புகளை கண்டறிய முடியும். இதன் மூலம் தமிழகத்திற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்கும். அறிவியலில் மட்டுமல்ல, பல்வேறு துறைகளிலும் புதிய கண்டுபிடிப்பு தற்போது தேவையாக உள்ளது. கூர்மையான அறிவுத்திறன் படைத்தவர்கள் தமிழக இளைஞர்கள். எனவே அவர்களால் புதிய கண்டுபிடிப்புகளில் சாதிக்க முடியும். மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

சுகாதார துறையிலும் அடுத்த கட்ட நகர்வை நோக்கி தமிழகம் சென்று கொண்டு இருக்கிறது. அனைத்து தரப்பு மக்களுக்கும் எளிதாக மருத்துவ வசதிகள் கிடைத்திட வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அரசின் திட்டங்களை மக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். சுகாதார கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில் புதுப்புது அறிவிப்புகள் வெளியிடப்பட்டு வருகின்றன. பொருளாதாரம், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தன்னிறைவு பெறும் முயற்சியில் தமிழக அரசு தீவிரமாக இறங்கியுள்ளது.

தேர்தல் நெருங்கும் நேரத்தில் மட்டும் சில கட்சி தலைவர்கள் மக்களை தேடி செல்கின்றனர். முக்கியமாக, தேர்தல் நேரத்தில் விவசாயிகளை புகழ்ந்து பேசினர். ஆனால், பல மாதங்களாக கடுங்குளிரில் போராடிய போது விவசாயிகளை சந்திக்க அவர்கள் வரவில்லை. இதை விவசாயிகள் மறந்து விடவில்லை. மக்கள் நலன் தான் எப்போதும் முக்கியம். மக்களின் வாழ்வாதாரம் மேம்பட, அவர்களின் முன்னேற்றத்திற்காக சிறப்பான புதுப்புது திட்டங்கள் தமிழகத்தில் அறிவிக்கப்பட்டு வருகிறது. மக்களின் முழு ஒத்துழைப்போடு, அனைத்து துறைகளிலும் நம்பர் ஒன் இடத்தை விரைவில் தமிழகம் எட்டும்.

Date : 30-Nov-2021

ரேஷன் கடைகளில் கருப்பட்டி!

தி.மு.க. தேர்தல் அறிக்கையில் வெளியான 505 வாக்குறுதிகளில், "ரேஷன் கடைகளில் மற்ற பொருட்களுடன் பனை வெல்லமும் விற்பனை செய்யப்படும்" என்ற அறிவிப்பும் இடம் பெற்றிருந்தது. அதை நிறைவேற்றும் வகையில், நவம்பர் 1-ந்தேதி முதல் பனை வெல்லம் என்று பொதுவாக அழைக்கப்படும் கருப்பட்டி ரேஷன் கடைகளில் விற்பனைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டது மகிழ்ச்சியான செய்தி.

ஏற்கனவே, வேளாண் துறை பட்ஜெட்டில், "தமிழகத்தில் 76 லட்சம் பனை விதைகளையும், ஒரு லட்சம் பனங்கன்றுகளையும் மானியத்தில் வழங்கி, ஏரிக்கரைகளிலும், சாலையோரங்களிலும் வளர்க்க ஏற்பாடு செய்யப்படும். ஆரோக்கியத்தை தரும் பனங்கற்கண்டு, பதநீர், கருப்பட்டி போன்றவை பிரபலப்படுத்தப்படும். ரேஷன் கடைகளில் கருப்பட்டி

விநியோகிக்கப்படும். பனை மரங்களை வெட்ட தடை விதிக்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

சொன்னதை உடனடியாக நிறைவேற்றும் வகையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் அமுதம் நியாயவிலை கடைகளிலும், கூட்டுறவுத்துறை நடத்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட ரேஷன் கடைகளிலும் கருப்பட்டி விற்க அனுமதிக்கப்படும் வகையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்தரவில், "கருப்பட்டி விற்பனை விருப்பத்தின் அடிப்படையிலேயே அமைந்திடவேண்டும். 100 கிராம், 250 கிராம், அரை கிலோ என்ற எடையில் விற்கப்படவேண்டும்" என்றும் கூறப்பட்டிருந்தது.

இந்த அறிவிப்பை விரைந்து செயல்படுத்தும் வகையில், தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, கதர் கிராம தொழில் வாரிய தலைமைச் செயல் அலுவலர் பொ.சங்கர் ஆகியோர் மின்னல் வேகத்தில் நடவடிக்கை எடுத்தனர். சில வாரங்களுக்கு முன்பு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், 'கற்பகம்' என்ற பெயரில் ரேஷன் கடைகளில் கருப்பட்டி விற்பனை செய்வதையும், பல்பொருள் அங்காடிகளில் 'கரும்பனை' என்ற பெயரில் கருப்பட்டி விற்பனை செய்வதையும் தொடங்கிவைத்தார்.

இதுவரை 10 டன் கருப்பட்டி ரேஷன் கடைகளுக்கு வினியோகம் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களிடம் இது நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. மழைகாலம் முடிந்தவுடன் விற்பனை அதிகரிக்கும் என்று அதிகாரிகள் எதிர்பார்க்கிறார்கள். கற்பகத்தரு, கற்பகவிருட்சம் என்று தமிழக மக்களின் வாழ்க்கை, கலாசாரத்தோடு பின்னிப்பிணைந்த பனை மரம் பல சிறப்புகளை கொண்டது. செம்மொழியான தமிழ்மொழியின் எழுத்துக்கள், முதலில் எழுதப்பட்டது பனை ஓலையில்தான்.

அடி முதல் நுனிவரை அத்தனை பாகங்களும் பயன்தருபவை. கருப்பட்டி மட்டுமல்ல, பனங்கற்கண்டு, பனை நுங்கு, பனம்பழம், பனங்கிழங்கு போன்ற உண்ணும் பொருட்களையும், பனந்தும்பு, பனை நார், பனை ஓலை பெட்டி போன்ற பயன்படுத்தும் பொருட்களையும் தருகின்றன. பனை மரம் வளர்க்க பெரிய செலவு எதுவும் செய்ய வேண்டியதில்லை. நிலத்தடி நீரை கொண்டு தானாகவே வளரும். சேர மன்னர்கள் போரில் வென்ற பிறகு, பனம் பூவை சூடிக்கொண்டதாக வரலாறு இருக்கிறது. சில கோவில்களில் பனை மரமே தலமரமாகவும் உள்ளது. காஞ்சீபுரம் அருகேயுள்ள திருப்பனங்காடு கிருபாநிதீஸ்வரர் கோவிலில் உள்ள 15-ம் நூற்றாண்டு கல்வெட்டில், "உயிருள்ள பனை மரங்களை வெட்டக்கூடாது" என்ற உத்தரவு உள்ளது. அந்த உத்தரவை இப்போது தமிழக அரசு செயல்படுத்துவது வரவேற்புக்குரியது.

தமிழக மக்களுக்கு பனை பொருட்களின் நன்மைகள் சரிவர தெரியாது. குமரிஅனந்தன் சொன்னது போல, கற்பகம் எனப்படும் கருப்புக்கட்டியில் மனித ரத்தத்தை அபிவிருத்தி செய்யும் தயமின், ரிபோபிளேவின் என்ற 'பி' வைட்டமின்களும், நிகோடினிக் ஆசிட் என்ற 'பி 3'-யும், அஸ்கார்பிக் என்ற 'சி' வைட்டமினும் இருக்கின்றன. இவை மனித உடல் வளர்ச்சிக்கு மிக தேவையானவை. பனை பொருட்களின் பயன்கள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தாமல், விற்பனையை பெருமளவில் எதிர்பார்க்க முடியாது. எனவே, அதை நடைமுறைப்படுத்துவதுடன், பனை மர சாகுபடியை பெருக்கவும் உழவர் நலத்துறை நடவடிக்கை எடுக்கவேண்டும்.

THE NEW INDIAN EXPRESS

Date : 30-Nov-2021

TN'S POLICIES TO REVITALISE ECONOMY

The Tamil Nadu government led by M K Stalin is on a mission. Barely seven months in governance, he is making serious efforts to breathe life into the hitherto sagging state economy. He and the finance minister Palanivel Thiaga Rajan have reiterated that the target of $1 trillion by 2030 is not a pipe dream. Here are a few moves initiated by the government. The state is attempting to build a hub for the IT and fintech sectors. It recently unveiled a FinTech Policy to transform itself into a leading global destination for MNCs by 2025. It will offer incentives to firms starting operations in tier-2 and tier-3 cities. The government has also proposed to set up new IT parks in these cities. Simultaneously, TN has also unveiled an exclusive policy to develop the state as the top destination for data centres. Many large companies are already in the process of setting up their data centres in Chennai and surrounding areas. The state will also create a pool of skilled manpower in the sector.

While attracting IT and fintech companies, TN has not lost track of its industrial growth. The exit of Ford may have temporarily dented its image, but a recent investment conclave held in Coimbatore saw keen interest from many other companies. The CM inaugurated 10 projects with a cumulative investment of ₹13,928 crore and laid the foundation stone for another 13. Undoubtedly, the state is positioned to capture a significant slice of the potential market India has envisioned in the next 10 years. While pushing for new projects, the government is clear about its prime target: employment generation.

Meanwhile, the economic advisory council set up by the government, which includes the likes of Nobel laureate Esther Duflo and ex-RBI governor Raghuram Rajan, has begun its ground work. Let's hope that while revitalising the state economy, the council will also ensure that the benefits of the economic growth reach all segments of the society and help the state shrug off the long-prevalent freebie culture. Once in place, it will be a model worth emulating for other states.

களத்தில் நிற்கும் முதல்வர்!

வங்கக்கடலில் தெற்கு தாய்லாந்தில் உருவான காற்றழுத்த தாழ்வுப்பகுதி அந்தமான் அருகே நகர்ந்து இன்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாகவும் நாளை காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும் மாறும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. நாளை மறுநாள் இது புயலாக வலுப்பெற்று 4–ம் தேதி வடக்கு ஆந்திரா மற்றும் தெற்கு ஒடிசா கடற்பகுதியை நெருங்கும் என்றும் எச்சரிக்கப்பட்டு இருக்கிறது. தற்போதைய நிலவரப்படி புயலால் தமிழகத்துக்கு கனமழை வாய்ப்பு இல்லை என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இந்தியப் பெருங்கடலில் உருவாகும் புயல்களுக்கான பெயர் பட்டியலின்படி வங்கக்கடலில் உருவாகும் புயலுக்கு சவுதி அரேபியா வழங்கியுள்ள ஜாவத் என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

ஜாவத் என்றால் அரபி மொழியில் பெருந்தன்மை மற்றும் கருணை என்று அர்த்தம். வங்கக்கடலில் ஜாவத் புயல் உருவாகும் நிலையில் அரபிக் கடலிலும் ஒரு காற்றழுத்த தாழ்வுப்பகுதி நிலவுகிறது. அது புயலாக மாறுமா என்பது வரும் நாட்களில் தான் தெரியவரும். அக்டோபர் 25–ல் வடகிழக்குப் பருவமழை துவங்கியதும் முதல் கட்டமாக கடலூர், விழுப்புரம், ஈரோடு, தஞ்சை, திருவாரூர், திருநெல்வேலி, தென்காசி ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்தது. நவம்பர் 6–ம் தேதி இரவு சென்னையில் விடிய விடிய கனமழை கொட்டியதில் பெரும்பாலான இடங்கள் வெள்ளக்காடாகியது. ஒரே நாளில் 23 செ.மீ. மழை பதிவானது. அப்போது முதல் சென்னை தொடங்கி குமரி வரை பெரும்பாலான மாவட்டங்களில் கனமழை பெய்து வெள்ள பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது.

இன்று பகல் முதல் 4–ம் தேதி வரை தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி 24 மணி நேரத்தில் மாநிலத்தில் அதிகபட்சமாக தேனி மாவட்டம் வீரபாண்டியில் 12 செ.மீ. மழை பெய்துள்ளது. இன்று அந்தமான் பகுதி, தென்கிழக்கு அரபிக்கடல், கேரள கடலோரம் மற்றும் லட்சத்தீவு; நாளை தென்கிழக்கு மற்றும் மத்திய கிழக்கு வங்கக்கடல்; வரும் 3–ம் தேதி மத்திய வங்கக்கடல்; 4–ம் தேதி மத்திய மேற்கு மற்றும் வடமேற்கு வங்கக்கடல் ஆகிய பகுதிகளில் மணிக்கு 65 செ.மீ. வரை சூறாவளி காற்று வீசும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அதே நேரத்தில் தமிழகத்துக்கான கனமழை எச்சரிக்கை வாபஸ் பெறப்பட்டு இருப்பதால் 4 வாரங்களாக மழை வெள்ளத்தால் அவதிக்குள்ளான தமிழக மக்கள் இயல்பு நிலைக்கு திரும்ப வாய்ப்பு உள்ளது.

வடகிழக்கு பருவமழையைப் பொருத்தவரை ஆண்டுதோறும் அக்டோபரில் தொடங்கி டிசம்பர் வரை பெய்யும் என்பது வாடிக்கை. இதன் காரணமாக தமிழகத்தில் பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்தது. குறிப்பாக சென்னை உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் அதிக மழைப்பொழிவு இருக்கும். சில ஆண்டுகள் வடகிழக்கு பருவமழை சரிவர பெய்யாமல் போனாலும் பெரும்பாலான ஆண்டுகளில் வடகிழக்குப் பருவமழை காலகட்டத்தில் பலத்த மழை பெய்துள்ளது. இதில் குறிப்பாக கடந்த 1918, 2015 மற்றும் 2021–ம் ஆண்டுகளில் நவம்பர் மாதத்தில் மட்டும் 1000 மி.மீட்டருக்கு மேல் மழை பெய்துள்ளது. இந்த ஆண்டு சென்னையில் நவம்பர் 1–ம் தேதி முதல் நவம்பர் 30–ம் தேதி வரையிலான 30 நாட்களில் மட்டும் 1,076 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. கடந்த 2206 ஆண்டுகளில் 1,000 மி.மீட்டருக்கு மேல் மழை பதிவாகியிருப்பது இது 3–வது முறையாகும்.

இந்த பருவமழை காலத்தில் பெய்த பலத்த மழை தமிழகத்தை ஒரு பதம் பார்த்துவிட்டது. தமிழக வட மாவட்டங்கள் மற்றும் தென் மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு காணும் இடமெல்லாம் வெள்ளக்காடாக காட்சியளித்தது. முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான அரசு போர்க்கால அடிப்படையில் வெள்ள நிவாரணப் பணிகளில் ஈடுபட்டது. அந்தந்த தொகுதி எம்.எல்.ஏ.க்கள், எம்.பிக்கள், மாவட்ட கலெக்டர்கள், வருவாய்த்துறை அதிகாரிகள் என அரசு எந்திரம் முழுமையாக முடுக்கிவிடப்பட்டது. மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசு அதிகாரிகள் நேரடி களப்பணியில் இறங்கி நிவாரணப் பணிகளில் இறங்கினர். இதனால் எதிர்பார்த்த சேதம் இல்லாமல் பொதுமக்கள் இந்த இன்னலில் இருந்து காப்பாற்றப்பட்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நிமிடத்துக்கு நிமிடம் வெள்ள நிவாரணப் பணிகள் குறித்த விவரங்களை அதிகாரிகளிடமும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடமும் கேட்டறிந்து உரிய நடவடிக்கைகளெடுத்தார். அவரும் தினமும் வெள்ளப்பகுதி களுக்கு சென்று நேரடி ஆய்வு மேற்கொண்டார். நிவாரணப் பணிகளை நேரில் நின்று விரைவு படுத்தினார். இந்த நேரடிப்பணியின் போது மக்கள் துயரை துடைக்க வெள்ள நிவாரணப் பணிகளை மக்கள் பிரதிநிதிகளுடனும், அதிகாரிகளுடனும் நேரில் களத்தில் நிற்பேன். நிற்கிறேன் என்று அவர் அளித்த உறுதிமொழிப்படியே ஒருநாள்கூட ஓய்வில்லாமல் வெள்ள நிவாரணப் பணிகளை நேரில் சென்று ஆய்வு செய்தார். வெள்ள நிவாரணப் பணிகளில் மட்டுமல்ல மக்கள் நலனுக்காக முதல்வர் ஸ்டாலின் எந்த நேரத்திலும் நேரடி களத்தில் நிற்பார் என்பதை அவருடைய செயல்பாடுகள் நாளுக்கு நாள் எடுத்துக்காட்டிக்கொண்டே இருக்கும். ஆகவே தமிழக மக்கள் கவலையின்றி நிம்மதியாக வாழும் உத்தரவாதத்தை முதல்வர் ஸ்டாலினின் வாக்குறுதி உறுதிப்படுத்துகிறது.

02-Dec-2021

மழை வெள்ளத்தின்போது

மறக்க முடியாத பணி செய்திருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

மாம்பலம் பெரியவர் மனம் திறக்கிறார்!

சென்னை,டிச.2–

சென்னை – தியாகராயர் நகர் – மாம்பலம் பகுதியில், கோயில் அர்ச்சகர் ஒருவர், கழக அரசின் மழை நிவாரணப் பணிகள் குறித்து மனம் திறந்து பேசும் காணொலி ஒன்று வலை தளங்களில் வலம் வருகிறது.

அதில், அப்பெரியவர் குறிப்பிட்டதாவது:–

இந்த ஆட்சியில் மழை வெள்ளத்தை வடிக்க சுறுசுறுப்பாகப் பணியாற்றுகிறார்கள். எங்கள் பகுதியில் முதலில் கொஞ்சம்தான் தண்ணீர் உள்ளே வந்தது. இவர்கள் செய்த பணியின் உதவியால், எங்கள் பகுதிக்குள் சொட்டு கூட தண்ணீர் வரவில்லை. மேலும் கட்சிக்காரங்களும் நல்லா உழைச்சிருக்காங்க. இந்த மாம்பலத்தில் தண்ணீர் தேங்கிக் கிடக்காமல் போனதற்குக் காரணமே, இது போன்ற நடவடிக்கைகள்தான். அதனால், இவர்களுக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் தகும். அடுத்த மழைக்காலத்தில் சொட்டுத் தண்ணீர் கூட நிற்காது. இது நல்லா வரவேற்க வேண்டிய விஷயம்.

முதல்வர் அவர்களே தண்ணீரில் இறங்கி நடக்கிறார். நன்கு செய்திருக்கிறார். அவர் மீது மக்களுக்கு நல்ல நம்பிக்கை உண்டாயிருக்கிறது. நல்லா பண்ணியிருக்கிறார், முதல்வர் ஸ்டாலின். அவர் எல்லா இடங்களுக்கும் சென்று பார்க்கிறார். மக்களுக்குத் தேவையான போர்வை, உணவிலிருந்து எல்லாமும் கொடுத்திருக்கிறார். போன வாரம் எங்களை அழைத்துச் சென்று, ஒரு பை நிறைய மளிகைச் சாமான்கள், ஒரு பை நிறைய காய்கறிகள், 5 கிலோ அரிசி எல்லாம் எங்களுக்குக் கொடுத்து "உங்களை சந்தோஷமாக வாழ வைப்பேன், கவலைப்

படாதீங்க... அடுத்த மழைக் காலத்திலிருந்து தண்ணியே வராது... அதற்குள் வடிகால்வாய் பணிகளை எல்லாம் 'பக்காவாகப் பண்ணிடுவோம், நீங்ள் ஒண்ணும் கவலையே படாதீங்க" என்று கூறினார். அன்றைக்கு ஸ்டாலின் மகன் உதயநிதி வந்தார். அவரும் ஆய்வு செய்து விட்டுச் சென்றிருக்கிறார். எனவே, இந்தப் பகுதியில் அடுத்த வருடம் தண்ணீரே நிற்காது. அந்த நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

இந்த ஏரியாவில் வெற்றி பெற்ற மிஸ்டர் கருணாநிதி (எம்.எல்.ஏ.), எல்லா இடங்களுக்கும் போய் வருகிறார். அவர் மக்களோடு மக்களா கீழே தண்ணீரில் வந்து இறங்கி, எல்லோரையும் பார்த்து வேண்டிய வைகளைக் கொடுத்தார்.

இவ்வாறு அப்பெரியவர் குறிப்பிட்டார்.

தினமணி

02-Dec-2021

100 ஆண்டுகளுக்குப் பிறகு நவீனமாகிறது

புனித ஜார்ஜ் கோட்டை பேரவைக் கூடம்

காகிதமில்லாத அவையை உருவாக்க பணிகள் தீவிரம்

கே.பாலசுப்பிரமணியன்

சென்னை, டிச. 1: தமிழகத்தில் 100 ஆண்டுகளுக்குப் பிறகு, புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள பேரவைக் கூடம் நவீனமயமாகிறது. காகிதமில்லாத அவையை உருவாக்குவதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. கரோனா நோய்த் தொற்று பாதிப்பின் அளவைப் பொருத்து பேரவைக் கூட்டத்தை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கரோனா நோய்த் தொற்று பாதிப்பின் தீவிரம் காரணமாக, புனித ஜார்ஜ் கோட்டையில் இருந்து கலைவாணர் அரங்கத்துக்கு பேரவை இடம் மாற்றப்பட்டது. கடந்த ஆண்டு செப்டம்பரில் கலைவாணர் அரங்கில் முதல் கூட்டம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து, அடுத்தடுத்த கூட்டத் தொடர்கள் கலைவாணர் அரங்கத்திலேயே நடத்தப்பட்டன.

காகிதமில்லாத பேரவை: திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற நிலையில், சட்டப் பேரவை காகிதமில்லாத அவையாக மாற்றப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பின்படி, அரசின் நிதிநிலை அறிக்கை, மானியக் கோரிக்கைகள் ஆகியன காகிதமில்லாத அறிக்கைகளாக தாக்கல் செய்யப்பட்டன. இதற்கென கலைவாணர் அரங்கத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரின் மேஜையிலும் கணினி, கையடக்கக் கணினி ஆகியன வைக்கப்பட்டன.

கரோனா நோய்த் தொற்று பாதிப்பு காரணமாக, கடந்த ஆண்டில் இருந்து பேரவைக் கூட்டத் தொடர்கள் கலைவாணர் அரங்கத்தில் உள்ள தற்காலிக சட்டப் பேரவை மண்டபத்திலேயே நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், கரோனா நோய்த் தொற்று வெகுவாகக் குறைந்து இயல்புநிலை திரும்பி வருகிறது. இதையடுத்து, புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள பாரம்பரியமிக்க பேரவை மண்டபத்திலேயே கூட்டத் தொடரை நடத்த தமிழக அரசு ஆலோசித்து வருகிறது.

ஏற்பாடுகள் தீவிரம்: புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள பேரவை மண்டபத்தை காகிதமில்லாத அவையாக மாற்றுவதற்கான பூர்வாங்கப் பணிகளும் தொடங்கியுள்ளன.

இதற்கான வரைபடங்கள், இடப் பற்றாக்குறையிலும் கணினி உள்ளிட்ட நவீன கருவிகளை எங்கு வைப்பது ஆகியன குறித்து பொதுப்பணித் துறை அதிகாரிகளுடன், பேரவைச் செயலகம் ஆலோசித்து வருகிறது.

இதேபோன்று, அதிமுக, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கான அறைகளும் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

இதுகுறித்து, அரசுத் துறை அதிகாரிகள் கூறுகையில், கலைவாணர் அரங்கத்தில் உள்ள கணினி வசதியுடன்

கூடிய பேரவை மண்டப அமைப்பு அப்படியே உள்ளது. இதில் இது வரை எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. கரோனா நோய்த் தொற்று முற்றாகக் குறையும் பட்சத்தில் கோட்டையில் உள்ள பேரவை மண்டபத்திலேயே வரும் கூட்டத் தொடர் நடைபெற வாய்ப்புள்ளது. எனவே, அதற்குத் தயாராகும் வகையில் பேரவை மண்டபத்தை காகிதமில்லாத அவையாக மாற்ற பணிகள் தொடங்கியுள்ளன.

கோட்டையில் உள்ள மண்டபத்திலேயே கூட்டத் தொடரை நடத்தும் நோக்கிலேயே தயாரிப்புப் பணிகள் நடந்து வருகின்றன. நோய்த் தொற்றின் சூழ்நிலையைப் பொருத்து இடமாற்றம் இருக்கும் எனத் தெரிவித்தனர்.

நூற்றாண்டு பாரம்பரியம்: புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள பேரவை மண்டபம் நூற்றாண்டு பாரம்பரியம் கொண்டது. கடந்த 1921 முதல் 1937-ஆம் ஆண்டு வரையில் மெட்ராஸ் மாகாண பேரவையின் கூட்டத் தொடர் நடைபெற்றது. இதன் பின்பு, 1946 முதல் 1952 வரையிலும், 1956-ஆம் ஆண்டு முதல் 2010-ஆம் ஆண்டு வரையிலும் பேரவைக் கூட்டத் தொடர்கள் புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள மண்டபத்திலேயே நடைபெற்றன.

2010-ஆம் ஆண்டில் ஓமந்தூரார் தோட்டத்தில் கட்டப்பட்ட கட்டடத்துக்கு தமிழக சட்டப் பேரவை மாற்றப்பட்டது. அங்கு திமுக ஆட்சியின் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு பேரவை கூட்டமும் நடைபெற்றது. 2011-ஆம் ஆண்டு அதிமுக ஆட்சி பொறுப்பேற்றதும், பேரவை மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள மண்டபத்துக்கு மாறியது. பத்தாண்டுகள் தொடர்ந்து இங்கேயே கூட்டங்கள் நடைபெற்றன. கரோனா நோய்த் தொற்று காரணமாக, 2020-ஆம் ஆண்டு கலைவாணர் அரங்கத்துக்கு பேரவை இடமாறியது.

நோய்த் தொற்று குறைந்த நிலையில், மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டைக்கே இடமாற்றுவதற்கான பணிகளுடன் காகிதமில்லாத அவையை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளும் தொடங்கியுள்ளன.

நூற்றாண்டு பாரம்பரியம் கொண்ட புனித ஜார்ஜ் கோட்டை பேரவை மண்டபத்தில் இப்போது கணினிகளும், மென்பொருள்களும் என நவீனம் நுழைய உள்ளது குறிப்பிடத்தக்கது.

தினத்தந்தி

03-Dec-2021

இந்து சமய அறநிலைய துறையின் மறுமலர்ச்சி

தமிழ்நாடு தொன்றுதொட்டு ஆன்மிக பூமியாக திகழ்ந்து வருகிறது என்று சொன்னால் அது மிகையல்ல. இந்துமத வரலாறுகள் தமிழ்நாட்டில் வேரூன்றி இருக்கின்றன. 'கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம். கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்பதையே வாழ்வு நெறியாக கொண்டவர்கள் தமிழக மக்கள். அந்தவகையில் தமிழக அரசின் கீழ் இயங்கிவரும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் 36 ஆயிரத்து 627 கோவில்கள் உள்ளன. இதில் பல கோவில்கள் நல்ல வருமானம் உள்ள கோவில்களாக அனைத்து பூஜைகள், கும்பாபிஷேகங்கள், வழிபாட்டு முறைகள் நடத்துவதற்கு வசதிகள் இருந்தாலும், 12 ஆயிரத்து 959 கோவில்களில் ஒருகால பூஜைகூட நடத்துவதற்கு வருமானம் இல்லாமலும் அந்த கோவில்களில் பணியாற்றி வந்த அர்ச்சகர்கள், பட்டாச்சாரியர்கள், பூசாரிகள் வருமானமின்றி தவித்து கொண்டு இருந்த சூழ்நிலை நிலவியது.

மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு பொறுப்பேற்றவுடன் இந்து சமய அறநிலையத்துறையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. இறைபக்தியுள்ள பி.கே.சேகர்பாபுவை இந்து சமய அறநிலையத்துறையின் அமைச்சராகவும், டாக்டர் பி.சந்திரமோகனை இந்த துறையின் முதன்மை செயலாளராகவும், ஜெ.குமரகுருபரனை ஆணையராகவும் நியமித்தார். இந்த மூவர் அணி கோவில்களில் பல சீர்திருத்தங்களை

செய்கிறது. மு.க.ஸ்டாலின் அரசு இந்து கோவில்களின் நலன்மீது அக்கறை கொண்ட அரசு என்பதை ஆட்சி பொறுப்பேற்ற நாள் முதல் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி நிரூபித்து வருகிறது. கடந்த மே மாதம் 7-ந்தேதி பதவியேற்ற மு.க.ஸ்டாலின், ஜூன் மாதம் 3-ந்தேதி இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோவில்களில் நிலையான மாதசம்பளமின்றி பணியாற்றி வரும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியர்கள், பூசாரிகள் மற்றும் இதர பணியாளர்கள், அந்தநேரத்தில் கொரோனா நோய்த்தொற்று பரவல் காரணமாக ஊரடங்கு காலத்தில் நிலவிவந்த அசாதாரண சூழ்நிலையில் பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்படாததால், வருமானமின்றி தவித்தனர். இதை கேள்விப்பட்ட முதல்-அமைச்சர், அவர்களின் வாழ்வாதாரத்தை காக்கும் வகையில் மாதசம்பளம் பெறாமல் பணியாற்றும் அவர்களுக்கு ரூ.4 ஆயிரம் உதவித்தொகை, 10 கிலோ அரிசி, 15 வகை மளிகைப்பொருட்கள் வழங்குவதற்கு ஆணையிட்டு தொடங்கி வைத்தார். இதன் மூலம் 11 ஆயிரத்து 65 திருக்கோவில் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்பெற்றனர்.

இதுமட்டுமல்லாமல், ஒருகால பூஜை திட்டத்தின்கீழ் உள்ள 12 ஆயிரத்து 959 திருக்கோவில்களில் பணியாற்றும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியர்கள், பூசாரிகளுக்கு மாதம் ரூ.1,000 ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தை கடந்த அக்டோபர் மாதம் 11-ந்தேதி தொடங்கி வைத்தார். கோவில்களில் பணியாற்றும் இவர்களுக்கு மாதவருமானம் இல்லாத சூழ்நிலையில் இந்த தொகை பெரும் உதவியாக இருக்கிறது. இப்போது அந்த திருக்கோவில்களில் ஒருகால பூஜை சிறப்புடன் நடைபெறுவதற்கு வசதியாக அங்குள்ள வைப்புநிதியை ரூ.1 லட்சத்தில் இருந்து ரூ.2 லட்சமாக உயர்த்தி, அதற்காக ரூ.129 கோடியே 59 லட்சத்துக்கான காசோலையை தமிழ்நாடு மின் விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்துள்ளார். இனி இந்த கோவில்களில் ஒரு கால பூஜையாவது தினமும் நடக்கும். பக்தர்களும் அந்த நேரத்தில் வந்து, வழிபட வருவார்கள் என்ற வகையில், இந்த திட்டம் பக்தர்களின் மனதை குளிர வைத்திருக்கிறது. இது சின்னஞ்சிறு கிராமங்களிலுள்ள சிறியகோவில்களில் இனி கோவில்மணி சத்தம் கேட்பதையும், பூஜைசெய்யும் சத்தம் கேட்பதையும் உறுதிசெய்யும். இன்றைய விலைவாசியில் ஏற்கனவே வைப்பு நிதியாக வைக்கப்பட்டிருந்த ரூ.1 லட்சத்தில் கிடைக்கும் வட்டி ஒருகால பூஜைக்கு தேவையான செலவுகளை சமாளிக்க முடியாமல் திணறிக் கொண்டு இருந்த சூழ்நிலையில், இப்போது அப்படியே இரண்டு மடங்காக்கி ரூ.2 லட்சமாக முதல்-அமைச்சர் உயர்த்தியதன் மூலம் பூஜை, புனஸ்கார முறைகள் எல்லாம் இனி சிறிதும் தடைபடாமல் நடக்கும் என்று பக்தர்கள் மனம் குளிருகிறார்கள்.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்
04-Dec-2021

தொடரும் அதிரடி

தமிழக அரசு துறைகளில் காலியாக உள்ள பணியிடங்கள் நேரடி நியமனம் மற்றும் போட்டித்தேர்வுகள் மூலம் நிரப்பப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் எனப்படும் டிஎன்பிஎஸ்சி மூலம் தேர்வுகள் நடத்தப்பட்டு காலிப்பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன. இந்நிலையில், தமிழகத்தில் உள்ள அரசுப்பணிகளில் தமிழர்கள் அல்லாத பிற மாநிலத்தவர் நியமிக்கப்படுவதாகவும், இதனால் அரசு போட்டித்தேர்வுகளில் 100 சதவீதம் தமிழக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் அரசு போட்டித்தேர்வுகளில், தமிழ் மொழி பாடத்தாள் கட்டாயமாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. இது தொடர்பாக பல்வேறு அரசியல் கட்சித்தலைவர்களும், தேர்வர்களும் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில், கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரின்போது: மனிதவள மேலாண்மை துறை மானிய கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றது. அப்போது இத்துறை அமைச்சரான பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் பதிலளித்தார். அவர், தமிழ்நாடு அரசுத்துறைகளில் உள்ள காலிப் பணியிடங்கள் மற்றும் மாநில பொதுத்துறை நிறுவன பணியிடங்களில் தமிழகத்தை சேர்ந்த இளைஞர்களை 100 சதவீதம் தேர்வு செய்யும் வகையில் அனைத்து போட்டித்தேர்வுகளிலும் தமிழ்மொழி பாடத்தாளில் தகுதித்தேர்வு கட்டாயமாக்கப்படும் என அறிவித்தார். அரசுப்பணி நியமனங்களில் பெண்களுக்கான இடஒதுக்கீட்டை 40 சதவீதமாக உயர்த்த சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்படும் எனவும் அறிவித்தார்.

அமைச்சரின் அறிவிப்பையடுத்து, தமிழக அரசின் போட்டித்தேர்வுகளில் தமிழ்மொழி பாடத்தாளில் தேர்ச்சியை கட்டாயமாக்கி, தமிழக அரசு தற்போது அரசாணை வெளியிட்டுள்ளது. அதன்படி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய தேர்வுகளில், தமிழ் மொழித்தாள், தேர்வர்கள் அனைவருக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தமிழ்மொழி தகுதி தேர்வுக்கான பாடத்திட்டம் பத்தாம் வகுப்பு தரத்தில் நிர்ணயம் செய்யப்படுவதாகவும், மேற்கண்டவாறு நடத்தப்படும் கட்டாய தமிழ் மொழித்தாளில் குறைந்தபட்சம் 40 சதவீத மதிப்பெண் தேர்ச்சி கட்டாயம் ஆக்கப்படும் எனவும், தகுதி தேர்வில் தேர்ச்சி பெறாதவர்களின் இதர போட்டித்தேர்வு தாள்கள் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் இந்த அறிவிப்பு, தமிழ் நெஞ்சங்களில் பால்வார்ப்பதுபோல் அமைந்துள்ளது. இதுவரை அரசுப்பணிக்கு செல்ல முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருந்த தமிழக இளைஞர்கள் பலர் இந்த அரசாணையால் அதிகளவில் அரசுப்பணியில் சேரும் வாய்ப்பு அதிகரித்துள்ளது. தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற நாள் முதல் பல்வேறு அதிரடி அறிவிப்புகளை வெளியிட்டு மக்களின் மனம் கவர்ந்த முதல்வராகவும், நம்பர் ஒன் முதல்வராகவும் திகழ்கிறார். அவரது அறிவிப்புகளுக்கு எல்லாம் முத்தாய்ப்பாகவும், தாய் மொழியாம் தமிழ் மொழியை சிறப்பிக்கும் வகையிலும் இந்த அரசாணை அமைந்துள்ளது.

தமிழ் முரசு

05-Dec-2021

தமிழக இளைஞருக்கே அரசு வேலை

முதல்வரின் அறிவிப்பு மகத்தானது

விவசாயிகள்–தொழிலாளர்கள் கட்சி வரவேற்பு

சென்னை, டிச.5-
தமிழக இளைஞருக்கே அரசு வேலை என்ற முதல்வரின் அறிவிப்பு மகத்தானது என்று விவசாயிகள்-தொழிலாளர்கள் கட்சி வரவேற்றுள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் -தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தில் படித்த வேலையற்ற இளைஞர்கள் லட்சக்கணக்கில் காத்திருக்கும் நிலையில், கடந்த ஆட்சிக்காலத்தில் மின்சார வாரியம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் வெளி மாநிலத்தை சேர்ந்தவர்கள் வேலைக்கு தேர்வு செய்யப்பட்ட அதிர்ச்சி சம்பம் நடந்தேறியது. அப்போது இந்த செயலுக்கு தமிழகத்தில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. ஆனாலும் அதைப்பற்றி கவலைப்படாத நிர்வாகமாக அதிமுக ஆட்சி விளங்கியது. இதனை கருத்தில்கொண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு நிதிநிலை அறிக்கையின் போது இனி தமிழகத்தின் வேலைவாய்ப்புகளில் தமிழக இளைஞர்களுக்கு 100% வழங்கப்படுவது உறுதி செய்யப்படும். அதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவித்தது. அதன்படி தேர்வு டிஎன்பிஎஸ்சி உள்ளிட்ட அனைத்து தேர்வுகளிலும் போட்டியில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் தமிழ் மொழி தகுதி தாள் கட்டாயமாக்கப்படும். அந்த தமிழ்மொழி தாளில் குறைந்தபட்சம் 40% மதிப்பெண் கட்டாயம் என்றும், தமிழ்மொழி தகுதி தேர்வுக்கான பாடத்திட்டம் பத்தாம் வகுப்பு தரத்தில் இருக்குமென்றும் தற்போது அறிவிக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் தமிழக இளைஞர்களுக்கு மட்டுமே இனி அரசு வேலை வாய்ப்பு கிடைக்கும் சூழ்நிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏற்படுத்தியுள்ளார். அவரது இந்த அரிய முயற்சியை ஒட்டுமொத்த தமிழ்நாடும், கட்சி பேதமின்றி வரவேற்கிறது. தமிழ் மொழியின் வளர்ச்சி, தமிழகத்தின் முன்னேற்றத்திலும், தமிழர் நாகரிகம் பண்பாட்டை உலக அரங்கில் முன்னிலைப்படுத்துவதிலும், தமிழக இளைஞர்களின் எதிர்கால நலனிலும் அக்கறை கொண்டு தொடர் நடவடிக்கைகளை எடுத்து வரும் முதல்வர் மு.க.ஸ்டாலினை பாராட்டுகிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

முரசொலி

06-Dec-2021

தமிழக மக்களுக்கு நல்லாட்சியை வழங்கும் ஒரு தலைவராக -

தமிழர்களின் இதயங்களில் எல்லாம் வாழ்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

"மாத்ருபூமி" மலையாள தொலைக்காட்சி புகழாரம்!

'இது ஸ்டாலின் ஸ்டைல்' – மாத்ருபூமி பாராட்டு!

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

முரசொலி

06-Dec-2021

"மாத்ருபூமி" மலையாள தொலைக்காட்சி புகழாரம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

மழையால் வந்த பெருவெள்ளப் பாதிப்பின் போது சென்னையில் காவல் அதிகாரி ராஜேஸ்வரியின் மனிதாபிமானச் செயலுக்கு முதல்வர் அவரை நேரில் சந்தித்துப் பாராட்டினார்.

அதேபோல ஆடுகள் திருட்டைத் தடுக்கத் துலக்கிய காவல் அதிகாரி கொலையுண்ட போதும் முதல்வர் அவர்கள் கருணையோடு, அவர் குடும்பத்திற்கு ஒருகோடி ரூபாய் வழங்கியதும் பாராட்டுக்குரியதாக இருந்தது.

அதே நேரத்தில் காவல்துறை இரண்டு மோதல் மரணங்களை ஏற்படுத்தியிருப்பது ஒரு ஜனநாயக சமூகத்திற்கு உகந்ததல்ல. அரசுக்கு அவை நல்ல பெயரைப் பெற்றுத் தராது என்பதால் கவனம் தேவை.

அண்மையில் கோவையிலும் கரூரிலும் இரண்டு +2 மாணவிகள் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பாலியல் ரீதியிலான துன்புறுத்தல் காரணமாகவே இவ்விரண்டு மரணங்களும் நடந்துள்ள போதிலும் – கோவை மாணவி தனக்குத் தொல்லை தந்த கயவனின் பெயரை எழுதி வைத்திருந்ததால் அவனைக் காவல் துறை கைது செய்தது. கரூர் மாணவி அவ்வாறான குறிப்பை விட்டுச் செல்லாத நிலையில் தீவிர விசாரணை முடுக்கி விடப்பட்டது.

முதல்வர் ஸ்டாலின் அவர்கள் தமிழகத்தின் மாணவிகளுக்கு தைரியம் தரும்வகையில் உரையாடியுள்ளது பாராட்டத்தக்கது.

இதுபோன்ற பாலியல் தொல்லைகளை தைரியத்துடன் எதிர்த்து நின்று மாணவிகள் அந்தக் குற்றவாளிகளைச் சட்டத்தின்முன் நிறுத்த வேண்டும்.

உயிரை மாய்த்துக்கொள்வது தீர்வல்ல. வாழ்க்கையைப் போராடி வெல்வதே சிறந்தது" என்று அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

"தன்னை வெறும் முதல்வராக மட்டுமல்லாமல் ஒரு தந்தையாக பாவித்து நம்பிக்கையுடனும் மன உறுதியுடனும் வாழ்வைப் பெண்

பிள்ளைகள் எதிர்கொள்ள வேண்டும் என்ற தமிழக முதல்வரின் வாஞ்சையோடான கூற்று போற்றத்தக்கது.

'நீட்' தேர்வு ரத்து

தமிழக அரசுப்பள்ளி மாணவர்களின் மருத்துவராகும் கனவுக்கு எதிரான 'நீட்' தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வருகிறது. தனது தேர்தல் வாக்குறுதியின்படி 'நீட்'டுக்கு எதிரான அனைத்துவித சட்டப் போராட்டங்களையும் தமிழக அரசு மேற்கொண்டு வருவதாக முதல்வர் அறிவித்துள்ளார்.

மத்திய அரசு என்கிற பதத்தை தமிழகத்தில் 'ஒன்றிய அரசு' என்று குறிப்பிட்டு அழைக்கும் பெருவழக்கு, தமிழகத்தில் முன் எப்போதுமில்லாத வகையில் தற்போது பரவலாகி யுள்ளது. இதனை பா.ஜ.க. கடுமையாக ஆட்சேபித்தபோதிலும் அரசியலமைப்பின்படி மத்தியிலிருப்பது மாநிலங்களின் ஒன்றியம் தான் என நியாய சிந்தனையுள்ளவர் ஏற்கத் தான் செய்வர்.

அதேபோல முல்லை பெரியாறு அணை விவகாரத்திலும் தமிழக முதல்வர் மிகவும் நிதானத்தோடான அணுகுமுறையையே கொண்டிருக்கிறார்.

இது விஷயத்தில் கேரளத்துடன் நேரடியான மோதல் போக்கை அவர் விரும்பாத தன்மையும் அவரது அரசியல் முதிர்ச்சியையே காட்டுகிறது.

இரண்டு மாநிலங்களும் பரஸ்பரம் ஏற்கும் ஒருமித்த கருத்துடனான தீர்வே சரியானதென்ற ஒரு நிலைப்பாட்டுக்கு அவரது இந்த நிலைப்பாடு வழிவகுக்கும்.

தலைவராக மு.க.ஸ்டாலின் நிலைத்திருப்பார்!

இப்படியானதொரு தொடக்கம் மிகவும் பாராட்டுதலுக்குரியது.

இந்த நல்ல ஆட்சிக்கான தொடக்க அறிகுறிகள் தொடர்ந்தும் விரிவடையவும் செய்யும் பட்சத்தில் – அன்பு நிறைந்த தமிழ்நாட்டு மக்களின் நெஞ்சங்களில் காலத்திற்கும் அன்பையும் நல்லாட்சியையும் வழங்கும் ஒரு தலைவராக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிலைத்திருப்பார் என்பது உறுதி!

முரசொலி

06-Dec-2021

துறைதோறும் தமிழ்!

தமிழ்நாட்டு அரசுத் துறைப் பணியிடங்களில் நுழைபவர்களுக்கு தமிழ் மொழி அறிவு கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது. இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழாணையை தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ளார். இதன் மூலமாக துறைதோறும் தமிழ் என்பது உயரத்தைத் தொடப் போகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்டு இருந்த மகத்தான வாக்குறுதிகளில் ஒன்று இது. தமிழுக்கும் அதன் மூலமாக தமிழ்நாட்டு இளைஞர்களுக்கும் செய்யப்பட்டுள்ள மகத்தான தொண்டு இது. தமிழினத்துக்குச் செய்யப்பட்ட மாபெரும் கடமை இது.

"தமிழக அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்கள் மற்றும் மாநில பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள பணியிடங்கள் அனைத்திலும் தமிழக இளைஞர்களை 100 சதவிகிதம் நியமனம் செய்யும் பொருட்டு தேர்வு முகமைகளால் நடத்தப்படும் அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் தமிழ்மொழி பாடம் தகுதித் தேர்வாக கட்டாயம் ஆக்கப்படும்" என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிதி மற்றும் மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராசன் அறிவித்தார். இதனை வெறும் அறிவிப்பாக விட்டுவிடவில்லை.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் தேர்வு முகமைகளால் அரசுப் பணிக்காக நடத்தப்படும் போட்டித் தேர்வுகள் அனைத்திலும் நியமன அலுவலர்களால் தேவைப்படும் தேர்வுகளில் நடத்தப்படும் எழுத்துத் தேர்வுகளிலும், தமிழ் மொழித் தாளினைத் தகுதித் தேர்வாக ஆக்கிவிட்டது தமிழ்நாடு அரசு.

- தமிழ் மொழித் தகுதித் தாள் தேர்வர்கள் அனைவருக்கும் கட்டாயம் படுத்தப்படுகிறது.
- கட்டாய தமிழ்மொழித் தாளில் குறைந்த பட்சம் 40 சதவிகித மதிப்பெண் தேர்ச்சி கட்டாயப்படுத்தப்படுகிறது.
- தகுதித் தாளில் தேர்ச்சி பெறாதவர்களின் இதரப் போட்டித் தேர்வுத் தாள்கள் மதிப்பீடு செய்யப்படாது.
- தற்போது நடைமுறையில் உள்ள பொதுத் தமிழ், ஆங்கிலம் ஆகிய தேர்வுகளில் ஆங்கிலத் தாள் நீக்கப்பட்டு, பொது தமிழ்த்தாள் மட்டுமே மதிப்பீட்டுத் தேர்வாக அமைக்கப்படும்.
- தமிழ் மொழித் தாளானது தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வாக நடத்தப்படும். 150 மதிப் பெண்களுக்கு நடத்தப்படும்.
- இந்த ஆணை வெளியிடப்படும் நாள் முதல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் அறிவிக்கை செய்யப்படும் அனைத்துப் போட்டித் தேர்வுகளுக்கும் மேற்படி தமிழ் மொழித்தாள் கட்டாயம் ஆக்கப்படும்.
- ஆசிரியர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் உள்ளிட்ட மாநிலத்தில் உள்ள அனைத்து தெரிவு முகமைகளைப் பொறுத்தவரையில் கட்டாயத் தமிழ் மொழித் தகுதித் தேர்வினை நடத்துவது தொடர்பான மேற்படி வழிகாட்டு நெறிமுறைகள் தனித் தனியாக வெளியிடப்படும்.
- அனைத்து பொதுத்துறை நிறுவனங்களைப் பொறுத்தவரையிலான அறிவிக்கையை நிதித் துறையில் உள்ளடக்கிய பொதுத்துறை நிறுவனங்களின் மாநிலக் கழகத்தால் வெளியிடப்படும்.

– இப்படித் தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழாக ஒரு ஆட்சி செயல்படுவதற்கு உதாரணம் இது. தமிழின ஆட்சியாகச் செயல்படுவதற்கு எடுத்துக்காட்டு இது.

தமிழ் ஆர்வலர்கள் இதுவரை என்ன சொல்லி வந்தார்கள்? தமிழ்நாட்டுப் பணியிடங்களில் தமிழ் தெரியாதவர்கள் வந்துவிட்டார்கள் என்று சொல்லி வந்தார்கள். அது ஒரே ஒரு அரசாணை மூலமாகத் தடைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் ஆட்சியில் இருந்த அடிமை அதிமுக ஆட்சி, தமிழைத் தள்ளிவைத்ததன் காரணமாக தமிழே தெரியாதவர்கள் தமிழ்நாட்டுப் பணியிடங்களில் உள்ளே நுழையும் கொள்ளைப்புறக் கதவு திறந்து விடப்பட்டது. ஒன்றிய அரசுப் பணிகளில் கூட தமிழே தெரியாதவர்கள், தமிழ்த் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று உள்ளே நுழைந்த கொடுமையும் அரங்கேறியது. இத்தகைய துயரக் காட்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதன் தொடக்கம்தான் இந்த அரசாணை.

"இந்தத் தெளிவான அரசாணை மூலம், தமிழ் தெரியாத எவரும் அரசுப் பணிகளில் இடம்பெற முடியாது என்கின்ற நிலையை ஏற்படுத்துவது மட்டுமல்ல; இந்த வகையிலே தேர்வாகும் அரசுப் பணியாளர்கள் தமிழின் அருமையறிந்தவர்களாகவும் – அரசின் தமிழ் வளர்ச்சிக் கொள்கைகளை விளங்கிக்கொள்ளுபவர்களாகவும் இருந்திட வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுவே தமிழ்நாட்டில் தமிழ் மக்களுக்கு தமிழ் வழியில் ஆட்சியின் பலன்களை அளிக்க உதவும்"

– என்று, மொழி நிகர்மை பரப்பியக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் ஆழி செந்தில்நாதன் சொல்லி இருப்பதுதான், இந்த அரசாணையின் முழுமையான முதன்மையான நோக்கம்.

இதனை நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராசனும் தெளிவுபடுத்தி இருக்கிறார்.

"அரசுப் பணிகளில் அமரக் கூடியவர்களுக்கு, தமிழக மக்கள் அணுகக் கூடிய பொறுப்புகளில் இருப்பவர்களுக்கு தமிழ்ப்புலமை இல்லை என்றால் அந்தப் பொறுப்பு அவர்களுக்குப் பொருந்தாது. அந்த வகையில் தான் தமிழ்மொழித் தேர்ச்சி கட்டாயம் என்று கொண்டு வரப்பட்டுள்ளது. கடந்த ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்களை பணியிடங்களில் சேர்த்துள்ளார்கள். அவர்களுக்கு தமிழே தெரியவில்லை. அதை மாற்றுவதற்கு தான் இந்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது" என்று சொல்லி இருக்கிறார்.

"தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டின்
முதலமைச்சாய் வருதல் வேண்டும்!
தமிழ்ப்பகைவன் முதலமைச்சாய்த் தமிழ்நாட்டில்
வாராது தடுத்தல் வேண்டும்!" – என்றார் தமிழியக்கம் கண்ட பாவேந்தர் பாரதிதாசன்.

தமிழாய்ந்த தமிழன் தமிழ்நாட்டின் முதலமைச்சராக வந்ததால் மட்டுமல்ல, தமிழ்ப்பகைக் கூட்டத்தைக் கோட்டையை விட்டு அகற்றியதால் தமிழுக்கும் தமிழருக்கும் தமிழ்நாட்டுக்கும் கிடைத்த பெரும் பயன் இது!

06-Dec-2021

COVER STORY — STATE OF THE STATES — LEAD ESSAY

THE BEST STATES OF INDIA

In a year ravaged by the pandemic, the competitive spirit helped some states overcome adversity better than others. Presenting INDIA TODAY's annual State of the States survey and rankings

BY **KAUSHIK DEKA**

Illustration by **NILANJAN DAS**

INDIAN POLITICS HAS BEEN seeing an encouraging trend in the past few years. Every chief minister who is freshly elected to the office makes an identical promise: to make his state among the five top-performing ones in the country. The assurance may or may not come to fruition, but the lofty goal itself is a sign of the changing socio-political ambitions of the people and their expectations from the ruling class. It fosters competition among chief ministers, making all-encompassing economic growth the centrepiece of any political narrative. And in an economy ravaged by a year and a half of the Covid-19 pandemic, this motivation and competition can come in particularly useful.

The India Today Group can claim some of the credit for firing this competitive spirit. It was the first to introduce the concept of mapping the performance of India's states in 2003 in the form of the State of the States (SoS) survey. In the 19 years since, it has remained the most accurate annual report card of how the different states of India are doing. It was devised as a comprehensive and credible measure for assessing a state's socio-economic development to begin with, but, over the years, it has also evolved both in scope and methodology.

To avoid giving undue advantage or vice versa to states with a legacy of performance or under-achievement, the evaluation is carried out under two broad categories—best performing and most improved. The best performing category examines the absolute numbers of a state's performance for the latest year for which data is available. The most improved category records states' progress over the preceding five years.

The significance of this distinction is best reflected in the results of this year's SoS survey. Based on its progress in the past five years, Bihar has emerged as the most improved big state overall. It's a big

> **TAMIL NADU** retains the top spot among the best performing big states of India for the **4th year in a row**

> **BIHAR** has made a spectacular leap to the **No. 1 position among the most improved** big states this year from 9th rank last year

COVER STORY LEAD ESSAY

INDIA'S TOP BIG STATES

Winners of the India Today State of the States survey 2021

CATEGORY	BEST PERFORMING	MOST IMPROVED
OVERALL	TAMIL NADU	BIHAR
ECONOMY	TELANGANA	BIHAR
INFRASTRUCTURE	PUNJAB	JHARKHAND
AGRICULTURE	PUNJAB	MADHYA PRADESH
HEALTH	KERALA	HIMACHAL PRADESH
EDUCATION	HIMACHAL PRADESH	BIHAR
LAW & ORDER	GUJARAT	KARNATAKA & UTTAR PRADESH
GOVERNANCE	RAJASTHAN	WEST BENGAL
INCLUSIVE DEVELOPMENT	ANDHRA PRADESH	BIHAR
ENTREPRENEURSHIP	HARYANA	UTTAR PRADESH
TOURISM	KERALA	PUNJAB
ENVIRONMENT	KERALA	CHHATTISGARH
CLEANLINESS	PUNJAB	ASSAM

INDIA'S TOP SMALL STATES

CATEGORY	BEST PERFORMING	MOST IMPROVED
OVERALL	PUDUCHERRY	MANIPUR
ECONOMY	SIKKIM	MIZORAM
INFRASTRUCTURE	GOA	ARUNACHAL PRADESH
AGRICULTURE	TRIPURA	MANIPUR
HEALTH	PUDUCHERRY	MIZORAM
EDUCATION	GOA	MEGHALAYA
LAW & ORDER	NAGALAND	SIKKIM
GOVERNANCE	MANIPUR	ARUNACHAL PRADESH
INCLUSIVE DEVELOPMENT	MIZORAM	MEGHALAYA
ENTREPRENEURSHIP	DELHI	MIZORAM
TOURISM	GOA	MEGHALAYA
ENVIRONMENT	MIZORAM	SIKKIM
CLEANLINESS	GOA	PUDUCHERRY

BEST PERFORMING STATE IN HAPPINESS INDEX*

BIG STATE	KERALA	SMALL STATE	GOA

*Happiness Index has been introduced from this year. Please see methodology for parameters.

leap for the eastern state, which has for too long led the infamous 'BIMARU' acronym, from ninth rank last year to the top rung now. This miracle has been made possible by a superlative improvement in education, agriculture, economy and infrastructure. The state's commitment to break the shackles of economic backwardness is evident—per capita development expenditure in Bihar grew at the rate of 17.9 per cent between 2014-15 and 2019-20, against the national average of 11.2 per cent in the same period. A higher participation of girls—at 1.05, the gender parity index (enrolment ratio of girls to boys) is the second highest in the country—has contributed to this big jump in education.

That said, Bihar still has miles to go in terms of absolute achievement. The state may have progressed at a much faster rate in the past five years given its low base, but it remains at the bottom among the best performing big states. It appears in 20th place in three lists of big states—economy, education and entrepreneurship. In five other categories—agriculture, health, governance, inclusive development and environment—it is among the bottom five of the best-performing states.

The same is true of Manipur, which has emerged as the most improved small state for the second successive time. From 2018, it has clocked an improved performance in seven out of 12 categories—economy, infrastructure, agriculture, health, governance, entrepreneurship and cleanliness. Yet, the state figures in ninth place among the 10 best performing small states. It finds itself in the same position as in 2018 across five categories—economy, infrastructure, agriculture, environment and cleanliness. Despite rapid progress in the past five years, Manipur remains bogged down by a legacy of poor performance and environment of violence.

If Bihar and Manipur exhibit one conundrum, Tamil Nadu and Kerala have the opposite problem. The two states are among the top five best performing big states, but in the bottom five in the most improved category. Of course, given the higher base, these states cannot be expected to match the rate of improvement of traditionally backward states. Puducherry and Goa reflect the same problem among the

INDIA TODAY
06-Dec-2021

PUDUCHERRY
emerges as the no. 1 best performing small state but is **8th among the 10 small states** in the most improved category

MANIPUR
tops the small states in the most improved category, but figures in **9th place among 10 small states** in the best performing stakes

GUJARAT
has been consistent in historical and current performances, coming in **4th in both the best performing and most improved big states** categories

SIKKIM
has shown consistency in historical and current performances, **featuring in 3rd place** in both the best performing and most improved small states categories

HIMACHAL PRADESH
has taken the biggest leap among big states in the best performing category, jumping **to 2nd position this year from 7th place in 2018**

MAHARASHTRA
has shown a significant jump in the most improved big state category by moving to **8th position this year from 18th in 2018**

best-performing small states. They figure among the top three in this category, but slip to the bottom three among the most improved small states.

Then there are those states that have done uniformly well in both historical and recent performances. Gujarat, for instance, ranks fourth both in the best performing and most improved category for big states. Likewise, Sikkim occupies third position in both categories for small states; Mizoram ranks second in the most improved category but does not do too badly in the best performing stakes either, bagging the fourth position.

In the 19th edition of our survey, we have added a new category—the happiness index. Though there is no universal definition or indicator of citizens' happiness, the experts INDIA TODAY consulted agreed that a state's performance across a given set of categories—prosperity, education, health, governance, infrastructure, law and order, environment and cleanliness—could determine how happy its people are. Happiness, thus, comes from the ease of living. Measuring this ease of living across the country is the objective of our survey. Who, after all, minds being in a permanent state of happiness? ■

METHODOLOGY

HOW THE STATES WERE RANKED

The India Today State of the States 2021 study was conducted by Delhi-based premier research agency Marketing and Development Research Associates (MDRA). The robust methodology is designed to rank the states on the basis of most relevant and exhaustive data, covering aspects crucial to foster inter-state competition and uphold the true spirit of India's federal structure. The states have been ranked under two broad groups:

Best-performing states
- Based on a state's latest performance in a category
- Based on most recent data across multiple parameters

Most-improved states
- Measuring a state's improvement in the past 5 years
- Based on positive changes (outcome-based) in the past 5 years

States were further divided into big and small on the basis of geographical area and population. Big states have their own advantages and disadvantages vis-à-vis the small ones. States with an area of over 35,000 sq. km and population of over 5 million were clubbed as big, the rest small. Jammu & Kashmir was not considered due to the change in its status.

Twelve categories were identified for comparison, and a new category—Happiness Index—was added.

Several parameters were fixed in each category. Based on inputs from experts—academics, policymakers and policy influencers such as NITI Aayog representatives, think-tanks, policy research organisations, sociologists and economists—123 parameters were finalised for evaluating the best performing states and 88 for the most improved ones. The relative weights of the parameters were finalised in consultation with the experts, INDIA TODAY editors and the MDRA team.

To ensure no state got undue advantage or vice versa, data based on population or geographical size, as the case required, was normalised. Based on the weights determined for each attribute, sectoral rankings were derived. Parameter level weights were used to determine the best performing and most improved states overall.

A large MDRA team, led by executive director Abhishek Agrawal, project director Abnish Jha, assistant research manager Rajan Chauhan, executive-EDP Manveer Singh, research executive Somendra Shahi, and assisted by statisticians and econometricians, worked on this voluminous project from July to November 2021.

சிட்கோ தொழில் மனைகளின் விலை குறைப்பு:

மு.க.ஸ்டாலினுக்கு சிறு-குறுந்தொழில்கள் சங்கம் நன்றி

சென்னை, டிச.8-

தமிழ்நாடு சிறு மற்றும் குறுந்தொழில்கள் சங்கத்தலைவர் மாரியப்பன், பொதுச்செயலாளர் நித்தியானந்தன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தொழிற்மனைகளின் விலையை குறைக்க வேண்டும் என்பது சங்கத்தின் நீண்டநாள் கோரிக்கை. கொரோனா பெருந்தொற்று காரணமாக ஏற்பட்டுள்ள தொழில் முடக்கத்தில் இருந்து தொழில்முனைவோர் மீள வழிவகை செய்யும் வகையில் தொழிற்மனைகளின் விலையை குறைத்து அரசாணை பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினின் இந்த அறிவிப்பு ஒரு சரித்திர நிகழ்வு ஆகும். 120-க்கும் மேற்பட்ட தொழிற்பேட்டைகளின் சார்பிலும், குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் சார்பிலும், முதல்-அமைச்சருக்கும், குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் மற்றும் செயலாளர், சிட்கோ நிர்வாக இயக்குனர் மற்றும் அனைத்து அதிகாரிகளுக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினத்தந்தி

09-Dec-2021

11 ஆயிரம் பேருக்கு அரசு வேலை

தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையிலும் சரி, முதல்-அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு மு.க.ஸ்டாலின் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளிலும் சரி வேலைவாய்ப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. வேலைவாய்ப்பு என்பது அரசு, தனியார் தரப்பு என்று இருவரும் வழங்க வேண்டிய ஒன்றாகும். இளைஞர்களுக்கு அரசு வேலை என்பது முதல் கனவாக இருக்கிறது. ஆனால் கடந்த 2019-ம் ஆண்டு முதல் இப்போது வரை 2 ஆண்டுகளாக அரசுப்பணிகளுக்கு வேலைநியமனங்கள் நடைபெறவில்லை. இதற்கு கொரோனாவும் ஒரு முக்கிய காரணமாகும். தி.மு.க.வின் தேர்தல்அறிக்கையிலேயே தமிழகம் முழுவதும் இருக்கும் அரசு அலுவலகங்களில் காலியாகவுள்ள பணியிடங்களில் 3 லட்சத்து 50 ஆயிரம் தமிழக இளைஞர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. இது 5 ஆண்டுகளில் நிறைவேற்றப்படவேண்டிய வாக்குறுதியாகும். இந்த ஆண்டே நல்ல தொடக்கமாக 11 ஆயிரம் காலியிடங்களை நிரப்பும்வகையில் தேர்வுகள் நடத்தப்படும் என்ற நல்லசெய்தியை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக்குழு தலைவர் க.பாலச்சந்திரன் அறிவித்துள்ளார்.

2022-ம் ஆண்டில் என்னென்ன பணிகளுக்கு தேர்வுகள் நடைபெறும் என்ற ஆண்டு அட்டவணையை அவர் வெளியிட்டது, வேலையில்லாமல் வாடிக்கொண்டிருந்த இளைஞர்களுக்கு புதிய நம்பிக்கையை கொடுத்திருக்கிறது. இப்போதெல்லாம்

மருத்துவம் படித்தவர்கள் என்றாலும் சரி, என்ஜினீயரிங் படித்தவர்கள் என்றாலும் சரி வேறெந்த தொழில்படிப்புகள் படித்தவர்கள் என்றாலும் சரி தேர்வாணையக்குழு நடத்தும் தேர்வுகளில் பங்கேற்று அரசுவேலைகளில் சேர பெரும் ஆர்வத்துடன் இருக்கிறார்கள். தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக்குழு மூலமாக குரூப்-1, 1ஏ, 1பி, 1சி என்றும், குரூப்-2, 2ஏ என்றும், குரூப்-3, குரூப்-4, குரூப்-7பி, குரூப்-8 என்றும் பல்வேறு பணிகளுக்கு வித்தியாசமான தேர்வுகள் நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு சப்ரிஜிஸ்திரார், நகராட்சி ஆணையர், தொழிலாளர்துறை உதவி ஆய்வாளர், இளநிலை வேலைவாய்ப்பு அதிகாரி, ஆடிட் இன்ஸ்பெக்டர், நன்னடத்தை அதிகாரி, தொழில்கூட்டுறவு அதிகாரி, உதவிப்பிரிவு அதிகாரி என்பது போன்ற குரூப்-2, 2ஏ பிரிவு பணிகளிலுள்ள 5 ஆயிரத்து 831 காலியிடங்களுக்கும், இளநிலை உதவியாளர், பில்கலெக்டர், டைப்பிஸ்ட், ஸ்டெனோ டைப்பிஸ்ட், நிலஅளவையாளர், கிராம நிர்வாக அதிகாரி போன்ற குரூப்-4 பணிகளிலுள்ள 5 ஆயிரத்து 255 காலியிடங்களுக்கும் அறிவிக்கை வெளியிடப்பட இருக்கிறது. குரூப்-2, 2ஏ பணியிடங்களுக்கு பிப்ரவரி மாதத்திலும், குரூப்-4 பணிகளுக்கு மார்ச் மாதத்திலும் அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, 75 நாட்களில் தேர்வுகள் நடக்கும் என்று க.பாலச்சந்திரன் அறிவித்துள்ளார்.

மாணவர்கள் தங்களை தகுதிப்படுத்திக்கொள்ள வசதியாக இந்த தேர்வுகளுக்கான பாடத்திட்டம் அடுத்தசிலநாட்களில் வெளியிடப்பட இருக்கிறது. பாடத்திட்டங்கள் மட்டுமல்லாமல், மாதிரி வினாத்தாள்களும் இணையதளத்தில் வெளியிடப்படவுள்ளது. நல்ல கால அவகாசம் இருப்பதால் மாணவர்கள் நன்கு தங்களை தயார்படுத்திக்கொண்டு தேர்வு எழுதவும் வாய்ப்புள்ளது. இந்த 11 ஆயிரம் காலியிடங்கள் என்பது 2020-21-ம் ஆண்டு நடத்தப்பட்ட மதிப்பீட்டின்படி உருவாக்கப்பட்டது. ஆனால் அறிவிக்கை வெளியிடும்போது மேலும் 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் காலியிடங்கள் அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே ஏறத்தாழ 14 ஆயிரம் இடங்களுக்கு தேர்வுநடைபெறும் சூழ்நிலையில் இனி மாணவர்கள் கையில்தான் இருக்கிறது. இந்த தேர்வுமட்டுமல்லாமல், மேலும் பல பணிகளுக்கான அறிவிப்புகளும் வெளியிடப்பட உள்ளது. துணைகலெக்டராக வேண்டும், துணை போலீஸ்சூப்பிரண்டு ஆகவேண்டும் என்ற ஆசையில் குரூப்-1 தேர்வுக்காக காத்திருக்கும் மாணவர்களுக்கு நல்லசெய்தியாக ஜூன் மாதத்தில் அதற்கான அறிவிப்பு வெளியிடப்படவுள்ளது. ஆக இப்போதுள்ள திட்டத்தில் பல்வேறு துறைகளிலுள்ள 32 வகையான பணிகளுக்கு தேர்வு நடக்கவிருக்கிறது. அரசு பணியாளர் தேர்வாணையக்குழு இந்த தேர்வுகள் முறையாக நடப்பதற்கும், எந்த முறைகேட்டுக்கும் இடமில்லாமல் நடத்துவதற்கும் தகுந்த எச்சரிக்கை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளது. எனவே தகுதியிருந்தால் நிச்சயம் வெற்றிபெறலாம் என்ற உறுதி மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தவகையில் தேர்வாணையக்குழு அளித்த உறுதிமொழிப்படி, ஏறத்தாழ 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணிகளில் தகுதியுள்ளவர்கள் நியமிக்கப்படும் பொற்காலம் 2022-ல் வரப்போகிறது என்ற பிரகாசமான காலம் கண்ணில் தெரிகிறது.

மு.க.ஸ்டாலினுக்கு நீதிபதி பாராட்டு!

மதுரை, டிச. 9–

திருச்சியைச் சேர்ந்த யூடியூபர் சாட்டை துரைமுருகன் வழங்கப்பட்ட ஜாமீனை ரத்துசெய்யக்கோரி அரசுதரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

சாட்டை யூடியூபில் முன்னாள் முதல்வர் கருணாநிதி மற்றும் முதல்வர் ஸ்டாலின் குறித்து கடுமையாக விமர்சனம் செய்தும் அவதூறான கருத்துக்களை பேசியும் சாட்டை துரைமுருகன் யூடியூப்பில் வீடியோ வெளிவிட்டார்.

இதையடுத்து துரைமுருகன் கைதுசெய்யப்பட்டு திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த வழக்கில் தனக்கு ஜாமீன் வழங்க வேண்டும் என உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனு செய்திருந்தார்.

விசாரணைசெய்தநீதிமன்றம் இனிமேல் இதுபோன்ற அவதூறுகளை பரப்ப மாட்டேன் என உறுதிமொழி பத்திரம்பெற்றுக்கொண்டுநிபந்தனை ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார்.

இந்நிலையில் சாட்டை துரைமுருகன் நீதிமன்றத்தில் அளித்த உறுதி மொழி உத்தரவாதத்தைமீறி தமிழக முதல்வர் குறித்து அவதூறுக பேசி வருகிறார் இதன்பேரில் மீண்டும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது எனவே இவருக்கு வழங்கப்பட்ட ஜாமீனை ரத்து செய்ய வேண்டும் என அரசு தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த வழக்கு நீதிபதி புகழேந்தி முன் விசாரணைக்கு வந்தது.

விசாரணையின் போது அரசுதரப்பில்சாட்டைதுரைமுருகன்என்பவர்தொடர்ந்து நீதிமன்றத்திற்குஅளித்தவாக்குறுதிகளையும் உறுதிமொழிப்பத்திரத்தையும்மீறி அவதூறாக பேசி வருகிறார் என்றும் அதற்கான ஆடியோ மற்றும் வீடியோ ஆதாரங்களைநீதிமன்றத்தில்தாக்கல் செய்தனர்.

இதனை பார்த்த நீதிபதி புகழேந்தி கடும் கோபம் கொண்டு நீதிமன்றத்திற்கு வழங்கும் உறுதிமொழி பத்திரம் வெறும் பேப்பர்தானே என்று நினைக்கிறீர்களா என்று கேள்வி எழுப்பிய நீதிபதி, தமிழக முதல்வர் எவ்வளவு முடியுமோ அதை விட அதிகமாக தற்போது பணியாற்றி வருகிறார். இதற்காக நீங்கள் ஒன்றும் பாராட்ட வேண்டாம். ஆனால் மைக் கிடைத்ததுஎன்பதற்காககண்டதை எல்லாம் பேச முடியாது.

மேலும் அவர் பேசியதை எல்லாம் உட்கார்ந்து கேட்பதற்கு நீதிமன்றத்திற்கு நேரம் கிடையாது. அரசுதரப்பில் அவர் என்ன பேசி உள்ளார் என்பதை எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்யுங்கள். அரசு மீது என்ன குற்றம் கண்டு விட்டீர்கள்.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்டை துரைமுருகன் பேசியதை எழுத்து பூர்வமாக தாக்கல் செய்ய வேண்டும்

ஒரு வார்த்தை அவதூறாக தேவையில்லாமல் பேசி இருந்தால் நிச்சயமாக அவருக்கு வழங்கப்பட்ட ஜாமீன் ரத்து செய்யப்படும் என எச்சரித்துவழக்குவிசாரணையை வரும் செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைத்தார்.

தமிழகத்திற்கு விடியல்

மே 7ம் தேதி தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றார். அப்போது கொரோனா 2வது அலை தமிழகத்தில் தீவிரமாக இருந்தது. இதை கட்டுப்படுத்துவதையே முதல் பணியாக மேற்கொண்டிருந்தார். தேர்தல் அறிக்கையில் கூறியது போல, கொரோனா நிவாரணத்தொகையாக ₹4 ஆயிரம் வழங்கினார்.

இரண்டாவது அலையின்போது வடமாநிலங்களில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆக்ஸிஜன் வழங்க முடியாமல் அம்மாநில அரசுகள் திணறின. தமிழகத்தில் அப்படி ஒரு நிலைமை ஏற்படாமலிருக்க அரசு மருத்துவமனைகளில் ஆக்ஸிஜன் படுக்கை வசதிகளை அதிகப்படுத்தினார். "வார் ரூம்" மூலம் பொதுமக்கள் மருத்துவமனைகளில் படுக்கை வசதிகளை தெரிந்து கொள்ள வழிவகைகளை ஏற்படுத்தினார். தமிழகத்தில் கொரோனா தொற்று பரவல் குறையத் தொடங்கியது.

திமுக ஆட்சிக்கு வந்ததும், தடுப்பூசி போடுவது ஒரு மக்கள் இயக்கமாகவே மாறியது. வாரந்தோறும் மெகா தடுப்பூசி முகாம்களை ஏற்படுத்தி, குறைந்த நாட்களில் அதிகளவு தடுப்பூசி போட்ட மாநிலங்களில் தமிழகம் முதன்மையாக திகழ்ந்தது. ஒருபுறம் கொரோனா மிரட்டல் ஓய்ந்த நேரத்தில், மழை தன் வேலையை காட்டியது. 2015ல் ஏற்பட்டது போல, தலைநகர் சென்னை தண்ணீரில் தத்தளித்தது. முதல்வர் மு.க.ஸ்டாலின் வெள்ளம் பாதித்த பகுதிகளை நேரடியாக சென்று பார்வையிட்டார். விரைந்து பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டார். அரசின் வேகம் கலந்த விவேகமான நடவடிக்கைகளால் சென்னை விரைவிலேயே இயல்பு நிலைக்கு திரும்பியது. அத்தோடு நில்லாமல் வெள்ளத்தால் விளைநிலங்கள் அதிகம் பாதிக்கப்பட்ட டெல்டா மற்றும் கன்னியாகுமரி, தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டங்களுக்கும் சென்று ஆய்வு செய்து பணிகளை முடுக்கி விட்டார்.

பேரிடர் பணிகளுக்கு இடையிலும் மக்கள் நலத்திட்டங்களை அவர் விட்டு வைக்கவில்லை. "முதலீட்டாளர்களின் முதல் முகவரி - தமிழ்நாடு" என்ற அற்புத திட்டம் மூலம் தொழில்துறைக்கான முதலீடுகளை அதிகப்படுத்தினார். சுமார் 50 ஆயிரம் கோடிக்கு மேல் தொழில்துறையில் முதலீடுகளை ஈர்த்தார். இதன்மூலம் சுமார் ஒரு லட்சம் பேருக்கு மேல் வேலைவாய்ப்பு உருவாகும் சூழல் ஏற்பட்டுள்ளது. மேலும், தமிழக அரசின் பணியிடங்களுக்கான போட்டித்தேர்வுகளில், தமிழ் மொழி பாடத்தாளை கட்டாயமாக்கி அரசாணை வெளியிட்டது திமுக ஆட்சிக்கு மணி மகுடம் சூட்டுவதாக அமைந்துள்ளது.

ஐகோர்ட் மதுரை கிளையில் நேற்று விசாரணைக்கு வந்த ஒரு வழக்கில், நீதிபதி புகழேந்தி, "முதல்வர் மு.க.ஸ்டாலின் எவ்வளவு முடியுமோ, அதை விட அதிகமாக தற்போது பணியாற்றி வருகிறார்" என பாராட்டு தெரிவித்துள்ளார். மற்ற மாநிலங்களிலும் முதல்வர் மு.க.ஸ்டாலினின் செயல்பாடுகள் பாராட்டப்படுகின்றன. இதற்கெல்லாம் அவர் கூறுவது, "என்னுடைய வேலை மக்களுக்கு பணியாற்றுவது. ஓட்டு போட்டவர்கள் மட்டுமல்ல... ஓட்டு போடாத மக்களுக்கும் சேர்த்து வேலை செய்வதுதான் எனது கொள்கை..." என அழகாக தெளிவுபடுத்தியிருக்கிறார். ஒரு ஆட்சி மாற்றம் இருண்டிருந்த தமிழகத்திற்கு மிகச் சிறந்த விடியலை தந்திருக்கிறது என்றால் அது மிகையல்ல.

தினமணி

10-Dec-2021

தமிழக முதல்வருக்கு உயர்நீதிமன்றம் பாராட்டு

மதுரை, டிச.9: ஜாமீன் நிபந்தனையை மீறி தமிழக முதல்வர் குறித்து அவதூறு கருத்துகளை வெளியிட்டவருக்கு எச்சரிக்கை விடுத்த சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை, முதல்வரின் செயல்பாடுகளுக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

முன்னாள் முதல்வர் கருணாநிதி, முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் குறித்து அவதூறான கருத்துகளை திருச்சியை சேர்ந்த துரைமுருகன் என்பவர் சமூக ஊடகத்தில் வெளியிட்டிருந்தார்.

இதுதொடர்பாக அளிக்கப்பட்ட புகாரின்பேரில், போலீஸார் துரைமுருகனை கைது செய்தனர்.

இனிமேல் இதுபோல அவதூறு கருத்துகளை வெளியிடமாட்டேன் என்ற உறுதிமொழி அளித்ததன்பேரில், அவருக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை நிபந்தனை ஜாமீன் வழங்கியது.

இந்த நிபந்தனையை மீறி அவதூறு கருத்துகளைப் பேசி வருவதால், துரைமுருகனுக்கு வழங்கப்பட்ட ஜாமீனை ரத்து செய்ய வேண்டும் என அரசுத் தரப்பில் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த மனு நீதிபதி பி.புகழேந்தி முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, நீதிமன்றத்துக்கு அளித்த உறுதிமொழியை மீறி பேசி வருவது குறித்த ஒலி-ஒளிப்பதிவு ஆதாரங்கள் அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டன.

இதனைப் பார்வையிட்ட நீதிபதி பி.புகழேந்தி, கடும் அதிருப்தியைத் தெரிவித்தார். நீதிமன்றத்துக்கு அளிக்கும் உறுதிமொழியை வெறும் காகிதமாக நினைக்கிறீர்களா எனக் கேள்வி எழுப்பினார்.

தமிழக முதல்வர் எவ்வளவு முடியுமோ அதைக்காட்டிலும் அதிகமாகப் பணியாற்றி வருகிறார். இதற்காக பாராட்ட வேண்டியதில்லை. ஆனால், கருத்துகள் கூறுவதாகத் தெரிவித்து கண்டதை எல்லாம் பேச முடியாது எனக் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசியதை எழுத்துப்பூர்வமாக அரசுத்தரப்பு தாக்கல் செய்ய உத்தரவிட்டார். அதில் அவதூறாக ஒரு வார்த்தை இடம்பெற்றிருந்தாலும் அவருக்கு அளிக்கப்பட்ட ஜாமீன் ரத்து செய்யப்படும் என எச்சரித்து, விசாரணையை ஒத்தி வைத்தார்.

நம் தேசபக்தி!

தமிழ்நாட்டில் சிலர் 'தேசபக்தி' வகுப்பு எடுப்பதையே பிழைப்பாக வைத்திருப்பார்கள். 'தமிழ்நாட்டில் எவருக்கும் தேசபக்தி இல்லை' என்றும், 'தி.மு.க.வுக்கு தேசபக்தி இல்லை' என்றும், 'கடந்த ஐம்பது ஆண்டுகளாக தேசபக்தியே போய்விட்டது' என்றும் புலம்பிப் புலம்பியே அவர்கள் தொண்டை புண்ணாகிவருகிறது!

எது தேசபக்தி என்பது தான் பிரச்சினையே தவிர! தேசபக்தி என்பது பிரச்சினைக்குரியது அல்ல!

முப்படைகளின் தலைமைத் தளபதி பிபின் ராவத் பயணம் செய்த ஹெலிகாப்டர் விபத்திற்குள்ளான செய்தி அறிந்ததும், தன்னுடைய அனைத்துப் பணிகளையும் ஒத்தி வைத்து விட்டு குன்னூர் பறந்தார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். அதுதான் உண்மையான தேசபக்தி. இதனை மனச்சாட்சி உள்ள யாரும் மறுக்க மாட்டார்கள்.

❖ சீன நாட்டால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட போது 1962 ஆம் ஆண்டு, 'திராவிட நாடு' கோரிக்கையைக் கைவிட்டு, 'இந்திய நாட்டின் பாதுகாப்பே முக்கியம்' என்று அறிவித்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்!

❖ 1971 ஆம் ஆண்டு இந்தியாவை பாகிஸ்தான் அச்சுறுத்தியபோது, தமிழ்நாடு சட்டமன்றத்தில் பாகிஸ்தான் படையெடுப்புக்கு கண்டனத் தீர்மானம் போட்டவர் முதல்வர் கலைஞர் அவர்கள்!

❖ 1972 ஆம் ஆண்டு பாகிஸ்தான் போரின் போது அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம் நாட்டுப் பாதுகாப்புக்காக ஆறு கோடி ரூபாய் நிதி வழங்கியவர் முதல்வர் கலைஞர் அவர்கள். அன்றைய தினம் அனைத்து மாநிலங்களும் வழங்கிய தொகை மொத்தம் 25 கோடி. அதில் 6 கோடியை வழங்கியது திமுக. அரசு!

❖ அந்தப் போரில் வீரமரணம் அடைந்த ராணுவ வீரர்களுக்கு நிதியும் நிலமும் வழங்கிய அரசு கலைஞரின் அரசு!

❖ 1999 ஆம் ஆண்டு கார்கில் போரின் போது அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் மூன்று தவணைகளாக மொத்தம் 50 கோடி ரூபாய் வழங்கிய அரசு முதல்வர் கலைஞரின் அரசு! எனவே தி.மு.க.வின் தேசபக்தி என்பது காலம் காலமாக நிரூபிக்கப்பட்டது தான்.

1971 ஆம் ஆண்டு இந்தியா – பாகிஸ்தான் போர் நடந்தபோதும் தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி தான் நடந்து கொண்டு இருந்தது. தமிழ்நாட்டின் முதலமைச்சராக கலைஞர் அவர்கள் இருந்தார். போர் தொடங்கியபோது அமெரிக்காவில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கெடுப்பதற்காக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சென்றிருந்தார். போர் தொடங்கியது என்பதைக் கேள்விப்பட்டதும் உடனடியாக தமிழ்நாடு திரும்பினார். கலைவாணர் அரங்கில் அவருக்கு வரவேற்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. வரவேற்பு விழா என்ற பெயரை மாற்றி, 'பாகிஸ்தான் ஆக்கிரமிப்புக் கண்டனக் கூட்டம்' என்று போட்டு நடத்தச் சொன்னார். பாகிஸ்தான் படையெடுப்புக்குக் கண்டனம் தெரிவித்து தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினார்.

அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அரசுக்கு முழு ஒத்துழைப்பை வழங்கினார் முதல்வர் கலைஞர். அந்த அடிப்படையில்தான் இன்றைய முதலமைச்சரும் செயல்பட்டு வருகிறார் என்பதை உணர்த்தின குன்னூர் காட்சிகள்.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள வெலிங்டன் ராணுவப் பயிற்சி மையத்தில் நடைபெறவிருந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக டெல்லியிலிருந்து கோவை வந்திருந்தார் முப்படைத் தலைமைத் தளபதி பிபின் ராவத். அவர் சூலூர் விமானப்படைத் தளத்தில் இருந்து IAF Mi-17V5 ரக ஹெலிகாப்டரில் வெலிங்டன் புறப்பட்டார். அவர் காரில் பயணம் செய்வதாக இருந்தால் அதற்கான முழுப்பாதுகாப்பு ஏற்பாடுகளையும் தமிழக அரசு செய்தும் இருந்தது. ஹெலிகாப்டர் பயணத்தை அவர் தேர்வு செய்தார்.

ஆனால், வெலிங்டன் செல்லும் வழியில் இந்த ஹெலிகாப்டர் விபத்திற்குள்ளானது. இது குறித்து தகவல் அறிந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தலைமைச் செயலாளருடன் ஆலோசனை நடத்தி மீட்புப் பணிகளைத் துரிதமாக மேற்கொள்ளும்படி உத்தரவிட்டார். பின்னர், நீலகிரி மாவட்ட ஆட்சியரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விவரங்களைக் கேட்டறிந்த அவர், வனத்துறை அமைச்சர் ராமச்சந்திரனைத் தொடர்பு கொண்டு, விபத்து நடைபெற்ற இடத்திற்கு உடனே விரைய அறிவுறுத்தினார்.

மீட்புப் பணிகள் முடிவடையும்வரை 5 நிமிடங்களுக்கு ஒரு முறை வனத்துறை அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சியரைத் தொடர்பு கொண்டு தகவல்களைக் கேட்டறிந்தார். இதனைத் தொடர்ந்து தனது நிகழ்ச்சிகள் அனைத்தையும் ரத்து செய்த முதலமைச்சர் அவர்கள், உடனடியாக விமானத்தில் கோவைக்குச் சென்றார். அங்கிருந்து சாலை மார்க்கமாக குன்னூர் சென்றடைந்தார்.

வெலிங்டன் ராணுவப் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்ற அவர், ராணுவ அதிகாரிகளிடம் விபத்து குறித்து கேட்டறிந்தார். அன்று இரவு குன்னூரிலேயே தங்கி இருந்தார். மறுநாள் காலையில் உடல்களை டெல்லிக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்தினார். உத்தரவுகள் பிறப்பித்தார்.

மறுநாள் காலையில் வெலிங்டன் ராணுவ மைதானத்தில் வைக்கப்பட்டிருந்த பிபின் ராவத், அவரது மனைவி மதுலிகா ராவத் உள்ளிட்டவர்களின் உடல்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அஞ்சலி செலுத்தினார். பின்னர் 13 பேரின் உடல்களை கோவை கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும், மேற்கொள்ளவும் முதலமைச்சர் உத்தரவிட்டார். அதன் பிறகு தான் கோவையில் இருந்து புறப்பட்டு சென்னை வந்தார் முதலமைச்சர். முதலமைச்சரின் இந்த துரிதமான செயலை கட்சிக்கு அப்பாற்பட்ட பலரும் சமூக வலைதளங்களில் பாராட்டி வருகிறார்கள். இதுதான் உண்மையான தேசபக்தி!

பா.ஜ.க.வுக்கு வாக்களிக்காதவர்கள் எல்லாம் தேசபக்தி இல்லாதவர்கள் அல்ல. எது தேசபக்தி தெரியுமா?

பதின்மூன்று உடல்களைத் தாங்கிய ஆம்புலன்ஸ் வண்டி வந்த பாதைகளில் எல்லாம் திரண்டிருந்த பொதுமக்கள் கைகளில் தேசியக் கொடியை ஏந்தியும், மலர்களைத் தூவியும் மரியாதை செலுத்தினார்கள் அல்லவா? அதுதான் உண்மையான தேசபக்தி!

அதிக ராணுவ வீரர்களைக் கொண்ட கம்மவான் பேட்டை கிராமத்தில் மெழுகுவர்த்தி ஏற்றி பொதுமக்களும், முன்னாள் ராணுவ வீரர்களும் பள்ளி மாணவர்களும் அஞ்சலி செலுத்தினார்கள் அல்லவா... அதுதான் உண்மை யான தேசபக்தி!

இப்படி தமிழ்நாட்டின் பல்வேறு ஊர்களிலும், நகரங்களிலும் நடந்துள்ளது. நீலகிரி மாவட்டக் கடைகள் அனைத்தும் அடைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. இதுதான் தேசபக்தி.

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே உள்ள படிக்காசு வைத்தான்பட்டி அரசுப் பள்ளியில் மாணவர்கள் அனைவரும் கருப்பு பேட்ஜ் அணிந்து வந்துள்ளார்கள். இதுதான் தேசபக்தி!

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கருப்புச் சால்வை அணிந்து வந்து மலர்வளையம் வைத்தார். அதுதான் தேசபக்தி!

தமிழ்நாட்டு மக்களின் தேசபக்தியை இருட்டு உள்ளங்களால் உணர முடியாது!

தினகரன்
ஒரு புதிய அனுபவம்
11-Dec-2021

விவசாயிகளின் காவலன்

கால் நடை துறையை மேம்படுத்தவும், கால்நடை துறையில் ஈடுபட விரும்புபவர்களுக்கு உதவும் வகையிலும் ஒன்றிய அரசு சார்பில், மாநில அரசுகளுடன் இணைந்து, 'கால்நடை உழவர் கடன் அட்டை' திட்டம் 2019-ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இந்த திட்டத்தின் கீழ், கால்நடை வளர்ப்பவர்கள் எந்த அடமானமும் இல்லாமல் வங்கியிலிருந்து ₹1.60 லட்சம் வரை கடன்தொகை பெறலாம். இந்த கடன் அட்டைக்கு ஆண்டுக்கு 7 சதவீதம் என்ற குறைந்த வட்டி விகிதத்தில் வங்கிக்கடன் வழங்கப்படுகிறது. கடன் தொகையை முறையாக செலுத்தும் விவசாயிகளுக்கு 3 சதவீத வட்டியினை ஒன்றிய அரசு மானியம் மூலம் வழங்குகிறது. இதன்மூலம் விவசாயிகளுக்கான வட்டி விகிதம் ஆண்டுக்கு 4 சதவீதமாக குறையும். கால்நடை உழவர் கடன் அட்டை வைத்திருக்கும் விவசாயிகள், ஆண்டுக்கு ₹3 லட்சம் வரை கடனுதவி பெற முடியும்.

கால்நடைகளுக்கான காப்பீட்டு திட்டத்தையும் ஒன்றிய அரசும், மாநில அரசும் அமல்படுத்தியுள்ளன. இதன்படி, வறுமைக்கோட்டுக்கு மேலே உள்ள விவசாயிகளுக்கு 50 சதவீத மானியம், வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ளவர்களுக்கு 70 சதவீத மானியம் காப்பீடாக வழங்கப்படுகிறது.

தமிழக விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில், கடன்தொகையை முறையாக திருப்பிச்செலுத்தும் விவசாயிகளுக்கு கால்நடை கடன் வட்டி முழுமையாக தள்ளுபடி செய்யப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தின்படி, உரிய காலத்திற்குள் நடைமுறை மூலதன கடனை திருப்பிச்செலுத்தும் விவசாயிகளுக்கு 7 சதவீத வட்டி ஊக்கத்தொகை தமிழக அரசால் வழங்கப்படுகிறது. சொந்த நிதியை பயன்படுத்தும் கூட்டுறவு சங்கம், வங்கிகளுக்கு 2 சதவீத வட்டி மானியம் தமிழக அரசால் வழங்கப்படுகிறது.

தமிழகத்தில் வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் கடந்த சட்டமன்ற கூட்டத்தொடரின் போது அறிவிக்கப்பட்ட திட்டங்கள் தற்போது அரசாணையாக வெளிவந்துள்ளது. தமிழக அரசின் இந்த நடவடிக்கை, விவசாயிகளுக்கு, தோள் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில், தினம் ஒரு திட்டத்தை அறிவித்து வருகிறார். தற்போது, விவசாயிகளையும் கைவிடாமல், கால்நடை கடனுக்கான வட்டி முழுவதையும் தள்ளுபடி செய்து அறிவித்துள்ளார்.

ஒன்றிய அரசின் 3 வேளாண் சட்டங்களை திரும்பபெறக்கோரி, தலைநகர் டெல்லியில் விவசாயிகள் போராடியபோது, அவர்களுக்கு ஆதரவாகவும், ஒன்றிய அரசை கண்டித்தும் தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது விவசாயிகளின் காவலனாக திகழும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் எடுக்கப்பட்ட அதிரடி முடிவு என்பதை நாடு மறக்காது. தன்னால் முடிந்த அளவையும் மீறி, கூடுதலாக தமிழக மக்களுக்காக முதல்வர் பாடுபட்டு வருகிறார் என மதுரை ஐகோர்ட் கிளை நேற்று முன்தினம் பாராட்டு தெரிவித்தது. அதற்கு சான்றாக, தமிழக அரசின் கால்நடை கடன் வட்டி தள்ளுபடி அறிவிப்பு அமைந்துள்ளது.

குன்னூர் ஹெலிகாப்டர் விபத்து மீட்பு பணி:

மு.க.ஸ்டாலினுக்கு விமானப்படை நன்றி

புதுடெல்லி, டிச. 11-
இந்திய முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத், அவரது மனைவி மற்றும் ராணுவ அதிகாரிகள் பயணம் செய்த ராணுவ ஹெலிகாப்டர் நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே கடந்த 8-ந்தேதி விபத்தில் சிக்கியது.

ஹெலிகாப்டர் கீழே விழுந்து தீப்பிடித்ததில் பிபின்ராவத் உள்பட 13 பேர் உயிரிழந்தனர். ஒரு ராணுவ வீரருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

ஹெலிகாப்டர் கீழே விழுந்து தீப்பிடித்ததும் சம்பவ இடத்துக்கு போலீசார், தீயணைப்புத் துறையினர் விரைந்து சென்றனர். கிராம மக்களும் மீட்பு பணியில் துரிதமாக ஈடுபட்டனர்.

ஹெலிகாப்டர் விபத்து குறித்து அறிந்ததும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் மீட்பு பணிகளை துரிதப்படுத்தினார். மருத்துவ உதவிகள் செய்ய உத்தரவிட்டார். அவ்வப்போது மீட்பு பணி நில வரங்களையும் கேட்டறிந்தார். இந்த நிலையில் குன்னூரில் நடந்த ஹெலிகாப்டர் விபத்தில் மீட்பு பணிக்கு உதவியதற்காக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு இந்திய விமானப்படை நன்றி தெரிவித்துள்ளது.

மு.க.ஸ்டாலினுக்கு நன்றி

இதுகுறித்து இந்திய விமானப்படை டுவிட்டரில் கூறி இருப்பதாவது:-

• ஹெலிகாப்டர் விபத்தில் மீட்பு பணிகளுக்கு தமிழக முதல்வர் மற்றும் பணியாளர்கள் வழங்கிய உடனடி உதவிக்கு இந்திய விமானப்படை நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

நீலகிரி மாவட்ட கலெக்டர், காவல்துறை, காட்டேரி கிராம மக்களுக்கும் மீட்பு பணிக்கு உதவியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

STALIN TO BE ADMIRED

I am just appalled by the total absence of any reaction among the people of Tamil Nadu and from any of the opposition parties over the terrible and irreparable loss of valiant soldiers cum patriots of the country in the horrific chopper crash that occurred within the state's territory itself. The prominent TV channels had mentioned the most sorrowful news only in a very casual way without any show of shock or concern. Except for BJP, no other party seems to have attached any importance to this startling incident. However, the TN CM is to be admired for his show of concern over this tragedy and who at once flew to Coonoor to get first-hand information about the accident and to pay homage to the departed souls. TN is a state of countless patriots and has a long history of sacrifices made by them to free the country from foreign rule. It is very sad to note that the love for the country is slowly waning and thinning except for some kind of low-key celebrations on Independence Day every year.

Marudamalaiyan,
Coimbatore

தினகரன்

12-Dec-2021

‘சிறப்பாக செயல்படுகிறது’

தமிழக அரசுக்கு ராமதாஸ் பாராட்டு

தர்மபுரி, டிச.12: ஒருங்கிணைந்த தர்மபுரி மாவட்ட பாமக பொதுக் குழு கூட்டத்தில் கட்சியின் நிறுவனர் ராமதாஸ் பேசியதாவது:

வன்னியர்களுக்கு 10.5 சதவீத இட ஒதுக்கீடு வாங்கினால் மற்றவர்களால் பொறுத்துக்கொள்ள முடியாமல் நீதிமன்றத்திற்கு சென்றுள்ளனர். அங்கு ரத்து செய்ததை எதிர்த்து, திமுக தலைமையிலான அரசு மேல்முறையீடு செய்திருக்கிறது. மூத்த வக்கீல்களைக் கொண்டு பல்வேறு முயற்சிகளை சிறப்பாக செய்து வருகிறது. இதற்காக இந்த அரசை பாராட்ட விரும்புகிறேன். இட ஒதுக்கீட்டில் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம். அப்படி கிடைக்கவில்லை என்றால், என்ன நடக்கும் என்றும் எல்லோருக்கும் தெரியும். அந்த நிலை வராது என நினைக்கிறேன் என்றார்.

தினகரன்

12-Dec-2021

தேடி வரும் வேலை

இரண்டாம் உலகப்போர் முடிவுற்றதைத் தொடர்ந்து படைக்கலைப்பினால் பாதிக்கப்பட்ட பணியாளர்கள் மற்றும் வெளியேற்றப்பட்ட போர் வீரர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் நோக்கத்தோடு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் நாடு முழுவதும் அமைக்கப்பட்டது. இதன் சேவைகள் 1948ல் இருந்து அனைத்து தரப்பு மக்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் மொத்தம் 34 மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்கள் உள்ளன. தமிழகத்தை கடந்த 10 ஆண்டுகளாக ஆண்ட அதிமுக, கடந்த 7 ஆண்டுகளாக மத்தியில் ஆண்டு வரும் பாஜகவின் தொலைநோக்குச் சிந்தனையில்லாமை மற்றும் நிர்வாகத் திறன் இல்லாமையால் நாட்டில் புதிய வேலைவாய்ப்பு உருவானதோ இல்லையோ, பல பேரின் வேலை பறிபோனது. விளைவு கடந்த செப்டம்பர் 30ம் தேதி நிலவரப்படி தமிழக வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலைக்காக காத்திருப்போர் எண்ணிக்கை 72 லட்சத்து 20 ஆயிரத்து 454. இவ்வளவு பேருக்கு வேலை இல்லையா என்று மலைக்க வேண்டாம். இன்னும் பல லட்சம் பேர் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யாமல் உள்ளனர் என்பது கொசுறு தகவல்.

இது போதாது என்று தமிழகத்தில் உள்ள 3000க்கும் மேற்பட்ட' தொழில் பயிற்சி நிறுவனங்கள், பொறியியல் பட்டய மற்றும் பொறியியல் கல்லூரிகள் மற்றும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஆண்டுதோறும் சுமார் எட்டு லட்சம் மாணவ மாணவியர் தேர்ச்சிபெற்று வெளியே வருகிறார்கள்.

இப்படிப்பட்ட நிலையில்தான், தமிழக சட்டப்பேரவை தேர்தலின்போது திமுக வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், இளைஞர்களின் எதிர்காலத்தினைக் கருத்தில் கொண்டு 2020-2021 முதல் ஒவ்வொரு ஆண்டும் பத்து லட்சம் வேலை வாய்ப்புகள் என்ற அளவில் 2025-26 வரை ஐம்பது லட்சம் வேலை வாய்ப்புகளைத் தமிழகத்தைச் சேர்ந்த படித்த இளைஞர்களுக்கு வழங்கிட தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது.

தமிழகத்தில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க பல்வேறு முயற்சிகளில் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு இறங்கியுள்ளது. கடந்த மாத இறுதியில் கூட கோவையில் நடந்த முதலீட்டாளர்கள் மாநாட்டில் 92 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு தரக் கூடிய ரூ.52 ஆயிரத்து 549 கோடி மதிப்பிலான 59 புதிய தொழில்களுக்கு முதல்வர் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் டிசம்பர் மாதம் முதல் தொடர்ச்சியாக மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளது என்ற தமிழக அரசின் அறிவிப்பு வேலை தேடிவரும் இளைஞர்களின் வயிற்றில் பால் வார்த்துள்ளது.

வேலையை தேடி நம் இளைஞர்கள் சென்ற காலம் போய் வேலையே நம்மை தேடி நம்மூருக்கே வருகிறது. மக்களின் முதல்வர் மு.க.ஸ்டாலினின் சீரிய முயற்சியால்தான் இது சாத்தியமாகியுள்ளது. இந்த வாய்ப்பை நம் இளைஞர்கள் பயன்படுத்திக் கொண்டு வாழ்க்கையில் முன்னேற வாழ்த்துக்கள்.

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878
12-Dec-2021

IAF thanks Stalin, T.N. police, local residents

STAFF REPORTER
COIMBATORE

M.K. Stalin

The Indian Air Force (IAF) on Saturday thanked Tamil Nadu Chief Minister M.K. Stalin, the State police and residents of Kattery near Coonoor for the assistance offered following the December 8 helicopter crash that killed 13 people, including the Chief of Defence Staff, General Bipin Rawat.

In a tweet on Saturday, the IAF thanked the "prompt and sustained assistance" provided by the office and staff of Mr. Stalin, Nilgiris Collector S.P. Amrith, police officials and the locals from Kattery village "in the rescue and salvage operation after the unfortunate helicopter accident."

While local people rushed to the spot almost immediately after the accident, the district administration, police and multiple State departments came together, and also stepped up for rescue efforts and retrieving the bodies.

Mr. Stalin visited Coonoor the very evening of the crash, and also paid homage to those killed in the chopper crash.

Several theories were floated on social media and speculation was rife over the State's handling of the crash episode. The IAF's tweet puts a stop to those making such speculation, leaving no one in any doubt about their appreciation for the assistance rendered by multiple government agencies in Tamil Nadu.

எந்தெந்த உதவி செய்ய முடியுமோ அதை தமிழக அரசு செய்து தந்தது

ஹெலிகாப்டர் விபத்தின் போது நேரில் சென்று உதவிய முதல்வருக்கு ராணுவ அதிகாரி நன்றி கடிதம்

ராணுவ வீரர்கள் குடும்பத்தினர் இதயத்தில் இடம் பிடித்து விட்டீர்கள்

சென்னை, டிச.13-

எந்தெந்த உதவி செய்ய முடியுமோ அதை தமிழக அரசு செய்து தந்தது என்றும், ராணுவ வீரர்களின் குடும்பத்தினர் இதயத்தில் இடம் பிடித்து விட்டீர்கள் என்றும், ஹெலிகாப்டர் விபத்தின் போது நேரில் சென்று உதவிய முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ராணுவ அதிகாரி நன்றி கடிதம் அனுப்பியுள்ளார்.

சென்னை, தக்ஷின் பாரத், ஜெனரல் ஆபிசர் கமாண்டிங் லெப்டினன்ட் ஜெனரல் அ.அருண், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

நீலகிரி மாவட்டத்தில் கடந்த 8ம் தேதி நடந்த ஹெலிகாப்டர் விபத்தில் இந்திய ராணுவத்தினர் 13 பேர் உயிரிழந்த துயரமான நேரத்தில், அவர்கள் குடும்பத்தினருக்கு தாங்கள் அருகில் இருந்து ஆறுதல் அளித்தமைக்கு எனது மனமார்ந்த நன்றியையும், இதயபூர்வமான பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தகவல் அறிந்த உடனே, நெஞ்சை நெகிழ வைக்கும் வகையில் தாங்கள் விரைந்து வந்து, இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தியதோடு, அவர்கள் குடும்பத்தினருக்கும் ஆறுதல் தெரிவித்து, ஆயிரக்கணக்கான ராணுவ வீரர்கள், ராணுவ உயர் அலுவலர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் இதயத்தில் ஆழமாக இடம் பிடித்து விட்டீர்கள்.

அந்த தருணத்தில் எந்த எந்த உதவி முடியுமோ, அந்த உதவிகளை எல்லாம் தங்களின் தலைமையின் கீழ் உள்ள தமிழ்நாடு அரசின் மொத்த நிர்வாகமும் செய்து தந்தது. இதுபோன்ற ஆதரவுகள் தான் எதிர்காலத்தில் நம் இளைஞர்கள் தாமாக முன்வந்து ராணுவத்தில் சேருவதற்கும், ராணுவ உடை அணிவதற்கும், உற்சாகமூட்டுவதாகவும், ஊக்கமளிப்பதாகவும் அமையும்.

தக்ஷின் பாரத் பகுதியின் தலைமை அலுவலர் என்ற வகையில் தங்களுடைய முன்மாதிரியான ஆதரவுடன் பணியாற்றுவதில் பெருமை கொள்கிறேன். உங்களுடைய இந்த செயல், பணியில் இருக்கும் ராணுவ வீரர்களுக்கும், மூத்த ராணுவ வீரர்களுக்கும் தமிழ்நாடு அரசு நமக்கு ஆதரவாக இருக்கின்றது என்ற உணர்வை ஏற்படுத்தி, ஊக்கத்தை அளிப்பதோடு தேவைப்படும் காலங்களில் அவர்களுக்கு இந்த அரசு மிகவும் உறுதுணையாக இருக்கும் என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த கடினமான சூழ்நிலையில், எங்களுக்கு உறுதுணையாக இருந்ததற்கு தங்களுக்கும் அனைத்து அரசு அலுவலர்களுக்கும், நம் மாநிலத்திற்கும் மீண்டும் ஒருமுறை எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

Army thanks Stalin for extending support

SPECIAL CORRESPONDENT
CHENNAI

The Army on Sunday wrote to Chief Minister M.K. Stalin thanking him for all the support extended by the Tamil Nadu government soon after the Coonoor helicopter crash which killed Chief of Defence Staff General Bipin Rawat, wife and 11 defence personnel.

In a letter to Mr. Stalin, Lt. Gen. A. Arun, General Officer Commanding Dakshin Bharat Area, said the Chief Minister had "found a place deep in the hearts of thousands of Army personnel, senior officials and their family members" as he not only rushed to pay tributes to the deceased but also extended his condolences to the bereaved families, according to an official release from the State Government.

"The entire administrative set up of the Tamil Nadu Government provided all possible support. Assistance like these alone would encourage more youth to come forward to join the defence forces and don the uniform," the senior Army officer said.

"Your act has not only made Army personnel and senior officers realise that the Tamil Nadu Government is by their side but has given the assurance that it would be supportive whenever there is a need," he added. Lt. Gen. Arun reiterated his heartfelt thanks to Mr. Stalin, all government officials and Tamil Nadu for having been supportive to the Armed forces. The Indian Air Force had earlier thanked the Chief Minister and the State Government.

மகளிர் நலன் காக்கும் அரசு

'எனக்கு மனநிறைவை வழங்கக் கூடிய திட்டம் மட்டுமல்ல, எனக்கு அதிக அளவிலான பெயரை வாங்கிக் கொடுத்த திட்டமாகவும் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் அமைந்துள்ளன' என்று திருத்தணியில் நடந்த மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு கடன் வழங்கும் நிகழ்ச்சியில் உருக்கமாக பேசினார் முதல்வர் மு.க.ஸ்டாலின். அந்த அளவுக்கு சுயஉதவிக்குழுக்களின் வளர்ச்சி பின்னணியில் முதுகெலும்பாக இருந்தவர் நம் முதல்வர்.

இந்தியாவிலேயே முதன்முதலாக மகளிர் பொருளாதார முன்னேற்றத்துக்கு அடித்தளம் அமைக்கும் வகையில் கலைஞரால் 1989ம் ஆண்டு மகளிர் சுய உதவிக் குழுக்கள் தர்மபுரி மாவட்டத்தில் உருவாக்கப்பட்டது. அதன்பின் தமிழகம் முழுவதும் இந்த குழுக்கள் பெருகி இன்று 7.22 லட்சம் மகளிர் சுய உதவிக்குழுக்கள் செயல்பட்டு வருகிறது. இதில் 1.6 கோடி மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். 2006ல் திமுக ஆட்சியின் போது மகளிர் சுயஉதவிக்குழுக்களின் வளர்ச்சி அபரிமிதமாக இருந்தது. ஏனெனில் 2007ல் உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்த நமது தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் செல்லும் இடமெல்லாம் எத்தனை மணி நேரமானாலும் நின்று கொண்டே அத்தனை பேருக்கும் தனது கரத்தினால் கடன் உதவி வழங்கி பெண்களின் வருவாயை பெருக்கி அவர்களை சொந்த காலில் நிற்க வைத்த பெருமை நமது முதல்வர் மு.க.ஸ்டாலினையே சேரும்.

அந்த வகையில் 58 ஆயிரம் சுயஉதவிக் குழுக்களுக்கு ₹2750 கோடி கடனுதவி வழங்கும் திட்டத்தை மனநிறைவோடு தொடங்கி வைத்ததுடன், ₹20 ஆயிரம் கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயித்து இருப்பதாகவும் அறிவித்து இருப்பது மகளிர் நலனில், அவர்களின் சமூக வளர்ச்சியில் முதல்வர் கொண்ட அக்கறை அனைவருக்கும் புலப்படும்.தமிழ்நாட்டில் பெண்கள் வலுப்பெற்றால் தான் சமூகம் வலுப்பெறும் என்ற எண்ணம் முதல்வர் மு.க.ஸ்டாலினின் பணிகளில் தெரிகிறது.

தமிழ்த்தாய் வாழ்த்து மாநிலப் பாடலாக அங்கீகாரம்: பாஜக வரவேற்பு

சென்னை, டிச.17: மனோன்மணீயம் சுந்தரனாரின் 'நீராருங் கடலுடுத்த' பாடலை மாநிலப் பாடலாக அரசு அங்கீகரித்ததற்கு பாஜக மாநிலத் தலைவர் கே.அண்ணாமலை வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெள்ளிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை: தமிழக அரசு வெளியிட்டுள்ள புதிய அரசாணையில், தமிழ்த்தாய் வாழ்த்தான மனோன்மணீயம் சுந்தரனார் எழுதிய 'நீராருங் கடலுடுத்த...' பாடலை தமிழக அரசின் மாநிலப் பாடலாக அங்கீகரித்து அறிவித்துள்ளது. இந்த அங்கீகாரத்தை பாஜக மிகவும் வரவேற்கிறது. தான் எழுதிய பாடலை அரசு அங்கீகரித்துள்ள நிலையில், மனோன்மணீயம் சுந்தரனார் இருந்திருந்தால் மிகவும் மகிழ்ந்திருப்பார்.

அதே சமயம், சில வரிகளை நீக்கி பயன்படுத்தப்பட்டிருப்பதை ஏற்க மாட்டார். எனவே, அவரின் கவிதை வரிகளைச் சிதைக்காமல் முழுமையாகப் பயன்படுத்துவதே அவர் பாடலின் பொருளமைதிக்கு நன்மை பயக்கும். அதை முதல்வர் மு.க.ஸ்டாலின் செய்வார் என நம்புவதாக அவர் கூறியுள்ளார்.

தமிழ்த்தாய் வாழ்த்து கட்டாயம்

மு.க.ஸ்டாலினுக்கு வைகோ பாராட்டு

சென்னை, டிச. 18–

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:– தமிழ்த்தாய் வாழ்த்தை, தமிழ்நாடு அரசின் பாடலாக அறிவித்து இருப்பது முதல்– அமைச்சர் மு.க.ஸ்டாலின் அரசின் சாதனை மகுடத்தில் வைரமாக ஒளி வீசுகிறது. இந்த அரசாணையின் மூலம், தி.மு.க. அரசு தமிழ் அரசு, தமிழ்த் தேசிய இனத்திற்கான அரசு என்பதை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நிலைநாட்டி இருப்பதற்கும், இந்த ஒற்றை அரசாணையின் மூலம் "நாம் யார்?" என்று ஓங்கி சிலரின் முகத்தில் அறைந்து இருப்பதற்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

மாலை முரசு

18-Dec-2021

முதல்வருக்கு பாராட்டுக்கள்!

"நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத்
திகழ் பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும் தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே!
அத்திலக வாசனை போல்
அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மிக்க
இருந்த பெரும் தமிழணங்கே!
உன் சீரிளமை திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!"

எனும் தமிழ்த் தாய் வாழ்த்து பாடல் தமிழக அரசின் மாநில பாடலாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிவிப்பை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் அனைத்து கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசு அலுவலகங்கள்,பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்துப் பொது அமைப்புக்களின் நிகழ்ச்சிகளிலும் நிகழ்வு தொடங்குவதற்கு முன்பு தமிழ்த் தாய் வாழ்த்து பாடல் பாடப்பட வேண்டும். அப்போது அனைவரும் எழுந்து நிற்க வேண்டும். இதில் மாற்றுத்திறனாளிகளுக்கு விலக்கு அளிக்கப் படுகிறது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மனோன்மணியம் சுந்தரனார் எழுதிய இந்த பாடல் தமிழ்நாட்டின் அனைத்து விழாக்களிலும் பாடப்பட வேண்டும் எனும் கோரிக்கை 1913 ஆம் ஆண்டு கரந்தை தமிழ்ச் சங்கத்தில் ஆண்டறிக்கையில் இடம்பெற்றது.இந்தப்பாடல் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக 1914 ஆம் ஆண்டு முதல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழாக்களில் பாடப்பட்டு வந்தது.மேலும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தை தாய்ச் சங்கமாக கொண்டு தமிழகத்தின் பல பகுதிகளில் உருவான தமிழ் சங்கங்களின் விழாக்களிலும் தொடக்கப் பாடலாக இப்பாடல் பாடப்பட்டது.

இந்தப் பாடலை தமிழக அரசின் பாடலாக அறிவிக்க வேண்டும் என்று அன்றைய முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களுக்கு கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர் கோரிக்கையாக எழுதி அனுப்பி வைத்தார்கள். தமிழறிஞர்கள், ஆர்வலர்கள் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று 1970 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் தேதி அன்று நடந்த அரசு விழாவில் அன்றைய முதல்வர் கருணாநிதி பேசும்போது தமிழக அரசு நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் தமிழ்த் தாய் வாழ்த்து இருக்கும்.'நீராரும் கடலுடுத்த' எனும் மனோன்மணியம் சுந்தரனார் இயற்றிய பாடலே தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக அமையும் என்று அறிவித்தார்.

1970ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் தேதி கருணாநிதி தலைமையில் அமைந்த அன்றைய தமிழக அரசு தமிழ்த் தாய் வாழ்த்தாக அறிவித்து அரசாணையும் வெளியிடப்பட்டது-இந்த அரசாணையை தொடர்ந்து தமிழ்நாட்டில் அரசு விழாக்களில், கல்வி நிலையங்களில், பொது நிறுவனங்களில், மற்றும் பொது நிகழ்ச்சிகளின் போது, நிகழ்வு தொடங்குவதற்கு முன்னதாக தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் பாடப்பட்டு வருகிறது. இந்த நிலையில் தமிழ்த் தாய் வாழ்த்து பாடல் பாடுவது குறித்து சில வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட வேண்டிய காலச் சூழ்நிலையை யொட்டி தமிழ் வளர்ச்சி மற்றும்செய்தித் துறையின் மூலம் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலை இசை வட்டுக்களைக் கொண்டு இசைப்பதைத் தவிர்த்து பயிற்சி பெற்றவர்கள், நிகழ்ச்சியில் பாடவேண்டும் எனவும் சமீபத்தில் ஆணையிடப்பட்டது.

அன்னைத் தமிழை போற்றிடும் வகையில் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடல் பாடப்படுவதை ஒருங்கிணைத்து நெறிமுறை படுத்தப்பட வேண்டிய நிலையில் ஒரு சில வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என தற்போது அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு இருப்பது வரவேற்கத்தக்க பாராட்டுக்குரியது.

பொது நிகழ்வுகளில் தமிழ்த் தாய் வாழ்த்து 55 விநாடிகளில் முல்லைப்பாணி ராகத்தில் (மோகன ராகம்) பாடப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.அன்னைத் தமிழின் பெருமையை உலகறியச் செய்வதிலும், இளம் தலைமுறையினருக்கு கொண்டு சேர்ப்பதிலும் பொதுமக்களும் தனியார் அமைப்புகளும் பெரும் பங்காற்ற முடியும் என்பதால் தமிழ்நாட்டில் நடைபெறும் தனியார் அமைப்புகள் நடத்தும் கலை, இலக்கிய மற்றும் பொது நிகழ்வுகளின் தொடக்கத்தில் தமிழ்த் தாய் வாழ்த்து ஊக்குவிக்கப்படும் என்ற அறிவிப்பையும் தமிழக அரசு வெளியிட்டு இருக்கிறது. ஆகவே அன்னைத் தமிழுக்கு வந்தனை செய்வோம். தமிழ்த் தாயை நீராரும் கடலுடுத்த என்று தொடங்கும் பாடலைப்பாடி வாழ்த்தி வணங்குவோம்.

தகுந்த நேரத்தில் உரிய நடவடிக்கை எடுத்த முதல்வர் ஸ்டாலினுக்கு பாராட்டுக்கள் – வாழ்த்துக்கள்!

மற்றொரு மணிமகுடம்

தமிழகத்தில் நடைபெறும் சாலை விபத்துகளில் அதிகப்படியான உயிரிழப்புகள் ஏற்பட காரணம், விபத்தில் சிக்குவோரை உடனடியாக மருத்துவமனைகளில் சேர்த்து உரிய சிகிச்சை அளிக்காததுதான். இதை தடுக்கவும், விபத்தில் சிக்குவோரின் சிகிச்சைக்காக உதவும் வகையிலும், 'இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும் 48' என்ற புதிய திட்டத்தை தமிழக அரசு துவக்கியுள்ளது.

இத்திட்டத்தை பொறுத்தவரை தமிழ்நாட்டில் எந்த பகுதியில் விபத்து நடந்தாலும், விபத்துக்கு உள்ளான நபரை மருத்துவமனையில் சேர்க்கும் நபருக்கு ரூ.5 ஆயிரம் ஊக்கத்தொகையும், விபத்தில் சிக்கியவருக்கு ஒரு லட்சம் ரூபாய் மதிப்பில் சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. அதாவது, சாலை விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல் 48 மணி நேரத்திற்கு, மருத்துவ செலவை அரசே ஏற்கும் என்பதுதான் இன்னுயிர் காப்போம் என்ற இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும்.

இத்திட்டத்திற்கென 609 மருத்துவமனைகள் தேர்வு செய்யப்பட்டு, உரிய தகுதியின் அடிப்படையில் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டு, மருத்துவ சிகிச்சைகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.இத்திட்டத்தின் மூலம் முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு அட்டை உடையவர்கள், இல்லாதவர்கள், பிற மாநிலத்தவர், வெளிநாட்டவர் என அனைவருக்கும் வருமான வரம்பு ஏதும் கணக்கில் கொள்ளாமல், தமிழ்நாட்டின் எல்லைக்குள் ஏற்படும் சாலை விபத்துகளில் காயம் அடைவோர்களுக்கு, முதல் 48 மணி நேரம் வரை கட்டணமின்றி மருத்துவ சிகிச்சை அளிக்கப்படும்.

தமிழக அரசு, சாலை பாதுகாப்பு, சாலை விபத்துகளை குறைத்தல், சாலை விபத்தில் உயிரிழப்புகளை தடுத்தல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. இதற்காக, பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த திட்டங்களுக்கு எல்லாம் முதன்மையான திட்டமாக இத்திட்டம் அமைந்துள்ளது. சாலை விபத்தில் சிக்குவோருக்கு முதலுதவி செய்ய, பலர் முன் வருவதில்லை. காரணம், காவல்துறை வழக்கு, நீதிமன்ற சாட்சி விசாரணை என பல நிலைகளை கடக்கவேண்டும் என்ற கருத்து நிலவுகிறது.

அதை உடைத்தெறியும் வகையிலும், முதலுதவி செய்யும் நபர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கி, அவர்களை உற்சாகப்படுத்தும் வகையிலும் இத்திட்டம் அமைந்துள்ளது. அனைத்து தரப்பு மக்களும் எம் மக்களே... என்ற கொள்கையை நெஞ்சில் நிறுத்தி, தமிழக அரசால் வகுக்கப்பட்ட உன்னத திட்டம், இன்னுயிர் காப்போம் திட்டம் ஆகும்.

தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் கடந்த மே மாதம் பொறுப்பேற்றது முதல் பல்வேறு அதிரடி திட்டங்களை அமல்படுத்தி வருகிறார். அத்தனையும் மக்கள் நலன் காக்கும் முக்கிய திட்டங்கள் ஆகும். இவற்றையெல்லாம் ஆய்வு செய்த வடமாநில நிறுவனம், ஒட்டுமொத்த இந்தியாவின் தலைசிறந்த முதல்வராகவும், நம்பர் ஒன் முதல்வராகவும் மு.க.ஸ்டாலின் இருக்கிறார் என அதிகாரப்பூர்வமாக சமீபத்தில் அறிவிப்பு வெளியிட்டது. அதை, மெய்ப்பிக்கும் வகையில் முதல்வரின் இத்திட்டம், அவரது சாதனை திட்டங்களில் மற்றொரு மணிமகுடமாக அமைந்துள்ளது.

முரசொலி

20-Dec-2021

தமிழ்த்தாய் வாழ்த்தும் தமிழ்நாடு முதலமைச்சரும்!

சிறப்புத் தலையங்கம்

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே – உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல் மறந்து
வாழ்த்துதுமே வாழ்த்துதுமே வாழ்த்துதுமே!

– **மனோன்மணீயம்** பெ. சுந்தரனார் (1855–1897) எழுதிய பாடல்.

1891 ஆம் ஆண்டு எழுதிய பாடல் இது. இந்தப் பாடலைத் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக அரை நூற்றாண்டுக்கு முன் தமிழ்நாடு அரசால் அறிவிக்க வைத்து தமிழர் நெஞ்சமெல்லாம் நிறைந்து நின்றார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அந்தப் பாடலை தமிழ்நாட்டு மாநிலப் பாடலாக அறிவித்திருப்பதன் மூலமாக தமிழ் வாழும் காலமெல்லாம் நின்று நிலை பெற இருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!

தமிழ்த்தாயை வாழ்த்துவது என்பது ஒரு சடங்கு – சம்பிரதாயமாக அல்ல உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் செய்யப்பட வேண்டியது என்று நினைத்து இந்த அரசாணையை வெளியிட்டு இருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இந்த அரசாணை வெளியாவதற்கு முன்னதாக இன்னொரு அரசாணையை முதலமைச்சர் வெளியிட்டார்.

தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை இசைத்தட்டு மூலமாக ஒலிப்பதை விட – உரிய பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு பாட வேண்டும் என்பதுதான் அந்த உத்தரவு. இதன் மூலமாக தமிழ்த்தாய் வாழ்த்து மாணவர்கள், இளைஞர்கள் நெஞ்சமெல்லாம் குடியேறப்போகிறது. இப்போது மாநில மொழிப்பாடலாக அறிவித்திருப்பதன் மூலமாக மாபெரும் மகுடம் சூட்டப்பட்டுள்ளது.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தை உருவாக்கிய தமிழ்வேள் **உமாமகேசுவரனார்** (நீதிக்கட்சியை தஞ்சை மாவட்டத்தில் வளர்த்த தீரர்கள் இருவரில் ஒருவர் இவர்! மற்றொருவர்தான் சர் ஏ.டி. பன்னீர் செல்வம்) கண்ட கனவுதான் இது. கரந்தை தமிழ்ச் சங்க விழாக்களிலும், அதை ஒட்டி உருவான தமிழ் அமைப்புகளிலும் இப்பாடல் தமிழ்த்தாய் வாழ்த்தாகப் பாடப்பட்டது. தமிழகப் புலவர் குழுவும் இதனை வலியுறுத்தியது. இதனைத்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் வழி மொழிந்தார்கள்.

சிலம்புச் செல்வர் **ம.பொ.சிவஞானம்** அவர்கள் அப்போது வெளியிட்ட அறிக்கையில், "**'நீராரும் கடலுடுத்த' என்று தொடங்கும் பாடல் அரசு விழாக்களிலும், அமைச்சர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளிலும் பாடப்பட வேண்டுமென்று கலைஞர் கொடுத்த அறிவிப்பு தமிழ் மொழிப் பற்றுடையவர் அனைவருக்கும் கரும்பாக இனிக்கிறது**" என்றார்.

இலக்கிய மொழிகள் அறிஞர் டாக்டர் **மு.வரதராசனார்** வெளியிட்ட அறிக்கையில், "**நாடும் மொழியும் ஒருங்கே போற்றப்படும் சிறப்புக்குரிய அந்தப் பாடல் தமிழக மக்கள் ஏற்கத்தக்க வாழ்த்துப் பாடல்**" என்று வழி மொழிந்தார்.

பன்மொழிப்புலவர் **கா.அப்பாத்துரையார்** வெளியிட்ட அறிக்கையில், "**தமிழ் இனத்தின் கடவுள் வணக்கப் பாடலாக பேராசிரியர் சுந்தரனாரின் மனோன்மணீய வணக்கப் பாடலையே பாட வேண்டுமென்ற கருத்து பல ஆண்டுகளுக்கு முன்பே தமிழகப் புலவர் குழுவில் தீர்மானமாக வந்தது ஆகும். அந்த வாழ்த்துப் பாடலை தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள் என்றால் அது அவர் கலைப்பண்புக்கு தமிழ்ப்பண்புக்கு சிறந்ததாகும்**" என்று பட்டயம் போட்டுத் தந்தார். அவர்கள் எல்லாம் சேர்ந்து இன்றைய முதலமைச்சரை வாழ்த்துவார்கள்!

இதனை முழுமையாகப் பாட வேண்டும் என்று சிலர் கோரிக்கை வைக்கிறார்கள். அவர்களுக்கு முழுப்பாடல் தெரியுமா எனத் தெரியவில்லை.

"பல்லுயிரும் பல உலகும் படைத்தளித்துத் துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன் உதிரத்து உதித்தெழுந்தே ஒன்று பல ஆயிடினும்
ஆரியம்போல் உலக வழக்கு அழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!"

– என்பதைக் ஒரு மொழியை வாழ்த்தும் பாடலில் பிறமொழி பழிப்பு வேண்டாம் என்ற நெறிப்படி அவ்வரிகள் நீக்கப்பட்டதாக அப்போதே விளக்கம் அளிக்கப்பட்டது. முழுப்பாடலும் சுந்தரனாரின் சிந்தனையை மொத்தமாகச் சொல்லும்.

மனோன்மணீயம் நாடகக் காப்பியம் 1891இல் வெளியானது. தமிழ் எழுச்சிக்கு அடித்தளம் அமைத்தது இந்தப் பாடல்!

1892 ஆம் ஆண்டு திருவனந்தபுரம் வந்த விவேகானந்தர், சுந்தரனாரைச் சந்தித்து பேசி இருக்கிறார். சுந்தரனாரின் வீட்டில் விருந்துண்டுள்ளார் விவேகானந்தர். அப்படி வந்தபோது, '**உங்கள் கோத்திரம் என்ன?**' என்று கேட்டுள்ளார் விவேகானந்தர். சுந்தரனார் எழுதுகிறார்: "**வேறு ஒரு தினமாகில் வினாவினைக் கேட்ட நான் வெகுண்டிருப்பேன். உடனே விருந்துக்கு வந்த அந்த உயர்ந்த நன்மதிப்பு நான் மெல்லிய குரலில், 'எனக்கும் கோத்திரத்திற்கும் சம்பந்தம் ஒன்றும் கிடையாது. தன்மானம் காக்கும் தென்னாட்டில் பிறந்த திராவிட இனத்தைச் சேர்ந்தவன் நான்' என ஆத்திரமின்றி கோத்திரக் கேள்விக்கு விடையளித்தேன்**" என்று தனது நாட்குறிப்பில் எழுதியிருக்கிறார். (மனோன்மணீயம் சுந்தரனார், [illegible], சாகித்ய அகாதமி, பக்கம் 116)

பெ.சுந்தரனார் எழுதிய மனோன்மணீயம் நாடகக் காப்பியத்தில் நூல் பாயிரத்தில் உள்ள பாடல் இது. அதற்கு அவர் 'தமிழ்த் தெய்வ வணக்கம்' என்று தான் தலைப்பிட்டுள்ளார்.

எனவே, இது தமிழ் மொழி – தமிழ் இன – தமிழ்நாட்டு உரிமை வேட்கை கொண்ட ஒருவரால் எழுதப்பட்டு இன்றுவரைக் கொண்ட முதலமைச்சரால் வழிமொழியப்பட்டுள்ளது.

DECCAN Chronicle

21-Dec-2021

'Tamil Thaai Vaazthu' has constitutional ring

Sanjay Pinto

Within the four walls of a Constitution that is federal in structure and unitary in spirit, can States have their own anthems? This contentious question has surfaced again with the Tamil Nadu government issuing an order making 'Tamil Thaai Vaazthu' the state anthem and its singing compulsory at the start of all functions in educational institutions and government offices.

The GO was presumably precipitated by two recent observations by the Madurai Bench of the Madras high court in a quash petition under Section 482 of the Criminal Procedure Code in Kan Illango Vs State of Tamil Nadu. First, that 'Tamil Thaai Vaazthu' "is a prayer song and not an anthem". Secondly, that there is "no statutory or executive order requiring the attendees to stand up" during its rendition. That twin criteria is now met.

Whether it's for the national anthem, or for a prayer, or to greet elders, standing up is a sign of respect, not just in our country, but universally. It constitutes our intrinsic cultural moorings. While respecting the national anthem and national flag is a fundamental duty under Article 51-A (a) of the Constitution, playing 'Tamil Thaai Vaazthu' which celebrates one of the oldest languages, and the need to rise respectfully, also has a Constitutional prescription in Article 51-A(f) "to value and preserve the rich heritage of our composite culture."

I find nothing objectionable in the GO as it exempts the disabled from rising and only insists on attendees standing up during official functions. This was the main bone of contention in an earlier Union home ministry order that the national anthem should be played in theatres and "all present in the hall shall be obliged to stand up", which was suitably altered by the Supreme Court in Shyam Narayan Chouksey Vs Union of India (2018)

The fuss over standing up respectfully for just 55 seconds is inexplicable. Three and a half decades ago, upholding the 'right to conscience' enshrined in Article 25 of the Constitution in Bijoe Emanuel Vs State of Kerala (1986) the Supreme Court had also ruled that the right to free speech under Article 19(1)(a) includes the right to be silent. "Standing up respectfully when the national anthem is sung but not singing oneself clearly does not either prevent the singing of the national anthem or cause disturbance to an assembly engaged in such singing so as to constitute the offence mentioned in Section 3 of the Preention of Insults to National Honour Act." Ditto with the Tamil invocation.

We take pride in our unity in diversity. Celebrating diversity does not run counter to our national integration or sovereignty. Here, it's not as if the state anthem will be sung instead of the national anthem. Tamil Thaai Vaazthu will be the invocation song and the national anthem will be sung at the end of events. Perfect harmony. In the landmark decision of S.R.Bommai Vs Union of India (1994) the Apex Court minced no words. "The fact that under the scheme of our Constitution, greater power is conferred upon the Centre vis-a-vis the States does not mean that States are mere appendages of the Centre. Within the sphere allotted to them, States are supreme."

If the national anthem stirs up patriotic fervour, the words 'Neerarum Kadalutha' from the poem by Tamil scholar Dr Sundaram Pillai would evoke nostalgia, in most of us who were born and brought up in Tamil Nadu. For that matter, doesn't every school have its own anthem that is played at assemblies and that gives alumni goosebumps at reunion events?

Linguistic pride must not be misconstrued as chauvinism. Several other states have their own anthems. Karnataka, for instance, had reportedly declared 'Jaya Bharatha Jananiya Tanujaathe' as its state anthem in 2004. Interestingly, as this song has five and nine minute versions, there were appeals from some quarters to trim it to 150 seconds as senior citizens found it difficult to stand for the entire duration. Odia has its much-revered folk song 'Rangabati', reportedly played at important events, not limited to marriages and international cricket matches. It enjoys such a cult status that an attempted remix performance a few years ago faced protests and had to be dropped.

The GO on 'Tamil Thaai Vaazthu' ticks all the legal boxes. A democratically elected government is well within its right to pass an executive order, or take the legislative route, if it so desires. That said, let us now turn our attention to more pressing tasks like a campaign on wearing masks to keep Omicron at bay. Let's stand up. And also, not let our guard down.

(The writer is an advocate at the Madras high court, columnist & author)

தினகரன்
ஒரு புதிய அனுபவம்
25-Dec-2021

முன்மாதிரி திட்டம்

தமிழகத்தில் அந்த காலத்தில் மஞ்சள் பைகள் தான் பிரபலம். கிராமங்களில் தொடங்கி, நகரங்கள் வரை மஞ்சள் பைகள் இல்லாத ஊர்களே கிடையாது. நாகரீகம் வளர, வளர மஞ்சள் பைகளை மக்கள் உதாசீனப்படுத்த ஆரம்பித்தனர். நகரங்களில் பிளாஸ்டிக் பைகள் ஆக்கிரமித்துக் கொண்டன. இதனால் மஞ்சள் பைகளை மக்கள் ஒதுக்க ஆரம்பித்து விட்டனர்.

ஜவுளிக்கடைகளில்தான் இந்த பைகள் மிகப் பிரபலமாக இருந்தன. துணி வாங்கச் சென்றால் மங்களகரமான மஞ்சள் பைகளில்தான் துணிகளை தருவார்கள். அந்த பை, பல விதங்களிலும் மக்களுக்கு உதவியாக இருந்தன. பள்ளிக்குழந்தைகள் இதில் புத்தகங்கள், சிலேட்டுகள், நோட்டுகளை வைத்துக்கொண்டு சென்ற காலம் உண்டு. வீட்டில் பெரியவர்கள் ஜாதகம் உள்ளிட்டவற்றை பாதுகாத்து வைக்க, மஞ்சள் பைகளைத்தான் பயன்படுத்தினர். புதுத்துணி எடுத்தாலும் அதை மஞ்சள் பைகளில்தான் வைப்பார்கள். இப்படி அன்றாட வாழ்க்கையில் முக்கியமான அங்கமாக மஞ்சள் பைகள் இருந்தன.

இப்படிப்பட்ட மஞ்சள் பைகள் காலப்போக்கில் தடம் மாறிப்போய் விட்டன. பிளாஸ்டிக் பைகளை ஜவுளிக்கடைகள் கையில் எடுத்ததால் மக்களிடையே மஞ்சள் பை புழக்கம் குறைந்து விட்டது. நகைக்கடை உள்ளிட்டவற்றில் மட்டுமே மஞ்சள் பைகள் ஓரளவுக்கு புழக்கத்தில் இருந்தன. தற்போது அங்கும்கூட பிளாஸ்டிக் பைகள் வந்துவிட்டன.

பிளாஸ்டிக் பை பயன்பாடு அதிகமாகி விட்டதால், அதன்மூலம் எழும் சுற்றுச்சூழல் பேராபத்தையும், அவலத்தையும், சிரமத்தையும் மக்கள் உணரத் துவங்கிவிட்டனர். அரசும்கூட பிளாஸ்டிக் பைகளுக்கு படிப்படியாக தடை விதித்து வந்தது. பிளாஸ்டிக் பைகளின் உபயோகத்தை எப்படியெல்லாம் குறைக்கலாம் என பலரும் யோசிக்க ஆரம்பித்து விட்டனர். இதன் விளைவாக தற்போது மக்களிடையே மீண்டும் மஞ்சள் பை கலாசாரம் எட்டிப் பார்க்க ஆரம்பித்துள்ளது. அதன் எதிரொலியாகத்தான் தமிழக அரசும் தற்போது மஞ்சப்பை என்ற இயக்கத்தை துவக்கியுள்ளது.

இது ஒரு முன்மாதிரியான திட்டம். சுற்றுச்சூழல் ஆபத்தில் இருந்து மக்களை காக்கும் மகத்தான திட்டம். ஜவுளிப்பொருட்களை மீண்டும் மஞ்சள் பையில் போட்டுக்கொடுக்க ஆரம்பித்தாலே பாதி பிரச்னை தீர்ந்துவிடும். மக்கள் முழுமையாக பிளாஸ்டிக் பைகளை கைவிட்டு, மீண்டும் மஞ்சள் பைகளுக்கு தானாக மாறிவிடுவார்கள். திருமண விழாக்கள், பிறந்த நாள் விழாக்கள் உள்ளிட்ட வைபவங்களில், மீண்டும் மஞ்சள் பைகளில் பொருட்களைத் தரும் வழக்கம் துவங்க வேண்டும்.

இது தொடர்ந்தால், பிளாஸ்டிக் பைகளுக்கு 'குட்பை' சொல்லிவிடலாம். சுற்றுச்சூழல் பாதிக்காத வகையில், இளைய தலைமுறையினருக்கு, ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கிக் கொடுக்கலாம். மஞ்சள் பை பயன்பாட்டை, படிப்படியாக அனைவரும் பின்பற்றும்போது, துணிப்பை தயாரிப்பாளர்களுக்கு மீண்டும் மறுவாழ்வு கிடைக்கும். பிளாஸ்டிக்கால் ஏற்படும் பேராபத்து விலகும். மக்கள் வாழ்வில் மீண்டும் ஆரோக்கியம் மலரும்.

முரசொலி

26-Dec-2021

ஒன்றிய அரசின் நல் ஆளுகை மாநிலங்களுக்கான பட்டியலில் - இந்திய அளவில்

நீதித்துறை - பொதுமக்கள் பாதுகாப்பில்

தமிழ்நாட்டிற்கு முதலிடம்!

நல் ஆளுகை மாநிலங்களுக்கான பட்டியலை ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா வெளியிட்டார்!

சென்னை, டிச. 26 –

புதுடெல்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் நல் ஆளுகைக்கான மாநிலங்களின் பட்டியல் ஒன்றிய அரசால் வெளியிடப் பட்டுள்ளது.

அதில் நீதித்துறை, பொது மக்கள் பாதுகாப்பில் இந்திய அளவில் தமிழ் நாட்டிற்கு முதலிடம் என்று தெரிவிக்கப் பட்டது.

ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா தேசிய நல்லாட்சி தினத்தையொட்டி வெளியிட்ட நல் ஆளுகைக்கான மாநிலப் பட்டியலில் இந்தத் தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர் களின் நிர்வாகத் திறமைக்குக் கிடைத்த இன்னொரு மணிமகுடம் என்றே இதை குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டிற்கு முதலிடம் குறித்தும் அது தொடர்பான செய்தியும் வருமாறு:

ஒன்றிய நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத் துறை தயாரித்த 2021-ஆம் ஆண்டு நல்லாட்சிக் குறியீட்டில், நீதி மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது.

நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொது மக்கள் குறைதீர்ப்புத் துறை தயாரித்த 2021-ஆம் ஆண்டு நல்லாட்சிக் குறியீட்டை, நல்லாட்சி தினத்தையொட்டி புதுடெல்லி விஞ்ஞான் பவனில் ஒன்றிய உள்துறை மற்றும் கூட்டுறவு அமைச்சர் அமித்ஷா நேற்று (25.12.2021) வெளியிட்டார்.

தமிழக முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பதவி ஏற்ற நாளிலிருந்து அதிகாலை முதல் நள்ளிரவு வரை சுற்றிச் சுழன்று மக்கள் பணியாற்றி வருகிறார்.

அனைத்து தரப்பு மக்களும் முதலமைச்சரின் பணி குறித்து உயர்வாகப் பாராட்டி வருகிறார்கள். பொதுமக்களிடம் அவரது அணுகுமுறையானது பல்வேறு கட்சித் தலைவர்கள் மட்டுமின்றி, சமுதாயத் தலைவர்களையும் கவரக்கூடியதாக இருந்து வருகிறது.

பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் மீது உடனடியாகத் தீர்வு கிடைத்து வருகிறது என்பதோடு, இந்த ஆட்சியில், மனு அளித்தால் நிச்சயம் தீர்வு கிடைக்கும் என்கிற நம்பிக்கையும் பொது மக்களிடையே எழுந்துள்ளது.

தங்களை பாதுகாப்பதில் இந்த அரசு அனைத்து வகையிலும் செயல்பட்டு வருவதை தமிழக மக்கள் நன்கு உணர்ந் துள்ளனர். அதற்கு சாட்சியம் கூறும் வகையில், தற்போது ஒன்றிய அரசு வெளி யிட்ட அறிக்கையும் உறுதி செய்கிறது.

அதேபோல் நீதித்துறையும் தமிழகத் தில் சிறந்து விளங்குகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக ஒன்றிய அரசின் அறிக்கை விளங்குகிறது.

உள்துறை அமைச்சர் அமித்ஷா வெளி யிட்ட நல்லாட்சி குறியீடு குறித்து அறிக்கை வருமாறு:-

நல்லாட்சி குறியீடு பத்து துறைகள் மற்றும் 58 குறிகாட்டிகளை உள்ளடக் கியது ஆகும்.

அவை: 1)விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகள், 2) வணிகம் தொழில்கள், 3) மனித வள மேம்பாடு, 4) பொது சுகாதாரம், 5.) பொது உள்கட்ட மைப்பு மற்றும் பயன்பாடுகள், 6)பொருளா தார நிர்வாகம், 7) சமூக நலன் மேம்பாடு, 8) நீதித்துறை மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு, 9) சுற்றுச்சூழல் மற்றும் 10) குடிமக்களை மையப் படுத்திய ஆளுகை.

இதில் நீதி மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புப் பிரிவில் ஏ குழுவில் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் பிடித்துள்ளது.

மற்ற பிரிவுகளின் முதலிடம் பிடித்த மாநிலங்கள்: விவசாயம் மற்றும் அதனு டன் தொடர்புடைய துறைகள் – ஆந்திரப் பிரதேசம்; வணிகம் – தொழில்கள் – தெலங்கானா; மனித வள மேம்பாடு – பஞ்சாப்; பொது சுகாதாரம் – கேரளா; பொது உள்கட்டமைப்பு மற்றும் பயன்பாடு கள் – கோவா; பொருளாதார நிர்வாகம் – குஜராத்; சமூக நலன் – மேம்பாடு – தெலங் கானா; சுற்றுச்சூழல் – கேரளா; குடிமக்களை மையப்படுத்திய ஆளுகை – ஹரியானா.

மேற்கண்டவாறு உள்துறை அமைச்சர் அமித்ஷா நல்லாட்சிக் குறியீட்டை வெளி யிட்டுப் பேசினார்.

இந்த நிகழ்வில் பேசிய மத்தியப் பணியாளர், ஓய்வூதியர் குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதியத் துறை அமைச்சர் ஜிதேந்திர சிங் பங்கேற்றார்.

காரில் இருந்து இறங்கி சாலையில் நின்று கொண்டிருந்த

தம்பதியுடன் புகைப்படம் எடுத்துக் கொண்ட முதல்வர்!

பொதுமக்களிடையே பெரும் வரவேற்பு!

சென்னை, டிச.26–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று கோடம்பாக்கத்திலிருந்து அண்ணா அறிவாலயம் நோக்கி காரில் சென்றுக் கொண்டிருந்தார். அப்போது வயதான தம்பதி, தன்னைப் பார்த்து கை அசைத்ததை கவனித்த முதல்வர், காரை நிறுத்தி இறங்கி அந்த தம்பதியருடன் புகைப்படமும் எடுத்துக் கொண்டார். இச் சம்பவம் பொது மக்களிடையே பெரும் வரவேற்பு பெற்றுள்ளது.

இதுபற்றிய விபரம் வருமாறு :–

சென்னையில் காரில் சென்று கொண்டிருந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை சாலையில் நின்று கொண்டிருந்த வயதான தம்பதி கள் கை அசைத்து வணக்கம் தெரிவித்தனர்.

சென்னை கோடம்பாக்கத்திலிருந்து அண்ணா அறிவாலயம் நோக்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காரில் வந்து கொண்டிருந்தார். அப்போது சாலை யோரத்தில் நின்று கொண்டிருந்த வயதான தம்பதி முதலமைச்சருக்கு கை அசைத்து வணக்கம் செலுத்தினர். இதனைக் கவனித்த முதல்வர் அவர்கள், தனது காரை நிறுத்தி கீழே இறங்கி வயதான தம்பதிகளுக்கு பதில் வணக்கம் தெரிவித்தார்.

காரை விட்டு கீழே இறங்கி பதில் வணக்கம் கூறிய முதலமைச்சர்

மேலும், வயதான தம்பதிகள் விடுத்த கோரிக்கையினையேற்று அவர்களுடன் புகைப்படமும் எடுத்துக் கொண்டார். இதனால் அத்தம்பதியினர் மகிழ்ச்சி அடைந்தனர்.

வயதான தம்பதியினரின் கோரிக் கையை ஏற்று காரிலிருந்து கீழே இறங்கி அவர்களுடன் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் புகைப் படம் எடுத்துக் கொண்டது பொது மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

முரசொலி

28-Dec-2021

பத்திரிக்கையாளர்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்த

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!!

சென்னை பத்திரிக்கையாளர் சங்க பொதுக்குழுவில் தீர்மானம்!

சென்னை, டிச.28-

சென்னை பத்திரிகையாளர் யூனியனின் (MUJ) 67 ஆம் ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் ரிட்டி தெருவில் உள்ள சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில், 2021 ஆம் ஆண்டுக்கான வேலை அறிக்கை மற்றும் வரவு செலவு அறிக்கையை பொதுச் செயலாளர் எல்.ஆர்.சங்கர் தாக்கல் செய்தார். அவை பொதுக்குழுவில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன. அடுத்து, ஐந்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முதலாவதாக, தமிழ்நாட்டின் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றவுடன், "செய்தித்தாள், காட்சி, ஒலி ஊடகங்களில் பணியாற்றுவோர், முன்களப் பணியாளர்களாக கருதப்படுவர். முன்களப் பணியாளர்களுக்கான உரிமைகளும் சலுகைகளும் உரிய முறையில் வழங்கப்படும்" என அறிவித்தார். அவரது இந்த அறிவிப்புக்கு சென்னைப் பத்திரிகையாளர் யூனியன் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறது.

கொரோனா தொற்றால் உயிரிழந்த பத்திரிகை மற்றும் ஊடகவியலாளர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்கப்படும். பத்திரிகை மற்றும் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு ஊக்கத்தொகை ரூ.3 ஆயிரத்தில் இருந்து ரூ.5 ஆயிரமாக உயர்த்தப்படும் என்ற முதலமைச்சரின் அறிவிப்புகள், ஊடகத் துறையினரின் கொரோனா கால துயரங்களை குறைத்து நம்பிக்கை அளிக்கக் கூடியதாக அமைந்தது.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில், அரசு அங்கீகார அட்டை வைத்திருக்கும் பத்திரிகையாளர்களின் குடும்பங்கள் சேர்க்கப்பட்டதுடன், இந்தத் திட்டத்தில் பயன் பெறுவதற்கான வருமான உச்சவரம்பில் தமிழக அரசு விலக்கு அளித்துள்ளது. கடந்த ஆட்சியில் பத்திரிகையாளர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகள் அனைத்தையும் திரும்பப் பெற்றது என ஊடகத் துறைக்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், உச்ச பதவிகளை அடைந்த போதும் தன்னைப் பத்திரிகையாளர் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்பட்டவர். அவருடைய தொடர்ச்சியாக, அவர் வழியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எடுத்திருக்கும் இந்த நடவடிக்கைகளுக்கு பொதுக்குழு நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் திட்டங்களை ஒருங்கிணைப்பதுடன், நலத்திட்ட உதவிகளையும் வழங்கும் வகையில் "பத்திரிகையாளர் நல வாரியம்" உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த வாரியத்தின் அலுவல்சாரா உறுப்பினர் குழுவிலும், பத்திரிகையாளர் ஓய்வூதிய பரிசீலனைக் குழுவிலும் சென்னைப் பத்திரிகையாளர் யூனியன் பிரதிநிதிகளை இடம்பெறச் செய்ய வேண்டும் என பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

ஓய்வூதியம் கேட்டு ஓய்வுபெற்ற பத்திரிகையாளர் பலர் விண்ணப்பித்துள்ளனர்.. பணிக்காலத்தில் உயிரிழந்த பத்திரிகையாளர்களின் குடும்பங்கள் பல நிவாரணத் தொகை கோரி விண்ணப்பித்துள்ளனர். இவற்றை எல்லாம் தமிழக அரசு விரைவாக பரிசீலித்து தீர்வுகாண வேண்டும் என பொதுக் குழு கேட்டுக்கொள்கிறது.

அடுத்து, ஊடகத் துறையில் பணியாற்றும் பெண்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அவர்களின் பணியிடப் பாதுகாப்பு மற்றும் பாலியல் சீண்டல்களில் இருந்து பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப் படுத்தும் வகையில் சென்னை பத்திரிகையாளர் யூனியன் சார்பில் 'உள்ளக புகார் குழு' அமைக்கப்படும். ஐந்து பேர் கொண்ட இந்தக் குழுவில், பெண் பத்திரிகையாளர் இருவர், பெண்ணிய செயல்பாட்டாளர் ஒருவர், ஆண் பத்திரிகையாளர் ஒருவர், ஆண் வழக்குரைஞர் ஒருவர் இடம்பெறுவர் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சென்னை பத்திரிகையாளர் யூனியன் நிர்வாகிகள் தேர்தலை உடனடியாக நடத்துவது என்றும், இதற்கான பணிகளை தேர்தல் அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இத்தகவலை சென்னைப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் வேளுதர், பொதுச் செயலாளர் எல்.ஆர். சங்கர், பொருளாளர் வி. மணிமாறன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

தினகரன்

28-Dec-2021

தந்திரம் பலிக்காது

தமிழகத்தில் அனைத்து தரப்பு மக்களுக்கும் பயன்படும் திட்டம் சுற்றுச்சூழலை பாதுகாப்பது. தொழில்நுட்பத்தில் அடுத்த கட்ட நகர்வு. மருத்துவத்தில் கட்டமைப்பை மேம்படுத்தி வருவது. விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக புதுப்புது திட்டங்களை அறிவிப்பது உள்ளிட்ட பல்வேறு விஷயங்களில் தமிழக அரசு மிக சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

கடந்த கால ஆட்சியில் மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் புறக்கணிக்கப்பட்டது. முக்கியமாக, போராட்டங்கள் நடத்தி தங்களின் உரிமைகளை பெற வேண்டிய அவல நிலை இருந்தது. தற்போது, தமிழக அரசு மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் வகையில், அவர்களை முன்னேற்ற பாதைக்கு அழைத்து செல்லும் பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து வருகிறது. தமிழகம் வளர்ச்சியை நோக்கி பயணிக்க துவங்கியுள்ளது. ஆரோக்கியம் சார்ந்த திட்டங்களையும் தமிழக அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. இது மக்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

"மீண்டும் மஞ்சப்பை திட்டம்" மூலம் சுற்றுச்சூழலுக்கு தமிழக அரசு முக்கியத்துவம் கொடுத்துள்ளது. மக்களின் முழு ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே இத்திட்டத்தில் வெற்றி பெற முடியும்.

சமீபகாலமாக, தமிழகத்தில் கருத்து சுதந்திரம் என்ற பெயரில் சிலர் வன்முறையை தூண்டும் வகையில் பேசி வருகின்றனர். இவர்கள் மீது ஆரம்பத்திலேயே அதிரடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் விரும்புகின்றனர். கடந்த கால ஆட்சியில் நடந்த அவலங்களை அவர்கள்கண்டு கொள்ளாமல் மவுனமாக இருந்தது ஏன்?. தற்போது தமிழக அரசின் செயல்பாடு குறித்து எவ்வித குறையும் இவர்களால் சொல்ல முடியவில்லை. வேறு வழியின்றி சமூகத்தில் வன்முறையை ஏற்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்களில் பேசி வருகின்றனர். இவர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டியது கட்டாயம்.

தொழில்வளம், மருத்துவம், வேளாண்மை, கல்வி, அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல துறைகளில் தமிழகம் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழகம் முன்னேறி வருவதை பொறுத்து கொள்ள முடியாமல், கருத்து சுதந்திரம் என்ற பெயரில் வன்முறையை தூண்ட சிலர் திட்டமிட்டுள்ளனர். மக்களிடம் குழப்பத்தை ஏற்படுத்தவும் முயற்சிகள் நடந்து வருகிறது. தமிழகத்தின் வளர்ச்சியை தடுக்க வேண்டும் என்பது தான் இவர்களின் குறிக்கோள்.

முக்கியமாக, கருத்து சுதந்திரம் என்ற பெயரில் சிலர், ஆத்திரம் அடைய செய்யும் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். அமைதியாக உள்ள தமிழகத்தில் பிரச்னையை ஏற்படுத்தி அரசியல் செய்ய விரும்புகின்றனர். இவர்களின் எண்ணம் ஒரு போதும் நிறைவேறாது. கருத்து சுதந்திரத்திற்கு ஒரு எல்லை உண்டு. தரம் தாழ்ந்தும், அடுக்கடுக்கான பொய்களை அள்ளி வீசியும், மக்களை பிளவு படுத்தி மோதல்களை உருவாக்கும் வகையில் பேசுவது கருத்து சுதந்திரம் கிடையாது. மக்களுக்கு இவர்களின் உண்மையான முகம் தெரிந்து விட்டது. ஆகையால் தான், வெறுப்பு பேச்சுகளை விதைக்க துவங்கியுள்ளனர். இவர்களின் அரசியல் நாடகத்தை மக்கள் உன்னிப்பாக கவனித்து வருகின்றனர். தமிழக மக்களிடம் இவர்களின் தந்திரம் ஒரு போதும் பலிக்காது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
28-Dec-2021

நாவலருக்கு சிலை எடுத்த மு.க.ஸ்டாலின்!

“மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு” என்று அரசியல் நாகரிகத்துக்கு ஒரு நல்ல அர்த்தத்தை வழங்கியவர், மறைந்த பேரறிஞர் அண்ணா. “அதைத்தான் நானும் பின்பற்றுகிறேன்” என்ற வகையில், தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், மறைந்த நாவலர் நெடுஞ்செழியனின் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி, சென்னை சேப்பாக்கம் புதிய அரசு விருந்தினர் மாளிகையில் அவரது உருவச் சிலையை திறந்துவைத்திருக்கிறார்.

நாவலர் நெடுஞ்செழியன் தன் அரசியல் வாழ்க்கையை, முதலில் திராவிடர் கழகத்தில் தொடங்கி, பிறகு 1949-ம் ஆண்டு தி.மு.க.வை அண்ணா தொடங்கிய நேரத்தில், தி.மு.க.வில் வலிமைமிகு தூண்களில் ஒருவராகவும் விளங்கினார். 1977-ம் ஆண்டு அ.தி.மு.க.வில் தன்னை இணைத்துக்கொண்ட நாவலர் நெடுஞ்செழியன், 2000-ம் ஆண்டு ஜனவரி 12-ந்தேதி

காலமானார். அந்த நேரம் அவர் அ.தி.மு.க. தலைவராகவே இயற்கை எய்தினார். ஆனால், அப்போது முதல்-அமைச்சராக இருந்த மறைந்த கலைஞர் கருணாநிதி, உடனடியாக நேரில்சென்று அஞ்சலி செலுத்தி, மாற்று முகாமில் நாவலர் நெடுஞ்செழியன் இருந்தாலும், தன் கொள்கை சகோதரர் என்ற முறையில் அவருக்கு இறுதி வணக்கம் செலுத்தினார்.

கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரின்போது, நாவலர் நெடுஞ்செழியனுக்கு சென்னை சேப்பாக்கத்திலுள்ள அரசு விருந்தினர் மாளிகையில் சிலை அமைக்கப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. மிக குறுகிய காலத்தில் சொன்னதை நிறைவேற்றும் வகையில், நாவலருக்கு சிலை அமைத்து மு.க.ஸ்டாலின் திறந்துவைத்து மங்கா புகழ் சேர்த்துள்ளார்.

“நடமாடும் பல்கலைக்கழகம்” என்று போற்றப்படும் நாவலர் நெடுஞ்செழியனுக்கு, சென்னை பல்கலைக்கழகத்தின் பின்புறம் உள்ள அரசு விருந்தினர் மாளிகையில் சிலை அமைக்கப்பட்டது, அவருக்கு புகழ் சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

‘நாராயணசாமி’ என்ற தன் இயற்பெயரை, தமிழ் மீது கொண்ட தீராப்பற்றினால் ‘நெடுஞ்செழியன்’ என்று மாற்றிக்கொண்ட அவருக்கு நாவலர் என்று பட்டம் சூட்டியவர் பேரறிஞர் அண்ணா. நாவலர் நெடுஞ்செழியன் தன் பேச்சிலும், எழுத்திலும் தனக்கென தனி பாணியை அமைத்துக்கொண்டு, தமிழ் நெஞ்சங்களை வெகுவாக கவர்ந்தார். தலைசிறந்த பகுத்தறிவுவாதிகளில் ஒருவர்.

“எனக்கே பாடம் கற்றுத்தரும் அளவுக்கு தகுதிவாய்ந்தவர் நாவலர்” என்று தந்தை பெரியாராலும், 1956-ம் ஆண்டு திருச்சியில் நடந்த தி.மு.க.வின் 2-வது மாநில மாநாட்டுக்கு தலைமை வகித்த நாவலரை, “தம்பி வா.. தலைமையேற்க வா.. உன் ஆணைக்கு கட்டுப்பட்டு நடக்கிறோம்” என்று பேரறிஞர் அண்ணாவாலும், “எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு என்று நாவலர் முழங்கும்போது, நாடே முழங்குவதுபோல எதிரொலிக்கும். நாவலருடைய தமிழும், அதை எடுத்தாளுகின்ற அவருடைய திறனும், ஒரே நாளில் 20 அல்லது 30 நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கின்ற உள்ள உறுதியும், உடல் வலிவும், தி.மு.க.வை கட்டிக்காத்த காரணங்களில் ஒன்று என்பதை யாராவது மறந்துவிடுவார்களானால், அவர்கள் நன்றி மறந்தவர்கள் ஆவார்கள்” என்று கலைஞர் கருணாநிதியாலும், “தனக்கென தனி பாணியை வகுத்துக்கொண்டு, பேச்சையும், எழுத்தையும் கையாளும் பெருந்தன்மையாளர் நாவலரின் எழுத்துக்களில் இதமான தென்றலை மட்டுமல்ல, எரிமலையின் வேகத்தையும் உணரலாம். அவர் பேச்சிலே புயலை மட்டுமல்ல, தமிழ் இலக்கியத்தின் பாங்கையும் உணரலாம்” என்று மறைந்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆராலும் புகழப்பட்டவர், நாவலர் நெடுஞ்செழியன்.

அத்தகைய நாவலர் மறைந்து ஏறத்தாழ 22 ஆண்டுகள் ஆகப்போகிற சூழ்நிலையில், அவரை உலகம் மறந்துவிட்டதோ? என்று ஏங்கிக்கொண்டிருந்த நேரத்தில், “நாங்கள் நாவலரை மறக்கவில்லை” என்று, நாவலர் நூற்றாண்டு நிறைவு விழாவை தமிழக அரசு சார்பில் கொண்டாடிய மு.க.ஸ்டாலினால் அவருக்கு சிலை அமைக்கப்பட்டுள்ளது. அவர் எழுதிய அனைத்து நூல்களும் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளது. காலப்பெட்டகம் போல நாவலர் நூற்றாண்டு நிறைவு மலரும் வெளியிடப்பட்டுள்ளது. மிகவும் போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்கும் உரியது. நாவலருக்கு புகழ் சேர்த்த மு.க.ஸ்டாலினுக்கு தமிழ்கூறும் நல்லுலகம் நன்றி தெரிவிக்கிறது.

முரசொலி

29-Dec-2021

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி! தமிழ்நாட்டில்

சமத்துவ அர்ச்சகர்கள் பயிற்சிப் பள்ளிகள் மறுமலர்ச்சி பெறுகின்றன!

அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்கள் சங்கத் தலைவர் வா.ரங்கநாதன் பாராட்டு!

சென்னை, டிச. 29–

மாபெரும் இறைப் பணிக்காக தமிழ்நாட்டில் உள்ள சமத்துவ அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள் மறுமலர்ச்சி பெறுகின்றன என்றும் தந்தை பெரியார் வழிவந்த கொள்கைக் குன்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றிகள் கோடி என்றும் அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்கள் சங்கம் சார்பில் அதன் தலைவர் வா.ரங்கநாதன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு–

கடந்த 2007 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது முதன்முதலில் அமைக்கப்பட்ட ஆறு அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளில் 207 அனைத்து சாதி அர்ச்சக மாணவர்கள் பயிற்சி பெற்றனர். அதன்பின் பயிற்சிப் பள்ளிகள் மூடப்பட்டு அ.தி.மு.க. அரசால் கைவிடப்பட்டன. இறைப் பணிகள் திட்டமிட்டு முடக்கப்பட்டன.

அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளுக்கு தற்போது மீண்டும் புத்துயிர்!

தந்தை பெரியாரின் கனவை நனவாக்கிய தலைவர் கலைஞர் வழியில் செயல்பட்டு வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு மற்றும் இந்து சமய ஆணையர், செயலர் ஆகியோர் தற்போது மீண்டும் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளுக்கு புத்துயிர் ஊட்டி சமத்துவ இறைப் பணிக்கு மாணவர்களைச் சேர அழைத்துள்ளனர்.

திருவண்ணாமலை அருணாசலேசுவரர் திருக்கோயில், மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருவரங்கம் அரங்கநாத சுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் ஆகிய ஆறு திருக்கோயில்களில் அர்ச்சகர் பயிற்சி பெற உணவு, தங்குமிடம், மாதம் 3000 உதவித் தொகையுடன் ஓராண்டு இலவசப் பயிற்சி, முடித்தவுடன் வேலை என இறைப் பணிக்கான அருமையான வாய்ப்பை வழங்கியுள்ளார்.

இவை தவிர, திருவண்ணாமலை அருணாசலேசுவரர் திருக்கோயில், மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்களில் ஓதுவார் பயிற்சிப் பள்ளிகளும், பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம் நாகநாத சுவாமி திருக்கோயில்களில் தவில் மற்றும் நாதஸ்வர பயிற்சிப் பள்ளியும், திருவில்லிபுத்தூர் கோட்டா ஆறுமுகசுவாமி திருக்கோயிலில் திவ்ய பிரபந்தப் பாடசாலையும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

கடந்த ஆட்சியில் முடக்கம்!

அனைத்துச் சாதியினரும் திருக்கோயில்களில் அர்ச்சகராக அனுமதிக்க வேண்டும் என்று முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இயற்றிய ஆணையை 2006–2011 அவரது ஆட்சிக் காலத்தில் அமல்படுத்தினார். உச்சநீதி மன்றத் தடை பெற்று எல்லோரும் இறைப் பணி செய்வதை முடக்கினார்கள், மதுரை சிவாச்சார்ய பிராமண சங்கத்தினர்.

கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் அர்ச்சகர் பயிற்சி பள்ளியில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் திருக்கோயில்களில் பணியமர்த்தப்படாமல் மிகவும் சிரமப்பட்டனர். அனைத்து பயிற்சிப் பள்ளிகளும் முடக்கப்பட்டன.

புதிதாக ஆட்சி அமைத்த தி.மு.க. அரசு அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் திட்டத்தின் கீழ் திருக்கோயில் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் பயின்று தேர்வு செய்யப்பட்ட 22 அர்ச்சகர்களுக்கு 14.08.2021 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மூலம் பணி நியமனம் வழங்கியது.

தமிழக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு!

இதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் உள்ள 6 அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள், 4 ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள், 3 தவில் மற்றும் நாதஸ்வர பயிற்சிப் பள்ளிகள், ஒரு திவ்ய பிரபந்தப் பாடசாலை என ஆக மொத்தம் 16 பயிற்சிப் பள்ளிகளுக்கு புத்துயிர் ஊட்டப்பட்டு சமத்துவ இறைப் பணிக்காக உதவித் தொகையுடன் மாணவர்கள் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

தி.மு.க. அரசின் இந்த சீரிய முயற்சியால், வருங்காலங்களில் தமிழகத்தில் இறைப்பணி வளர்ந்து தழைப்பதுடன், திருக்கோயில்களில் சமத்துவ அடிப்படையிலான ஆயிரக் கணக்கான வேலை வாய்ப்பும் வாழ்வாதாரமும் தமிழக இளைஞர்களுக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது. தி.மு.க. அரசால் தமிழக ஆன்மிக வரலாற்றில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது.

அனைத்து சாதியும் சமத்துவ இறைப் பணி என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க மறுமலர்ச்சிப் பணியால் அர்ச்சகர்கள், ஓதுவார்கள், பூசாரிகள், பட்டாச்சாரியார்கள், தவில் மற்றும் நாதஸ்வர கலைஞர்கள் போன்ற இறைப் பணியினர் வாழ்வில் ஒளியேற்றிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எங்கள் அர்ச்சகர் சங்கம் மற்றும் கோடானகோடி ஆன்மிகவாதிகள் சார்பில் நன்றிகள் கோடி. உங்கள் தொண்டறம் தொடரட்டும்!

இவ்வாறு வா.ரங்கநாதன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முரசொலி

29-Dec-2021

அரசுப் பணியாளர்கள் – ஆசிரியர்களுக்கு 14 சதவிகிதம் அகவிலைப்படியை உயர்த்தி அறிவித்த

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மனமார்ந்த நன்றி!

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் கு.தியாகராஜன் அறிக்கை!

சென்னை, டிச. 29-

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் கு.தியாகராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடந்த ஆட்சியில் அகவிலைப்படி நிறுத்தம் ஊக்க ஊதியம் நிறுத்தம் மற்றும் ஈட்டிய விடுப்பு சரண் செய்து பணம் பெறுவது நிறுத்தம் போன்ற பல்வேறு அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் அ.தி.மு.க. ஈடுபட்டது ஜாக்டோ-ஜியோ மூலமும், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் மூலமும் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்த பிறகும் எவ்வித உத்தரவையும் பிறப்பிக்கவில்லை. அப்போது எதிர்க்கட்சி தலைவராக இருந்த திமுக தலைவர் மதிப்பிற்குரிய மு.க. ஸ்டாலின் அவர்கள் தி.மு.க. ஆட்சி அமைந்ததும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் கோரிக்கைகள் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று வாக்குறுதி அளித்தது மட்டுமல்லாமல் தேர்தல் அறிக்கையில் இடம்பெற செய்து தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்து தற்போது அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை தமிழக முதல்வர் படிப்படியாக நிறைவேற்றி வருகிறார்.

தற்போது அறிவித்திருக்கும் அகவிலைப்படி உயர்வு ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் உள்ளங்களிலும் இல்லங்களிலும் எல்லையற்ற மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் சுடர்மிகு விளக்காய் திகழும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை

எப்போதெல்லாம் தி.மு.க. ஆட்சி அமைகிறதோ அப்போதெல்லாம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு அது ஒரு பொற்கால ஆட்சியாக அமைந்து விடுகிறது முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் எப்போது எல்லாம் மத்திய அரசு அகவிலைப்படி சதவீதத்தை உயர்த்துகிறதோ அப்போதெல்லாம் மாநில அரசு ஊழியர்களுக்கும் அதே சதவீதம் உயர்வு அளித்து ஆசிரியர் அரசு ஊழியர் நலனை காத்தது போல் அவரின் நம்பிக்கையும் பொன்னெழுத்துக்களை தீட்டும் அவரின் எழுதுகோலையும் பெற்ற அவரின் தங்க புதல்வன் தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் தற்போது மத்திய அரசு அறிவித்த அகவிலைப்படியை போல் மாநில அரசு ஊழியர்களுக்கும் அதே அகவிலைப்படி சதவீதத்தை உயர்த்தி வழங்கியிருப்பது போல் புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை விரைவில் நிச்சயம் அமல்படுத்துவார் என அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மனதில் மிகப்பெரிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

அகவிலைப்படியை உயர்த்தி அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் நலனை காத்திட்ட தமிழக முதல்வர் அவர்களுக்கு தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் சார்பாகவும் மற்றும் ஜாக்டோ ஜியோவின் சார்பாகவும் கோடான கோடி நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்

இவ்வாறு தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் குதியாகராஜன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முரசொலி

29-Dec-2021

சுகாதாரத்துறை தர வரிசைப் பட்டியலில்

இந்தியாவிலேயே தமிழ்நாட்டிற்கு 2வது இடம்!

ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அமைப்பு தகவல்!

புதுடெல்லி, டிச.29–

இந்தியாவிலேயே சுகாதாரத் துறையின் தர வரிசைப் பட்டியலில், தமிழ்நாட்டிற்கு இரண்டாவது இடம் கிடைத்துள்ளது.

ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அமைப்பு வெளியிட்டுள்ள மாநில அரசுகளின் தரவரிசைப் பட்டியலில், பா.ஜ.க. ஆளும் உத்தரபிரதேசம் மாநிலம் கடைசி இடத்தில் உள்ளது குறிப்பிடத் தக்கது

ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அமைப்பு ஆண்டுதோறும் நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களின் சுகாதார உட்கட்டமைப்பையும் செயல்பாடுகளையும் ஆய்வு செய்து தரவரிசைப் பட்டியலை வெளியிட்டு வருகிறது. இதில் தாய் சேய் நலம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

உலக வங்கியின் உதவியுடன் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் இந்தப் பட்டியலை உருவாக்கி வருகிறது.

இதுவரை 3 கட்ட தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்ட நிலையில், தற்போது 4–ஆம் கட்ட தரவரிசைப் பட்டியல் வெளியாகியுள்ளது.

இதில் பெரிய மாநிலங்களுக்கான சுகாதாரத் துறை தரவரிசை பட்டியலில் தமிழ்நாடு 2–வது இடத்தை பிடித்துள்ளது. தமிழ்நாட்டின் சுகாதாரத் துறைக்கு 72.42 புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன. அண்டை மாநிலமான கேரளா முதல் இடத்தை பிடித்துள்ளது. கேரளாவுக்கு மொத்தம் 82.20 புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன.

3–வது இடத்தில் 69.66 மதிப்பெண்களுடன் தெலுங்கானா மாநிலமும், 4–வது இடத்தில் 69.95 புள்ளிகளுடன் ஆந்திர பிரதேசமும் உள்ளது. நிதி ஆயோக் வெளியிட்டுள்ள முதல் 4 இடங்களை தென் மாநிலங்களே பெற்றுள்ளன. 5–வது இடத்தில் மகாராஷ்டிரா, 6–வது இடத்தில் குஜராத், இமாச்சல் பிரதேசம், பஞ்சாப், கர்நாடகா மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்கள் அடுத்தடுத்து டாப்–10 இடங்களில் உள்ளன.

இந்த சுகாதாரத் துறை பட்டியலில் நாட்டிலேயே பெரிய மாநிலமான உத்தரப் பிரதேசம் கடைசி இடத்தை பிடித்துள்ளது. அந்த மாநிலம் வெறும் 30.57 புள்ளிகளை மட்டுமே பெற்றுள்ளது.

அதேபோல சிறிய மாநிலங்களுக்கான பட்டியலில் மிசோரம் முதல் இடத்தில் உள்ளது. யூனியன் பிரதேசங்களுக்கான பட்டியலில் டெல்லி மற்றும் ஜம்மு காஷ்மீர் கடைசி இடங்களைப் பிடித்துள்ளன. இந்த இரண்டு மாநிலங்களிலும் மருத்துவ உட்கட்டமைப்பு வேகமாக மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் நிதி ஆயோக் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன்
30-Dec-2021

அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படியை உயர்த்தி அறிவிப்பு

தொழில்நுட்ப கல்வித்துறை பணியாளர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி

சென்னை, டிச. 30: அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படியை உயர்த்திய முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தொழில்நுட்ப கல்வித்துறை பணியாளர்கள் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு தொழில்நுட்பக்கல்வித்துறை டாக்டர் அம்பேத்கர் எஸ்/எஸ்டி பணியாளர் நல சங்கத்தின் தலைவர் மணிமொழி, பொதுச்செயலாளர் மகிமை தாஸ்: அரசு ஊழியர்களுக்கு நிலுவையில் இருந்த 14% அகவிலைப்படியை 1.1.2022 முதல் உயர்த்தியும், பொங்கல் பரிசு வழங்கியும் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார். இதற்காக தமிழக முதல்வருக்கு தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வித்துறை டாக்டர் அம்பேத்கர் எஸ்/எஸ்டி பணியாளர் நல சங்கம் சார்பில் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அரசுத்துறை ஊர்தி ஓட்டுநர்கள்: தமிழ்நாடு அரசுத் துறை ஊர்தி ஓட்டுனர்கள் தலைமைச் சங்கம் சார்பில் மாநில தலைவர் எம்.சுப்பிரமணி, பொதுச் செயலாளர் டி.வெங்கடாசலபதி, பொருளாளர் ஜி.வேல்முருகன் மற்றும் திருவள்ளூர் மாவட்ட தலைவர் பி.மனோகரன், மாவட்ட செயலாளர் ஸ்டாலினி, கொள்கை பரப்பு செயலாளர் எம்.முருகன் ஆகியோர் அகவிலைப்படி உயர்த்தி வழங்கிய முதல்வருக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

இதே போல, தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை சாலை பணியாளர் சங்க தலைவர் சண்முகராஜா, பொதுப்பணித் துறை ஊர்தி ஓட்டுனர்கள் சங்க மாநில பொதுச் செயலாளர் ராமமூர்த்தி ஆகியோரும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு 14% அகவிலைப்படி உயர்வு, பொங்கல் போனசாக ₹3 ஆயிரம், ஓய்வூதியதாரர்களுக்கு ₹500ம், சிறப்பு கால முறை பெறும் பணியாளர்களுக்கு ₹1000ம் வழங்க உத்தரவிட்ட முதல்வருக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

Dec 2021-Jan 2022

TAMIL NADU CM M K STALIN: THE CHIEF EXECUTIVE WHO WANTS TO MAKE A DIFFERENCE

"Koyil koodathu enru naangal sollavillai, athu kodiyavargalin koodaram agi vida koodathu enbath thaan engal nokkam (We are not against temples, but temples should not become the haven of crooks)" - M K Stalin

'Before you are a leader, success is all about growing yourself. When you become a leader, success is all about growing others. - Jack Welch'

On March 1, 1953, in Chennai, M K Stalin was born as the third son of the former Chief Minister of Tamil Nadu and DMK strongman M. Karunanidhi and his wife Dayalu Amma.

Stalin studied at the Madras Christian College Higher Secondary School. He completed his pre-university course at Vivekananda College and obtained a history degree from Presidency College, Chennai of the University of Madras in 1973.

His political career began in his early

premium business lifestyle magazine

UNIQUE TIMES

Dec 2021-Jan 2022

COVER STORY

teens when he started the Dravida Munnetra Kazhagam (DMK) Gopalapuram Youth Wing from a tea shop with several friends. As a 14-year-old, he campaigned for his uncle, Murasoli Maran, in the 1967 elections. In 1973, Stalin was elected to the General Committee of the DMK. Stalin formed the DMK youth wing, too. In 1982, Stalin became the youth wing secretary of DMK, a post he held for more than four decades. Stalin later became the city's first directly elected mayor in 1996.

Stalin's political career has been nothing short of a roller coaster ride. Initially, he failed to win from the Thousand Lights constituency but later he won the Assembly polls in the year 1989, and in 1996 he won the seat again. For the first time in his political career, Stalin changed his constituency in 2011 and moved to the Kolathur constituency of Chennai.

In the 2006 Assembly elections, the DMK regained control of the state Assembly, partly due to Stalin's efforts. Stalin became the Minister for Rural Development and Local Administration in the Government of Tamil Nadu. During his tenure, he developed his skills as an administrator, helping to strengthen self-help groups in the state.

Stalin was the 37th Mayor of Chennai from 1996 to 2002 and the first Deputy Chief Minister of Tamil Nadu from 2009 to 2011. During his tenure as Mayor, he strived to improve the standard of corporation schools in Chennai and succeeded

"I will defend you not only as a Chief Minister but also as a father," Stalin remarked on the International Day for the Elimination of Violence Against Women, sending a strong message. He also advised the victims against taking extreme steps such as terminating their lives.

in his efforts. When he was the Deputy Chief Minister in 2006, the development of rural areas in Tamil Nadu was one of his focus areas.

On January 3, 2013, Karunanidhi named Stalin as his successor, thus ending a long era of confusion about who would take over the party's reins after Karunanidhi. On August 28, 2018, he was elected unanimously as the DMK chief after Karunanidhi passed away.

M.K. Stalin formed the Secular Progressive Alliance in Tamil Nadu under the National United Progressive Alliance and led the alliance in the 2019 general election in the state and won 39 out of 40 Parliament seats.

Stalin also led the campaign for the Secular Progressive Alliance in the 2021 Assembly elections. On May 7, 2021, Stalin took his oath as the Chief Minister along with the rest of his cabinet. In a survey by the Indian Express, he was placed 30th on the list of India's Most Powerful Personalities in 2019.

Firefighting Covid-19 for over six months till now, he has shown how he is different than his predecessors. His team has hit the ground running as soon as they took charge on May 7th to contain the second wave of Covid-19. Prioritising the tackling of the pandemic over celebrations of returning to power after 10 years and giving it precedence over everything else has been a perfect sign of Stalin's way of leadership. Drawing on his father's legacy of upholding the importance of mother tongue, he took oath as 'Muthuvel Karunanidhi Stalin' instead of 'M K Stalin' as he was introduced by Governor Banwarilal Purohit.

Able Administrator and Champion of Women's Rights

He privatised conservancy operations in the city and constructed nine flyovers and coined a pet project called Singara Chennai (Beautiful Chennai), lauded for improving Chennai's infrastructure. Only because of his great work, the vast city of Chennai today experiences fewer traffic jams compared to other cities.

premium business lifestyle magazine
UNIQUE TIMES
Dec 2021-Jan 2022

COVER STORY

"I will defend you not only as a Chief Minister but also as a father," Stalin remarked on the International Day for the Elimination of Violence Against Women, sending a strong message. He also advised the victims against taking extreme steps such as terminating their lives.

Instead, he advised, they should fight to bring the criminals to justice. He stated that criminals would be prosecuted regardless of their position, social standing, or influence. The State Child Policy 2021 was established with the goal of ending violence against women and children.

Even during the floods that had affected Tamil Nadu this time, Stalin worked as a common man rather than the supreme leader and worked towards people's welfare, making sure that they got all the essential amenities, especially food.

The name Stalin always builds curiosity among people and the interesting story behind the name is that when Karunanidhi was addressing a condolence meeting for Soviet leader Joseph Stalin, who died only four days after his child was born, he decided to name his son Stalin. M.K. Stalin tied the knot with Durga on August 25, 1975, and has two children Senthamarai and Udhayanidhi Stalin, who is an actor and politician.

The DMK's 68-year-old leader has now ushered in a healthy political culture of inclusivity by treating opposition leaders with respect and consulting them on problems, a trait not seen in Tamil Nadu politics in decades. Let's hope he will continue to fight for the common people who voted for him with hope and trust

இந்தியாவின் முதல் தமிழ் நாளிதழ்

முரசொலி

01-Jan-2022

மழை வெள்ளப் பாதிப்புகளை நள்ளிரவிலும் நேரில் ஆய்வு செய்த

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பொதுமக்கள் வெகுவாகப் பாராட்டு!

சென்னை, ஜன.1-

தஞ்சாவூர், திருச்சி மாவட்டங்களில் நடைபெற்ற அரசு விழாவில் பங்கேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னைக்குத் திரும்பியவுடன், மழை பாதிப்புகளை சீர்செய்ய நேற்று முன்தினம் அந்த நள்ளிரவிலும் உடனே களத்தில் இறங்கியதை அனைத்துத் தரப்பினரும் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

உறக்கமே இல்லாமல் ஒரு முதலமைச்சர் பொறுப்புடன் செயல்பட்டு, முன்மாதிரியாகத் திகழ்வதாக சமூக வலைதளங்களில் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் 30.12.2021 தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, நலத்திட்ட உதவிகளை வழங்கி, நள்ளிரவில் விமானம் மூலம் சென்னை திரும்பினார்.

சென்னை திரும்பியவுடன், சென்னையில் பெய்த கனமழையின் காரணமாக மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மழைநீர் அகற்றும் பணிகள் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் அமைந்துள்ள கட்டுப்பாட்டு அறைக்கு அந்த நள்ளிரவே நேரடியாக சென்று ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது முதலமைச்சர் அவர்கள், கட்டுப்பாட்டு அறையில், பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மழைநீர் தேக்கம் குறித்த புகார்கள் குறித்தும், அது தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

மேலும், கட்டுப்பாட்டு அறையில் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைந்து பணிகளில் ஈடுபட்டுள்ள பிற சேவைத் துறைகளான காவல்துறையினர், தீயணைப்புத் துறையினர், சென்னை குடிநீர் வாரியம் மற்றும் மின்துறை சார்ந்த அலுவலர்களுடன் அவர்களின் துறை சார்ந்த புகார்கள்மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

மேலும் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் அகற்றும் பணிகள் குறித்தும், இயக்கப்பட்டு வரும் மோட்டார் பம்புகள் குறித்தும் விரிவாக கேட்டறிந்து மீட்புப் பணிகளை விரைந்து மேற்கொள்ளவும் தேவையான அளவிற்கு நீர் இறைக்கும் பம்புகள் கொண்டு உடனடியாக தேங்கிய மழை நீரை வெளியேற்றவும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பின்னர்

முதலமைச்சர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், பூந்தமல்லி நெடுஞ்சாலையில் மோட்டார் பம்புகள் கொண்டு மழைநீர் வெளியேற்றப்படும் பணியையும், பெரியமேடு சைடன்ஹாம்ஸ் சாலையில் மசூதி அருகே தேங்கியுள்ள மழைநீரை மோட்டார் பம்பு கொண்டு வெளியேற்றப்படும் பணியையும் மற்றும் பாரிமுனை பிரகாசம் சாலை சந்திப்பில் தேங்கியுள்ள மழை நீரை வெளியேற்றும் பணியையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

உறக்கமின்றிச் செயல்படும் முதல்வர்!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இந்தச் செயலை அனைத்துத் தரப்பினரும் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

"மழை பாதிப்புகளை நேரில் ஆய்வு செய்த முதல்வருக்கு சல்யூட்" என்று ஆர்.கேதார் சங்கர் உள்ளிட்டோர் 'ட்வீட்' செய்துள்ளனர்.

திடீர் மழையால் தவித்த சென்னையில், நள்ளிரவில் வந்து களத்தில் நிற்கிறார் முதலமைச்சர் என்பதை அறியும் போது, மகிழ்ச்சியாய் இருப்பதாகவும், கடந்த 10 ஆண்டுகளாக பதவியில் இருந்தவர்கள் இதுபோன்று ஒருநாள் கூட செயல்பட்டதில்லை என்றும் பொதுமக்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

ஆழ்வார்பேட்டையில் பார்வையிட்டு!

இந்நிலையில், நேற்று 2-வது நாளாக மழை பாதிப்புகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்.

ஆழ்வார்பேட்டை, மயிலாப்பூர் பகுதிகளில் மழைநீரை அகற்றும் பணிகளைப் பார்வையிட்ட முதலமைச்சர், அப்பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். அப்போது அப்பகுதி மக்களிடம் அவர்களது கோரிக்கைகளை முதலமைச்சர் கேட்டறிந்தார்.

மழைப் பாதிப்புகளை நேரில் ஆய்வு செய்து, பணிகளை முடுக்கிவிட்ட முதலமைச்சருக்கு, வினோத் உள்ளிட்ட பொது மக்கள் நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.

தியாகராயர் பகுதியில் முதல்வர் ஆய்வு!

தொடர்ந்து தியாகராயர் நகர் பகுதியில் மழைநீரை அகற்றும் பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு, அப்பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மக்களோடு மக்களாக இருந்து, மக்களின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றி வருவதாக தியாகராயர் நகர் பகுதியைச் சேர்ந்த மோகனதன், மாரியப்பன் உள்ளிட்ட பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

மழைப் பாதிப்புகள் உடனடியாக சரி செய்யப்பட, தி.மு.க. அரசுதான் காரணம் என்றும், இதற்கு முந்தைய ஆட்சிக் காலத்தில், இதுபோன்ற தருணத்தில் துரிதகதியில் மீட்புப்பணிகள் நடைபெற்றதில்லை என்றும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

வழக்கமாக சென்னையில் கனமழை பெய்தால், தண்ணீர் பெருமளவில் தேங்கும் நிலையில், நேற்று பெய்த மழைநீர் ஒரே நாளில் வெளியேறி இருப்பதாகவும், இதற்கு தி.மு.க. அரசும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் எடுத்த நடவடிக்கை தான் காரணம் எனவும் பொதுமக்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

மழைவெள்ளத்தை களத்தில் இறங்கி சீர் செய்த முதல்வருக்கு நன்றி!

"நீங்கள் சாலையில் நடந்து சென்று கொண்டிருப்பதைப் பார்த்து, வேலையில் சென்று கொண்டிருந்த நான், இறங்கி ஓடி வந்தேன் சார்... எனக்கு உங்களை ரொம்ப ரொம்ப பிடிக்கும் சார்... செமையா ஆட்சி செஞ்சுகிட்டிருக்கீங்க சார். எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு நீங்க பெரிய Motivation-ஆ இருக்கீங்க சார். Thank you so much சார்."

– ஆழ்வார்பேட்டையில் முதல்வர் ஆய்வின்போது மேற்காணும் பெண்மணி கூறியது!

HR&CE DEPT TAKES CENTRE STAGE IN RATIONALIST DMK'S HINDU OUTREACH

LALITHA RANJANI @Madurai

THE 'rationalist' DMK government, keen to weaken the allegations made by opposition about the party being anti-Hindu, has implemented a raft of schemes under the Hindu Religious & Charitable Endowments (HR&CE) department, including steps to recover encroached temple lands and improve transparency in administration. Though several of these schemes, implemented under the stewardship of minister PK Sekar Babu, received appreciation, they had to face multiple roadblocks from courts.

Non-brahmin archakars

In a historic step towards ensuring social justice in temples, 24 non-Brahmin archakars who were trained at government-run archakar training schools established by former Chief Minister M Karunanidhi, were appointed at temples under the HR&CE department on August 14, ending a wait of 13 years. The State government, during the Budget presentation in August, also announced the revival of archakar and odhuvar training schools for candidates of all communities and increased their monthly stipend from ₹1,000 to ₹3,000. TN first two non-Brahmin priests were appointed at HR&CE temples in Madurai district in 2018 and 2020.

Gold monetisation scheme

During the Department's Demand for Grants speech in the Assembly on September 4, Minister PK Sekar Babu announced the revival of temple gold monetisation scheme. The scheme, which was in force since 1977, was stopped in 2010. Under the scheme, excess gold in temples will be melted and purified at the government mint in Mumbai, and will be converted into gold bars and deposited in bank lockers to generate income. Restraining the HR&CE department from implementing the scheme, the Madras High Court on October 28 said the temple gold offerings cannot be melted without approval from trustees.

2021 IN A NUTSHELL

HR&CE colleges

On September 4, the minister said that 10 new arts and science colleges would be established by the HR&CE department at a cost of ₹150 crore. The HC, while hearing a writ petition on November 15, restrained the government from starting more colleges, except those at Kolathur, Oddanchathiram, Vilathikulam and Thiruchengode where admissions had already begun, without appointing trustees. The state told the court that advertisements were issued for the appointment of district-level committee members who would appoint trustees for the temples that are being administered by 'fit persons' on an ad-hoc basis.

Narikuravar woman's ordeal

Ashwini, a 21-year-old Narikurava woman from Pooncheri village in Chengalpet district, created a stir with her viral video in October in which she expressed outrage over not being allowed to partake of an annadhanam at Sthalasayanaperumal Temple in Mammallapuram. After she complained of ill-treatment and discrimination, Minister Sekar Babu and HR&CE Commissioner J Kumaragurubaran had free meal with her at the temple. Chief Minister MK Stalin also visited her house on Deepavali.

Two-jab mandate

An order mandating double vaccination for devotees at Meenakshi Sundareswarar Temple in Madurai was withdrawn the next day after it sparked widespread opposition.

Srirangam temple entry row

Renowned Bharatnatyam dancer and Kalaimamani awardee Zakir Hussain claimed he was denied entry into the Ranganathaswamy Temple because of his religion. A decision on the entry of people from other religions into Hindu temples will be taken by the CM, in consultation with legal experts and chief priests of temples, said Minister Sekar Babu.

Slew of new initiatives

Aimed at planting one lakh sacred trees at TN temples, 'Kalaignar Thalamarakandrugal Nadum Thittam' scheme was introduced on August 7. To perform pooja in Tamil apart from Sanskrit, 'Annai Tamizhil Archanai' scheme was started at 47 temples. Monthly stipend of ₹5,000 was announced for those tonsuring devotees at temples on September 7, three days after the charges collected from devotees for tonsuring heads were waived. A facility to enable occupants of HR&CE temple properties pay rent online was launched on October 10. A scheme to allow free weddings for the disabled at temples was launched on December 8. All HR&CE temples starting January 1, have also been asked to use only Aavin ghee and butter to light lamps and for temple offerings.

சிறப்பான நடவடிக்கை

இந்தியாவில் கொரோனாவின் பாதிப்பு மீண்டும் அதிகரிக்க தொடங்கியுள்ளது. வீரியமிக்க வைரசாக உலகை அச்சுறுத்தி வரும் ஒமிக்ரான் பாதிப்பு இந்தியாவிலும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நாடு முழுவதும் 1525 பேர் ஒமிக்ரான் பாதிப்பால் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் ஒமிக்ரான் பாதிப்பை தடுக்க புத்தாண்டு முதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன. மக்கள் அதிகம் கூடும் இடங்களான திரையரங்குகள், ஓட்டல்கள் ஆகியவற்றில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. வரும் 10ம் தேதி வரை 1 முதல் 8ம் வகுப்பு வரை பள்ளி மாணவர்களுக்கான நேரடி வகுப்புகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. சுனாமியைப் போல் கொரோனா 3ம் அலை பரவத் தொடங்கினாலும் அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளால் மக்கள் அச்சப்படத் தேவையில்லை என்றும், கொரோனா தொற்றால் பாதிக்கப்படுவோர் 5 நாள் மட்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவுள்ளதாகவும், பிறகு வீட்டு தனிமையில் அனுப்ப திட்டமிட்டுள்ளதாகவும் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் தமிழகத்தில் கொரோனா தடுப்பூசி பணிகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன. தமிழகத்தில் முதல் தவணை தடுப்பூசியை 87 சதவீதம் பேரும், 2வது தவணை தடுப்பூசியை 57 சதவீதம் பேரும் போட்டுள்ளனர். மீதமுள்ளோரும் தடுப்பூசி போட்டுக் கொள்ள, வாரம்தோறும் ஒரு நாள் மெகா தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. நேற்று மெகா தடுப்பூசி முகாம் தமிழகத்தில் 50 ஆயிரம் இடங்களில் நடத்தப்பட்டது. இந்நிலையில் சிறுவர்களுக்கு தடுப்பூசி போடும் பணிகளும் இன்று முதல் தீவிரமடைகிறது.

தமிழகத்தில் 15 வயது முதல் 18 வயதுக்கு உட்பட்ட 33 லட்சத்து 20 ஆயிரம் பேருக்கு தடுப்பூசி போடும் பணிகளை முதல்வர் இன்று தொடங்கி வைக்கிறார். சிறார் தடுப்பூசிகளுக்கான முன்பதிவுகள் தொடங்கிய நிலையில், தமிழகத்தில் பலர் கோவின் செயலி மூலம் இணையத்தில் பதிவு செய்து வருகின்றனர். பள்ளிகளுக்கு நேரடியாக சென்று இத்தகைய தடுப்பூசி செலுத்தப்பட உள்ளதால், விரைவில் சிறார்களுக்கான தடுப்பூசி இலக்கினை அரசு அடையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

முன்களப்பணியாளர்களுக்கான பூஸ்டர் டோஸ் தடுப்பூசிகளை வரும் 10ம் தேதி முதல் செலுத்திட தமிழக அரசு தயாராக உள்ளது. ஒன்றிய அரசு அதற்கான நெறிமுறைகளை வெளியிடும் முன்பே பூஸ்டர் தடுப்பூசி செலுத்திட அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் 2ம் கட்ட கொரோனா அலை கடந்த ஏப்ரல், மே மாதங்களில் உச்சத்தில் இருந்த நிலையில், முதல்வராக மு.க. ஸ்டாலின் பொறுப்பேற்றதும், துரித நடவடிக்கைகளால் நோய் தொற்றை கட்டுக்குள் கொண்டு வந்தார். இப்போது வேகமாக பரவி வரும் ஒமிக்ரான் தொற்றையும் ஒழித்திட தமிழக அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பாராட்டுக்குரியதாக உள்ளது. பொதுமக்கள் நலனுக்காக அரசு தெரிவித்துள்ள நெறிமுறைகளை கட்டாயம் பின்பற்றி அனைவரும் விழிப்புணர்வோடு இருந்தால், கொரோனாவின் 3வது அலையை எளிதாக எதிர்கொள்ளலாம்.

தினத் தந்தி
DAILY THANTHI
03-Jan-2022

ஒமைக்ரான் பரவலை கட்டுப்படுத்த இது நல்ல நடவடிக்கை!

கொரோனா, ஒமைக்ரான் பாதிப்பு இன்னும் குறையாத நிலையில், புத்தாண்டு பிறந்த தினம் முதல், நோய் தடுப்பு நடவடிக்கையாக சில கட்டுப்பாடுகளை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். தற்போது, அதிகரித்துவரும் ஒமைக்ரான் தொற்று டெல்டாவைவிட பல மடங்கு வேகமாக பரவக்கூடியது. ஆனால், குறைவான அளவிலேயே அறிகுறிகள் தெரிவதால், யாருக்கு தொற்று இருக்கிறது? என்பதை கண்டுபிடிப்பது கடினம். பரிசோதனை முடிவு வருவதற்குள் பரவுவதில் வேகம் எடுத்துவிடுகிறது.

ஆரம்பத்தில் வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் மூலம்தான் ஒமைக்ரான் பரவுகிறது என்று கூறப்பட்டாலும், அவர்களுடன் தொடர்பில் இல்லாதவர்களுக்குகூட தற்போது வேகமாக பரவுகிறது. "இது சமூகப்பரவல், 3-வது அலையின் அடையாளமாக இருக்கிறது. ஒமைக்ரானால் பாதிக்கப்பட்டவர்கள்

4 முதல் 5 நாட்களில் குணமடைந்து விடுகிறார்கள்" என்று மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியிருக்கிறார்.

ஒவ்வொரு நாளும் ஒமைக்ரான் பரவலின் வேகம் அதிகமாக இருப்பதால், இதை தடுக்கும் வகையில் சில நல்ல கட்டுப்பாடுகளை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். அதன்படி, மழலையர் விளையாட்டு பள்ளிகள் (பிளே ஸ்கூல்), நர்சரி பள்ளிகள் (எல்.கே.ஜி., யு.கே.ஜி.) செயல்பட அனுமதி இல்லை. அனைத்து பள்ளிக்கூடங்களிலும் 1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்புவரை வருகிற 10-ந்தேதி வரை நேரடி வகுப்புகள் நடத்த தடைவிதிக்கப்பட்டுள்ளது. அனைத்து பொருட்காட்சிகள் மற்றும் புத்தக கண்காட்சிகள் நடத்துவது தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மெட்ரோ ரெயிலில் 50 சதவீத இருக்கைகளில் மட்டும் பயணிக்கலாம். பஸ்களில் நின்று கொண்டு பயணம் செய்ய அனுமதி இல்லை என்பது போன்ற பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

ஒரு பக்கம் அரசு கட்டுப்பாடுகளை விதித்தாலும், மற்றொரு பக்கம் தடுப்பூசி போடுவதில் பொதுமக்களுக்கு, குறிப்பாக முதியோர்களுக்கு ஆர்வம் குறைந்துவருவது கவலையளிப்பதாக இருக்கிறது. கடந்த 1-ந்தேதி நிலவரப்படி, இந்தியாவில் சராசரியாக 90 சதவீதம் பேர் முதல் டோசும், 65 சதவீதம் பேர் 2 டோஸ்களும் தடுப்பூசி போட்டிருக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் இந்த தேசிய சராசரியைவிட குறைவாக நேற்று நிலவரப்படி 86.95 சதவீதம் பேர் மட்டுமே முதல் டோசும், 60.71 சதவீதம் பேர் மட்டுமே 2 டோஸ்களும் போட்டிருக்கிறார்கள். 60 வயதை கடந்தவர்கள்தான் தடுப்பூசி போட அதிகம் யோசிக்கிறார்கள்.

தற்போது, கொரோனா வேகமாக பரவும் 8 மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என்று மத்திய அரசாங்கம் கவலை தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டை பொறுத்தமட்டில் தினமும் சராசரியாக 1 லட்சம் பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்படுகிறது. 3 லட்சத்து 20 ஆயிரம் பேருக்கு பரிசோதனை செய்ய வசதிகள் இருக்கிறது. மருத்துவமனைகளில் 1 லட்சத்து 15 ஆயிரம் படுக்கைகளும், கவனிப்பு மையங்களில் 50 ஆயிரம் படுக்கைகளும் தயாராக இருக்கிறது. இப்போதைய கொரோனா பரிசோதனையில் பாதிக்கு மேல் ஒமைக்ரான் பாதிப்பு இருக்கிறது.

இன்று முதல் பள்ளிக்கூடங்களுக்கு சென்றே 15 வயது முதல் 18 வயது வரை உள்ள 33.2 லட்சம் மாணவர்களுக்கு தடுப்பூசி போடும் சிறப்பான திட்டத்தை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இது மிகமிக பாராட்டுக்குரியது. "60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் 10-ந்தேதி முதல் பூஸ்டர் டோஸ்போட எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டோம். எல்லாவற்றுக்கும் மேலாக கொரோனாவை தடுக்கும் வலிமையான வழிமுறை முககவசம் அணிவதுதான். இந்தப் பரவல் இன்னும் அதிகமாகிவிடக்கூடாது என்றால் அது மக்களின் ஒத்துழைப்பில்தான் இருக்கிறது. மக்கள் கவனமாக இருந்தால், கொரோனா, ஒமைக்ரான் என்று எந்த தொற்றையும் பரவாமல் தடுத்துவிட முடியும்" என்கிறார், மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மை செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன். எனவே, அரசு நடவடிக்கையும், மக்களின் ஒத்துழைப்பும் இரு கை தட்டும் ஓசைபோல இருந்தால்தான் இந்த ஒமைக்ரான் பரவலை முளையிலேயே கிள்ளியெறிய முடியும்.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்
05-Jan-2022

வளர்ச்சியின் முதல்படி

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழகம் பெரும் வளர்ச்சி அடைந்து வருகிறது. இந்த நிதியாண்டில் தமிழகத்தின் கடன் வாங்கும் அளவு 17 சதவீதம் குறைந்து இருப்பது அதன் முதல் அறிகுறி. கடந்த ஆண்டை காட்டிலும் இந்த நிதி ஆண்டில் கடந்த 9 மாதங்களில் கடன் வாங்கும் அளவு 17 சதவீதம் குறைந்து இருக்கிறது என்றால் இது வளர்ச்சியின் முதல்படி என்று தானே கூற வேண்டும்.

தொடர்ந்து 10 ஆண்டுகள் அதிமுக அரசின் மோசமான நிதிநிர்வாகம் காரணமாக ₹5 லட்சம் கோடிக்கு மேல் கடன் சுமை தமிழக மக்கள் தலையில் ஏற்றப்பட்டுள்ளது. அரசுகள் வரும், போகும். ஆனால் நிதித்துறை அதிகாரிகள் தான் இத்தகைய சீரழிவுக்கு பொறுப்பு ஏற்க வேண்டும். கடன் சுமையை குறைக்கவும், வரிவருவாயை அதிகரிக்கவும் அவர்கள்தான் யோசித்து இருக்க வேண்டும். ஆனால் ஒவ்வொரு ஆண்டும் அதிமுக அரசின் நிர்வாக முறைகேட்டிற்கு அவர்கள் ஒத்துழைத்ததால் இத்தனை கடன் பேரிடரில் தமிழகம் சிக்கிக்கொண்டது.

ஆனால் திமுக அரசு பொறுப்பேற்றதும் முதல்வர் மு.க.ஸ்டாலினின் முதல் கவனம் நிதிநிலைமை சீரமைப்பதில் இருந்தது. அதனால் தான் 2021ம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் வரை தமிழகம் ₹52 ஆயிரம் கோடி கடன் மட்டுமே வாங்கியிருக்கிறது. 2020ம் ஆண்டு இதே காலக்கட்டத்தில் ₹63 ஆயிரம் கோடி வாங்கியிருந்தது அதிமுக அரசு. தற்போது ₹11 ஆயிரம் கோடி கடன் வாங்குவது குறைக்கப் பட்டு இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் கொரோனா இரண்டாம் அலைக்குப்பிறகு தமிழகத்தின் வரிவருவாய் சுமார் 22 சதவீதம் அதிகரித்து இருக்கிறது. 2020 ஏப்ரல் முதல் நவம்பர் வரை ₹97,635.78 கோடி வரிவருவாய் இருந்தது. ஆனால் 2021ல் ஏப்ரல் முதல் நவம்பர் வரை ₹1,18,992.48 கோடி வரிவருவாய் வந்துள்ளது என்றால் இது எப்படி சாத்தியம்?. முதல்வர் மு.க.ஸ்டாலினின் திறன் மிகுந்த நிர்வாகத்தின் வெற்றி தான் இதற்கு காரணம்.

நவம்பர் வரை ஜிஎஸ்டி வரிவசூல் மட்டும் ₹66,047 கோடி வந்துள்ளது. இது 2020ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 16.34 சதவீத வளர்ச்சி ஆகும். இப்போதும் கூட ஒமிக்ரான் தொற்று அதிகரித்து வந்தாலும், கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டாலும் மக்கள் முதல்வர் மு.க.ஸ்டாலினை நம்புகிறார்கள். பெரிய அளவில் கடன் வாங்கும் மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் இருந்தாலும் வரிவருவாய் அதிகரித்து, கடன் வாங்கும் அளவு குறைந்திருப்பது மாற்றத்தின் அறிகுறி.

எந்த வளர்ச்சிப்பணிகளையும், நலத்திட்டங்களையும் நிறுத்தாமல் இந்த குறுகிய காலத்தில் இத்தனை முன்னேற்றம் கண்டுள்ளது தமிழகம். மு.க.ஸ்டாலினின் சிறந்த நிர்வாகத்தின் கீழ் இன்னும் நான்கரை ஆண்டு ஆட்சிக்காலத்தில் நிச்சயம் தமிழகம் மிகப்பெரிய முன்னேற்றம் அடையும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. அவர் மக்கள் மனம் அறிந்தவர் மட்டும் அல்ல. மக்கள் மனம் கவர்ந்தவரும் கூட. இதோ 2.15 கோடி ரேசன் அட்டைதாரர்களுக்கு பொங்கல் விழாவை முன்னிட்டு ₹1297 கோடியில் 21 வகை பொருட்களை பரிசாக வழங்கி மக்கள் உள்ளம் மகிழ்ச்சியில் பொங்க வைத்து இருக்கிறார் நம் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

நெல் கொள்முதல் நிலைய தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு

முதல்வருக்கு தொழிற்சங்கத்தினர் நன்றி

சென்னை, ஜன. 5: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் நெல் கொள்முதல் நிலையங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு அறிவித்ததற்காக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தொழிற்சங்கத்தினர் நன்றி தெரிவித்தனர்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நெல் கொள்முதல் நிலையங்களில் பணிபுரியும் பணியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு வழங்கக்கூடிய ஊதியத் தொகையை உயர்த்தி அறிவித்தமைக்காக, முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று தலைமை செயலகத்தில், தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவையின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சண்முகம், பொருளாளர் நடராசன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவையின் மாநில தலைவர் பேச்சிமுத்து, பொதுச் செயலாளர் கோ.சி.வள்ளுவன் மற்றும் ஏஐடியூசி மாநில பொதுச்செயலாளர் டி.எம்.மூர்த்தி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக ஏஐடியூசி தொழிற்சங்க மாநில பொதுச்செயலாளர் சந்திரகுமார், சுமைதூக்கும் தொழிலாளர் சங்க மாநில தலைவர் சாமிக்கண்ணு மற்றும் நிர்வாகிகள் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

அப்போது, உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி, சட்டமன்ற உறுப்பினர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் உடனிருந்தனர்.

கிராம கோவில் பூசாரிகளுக்கு ஓய்வூதியம்

முதல்வருக்கு வேதாந்தம் நன்றி

சென்னை, ஜன. 5–

கிராமக் கோவில் பூசாரிகளுக்கு மாத ஓய்வூதியம் வழங்க உத்தரவு பிறப்பித்த முதல்வர் ஸ்டாலினுக்கு, கிராமக் கோவில் பூசாரிகள் பேரவை நிறுவனரும், நிர்வாக அறங்காவலருமான எஸ்.வேதாந்தம் நன்றி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

கடந்த டிசம்பர், 24ல் நடந்த கிராமக் கோவில் பூசாரிகளின் ஓய்வூதியக் குழு கூட்டத்தில், பூசாரிகளுக்கு மாத ஓய்வூதியம் வழங்க முடிவு செய்து, அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. கடந்த 30 ஆண்டுகளாக கிராமக் கோவில் பூசாரிகளின் நலனுக்காக தொடர்ந்து முயற்சித்து வருகிறோம். அதனால், ஸ்டாலின் பிறப்பித்த உத்தரவை, எங்களின் பெரும் முயற்சிக்கு கிடைத்த வெற்றியாகவே கருதுகிறேன்.

கடந்த 2001ல், மதுரை தமுக்கம் மைதானத்தில் நடந்த கிராமக் கோவில் பூசாரிகள் மாநாட்டில், அப்போதைய முதல்வர் கருணாநிதி பங்கேற்று, பல்வேறு நலத்திட்டங்களை வழங்கியதை நினைவு கூறுகிறேன்.

இந்நிலையில், டிச., 12ல் நடந்த மதுரை மாவட்ட பூசாரிகளின் மாநாட்டில், 5,000க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். இதில், பூசாரிகளின் ஓய்வூதிய விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, உடனடியாக ஓய்வூதியம் கிடைக்க ஆவண செய்ய வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்த தீர்மானம் அரசின் கவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இவற்றையெல்லாம் ஏற்று உத்தரவு பிறப்பித்த முதல்வர் ஸ்டாலின், அமைச்சர் சேகர்பாபு ஆகியோருக்கு நன்றி.

இவ்வாறு வேதாந்தம் கூறியுள்ளார்.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்
06-Jan-2022

முன்னோடி மாநிலம்

கடந்த மே 7ம் தேதி தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றார். இரண்டாவது அலை படுதீவிரமாக பரவிய அந்த காலக்கட்டத்தில் முதல்வர் எடுத்த தடுப்பு நடவடிக்கைகள், கொரோனா பரவலை வெகுவாக கட்டுப்படுத்தியது. முதல்வர் மு.க.ஸ்டாலின் மேற்கொண்ட இந்த அதிரடி நடவடிக்கைகளை, நேற்று துவங்கிய புத்தாண்டின் முதல் சட்டப்பேரவை கூட்ட உரையின்போது, கவர்னர் ஆர்.என்.ரவி வெகுவாக பாராட்டி உள்ளார்.

அவரது உரையில், "பதவியேற்ற முதல் நொடியில் இருந்தே ஒட்டுமொத்த அரசு இயந்திரத்தையும் முடுக்கி விட்டு, மருத்துவ கட்டமைப்பை மேம்படுத்தி, ஆக்சிஜனும் அத்தியாவசிய மருந்துகளும் கிடைப்பதை உறுதிசெய்து, தடுப்பூசி பணிகளை மக்கள் இயக்கமாக மாற்றி, கொரோனா இரண்டாவது அலையை திறம்பட கையாண்ட முதல்வர் மு.க.ஸ்டாலினை மனமார பாராட்டுகிறேன். பெருந்தொற்றை இந்த அரசு வெற்றிகரமாக கட்டுப்படுத்திய முறை நமது நாட்டிற்கே முன்னோடியாக அமைந்தது" என குறிப்பிட்டுள்ளார்.

கடந்த அதிமுக ஆட்சியில் லட்சக்கணக்கான தடுப்பூசி டோஸ்கள் வீணடிக்கப்பட்டதாக ஒன்றிய சுகாதாரத்துறை வேதனை தெரிவித்திருந்தது. அதாவது, முதல் தவணை 8.09 சதவீதம், 2வது தவணை 2.84 சதவீத அளவே போடப்பட்டிருந்தது. ஆனால், கடந்த 8 மாதங்களில் இந்த சதவீதம் அதிரடியாக உயர்ந்தது. இதற்கு வார இறுதி நாளில் மெகா தடுப்பூசி முகாம்களை தமிழக அரசு அமல்படுத்தியதும், இதுதொடர்பாக மேற்கொண்ட விழிப்புணர்வு பிரசாரங்களுமே முக்கிய காரணம். இதனாலேயே கொரோனா பெருந்தொற்றின் பாதிப்பு தமிழகத்தில் பெருமளவு குறைந்துள்ளது. இதையும் கவர்னர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனாவால் உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு உள்ளிட்ட பாதிப்புகளை கொண்டவர்களில் பலர், மருத்துவமனைகளுக்கு சென்று உரிய சிகிச்சை முறைகளை பெற முடியவில்லை. இதனால் பலர் பாதிக்கப்பட்டதை உணர்ந்த தமிழக அரசு "மக்களை தேடி மருத்துவம்" என்ற திட்டத்தை கொண்டு வந்தது. இதன்மூலம் சுமார் 43 லட்சம் பேர் வரை பயனடைந்துள்ளனர்.

மேலும், தெற்காசியாவிலேயே தமிழகம் பொருளாதாரரீதியாக வளர்ச்சி பெற்ற மாநிலமாக திகழ, முதல்வர் மு.க.ஸ்டாலின் முதலீட்டாளர் மாநாடுகளை நடத்தினார். இதன்மூலம் 1.74 லட்சம் பேர் வேலைவாய்ப்பை பெற்றிடும் வகையில், 109 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. இதில் சுமார் ரூ.21,508 கோடி மதிப்பிலான திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளது. கொரோனா காலத்திலும் தமிழகம் பெருமளவு முதலீடுகளை ஈர்த்துள்ளதையும், அரசின் பொருளாதார வளர்ச்சிக் கொள்கைகளையும் கவர்னர் பாராட்டி உள்ளது கவனிக்கத்தக்கது.

அடுத்த 10 ஆண்டுகளில் தமிழகத்தை குடிசைகளில்லா மாநிலமாக மாற்ற வேண்டும். அங்கு வாழும் ஏழை மக்களின் வாழ்வாதாரத்தையும் உயர்த்த வேண்டுமென்பதே முதல்வர் மு.க.ஸ்டாலினின் தொலைநோக்கு திட்டம் என உரையாற்றியது தான் ஹைலைட். ஆட்சிப் பொறுப்பேற்றது முதல், அல்லும் பகலும் அயராது உழைக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தமிழகத்தை மிக விரைவில் அதிகப்பட்ச வளர்ச்சிப்பாதைக்கு கொண்டு செல்வார் என்பது உறுதி.

தினத் தந்தி
DAILY THANTHI
06-Jan-2022

முதல்-அமைச்சரை பாராட்டும் கவர்னரின் முதல் உரை

ஆண்டுதோறும் மாநில அரசு, பட்ஜெட் தாக்கல் செய்வதற்கு முன்பாக கவர்னர் உரை இருக்கும். கவர்னர் உரையோடுதான் அந்த ஆண்டின் சட்டமன்ற கூட்டத்தொடர் தொடங்கும். பட்ஜெட் என்பது அரசின் வரவு, செலவு ஆண்டு அறிக்கை. இதில் அரசின் நிதிநிலை மற்றும் புதியத்திட்டங்கள் பற்றிய அறிவிப்பு வெளியாகும். ஆனால் கவர்னர் உரை அரசின் கொள்கையை கோடிட்டு காட்டுவதாகவும், எந்த வழியில் அரசு போகப்போகிறது என்பதை எடுத்துக்காட்டும் காலக்கண்ணாடியாகவும் இருக்கும். அந்தவகையில் தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி பொறுப்பேற்று முதல் உரையை நேற்று சட்டமன்றத்தில் ஆற்றினார். கவர்னரின் உரை பற்றி பல எதிர்பார்ப்புகள் இருந்தன. நிச்சயமாக கவர்னருக்கும், அரசுக்கும் உள்ள உறவு இந்த உரையில் எதிரொலிக்கும். கவர்னர் தன் நிலைப்பாட்டை அரசல், புரசலாக தெரிவிப்பார் என்று எல்லோருடைய கண்களும் இந்த உரை மீதே இருந்தன. ஆனால் கவர்னருக்கும், தமிழக அரசுக்கும் இடையே குறிப்பாக, கவர்னருக்கும், முதல்-அமைச்சருக்கும் இடையே நல்லுறவே திகழ்கிறது என்பதை இந்த உரை பட்டவர்த்தனமாக எடுத்துக்கூறுகிறது.

இதை உறுதிப்படுத்தும்வகையில், ஆரம்பத்தில்

தமிழக மக்களுக்கு தன் இனிய ஆங்கிலப்புத்தாண்டு நல்வாழ்த்துகளையும், பொங்கல் நல்வாழ்த்துகளையும் தெரிவித்த கவர்னர், அடுத்த வரிகளிலேயே முதல்-அமைச்சரை வெகுவாக பாராட்டியிருக்கிறார். பதவியேற்ற முதல் நொடியில் இருந்தே ஒட்டுமொத்த அரசு எந்திரத்தையும் முடுக்கிவிட்டு, மருத்துவக்கட்டமைப்பை மேம்படுத்தி, ஆக்சிஜனும், அத்தியாவசிய மருந்துகளும் மாநிலமெங்கும் கிடைப்பதை உறுதிசெய்து, தடுப்பூசி பணிகளை மக்கள் இயக்கமாக மாற்றி, கொரோனா பெருந்தொற்றின் 2-ம் அலையை திறம்பட கையாண்ட முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினை மனமார பாராட்டுகிறேன் என்று இதயப்பூர்வமாக பாராட்டிவிட்டு, மாநிலத்தின் பொருளாதாரமும், மக்கள் வாழ்வாதாரமும் பெருமளவில் பாதிப்படையாமல் கொரோனா பெருந்தொற்றை இந்த அரசு வெற்றிகரமாக கட்டுப்படுத்திய முறை, நாட்டுக்கே முன்னோடியாக அமைந்தது என்றும் புகழாரம் சூட்டினார். அடுத்து அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து பாராட்டிய கவர்னர், முதல்-அமைச்சர் மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு நேரில்சென்று பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உதவிசெய்து, பேரிடர் நிவாரணப்பணிகளை முன்னின்று நடத்தியது பாராட்டுக்குரியது எனவும் புகழ்ந்தார்.

அரசின் கோரிக்கைகளையும், மத்திய அரசாங்கத்திடம் விடும் கோரிக்கைகளையும் சுட்டிக்காட்டாமல் இல்லை. எடுத்துக்காட்டாக, சரக்கு சேவை வரி இழப்பீட்டை மேலும் 2 ஆண்டுகளுக்கு மத்திய அரசாங்கம் நீட்டிக்கவேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்தும் என்று தெரிவித்துள்ளார். '1 லட்சம் கோடி டாலர் பொருளாதாரத்தை நோக்கி' என்ற விரிவான செயல்திட்டம் ஒன்று தயாரிக்கப்படும் என்ற அறிவிப்பையும் அவர் வெளியிட்டிருக்கிறார். காவிரிஆற்றில் கர்நாடக அரசால் மேகதாதுவில் அணைகட்டும் திட்டத்தை உழவர்நலன்மீது அக்கறை கொண்ட இந்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது என்று கூறியது காவிரி டெல்டா பாசன விவசாயிகளுக்கு மகிழ்ச்சியளிக்கும் ஒன்றாகும். மீனவர் பிரச்சினையை பொறுத்தமட்டில், இந்திய மீனவர்களுக்கும், இலங்கை மீனவர்களுக்கும் நேரடிபேச்சுவார்த்தை மீண்டும் தொடங்க ஆவனசெய்யவேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சகத்தை கேட்டுக்கொள்கிறோம் என்பது ஆக்கப்பூர்வமான யோசனையாகும்.

மருத்துவக்கல்லூரி மாணவர்சேர்க்கை தொடங்கவேண்டிய இந்தநேரத்தில், நுழைவுத்தேர்வுகள் கிராமப்புற மாணவர்களுக்கு ஒரு சமமற்ற தளத்தையும், பாதிப்புகளையும் ஏற்படுத்துகின்றன. எனவே தொழில்படிப்புகளில் மாணவர் சேர்க்கைக்கு 'நீட்' போன்ற நுழைவுத்தேர்வுகள் தேவையற்றவை என்ற அரசின் நிலைப்பாட்டை தொடர்ந்து வலியுறுத்துவோம் என்று கவர்னரே தன் உரையில் முத்துதெறித்ததுபோல கூறிவிட்டார். 'நீட்' தேர்வுவேண்டாம் என்பதே அரசின் நிலைப்பாடு என்று அவரே சொல்லிவிட்டதால், அவர் பரிசீலனையிலிருக்கும் நீட் தேர்விலிருந்து விலக்கு தொடர்பான தமிழக அரசின் கோரிக்கைக்கு செவிசாய்த்து, ஜனாதிபதியின் ஒப்புதலுக்கு அனுப்பவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு மட்டுமல்ல, கோரிக்கையுமாகும். இறுதியில் வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்! வாழிய பாரத மணித்திரு நாடு! என்று கூறியது தமிழ்ப்பற்றும், தேசப்பற்றும் கொண்ட எல்லோருடைய மனதையும் மகிழ்ச்சி கடலில் ஆழ்த்துகிறது.

DAILY THANTHI
dt NEXT

06-Jan-2022

Guv hails Stalin in first Assembly speech

Governor RN Ravi with Chief Minister MK Stalin and Water Resources Minister Duraimurugan after delivering his first address to the Assembly on Wednesday

Omicron: House session cut short

CHENNAI: The onset of lockdown in the state has put a brake on several programmes planned by the government in the month of January. The Assembly session was also not spared from it. The session had to be cut short to just two days and educational institutions will soon be converted into COVID Care Centres. Prime Minister Narendra Modi's visit, preparation for local body polls, Pongal and Republic Day celebrations hangs in balance due to the sudden spread of Omicron variant. Highly placed officials said they are reworking or postponing events.

CHENNAI: Governor RN Ravi on Wednesday showered encomiums on Chief Minister MK Stalin in his maiden speech in the Legislative Assembly's first session of this year which commenced at Kalaivanar Arangam.

Beginning his speech with customary 'Vanakkam,' Governor Ravi appreciated Chief Minister Stalin for "galvanising the entire government machinery and effectively managing the second wave of COVID pandemic by ramping up health infrastructure, ensuring availability of oxygen and essential drugs and transforming the vaccination drive into a people's movement immediately after assuming office."

Describing the government's strategy in successfully containing the second wave without significantly affecting people's livelihood and economy as a role model for the entire nation, the Governor said the state's vaccination coverage has been increased from 8.09 per cent and 2.84 per cent at the time of assuming office to 86.95 per cent and 60.76 per cent for the first and second doses, respectively, in just seven months, he said.

The Governor also praised the "Innuyir Kaapom - Nammai Kaakm 48" scheme and said 4,482 accident victims have been provided critical care so far under it.

Seeks funds for flood relief

Moreover, urging the Union government to release the Rs 6,230 crore sought by the state to undertake flood relief, the Governor said, "The National Disaster Response Fund must be released immediately to ameliorate the effect of damage caused by the recent floods and the state government also asked the Centre to extend the GST compensation regime by another couple of years.

Stating that the state's revenues are yet to recover and it would adversely impact TN finances, if the compensation is not extended for at least two more years, Governor Ravi reiterated the government's stand and urged the GST council and Union Finance Ministry to continue the GST compensation at least till June 30, 2024.

Vows to defend riparian rights

Asserting that the state would defend its riparian rights, Ravi said, "After many years, we were able to store water at the current permissible limit of 142ft level in Mullaiperiyar Dam for many days continuously. This government will take all necessary measures to restore the full reservoir level of 152 feet as per the decreed judgment of the Supreme Court. While extending constructive cooperation to neighbouring states, Tamil Nadu will continue to fight for its rightful share of river waters." Ravi said the government, which is committed to farmers' welfare, will never allow construction of Mekedatu Dam by Karnataka.

Promising a "massive grass root level exercise to bring drop-out children back to school," the Governor said, "Using a GPS-enabled mobile application and with 80,000 surveyors drawn from various departments, 1,73,792 children have been identified and successfully enrolled in age-appropriate classes." He also proposed to implement a comprehensive scheme over the next five years to modernise government schools and set up smart classrooms in 24,345 govt primary schools.

Furniture park in Thoothukudi launch soon

Proposing to develop a 150 acre medical services park at Oragadam to develop a comprehensive ecosystem for the industry, the Governor announced that the first phase of the 1,000 acre Furniture Park in Thoothukudi will be launched by the CM later this month. Ravi also added that the agro-industrial corridor project will commence next year and it will address the industrial infra deficit in Cauvery Delta districts by promoting agro based industries.

Reiterating the government's opposition to NEET, the Governor, who has been blamed for delaying the assent for the NEET Bill, said, "Entrance exams create an unequal platform by being inherently discriminatory against rural students. Hence, this government is of the firm view that entrance exams like NEET are unnecessary for students' admission to professional courses and it will continue to reiterate this position."

"This government is committed to the principles of self-respect, social justice, equality, rational thinking and empathy. The government's path is guided by the thoughts and ideals of noble leaders like Thanthai Periyar, Annal Ambedkar, Kamarajar, Anna and Karunanidhi," said the Governor, wrapping up his speech with "Vazhiya Senthamizh" verse of poet Bharatiyar.

முதல்வருக்கு ஆளுநரின் பாராட்டு!

தமிழ்நாடு ஆளுநர் மேதகு ஆர்.என்.ரவி அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆற்றிய உரையானது வரலாற்றில் இடம்பெறத்தக்க பேருரை ஆகும்.

அந்த உரையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை போற்றியும் பாராட்டியும் உள்ளார். இவை ஏதோ சம்பிரதாயமான பாராட்டாக இல்லாமல் உள்ளார்ந்த பாராட்டாக உள்ளது. மக்கள் மத்தியில் முதலமைச்சருக்கு கிடைத்துவரும் பாராட்டுகளை, மக்கள் மன்றமான சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் பதிவு செய்து விட்டார்கள். முதலமைச்சர் மீதான ஆளுநரின் பாராட்டு என்பது வெறும் புகழுரையாக மட்டுமில்லாமல், அந்த புகழுக்கான காரணங்களை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்ததுதான் மிக முக்கியமானது ஆகும்.

“பதவியேற்ற முதல் நொடியிலிருந்தே, ஒட்டுமொத்த அரசு இயந்திரத்தையும் முடுக்கிவிட்டு, மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்தி, ஆக்சிஜனும், அத்தியாவசிய மருந்துகளும் மாநிலமெங்கும் கிடைப்பதை உறுதிசெய்து, தடுப்பூசிப் பணிகளை மக்கள் இயக்கமாக மாற்றி, கோவிட் பெருந்தொற்றின் இரண்டாம் அலையை திறம்படக் கையாண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை மனமாரப் பாராட்டுகிறேன்” – என்ற ஆளுநரின் பாராட்டானது கடந்த ஏழு மாத காலமாக எடுத்து வந்த கொரோனா தடுப்புப் பணிகளுக்கான பாராட்டுப் பத்திரம் ஆகும்.

பதவியேற்ற முதல் நொடியில் இருந்தே என்று ஆளுநர் அவர்கள் சொன்னாலும் – திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறுகிறது, அதுதான் ஆட்சி அமைக்கப் போகிறது என்பது தெரிந்ததும் அதிகாரிகள் அனைவரும் உடனடியாக தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களை அவரது இல்லத்துக்கு வந்து சந்தித்தார்கள். வாழ்த்துச் சொல்ல வந்த அதிகாரிகளை – வாழ்த்தைப் பெற்று அனுப்பி விடாமல் மக்கள் பற்றிய அக்கறையோடு கேட்டு அன்றைய தினமே கொரோனா தடுப்பு பணிகளை முடுக்கி விட்டார் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

ஆக்சிஜன் தட்டுப்பாடு, மருத்துவமனைகளில் படுக்கைகள் இல்லை – என்பது போன்ற செய்திகள் முதலமைச்சரை பதற்றம் அடைய வைத்தன. நித்தமும் துடித்தார். தற்காலிக மருத்துவமனைகளை உருவாக்கினார். மற்ற மாநிலங்களிடமிருந்து ஆக்சிஜனைப் பெற்று வந்தார். இதற்காகவே நமது அதிகாரிகளை வெளிமாநிலங்களுக்கு அனுப்பினார். இந்த பற்றாக்குறையை இரண்டு வாரங்களுக்குள் நீக்கினார். அதனை மனதில் வைத்துத்தான் ஆளுநர் அவர்கள் இத்தகைய பாராட்டை வழங்கி இருக்கிறார்.

கொரோனாவை தடுக்க ஒரே தடுப்பரண் என்பது தடுப்பூசிதான். அதனைச் செலுத்துவதை ஒரு இயக்கமாகவே முதலமைச்சர் அவர்கள் மாற்றினார்கள். இதுவரை 8.55 கோடி தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது. இதனையும் ஆளுநர் அவர்கள் பாராட்டி உள்ளார்கள். இதுவரை 20 நாட்கள் தடுப்பூசி முகாம்கள் தமிழ்நாடு முழுவதும் நடக்கிறது. ஒரே நாளில் 50 ஆயிரம் இடங்களில் முகாம்கள் நடக்கிறது. அதிகபட்சமாக 30 லட்சம் பேருக்கு ஒரே நாளில் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இது போன்ற முயற்சிகளை முன்னெடுப்பதை கடந்த அ.தி.மு.க. ஆட்சி செய்யவில்லை. கடந்த ஆட்சியில் குறைந்த அளவிலேயே தடுப்பூசி செலுத்தப்பட்டு இருந்தது என்பதையும் ஆளுநர் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

கொரோனாவைப் போலவே மழை – வெள்ளம் ஏற்படுத்திய பேரிடர் நேரத்தில் முதலமைச்சரின் செயல்பாட்டையும் ஆளுநர் பாராட்டி உள்ளார். நேரடி மேற்பார்வையில் முன்னெச்சரிக்கையை சரியாக எடுத்து அணைகளில் இருந்தும், ஏரிகளில் இருந்தும் உபரி நீர் விடுவிக்கப்பட்டதை ஆளுநர் சுட்டிக் காட்டியதைப் படிக்கும் போது கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் செம்பரம்பாக்கம் ஏரியில் தண்ணீர் திறந்துவிடாமல் சென்னை மிதந்த காட்சிகள்தான் நமக்கு நினைவுக்கு வருகிறது. அது போல இல்லாமல், துரிதமாக முதலமைச்சர் செயல்பட்டதை அவையில் பதிவு செய்துள்ளார் ஆளுநர்.

சில வாரங்களுக்கு முன்னால் ‘இந்தியா டுடே’ ஆங்கில வார இதழ் வெளியிட்ட கருத்துக் கணிப்பில் இந்தியாவின் சிறந்த முதலமைச்சர் என்று மு.க.ஸ்டாலின் அவர்கள் மகுடம் சூட்டப்பட்டார்கள். அதனை தனது உரையில் ஆளுநர் சுட்டிக் காட்டியது ஆளுநரின் பெருந்தன்மையைக் காட்டுகிறது. **“நமது முதலமைச்சர் இந்தியாவிலேயே முதலிடத்தைப் பெற்றுள்ளார். பதவிக்கு வந்த மிகக் குறுகிய காலத்திலேயே இத்தகைய சாதனை புரிந்துள்ளது மிகவும் பாராட்டிற்குரியது”** என்று ஆளுநர் பாராட்டி இருக்கிறார்கள்.

ஆட்சிக்கு வந்து ஐந்து ஆண்டுகள், பத்து ஆண்டுகள் கழித்து பாராட்டும் போற்றுதலும் பெறுவது என்பது வேறு. ஆனால் ஆட்சிக்கு வந்து ஏழு மாதங்களில் இத்தகைய உயர்வை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெற்றிருப்பது தான் முக்கியமானது. ‘பதவிக்கு வந்த மிகக் குறுகிய காலத்தில் இத்தகைய சாதனை புரிந்துள்ளார்’ என்பதுதான் ஆளுநரின் பாராட்டில் மகுடம் ஆகும்.

அவரது உரையில் உள்ளீடாக கவனிக்க வேண்டியது இந்து சமய அறநிலையத் துறைக்கு அவர் அளித்த பாராட்டுதல்கள் ஆகும். இந்து சமய அறநிலையத் துறையின் செயல்பாடுகளுக்கு களங்கம் கற்பிக்க ஒரு கூட்டம் நித்தமும் துடித்துக் கொண்டு இருக்கிறது. கோவில் நிலங்களை மீட்டு வருகிறது தி.மு.க. அரசு. ஒரு கால பூஜை திட்டத்தின் படி 12 ஆயிரம் கோவில்களில் பணியாற்றும் அர்ச்சகர்களுக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. கோவில்கள் சார்பில் கல்விப் பணிகள் தொடங்கி உள்ளன. கோவில்களின் வரலாறுகளை வெளியிட பதிப்பகம் தொடங்கப்பட்டுள்ளது. மடங்களில் உள்ள கலைகள் பாதுகாக்கப்படுகிறது. கோவில்களில் ஆன்மிக புத்தகங்கள் கிடைக்க புத்தகக் கடைகள் திறக்கப்பட்டுள்ளது. பழமை வாய்ந்த கோவில்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. கோவில்களைப் பாதுகாக்க ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இது சிலருக்கு பிடிக்கவில்லை. அதனால் ஏதாவது அவதூறு கற்பித்து வருகிறார்கள்.

இந்த கும்பலுக்கு பதில் சொல்லும் வகையில் – இத்தகைய விமர்சனங்கள் அனைத்துக்கும் ஆளுநர் அவர்கள் முற்றுப் புள்ளி வைத்துள்ளார்கள். **“திருக்கோவில் நிலங்களை மீட்டெடுப்பதிலும், திருக்கோவில் சொத்துகளை சிறப்பாக மேலாண்மை செய்வதிலும் இந்த அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை நான் மனமாரப் பாராட்டுகிறேன்”** என்று கல்வெட்டைப் போலச் சொல்லி இருக்கிறார்.

இவை அனைத்தும் ஆளுநரின் மூலமாக வெளிப்பட்டுள்ளது. ஆளுமைத் திறன் கொண்ட ஒரு முதலமைச்சரை தமிழ்நாடு பெற்றிருப்பதை தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல; இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் தனது மூலமாகத் தெரிவித்துள்ள ஆளுநரை பாராட்டுகிறோம்! நன்றி தெரிவிக்கிறோம்!

27 சதவிகித இடஒதுக்கீடு பெற்றுத் தந்ததற்கு நன்றி!

இந்திய சமூக நீதிக்கான முன்னணிப் போராளியாக முதல்வர் மு.க.ஸ்டாலின் திகழ்கிறார்!

திலிப் மண்டல் தனது ட்விட்டர் பதிவில் வாழ்த்து!

சென்னை, ஜன. 8– ஓ.பி.சி. பிரிவினருக்கு 27 சதவிகிதம் இடஒதுக்கீடு செல்லும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு விடுத்ததைத் தொடர்ந்து திலிப் மண்டல் தனது ட்விட்டர் பதிவில் இதற்கு முழு முதற் காரணமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை பாராட்டியும் நன்றி தெரிவித்தும் பதிவிட்டுள்ளார்.

Dilip Mandal
@Profdilipmandal

#ThanksMKStalin. He is the foremost champion of social justice in India. Congratulations to all the OBCs. 27% OBC reservation in NEET All India Quota is now a realty. Thiru @PWilsonDMK argued the case successfully for us. Big thanks to him.

இதுகுறித்து திலிப் மண்டல் அவர்கள் தனது ட்விட்டர் பதிவில் பதிவிட்டிருப்பதாவது :–

நன்றிகள் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களே! இந்திய சமூக நீதிக்கான முன்னணி போராளியாக அவர் திகழ்கிறார்! இதரபிற்படுத்தப் பட்டோர் அனைவருக்கும் வாழ்த்துகள்.

நீட் தேர்வில் அகில இந்திய ஒதுக்கீடு இதர பிற்படுத்தப் பட்டோருக்கு 27 சதவிகிதம் என்பது தற்போது உண்மையாகி விட்டது.

தி.மு.க.வின் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் இந்த வழக்கில் வாதாடி நமக்கெல்லாம் பெறும் வெற்றியைத் தேடித் தந்துள்ளார். அவருக்கு மிகப் பெரிய நன்றிகள்!

இவ்வாறு திலிப் மண்டல் தனது ட்விட்டர் பதிவில் பதிவு செய்துள்ளார்.

சபாஷ்...சரியான தீர்ப்பு...

மருத்துவ படிப்புகளில் எந்த மாநிலத்தவரும், தான் பிறந்த மாநிலம் அல்லாத வேறு மாநிலத்துக்கு சென்று படிக்கும் வகையில் ஒன்றிய அரசு கடந்த 2017-ம் ஆண்டு முதல் நீட் தேர்வை அமல்படுத்தி வருகிறது. இந்த தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் மட்டுமே இந்தியாவில் மருத்துவ படிப்புகளிலும், மருத்துவ மேல் படிப்புகளிலும் சேர முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது. இந்த தேர்வு முறையே கூடாது என தமிழக அரசு தொடர்ந்து போராடி வருகிறது.

கடந்த 2019-ம் ஆண்டு, பொருளாதார ரீதியாக நலிவடைந்த உயர்சாதி பிரிவினருக்கு உயர்கல்வியில் 10 சதவீத இடஒதுக்கீடு கிடைக்க வழிவகை செய்தது. தொடர்ந்து மருத்துவ படிப்புகளுக்கான சேர்க்கையிலும் பிற்படுத்தப்பட்டோர், பொருளாதார ரீதியாக நலிவடைந்தவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கவேண்டும் என்ற கோரிக்கை வலுத்தது. எனினும், கடந்த ஆண்டு ஜூலை 12-ம் தேதி நீட் தேர்வு தொடர்பான அறிவிப்பை ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அறிவித்தபோது, பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு இல்லாமலேயே தேர்வு நடைபெறும் என்று கூறியிருந்தார். இதனால், பல மாநிலங்களில் போராட்டம் வெடித்தது. ஒன்றிய அரசின் அறிவிப்புக்கு எதிராக திமுக உள்பட சில அமைப்புகளால் உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு அவ்வப்போது விசாரிக்கப்பட்டு வந்தது. கடந்த இரண்டு நாளாக தொடர்ந்து இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், தற்போது அகில இந்திய ஒதுக்கீட்டில் ஓபிசி பிரிவினருக்கு வழங்கப்பட்ட 27 சதவீத இடஒதுக்கீடு செல்லும் என மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு அளித்துள்ளது. அத்துடன், முதுநிலை மருத்துவ படிப்பிற்கான கலந்தாய்வை நடத்தவும் அனுமதி அளித்துள்ளது.

அதேநேரத்தில், பொருளாதாரத்தில் நலிந்த, உயர்சாதி வகுப்பினருக்கான 10 சதவீத இடஒதுக்கீட்டை இந்தாண்டு வழங்கலாம் என உத்தரவிட்டுள்ள உச்சநீதிமன்றம், பொருளாதாரத்தில் பின்தங்கிய உயர்சாதி வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டு வரம்பு செல்லுபடியாகும் தன்மை குறித்து வரும் மார்ச் 3-ம் தேதி தீர்ப்பளிக்கப்படும் எனவும் கூறியுள்ளது.

''இது, சமூகநீதியை பற்றிய புரிதலும், ஆழமான பற்றுதலும் கொண்ட திராவிட முன்னேற்ற கழகத்திற்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் கிடைத்த மிகப்பெரிய வெற்றி, சமூகநீதி வரலாற்றில் முக்கியமான மைல்கல். உச்சநீதிமன்றம் அளித்துள்ள இந்த தீர்ப்பைப் பாராட்டி வரவேற்கிறேன்'' என திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் பாராட்டு தெரிவித்துள்ளார். பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் என்ற பெயரில், உயர்சாதியினருக்கு வழங்கப்படும் 10 சதவீத இடஒதுக்கீடு, அரசியல் சட்டத்துக்கு எதிரானது எனவும் திமுக தொடர்ந்துள்ள வழக்கு அரசியல் சாசன அமர்வு முன் நிலுவையில் உள்ளது. இந்த வழக்கிலும் வெற்றி காண்போம் என முதல்வர் மு.க.ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

உச்சநீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு மூலம் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்த மாணவர்களின் மருத்துவ கனவு, நனவாகியுள்ளது. நாடு முழுவதும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்த 4 ஆயிரம் மாணவர்கள், இனி ஒவ்வொரு ஆண்டும் தங்களுடைய உரிமையை பெறுவார்கள்.

திருச்சியை கலக்கிய முதல்வர் விசிட்!

பார்வைக்கு ஏங்கும் வண்ணத்துப்பூச்சி பூங்கா!

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், கடந்த டிசம்பர் 30-ம் தேதி தஞ்சாவூர், திருச்சி நகரங்களுக்கு வருகை தந்து, பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அன்றைய தினம் காலையில் தஞ்சாவூர் மன்னர் சரபோஜி அரசு கலைக்கல்லூரி மைதானத்தில், அமைக்கப்பட்ட பிரம்மாண்ட விழா மேடையில், நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. மொத்தம் ரூ123.75 கோடி மதிப்பிலான புதிய திட்டப் பணிகளுக்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார். மேலும், ரூ237 கோடி மதிப்பில், 43 ஆயிரம் பேருக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தஞ்சாவூர் மாநகராட்சியில் 18 கோடியே 61 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட இராஜப்பா பூங்கா, சரபோஜி சந்தையில் அமைக்கப்பட்டுள்ள 309 புதிய கடைகளைத் திறந்துவைத்தார். மேலும், வேளாண்மை பொறியியல் துறை, கல்வித்துறை, கால்நடை பராமரிப்புத் துறை, அறநிலையத் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்பாகக் கொண்டுவரப்பட்ட திட்டப்பணிகளைத் தொடங்கிவைத்தார்.

தஞ்சாவூர் நிகழ்ச்சியை முடித்துகொண்டு, பிற்பகலில் திருச்சிக்குச் சென்ற முதல்வருக்கு வழிநெடுக உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. திருச்சியில், கேர் கல்லூரி மைதானத்தில் பிரம்மாண்ட பந்தல், மேடை அமைக்கப்பட்டிருந்தது. விழாவில் கலந்துகொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின், ரூ1,084.80 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். புதிதாகக் கட்டப்பட்ட சத்திரம் பஸ் ஸ்டாண்ட், கால்நடை மருந்தகக் கட்டடங்கள், மாணவியர் விடுதி உட்பட ரூ153 கோடியே 22 லட்சம் மதிப்பிலான நிறைவடைந்த பணிகளை மக்களின் பயன்பாட்டுக்காகத் திறந்துவைத்தார். திருச்சி விழாவுக்கான ஏற்பாடுகளை தமிழக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு முன்னின்று கவனித்துக்கொண்டார். தஞ்சாவூர், திருச்சி

வண்ணத்துப்பூச்சி

திருச்சியில் முதல்வர்

நிகழ்ச்சிகளைச் சிறப்பாக ஏற்பாடு செய்த அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி இருவருக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டுகளைத் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின், "கலைஞரைத் தலைவராக்கிய திருச்சியில் நடைபெறும் விழாவுக்கு, நான் வந்திருக்கிறேன். இங்கு நான் தங்கியிருந்த இடத்திலிருந்து விழா மேடைக்கு வர சில நிமிடங்களே போதும். ஆனால், இங்குவர 2.30 மணி நேரம் ஆகிவிட்டது. சாலையின் இருபுறமும் அதிகளவிலான பொதுமக்கள் திரண்டிருந்தனர். இவர்களின் நம்பிக்கையை நிச்சயம் காப்பாற்றுவோம். திருச்சியில், மனு வாங்கும் சோழனாக வலம் வரும் வாய்ப்பு, எனக்கு கிடைத்துள்ளது. அமைச்சர்கள் கே.என்.நேருவும், அன்பில் மகேஸ் பொய்யாமொழியும் இரட்டையர்களாகச் செயல்பட்டு மாவட்டம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து மக்களிடமிருந்து 78,582 மனுக்களைப் பெற்றுள்ளனர். அவற்றில் 45,088 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. மற்ற மனுக்கள் பரிசீலனையில் உள்ளன. தமிழகத்தில் எந்த தனி மனிதனும் அரசிடம் கோரிக்கை வைக்க மனு இல்லாத ஒரு நிலையை உருவாக்குவதே எனது லட்சியம்.

தமிழகத்தில், ஈ.வெ.ரா., விரும்பிய சமூக நீதி ஆட்சியாகவும், அண்ணாதுரையின் மாநில சுயாட்சியாகவும், கருணாநிதியின் நவீன மேம்பாட்டு ஆட்சியாகவும், காமராஜரின் கல்வி வளர்ச்சி ஆட்சியாகவும், ஜீவா விரும்பிய சமத்துவ ஆட்சியாக இருக்கும் என்று சட்டசபைத் தேர்தலுக்கு முன் திருச்சி மாநாட்டில் தெரிவித்தேன். அத்தகைய ஆட்சியைத்தான் இப்போது நடத்திக் கொண்டிருக்கிறோம். நாட்டில் உள்ள அனைத்து மாநில முதல்வர்களிலும், தமிழக முதல்வர் ஸ்டாலின் முதலிடம் என்பதைவிட தமிழகம் முதலிடம் என்ற நிலை வந்தால்தான் எனக்கு மகிழ்ச்சி ஏற்படும்" என்று நெகிழ்ச்சியாகக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் க.பொன்முடி, எஸ்.ரகுபதி, அர.சக்கரபாணி, மா.சுப்பிரமணியன், பி.மூர்த்தி, எஸ்.எஸ்.சிவசங்கர், சிவ.வீ.மெய்யநாதன், அரசு தலைமைக் கொறடா கோவி.செழியன், டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் மற்றும் எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள் கலந்துகொண்டனர்.

திருச்சியில் பல்வேறு திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்துள்ள முதல்வர் ஸ்டாலினிடம், திருச்சியருகே அமைக்கப்பட்டுள்ள ஆசியாவிலேயே மிகப்பெரிய வண்ணத்துப்பூச்சி பூங்காவுக்கான சாலை வசதிகளை மேம்படுத்தும்படி கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. கடந்த 2015-ம் ஆண்டு, செப்டம்பர் மாதத்தில், மேலூர் நடுக்கரை கிராமத்தில், காவிரி மற்றும் கொள்ளிடம் ஆறுகளுக்கிடையே 27 ஏக்கர் பரப்பளவில், 8 கோடியே 67 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஆசியாவிலேயே மிகப்பெரிய வண்ணத்துப்பூச்சி பூங்காவை ஜெயலலிதா திறந்து வைத்தார். இந்த பூங்கா, உள்ளூர் மக்களின் பொழுது போக்கிற்கு மட்டுமல்லாமல், இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து ஆராய்ச்சி மற்றும் சுற்றுலாவுக்காக வருபவர்களுக்கும் பயனுள்ளதாக இருந்தது.

தமிழ்நாடு அரசின் வனத்துறையால் பராமரிக்கப்பட்டுவரும் இந்த பூங்காவில், 50க்கும் மேற்பட்ட பட்டாம்பூச்சிகளின் வகைகள் உள்ளன. வண்ணத்துப்பூச்சிகளின் இனப்பெருக்கத்திற்காக முன்னூறுக்கும் மேற்பட்ட பல்வேறு வகை தாவரங்கள் வளர்க்கப்படுகின்றன. இந்த பூங்காவிற்கு சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை

www.nakkheeran.in

நாம் எவ்வளவுதான் வளர்ந்து போனாலும்,
சிலர் நம்மை ஒடிக்கத்தான் நினைக்கிறார்கள்



வெறிச்சோடிய பூங்கா

நாட்களில் 2500-க்கும் மேற்பட்டோரும், வார நாட்களில் 1000 பேருக்கு மேலும் வந்து செல்கின்றனர். நுழைவுக் கட்டணமாக பெரியவர்களுக்கு 10 ரூபாயும், சிறியவர்களுக்கு 5 ரூபாயும் வசூலிக்கிறார்கள். அரசுப்பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்களுக்கு கட்டணம் கிடையாது. திருமண போட்டோ ஷூட் என்றால் போட்டோ கேமராவிற்கு 500 ரூபாயும், வீடியோ கேமராவிற்கு 1,000 ரூபாயும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

திருச்சியில் கோவில்களைத் தவிர, முக்கொம்பூர், கல்லணை, வண்ணத்துப்பூச்சி பூங்கா ஆகிய இவை மூன்றும்தான் திருச்சி மக்களின் பொழுதுபோக்கிற்கென உள்ளன. முக்கொம்பூர் மற்றும் கல்லணைக்குச் செல்வதற்கு போதிய அளவில் சாலை வசதிகள் இருக்கின்றன. ஆனால், வண்ணத்துப்பூச்சி பூங்காவிற்கு சரியான சாலை வசதி இல்லை. இந்த பூங்காவிற்கு திருச்சி ஜங்ஷனிலிருந்து 15 கி.மீ. தூரமும், சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து 13 கி.மீ. தூரமும் உள்ளது. இதற்கான சாலை, ஒரேயொரு பேருந்து மட்டுமே போகுமளவுக்கு குறுகலாக உள்ளது. அரசு பேருந்துகள் மிகவும் குறைவாகவே இயக்கப்படுகின்றன. மேலும், இந்த வண்ணத்துப்பூச்சி பூங்காவிற்கு செல்லும் வழி குறித்த விவரங்கள் அடங்கிய அறிவிப்புகள் இதற்கான வழித்தடங்களில் வைக்கப்படவில்லை. எனவே இதுகுறித்த விழிப்புணர்வு வெளிநாட்டுப் பயணிகளுக்கு பெரிதும் இல்லாததால், இங்கு வருகைதரும் வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது. எனவே, இங்குள்ள சாலையை விரிவுபடுத்தி இருவழிச் சாலையாக மாற்ற வேண்டும். திருச்சியின் முக்கிய இடங்களில் வழிநெடுக ஆங்காங்கே வண்ணத்துப்பூச்சி பூங்காவுக்கான அறிவிப்புகள், தமிழ், ஆங்கில மொழிகளில் வைக்கப்பட வேண்டும். ஆசியாவிலேயே மிகப்பெரிய பூங்காவாக இருந்தாலும், அந்த பூங்காவுக்கு எங்கிருந்து, எப்படிச் செல்ல வேண்டும் என்பதைத் தெரியப்படுத்தாமல் இருப்பது சற்று வேதனைக்குரியதாக உள்ளது.

கொரோனா ஊரடங்கு காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக செயல்பாட்டில் இல்லாமல் இருந்ததால் சுற்றுலாப் பயணிகள் வரத்து குறைந்து காணப்பட்டது. ஆனால் கடந்த சில மாதங்களாகத் திறக்கப்பட்ட இந்த பூங்காவுக்கு, வீடுகளில் அடைந்துகிடந்த மக்கள் படையெடுக்க ஆரம்பித்தனர். ஆனால் மீண்டும் நோய் தொற்று அபாயம் ஏற்பட்டதால் அடுத்த அறிவிப்பு வரும்வரை பூங்கா மூடப்பட்டது. எனவே இந்த காலகட்டத்தில் மேம்பாட்டுப் பணிகளைச் செய்து, எதிர்வரும் காலங்களில் அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும்படி செய்யவேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது.

இந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய பழனியாண்டி, பல இடங்களுக்கு செல்கிறார். இளைஞர்களோடு கபடி விளையாடுகிறார். ஆனால் இந்த பூங்காவின் மேம்பாடு குறித்து மட்டும் கவனம் செலுத்தியது இல்லையென்று பொதுமக்கள் வருந்துகின்றனர். இந்த சுற்றுலாத்தலத்திற்கான பாதையை மேம்படுத்தினால் அரசுக்கு வருமானமும் அதிகரிக்கும். எனவே இத்தொகுதியின் எம்.எல்.ஏ. கவனிக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது ஜெயலலிதாவால் தொடங்கப்பட்டது என்றாலும், பாரபட்சம் பார்க்காமல் ஆட்சி நடத்திவரும் முதல்வர் மு.க.ஸ்டாலின், இந்த பூங்காவுக்கான மேம்பாட்டுப் பணிகளையும் கவனத்தில் கொள்ளவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

-துரை.மகேஷ்

ஆசை, புத்தியை மறைக்கும்போது... அறிவு வேலை செய்யாமல் போகிறது

தினகரன்
ஒரு புதிய அனுபவம்
09-Jan-2022

முறைகேட்டுக்கு முற்றுப்புள்ளி

தமிழகத்தில் கடந்த ஆண்டு மே மாதம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக ஆட்சி பொறுப்பேற்றது முதல் அரசு நிர்வாகத்தில் பெரிய மாறுதல்களை சத்தமில்லாமல் செய்து வருகிறார்கள். ஊழலற்ற, நேர்மையான, வெளிப்படையான ஆட்சி இன்று நம் தமிழகத்தில் நடக்கிறது.

கரப்ஷன், கமிஷன், கலெக்ஷன் என எங்கும் ஊழல், எதிலும் முறைகேடு என்று தமிழகத்தை படுபாதாளத்தில் தள்ளியது முந்தைய அதிமுக ஆட்சி. அரசு துறைகளில், நிறுவனங்களில் பணியாளர்களை நியமிப்பதில் இமாலய முறைகேட்டில் எடப்பாடி ஆட்சி ஈடுபட்டது.

உதாரணத்துக்கு 20 நாட்கள் ஊருவிட்டு ஊரு தப்பி ஓடி கர்நாடகாவில் போலீசிடம் சிக்கிய மாஜி அமைச்சர், ராஜேந்திர பாலாஜி மீதான குற்றம் என்ன தெரியுமா? பால்வளத் துறை அமைச்சர் பொறுப்பு வகித்த அவர், ஆவின் நிறுவனத்தில் வேலை வாங்கித் தருவதாக ₹3.10 கோடி மோசடி செய்ததாக குவிந்த புகார்கள்தான். ஏமாந்தவர்கள் ஒருபுறம் இருக்க, போதுமான தகுதி, திறமை இல்லாமல் பணத்தை மட்டுமே கொடுத்து வேலை வாங்கியவர்கள் பலர். ஆட்கள் தேவைக்கான அறிவிக்கை கூட வெளிப்படையாக அறிவிக்கப்படாமல், ரகசியமாகவே பணிநியமனங்கள் நடந்து முடிந்த சம்பவங்கள் அதிமுக ஆட்சி காலத்தில் ஏராளம். பணம் வாங்கிக் கொண்டு ஆட்களை நியமித்தாலும் எழுத்து தேர்வு, நேர்காணல் என்ற நாடகங்களும் அரங்கேற்றப்பட்டன. ஆனால், அவை நியமனங்களில் திறமைக்கு முக்கியத்துவம் அளிக்காமல் முறைகேடுகளும், ஊழல்களும் பெருக வழி வகை செய்தன.

இது குறித்து திமுக வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி), ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திட வெளிப்படையான நேர்மையான தேர்வு முறை நடந்திட அனைத்து நடவடிக்கைகளும் உறுதியாக மேற்கொள்ளப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டிருந்தது.

இந்த வாக்குறுதியை நிறைவேற்றிடும் வகையில், புதிய சட்டம் ஒன்றை தமிழக சட்டப்பேரவை நிறைவேற்றியுள்ளது. இதன் மூலம். அரசுக்கு சொந்தமான பொதுத்துறை நிறுவனங்கள், அரசு கழகங்கள் மற்றும் சட்டப்பூர்வமான வாரியங்கள், மாநில அரசின் கட்டுப்பாட்டின்கீழ் வரும் அதிகார அமைப்புகளில் உள்ள பணியிடங்கள் டி.என்.பி.எஸ்சி மூலம் நிரப்பப்படும். இந்த ஒரே சட்டத்தின் மூலம் அதிமுக ஆட்சி காலத்தில் நடந்த பணிநியமன முறைகேடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

பொதுத்துறை நிறுவனங்கள் அனைத்துக்கும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் போட்டித் தேர்வுகளை நடத்தி பணியாளர்களை தேர்வு செய்வது, நியமனங்களில் ஊழலைத் தடுக்க உதவும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. வெளிப்படையான பணியாளர் தேர்வு, ஏழை, எளிய, கிராமப்புற இளைஞர்களுக்கு வரப்பிரசாதமாகும். தகுதியும், திறமையும் இருந்தால் அரசு வேலை நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை தமிழக இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. அரசு பணியாளர் தேர்வில் வெளிப்படைத்தன்மையை புகுத்தியுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வேலை தேடி வரும் இளைஞர்கள் சார்பில் நன்றி.

முரசொலி
10-Jan-2022

முதல்வர் மு.க.ஸ்டாலினின் நல்லாட்சி தொடரட்டும்..!

நான் 18 வயதில் ஓட்டு போடும்போதும் நீங்கதான் முதல்வர்!

ஜெய்பீம் புகழ் ஜோஷிகா மாயாவின் எதார்த்தமான பேச்சு!

சென்னை, ஜன.10–

"நான் 18 வயதில் ஓட்டுபோடும் போது நீங்கதான் முதல்வரா இருப்பீங்க" என்று ஜெய் பீம் படத்தில் அல்லியாக நடித்து புகழ் பெற்ற சிறுமி ஜோஷிகா மாயா, டி.எஸ்.எம். இணைய தளத்திற்கு எதார்த்தமான பேட்டியளித்துள்ளார்.

ஜெய்பீம் புகழ் ஜோஷிகா மாயா சிறுமியின் பேட்டி வருமாறு :–

மதிப்பிற்குரிய முதலமைச்சர் ஐயா அவர்களுக்கு வணக்கம்!

ஜெய்பீம் படத்தில் நடித்த அல்லி பேசுகிறேன். ஒடுக்கப்பட்ட மக்களுக்காக நீங்க 'ஜெய்பீம்' பிரிவ்யூ ஷோ பார்த்து அவர்களுக்கு பட்டா வழங்கி கொடுத்தீங்க, வீடு கட்டிக் கொடுத்து அவங்க வரலாற்றையே மாத்திட்டீங்க அங்கிள்;

குழந்தைகளுக்கெல்லாம் நிறைய நலத்திட்ட உதவிகள் செய்து இருக்கீங்க, நான் உங்ககிட்டே இருந்து நிறைய விஷயங்களை கத்துக்கிட்டேன், நான் இன்னும் உங்ககிட்ட இருந்து நிறைய விஷயங்களைக் கத்துப்பேன்.

உங்க ஆட்சியில் நிறைய பேருக்கு நிறைய நலத்திட்ட உதவிகள் நடந்துகிட்டு இருக்கு, இந்த கொரோனா காலத்தில் உங்க உயிரைக்கூட நீங்க பெரிசா எடுத்துக்காம, நீங்க எங்களுக்காக இரவும் – பகலுமா வேலை பார்த்துக்கிட்டு இருக்கீங்க. இந்த மாதிரி முதலமைச்சர் ஐயா கிடைத்ததற்கு நாங்க எல்லாம் பெருமைப்படுகிறோம்.

எனக்கும் ஓட்டுப்போடணும்னு ஆசையா இருக்கு. ஆனா எனக்கு இப்போ 8 வயதுதான் ஆகுது;

18 வயது ஆகும்போது என்னுடைய முதல் ஓட்டே உங்களுக்குத்தான் அங்கிள்.

அப்பவும் நீங்கள்தான் முதலமைச்சரா இருப்பீங்க!

உங்களுடைய நல்லாட்சி தொடரட்டும்!

இவ்வாறு சிறுமி ஜோஷிகா மாயா பேட்டியளித்தார்.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்
10-Jan-2022

அலட்சியம் வேண்டாம்

தமிழகத்தில் 3வது அலையாக பரவ ஆரம்பித்துள்ள கொரோனா மற்றும் ஒமிக்ரான் பரவலை கட்டுப்படுத்த அரசு இரவு நேர ஊரடங்கு மற்றும் ஞாயிறன்று முழு ஊரடங்கு அறிவித்தது. கடந்த சில மாதங்களாக கொரோனா குறித்த அச்சத்தை மக்கள் மறந்து விட்டதாகவே தெரிகிறது. அனைத்து இடங்களிலும் மக்கள் சமூக இடைவெளியின்றி கூட்டமாக கூடினர். மாஸ்க் அணிவது உள்ளிட்ட கொரோனா தடுப்பு விதிமுறைகளை பலர் மறந்தே விட்டனர். கொரோனா வைரஸ் இந்தியாவை விட்டு முழுவதும் போகவில்லை. தற்போது 3வது அலையாக வந்து உலுக்கிக் கொண்டிருக்கிறது என்பதை மக்களுக்கு முதலில் நினைவுபடுத்துவதற்காக தமிழக அரசு இரவு ஊரடங்கை அமல்படுத்தியது.

கொரோனா பரவல் மீண்டும் அதிகரித்துள்ள நிலையில், திருவிழாக்கள், மதம் சார்ந்த கூட்டங்கள், சுற்றுலா நடவடிக்கைகளுக்கு அரசு கட்டுப்பாடுகள் விதித்திருப்பது நல்ல முடிவாகவே தெரிகிறது. இதனால் கொத்துக்கொத்தாக பரவும் கொரோனா பரவலை தவிர்த்திட முடியும். பெரு நகரங்களில் ஞாயிறு அன்று மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும். எனவே ஞாயிறு ஒருநாள் முழு ஊரடங்கு அமல்படுத்தியதும் மக்கள்தொகை நெருக்கமுள்ள நகரங்களில் கொரோனா பரவலை தடுக்கும் முயற்சியில் நல்ல பலனளிக்கும்.

தமிழகத்தில் அமல்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாகவும் பொது நிகழ்ச்சிகளில் பொதுமக்கள் கலந்து கொள்வதை குறைத்துக் கொள்வதன் மூலமும் மேலும் தொற்றுப் பரவாமல் தடுக்க முடியும். மற்ற மாநிலத்தைவிட தமிழகத்தில் கொரோனா குறைவாக இருப்பதாக நினைத்து மக்கள் வெளியே வரக்கூடாது. தமிழகத்தில் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் காரணமாக, நாள்தோறும் பதிவான கொரோனா உறுதி செய்யப்படுவோரின் எண்ணிக்கை சற்று குறைந்துள்ளது. இன்னும் தீவிரமாக கட்டுப்பாட்டை பின்பற்றினால், கொரோனா பரவல் குறையும் நிலையை அடையலாம் என சுகாதாரத் துறை செயலாளர் ராதாகிருஷ்ணன் கூறியுள்ளது கவனிக்கத்தக்கது.

மனிதர்களுக்கிடையேயான தொடர்புகள் அதிகரித்துள்ளதால், வைரஸ் பரவலுக்கான வாய்ப்பு நிறையவே உள்ளது என்றும் கொரோனா பரவல் மீண்டும் கட்டுப்பாடற்ற நிலையை அடைந்தால் அது முழு ஊரடங்கை நோக்கியே செல்லும் எனவும் உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது

அடுத்த சில நாட்கள் மக்கள் தேவையின்றி வெளியே வரக்கூடாது. வீட்டின் அருகிலேயே கிடைக்கும் பொருட்களை வாங்கிக்கொள்ள வேண்டும். கூட்டம் அதிகமுள்ள மார்க்கெட் போன்ற இடங்களை தேடிச் செல்வதை தவிர்க்கலாம். கொரோனா வைரஸ் ஏதாவதொரு வடிவத்தில் எப்போதும் உலகில் தொடர்ந்து இருக்கும் என்று பிரிட்டன் அரசின் அவசரநிலைகளுக்கான அறிவியல் ஆலோசனைக் குழு தெரிவித்துள்ளதை நினைவில் கொள்ளுங்கள். தடுப்பூசி போடுவதில் அலட்சியம் காட்டாமல் உடனே செலுத்திக் கொள்வதும், வழிகாட்டு நெறிமுறைகளை சரியாகப் பின்பற்றுவதுமே 3வது அலையின் வேகத்தை தடுக்க உதவும்.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
10-Jan-2022

முதல்-அமைச்சரின் பதில் உரை ஒரு மதிப்பீடு அட்டை

தமிழக கவர்னராக ஆர்.என்.ரவி பதவியேற்ற பின் சட்டசபையில், முதல் கவர்னர் உரையை கடந்த 5-ந்தேதி ஆற்றினார். இந்த கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது சட்டசபையில் நடந்த விவாதத்தில் அனைத்து கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்கள் பேசிய பிறகு, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பதில் உரை அளித்தார். சட்டசபையில் கவர்னர் உரையில் நிறைய அறிவிப்புகளை எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் கவர்னர் உரை என்பது அரசின் கொள்கைகள், அரசு செல்லப்போகும் பாதை ஆகியவற்றை கோடிட்டு காட்டுவதாகத்தான் இருக்கும். இதைத்தான் மறைந்த பேரறிஞர் அண்ணா 6-5-1957-ம் ஆண்டே கவர்னர் உரை என்றால் என்ன? என்பதை தெள்ளத் தெளிவாக விளக்கிவிட்டு சென்று இருக்கிறார். "பொதுவாக ஆட்சியாளர்களுடைய கொள்கைத் திட்டங்களை விளக்குவதே கவர்னருடைய பேருரை என்பதும், அந்த கொள்கை திட்டங்களுக்கு ஏற்ப நிதியை பகுத்தளிப்பதாகிய புள்ளி விவரங்களை கொண்டதே வரவு-செலவு திட்டம் (பட்ஜெட்) என்பதும்தான், நான் அறிந்துள்ள வரையில் உணர்ந்து இருக்கிறேன்" என்று கூறினார்.

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினும் அண்ணா வழியில் இந்த பதில் உரையில் பல விளக்கங்களை

அளித்து இருக்கிறார். தன் உரையை, கடந்த மே மாதம் 7-ந்தேதியில் இருந்து அவருடைய தலைமையிலான அரசு ஆற்றிய பணிகளின் 'ரிப்போர்ட் கார்டு' என்று சொல்லப்படும் மதிப்பீடு அட்டையாக வெளிக்காட்டி உள்ளார். இதுவரை அவர் தலைமையிலான அரசு தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கை, வேளாண் நிதிநிலை அறிக்கை, விதி எண் 110-ன் கீழான அறிவிப்பு உள்ளிட்டவை பல்வேறு தருணங்களில் இந்த 8 மாதங்களில் 1,641 அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. இதில் 1,238 அறிவிப்புகளுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டு இருக்கின்றன. அதாவது, வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் 75 சதவீத அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டு உள்ளன. மீதம் உள்ள 24 சதவீத அறிவிப்புகள், அதாவது 389 அறிவிப்புகளை செயல்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பல்வேறு கட்டங்களில் இருக்கின்றன. 1 சதவீத அறிவிப்புகள் அதாவது, 14 அறிவிப்புகள் மட்டும் ஒன்றிய அரசிடம் நிலுவையில் உள்ளன. இப்படி அறிவிப்புகளை, அதனை செயல்படுத்தும் விதத்தை வெளிப்படையாக அறிவித்து ஒளிவு மறைவு இல்லாத நிர்வாகம் கொடுக்கும் அரசாக இந்த அரசு விளங்குகிறது என்று மிகப் பெருமையோடு கூறினார். இது மிகவும் வரவேற்கத்தக்க ஒரு அம்சம் ஆகும்.

வெறுமனே அறிவிப்புகளை மட்டும் சொல்லிவிட்டு அது நிறைவேறியதா?, நிறைவேறவில்லையா? அதன் நிலை என்ன ஆனது? என்று தெரியாமல் மக்கள் குழப்பத்தில் ஆழ்ந்து விடுவதை தவிர்க்க இத்தனை அறிவிப்புகளை வெளியிட்டோம், இத்தனை அறிவிப்புகளை நிறைவேற்றினோம் என்று சொல்வது நல்ல முன் உதாரணமாக இருக்கிறது. அது போல தேர்தலில் வெற்றி பெற்ற நாளில் இருந்து 'இது எங்களுடைய அரசு அல்ல. நம்முடைய அரசு. உங்களுடைய அரசு' என்று சொல்லி வரும் மு.க.ஸ்டாலின், இந்த பதில் உரையின் போது கூட, எதிர்க்கட்சியினரை நோக்கி, 'நாங்கள் இந்த பக்கம், நீங்கள் அந்த பக்கம் என்று ஒரு அடையாளத்துக்காக தான் உட்கார்ந்து இருக்கிறோம். நாம் எல்லோரும் சேர்ந்து மக்களின் பக்கம்தான் என்பதை மக்களுக்கு சேவை செய்வதன் மூலம் எதிர்கால தமிழகத்தை ஒளிமயமாக்குவோம்' என்று கூறியது நிச்சயமாக பாராட்டுக்குரியது. தேர்தல் அறிக்கையில் சொன்னதை மட்டும் அல்ல. சொல்லாதவைகளான 'இல்லம் தேடி கல்வி', 'மக்களை தேடி மருத்துவம்', 'இன்னுயிர் காப்போம்-நம்மை காக்கும் 48 திட்டம்' போன்ற திட்டங்களை நிறைவேற்றி இருப்பதையும் எடுத்துக்கூறினார். மொத்தத்தில் முதல்-அமைச்சரின் பதில் உரை அரசின் செயல்பாடுகளை மக்கள் மதிப்பீடு செய்வதற்கு, உகந்த வழியில் ஒரு சாதனை விளக்க உரையாக அமைந்திருந்தது.

SON RISE IN TAMIL NADU

In May, the 68-year-old M.K. Stalin–who had long waited in the wings of his illustrious father, M. Karunanidhi–led the DMK to victory in Tamil Nadu after a gap of a decade. Political observers had often predicted the DMK's return–as time passed, the AIDMK battled increasing anti-incumbency as well as the vacuum left after J. Jayalalithaa's passing–but Stalin's success also results from his attention to detail. Based on grassroots feedback curated by political strategist Prashant Kishor, Stalin developed a sustained and massive campaign with catchy slogans and promises like Rs 1,000 per month to every woman-headed household, a reservation of 75 per cent of jobs in industry for Tamils, an increase in reservations for women in government jobs to 40 per cent and the appointment of 215 people from various caste groups as priests in temples. Promises apart, he also put out a 'vision document' to spell out his priorities. Now, the challenge is for his government to deliver on these promises

வெற்றி காண்போம்

தமிழக மக்களின் தேவைகளை அறிந்து, பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. புதுப்புது திட்டங்கள் மூலம் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த முடியும் என்பதால், அதற்கு ஏற்ப திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழக அரசின் எந்த திட்டத்தையும் குறை சொல்ல முடியாத அளவுக்கு அரசின் செயல்பாடு மிக சிறப்பாக உள்ளது. தமிழகம் அனைத்து துறைகளிலும் முன்னேறி வருகிறது. பேரிடர் உள்ளிட்ட சவால்களை எதிர் கொண்டாலும், முதல்வரின் முயற்சியால் விரைவில் மக்கள் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளனர்.

திட்டங்களை அறிவிப்பதிலும், அதை விரைந்து செயல்படுத்துவதிலும் தமிழக அரசு சுறுசுறுப்பாக செயல்பட்டு வருகிறது. குறைந்த காலத்தில் ஏராளமான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. முக்கியமாக, தமிழகத்தில் உள்ள அனைத்து பகுதிகளும் முதல்வருக்கு நன்கு தெரியும். அந்த அளவுக்கு அவர் அனைத்து இடங்களுக்கும் சென்று மக்களை நேரில் சந்தித்து, அவர்களின் குறைகளை கேட்டறிந்துள்ளார். அதனால் தான் "மக்களின் முதல்வர்" என பொதுமக்கள் அழைத்து வருகின்றனர். மு.க.ஸ்டாலின் முதல்வராக கிடைத்தது தமிழகத்துக்கு பெருமை என மக்கள் புகழாரம் சூட்டியுள்ளனர். அனைத்து தரப்பு மக்களின் வாழ்வாதாரத்தையும் உயர்த்த தமிழக அரசு வியூகங்கள் வகுத்து செயல்பட்டு வருகிறது. தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் ஆக்கப்பூர்வமான திட்டங்கள் மக்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது. நமக்கான முதல்வர் மு.க.ஸ்டாலின் என்று மக்கள் சொல்லி வருகின்றனர். மனுக்கள் அளித்தால், தீர்வு கிடைக்கும் என மக்கள் நம்புகின்றனர். இதனால் தான் ஏராளமான மக்கள் மனு அளிக்கின்றனர். தகுதியுள்ள மனுக்கள் மீது தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. முதல்வரின் முயற்சியால் தான் குறுகிய காலத்தில் தமிழகம் வளர்ச்சியை நோக்கி பயணிக்க துவங்கியுள்ளது.

அடுத்த தலைமுறையினரும் பாராட்டி வரும் வகையில் திடமான கட்டமைப்புகளை முதல்வர் ஏற்படுத்தி வருகிறார். அனைத்து தரப்பு மக்களின் எண்ணங்களையும் முதல்வர் நிறைவேற்றி வருகிறார். சமீபகாலமாக மக்களை குழப்பவும், பிளவுபடுத்தவும், சமுதாயத்தில் வன்முறை தூண்டும் வகையில் அவதூறு பரப்பப்பட்டன. இவைகள் அனைத்தும் தமிழக மக்களிடம் தவிடு பொடியானது. இதனால் சிலர் கலக்கம் அடைந்துள்ளனர். முக்கியமாக, முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு மக்களை அச்சுறுத்தி வந்த கொரோனா கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

கொரோனா பரவல் கட்டுக்குள் இருக்க வேண்டும் என்பதற்காகவே ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மக்கள் நலன் கருதி கூடுதல் கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது. தமிழக அரசு அறிவித்துள்ள ஊரடங்கிற்கு பொதுமக்களும் முழு ஆதரவு அளித்து வருகின்றனர். முக்கியமாக, அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை ஒவ்வொருவரும் கடைபிடித்து நடந்தால் பரவலை கட்டுக்குள் கொண்டு வந்து விடலாம். கொரோனா குறித்து அச்சம் வேண்டாம். விழிப்புணர்வு இருந்தாலே போதும். மக்களின் முழு ஒத்துழைப்போடு கொரோனா (ஒமிக்ரான்) பரவலை கட்டுப்படுத்தி தமிழக அரசு வெற்றி காணும்.

தமிழ் முரசு

11-Jan-2022

மாற்றுத்திறனாளிகள் சங்கம்

முதல்வருக்கு பாராட்டு

சென்னை, ஜன.11-

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்றச் சங்க மாநில தலைவர் ரெ.தங்கம் வெளியிட்ட அறிக்கை:

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் முதல்வராக பொறுப்பேற்ற நாள் முதல் மாற்றுத் திறனாளிகள் சமூகத்திற்கு பல்வேறு வரலாற்று சிறப்புமிக்க திட்டங்களை வாரி வழங்கி வருகிறார். கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளின் நீண்டநாள் கனவான மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகையை ரூ.2000 ஆகவும் உயர்த்தி வழங்கி ஆணையிட்டு, மாற்றுத்திறனாளிகள் சிரிப்பில் கலைஞரை கண்ட முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி. மேலும், தமிழ்நாடு கூட்டுறவு சங்க தேர்தலில் கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளும் போட்டியிடலாம் என்ற சட்டமசோதாவை நிறைவேற்றியமைக்கும், தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் முன்னேற்றச் சங்கம் சார்பாக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

நீட் தேர்வை — இந்தித் திணிப்பை எதிர்ப்பதில்

ஜெயலலிதாவிடம் இருந்த துணிச்சலை இன்று ஸ்டாலினிடம் காண்கிறேன்!

கவிஞர் முத்துலிங்கம் பாராட்டு!!

சென்னை, ஜன.11

நீட் தேர்வை எதிர்ப்பதிலும் இந்தித் திணிப்பை எதிர்ப்பதிலும் அன்று ஜெயலலிதாவிடம் இருந்த துணிச்சலை இன்று ஸ்டாலினிடம் காண்கிறேன் என்று பள்ளி ஆண்டு விழா ஒன்றில் பேசும் போது கவிஞர் முத்துலிங்கம் பாராட்டினார்.

சென்னை செங்குன்றத்தை அடுத்த பாடியநல்லூர் மதர் தெரசா பள்ளியின் '15ஆவது ஆண்டு விழா' அண்மையில் நடைபெற்றது.

இதில் முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி எஸ்.கே. கிருஷ்ணன், முன்னாள் மாவட்ட நீதிபதி புகழேந்தி, பேராசிரியர் ராசகோபாலன், டி.கே.எஸ்.கலைவாணன் ஆகியோர் கலந்து கொண்டனர். பள்ளி நிறுவனர் பேராசிரியர் முனைவர் செல்வகுமார் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

இந்த விழாவுக்குத் தலைமையேற்று திரைப்படப் பாடலாசிரியரும் மேனாள் அரசவைக் கவிஞரும் அ.தி.மு.க. நட்சத்திரப் பேச்சாளருமான கவிஞர் முத்துலிங்கம் சிறப்புரையாற்றினார்.

அவர் பேசுகையில் கூறியதாவது:

டாக்டர். செல்வகுமார் ஆறு திருக்குறள் மாநாட்டை இதுவரை நடத்தியிருக்கிறார் என்று பெருமைப்படுகிறேன். தமிழ்நாட்டில் திருக்குறளுக்கு முதன் முதல் மாநாடு நடத்தியவர் பெரியார்தான். அதன்பிறகு பேராசிரியர் இலக்குவனார் திருநெல்வேலி இந்துக்கல்லூரியில் பணியாற்றிய போது மூன்று நாள் திருக்குறள் மாநாட்டை நடத்தினார். அதற்குப்பிறகு பேராசிரியர் செல்வகுமார்தான் ஆறுமுறை தொடர்ந்து திருக்குறள் மாநாட்டை நடத்தியிருக்கிறார்.

மாநில பாடல்

"நீராரும் கடலுடுத்த" என்ற மனோன்மணியம் சுந்தரனார் பாடலை தமிழ்நாட்டின் மாநிலப் பாடலாக அரசு அறிவித்து எல்லாரும் அப்போது எழுந்து நிற்க வேண்டுமென்று முதலமைச்சர் ஸ்டாலின் அரசாணை பிறப்பித்திருக்கிறார். தமிழ் உணர்வாளர்கள் அனைவரும் அதை வரவேற்கிறார்கள். ஸ்டாலினைப் பாராட்டுகிறார்கள்.

அதைப்போல நீட் தேர்வை தமிழ்நாட்டில் ரத்து செய்து ஏழை எளிய கிராமப்புற மாணவர்கள் மருத்துவம் படிக்கப் பெரிய அளவில் பாடுபடுகிறார். அதற்கு உறுதுணையாக இருப்போம் என்று எங்கள் கட்சித் தலைவர்கள் எடப்பாடி பழனிச்சாமியும் வைத்தியலிங்கமும் சட்டமன்றத்திலே கூறி இருக்கிறார்கள். நான் இருக்கும்காலம்வரை நீட் தேர்வை அனுமதிக்கமாட்டேன். இந்தி திணிப்பையும் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று துணிவோடு அன்றைக்குச் சொன்னவர் ஜெயலலிதா அம்மா தான்.



கவிஞர் முத்துலிங்கம்

துணிச்சல்

அவரைப்போல நீட் தேர்வை இந்தித் திணிப்பை எதிர்க்கக்கூடிய முதலமைச்சராக இன்று ஸ்டாலின் இருக்கிறார். அந்தவகையில் அவரை நான் பாராட்டுகிறேன்.

ஆனால் பா.ஜ.க. மட்டும் ரத்து செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறது. தொடர்ந்து நீட் தேர்வை பா.ஜ.க. ஆதரிக்குமானால் வரக்கூடிய மாநகராட்சித் தேர்தலில் ஒரு வார்டில் கூட அது ஜெயிக்க முடியாது என்பதை அந்தக் கட்சி உணர வேண்டும். தமிழ் மக்களின் உணர்வுகள் புரியாமல் அது விளையாடிக் கொண்டிருக்கிறது. அதன் ஆட்டத்திற்கு மற்ற கட்சிகளின் ஒத்துழைப்போடு ஸ்டாலின் முற்றுப்புள்ளி வைப்பார் என்று நம்புகிறோம்.

நீட் தேர்வு ரத்து செய்யப்பட வேண்டும் என்பதற்காக சந்திக்கச் சென்ற தமிழக அனைத்துக்கட்சி உறுப்பினர்களைச் சந்திக்க மறுத்த உள்துறை அமைச்சரின் போக்கு மிகவும் கண்டிக்கத் தக்க ஒன்று.

மாநிலப் பட்டியல்

மேலும் 1970க்கு முன்பு இருந்ததைப் போல் கல்வியை 'மாநிலப்' பட்டியலுக்கு மீண்டும் கொண்டு வருவதற்கு ஸ்டாலின் முயற்சிக்க வேண்டும்.

மாநிலப் பட்டியலில் கல்வி வந்தால்தான் தமிழ்நாட்டு வரலாறுகளை மாணாக்கர்களுக்குச் சொல்லித்தர முடியும். நீட் தேர்வு ரத்துக்குப் பாடுபடுவதைப் போல கல்வியை மத்தியப் பட்டியலில் இருந்து மாநிலப் பட்டியலுக்கு கொண்டுவருவதற்கும் போராட வேண்டும்.

இவ்வாறு கவிஞர் முத்துலிங்கம் பேசினார்.

முரசொலி

12-Jan-2022

ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரி அரசு ஏற்பு!

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜன.12–

ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரி அரசுக் கல்லூரியானது என்றும் வரவேற்கத்தக்கது முதலமைச்சருக்கு நன்றி கூறுகிறோம் என்றும் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கையில் கூறியுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

ஈரோட்டில் சிக்கய்ய நாயக்கர் கல்லூரியை அரசுக் கல்லூரியாக மாற்ற பல ஆண்டுகளாக 1400 மாணவர்களும் ஆசிரியர்களும் வாதாடி, போராடி வந்தனர். இப் போது நமது விடியல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காலத்தில்தான் அதுவும் விடிந்திருக்கிறது – முடிந்திருக்கிறது.

அந்தக் கல்லூரியின் தலைவர் தந்தை பெரியார்

தான். அய்யாபெரிதும் அதை சிக்கய்ய நாயக்கர் மேற்பார்வையிலேயே விட்டார், அவருக்குப்பின் பலவகை கோளாறுகள் ஏற்பட்ட நிலையில், நமது முதல் அமைச்சர் அதை அரசுக் கல்லூரியாக நேற்று (10.1.2022) அறிவித்திருப்பதோடு, உச்சநீதிமன்றம் 27 சதவிகித ஒதுக்கீடு – பிற்படுத்தப் பட்டவர்களுக்கு அறிவித்திருப்பதும், அதன்படி முதன் முதலில் மத்திய தொகுப்பில் 27 சதவிகித இட ஒதுக்கீடு கிடைத்து, செயல்படுவதும் பெரியாருக்குக் காணிக்கை' என்று பூரிப்புடன் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கல்லூரியும் பெரியார் விரும்பியபடி சிறந்த கல்லூரியாக வளருவதற்கு இந்த ஏற்பாடு வரவேற்கத் தகுந்ததாகும்.

இதற்காகப் பெரியார் தொண்டர்கள் சார்பாக வும், ஈரோடு மக்கள் சார்பாகவும் முதலமைச்சருக்கு நாம் நன்றி செலுத்துகிறோம். கல்வி நெறிக்காவலர் நெது சுந்தரவடி வேலு பெயரில் பெரியார் பரிசளிக்க நன்கொடை அளித்து நடந்து வந்த சிறப்புத் தகுதியும் அக் கல்லூரிக்கு உண்டு.

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மாலை மலர்

12-Jan-2022

நிம்மதியை தந்த அரசு ஒத்துழைக்க வேண்டும் மக்கள்

இனிமை தரும் பொங்கலுக்கு பிறகு கசப்பான அனுபவம் தேடி வருமோ என்ற அச்சம் எல்லோர் மனதிலும் இருந்தது. குறிப்பாக அப்படிப்பட்ட ஒரு தகவல்கள் சமூக வலைதளங்களிலும் பரப்பப்பட்டது.

சில நேரங்களில் வதந்திகள் கூட சந்தர்ப்ப சூழ்நிலைகளால் உண்மை என்று நம்பும் நிலையை ஏற்படுத்தி விடும். அப்படித்தான் இப்போதும் தினமும் ஆயிரக்கணக்கில் பரவி பயமுறுத்தி கொண்டிருக்கும் கொரோனா தொற்றால் எப்படியும் முழு ஊரடங்கு வரும் என்ற வதந்தி கொரோனாவை விட வேகமாக தமிழகம் முழுவதும் பரவியது.

2-வது அலையின் போது இதைவிட குறைவான பரவல்தான் இருந்தது. அப்போதே முழு ஊரடங்கு அமலுக்கு வந்தது. ஆனால் இப்போது அதைவிட 4 மடங்கு அதிக எண்ணிக்கையில் தொற்று பதிவாகிறது.

எனவே முழு ஊரடங்கு தவிர்க்க முடியாதது என்ற கருத்து நம்பும்படியாக இருந்தது. ஆனால் தமிழகத்தில் இனி முழு ஊரடங்கு தேவையில்லை என்று அரசு அறிவித்து இருப்பது வதந்திக்கு மட்டும் முற்றுப்புள்ளி வைக்கவில்லை. மக்களின் பீதிக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டது.

முழு ஊரடங்கு என்பது ஏதோ ஒரு விதத்தில் எல்லா தரப்பு மக்களுக்கும் ஒரு கசப்பான அனுபவத்தை நிச்சயம் கொடுக்கும். ஏற்கனவே ஊரடங்கு காலத்தில் அப்படிப்பட்ட அனுபவங்களை அனுபவித்து விட்டோம். எனவேதான் இனி அப்படி ஒரு ஊரடங்கு வரக்கூடாது என்று கருதுகிறோம்.

அரசும் இந்த விசயத்தில் தெளிவாக இருப்பது பாராட்டுக்குரியது. தொற்று பரவல் என்பது கை மீறி போய்விட்டது. சென்னையில் மட்டும் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொரோனா தொற்றுக்கு ஆளாகி இருக்கிறார்கள்.

இதேபோல் தமிழகம் முழுவதும் பல்லாயிரக்கணக்கில் பாதிக்கப்பட்டு உள்ளார்கள். இவர்கள் எல்லோரையும் ஆஸ்பத்திரிக்கோ அல்லது கொரோனா பராமரிப்பு மையங்களுக்கோ வரவழைத்து, தங்க வைத்து சிகிச்சை அளிப்பது என்பது கூடுதலான கொரோனா பரவலுக்கும் வழி வகுத்து விடும்.

இதை கருத்தில் கொண்டு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கொரோனாவை கட்டுப்படுத்தும் முயற்சியில் புதிய முறைகளை கையாண்டிருப்பது வரவேற்கத்தக்கது. லேசான தொற்று இருப்பவர்கள் வீடுகளிலேயே தனிமைப்படுத்தி கொள்ளலாம்.

ஒருவேளை வீடுகளில் மற்ற குடும்ப உறுப்பினர்களும் இருப்பதால் தனிமைப்படுத்தி கொள்வது சாத்தியம் இல்லை என்று கருதுபவர்கள் மட்டும் கொரோனா பராமரிப்பு மையங்களுக்கு வந்து விடலாம்.

அதேபோல் இணை நோய்கள் ஏதாவது இருந்தால், மூச்சு விடுவதில் சிரமம் இருந்தால், உடல் நிலையில் ஏதாவது மாற்றங்கள் தெரிந்தால் அவர்களும் ஆஸ்பத்திரிகளுக்கு வந்துவிடலாம் என்று 3 பிரிவுகளாக பிரித்து கொரோனாவை அடக்க மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளால் மக்களிடம் தேவையற்ற பீதியும், பயமும் கட்டுப்படுத்தப்படுகிறது.

முழு ஊரடங்கு மட்டுமே கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கு முழு-தீர்வு ஆகாது என்பது உலக சுகாதார நிறுவனத்தின் கருத்தும்கூட. இதை அந்த நிறுவனத்தின் தலைமை விஞ்ஞானி சவுமியா சமீபத்தில் தெரிவித்து இருந்தார்.

தெரிந்தோ, தெரியாமலோ உலகத்தில் புகுந்து விட்ட இந்த புதிய வைரஸ் டெல்டா, ஒமைக்ரான், புளோரினா என்று மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ வடிவங்களில் வரலாம். எப்படியும் நம்மை விட்டு முற்றிலுமாக அவை ஒழிந்துவிட போவதில்லை.

ஏராளமான வைரஸ்கள் இருக்கும் நிலையில் அதோடு இதுவும் ஒன்று என்ற ரீதியில் நம்மோடுதான் பயணிக்க போகிறது. நாமும் அதோடுதான் வாழ்க்கையை நடத்த போகிறோம் என்பது தெரிந்து விட்டது.

இந்த சூழ்நிலையில் அவற்றில் இருந்து தற்காத்து கொள்வதற்கான வழிமுறைகளை மட்டும்தான் நாம் தேட வேண்டும். அந்த ரீதியில் இப்போது பொருளாதாரத்திற்கும் பாதிப்பு ஏற்படக்கூடாது. மக்களின் வாழ்வாதாரத்திற்கும் பிரச்சினை வரக்கூடாது என்பதற்காக முழு ஊரடங்கை தவிர்த்து புதிய முறைகளில் கொரோனாவை கட்டுப்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுத்து இருப்பது நிச்சயம் மக்களுக்கு நிம்மதியை கொடுத்திருக்கும்.

பாம்பும் சாக வேண்டும். குச்சியும் ஒடிந்துவிடக்கூடாது என்பதை போல கொரோனாவும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். மக்களும் பாதிக்கப்படக்கூடாது என்ற எண்ணத்தோடு தமிழக அரசு எடுத்து வரும் நடவடிக்கை பாராட்டுக்குரியது. இந்த நடவடிக்கை வெற்றிபெற, முழு பயன் அளிக்க மக்களின் ஒத்துழைப்பு மிக அவசியம்.

பொங்கல் கருணைக்கொடை உயர்வு: திருக்கோயில் பணியாளர்கள் சங்கம் நன்றி

சென்னை, ஜன. 13–

பொங்கல் கருணைக்கொடையை உயர்த்தி வழங்கிய தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்து திருக்கோயில் பணியாளர்கள் சங்கம் சார்பில் தீர்மானம் நிறைவேற்றம்.

தமிழகத்திலுள்ள திருக்கோயில் பணியாளர்களுக்கு பொங்கல் கருணைக்கொடையை ஆயிரம் ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாகவும் அகவிலைப்படியை 17 சதவீதத்திலிருந்து 31 சதவிகிதமாகவும் உயர்த்தி தமிழக முதல்வர் உத்தரவு பிறப்பித்தார். இதனையடுத்து தமிழ்நாடு திருக்கோயில் பணியாளர்கள் சங்கம் சார்பில் புளியந்தோப்பு சூளை அங்காளம்மன் கோவிலில் தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு திருக்கோயில் பணியாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் முத்துசாமி, மாநில துணைத்தலைவர் தனசேகர், மாநில இணைப் பொதுச் செயலாளர் ரமேஷ், சென்னை பொருளாளர் குகன், சென்னை கோட்ட அமைப்பாளர் செந்தமிழ்ச்செல்வி, சென்னை கோட்டை கொள்கை பரப்பு செயலாளர் வேலாயுதம், துணை அமைப்பாளர்கள் சிவகாமி, துணை செயலாளர் மோகன் வெங்கடேசன் மற்றும் துணைத் தலைவர் ராஜசேகர் உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மாநில துணைத்தலைவர் தனசேகர் செய்தியாளர்களிடம் கூறுகையில், கடந்த பல வருடங்களாக பொங்கல் கருணைத் தொகையை உயர்த்தவும் அகவிலைப்படியை உயர்த்தவும் நாங்கள் கோரிக்கை வைத்து வந்தோம். தற்போது பதவியேற்றுள்ள புதிய அரசு எங்கள் கோரிக்கையை ஏற்று ஆறு மாதத்திற்குள்ளாகவே இந்த இரண்டு கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்துள்ளது.

தமிழ்நாடு திருக்கோயில் பணியாளர்களுக்கு இது உண்மையிலேயே ஒரு தித்திப்பான பொங்கல். எங்களின் கோரிக்கையை ஏற்று தக்க நேரத்தில் அறிவிப்பு வெளியிட்ட தமிழக முதல்வருக்கும், இந்து சமய அறநிலை துறை அமைச்சருக்கும் எங்களது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம் என்று கூறினார்.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

14-Jan-2022

பொங்கலோ... பொங்கல்!

தமிழர்கள் என்றுமே நன்றி உணர்வு மிக்கவர்கள். எந்நாளும் செய்நன்றியை மறக்காத அருங்குணம் கொண்டவர்கள். அது மனிதர்கள் என்றாலும் சரி, கால்நடையாக இருந்தாலும் சரி, இயற்கை என்றாலும் சரி, நன்றி தெரிவிக்கும் ஒப்பற்ற உயர்ந்த பண்பாடு கொண்டவர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டுதான் பொங்கல் பண்டிகை. அதனால்தான் மறைந்த கலைஞர் கருணாநிதி, "தமிழ் சமுதாயத்தின் தலைசிறந்த பண்பாட்டினை உலகுக்கு உணர்த்திடும் மகத்தான திருவிழா பொங்கல் விழா" என்றார். எல்லாத்தொழிலுக்கும் மேலான தொழில் வேளாண்மைத்தொழில். இந்த தொழிலை செய்யும் விவசாயி தன் உழைப்பின் மூலம், தான் சிந்தும் வியர்வை மூலம், சேற்றில் கால் பதிப்பதன் மூலம் உலகுக்கே உணவளிக்கிறான். அவனுக்கு துணையாக நிற்பது சூரியனும், கால்நடைகளும் என்றால் மிகையாகாது.

அந்தவகையில்தான் நிலத்தை உழுது, நாற்று நட்டு, நீர் பாய்ச்சி, உரமிட்டு கண்ணுங்கருத்துமாக பராமரித்து,

செங்கதிர் விளைந்தவுடன் அதை அறுவடை செய்கிறான். இயற்கை அவனுக்கு துணைக்கரம் நீட்டினால்தான் நல்ல மகசூலை காணமுடியும். அந்த மகசூலினால் மனம் மகிழும் விவசாயிகள் மட்டுமல்லாமல், அவன் விளைவித்த நெல் உள்ளிட்ட உணவுப்பொருட்களை உண்டு மகிழ்ந்த தமிழ்க்குலம் முழுவதுமே களிப்புடன் கொண்டாடும்நாள் பொங்கல். இந்த பண்டிகையை கொண்டாட சாதி, மதம் தடையில்லை. ஏனெனில், இது தமிழ் இனத்தின் திருநாள். தமிழராய் பிறந்த அனைவருக்குமே உரித்தான பண்டிகை. பொங்கல் திருநாள் 3 நாட்கள் மகிழ்வுடன் கொண்டாடப்படுகிறது. பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற முதுமொழிக்கேற்ப, அடுத்தநாள் புத்தாடை அணியப்போகும் முன்பு, வீட்டில் உள்ள பயனற்ற பழைய பொருட்களை கழித்த நாள்தான் போகி பண்டிகை.

2-ம் நாளான இன்றுதான் பொங்கல் பண்டிகை. அதிகாலையில் வீட்டின் முன்பு 3 கற்களால் அடுப்பு அமைத்து, புது நெல்லை கொண்டு ஆக்கிய புத்தரிசியை புது பானையில் இட்டு, வெல்லம் சங்கமிக்க, பொங்கல் பொங்கிவர, புத்தாடை அணிந்து சுற்றி நிற்கும் குடும்பத்தினரும், சுற்றத்தினரும் பொங்கலோ... பொங்கல்... என்று குலவையிட்டு, பானையை இறக்கி, நெய்யில் வறுத்தெடுத்த முந்திரி பருப்பு, உலர் திராட்சையை சேர்த்து கலக்கி உண்டு மகிழும் மகிழ்ச்சிக்கு ஈடு இணையே இல்லை. பொங்கல் நன்கு பொங்கி வந்தால் அந்த ஆண்டு முழுவதும் மகிழ்ச்சி பொங்கி வழியும் என்பது தமிழர்களின் நம்பிக்கை. பொங்கல் பண்டிகையின் மற்றொரு சிறப்பு தித்திக்கும் கரும்பு. சர்க்கரை பொங்கல் இனிப்பு, கரும்பு இனிப்பு என்று அந்த ஆண்டு முழுவதும் இனிப்பாகவே கழியும் என்பதை சுட்டியும் கூறும் நாள்தான் பொங்கல்.

அடுத்தநாள் மாட்டுப்பொங்கல். ஆண்டெல்லாம் விவசாயத்துக்கு உறுதுணையாக இருந்து விவசாயியின் உயர்வுக்கு, மகிழ்ச்சிக்கு காரணமாக இருக்கும் மாடுகளை குளிப்பாட்டி, கொம்புகளுக்கு வர்ணமிட்டு, புதுக்கயிறு கட்டி, நெற்றியில் திலகமிட்டு, பொங்கலிட்டு அதை மாடுகளுக்கும் வழங்கும் நாள்தான் மாட்டு பொங்கல். இப்படி 3 நாட்கள் கொண்டாடும் பொங்கல் பண்டிகைக்கு இந்த ஆண்டு மற்றொரு சிறப்பு என்னவென்றால், முருகப்பெருமானின் பிறந்தநாளான தைப்பூசம் 5-வது நாளில் வருகிறது. தமிழக அரசே பொங்கல் பரிசு தொகுப்பு வழங்குவதால், எல்லோருடைய வீட்டிலும் பொங்கல் நிச்சயமாக பொங்கும்.

இந்த மகிழ்ச்சிகரமான பண்டிகை, கொரோனா பரவல் காலத்தில் வருவதால், மக்களும் மிகவும் கவனத்துடன் கொண்டாட வேண்டும். காணும் பொங்கல் அன்று சுற்றுலாத்தலங்களுக்கு செல்லவோ, பொங்கலையொட்டி வழிபாட்டுத்தலங்களுக்கு செல்லவோ தடை விதிக்கப்பட்டுள்ளதால், இல்லத்தில் குடும்பத்தினரோடு அதிக நேரம் ஒன்றாக செலவழிக்க வகை செய்துள்ளது. இந்த பொங்கல் நன்னாளில் தமிழ்நாட்டில் அனைவரும் எடுக்க வேண்டிய சபதம் தடுப்பூசியை முழுமையாக போடுவோம், முககவசம் அணிவோம், சமூக இடைவெளியை பின்பற்றுவோம், கொரோனாவை விரட்டி அடிப்போம். அடுத்த பொங்கலை கொரோனா இல்லாத பொங்கலாக கொண்டாடுவோம்!

குங்குமம் டீம்

COFFEE TABLE

மீண்டும் மஞ்சப்பை

காலநிலை மாற்றம், புவி வெப்பமயமாதல் ஆகியவற்றின் ஆபத்துகளை உலகமே பேசத் தொடங்கியிருக்கிறது. இவையனைத்தும் சுற்றுச்சூழலை மனிதர்கள் பாழ்படுத்தியதன் விளைவு. இனியும் சுற்றுச்சூழலை கவனிக்காமல் விட்டால் பேரழிவுகள் என்பது தடுக்க முடியாததாகிவிடும் என்கிற நிலையில் சுற்றுச்சூழலைப்பாதுகாக்கும் நடவடிக்கைகளை உலக நாடுகள் முன்னெடுக்கத் தொடங்கியிருக்கின்றன.

இந்நிலையில், தமிழ்நாடும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுக்க தயாராகியுள்ளது. தமிழகத்தை பிளாஸ்டிக் இல்லாத மாநிலமாக மாற்றும் விதமாக பிளாஸ்டிக்குக்கு 'குட்பை' சொல்லும் 'மீண்டும் மஞ்சப்பை' விழிப்புணர்வு இயக்கத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

மஞ்சப்பையை கிராமத்தானின் அடையாளமாகவும், நாகரிகமற்றதாகவும் மாற்றிவைத்திருக்கும் சூழலில் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக மீண்டும் மஞ்சப்பையை முன்னிறுத்தி உள்ளது.



4 குங்குமம்

தினத்தந்தி
DAILY THANTHI
17-Jan-2022

ஒரே நாளில் 11 புதிய மருத்துவக் கல்லூரிகள்!

“கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ் கம்பன் பிறந்த தமிழ்நாடு” என்று மகாகவி பாரதியார் அன்று பாடியது, இன்று தமிழ்நாட்டில் நனவாகியுள்ளது. இந்தியாவிலேயே அதிக மருத்துவக் கல்லூரிகளை கொண்ட மாநிலம் எதுவென்றால், அது தமிழ்நாடு என்று ஒவ்வொரு தமிழனும் நெஞ்சை நிமிர்த்தி பெருமையோடு கூற முடியும்.

தமிழ் மக்களுக்கு பொங்கல் பரிசாக, கடந்த 12-ந்தேதி விருதுநகர், நாமக்கல், நீலகிரி, திருப்பூர், திருவள்ளூர், நாகப்பட்டினம், திண்டுக்கல், கள்ளக்குறிச்சி, அரியலூர், ராமநாதபுரம் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 11 மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகளை தொடங்கிவைத்த பிரதமர் நரேந்திரமோடி, இந்திய பாரம்பரியம், செம்மொழிகள் ஆகியவற்றை மேம்படுத்தி பாதுகாக்கும் வகையில் சென்னையில் செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சார்பில் ரூ.24 கோடியில் கட்டப்பட்ட புதிய வளாகத்தையும் திறந்துவைத்தார்.

இந்த செம்மொழி தமிழாய்வு வளாகம் மறைந்த கலைஞர் கருணாநிதியின் கனவாகும். அவர்தான் இதை தொடங்குவதற்கு பெரும் ஆர்வத்தோடு நில ஒதுக்கீடு செய்தார். 11 மருத்துவக் கல்லூரிகளை பொருத்தமட்டில், 2011-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் தி.மு.க. ஆட்சியில் இருக்கும்போதே மாவட்டத்துக்கு

ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு ஆணையிடப்பட்டது என்று மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெருமிதத்தோடு கூறினார்.

அ.தி.மு.க. ஆட்சியின்போது, இந்த 11 மருத்துவக் கல்லூரிகளை தொடங்க எடுக்கப்பட்டுள்ள முயற்சிகளை முன்னாள் முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி, அப்போதைய துணை முதல்-அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் ஆகியோர் பட்டியலிட்டுள்ளனர். ஆக்கி விளையாட்டில் கோல் போடவேண்டும் என்ற இலக்கோடு இரு அணிகளிலும் தலா 11 வீரர்கள் மட்டை மூலம் பந்தை கடத்தி சென்று, இறுதியில் ஒருவர் குறிபார்த்து அடிக்கும் பந்துதான் கோல் வலைக்குள் புகும். அதுபோல, தி.மு.க.-அ.தி.மு.க. இரு ஆட்சிகளும் முயற்சி செய்தாலும், மு.க.ஸ்டாலின் ஆட்சியில் இறுதிவடிவம் பெற்று, இன்று செயலுக்கு வந்துள்ளது.

தமிழ்நாட்டில் இப்போது புதிதாக தொடங்கப்பட்ட இந்த 11 மருத்துவக் கல்லூரிகளும், மத்திய-மாநில அரசுகளின் நிதிப்பங்கீடு அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் செலவான ரூ.4 ஆயிரம் கோடியில், மத்திய அரசின் பங்கு ரூ.2,145 கோடியாகும். எஞ்சிய தொகை தமிழக அரசால் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த புதிய கல்லூரிகளால் கூடுதலாக 1,450 மருத்துவ இடங்கள் கிடைக்கும். அரசு அல்லது தனியார் மருத்துவக் கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களில் இந்த கல்லூரிகள் கட்டப்பட்டுள்ளன. இதுவரை உத்தரபிரதேசத்தில்தான், சமீபத்தில் ஒரே நாளில் 9 மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்பட்ட நிலையில், தமிழ்நாட்டில் இப்போது ஒரே நேரத்தில் 11 மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டிருக்கிறது.

“என்னுடைய சாதனையை நானே முறியடித்திருக்கிறேன்” என்று பிரதமர் மோடி இந்த விழாவில் கூறியது சிறப்புக்குரியது. இந்த நிகழ்ச்சியில், வழக்கம்போல தமிழுக்கு பிரதமர் பெருமை சேர்த்துள்ளார். “தைபிறந்தால்-வழிபிறக்கும்” என்று தமிழில்கூறி, மக்களுக்கு பொங்கல் வாழ்த்து கூறிய பிரதமர் நரேந்திரமோடி, தமிழ்மொழி மற்றும் கலாசாரம் தம்மை எப்போதும் ஈர்ப்பதாகவும், ஐ.நா. சபையில் உலகில் மிகவும் தொன்மை வாய்ந்த மொழியான தமிழ் மொழியில் பேசும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது, எனது வாழ்நாளில் ஏற்பட்ட மகிழ்ச்சியான தருணங்களில் ஒன்றாகும் என்பது மட்டுமல்லாமல், பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆய்வுகளுக்காக ‘சுப்பிரமணிய பாரதி’ இருக்கை ஏற்படுத்திய கவுரவமும், தன் அரசுக்கு கிடைத்திருப்பதாக அவர் பெருமையோடு கூறினார்.

இந்த விழாவில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசும்போது, “புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரிகளை அமைக்க மத்திய அரசாங்கம் உதவவேண்டும்” என்று கோரிக்கைவிடுத்துவிட்டு, ‘நீட்’ தேர்விலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு அளிக்கவேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையை, தமிழில் மட்டுமல்லாமல் ஆங்கிலத்திலும் பிரதமரிடம் எடுத்துக்கூறி, தமிழக அரசின் கோரிக்கையை ஒன்றிய அரசு நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். சிறப்புமிகு இந்த விழாவில் பிரதமர், முதல்-அமைச்சர் ஆற்றிய உரைகள் போற்றுதலுக்கும், வரவேற்புக்கும் உரியது.

எஸ்சி, எஸ்டி நல ஆணையத்திற்கு அலுவலகம்

முதல்வருக்கு பணியாளர் நலச்சங்கம் பாராட்டு

சென்னை, ஜன.17-

எஸ்சி, எஸ்டி நல ஆணையத்திற்கு அலுவலகம் அமைக்க உத்தரவிட்ட முதல்வருக்கு பணியாளர் நலச்சங்கம் பாராட்டு தெரிவித்துள்ளது.

தொழில்நுட்பக் கல்வித் துறை டாக்டர் அம்பேத்கர் எஸ்.சி, எஸ்.டி பணியாளர் நலச்சங்கம் மாநில தலைவர் டி.மணிமொழி, பொது செயலாளர் டி.மகிமைதாஸ் ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கை: மாநில அளவில் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் ஆகியோருடைய சட்டபூர்வமான உரிமைகளை பாதுகாக்கவும், அவர்தம் பிரச்னைகளுக்கு தீர்வு காணவும், தமிழ்நாடு மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம் என்கிற புதிய அமைப்பு ஒன்றினை தன்னாட்சி செயல்படும் வகையில் அதிகாரத்துடன் முதல்வர் மு.க.ஸ்டாலின், சட்டமன்றத்தில் சட்டமியற்றி, அவ்வாணையத்திற்கு [illegible]டியாக தலைவர், துணைத்தலைவர், உறுப்பினர் செயலர் மற்றும் 5 உறுப்பினர்களை நியமித்தார்.

பல ஆண்டுகளாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் எதிர்பார்த்து காத்திருந்த ஆணையத்தை அமைத்து, அம்மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றினார். ஆனாலும் ஆணையத்திற்கு அலுவலகம் ஒதுக்கப்படாததை தொழில் நுட்பக்கல்வித் துறை டாக்டர் அம்பேத்கர் எஸ்.சி, எஸ்.டி பணியாளர் நலச்சங்கம் முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்றது. இதையடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணையத்திற்கு சென்னை, தேனாம்பேட்டையிலுள்ள தாட்கோ தலைமை அலுவலக கட்டிடத்தில், அலுவலகம் அமைக்க உத்தரவிட்டு, அவ்வாணையம் செயற்பாட்டிற்கு வந்தமைக்கு இச்சங்கம் நெஞ்சார்ந்த வாழ்த்துதலையும், பாராட்டினையும் தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்

18-Jan-2022

சாதனை அரசு

தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு தமிழகம் புது விதமான வளர்ச்சியை நோக்கி பயணிக்க துவங்கியுள்ளது. மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்க பல்வேறு வகையான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அரசு அறிவிக்கும் வாய்ப்புகளை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இனி வளர்ச்சியில் நாட்டிற்கு தமிழகம் தான் வழிகாட்டியாக திகழும். அந்த அளவுக்கு மிக சிறப்பு வாய்ந்த திட்டங்களை முதல்வர் செயல்படுத்தி வருகிறார். உலகம் முழுவதும் நான்காம் தொழிற்புரட்சி தொடங்கி விட்டது. அனைத்து துறைகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்து வருகிறது.

தமிழகத்தில் கம்ப்யூட்டர் புரட்சியையே கலைஞர் தான் உருவாக்கினார். அடுத்த தலைமுறையினருக்கும் பயன்படும் வகையில் மிக சிறப்பாக செயல்படுவது தான் திமுக தலைமையிலான அரசு. புதிய கண்டுபிடிப்பு, அறிவியலில் புதுமை உள்பட அனைத்து துறைகளிலும் தமிழகம் முன்னோடியாக இருக்க வேண்டும் என்பதற்காகவே முதல்வர் மு.க.ஸ்டாலின் பல்வேறு ஆக்கப்பூர்வமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். உலகமே தமிழகத்தை உற்று கவனிக்க வேண்டிய காலம் வரும். அந்த அளவுக்கு வலுவான கட்டமைப்புகளை முதல்வர் ஏற்படுத்தி வருகிறார். சர்வதேச அளவில் அனைத்து துறைகளிலும் தமிழர்கள் சாதிக்க முடியும். அறிவுக்கூர்மையான தமிழக இளைஞர்கள், இன்றைய டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் முத்திரை பதிக்க முடியும். எனவே திறமைகளை வெளிப்படுத்தி, சர்வதேச அளவில் சாதிக்க இளைஞர்கள் முன்வர வேண்டும்.

மனித ஆரோக்கியம், வலுவான தொழில்வளம், தரமான கல்வி, பொருளாதார முன்னேற்றம் உள்ளிட்ட அனைத்திலும் தமிழக அரசு தனிக்கவனம் செலுத்தி செயல்பட்டு வருகிறது. வெள்ளத்தில் நடந்து சென்று மக்களை நேரில் சந்தித்தது, மக்கள் நலன் சார்ந்த விஷயங்களை செயல்படுத்துவது, வளர்ச்சியில் தமிழகம் தன்னிறைவு பெற புதுப்புது திட்டங்களை செயல்படுத்துவது, அறிவித்த திட்டங்களில் இலக்குகளை அடைவது, மக்கள் மீது அக்கறையோடு இருப்பது உள்ளிட்ட மக்களின் நலன் சார்ந்த விஷயங்களை நுணுக்கமாகவும், சிறப்பாகவும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்தி வருகிறார்.

முக்கியமாக, தொழில்வளம், நீர்மேலாண்மை திட்டம், வேளாண் திட்டம், ஆரோக்கியம் சார்ந்த திட்டம், சுகாதார குறியீட்டில் முன்னேற்றம், பேரிடரை எதிர்கொள்ள வியூகங்கள் வகுப்பது, கல்வியில் புதுமை, சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்களை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மிக நேர்த்தியாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தொழில் வளங்களுக்கு கொடுக்கப்படும் அதே முக்கியத்துவம் சுற்றுப்புற சூழலுக்கும் அளிக்கப்பட்டு வருகிறது. இது மக்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது. இதுபோன்ற திட்டங்களை யாரும் அறிமுகப்படுத்தியது இல்லை. இதனாலேயே உலக அளவில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பெயர் எடுத்து வருகிறார். பொதுமக்களின் ஆதரவோடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு அனைத்து துறைகளிலும் வெகு விரைவில் நூறு சதவீத இலக்குகளை எட்டி வரலாற்று சாதனை படைக்கும்.

தினத் தந்தி
DAILY THANTHI
18-Jan-2022

பிறந்த ஊரில் சிலை அமைத்து பென்னிகுயிக்குக்கு பெருமை!

தலைமுறைகள் பல கடந்தாலும் தமிழ் மக்கள், குறிப்பாக விவசாய பெருங்குடி மக்கள் நன்றி மறவாதவர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டுத்தான், இன்றும் தேனி, திண்டுக்கல் போன்ற மாவட்டங்களில் பலருக்கு பென்னி என்றும், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் பக்கிள், பக்கிள் துரை என்றும் பெயரிடப்படும் வழக்கம் இருப்பதை பார்க்க முடிகிறது.

யார் இந்த பென்னிகுயிக்?, யார் இந்த பக்கிள் துரை?. முல்லைப்பெரியாறு அணையை கட்டியவர்தான் பென்னிகுயிக். தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஸ்ரீவைகுண்டத்தில் அணையை கட்டியவர்தான், அப்போது திருநெல்வேலி மாவட்ட கலெக்டராக இருந்த பக்கிள். இதுபோல, கன்னியாகுமரி மாவட்ட மக்கள், கோதையாறு ஆற்றின் குறுக்கே 1897-1906-ம் ஆண்டில்

பேச்சிப்பாறை அணையை கட்டிய ஆங்கிலேய என்ஜினீயர் ஹம்ப்ரே அலெக்சாண்டர் மின்ஜின் என்ற மூக்கன் துரையையும் மறக்கவில்லை.

19-ம் நூற்றாண்டில் வைகைப்படுகையில் வறட்சி, பஞ்சம் ஏற்படுவது வழக்கமாக இருந்தது. அதற்கு காரணம், பெரியாறு நதி, முல்லையாற்றுடன் இணைந்து மேற்கு நோக்கி பாய்ந்து அரபிக் கடலில் வீணாகப்போய் கலந்ததுதான். இதை வைகைப்படுகை நோக்கி திருப்பிவிடும் திட்டம் ஒன்றை தயாரித்த ஆங்கிலேய அரசாங்கம், அதை நிறைவேற்ற கர்னல் ஜான் பென்னிகுயிக்கை நியமித்தது. அவர் பெரியாற்றின் குறுக்கே ரூ.53 லட்சம் மதிப்பில் அணை கட்டும் திட்ட அறிக்கையை தயாரித்து 1882-ம் ஆண்டு ஆங்கிலேய அரசாங்கத்திடம் வழங்கினார். 1887-ம் ஆண்டு அணை கட்டும் பணி பென்னிகுயிக்கிடமே வழங்கப்பட்டது. ஆனால், போதுமான நிதியை ஆங்கிலேய அரசாங்கம் ஒதுக்காததால், பென்னிகுயிக் இங்கிலாந்து சென்று தனது குடும்ப சொத்துகளை விற்று, அதன் மூலம் கிடைத்த பணத்தை கொண்டு 1895-ம் ஆண்டு அணையை கட்டி முடித்தார்.

தற்போது தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களின் விவசாயம் மற்றும் குடிநீர் தேவையை பூர்த்தி செய்த பெருமை பென்னிகுயிக்கையே சேரும். அவருடைய பிறந்தநாளான ஜனவரி 15-ந்தேதியன்று தேனி மாவட்ட மக்கள் பொங்கல் வைத்து வழிபாடு செய்கிறார்கள். பென்னிகுயிக்கின் நினைவை போற்றும் வகையில், மறைந்த முதல்-அமைச்சர் கருணாநிதி மதுரை தல்லாகுளம் பொதுப்பணித்துறை வளாகத்தில் 15-6-2000 அன்று அவருடைய திருவுருவ சிலையை திறந்துவைத்தார். மறைந்த முதல்-அமைச்சர் ஜெயலலிதா 15-1-2013 அன்று பென்னிகுயிக் நினைவை போற்றும் வகையில், தேனி மாவட்டம் லோயர்கேம்பில் ரூ.1¼ கோடி மதிப்பில் மணிமண்டபத்தை திறந்துவைத்தார். மேலும், தேனியில் கட்டப்பட்ட புதிய பஸ் நிலையத்துக்கும் அவர் பெயரை சூட்டினார்.

பென்னிகுயிக்கை தமிழக மக்கள் என்றும் மறக்கவில்லை. "அவர்கள் நெஞ்சம் மறப்பதில்லை, பென்னிகுயிக்கின் நினைவை இழப்பதில்லை" என்பதை நிரூபிக்கும் வகையில் அவரது சொந்த ஊரான லண்டன் - கேம்பர்ளி நகர மையப் பூங்காவில், தமிழக அரசின் சார்பில் அவருக்கு சிலை அமைக்கப்படும் என்ற நல்ல அறிவிப்பை கடந்த 15-ந்தேதி அவரது பிறந்தநாள் அன்று, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தது தமிழ் மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை தருகிறது.

"இந்த சிலை, அந்த ஊரின் மையப் பூங்காவில் அமைப்பதற்காக அனைத்து லண்டன் வாழ் தமிழர்களால் முயற்சி எடுக்கப்பட்டு, சிலை நிறுவ இங்கிலாந்து சட்டப்படி, செயிண்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தின் ஒப்புதலையும் பெற்றுள்ளார்கள்" என்ற இனிய தகவலையும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இந்த சிலையை அமைத்து விரைவில் அங்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினால் திறக்கப்பட வேண்டும் என்பதே எல்லோருடைய கோரிக்கையாகவும் இருக்கிறது.

இதுபோல, பக்கிள் துரைக்கு ஸ்ரீவைகுண்டம் அணை பகுதியிலும், ஹம்ப்ரே அலெக்சாண்டர் மின்ஜினுக்கு பேச்சிப்பாறை அணை பகுதியிலும் மணிமண்டபம் அமைத்து, அவர்களுக்கும் அங்கு சிலை திறக்க வேண்டும் என்பது இந்த அணைகளால் பயன்பெறும் விவசாயிகளின் கோரிக்கையாக இருக்கிறது.

முரசொலி

19-Jan-2022

ஜனவரி 12ஆம் தேதியை உலகத் தமிழர் அயலக நாளாக அறிவித்த

தமிழக முதல்வருக்கு தான்சானியா தமிழ் மக்கள் நன்றி - பாராட்டு!

தான்சானியா கிளைப் பொறுப்பாளர் புரூஸ் லீ ரூபன் அறிக்கை!

தான்சானியா, ஜன.19-

வெளிநாடு வாழ் தமிழர் புனரமைப்பு நல வாரியம் மற்றும் ஆண்டுதோறும் ஜனவரி 12 ஆம் தேதி உலகத்தமிழர் அயலக நாளாக அறிவித்த தமிழக முதலமைச்சருக்கு வெளிநாடு வாழ் தமிழ் சங்கத்தின் தான்சானியா கிளை பொறுப்பாளர் புரூஸ் லீ ரூபன் பாராட்டு தெரிவித்துள்ளார்.

வெளிநாடு வாழ் தமிழர் நல வாரியம் அமைத்த தமிழக முதல்வருக்கு வெளிநாடுவாழ் தான்சானியா கிளைப் பொறுப்பாளர் புருஸ்லீ ரூபன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

கிழக்கு ஆப்பிரிக்கா நாடான தான்சானியா தமிழ் மக்கள் சார்பாகவும் பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஜனவரி 12ந் தேதி அன்று தமிழக முதல்வர் கூறியது போல நீங்கள் வெளிநாட்டில் வேலைக்குச் சென்று உள்ளீர்கள் என்று நான் நினைக்கவில்லை மாறாக தமிழ்நாட்டின் பண்பாட்டின் தூதுவர்களாக தான் சென்றுள்ளீர்கள் எனச் சொன்ன முதல்வருக்கு அயலகத் தமிழர் மேன்மைக்காக தன்னுடைய வாழ்வை ஒப்படைத்து தமிழினத் தலைவர் கலைஞர் வழியில் தமிழக முதல்வர் வெற்றி நடைபோட்டு கொண்டு இருக்கிறார்.

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களாகிய நாங்கள் பல்வேறு நாடுகளில் சில சமயம் இன்னல்களுக்கு ஆளாகியுள்ள நேரத்தில் எங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வெளிநாடு வாழ் தமிழர் நல வாரியம் ஒன்றை உருவாக்கி பல செயல் திட்டங்களை செயல்படுத்தி பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு எங்களுக்கு 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ள தமிழக முதல்வருக்கு கோடான கோடி நன்றிகளையும் மற்றும் வருடந்தோறும் ஜனவரி 12ஆம் தேதி தமிழர் உலக நாளாக அறிவித்து கடல் பிரிந்து வாழும் தமிழ் சொந்தங்களை தமிழால் இணைவோம் விழாவாகக் கொண்டாடிய தமிழக முதல்வருக்கு வெளிநாடு வாழ் தமிழ் இந்திய சங்கத்தின் தான்சானியா கிளை சார்பாகவும், மற்றும் தான்சானியா தமிழ் நிர்வாகிகள் முகமது ஷரீக் சங்கத் தலைவர், சதானந்தம் ராஜாராம் இணை அமைப்பாளர், அசோக் ராஜ் தலைமைப் பொறுப்பாளர், சான்சி பார் கண்ணன் துணை அமைப்பாளர், அனு சீனிவாசன் துணை அமைப்பாளர், முகமது கான் பொருளாளர் மற்றும் ஆப்பிரிக்கா நாடான வெளிநாடு வாழ் தமிழ் இந்திய சங்கத்தின் சார்பாகவும் மற்றும் தான்சானியா தமிழ் நெஞ்சங்கள் சார்பாகவும் தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டுகளும், உளமார்ந்த நன்றியும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தினகரன்
19-Jan-2022

பாரம்பரியம் காத்த அரசு

தமிழகத்தில் பொங்கல் விழாவை முன்னிட்டு மதுரை உள்ளிட்ட சில மாவட்டங்களில் பாரம்பரியமிக்க ஜல்லிக்கட்டு போட்டிகளை ஆண்டுதோறும் சிறப்பாக நடத்துவது வழக்கம். கொரோனா தொற்று மீண்டும் அதிகரித்ததை தொடர்ந்து, தமிழகத்தில் இம்முறை ஜல்லிக்கட்டு நடக்குமா என்ற குழப்பம் கிராம கமிட்டியினர் மற்றும் காளைகள் வளர்ப்போர், மாடுபிடி வீரர்கள் மத்தியில் எழுந்தது.

தமிழ் பாரம்பரியம், பண்பாட்டுக்கு எப்போதும் மிகுந்த முக்கியத்துவம் வழங்கி வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு, சில வழிகாட்டுதல்களுடன் ஜல்லிக்கட்டு நடத்த அனுமதித்தது.

இதன்படி, நடப்பாண்டிற்கான தமிழகத்தின் முதல் ஜல்லிக்கட்டு புதுக்கோட்டை மாவட்டம், தச்சங்குறிச்சியில் கடந்த 13ம் தேதி நடந்தது. தொடர்ந்து மதுரை மாவட்டத்தில் 14ம் தேதி அவனியாபுரம், 15ம் தேதி பாலமேடு, 17ம் தேதி அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடந்தன. மேலும், பல இடங்களிலும் நடத்தப்பட்டது. அனைத்துப் போட்டிகளிலும், அரசு வழிகாட்டுதல்களுடன் 150 பார்வையாளர்கள், 300 வீரர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். மேலும், ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்யப்பட்ட காளைகள் மட்டுமே பங்கேற்றன.

கடந்த அதிமுக ஆட்சியில் நடந்த ஜல்லிக்கட்டில், ஆளுங்கட்சியினர் தரப்பு காளைகளே அதிகம் விடப்பட்டன. முறையாக பதிவு செய்தவர்களின் காளைகள் அனுமதிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்தது. மேலும், வீரர்கள் பங்கேற்பு, பரிசு வழங்குவதில் முறைகேடு உள்ளிட்ட புகார்கள் எழுந்தன. ஆனால், இம்முறை அந்தக்குறைகள் எழாதவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. முன்பதிவு செய்து, பரிசோதிக்கப்பட்ட காளைகளே வரிசை முறையில் அனுமதிக்கப்பட்டன. தடுப்பூசி 2 தவணை போட்ட வீரர்கள் மட்டுமே போட்டியின்போது களமிறங்கினர். கண்டுகளிக்கவும் அனுமதிக்கப்பட்டனர்.

எந்தவித அசம்பாவிதமோ, ஏற்பாடுகளில் குறைபாடுகளோயின்றி அமைச்சர்கள், அதிகாரிகள் மிகச்சிறந்த முறையில் ஜல்லிக்கட்டை நடத்தி முடித்துள்ளனர். வரலாற்றிலேயே முதல்முறையாக அலங்காநல்லூரில் அதிகபட்சமாக 1,020 காளைகள் களமிறக்கப்பட்டன. இதற்காகவே, முன்னதாக துவங்கப்பட்டு சுமார் 10.30 மணிநேரம் போட்டி நடத்தப்பட்டது. இதன்மூலம் முன்பதிவு காளைகள் அனைத்தும் ஜல்லிக்கட்டில் பங்கேற்றன. ஒவ்வொரு காளைக்கும் தங்கக்காசுகள் பரிசாக வழங்கப்பட்டன. இதனால் காளை வளர்ப்போர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அதிக காளைகளை அடக்கிய வீரர்களுக்கு கார்கள், டூவீலர்கள் உள்பட விலை உயர்ந்த பரிசுகள் வழங்கப்பட்டன. உணவு, குடிநீர், போலீஸ் பாதுகாப்பு உள்ளிட்ட எந்த குறைபாடுகளும் இல்லாமல் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

கொரோனா பெருந்தொற்று காலத்திலும் ஜல்லிக்கட்டு போட்டிகளை சிறந்த முறையில் நடத்திக் காட்டி, பாரம்பரியத்தை கட்டி காத்து திமுக அரசு சாதித்துள்ளதாக, முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள், தென்மாவட்ட பொதுமக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்

19-Jan-2022

11 மாநகராட்சிகள் பெண்களுக்கு ஒதுக்கீடு

தமிழக அரசுக்கு விசிக பாராட்டு

சென்னை, ஜன.19: சென்னை, தாம்பரம், ஆவடி ஆகிய மாநகராட்சிகளை தனித் தொகுதிகளாகவும், சென்னை உட்பட 11 மாநகராட்சிகளை பெண்களுக்கான தொகுதிகளாகவும் தமிழக அரசு அறிவித்துள்ளதற்கு விசிக தலைவர் திருமாவளவன் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை:

சென்னை, தாம்பரம், ஆவடி ஆகிய மாநகராட்சிகளை தனித் தொகுதிகளாகவும் சென்னை உட்பட 11 மாநகராட்சிகளை பெண்களுக்கான தொகுதிகளாகவும் தமிழக அரசு அறிவித்துள்ளது.

சமூகநீதி மீது பற்றுக் கொண்ட திமுக தலைமையிலான அரசு தற்போது பஞ்சாயத் ராஜ் சட்டப்படி சென்னை ஆவடி தாம்பரம் ஆகிய மாநகராட்சிகளைத் தனித்தொகுதிகளாக அறிவித்துள்ளது.

சென்னை மாநகராட்சி ஆதிதிராவிடப் பெண்ணுக்கு ஒதுக்கப்பட்டு இருப்பதால் தமிழ்நாட்டு வரலாற்றில் முதன்முறையாக பெண் ஒருவர் சென்னையின் மேயராக வரக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இது மேலும் சிறப்பு வாய்ந்த நடவடிக்கையாகும். சமூக நீதியை செயல்படுத்துவதில் முதலமைச்சர் எடுத்துள்ள இந்த நடவடிக்கையை விசிக சார்பில் மனமாரப் பாராட்டி வரவேற்கிறோம்.

உள்ளாட்சி அமைப்புகளில் துணைத்தலைவர் பொறுப்புகளிலும் இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது எமது நீண்ட நாள் கோரிக்கை. அது தொடர்பாகவும் சென்னை உயர்நீதிமன்றத்தில் தனியே வழக்கு தொடுத்திருந்தோம். அந்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம் உள்ளாட்சி அமைப்புகளின் துணைத்தலைவர் பதவிகளில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், மகளிர் ஆகியோருக்கு இட ஒதுக்கீடு வழங்க தமிழக அரசும் ஒரிசா மாநில அரசு போல சட்டத் திருத்தம் செய்ய வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கியுள்ளது.

சென்னை மாநகராட்சியைத் தனித்தொகுதியாக அறிவித்தது போல, துணைத்தலைவர் பொறுப்புகளிலும் இட ஒதுக்கீடு அளித்து சமூக நீதியை முழுமையாக நிலைநாட்ட வேண்டும் எனத் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

19-Jan-2022

21 மாநகராட்சி மேயர் பதவிகளில்

பெண்களுக்கு 50% இடங்கள் முதல்வருக்கு கி.வீரமணி பாராட்டு

■ சென்னை

திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி நேற்று வெளியிட்ட அறிக்கை:

பெண்களுக்கு சமத்துவமும், சரியான வாழ்வுரிமையும், சுதந்திரமும் கிடைக்க வேண்டுமெனில் அவர்களுக்குப் படிப்புரிமை, பணியாற்றும் உரிமை, சொத்துரிமை, ஆளும் உரிமை - ஜனநாயக ஆட்சியில் சம பங்கு பெறக் கூடிய உரிமை - அனைத்தும் கிடைக்க வேண்டும் என்றார் பெரியார்.

தமிழ்நாட்டில் - ஊராட்சித் தேர்தல்கள் முடிந்துள்ளன. நகராட்சித் தேர்தல்கள் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்படவுள்ள நிலையில், பல நகராட்சிகள், மாநகராட்சிகளாக நிலை உயர்த்தப்பட்ட - அரசு அறிவிப்புக்குப்பின், தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 21 மாநகராட்சிகளில் 11 மாநகராட்சிகளுக்கு பெண்களே மேயர்களாக வருவர் என்ற அறிவிப்பு சமூகநீதி - பாலியல் நீதிக்குக் கிடைத்த சரியான வாய்ப்பு. 90 ஆண்டுகளுக்கு முன்பு கோரிய கோரிக்கை இன்று செயலாக்கப்பட்டிருக்கிறது. பெரியார் 90 ஆண்டுகளுக்கு முன் கோரிய கோரிக்கை - '50 சதவிகித இடம் பெண்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும்' என்றார்.

அதை அப்படியே செயலாக்கி ஆணை பிறப்பித்திருக்கிறார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின். இதில் கூட பொது - ஆதிதிராவிடர் - அவற்றிலும் பெண்கள் என்று இப்படி 'அனைவருக்கும் அனைத்தும்' என்ற சமூகநீதி பிரகடனத்துக்கு செயல்வடிவம் கொடுத்துள்ளார்.

அனைவரும் வீடு வீடாக இந்த சாதனையின் முக்கியத்துவத்தை விளக்கிட வேண்டும். முதல்வருக்கும், திமுக அரசுக்கும் 'நன்றித் திருவிழா' நடத்திட வேண்டிய மவுனப் புரட்சியின் மற்றொரு மைல்கல் இது. இவ்வாறு அறிக்கையில் கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் பென்னிகுக்குக்கு சிலை முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டு

திருவாரூர், ஜன.19-

இங்கிலாந்து நாட்டில் பென்னிக்குக்கு சிலை அமைக்கப்படும் என்று அறிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு விவசாய சங்கம் நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுச்செயலாளர் மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தென் தமிழக மக்களின் குடிநீர் மற்றும் விவசாயிகளின் பாசன பயன்பாட்டுக்கு அடிப்படையான முல்லைப் பெரியாறு அணையை கட்டி முடித்த கர்னல் ஜான் பென்னிகுக் உருவச்சிலை இங்கிலாந்து நாட்டில் அமைக்கப்படும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சமீபத்தில் தெரிவித்தார். இதனால் தமிழக அரசுக்கும் முதல்வருக்கும் நன்றி, பாராட்டு தெரிவித்து கொள்கிறோம். நாட்டின் எல்லை தூரங்கள் நம்மை விலக்கி வைத்தாலும் மனித நேயம் நம்மை ஒன்றுப்படுத்துகிறது என்பதை வெளிப்படுத்தும் முறையில், அதுவும் அவர் பிறந்த ஊரான கேம்பர்வி நகர பூங்காவில் சிலை அமைப்பது என்பது மிக பொருத்தமான ஒன்றாகும்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

எம்.ஜி.ஆர். பிறந்த நாளை சிறப்பித்த

மு.க.ஸ்டாலினுக்கு ஆர்.எம்.வீரப்பன் பாராட்டு

சென்னை, ஜன. 19–

எம்.ஜி.ஆர். கழக தலைவர் ஆர்.எம்.வீரப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழகத்தில் முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர், பாரதரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழாவினை அரசு சார்பில் ஏற்பாடு செய்து, அவ்விழாவில் கடந்த 1977–ம் ஆண்டு முதல் 1987–ம் ஆண்டு வரை தமிழகத்தின் முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். ஆட்சியின் சிறப்பினையும், எம்.ஜி.ஆருக்கும், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞருக்கும், அரசியலுக்கு அப்பாற்பட்டு இருந்த நல்ல நட்பினையும் எடுத்துரைத்து, எம்.ஜி.ஆர். பிறந்த நாளை சிறப்பித்தமைக்கு, எம்.ஜி.ஆர். கழகத்தின் தலைவர் என்ற முறையில் தொண்டர்கள் சார்பிலும் மற்றும் உலகெங்கிலும் உள்ள கோடிக்கணக்கான எம்.ஜி.ஆர். ரசிகர்களின் சார்பிலும் என் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

முரசொலி

20-Jan-2022

கலைஞருடனான நல்ல நட்பை எடுத்துரைத்து அரசின் சார்பில்

எம்.ஜி.ஆரின் பிறந்தநாளை சிறப்பித்த முதல்வருக்கு நன்றி!

எம்.ஜி.ஆர். கழகத் தலைவர் இராம.வீரப்பன் அறிக்கை!

சென்னை, ஜன.20-

முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் அரசியலுக்கு அப்பாற்பட்டு இருந்த நல்ல நட்பினை எடுத்துரைத்து அரசின் சார்பில் எம்.ஜி.ஆரின் பிறந்த நாளை சிறப்பித்தமைக்கு எம்.ஜி.ஆர். கழகம் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்வதாக அதன் தலைவர் இராம. வீரப்பன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முதல்வர், மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழகத்தின் முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர், பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்த நாள் விழாவினை அரசு சார்பில் ஏற்பாடு செய்து, அவ்விழாவில் கடந்த 1977 ஆம் ஆண்டு முதல் 1987 ஆம் ஆண்டு வரை தமிழகத்தின் முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சி சிறப்பினையும் மற்றும் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடன் அரசியலுக்கு அப்பாற்பட்டு இருந்த நல்ல நட்பினையும் எடுத்துரைத்து எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்த நாளை சிறப்பித்தமைக்கு, எம்.ஜி.ஆர். கழகத்தின் தலைவர் என்ற முறையிலும் மற்றும் தொண்டர்கள் சார்பிலும், மற்றும் உலகெங்கிலும் உள்ள கோடிக்கணக்கான எம்.ஜி.ஆர். ரசிகர்களின் சார்பிலும் என் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு இராம. வீரப்பன் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மு.க.ஸ்டாலின் செயல்பாட்டால் முதலிடத்தை நோக்கி காவல்துறை!

காவலர்கள் உங்கள் நண்பர்கள்! என்பதை சொல்லத்தான் கேட்டிருப்போம். உண்மையிலேயே அவர்கள் நண்பர்களை போல ஒவ்வொரு நெருக்கடியான காலகட்டத்திலும் நடந்து கொள்வதை அனுபவப்பூர்வமாக பார்த்து கொண்டிருக்கிறோம்.

காவல் துறையை பொறுத்தமட்டில் குற்றங்களை தடுக்கும் துறையாகவும், குற்றங்கள் செய்பவர்களுக்கு சட்டத்தின் மூலம் தண்டனை பெற்றுக் கொடுக்கும் துறையாகவும்தான் பார்க்கப்படும். இதனால்தான் போலீசுக்கு பயந்தே பலர் குற்ற செயல்களை செய்யவும் யோசிப்பார்கள்.

இந்த துறை சமூகத்தில் குற்றங்கள் நடக்காத சூழலை உருவாக்கும் துறையாக மாற வேண்டும் என்ற ஒரு முற்போக்கு சிந்தனையோடு போலீஸ் கமிஷனை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அமைத்துள்ளார்.

ஊர் தூங்கினாலும் தூங்காமல் பணியாற்றும் அவர்களது பணியை பாராட்டினாலும் அவர்களுக்கும் குறைகள் உண்டு. காலத்துக்கு ஏற்ற வகையில் சில முறைகளை உருவாக்கி மாற்றங்களை கொண்டு வர வேண்டும் என்பதில் தமிழக அரசு அக்கறை கொண்டிருப்பது இதன்மூலம் தெளிவாகி உள்ளது.

தி.மு.க. ஆட்சிக்காலங்களில் எல்லாம் இதேபோல் அந்த துறையில் மாற்றங்களை கொண்டு வந்த வரலாறும் இருக்கிறது. கலைஞர் முதல்வராக இருந்த காலக்கட்டத்தில் அதாவது 1969, 1989, 2006 ஆகிய 3 முறை போலீஸ் கமிஷன்களை உருவாக்கி அதன்மூலம் அந்த துறையில் குறைகளுக்கு தீர்வு கண்டு மாற்றங்களையும் உருவாக்கினார்.

இப்போது அதேபாணியில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினும் ஈடுபட்டுள்ளார். தேர்தல் நேரத்திலேயே தி.மு.க. ஆட்சி அமைந்ததும் போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டு அதன் பரிந்துரையின் பேரில் மாற்றங்கள் செய்யப்படும் என்று வாக்குறுதி அளித்து இருந்தார்.

இப்போது தான் கொடுத்த அந்த வாக்குறுதியை நிறைவேற்றி இருக்கிறார். ஓய்வு பெற்ற நீதிபதி சி.டி.செல்வம் தலைமையில் போலீஸ் கமிஷன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த கமிஷன் காவலர்களின் நலன் மற்றும் காவல்துறையின் பல்வேறு அம்சங்களையும் விரிவாக ஆய்வு செய்து தனது பரிந்துரையை அரசுக்கு அளிக்கும்.

அதன்பேரில் காவல்துறையின் செயல்பாடுகளை மேலும் சிறப்பாக மேம்படுத்தவும், இணைய வழி குற்றங்களை தடுக்கவும் சேவை வழங்குவதில் மனிதாபிமானத்துடன் பொதுமக்களை அணுகுவதற்கும் காவல் துறையை வலுவூட்டவும், போலீஸ் கமிஷன் மூலம் பரிந்துரைகள் கிடைக்கும்.

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினின் இந்த நடவடிக்கை மூலம் காவலர்களின் பிரச்சினைகள், துறை சார்ந்த பிரச்சினைகள், அவற்றை தீர்ப்பதற்கான வழிமுறைகள் கண்டுபிடிக்கப்படும்.

குறிப்பாக இந்த கமிஷனில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள், மனநலமருத்துவர் பேராசிரியர் என்று ஒவ்வொரு துறையை சேர்ந்தவர்களையும் ஈடுபடுத்தி இருப்பது வரவேற்கத்தக்கது.

இவர்கள் ஒவ்வொரு துறையிலும் பிரச்சினைகளை சந்தித்தவர்கள். மாற்றங்களை கொண்டு வருவதற்கான வழிமுறைகளை தெரிந்தவர்கள். எனவே காவல்துறையின் மொத்த பிரச்சினைகளுக்கும் எதிர்காலத்தில் காலத்துக்கு ஏற்ற வகையில் குற்றங்களை கண்டறிவதிலும், பொதுமக்களை அணுகுவதிலும் போலீசார் எவ்வாறு ஈடுபட வேண்டும் என்பதற்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும்.

ஒரு நல்ல அரசு என்பது ஒவ்வொரு துறையிலும் பிரச்சினைகளை கண்டறிந்து அதற்கு ஏற்ப தீர்வுகளையும் காண வேண்டும். அதைத்தான் மு.க.ஸ்டாலின் செய்து, இது நல்ல அரசு மட்டுமல்ல வல்ல அரசு என்பதையும் தனது நடவடிக்கைகள் மூலம் வெளிப்படுத்தி வருகிறார்.

அவரது சிந்தனை மாநிலத்தின் ஒட்டு மொத்த வளம், பொருளாதார வளர்ச்சி, அமைதியான சூழ்நிலை, சமூக நல்லிணக்கத்தை பாதுகாத்தல் போன்ற பல்வேறு பணிகளிலும் காவல்துறையின் தனது முயற்சியை தொடர்ந்து தொய்வு இல்லாமல் செய்ய வேண்டும் என்பதுதான்.

தமிழக மக்களுக்காகவும், தமிழகத்தின் நலனுக்காகவும் தனது ஆசை, கனவுகளுக்கு செயல்வடிவம் கொடுக்க மு.க.ஸ்டாலின் தீவிரமாக இருக்கிறார். இதற்கு ஒத்துழைக்க வேண்டியது சம்மந்தப்பட்ட துறையினர்தான்.

ஒரு நாட்டை பாதுகாப்பது அதன் படைப்பிரிவுதான். அந்த படைப்பிரிவு எப்படி இருக்க வேண்டும் "வீரம், மானம், சிறந்தவழியில் நடக்கும் நடத்தை, நாட்டை வழிநடத்தும் தலைவரால் நம்பித் தெளியப்படுதல் ஆகிய இந்த நான்கும் அடிப்படை" என்கிறார் திருவள்ளுவர்.

அந்த வகையில் நாட்டை சிறந்த முறையில் வழிநடத்தும் தலைவராக மு.க.ஸ்டாலின், காவல்துறை என்ற படைப்பிரிவுக்கு கிடைத்துள்ளார். இதன்மூலம் இந்த துறை வரும் காலத்தில் பிரகாசிக்கும் அருமையான வாய்ப்பை எட்டியுள்ளது.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்

22-Jan-2022

முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரடி பார்வையில்

இந்து சமய அறநிலையத்துறை சீரமைப்பு ஒரு பெரிய வெற்றி

சென்னை, ஜன. 22: முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரடி பார்வையில் அறநிலையத் துறை சீரமைக்கப்படுவது ஒரு பெரிய வெற்றி என்று இந்து சமய அறநிலையத் துறை ஆலோசனை குழு உறுப்பினர்கள் புகழாரம் தெரிவித்தனர்.

கோயில்களில் பக்தர்களின் வசதிகளை மேம்படுத்துவது, பராமரிப்பது, செம்மைப்படுத்துவது தொடர்பாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆலோசனைக் குழு கூட்டம் சென்னை நுங்கம்பாக்கம் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஆலோசனை குழு உறுப்பினர் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பேசியது:

அறநிலையத்துறையின் வெளிப்படைத் தன்மை, கோயில் நிர்வாகத்தை வெளிப்படைத்தன்மைக்கு உட்படுத்தியிருப்பது, பல நல்ல திட்டங்களை, பக்தர்களுக்கு மேம்படுத்தக்கூடிய வசதிகளை உருவாக்கியிருப்பது இவையெல்லாம் வரவேற்பிற்குரியது. சமய இலக்கிய சொற்பொழிவுகள் பேரிடர் காலத்தில் காணொலி வாயிலாகவும் சொற்பொழிவுகளை நாம் நிகழ்த்தலாம்.

ஆலோசனை குழு உறுப்பினர் சுகிசிவம்:

நீண்ட காலத்திற்குப் பிறகு முதல்வர் நேர் பார்வையில் அறநிலையத் துறை சீரமைக்கப்படுவது ஒரு பெரிய வெற்றி என்று சொல்ல வேண்டும். காரணம், அந்தந்த அமைச்சரிடத்தில் விட்டுவிட்டு, முதல்வர் இதை முழுமையாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள். ஆனால், இந்தத் துறையினால் எந்தக் கெட்ட பெயரும் வந்துவிடக்கூடாது என்பதில் முதல்வர் மிகுந்த அக்கறையோடு இதை நேரடியாக பார்ப்பதற்கு, இந்தக் குழுவின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய சூழ்நிலையில் இந்து மதத்தின் கேந்திரம் எது என்று கேட்டால், கோயில், திருமடங்களைத் தாண்டி சில தனிநபர்களுடைய ஆசிரமங்கள் இன்றைக்கு இந்து மதத்தின் கேந்திரமாக மாறியிருக்கிறது. இதை அறநிலையத் துறை முறியடித்து, கோயில்கள் தான் இந்துக்களுடைய மையப் பகுதி என்பதை நீங்கள் மீண்டும் புதுப்பித்து விட்டால், இந்து சமயத்திற்கு அது மிகப் பெரிய வரப்பிரசாதமாக இருக்கும் என்பதை நான் முதலில் பணிவோடு பதிவு செய்து கொள்ள விரும்புகிறேன். தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் தமிழ்ப் புலவர்கள், கோயிலில் கூட்டம் சேர்கின்ற நாட்களில் கண்டிப்பாக பேசுவதற்குரிய ஒரு வழிமுறையை ஏற்படுத்த வேண்டும்.

ஆலோசனைகுழு உறுப்பினர்கள் புகழாரம்

> இந்து மதத்தின் கேந்திரம் எது என்று கேட்டால், கோயில், திருமடங்களைத் தாண்டி சில தனிநபர்களுடைய ஆசிரமங்கள் இன்றைக்கு இந்து மதத்தின் கேந்திரமாக மாறியிருக்கிறது

ஆலோசனைக்குழு உறுப்பினர் தேச மங்கையர்க்கரசி:

அறநிலையத்துறையில் சிறப்பான திட்டங்களை தீட்ட முதல்வர் நிறைகளையும் மட்டும் காதில் கேட்டுக் கொள்ளாமல், குறைகளையும் கேட்டு, அந்த குறைகளைக் களையக்கூடிய ஒரு ஆட்சியின் கீழ் வரக்கூடிய மக்கள் மகிழ்ச்சியடையக்கூடிய ஒரு வாழ்க்கையாக அமையும் என்பதற்கேற்ப நிறைய குறைகளை இந்து சமய அறநிலையத் துறை தற்போது நிவர்த்தி செய்து கொண்டிருக்கிறது.

ஆலோசனை குழு உறுப்பினர் தரணிபதி ராஜ்குமார்:

இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலகத்திற்கே முதலவர் வந்து, இந்த உயர்மட்டக்குழுவின் கலந்துரையாடல் கூட்டத்தை நடத்தியிருப்பது, தமிழகத்தில் வாழ்கின்ற இந்துக்களுக்கும் அதை எதிர்க்கிறவர்களுக்கும் அவர் ஒரு நல்ல செய்தி.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்

23-Jan-2022

மக்களின் கடமை

கொரோனா, உருமாறிய டெல்டா வகை கொரோனா, பிறகு டெல்டா பிளஸ், இப்போது ஒமிக்ரான் வகை கொரோனா- மனித குலத்தை அச்சுறுத்தும் இந்த வைரசுக்குதான் எத்தனை எத்தனை பெயர்கள், உருவங்கள்.

தென்ஆப்பிரிக்காவில் முதலில் கண்டறியப்பட்ட ஒமிக்ரான் வைரஸ், மிக வேகமாக பரவக்கூடியது என்று முதலிலேயே அபாய சங்கு ஊதியது உலக சுகாதார நிறுவனம். அதேபோல், சில வாரங்களிலேயே பல நாடுகளில் நுழைந்தது ஒமிக்ரான். இந்தியாவிலும் ஜெட் வேகத்தில் பரவியது. முதல் இரண்டு அலைகளைவிட இந்த முறை பரவல் வேகம் அதிகம் என்றாலும், தொற்று ஏற்பட்டவர்களுக்கு உண்டான பாதிப்புகள் மிதமாகவே இருந்தன. இதற்கு காரணம் அந்த வைரசின் உருவ அமைப்பும், தடுப்பூசி போட்டுக்கொண்டவர்கள் எண்ணிக்கையும்தான்.

ஆனால், தொற்று பரவல் வேகம் காரணமாக இந்தியாவில் பல்வேறு மாநிலங்கள் கடும் நடவடிக்கைகளை எடுத்தன. தமிழகத்தை பொறுத்தவரை, வரும் 31ம் தேதி வரை இரவு நேர ஊரடங்கு அமலில் உள்ளது. இது தவிர ஞாயிற்றுக்கிழமைகளில் முழு ஊரடங்கு கடைபிடிக்கப்படுகிறது. கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டதோடு, கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆன்லைன் தேர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. வழிபாட்டு தலங்களில் வாரத்தின் மூன்று நாட்கள் பக்தர்களுக்கு அனுமதி இல்லை. அத்தோடு, சமூக இடைவெளி மற்றும் முகக்கவசம் அணிவதை மக்கள் அனைவரும் கடைபிடிக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

முதல்வரின் வேண்டுகோளுக்கு செவிசாய்த்து, தமிழக மக்கள் அளித்து வரும் ஒத்துழைப்பு காரணமாக தமிழகத்தில் ஒமிக்ரான் தொற்று பரவல் வேகம் கட்டுக்குள் உள்ளது. தினசரி தொற்று பாதிப்பு எண்ணிக்கை 30 ஆயிரத்தை நெருங்கியுள்ள போதும், நாட்டின் பிற மாநிலங்களோடு ஒப்பிடும்போது இது குறைவுதான். அதே நேரத்தில், சென்னையில் தொற்று சதவீதம் குறைந்து வருவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன,

நாட்டின் பிற மாநிலங்களும் ஒமிக்ரான் தொற்று பாதிப்பில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக மீண்டு வருகின்றன. உச்சத்தை தொட்ட கொரோனா பாதிப்பு குறைய தொடங்கி உள்ளதால், பல்வேறு மாநிலங்கள் கட்டுப்பாடுகளை தளர்த்த துவங்கி உள்ளன. கர்நாடகாவில், வெள்ளிக்கிழமை துவங்கி திங்கட்கிழமை காலை வரை அமலில் இருந்த வார இறுதி ஊரடங்கு நீக்கப்பட்டுள்ளது. மகாராஷ்டிராவில் நாளை முதல் பள்ளிகளை திறக்க அம்மாநில அரசு அனுமதி வழங்கியுள்ளது. டெல்லியில், வார இறுதி ஊரடங்கை நீக்கலாம் என்று முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் கூறியுள்ளார்.

தமிழகத்திலும் தொற்று குறைந்தால் கட்டுப்பாடுகள் நீங்கும். சாமானியனின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படாது, நாட்டின் பொருளாதாரமும் வளர்ச்சி பாதையில் செல்லும். இதற்கு மக்களாகிய நாம் செய்ய வேண்டியது, அரசு விதித்துள்ள கட்டுப்பாடுகளை கடைபிடிப்பதுதான். இது நம் கடமையும் கூட. இந்த கடமையில் இருந்து நாம் தவறிவிட்டால், ஒமிக்ரான் ஒழியாது. ஆனால், நாம் அழிந்து விடும் வாய்ப்பு உள்ளது என்பதை உணர்ந்து பொறுப்போடு செயல்படுவோம்.

NO CHILD'S PLAY

Tamil Nadu's ambitious scheme is helping children fall back in love with learning

BY LAKSHMI SUBRAMANIAN

BHANU PRAKASH CHANDRA

FUN LEARNING Children of Buddavedu area on the outskirts of Chennai participate in a special class conducted at a Buddhist meditation centre as part of the Illam Thedi Kalvi project

CHILDREN SIT TOGETHER and fold pieces of paper to create shapes. One child makes a model of a bird and calls it a parrot; another makes an identical model and calls it a sparrow. A third child sticks his creation to a toothpick and tries to tell a story. There are around 60 children in all, and all of them are gathered in a large meditation hall at the Buddhist centre at Erandam Kattalai near Kundrathur, on the outskirts of Chennai. Laughter fills the air as they play and learn together—something they had not been able to do since March 2020, when schools were shut because of the pandemic.

Volunteers Kavitha Murugan and Ashwini Selvaraj are busy singing, dancing and running around the hall with the children. "Let's sing the finger rhyme," says Kavitha to the group near her. At the other end of the hall, Ashwini talks to her group about birds. The hall has become a makeshift classroom, helping children learn at least a part of the lessons that they have missed. The exercise is part of the state government's ambitious project called Illam Thedi Kalvi (Education at your doorstep).

"The learning gap caused by the pandemic is huge," says Ashwini, a certified trainer. "For upper-middle-class or middle-class children, gadgets are affordable. But what will the other children do to get back to school? I try to bridge the learning gap."

Kavitha and Ashwini are among the several thousand volunteers hired by the Tamil Nadu school education department under the Illam Thedi Kalvi scheme, which is aimed at offsetting the learning losses caused by the pandemic.

A survey carried out last year by the DMK government found that at least 1.84 lakh students had dropped out of school during the pandemic. Families in many hamlets had left their homes in search of jobs, taking children along with them. Deaths in the family had cost many children the opportunity to continue studies, while some others had altogether lost interest in learning. These children needed to be brought back to school, which is why Chief Minister M.K. Stalin himself launched the ambitious programme in October last year to hire local volunteers who can help guide the children back to classes in six months.

The scheme has been introduced on a pilot basis in 12 districts. Local committees comprising school teachers, panchayat heads and parents select volunteers—people who have studied at least till Class 12—to teach students up to Class 5. Graduates are selected to train children from Classes 6 to 8. The government says at least 1.5 lakh children have been brought back to studies so far.

"Having spent 19 long months away from school, children now struggle to sit attentively in class for even an hour," says K. Elam Bhagavath, IAS, who is monitoring the progress of Illam Thedi Kalvi. "Under the scheme, volunteers will take classes at a common place after school hours. It is

A survey carried out last year by the DMK government found that at least **1.84 lakh** students had dropped out of school during the pandemic.

to go on for six months. The government has allotted ₹200 crore for the scheme. The main objective is to bring every single child back to school."

There were only a dozen children in the Kundrathur centre when classes began. The teachers and volunteers had to go from door to door requesting parents to send their children. "Though there wasn't a good response at the beginning, the classroom is overflowing now," says K. Diyanath Unnissa, headmistress at the Kundrathur Panchayat Union Middle School. "We spread the word innovatively with the help of folk artists and volunteers. It helped us bring the children here to get accustomed to going back to school."

The government has set up around 65,000 such centres across the state. "Many children have forgotten to read and write," says Bhagavath. "For those children, activity-based learning induces the interest in coming back to school."

Illam Thedi Kalvi takes a leaf out of the Arivoli Iyakkam (light of knowledge) movement, which played a major role in spreading literacy in the late 1980s and early 1990s. Like Arivoli Iyakkam, Illam Thedi Kalvi, too, relies on an army of volunteers—1.5 lakh and counting—to achieve its lofty goals. ●

interview | PROF PAUL KATTUMAN, *Cambridge University*

END IN SIGHT, HOPEFULLY

BY POOJA BIRAIA JAISWAL

PROFESSOR PAUL KATTUMAN, applied econometrician at Judge Business School, Cambridge University, developed a Covid-19 tracker for India to provide short-term forecasts of the pandemic. An academic of Indian origin, he shares his analysis of the current wave.

Q/ With Omicron, does India have an 'age' advantage?

A/ Yes we do, as the median age is 28 in India and just over 5 per cent of the Indian population is over 65. The young shrug off Omicron infection relatively easily. Though the aged and thus vulnerable form only a small proportion of the population, given the size of the country, absolute numbers needing hospitalisation could well become shockingly high.

Q/ How are states faring?

A/ The daily growth rates have peaked and are now clearly declining in Bihar, Chhattisgarh, Delhi, Jharkhand and West Bengal. A number of other states are tiptoeing into the declining growth phase, having just reached their peak daily growth rates. To take a couple of examples, in Jharkhand, the daily growth rate peaked at 57 per cent on January 4, and has since declined to 23 per cent. In Delhi, after peaking at 53 per cent on January 5, the daily growth rate has declined to 36 per cent. Experiences of other countries suggest that the decline in daily growth rate will be erratic, depending as it does on changes in social behaviour and on mitigation measures. But on current trends, daily cases are likely to peak in the second half of January in Jharkhand and around end-January in Delhi.

Q/ Could the current wave mark the end of the pandemic?

A/ The optimistic view would be that, to the extent that Omicron causes less severe illness and confers a greater degree of immunity against other variants, the current wave could bring about the end of the pandemic by increasing the proportion of the immune population to above the herd immunity threshold.

Q/ Some time back the chief scientist of the WHO said the virus was on the path of becoming endemic in the country. But what we are witnessing is something totally different.

A/ Leading up to November 2021, with the relatively low and gradually declining case numbers, it did look like Covid-19 was becoming endemic and that the remaining challenge would be the management of sporadic flare-ups. But then the more infectious variant with immune escape potential emerged, starting off the current wave.

Q/ Will we return to normalcy by March?

A/ An optimistic assessment would be that Omicron might have swept through by then, bringing immunity to a sufficiently large proportion of the population, without placing the health care system under unbearable strain. We must hope that no new variant with epidemic potential emerges in the meantime. ●

இயற்கை செய்தி நாளை வரலாறு
முரசொலி
24-Jan-2022

"இன்னுயிர் காப்போம் – நம்மைக் காப்போம் 48" மருத்துவத் திட்டம் மூலம்

நாமக்கல் சிறுவன் முழு உடல்நலம் பெற்றார்! முதல்வருக்கு பெற்றோர் நெகிழ்ச்சிமிகு நன்றி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் செல்பேசியில் – சிறுவனிடம் சிகிச்சை முறை குறித்து கேட்டறிந்தார்!

சென்னை, ஜன. 24–

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றதில் இருந்து பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அதுவும் குறிப்பாக மருத்துவத்துறையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி இந்தியா விற்கே முன்மாதிரியாகத் தமிழகத்தை முன்னிலைப்படுத்தியிருக்கிறார்.

மருத்துவத் துறையில் "இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48" திட்டத்தின் கீழ் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த சிறுவன் வர்ஷாந்த் விபத்தில் தலையில் காயமுற்றான். அச் சிறுவனுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொடர் முயற்சியால் தற்போது நலம் பெற்று அந்தச் சிறுவன் உயிர் பிழைத்துள்ளான்.

இச் சம்பவம் குறித்து சிறுவன் வர்ஷாந்த் மற்றும் அவனது தாய் வசந்தா, சிறுவனின் பெரியம்மா மகன் கோபி ஆகியோரின் நெகிழ்ச்சிமிகு பேட்டி "மக்களை காக்கும் முதல்வர்" என்ற தலைப்பில் இணையதளத்தில் வந்துள்ளது! அதில் அவர்களின் பேட்டி வருமாறு :–

திருமதி வசந்தா (தாய்) :– என் பெயர் வசந்தா. கூலி வேலைக்கு செல்கிறேன். 'களை' வெட்டுவது மற்றும் பூ விற்கின்ற வேலைகளைச் செய்து வருகின்றேன். என் பையன் பெயர் வர்ஷாந்த். 8–ஆம் வகுப்பு படிக்கிறான். சம்பவம் நடந்த அன்று பூ வாங்கத்தான் போனோம். மெதுவாக சைட் வாங்கித்தான் போனான். ஆனா, அவங்க நேரா வந்து வண்டியை விட்டு விட்டாங்க.

கோபி :– என் பெயர் கோபி. வர்ஷாந்தின் பெரியம்மா பையன். நாங்க ரொம்ப கஷ்டப்படுகின்ற குடும்பம்தான். அவங்க அம்மா வர்ஷாந்தை மிகவும் கஷ்டப்பட்டு வளர்த்தாங்க. அவன் வண்டியில் போய் கிட்டு இருக்கும் போது, எதிர்முனையில் வந்தவங்க ஆக்சிடெண்ட் செஞ்சுட்டாங்க. இதில் அவன் ரொம்ப முடியாமல் ஆயிட்டான்.

திருமதி வசந்தா (தாய்) :– தனியார் மருத்துவமனையில்தான் சேர்த்தோம். பையனுக்கு மூளையில் இரத்தக் கசிவு இருக்கு. ஆபரேஷன் செய்யணும்னு சொன்னாங்க. இல்லேன்னா ரொம்பப் பிரச்சினை ஆகிவிடும்ன்னு சொன்னாங்க. **அப்போது முதலமைச்சர் ஐயா அவர்கள் புதியதாக ஒரு ஸ்கீம் அறிமுகப்படுத்தி இருக்காங்க என்று சொன்னாங்க. அந்த ஸ்கீமில் பையனுக்கு செய்துடலாம்; நீங்க ஒன்றும் பயப்பட வேண்டாம்ன்னு சொன்னாங்க.**

முதல்வருக்கு சிறுவனின் தாய் திருமதி. வசந்தா நன்றி தெரிவித்துப் பேசினார்.

எங்களுக்கு ஆறுதல் சொன்னாங்க. அதற்குப் பிறகு பையனுக்கு ஆபரேஷன் செய்து முடிச்சாங்க. எங்களிடம் எந்த செலவுக் கான கட்டணமும் வாங்க வில்லை. ஆபரேஷன் செய்து முடித்ததும் பையன் நார்மலாக பேச ஆரம்பித்தான். எங்களுக்கு உதவி செய்ததற்கு, பையன் உடல் நலம் பெற்றதற்கு மிக்க சந்தோஷ மாக இருக்கின்றது. முதல மைச்சர் அய்யா அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

பையனின் தாய் வசந்தா மேலும் கூறுகையில், முதல்வர் அவர்கள் செல்போனில் பேசினாங்க. பையன் எப்படி இருக்கிறார் என்று கேட்டார். நன்றாக இருக்கிறான் – உதவிக்கு நன்றி என்று கூறினேன். நன்றி இருக்கட்டும்மா.. பையன் நலமாக இருக்கிறானா என்று கேட்டார். நலமா இருக்கிறான் என்று கூறினேன். பையனை நல்லா கவனிச்சுக் கோம்மா, நல்லா பாத்துக்கோம்மா என்று முதல்வர் கூறினார்.

முதல்வர் அவர்கள், சிறுவன் வர்ஷாந்திடம் செல்போனில் பேசியதாவது :–

முதல்வர் :– நல்லா இருக்கியா தம்பி?

வர்ஷாந்த் :– நல்லா இருக்கேன் அய்யா.

முதல்வர் :– வலி இருக்கா?

வர்ஷாந்த் :– வலி இல்லைங்க அய்யா!

முதல்வர் :– தைரியமா இரு! தைரியமா இரு!!

வர்ஷாந்த் :– பூ விற்கப் போனேன் – வண்டியை மேலே கொண்டு வந்து விட்டுட்டாங்க.

முதல்வர் :– சரிப்பா..! சரிப்பா! மருந்து மாத்திரைகள் கொடுத்து இருக்காங்களா?

வர்ஷாந்த் :– கொடுத்து இருக்காங்க.

முதல்வர் :– மருந்து மாத்திரைகளை ஒழுங்காக சாப்பிடு. எதுவாக இருந்தாலும் மாவட்டப் பொறுப்பாளர் ராஜேஷ் இருக்கிறார் இல்லைய்யா.. அவரிடம் போன்செய்து சொல்லைய். அம்மா பக்கத்தில் இருக்காங் களா?

(அம்மா பக்கத்தில் இருக்காங்க என்று கூறி அம்மாவிடம் தொலைபேசியை கொடுக்கிறார், மாவட்டப் பொறுப்பாளர் ராஜேஷ்குமார்).

முதல்வர் :– அம்மா நன்றி சார்!

முதல்வர் :– சரிம்மா, நன்றியெல்லாம் இருக்கட்டும்.பையனை ஜாக்கிரதையா பார்த்துக்கோம்மா. மாவட்டப் பொறுப்பாளர் ராஜேஷ் நம்பர் வாங்கி வைச்சுக்கோங்க.. அவரிடம் நான் சொல்கிறேன்.

திருமதி வசந்தா :– **முதல்வர் அவர்கள் என்னிடம் பேசும்போது, நான் ரொம்ப சந்தோஷப்பட்டேன். இவ்வளவு தூரம் வந்து உதவி செய்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். எங்களுக்கு மிகுந்த சந்தோஷ மாக இருக்கிறது. என் பையனின் உயிரை காப்பாற்றியதற்கு நெஞ்சார்ந்த நன்றி. (மேற்கொண்டு பேச முடியாமல் நா தழுதழுக்கிறார்).**



முதல்வரிடம் சிறுவன் வர்ஷாந்த் நன்றி தெரிவித்துப் பேசினார்.

கோபி :– முதல்வர் அவர்கள் பையனிடமும், அவங்க அம்மாவிடமும் போனில் பேசினாங்க. ரொம்ப ஆச்சரியமா இருந்தது. நம்ம கிட்டேயும் சி.எம்.அய்யா அவர்கள் பேசினாங்க என்பதை நினைக்கும் போது ஆச்சரியமாகத்தான் இருந்தது.

திருமதி வசந்தா :– **இந்தச் செலவுகளையெல்லாம் எங்களால் நினைச்சுக் கூட பார்க்க முடியாது. இவ்வளவு தூரம் எங்களுக்காக உதவி செய்து இருக்காங்க. அவங்களை எங்களால் மறக்கவே முடியாது. இவ்வளவு தூரம் செய்ததற்கு முதலமைச்சர் அவர்களுக்கு ரொம்ப நன்றி. அவர் மட்டும் இந்த உதவியை செய்ய லைன்னா ஒன்றும் எங்களால் செய்து இருக்க முடியாது.**

இவ்வாறு அவர்கள் கூறினர்.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்
24-Jan-2022

செம்மொழிக்கு பெருமை

உலகில் எத்தனையோ மொழிகள் இருப்பினும் அதற்கென எழுத்து வடிவங்கள் இல்லை. எழுத்திலக்கியங்கள் அடிப்படையிலும், பழமை மற்றும் தொன்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டால் தமிழ் மொழிக்கு ஈடு இணையற்ற பெருமைகள் உண்டு. தாய்மொழியாம் தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து பெற்றுக் கொடுத்த பெருமை திமுகவிற்கே உண்டு. இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் வளர்ந்த திமுகவிற்கு தமிழின் மீதான தளராத காதல் நம் மொழிக்கு நம்பிக்கையை ஊட்டியது. தமிழில் தபால் தலை, தமிழ்த்தாய் வாழ்த்து, தமிழ்த்தாய்க்கு கோயில், திருவள்ளுவர் ஆண்டு உருவாக்கம் என கலைஞர் தமிழ்மொழிக்கு செய்த தொண்டுகளை பட்டியல் இட்டுக் கொண்டே போகலாம்.

தமிழ்மொழியை வளர்க்க பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்த பெருமையும் திமுகவிற்கே உண்டு. செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் கடந்த 2008ம் ஆண்டில் கலைஞர் தனது சொந்த நிதியில் இருந்து ₹1 கோடி ஒதுக்கி "செம்மொழி தமிழாய்வு அறக்கட்டளை" நிறுவினார். இந்த அறக்கட்டளை மூலம் ஆண்டுதோறும் கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி தமிழ் விருது வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2009, 2010ம் ஆண்டில் இதற்கான விருதுகள் அந்தந்த ஆண்டிலேயே வழங்கப்பட்டன. அதிமுக ஆட்சிக் காலத்தில் இவ்விருதுகள் அப்படியே கிடப்பில் போடப்பட்டன. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 2010 முதல் 2019ம் ஆண்டு வரை 10 ஆண்டுகளுக்கான விருதுகளை இப்போது வழங்கி, தமிழறிஞர் பெருமக்களை கவுரவித்துள்ளார்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என அறிஞர் அண்ணா காட்டிய பாதையில் முதல்வர் ஸ்டாலினும் பயணிக்க தொடங்கியுள்ளார். அவரது சமீபத்திய அறிவிப்புகளே அதற்கு உதாரணமாகும். செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் அமைந்துள்ள மேடவாக்கம்- சோழிங்கநல்லூர் இணைப்பு சாலையை இப்போது அவர் "செம்மொழி சாலை" என அறிவித்துள்ளார். செம்மொழி தமிழின் பெருமைகளை உலகெங்கும் எடுத்துச் செல்ல தென்கிழக்கு ஆசிய நாடுகளில் உள்ள 5 பல்கலைக்கழகங்களில் செம்மொழி தமிழ் இருக்கைகள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழ் மொழி குறித்த ஆய்வுகள் இனி உலகளாவிய அளவில் அமையும். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று அண்ணா காட்டிய வழியில் வீறு நடை போட்டவர் கலைஞர். அதே வழியில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினும் தமிழறிஞர்களை போற்றுவதிலும், தமிழின் பெருமைகளை உலகளவில் கொண்டு செல்வதிலும் தீவிர முனைப்பு காட்டுகிறார்.

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி குறித்த திட்டங்கள் அனைத்தும் மொழி ஆர்வலர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. சென்னையில் உள்ள செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனமானது, உலக மொழியியல் ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு வேடந்தாங்கலாக அமையும் என்பதில் சந்தேகமே இல்லை. ஈராயிரம் ஆண்டு இலக்கிய மரபை கொண்ட தமிழுக்கு மணிமகுடம் சூட்டும் தமிழக அரசின் நடவடிக்கைகளுக்கு நாமும் துணை நிற்போம்.

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

24-Jan-2022

Tamil Nadu government and DMK played their part in OBC reservation in all-India quota seats

The DMK, represented by senior advocate P. Wilson, instituted a writ petition before the Supreme Court seeking a mandamus

KRISHNADAS RAJAGOPAL
NEW DELHI

Tamil Nadu's ruling DMK and the State government played the role of a driving force in the long road that culminated in the Supreme Court's validation last week of the OBC quota for NEET-all-India quota seats in medical college admissions.

It was the DMK, represented by senior advocate P. Wilson (now a Rajya Sabha member), which instituted a writ petition before the Supreme Court seeking a mandamus. But the party was asked to take its case to the Madras High Court in June 2020.

In the High Court, the DMK argued that the all-India quota seats at State-run medical and dental institutions in Tamil Nadu ought to follow the reservation policy as applicable under an Act of 1993. However, the High Court deferred the case, saying it had to be heard by the Supreme Court where a similar issue was pending. Back in the Supreme Court, on July 13, 2020, the petitions were disposed of on the ground that the issue raised in the High Court was different from the one pending with the top court.

Finally, the High Court, on July 27, 2020, held there were no legal or constitutional impediments to extending reservation to the OBCs in the all-India quota seats in the medical colleges in Tamil Nadu. The High Court had then directed the Union government to constitute an expert committee for implementing reservation for the OBCs in the seats surrendered by Tamil Nadu to the all-India quota. But the High Court had observed that the reservation should be implemented only from the academic year 2021-22 since it would disturb the selection process set in motion for the academic year of 2020-21. The State challenged the order in the Supreme Court, which upheld the High Court's decision.

Meanwhile, the Union government constituted an expert committee to determine the modalities of granting reservation to the OBC candidates in the all-India quota seats in undergraduate and postgraduate courses in the State-run medical colleges within Tamil Nadu from the academic year 2021-22. But the DMK filed a contempt petition before the High Court against the Union for non-implementation of the OBC reservation in the all-India quota seats.

However, the Union government issued its notice of July 29, 2021, to implement 27% OBC reservation (non-creamy layer) and 10% reservation for the economically weaker section in the 15% undergraduate and 50% postgraduate all-India quota seats in the current academic session of 2021-22. The Supreme Court, earlier this month, upheld the constitutional validity of the OBC reservation in the all-India quota medical and dental undergraduate and PART B 10 postgraduate seats. The constitutionality of the criteria used for the identification of the economically weaker section is yet to be decided.

Appearing before a Bench, led by Justice D.Y. Chandrachud, last week, Mr. Wilson said the judgment would go a long way in the fight for social equality.

THE NEW INDIAN EXPRESS

24-Jan-2022

Strikes at the root of our federal polity, state autonomy, says Stalin

PRESS TRUST OF INDIA
CHENNAI, JANUARY 23

CENTRE'S PROPOSED amendments to the IAS (Cadre) Rules "strikes at the very root" of the nation's federal polity and state autonomy, Tamil Nadu Chief Minister M K Stalin on Sunday wrote to Prime Minister Narendra Modi, urging him to drop the move. Expressing concern over the draft amendments proposed by the Centre, Stalin strongly objected to it.

The amendment proposal "strikes at the very root of our federal polity and state autonomy", he wrote. If implemented, the proposed amendments would cause irreparable damage to the spirit of cooperative federalism that exist between Union and the states and lead to concentration of powers in the union government.

"I would also like to highlight the fact that many of the state governments are also woefully short of officers at specific seniorities, primarily due to the wrong cadre management policies followed by the union government," the Chief Minister wrote.

MK Stalin

While the Union is availing the common pool from Group-I officers at the national level, the state governments solely depend on the limited pool of IAS officers available in the state, he wrote.

The state governments are at the forefront of implementation of various programmes. The states also face frequent natural disasters which demands services of IAS officers in the state more than elsewhere. Under such circumstances, forcing the state governments to depute officers would surely aggravate the 'governance deficit' in various states due to shortage of officers and also it is an 'affront' to the administrative frame work of the states, Stalin added. "I request you to drop these proposed amendments to IAS (Cadre) Rules, 1954 instead engage with state governments to further strengthen the federal spirit of the nation..." he wrote.

Hindustan Times

24-Jan-2022

Now, Vijayan, Stalin write to PM objecting to changes in IAS rules

HT Correspondents

letters@hindustantimes.com

CHENNAI/THIRUVANANTHAPURAM: Tamil Nadu chief minister MK Stalin and his Kerala counterpart, Pinayari Vijayan, on Sunday urged Prime Minister Narendra Modi to drop the proposed amendments to IAS (Cadre) Rules,1954, saying the rules will "weaken the very root of cooperative federalism".

The chief ministers of Rajasthan, Maharashtra, Chhattisgarh, West Bengal and Jharkhand have in the past also opposed the proposed amendments which allows the Centre to summon any official (Indian Administrative Service, Indian Police Service and Indian Forest Service) for central deputation without the consent of the concerned state governments.

In his letter to Modi, Stalin said the amendments "strikes at the very root" of the nation's federal polity and state autonomy.

"State governments are on the forefront of implementation of various programmes, including the schemes of the Union government at state level. The states also face frequent natural disasters which demand services of IAS officers in the state more than elsewhere," he said.

"Under such circumstances,

MK Stalin, Pinarayi Vijayan

forcing the state governments to depute officers would surely aggravate the 'governance deficit' in various states due to shortage of officers and also it is an 'affront' to the administrative frame work of the states," he added.

The Tamil Nadu chief minister also claimed that the proposed amendments "would cause irreparable damage to the spirit of cooperative federalism that exist between Union and the states and result in concentration of powers with the Union government".

Vijayan said the Centre's move will create "fear psychosis" among civil service officials to implement the state government policies. "The present deputation rules are themselves heavily loaded in favour of the Union and bringing further stringency will weaken the very root of cooperative federalism. The government of Kerala is of the opinion that the proposed amendments may be dropped," he said. He said that in a federal setup, the state governments are on par with the central government because both are elected by the people, though the division of authority in the constitution gives the Centre jurisdiction over a wide range of subjects.

At least five states have written to the Union government against the proposed changes so far. On Saturday, Jharkhand chief minister Hemant Soren had urged Modi to "bury" those proposals. Likewise, on January 21, Chhattisgarh chief minister Bhupesh Baghel wrote to Modi, saying the amendments were in "contrary to spirit of federalism enshrined in the Constitution of India". A day earlier, West Bengal chief minister Mamata Banerjee told the Prime Minister that the amendment will "destroy" the federal polity and basic structure of the Constitution.

The chief ministers of the states mentioned above believe that amendments to transfer rules will lead to shortage of staff, even as Union government officials have claimed that the changes will bridge the deficit gap between the central ministries and departments.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்
27-Jan-2022

வாழ்வது தமிழாகட்டும்...

தலைநகர் டெல்லியில் நடந்த குடியரசு தின விழா அணிவகுப்பில், வ.உ.சி, பாரதியார், வேலுநாச்சியார், மருதுபாண்டியர் சிலைகள் இடம் பெற்றிருந்த தமிழக அலங்கார ஊர்திக்கு ஒன்றிய அரசு அனுமதி அளிக்காதது பெரும் சர்ச்சையை கிளப்பியது. அதேநேரம் அந்த அலங்கார ஊர்தி தமிழகத்தில் நடக்கும் அணிவகுப்பில் கட்டாயம் இடம் பெறுமென அறிவித்தார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின். அறிவித்ததோடு மட்டுமல்ல.... சென்னையில் நேற்று நடந்த குடியரசு தின விழாவில் அந்த அலங்கார ஊர்தியை கம்பீரமாக அணிவகுத்து வரவும் செய்தார் முதல்வர்.

வ.உ.சி, பாரதியார், வேலுநாச்சியார், மருது பாண்டியர் ஆகிய தேச விடுதலைக்கு பாடுபட்ட தலைவர்களுடன், தேச மக்களின் சுதந்திரத்துக்காக பாடுபட்ட, அதற்காகவே வாழ்ந்த தந்தை பெரியார் சிலையையும் ஊர்தியில் இடம் பெற வைத்தது அனைத்துத் தரப்பினரின் வரவேற்பையும் பெற்றுள்ளது. ஏற்கனவே, தமிழக அரசுப்பணிகளில் தமிழர்களுக்கே வேலைவாய்ப்பு வழங்கும் சட்டத்திருத்தம், கோயில்களில் தமிழில் அர்ச்சனை, தமிழர்களின் பாரம்பரியங்களை உலகுக்கு பறை சாற்றும் வகையில் 7 இடங்களில் அகழாய்வு பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டது, செம்மொழி சாலை அறிவிப்பு, செம்மொழி தமிழாய்வு நிறுவனம் புதுப்பிப்பு, அரசுப்பள்ளிகளில் தமிழ் வழி படித்த மாணவர்களுக்கு உள் இடஒதுக்கீடு என முதல்வரின் அறிவிப்புகள் தமிழ் மொழி மீதான அவரது பற்றை வெளிக் கொணர்ந்துள்ளது.

இந்த நேரத்தில், மொழிப்போர் தியாகிகள் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினின் பேச்சு மிகவும் கவனிக்கத்தக்கது. திமுக அரசு இந்தி உட்பட மற்ற மொழிகளுக்கு எதிரானது என்ற கருத்தை, தனது பேச்சின் மூலம் உடைத்தெறிந்துள்ளார். ""எந்த மொழிக்கும் தனிப்பட்ட முறையில் நாம் எதிரிகள் அல்ல. இந்தியின் ஆதிக்கத்தை, திணிப்பை எதிர்க்கிறோம். மொழி ஒருவரது விருப்பம் சார்ந்து இருக்க வேண்டும். ஒரே மொழிதான் பேச வேண்டுமென்ற கொள்கைப்படி இந்தியை திணிக்க பார்க்கின்றனர். டெல்லி குடியரசு தின விழாவில் தமிழ்நாட்டின் அலங்கார ஊர்தியை நிராகரித்தது தொடர்பான விளக்கம் ஏற்றுக் கொள்ளும்படி இல்லை. வீரமங்கை வேலுநாச்சியார், மருதுபாண்டியர், மகாகவி பாரதியார், வ.உ.சியை யார் என கேட்க இவர்கள் யார்? பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக முதல் குரல் எழுப்பிய மண் தென்னாடு. அதிலும் குறிப்பாக தமிழ்நாடு. தமிழர்களுக்கு ஒரு ஆபத்து என்றால் அதற்காக அனைத்து தியாகத்துக்கும் நாம் தயாராக இருப்பவர்கள். நாம் அரசியல் இயக்கமாகச் செயல்படுவதும் தேர்தல் அரசியலில் பங்கெடுப்பதும் இத்தகைய நோக்கங்களுக்காகத்தான். திமுக ஆட்சியில் இருக்கும் காலம் என்பது அன்னைத் தமிழ் ஆட்சியில் இருக்கும் காலமாக அமைய வேண்டும்" என பேசி உள்ளார்.

ஒரு முக்கிய கட்சியின் தலைவராக, மாநில முதல்வராக, தமிழக மக்களின் வாழ்வுரிமை பாதுகாவலராக ஒரு முதல்வர் கிடைத்திருப்பது நமக்கு கிடைத்த வரமென்றே கூற வேண்டும்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
27-Jan-2022

தமிழ்நாடு முழுவதும் சமச்சீரான வளர்ச்சி!

ஒரு புகழ்பெற்ற நிறுவனத்தில், கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பு முக்கிய நிர்வாகியாக இருந்த ஒருவர், அங்கு பணியாற்றிய ஊழியர்களிடம், எப்போதும் ஒரு ஆலோசனையை கூறுவார். "உடலில் ஒரு பக்கம் மட்டும் வளர்ச்சி அடைந்தால், அது வளர்ச்சி அல்ல, வீக்கம். உடலின் அனைத்து பாகங்களும் ஒருசேர வளர்ச்சி அடைந்தால்தான் அது உண்மையான வளர்ச்சி. அந்த வகையில், நிறுவனத்தில் ஒரு துறை மட்டும் வளர்ச்சி அடைந்தால் போதாது. அனைத்து துறைகளும் ஒன்றுபோல வளர்ச்சி அடைந்தால்தான் அந்த நிறுவனம் முன்னேற்றம் காணமுடியும்" என்று கூறுவார்.

இதைத்தான் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், சமச்சீர் வளர்ச்சி என்றும், திராவிட மாடல் வளர்ச்சி என்றும் கூறுகிறார். "தமிழகத்தின் வளர்ச்சி என்பது-சமூகத்தின் வளர்ச்சியாக, வாழ்க்கை வளர்ச்சியாக, சிந்தனை வளர்ச்சியாக, பண்பாட்டு வளர்ச்சியாக இருக்கவேண்டும். அதுதான் உண்மையான வளர்ச்சி. அத்தகைய வளர்ச்சிக்கு பெயர் சூட்ட வேண்டுமென்றால், அதுதான் திராவிட மாடல்.

பொருளாதாரம்-கல்வி-சமூகம்-சிந்தனை-செயல்பாடு ஆகிய ஐந்தும் ஒருசேர வளரவேண்டும். அதுதான் திராவிட மாடல் வளர்ச்சி" என்கிறார். இந்த கருத்தைத்தான், சமீபத்தில் நடந்த மாநில திட்டக்குழு ஆய்வுக்கூட்டத்தில் அவர் தெளிவாக சுட்டிக்காட்டினார்.

அரசு நிறைவேற்ற வேண்டிய பல திட்டங்களுக்கு ஆலோசனை வழங்கும் இந்த திட்டக்குழுவின் தலைவராக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினும், துணை தலைவராக பேராசிரியர் ஜெயரஞ்சனும் இருக்கிறார்கள். மேலும், பல நிபுணர்களும் இடம்பெற்றுள்ளனர். இந்த ஆய்வு கூட்டத்தில், முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒரு கருத்தை முன்வைத்தார். அதாவது, "சமச்சீரான வளர்ச்சி-அனைத்து மாவட்டங்களுக்கும் ஒரே மாதிரியான வளர்ச்சி இதுவரை நம்மிடம் இல்லை என்பதை ஒப்புக்கொண்டாகவேண்டும். தொழில் வளர்ச்சியிலும், கல்வியிலும் மாவட்டத்துக்கு மாவட்டம் வேறுபாடு உள்ளது. சில மாவட்டங்களில் வறுமை குறைவாகவும், சில மாவட்டங்களில் அதிகமாகவும் இருப்பதை நாம் காண்கிறோம். இந்த வேறுபாட்டை களைய தமிழகம் முழுமைக்கான ஒரு வேலை திட்டம் தேவை. சமச்சீரான வளர்ச்சிக்கான பயணத்தை நாம் உடனடியாக தொடங்கியே ஆகவேண்டும்" என்று பிரகடனப்படுத்தியுள்ளார்.

தமிழ்நாட்டில் சமச்சீரான வளர்ச்சி நிச்சயமாக தேவை. மாநிலம் முழுவதும் ஒரேபோல வளர்ச்சி காணப்பட்டால்தான் எல்லா மாவட்டங்களிலும் வேலைவாய்ப்பு பெருகும். உள்கட்டமைப்பு வசதிகள் வளரும். உற்பத்தி பெருகும். அனைத்து மாவட்டங்களும் ஒன்றுபோல வளர்ச்சியை காணமுடியும் என்பது நிதர்சனமான உண்மையாகும். தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களும் வளர்ச்சி பெறவேண்டும் என்ற நோக்கில், தொழில் துறையும், சிறு தொழில் துறையும் தங்கள் முயற்சிகளை தொடங்கியுள்ளது மிகுந்த வரவேற்புக்குரியது. அனைத்து மாவட்டங்களிலும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களை தொடங்குவதற்கு தமிழக அரசு சலுகைகள் அளிக்கிறது. ஆனால், மொத்தம் உள்ள 385 பஞ்சாயத்து யூனியன்களில் ஏறத்தாழ 200 பஞ்சாயத்து யூனியன்கள் தொழில் வளர்ச்சியில் பின்தங்கியதாக வகைப்படுத்தப்பட்டு, அங்கு இத்தகைய தொழில்களை தொடங்குபவர்களுக்கு மூலதன மானியம் வழங்கப்படுகிறது என்கிறார், இந்தத்துறையின் செயலாளர் அருண் ராய்.

பெரிய தொழிற்சாலைகளை பொறுத்தமட்டில், தமிழ்நாட்டில் தொடங்குவதற்கு சலுகைகள் அளித்தாலும், அனைத்து மாவட்டங்களும் பயன்பெறவேண்டும் என்றவகையில், 23 மாவட்டங்கள் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களாக வகைப்படுத்தப்பட்டு, அங்கு தொழில் தொடங்கவரும் நிறுவனங்களுக்கு கூடுதலாக சலுகைகள், மானியங்கள் வழங்கப்படுகிறது. மின்சார வாகனங்கள் போன்ற சில குறிப்பிட்ட தொழில்களை தொடங்கும் நிறுவனங்களுக்கு இன்னும் கூடுதலாக சலுகைகள் வழங்கப்படுகிறது என்கிறார், தொழில்துறை கூடுதல் தலைமை செயலாளர் எஸ்.கிருஷ்ணன்.

தமிழகத்தை பொறுத்தமட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும், சில குறிப்பிட்ட தொழில்களை தொடங்குவதற்கான வாய்ப்புகள் மிக அதிகமாக இருக்கிறது. அரசு வழங்கும் சலுகைகள், மானியங்கள், தொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகள் போன்ற விவரங்களை தொழில் முனைவோரிடம், குறிப்பாக குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களை தொடங்க நினைப்போரிடமும் கொண்டுபோய் சேர்க்கும் வகையில், நல்ல விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு முயற்சிகளை எடுக்கவேண்டும்.

ஈரோட்டில்

அண்ணல் அம்பேத்கர் சிலை திறப்பு!

முதல்வருக்கு அம்பேத்கர் மக்கள் இயக்க செயல் தலைவர் வாழ்த்து!!

சென்னை, ஜன. 27

ஈரோட்டில்நேற்றுதமிழக முதல்வர் மு.க ஸ்டாலின்அண்ணல்அம்பேத்கர் அவர்களின் சிலையை திறந்து வைத்தார்.

இதற்குஅம்பேத்கர்மக்கள் இயக்கத்தின் செயல் தலைவர் இளமுருகு முத்து நன்றி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் முழு உருவ வெண்கல சிலை மேற்கு மாவட்டங்களில் பொதுவெளியில் இல்லை.

இந்நிலையில் நீண்ட நாட்களாக அம்பேத்கரிய அமைப்புகள்பலஆண்டு காலமாக அரசுக்கு சொந்தமான இடத்தில் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் முழு உருவ சிலையை நிறுவ வேண்டும் என்று கோரிக்கை வைத்தும், போராட்டங்கள் நடத்தியும் வந்தன.

இளமுருகு முத்து

இந்நிலையில் ஈரோட்டில்தமிழகமுதல்வர்மு.க ஸ்டாலின்அனுமதியுடன் வீட்டு வசதித்துறை அமைச்சர் முத்துசாமி முன்முயற்சியில் மேற்கு மாவட்டத்தில் முதல் சிலையாக டாக்டர் அம்பேத்கர்அவர்களின்சிலை அமைக்கப்பட்டிருப்பதை மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம். இதற்காக தமிழக அரசுக்கும் முதலமைச்சருக்கும் வீட்டு வசதித்துறைஅமைச்சருக்கும் அம்பேத்கர் மக்கள் இயக்கத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும்மேற்குமாவட்டங்களில் அனைத்து மாவட்டதலைநகரங்களிலும் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் சிலையை பொது இடங்களில் தமிழக அரசு நிறுவ வேண்டும்.

கோவையில்நஞ்சப்பா சாலையில் மத்திய பேருந்து நிலையத்திற்கு எதிரில் அமைந்துள்ள சிறைத் துறைக்கு சொந்தமானஇடத்தில்விரைவில் செம்மொழிப் பூங்கா அமைய உள்ளது.

இந்நிலையில் அந்த மைதானத்தில் அண்ணல் அம்பேத்கர்அவர்களுக்கு முழு உருவ சிலையை நிறுவ தமிழக முதல்வர் இடம் ஒதுக்கி, அம்பேத்கர் அவர்களுக்கு விரைவில்முழுஉருவசிலையை அமைத்திட வேண்டும் என்ற தார்மீக உணர்வோடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு இளமுருகு முத்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ★

THE HINDU

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

27-Jan-2022

The Dravidian model of public health

The practices followed by Tamil Nadu can be replicated throughout India to facilitate social advancement

SAKTHIRAJAN RAMANATHAN & SUNDARESAN CHELLAMUTHU

R. ASHOK

The recent Supreme Court judgement upholding the constitutionality of reservation for Other Backward Classes (OBC) in National Eligibility cum Entrance Test (NEET)'s All-India Quota (AIQ) seats for undergraduate and postgraduate medical and dental courses is a landmark in the history of social justice in the country. "The propriety of actions and dedication to public service should also be seen as markers of merit, which cannot be assessed in a competitive examination," observed the bench comprising Justice D.Y. Chandrachud and Justice A.S. Bopanna. In the light of these crucial observations, it is high time that we demystify the narrow definitions of merit. "Merit should be socially contextualised and reconceptualised as an instrument that advances social goods like equality that we as a society value," the apex court said. In this regard, the practices followed by Tamil Nadu, where the notion of merit has taken into account the role of historical privileges instead of an illusory inborn ability, can be replicated to facilitate social advancement throughout India.

A tectonic shift

Successive Dravidian governments in Tamil Nadu have had a broad and an inclusive understanding of 'merit' and its social implications. Hence, affirmative action to provide reservation for in-service doctors has stood the test of time for well over four decades. The introduction of the scheme reserving 50% of the postgraduate and super-speciality medical seats for government doctors ushered in a tectonic shift in providing tertiary health care in government hospitals. It resulted in the expansion of public health infrastructure in the State. This progressive reform paved the way for ensuring the availability of specialists in multiple disciplines such as gynaecology, anaesthesia, general medicine, paediatrics, general surgery and orthopedics, which were scarce in almost every district headquarters hospital across the State 40 years ago. This was complemented by super-specialty departments like Urology, Nephrology, Cardiology and Neurology in the Madras Medical College (MMC) in the 1960s and 1970s. The provision of reservation for government doctors in super-specialty courses contributed to a steady rise in the availability of multi-specialty experts not only in metropolitan cities like Chennai, Coimbatore and Madurai, but also Tier-2 cities as early as the 1990s. Today, the public health sector in Tamil Nadu has 900 super-specialists in different disciplines, a number comparable only to a few European countries.

The unique scheme had a dual effect. It encouraged young MBBS graduates to serve in rural areas, as serving for three years in Primary Health Centres (PHCs) in rural areas is an eligibility criterion for graduates to avail themselves of the reservation policy. As a consequence, State PHCs and government hospitals never witnessed a shortage of doctors and people got better healthcare facilities at their doorsteps.

The healthcare managers in the Tamil Nadu government were not short-sighted while formulating the policy. They unveiled a unique superannuation bond for these government doctors to ensure that those who secure postgraduate or super-specialty seats by availing themselves of in-service reservation will serve the government till their retirement. This legal binding has ensured that a vast majority of the specialists continues their service in the government sector throughout their career. The main aim of this superannuation bond was to prevent the brain drain either to the private sector or to places abroad. It has proved to be a win-win situation for doctors and the government. This unique scheme is present nowhere in the country.

If one attempts an objective analysis of the contribution of two prestigious institutions – MMC and IIT-Madras – where 'bright' and 'meritorious' students land, in societal advancement and regional development, MMC would shine largely due to its adoption of reformatory policies that are consistent with the societal needs of Tamil Nadu.

A myopic view

However, with the introduction of NEET and Regulation 9 by the Medical Council of India (MCI), the admission policy has undergone a sea change. The weightage for government doctors who serve in rural areas has reduced. The MCI has framed a policy of giving only 50% of postgraduate diploma seats to service doctors, exempting postgraduate degrees. Besides lack of consultation with stakeholders, the policymakers in Delhi are yet to put forth their rationale for this myopic view in the public domain.

Shockingly, the Union government went to the extent of filing affidavits opposing in-service reservation before the Madras High Court and Supreme Court when the new rule was challenged by the Tamil Nadu Medical Officers Association. While the State government rightly says that dismantling incentives to serving doctors would jeopardise healthcare delivery system in the State, the Union government is opposing the very idea by hiding behind the nebulous regulations of MCI, a regulatory watchdog without any legal teeth to formulate policy. With this move, the Union government has put the rural healthcare delivery system in peril and pushed young doctors, who find it difficult to compete with their urban counterparts who have access to niche coaching institutes, out of the system to prepare for competitive exams instead of serving the poor in rural areas.

It is unfortunate that the affidavits filed by the Centre on both the OBC reservation and the government in-service doctors reservation cases in the court are based on a narrow reading of what constitutes merit rather than an inclusive prism called public health. Instead of trying to widen the scope of a time-tested practice, which would ensure robust supply of specialist and super-specialist doctors to strengthen public health care, the Union government is hell bent on unleashing misery. Its lament about the unwillingness of doctors to work in rural areas and its attempt to push them to take up compulsory rural service after MBBS or to introduce a bridge course for AYUSH doctors to incarnate them as rural physicians is purely rhetorical.

In continuation of the maladies of NEET, from 2017, it became compulsory for individual States to surrender all the seats of super-specialty courses to the central pool for common counselling, forgoing the domiciliary needs (15% of MBBS seats, 50% of postgraduate seats but 100% of super-specialty seats are surrendered to Centre, which is known as AIQ) and also abolishing government doctors' reservation. Disposing of a case filed in the Madras High Court by members of the Service Doctors and Postgraduates Association for the reintroduction of 50% service doctors' reservation in super-speciality courses, the court has directed the Centre to provide reservation for service doctors in super-specialty courses. Will the Union government act in accordance with the recent judgement of the Supreme Court, which has advocated a broader definition of the concept of merit by facilitating a smooth reintroduction of in-service doctors and domiciliary reservation for respective States in super-specialty courses from the current academic admission year?

Sakthirajan Ramanathan is Assistant Professor of Nephrology, MMC; Sundaresan Chellamuthu is Associate Professor of Radiation Oncology, Tamil Nadu Government Multi Super Specialty Hospital and State president, Government All Doctors Association

மக்கள் குரல்

29-Jan-2022

1 முதல் 12ம் வகுப்புகளுக்கு நேரடி வகுப்புகள்: தமிழ்நாடு ஆசிரியர் சங்கம் வரவேற்பு

முதலமைச்சருக்கு மாநிலத் தலைவர் பி.கே.இளமாறன் நன்றி

சென்னை, ஜன. 29–

1 முதல் 12 ஆம் வகுப்புகளுக்கு நேரடி வகுப்புகள் தொடங்குவதை தமிழ்நாடு ஆசிரியர் சங்கம் வரவேற்பதாகவும், இதற்கு அனுமதி வழங்கிய முதலமைச்சருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் தமிழ்நாடு ஆசிரியர் சங்க மாநிலத் தலைவர் பி.கே. இளமாறன் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக கற்றல் கற்பித்தல் பணி முடக்கத்தில் இருந்ததை மீட்டு தான் நேரடி வகுப்புகள் மூலம் இரண்டு மாதங்களில் ஓரளவுக்கு பழைய நிலையினை கொண்டுவந்தோம். இந்நிலையில் மீண்டும் கொரோனா மிரட்டிவந்ததால் நேரடி வகுப்புகள் ரத்து செய்யப்பட்டது. கல்வித்தொலைகாட்சி இணையவழி கல்வியென்பது ஒருவழிப் பயிற்சியாகவே இருந்து வருவதால் முழுமையாகப் பயன்தராது என்பது அனைவரும் அறிந்ததே. குறிப்பாக தொடக்கக்கல்வி மாணவர்கள் எழுத்துகளே மறந்துபோகும் நிலை உருவாகியுள்ளது. உயர், மேல்நிலை வகுப்பு மாணவர்களுக்கு படிப்பில் நாட்டம் குறைந்துள்ளதை அறிய முடிகின்றது.

எனவே முற்றிலுமாக கொரோனா தொற்று குறையாதிருந்தாலும் மாணவர்களுக்கு பள்ளிகள்தான் பாதுகாப்பு என்பதையறிந்து 1முதல் 12 ஆம் வகுப்புகள் வரை நேரிடை வகுப்புகள் மூலம் பள்ளிகள் இயங்குவதற்கு உத்தரவிட்ட முதலமைச்சருக்கு தமிழ்நாடு ஆசிரியர் சங்கம் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

மாணவர்கள் நெடுங்காலம் கற்றல் தொடர்பில்லாமல் இருந்து வருவதால் அரசு வழிகாட்டு நெறிமுறைகளுடன் பாதுகாப்பு உபகரணங்கள் சானிடைசர், சோப்பு உள்ளிட்டவைகளுடன் 15 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. 14 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கு நோய் எதிர்ப்பு சத்து மாத்திரைகள் வழங்கிடவேண்டும். மேலும், பொதுத்தேர்வை எதிர்நோக்கியுள்ள மாணவர்களின் நலன்கருதி ஆசிரியர்கள் முழுமையாகக் கற்பித்தல் பணியில் ஈடுபட்டு வழிகாட்டவேண்டிய அவசியம் உள்ளது.

இந்நிலையில் பிப்ரவரி 19 ல் நடைபெறவுள்ள நகர்புற உள்ளாட்சித் தேர்தலுக்கானபணிதொடங்கியுள்ளது பெரும்பாலான பள்ளிகள் வாக்குச்சாவடி மையங்களாக உள்ளது. மேலும் குறிப்பாக தேர்தலுக்கானப் பயிற்சி வகுப்புகள் தொடங்கி வாக்கு எண்ணிக்கை முடியும் வரை ஒரு மாத காலம் தேர்தல் பணியாற்ற உள்ளோம். இந்த நெருக்கடியானச் சூழலில் மாணவர்களை தயார்படுத்த வேண்டியுள்ளதால் மாணவர்களின் நலன்கருதி 10, 11, 12 ஆம் வகுப்பு எடுக்கும் ஆசிரியர்களுக்கும் மற்றும் மாற்றுத்திறனாளி, கர்ப்பிணி ஆசிரியர்களுக்கும் தேர்தல் பணியிலிருந்து விலக்களிக்க ஆவன்செய்யும்படி பள்ளிக்கல்வித்துறை அமைச்சரை தமிழ்நாடு - ஆசிரியர் சங்கம் சார்பில் பணிவுடன் வேண்டுகிறோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் மாநிலத் தலைவர் பி.கே. இளமாறன் கூறியுள்ளார்.

ராணி

30-Jan-2022

எம்.ஜி.ஆர். வழியில் ஸ்டாலின்!

எங்கள் கல்லூரிக் காலத்தில் வெளிவந்த சர்க்கஸ் படம் 'பறக்கும் பாவை' (1966). டி.ஆர்.ராமண்ணா இயக்கம். அதில் எம்.ஜி.ஆர். ட்ரபீஸ் (Trapeze) கலைஞராக நடித்திருப்பார். இரண்டு கயிறுகளால் அந்தரத்தில் தொங்கவிடப்படும் பட்டையைப் பிடித்துக் கொண்டு ஆடி அவர் வலையில் குதிக்கும் காட்சி மிகவும் பிரபலம். அந்தப் பட உந்துதல் காரணமாக அவருக்குச் சர்க்கஸ் கலைஞர்கள் மீது பெரிய அனுதாபம் இருந்திருக்க வேண்டும்.

பிரிட்டிஷ் ஆட்சியின் மதராஸ் மாநிலத்தின் தலைச்சேரி கிராமம் (இன்று கேரளாவில் உள்ளது) சர்க்கஸ் கலைஞர்களின் தாய் வீடு. அங்கு வாழ்ந்தவர் கீலேரி குஞ்சிக்கண்ணன் மாஸ்டர் என்ற புகழ் பெற்ற தற்காப்புக் கலை ஆசான். அவரது வழிகாட்டுதலுடன் தொடங்கப்பட்டது 'கமலா த்ரீ' ரிங் சர்க்கஸ்'. 'மலபார் சர்க்கஸ்' என்ற நிறுவனத்தின் வித்து என்றும் கூறுவார்கள். புகழின் உச்சாணியில் இருந்த 'கமலா சர்க்கஸ்' திடீரென்று பெரிய தீ விபத்தில் சிக்கியது. ஏராளமான பொருள் சேதம். மிருகங்களும் உயிரிழந்தன.

சர்க்கஸ் கலைஞர்களின் துயரம் கண்டு இரங்கியது எம்.ஜி.ஆரின் உள்ளம். உடனே ஒரு பெரிய தொகையை அள்ளிக் கொடுத்து கமலா சர்க்கஸ் கம்பெனியை அழிவிலிருந்து காப்பாற்றினார் அவர்.

எம்.ஜி.ஆரின் 105-ஆவது பிறந்தநாள் திமுக அரசால் 2022 ஜனவரி 17-ஆம் தேதி கொண்டாடப்பட்டபோது 'பறக்கும் பாவை' படமும், கமலா சர்க்கஸ் கம்பெனியும் என் நினைவுக்கு வந்தன. காரணம், நண்பரும் முன்னாள் மேயருமான சைதை துரைசாமி எழுதி இருந்த ஒரு கட்டுரை. கமலா சர்க்கஸ் தீ விபத்து நிவாரணமாக எம்.ஜி.ஆர். பெருந்தொகை அளித்தார் என்று அவர் குறிப்பிட்டு இருந்தார்

எம்.ஜி.ஆர். கோட்டையைப் பிடித்தபோது "இவரா முதல்வர்?" என்றனர். ஆனால், 35 வருடங்கள் கழித்து "இவரே முதல்வர்" என்கின்றனர். இந்த இறவாப் புகழுக்கு அவரின் ஈகை உள்ளமே காரணம் என்பது எப்போதும் என் எண்ணம்.

திரையுலக வாழ்க்கையில் பாடுபட்டுச் சம்பாதித்த பணத்தை வைத்து எம்.ஜி.ஆர். செய்த உதவிகள் ஏராளம். ஒருமுறை கம்யூனிஸ்ட் தலைவர் ஜீவாவுக்கு சிலை அமைக்க நன்கொடை கேட்டு, இடதுசாரித் தலைவர்கள் பாலதண்டாயுதமும், தா.பாண்டியனும் எம்.ஜி.ஆரைச் சந்தித்தனர். சிலை அமைப்பதற்கான மொத்தச் செலவையும் ஏற்றார் எம்.ஜி.ஆர். அண்ணா சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணாவின் சிலையின் மொத்தச் செலவும் அவருடையதுதான்.

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் வீடு ஏலத்துக்கு வந்ததும், எம்.ஜி.ஆர் தான் அதை மீட்டுக் கொடுத்தார். என்.எஸ்.கே மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நேரத்தில், அவரைப் பார்க்கச் சென்றார் எம்.ஜி.ஆர். அப்போது கலைவாணர் உறங்கிக் கொண்டிருந்தார். எழுப்பாமல்

வாராந்திரி
ராணி
குடும்பப் பத்திரிகை
30-Jan-2022

என்.எஸ்.கே.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

உறவினர்களிடம் விசாரித்துவிட்டுக் கிளம்பிவிட்டார் அவர். பின்னர்தான் தெரிந்தது, தலையணைக்குக் கீழே சிகிச்சைச் செலவுக்குப் பணத்தை வைத்துவிட்டு போயிருக்கிறார் என்று! என்.எஸ்.கே. மகள் வடிவுக்கு, நிச்சயம் முதல் திருமணம் வரையிலான அனைத்து செலவுகளையும்



'தராசு' ஷ்யாம்

முன்னின்று செய்து வைத்தவர் எம்.ஜி.ஆர்.தான்.

"என் முதல்வர் நாற்காலியின் நான்காவது கால் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்களால் ஆனது" என்று ஒருமுறை சொன்னார் எம். ஜி. ஆர்.

சும்மாக் கிடந்த நிலத்தை கொத்தி
சோம்பல் இல்லாம ஏர் நடத்தி
கம்மாக் கரையை ஒசத்தி கட்டி
கரும்பு கொல்லையில் வாய்க்கால் வெட்டி
சம்பா பயிரை பறிச்சு நட்டு
நெல்லு விளஞ்சிருக்கு வரப்பும் உள்ள மறஞ்சிருக்கு
காடு விளஞ்சென்ன மச்சான்
நமக்கு கையும் காலும் தானே மிச்சம்

என்று கேட்கும் 'நாடோடி மன்னன்' பானுமதிக்கு, பாட்டிலேயே பதில் அளிப்பார் எம்.ஜி.ஆர். பின்வருமாறு:

இப்போ காடு விளையட்டும் பொண்ணே...
நமக்கு காலமிருக்குது பின்னே

எம்.ஜி.ஆர். படப் பாடல்களில் தெறித்த நேர்மறை எண்ணங்கள்தான் இன்றளவும் அவரின் புகழுக்குக் காரணம். அத்தகைய புரட்சிப் பாடல்கள் மூலம் எம்.ஜி.ஆருக்கு பெயரும், பெருமையும். வாங்கிக் கொடுத்தவர் பட்டுக்கோட்டையார். அவர் உடல் நலிவுற்று, படுத்த படுக்கையாய் இருந்தபோது அவருக்கான அத்தனை மருத்துவச் செலவுகளையும் எம்.ஜி.ஆரே ஏற்றுக்கொண்டார். அவர் இயற்கை எய்தியபோது, 'நாடோடி மன்னன்' படத்தின் வருமானத்தை அவரின் குடும்பத்துக்குக் கொடுத்தார்.

'எம்.ஜி.ஆர். அறநிலையக் குழு'வை 1959-ல் உருவாக்கி, அதற்கு ஆரம்ப நிதியாக மூன்று லட்சம் ரூபாயைத் தன் சொந்தப் பணத்திலிருந்து கொடுத்தார். சென்னை கோடம்பாக்கத்தில், 'எம்.ஜி.ஆர்., தொடக்கப்பள்ளி' அதன் மூலம் ஆரம்பிக்கப்பட்டது. ஏறத்தாழ 500 ஏழைக் குழந்தைகள் அங்கு இலவசமாகக் கல்வி பயின்றனர். எம்.ஜி.ஆர். இலவச நூல் நிலையமும் ஆரம்பிக்கப்பட்டது.

பெருந்தலைவர் காமராஜரின் சகோதரி, கக்கனின் மனைவி சொர்ணம் பார்வதி, வாஞ்சிநாதனின் சகோதரர் கோபாலகிருஷ்ணன், வி.சீனிவாசராவின் மனைவி நாச்சாரம்மாள், திருப்பூர் குமரனின் மனைவி ராமாயி அம்மாள், ஜீவாவின் மனைவி பத்மாவதி, மகன் மணிகுமார். பாரதியின் பேத்தி சேதுலட்சுமி, மருதுபாண்டியரின் வாரிசுகள் என பலரின் குடும்பத்துக்கு நிதியுதவியும், அரசு ஓய்வூதியமும் வழங்கி கவுரவித்தார்.

அவ்வை இல்லம், சென்னை, ஆந்திர மகிள சபா, ஈஸ்வர பிரசாத் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள் பராமரிப்பு நிதி, பார்வை இழந்தோருக்கு அறுவைச் சிகிச்சை நலநிதி, பெங்களூரு அனாதைப் பள்ளி என்று ஏராளமான அறத் தொண்டுகளுக்கு தேடிப் போய் நிதி கொடுத்தார். டில்லி, மும்பை, கல்கத்தா ஆகிய நகரங்களில் உள்ள தமிழ்ச் சங்கங்களுக்கும் பெரிய அளவில் பண உதவி செய்தார்.

ராணி

30-Jan-2022

தன் தாய் சத்தியபாமா பெயரில் கோடம்பாக்கம் ஆற்காடு சாலையில், உள்ள சத்யா தோட்டத்தில் ஒரு இலவச மருத்துவமனையை 1960-ல் 20 ஆயிரம் நிதி தந்து நிறுவினார். அங்கு பணியாற்றிய டாக்டர்கள், நர்ஸ்கள், மற்றும் செவிலியர்களுக்கு மருத்துவமனைக்கு அருகிலேயே வீடுகள் கட்டித் தரப்பட்டன.

ஏராளமான வெற்றிப் படங்களை கொடுத்த இயக்குனர் ஸ்ரீதர் ஒரு கட்டத்தில் பெரும் கடனாளியாகி விட்டார். 'சிவந்த மண்' படம் எடுத்த நேரத்தில் (முதலில் எம்.ஜி.ஆர். நடிப்பதாக இருந்தது) அவருக்கும் எம்.ஜி.ஆருக்கும் ஒரு மனஸ்தாபம். "இது, எம்.ஜி.ஆரின் சிவந்த மண் அல்ல. ஸ்ரீதரின் சிவந்த மண்" என்று ஆவேசமாகப் பேசிவிட்டார் ஸ்ரீதர். எனவே எம்.ஜி.ஆரிடம் உதவி கேட்க அவருக்குத் தயக்கம். ஆனாலும், சில நண்பர்கள் வற்புறுத்தலால் அவர் ராமாவரம் தோட்டம் சென்றார்.

ஸ்ரீதரைக் கண்டதும் வரவேற்றுச் சாப்பிட வைத்த எம்.ஜி.ஆர் ஒரு புதுப் படத்திற்குப் பூஜை போடச் சொன்னார். அதுதான் 'உரிமைக்குரல்'. பூஜை போட்டதுமே, படம் தயாரிக்கத் தேவையான பணம் வந்தது. மொத்தக் கடனில் இருந்தும் ஸ்ரீதர் மீண்டார். அதேபோல் தயாரிப்பாளரும், இயக்குனருமான பி.ஆர்.பந்துலுவின் கடன் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்த ஒரே ஒரு படம்... 'ஆயிரத்தில் ஒருவன்'. அந்தக் காலத்தில் டூரிங் டாக்கீஸ் முதலாளிகள் தங்கள் கடன் பிரச்சினைகளை எம்.ஜி.ஆர். படங்களைத் திரையிட்டுத் தீர்த்துக் கொள்வார்கள். அப்படியானவர்களில் என் தந்தையும் ஒருவர்.

"அள்ளிக் கொடுத்து வாழ்பவன் நெஞ்சம் ஆனந்தப் பூந்தோப்பு" என்று தான் பாடியதைத் தன் வாழ்விலும் கடைப்பிடித்தார் எம்.ஜி.ஆர். 'புதிய பூமி' படத்தில் அவர் மருத்துவ வசதி இல்லாத மலைக் கிராமம் ஒன்றில் டாக்டராகப் பணியாற்றுவார். அது தந்த உந்துதல் காரணமாக என் பள்ளித் தோழன் ஒருவன் எம்.பி.பி.எஸ் முடித்துவிட்டு வீட்டாரின் எதிர்ப்பையும் மீறிக் குக்கிராமத்தில் கிளினிக் திறந்தான். எம்.ஜி.ஆர். என்ற கதாநாயகனின் திரைமொழி அத்தகைய சக்தி படைத்தது.

அவர் மறைந்து 35 ஆண்டுகள் கழித்து இப்போது அவரது ஆட்சியை எண்ணி வியக்கின்றனர். பொற்கால ஆட்சி என்று ஒரு அரசு முத்திரைச் சுவடு பதிக்க, அந்த ஆட்சியின் பலன்கள் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் தொடர வேண்டும். இல்லையேல் பொற்காலம் இருக்காது. வெறும் போர்க் கோலம் மட்டுமே மிஞ்சும்.

பெருந்தலைவர் காமராஜரின் இலவச மதிய உணவுத் திட்டத்திற்குச் செறிவூட்டி எம்.ஜி.ஆர். கொண்டு வந்த சத்துணவுத் திட்டம் இன்றளவும் பொலிவுடன் விளங்குகிறது. அவர் அமல்படுத்திய தந்தை பெரியார் எழுத்துச் சீர்திருத்தம்தான் கணினித் தமிழின் ஆதார சுருதி. பாரம்பரிய மணியம், கர்ணம் பதவிகளை ஒழித்துக் கட்டி அவர் அறிமுகப்படுத்திய கிராம நிர்வாக அலுவலர் பதவிகளே இன்றளவும் சமூக நீதியின் அடித்தளம். பொறியியல் கல்லூரிகளுக்கான தாராள அனுமதிக் கொள்கையால்தான் நம்மவர்கள் [illegible]லை நாடுகளில் கோலோச்சுகிறார்கள்.

இப்படியான பொற்கால ஆட்சியைத் தர இன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின் விரும்புகிறார் என்று எனது திமுக நண்பர்கள் கூறுகிறார்கள். அரசு சார்பில் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா கொண்டாடுவது நீண்ட நாளாகத் தொடர்கிறது. அன்றைய முதல்வர் எடப்பாடி பழனிசாமியும், துணை முதல்வர் ஓ.பி.எஸ்.சும் 2020-ல் எம். ஜி. ஆர். பிறந்தநாள் அன்று அரசு மரியாதை செய்தார்கள்.

என்றாலும் நடப்பு திமுக அரசு எம்.ஜி.ஆரின் பிறந்தநாளுக்குத் தந்த முக்கியத்துவம் பொதுவெளியில் வியப்புக்குறிகளை ஏற்படுத்தியது. எம்.ஜி.ஆர். பக்தர்களையும்; பற்றாளர்களையும் திமுக பக்கம் இழுக்கும் வாக்கு வங்கிக் கணக்கு அதன் பின்னணியில் இருக்கிறது என்கின்றனர் அரசியல் விமர்சகர்கள். என்றாலும் எம்.ஜி.ஆரின் மனித நேய சமரசக் கொள்கையைப் பின்பற்றுவதில் உறுதி காட்டப்பட்டால் அது வரவேற்புக்குரியதே!

எம்.ஜி.ஆர். தன் பிறந்த நாளைத் தனியாகக் கொண்டாடியதில்லை என்பது இன்னொரு வியப்புக்குரிய செய்தி. பொங்கல் பண்டிகையை ஒட்டி பிறந்த நாள் (ஜன.17) வருவதால் இரண்டையும் சேர்த்தே ராமாவரம் தோட்டத்தில் பொது விழாவாக்குவது வழக்கம். அன்று பட்டு வேஷ்டி, பட்டுச் சட்டை அணிந்து ஜானகி அம்மாள் அருகில் இருக்கக் காட்சி தருவார்.

தாய், அண்ணா பத்திரிகைகளோடு பரிச்சயம் இருந்த 82-களில் அந்தக் கொண்டாட்டத்தைக் காணும் நல் வாய்ப்புக் கிடைத்தது. அவரது கழுத்துச் சங்கிலியில் காணப்பட்ட டாலரில் அன்னை சத்யா படம் இருப்பதாகச் சொல்வார்கள். ஒருமுறை எம்.ஜி.ஆரே அதைத் திறந்து தன் தாயின் படத்தைக் காட்டினார். 1984-ல் அவர் சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றிருந்தபோது 1985-ல் எம்.ஜி.ஆர். பிறந்தநாள் பொதுவிழாவாகக் கொண்டாடப்பட்டது. எம்.ஜி.ஆர். பிறந்த நாள் இன்றுதான் அரசு விழா. ஆனால், அவரை உள்ளத்தில் வைத்துப் போற்றுபவர்களுக்கு அது என்றும் தங்கள் இல்ல விழா!

‘ஓமைக்ரான்’ தொற்றைத் தடுக்கும் நடவடிக்கை!

தமிழக அரசு சிறப்பாகச் செயல்படுகிறது!

அமெரிக்கப் பல்கலை பேராசிரியர் முனைவர் அரசு செல்லையா பாராட்டு!

சென்னை, ஜன.31- ஓமைக்ரான் தொற்றை தடுக்கும் நடவடிக்கையில் தமிழ்நாடு அரசு சிறப்பாகச் செயல்பட்டு வருவதாக அமெரிக்கப் பல்கலைக் கழகப் பேராசிரியர் முனைவர் அரசு செல்லையா தெரிவித்துள்ளார்.

அவர் அளித்துள்ள பேட்டியில், ஒமைக்ரான் தொற்றைத் தடுக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, பொதுமக்களின் வீட்டிற்கே வந்து ஆர்.டி. பி.ஆர் பரிசோதனை செய்து அதற்கான பரிசோதனை முடிவை அன்று மாலையே குறுஞ்செய்தியாக அனுப்பி வைக்கப்பட்டு வருவதாகவும், இது, தமிழ்நாட்டில் மருத்துவ உள்கட்டமைப்பு சிறப்புடன் இருப்பதை உறுதி செய்வதாகக் கூறியுள்ளார்.

“நாள்தோறும் தமிழ்நாட்டினுடைய வளர்ச்சிக்காகவும், தமிழ்நாட்டினுடைய மக்களின் முன்னேற்றத்திற்காகவும் எப்படியெல்லாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.”

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத்துறை